கைலாஷி

# கொங்கேழ் திருத்தலங்கள் பக்தியுலா



# கொங்கேழ் திருத்தலங்கள் பக்தியுலா

## கைலாஷி

கொங்கேழ் திருத்தலங்கள் பக்தியுலா
கைலாஷி
muruganandam.subramanian@gmail.com

மின்னூல் வெளியீடு : FreeTamilEbooks.com , கணியம் அறக்கட்டளை

அட்டைப்படம் :பிரசன்னா - udpmprasanna@gmail.com

மின்னூலாக்கம் : த. சீனிவாசன் tshrinivasan@gmail.com

உரிமை :
Creative Commons Attribution -NonCommercial-ShareAlike ( எல்லாரும் படிக்கலாம், பகிரலாம், விற்பனை கூடாது)

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை -
https://kaniyam.com/foundation

பதிவிறக்கம் செய்ய -
https://FreeTamilEbooks.com/ebooks/kongu_temples_pilgrimage

# பொருளடக்கம்


.......................................................................................................................8

2 கொங்கேழ் தலங்களின் சிறப்புகள்...........................................................11
3 காவிரி ஆற்றின் சிறப்பு...........................................................................15
4 கருவூர் ஆநிலை தரிசனம்.......................................................................19
5 திருவெஞ்சமாக்கூடல் தரிசனம்...............................................................40
6 திருப்பாண்டிக்கொடுமுடி தரிசனம்..........................................................45
7 திருமுருகன்பூண்டி தரிசனம்.....................................................................56
8 அவிநாசியப்பர் தரிசனம்............................................................................69
9 பவானி தரிசனம்.........................................................................................85
10 திருச்செங்கோடு மாதொருபாகர் தரிசனம்............................................106
11 கடம்பவனேஸ்வரர் தரிசனம்..................................................................135
12 ஈங்கோய்மலையார் தரிசனம்.................................................................149
13 இரத்தினகிரியார் தரிசனம்......................................................................165
14 சிந்தலவாடி நரசிம்மர் தரிசனம்.............................................................186
15 தான்தோன்றிமலை கல்யாண வெங்கடரமணர் தரிசனம்.......................196
16 பண்ணாரியம்மன் தரிசனம்....................................................................209
17 உடுமலைப்பேட்டை மாரியம்மன் தேர்த் திருவிழா.................................217
18 சத்தியமங்கலம் வேணுகோபால சுவாமி தரிசனம்...............................230
19 சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி தரிசனம்........................................235
20 சிவன்மலை ஆண்டவர் தரிசனம்............................................................249
21 நாமக்கல் நரசிம்மர் தரிசனம்...................................................................258
22 தாரமங்கலம் கைலாசநாதர் தரிசனம்.....................................................274
23 அயோத்தியாபட்டிணம் தரிசனம்..............................................................282
24 பேரூர் பட்டீஸ்வரர் தரிசனம்....................................................................288
25 மருதமலை ஆண்டவர் தரிசனம்..............................................................301
26 கணியம் அறக்கட்டளை..........................................................................311


## சமர்ப்பணம்



இப்பத்தியுலாவில் உடன் பயணித்த

திரு. கோபால் அவர்களுக்கு இந்நூல்

சமர்ப்பணம்.

**யாத்திரை மேற்கொண்ட அன்பர்கள்**



திரு. தனுஷ்கோடி
திரு. இந்து குமார்
திரு.கோபால்
திரு.முருகேன்
திரு. பத்மநாபன்
திரு. வெங்கடாசலம்
திரு.முருகானந்தம்.

## இவ்வாசிரியரின் மற்ற மின்னூல்கள்

https://freetamilebooks.com/ebooks/ahobila-yathra/

https://freetamilebooks.com/ebooks/mukthinath-yatra/

https://freetamilebooks.com/ebooks/thirupadhadharisanam/
https://freetamilebooks.com/ebooks/karudasevai/
https://freetamilebooks.com/ebooks/malai_naatu_dhivyadesa_yathirai/
https://freetamilebooks.com/ebooks/navadhuvaaragai_yathirai/
https://freetamilebooks.com/ebooks/nava_brindhavanam_mandhiralayam_dharisanam/
https://freetamilebooks.com/ebooks/nalambala_yathirai/

## முன்னுரை

மாதர் பிறை கண்ணியானை மலையான் மகளுடன் பாடி, அவர் கருணையுடன் அருள் பாலிக்கும் ஆலயம் ஆலயமாக தீர்த்த யாத்திரை சென்று வரும் ஒரு சிறு குழு அடியோங்களுடையது. இவ்வாறு அடியோங்கள் கொரோனா சமயத்தில் கொங்கு நாட்டு பாடல் பெற்ற தலங்களின் பக்தியுலா சென்று வந்த அனுபவங்களை அன்பர்களாகிய தங்களுடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு சிறு முயற்சியே இந்நூல்.

அவனருளால் தானே அவன் தாள் வணங்க முடியும், அடியோங்கள் சில முறை முயற்சி செய்தும் இந்த யாத்திரை சித்திக்கவில்லை ஏதாவது ஒரு காரணத்தினால் தள்ளிச் சென்றது. திரு. தனுஷ்கோடி அவர்கள் 2021 வருடம் பிப்ரவரி மாதம் இப்போது செல்லலாம் என்று முதலில் கூறிய போது கொரோனா காலம் அல்லவா? எதற்காக வம்பை விலை கொடுத்து வாங்க வேண்டும், வேண்டாம் என்றே கூறினேன், அதற்கு அவர் எல்லாம் அவன் பார்த்துக் கொள்வான் இது வரை சில முறை முயற்சித்து விட்டோம் இயலவில்லை, வேண்டிய பாதுகாப்பு நெறிமுறைகளை கடைப்பிடித்து இத்தடவை சென்று வருவோம், ஆலயங்களில் கூட்டமும் அதிகமாக இருக்காது வாருங்கள் என்றார். அரை மனதுடன் ஒத்துக்கொண்டேன். அதற்கு முந்தைய வாரம் மஹாசிவராத்திரிக்காக குல தெய்வ ஆலயம் செல்ல வேண்டிய கடமையும் இருந்ததால் அங்கு சென்று விட்டு வந்து பின்னர் முடிவு செய்யலாம் என்றேன், ஒத்துக்கொண்டார்.

ஆலயம் சென்று திரும்பி ஒரு வாரம் கழித்து கரோனாவிற்கான அறிகுறிகள் ஏதும் இல்லாததால் திரு.தனுஷ்கோடியுடன் பணி புரியும் திரு.இந்துகுமார் அவர்களின் வாகனத்தில் ஒரு வெள்ளிக்கிழமை காலை மொத்தம் ஏழு அன்பர்கள் சென்னையிலிருந்து கிளம்பினோம்.

முதல் நாள் காவிரிக்கரை தலங்களான கடம்பந்துறை, ஈங்கோய்மலை, ஐயர் மலை தரிசித்து பின் கொங்குநாட்டின் சிந்தலவாடி, தான்தோன்றிமலை, கரூர், கொடுமுடி ஆகிய தலங்களை தரிசிக்க திருவருள் கிட்டியது. அன்றைய தினம் திட்டமிட்டபடி வெஞ்சமாக்கூடல் மற்றும் சிவன்மலை செல்ல இயலவில்லை. அன்றிரவு திருப்பூரில் தங்கினோம்.

மறு நாள் திருமுருகன்பூண்டி, அவிநாசி, பண்ணாரி மாரியம்மன், சத்தியமங்கலம் வேணுகோபால சுவாமி, பவானி, சென்னி மலை தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. முதலில் ஈரோட்டில் தங்கலாம் என்றிருந்தோம் திட்டத்தை மாற்றி திருச்செங்கோடு சென்று அங்கு தங்கினோம்.

மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் மாதொரு பாகரையும் செங்கோட்டு வேலவரையும் தரிசனம் செய்தபின் நாமக்கல் வந்து ஆஞ்சநேயரையும், நரசிம்மரையும் சேவித்து பிறகு சேலம் வந்து தாரமங்கலம் கைலாசநாதர் மற்றும் அயோத்தியாபட்டிணம் பட்டாபிஷேக இராமரையும் தரிசித்த

பின்னர் பகலிலேயே பயணம் செய்து இரவில் சென்னை வந்து நலமாக சேர்ந்தோம்.

தரிசிக்க நினைத்த தலங்களில் வெஞ்சமாக்கூடல் மற்றும் சிவன்மலை மட்டுமே தரிசிக்க முடியாமல் போனது. பவானியில் மட்டுமே சுவாமியை தரிசிக்க காத்திருக்க வேண்டி வந்தது மற்ற அனைத்து தலங்களிலும் சென்றவுடன் தரிசனம் கிட்டியதும் அவனருளே. தேர்தல் சமயமாக இருந்தபோதும் எங்கும் எவ்வித சிக்கலில்லாமல் திரும்ப வந்து சேர்ந்தோம். அவ்விறைவனின் கருணையால் யாருக்கும் எச்சுகவீனமும் பின்னர் ஏற்படவில்லை.

கொங்கேழ் தலங்கள் பத்தியுலா என்பதால் முதலில் அத்தலங்களை முதலில் தரிசனம் செய்த பின் அடியோங்களுக்கு  தரினம் கிடைத்த இப்பகுதியில் உள்ள மற்ற தலங்களைப் பற்றிய தகவல்களையும் இந்நூலில் அன்பர்களுக்கு உதவட்டும் என்று இணைத்துள்ளேன்.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நோக்கில் பல் வேறு இடங்களில் இருந்து அந்தந்த ஆலயம் பற்றிய தகவல்களை சேகரித்து, தொகுத்து அளித்துள்ளேன், அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். ஏதாவது தவறு அல்லது குறை இருந்தால் அடியேனுக்கு சொல்லுங்கள், திருத்த ஏதுவாகும், உங்களுக்கு பிடித்திருந்தால் உங்கள் நண்பர்களுக்கு சிபாரிசு செய்யுங்கள், இந்நூலினால் அவர்களும் பயன் பெறட்டும்.

திருச்சிற்றம்பலம்

# 2 கொங்கேழ் தலங்களின் சிறப்புகள்




முதலில் கொங்குமண்டலத்தை பற்றிய ஒரு சிறு முன்னுரை. சுற்றிலும் மலைகளால் சூழ்ந்த பகுதி. காவிரி மற்றும் அதன் துணையாறுகள் பாய்ந்து வளமாக்கும் பகுதி. பொலிவு மிகுந்த கொங்குநாடு செழித்தால் இப்புவியெங்கும் சுகம் அடையும் என்ற பழமொழிக்கேற்ப மாடு, கன்றுகள் விருத்தி கொண்ட பகுதி. முருகவேள் ஆலயங்கள், சிவாலயங்கள், அம்மன் ஆலயங்கள், திருமால் ஆலயங்கள் நிறைந்த பகுதி. பல்வேறு கலைஞர்கள், நாவலர்கள் நிறைந்த 24 நாடுகள் கொண்ட பகுதி என்று 'கொங்குநாடு சதகம்' என்ற பாடல் இம்மண்டலத்தின் சிறப்பை எடுத்தியம்புகிறது.

சிவனடியே சிந்திக்கும் மூவர் பெருமக்களும், மாணிக்கவாசகர் மற்றும் மற்றும் பல அன்பர்களும் பாடிய திருமுறைத்தலங்கள் மொத்தம் – 274. பொதுவாக இவை 'தேவாரத்தலங்கள்' என்றும் 'பாடல் பெற்ற தலங்கள்' என்றும் போற்றப்படுகின்றன. அவற்றுள் காவரி வடக்கரைத்தலங்கள் - 127, தென்கரைத்தலங்கள் - 63, தொண்டைநாட்டுத்தலங்கள் - 32, நடுநாட்டுத்தலங்கள் - 22, பாண்டிநாட்டுத்தலங்கள் - 14, அடியோங்கள் தரிசனம் செய்ய புறப்பட்ட கொங்குநாட்டுத்தலங்கள் - 7, வடநாட்டுத்தலங்கள் - 5, ஈழ நாட்டுத்தலங்கள் - 2 , துளு நாடு மற்றும் மலைநாட்டுத்தலம் - 1.

அவற்றுள் கொங்கு நாட்டில் அமைந்துள்ள தலங்களையும் மற்றும் அவை செல்லும் வழியில் உள்ள சில சிறப்பு மிக்க ஆலயங்களையும் தரிசிக்க சென்ற யாத்திரை இது.

முதலில் கொங்கேழ் தலங்கள் யாவை என்று காணலாமா அன்பர்களே?

ஆதி கருவூர் அதிவெஞ்ச மாக்கூடல்
நீதிமிகு கறைசை நீள்நணா – மேதினியில்
நாதன் அவிநாசி நன்முருகன் பூண்டித்திருச்
சோதிச்செங்கோடெனவே சொல் – என்ற பழம் பாடல் கொங்கேழ் தலங்களை பட்டியலிடுகிறது.

கொங்கு நாட்டிற்குரிய ஏழு தலங்களில், மேல்கரையரைய நாட்டில் உள்ள கொடுமுடியும் ஒன்று. மற்றவை ஆதி கருவூர் எனப்படும் கருவூராநிலை (கரூர் ), திருவெஞ்சமாங்கூடல், திருநணா (பவானி), புக்கொளியூர் அவிநாசி, திருமுருகன்பூண்டி, திருக்கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு) என்பனவாம்.

இத்தலங்கள் அனைத்தும் தேவாரப்பாடல் பெற்ற தலங்கள் என்பது முதல் சிறப்பு. மும்மூர்த்திகளும் அருள் பாலிக்கும் தலம் திருப்பாண்டிக்கொடுமுடி. இத்தலத்தை தேவார மூவரும் பாடியுள்ளனர், அவற்றுள் எம்பிரான் தோழர் சுந்தரரின் ஒரு பதிகம் நமச்சிவாயப் பதிகம் ஆகும். பவானி, திருச்செங்கோடு, மற்றும் கருவூர் அகிய முத்தலங்களும் ஆளுடையப் பிள்ளையாரின் பாடல் பெற்ற பெற்றவை. மற்ற மூன்று தலங்களான அவிநாசி, திருமுருகன்பூண்டி, மற்றும் வெஞ்சமாக்கூடல் வண்தொண்டர் சுந்தரரால் பாடப்பெற்றவை. இம்மூன்று தலங்களிலும் சிவபெருமான் தன் தோழரான சுந்தரரிடம் திருவிளையாடல் புரிந்து பதிகம் பெற்றார்.

முதலை உண்ட மதலையை பதிகம் பாடி இறைவனருளால் உயிர்ப்பித்த அற்புதம் நடந்த தலம் அவிநாசி.

இறைவனே பூதகணங்களை அனுப்பி சுந்தரரின் பொருட்களை கவர்ந்து திருவிளையாடல் புரிந்து சுந்தரரின் பாடல் பெற்று பொருளை அவருக்கு திருப்பியளித்த தலம் திருமுருகன் பூண்டி.

எம்பெருமான் தன் பிள்ளைகளையே ஈடாக வைத்து பொன் பெற்று அதை சுந்தரருக்கு வழங்கிய தலம் வெஞ்சமாங்கூடல். இத்தலம் அமராவதி மற்றும் சிற்றாறு கூடும் கூடலில் அமைந்துள்ளது.

காவிரி, பவானி மற்றும் அந்தர்வாகினியாக அமுதநதி ஆகிய மூன்று ஆறுகள் கூடும் முக்கூடலில் பவானித்தலம் அமைந்துள்ளது.

கொடுமுடி, பவானி, திருச்செங்கோடு ஆகிய மூன்று தலங்கள் சைவ வைணவ ஒற்றுமையை விளக்கும் தலங்கள். பெருமாளுக்கு இத்தலங்களில் தனி சன்னதி அமைந்துள்ளது.

அனைத்து தலங்களும் அருணகிரிநாதரின் அமுதத் திருப்புகழ் பாடல் பெற்றவை.

கொடுமுடி மற்றும் திருச்செங்கோடு தலங்கள் இரண்டும் வாயு தேவனுக்கும், ஆதிசேஷனுக்கும் நடைபெற்ற போட்டியுடன் தொடர்புடையத் தலங்கள்.

அர்த்தநாரீஸ்வரராக சிவபெருமான் அருள் பாலிக்கும் திருச்செங்கோடு, மலை மேல் அமைந்த ஒரே தலம். திருச்செங்கோட்டில் ஆளுடையப்பிள்ளையார் பதிகம் பாடி இறையருளால் அன்பர்களின் விஷ ஜுரம் போக்கினார். இப்பதிகம் இன்றைய கொரோனா காலத்தில் அனைவரும் பாராயணம் செய்ய வேண்டிய ஒரு பதிகம் ஆகும்.

மற்ற ஆறு தலங்களும் காவிரி மற்றும் அதன் உப நதிகளின் கரையில் அமைந்துள்ளன. அவற்றுள் பவானி, திருவெஞ்சமாக்கூடல் ஆகிய இரு தலங்கள் ஆறுகளின் சங்கமத்தில் அமைந்துள்ளன.

அவிநாசி மற்றும் திருச்செங்கோடு தலங்கள் உயரமான தேரைக் கொண்டவை எனவே இத்தலங்களின் தேரோட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இவ்விரு தலங்களில் பஞ்ச மூர்த்திகளுடன் பெருமாளும் தேரோட்டம் கண்டருளுகிறார் என்பது ஒரு சிறப்பு.

தேவாரப் பாடலாசிரியர் கருவூரர் மற்றும் 63 நாயன்மார்களுள் புகழ் சோழ நாயனார் மற்றும் எறிபத்த நாயனார் ஆகிய இருவர் கருவூர் ஆலயத்தில் வழிபட்டவர்கள்.

இத்தலங்கள் அனைத்திலும் அம்பாளின் திருமூர்த்தம் கல் திருவாசியுடன் அமைந்திருப்பது ஒரு பொது தனி சிறப்பு.

நவகிரகங்கள் மட்டும் அல்லாமல் சனி பகவானுக்கும் தனி சன்னதியும் அனைத்து ஆலயங்களிலும் உள்ளது.

திருச்செங்கோட்டில் அம்மையும் அப்பனும் அர்த்தநாரீஸ்வரராக ஏக உருவிலும் மற்ற தலங்களில் அம்மையும் அப்பனும் ஒரே திசை நோக்கி எழுந்தருளி அருள் பாலிக்கின்றனர். கொடுமுடி மற்றும் அவிநாசியில் அம்பாள் சுவாமிக்கு வலப்புறத்தில் சன்னதி கொண்டுள்ளதால் அது கல்யாணக்கோலம்

என்றழைக்கப்படுகிறது. இவ்விரு தலங்களிலும் அம்பாளுக்கு எதிரேயும் இராஜ கோபுரம் அமைந்துள்ளது.

திருவெஞ்சமாக்கூடல் ஒரு முறை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது, பின்னர் பக்தர்களின் முயற்சியால் இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இவ்வாலயத்தின் கருவறை கதவில் கொங்கேழ் தலங்களின் இறைவர்களையும் ஒன்றாக தரிசிக்கலாம்.

கரூர், திருமுருகன்பூண்டி, அவிநாசி ஆகிய தலங்களில் பைரவர் எட்டுக்கரங்களுடன் அருள் பாலிக்கின்றார்.

கொங்கு நாட்டுத் தலங்களின் மற்றொரு தனி சிறப்பு தீப ஸ்தம்பம். கொடி மரம் மட்டுமல்லாமல் சிறப்பாக தனி கல் விளக்குத் தூண் (தீப ஸ்தம்பம்) அமைந்துள்ளது. பல ஆலயங்களில் தீப ஸ்தம்பம் தனித் தூணாக இல்லாமல் பல் வேறு கற்சிற்பங்களுடன் கூடிய நான்கு கால் மண்டபத்தில் சிறப்பாக அமைந்துள்ளன. இத்தூண்களின் கீழ்ப்பகுதியில் உள்ள செவ்வகப்பகுதியில் அத்தலத்தின் வரலாறு சம்பந்தமான கற்சிற்பங்கள் நான்கு திசைகளிலும் இடம் பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக அவிநாசி தலத்தில் முதலை உண்ட பாலனை உயிருடன் மீட்ட வரலாறு சிற்பத்தை விளக்குத் தூணில் காணலாம். கார்த்திகை தீபத்தன்று இத்தூணின் உச்சியில் தீபம் ஏற்றப்படுகின்றது.

ஒவ்வொரு ஆலயத்திலும் இறைவனின் கருணையினால் பல் வேறு திருவிளையாடல்கள் நிகழ்ந்துள்ளன அவற்றையும் அத்திருக்கோவில்களின் வரலாற்றில் விரிவாகக் காணலாம் அன்பர்களே.

தற்போதைய கரூர், ஈரோடு, நாமக்கல், திருப்பூர் ஆகிய நான்கு மாவட்ட எல்லைகளுக்குள் இவ்வேழு தலங்களும் அமைந்துள்ளன.

ஒழியாத பேரின்பத் துள்ளாய் உலகில்
விழியா திருந்து விடவே - அழியாத
பூரணா செங்கமலா பொற்பாதா வடகயிலை
ஆரணா நாயேற்கருள் – என்று வணங்கிப் புறப்பட்டால் அவனருளால் ஒரே நாளில் இவ்வேழ் தலங்களுக்கும் பயணித்துத் தரிசனம் செய்ய இயலும். சோமவாரங்களில் அதுவும் கார்த்திகை சோமவாரத்தில் தற்போது பக்தர்கள் இவ்வாறு தரிசிக்கின்றனர்.

# 3 *காவிரி ஆற்றின் சிறப்பு*



அகண்ட காவிரி

இந்த யாத்திரையின் போது தரிசித்த தலங்கள் அனைத்தும் பொதுவாக காவிரி ஆறு அல்லது அதன் துணை ஆறுகளின் கரையில் அமைந்துள்ளன என்பதால் காவிரி ஆற்றின் சிறப்பைப் பற்றி முதலில் காணலாம் அன்பர்களே.

ஆறு இல்லா ஊருக்கு அழகு இல்லை. ஆறும் அதன் கரையில் ஆலயமும் அமைந்து விட்டால் ஊரின் நலமும், அதில் வாழும் மக்களின் நலமும் செழிக்க காரணமாகி விடுகிறது. எனவே நதிகளை வணங்குவது பண்பாடாகியது. மனிதகுலம் ஓரிடத்தில் நிலைத்து நின்று நாகரீகம் வளர முக்கிய காரணமாக இருந்தவை ஆறுகளே. உலகின் ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்களின் முக்கிய அடையாளமாக அங்கு பாயும் ஆறு விளங்குகிறது. இவ்வாறு தமிழகத்தின் அடையாளமாக விளங்குவது காவிரி ஆறு.

நம்முடைய தமிழ் நாட்டின் இயற்கை வளத்திற்கு முதல் காரணமாக விளங்குகிறது காவிரி ஆறு. இம்மைக்கு பயிர்-பச்சையும் உயிருக்கு ஜீவாதாரமான நீரும் நமக்கு தாயாரான காவிரி வழங்குகின்றாள்.

பூவார் சோலை மயில் ஆடப்புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகு அசைய நடந்தாய் வாழி காவேரி - அதாவது பூக்கள் மலிந்த சோலையில் மயில்கள் ஆடும்; குயில்கள் விரும்பி இனிதாக இசை பாடும்; விருப்பம் விளைவிக்கும் மாலைகள் அருகில் அசையும்; இவற்றினூடே காவிரி நடந்ததாகவும், காவிரி நெடுநாள் வாழ வேண்டும் என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காவிரித்தாயை வாழ்த்திப் பாடியுள்ளார்.

புனித நதியான காவிரி நதி நமக்கு கிடைத்த புனித வரலாறு கந்தபுராணத்தில் உள்ளது. மாதவம் செய்த தென்திசையில் உள்ள பரந்த சோழநாடு வளம் பெற சிவபெருமான் செய்த திருவிளையாடல் அது. அகத்தியர் தமது கமண்டலத்தில் கொண்டு வந்த தீர்த்தத்தை காக வடிவில் வந்து விநாயகர் தட்டி விட உருவானது பொன்னி நதி எனும் காவிரி நதி.

அழகாலும், நீரின் இனிமையாலும் கங்கையை காட்டிலும் சிறந்த காவிரி, பிறரை புனிதப்படுத்துவதிலும் கங்கையை விடச் சிறப்பான ஆறு. பூலோக வைகுண்டமாம் திருவரங்கத்தில் பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கின்ற மாயோனின் பாதங்களை எந்நேரமும் வருடிச் செல்வதாலும் புனிதமானது காவிரி . திருவிந்தளூர் திவ்ய தேசத்தில் பெருமாளுடன் கருவறையில் காவிரித்தாயை தரிசிக்கலாம். திருச்சேறை திவ்ய தேசத்தில் காவித்தாயின் மடியில் குழந்தையாக பெருமாள் வந்து அமர்ந்தார் எனவே "கங்கையின் புனிதமாய காவிரி" என்று தொண்டரடிப்பொடியாழ்வார் காவிரியைப் போற்றுகிறார்.

தீர்த்தம் என்று பெயர் பெற்ற எல்லா புண்ணிய நதிகளும், ஐப்பசி மாதத்தில் (துலா மாதம்) காவிரிக்கு வந்து, பாவிகளான மக்களைத் தீண்டியதால் ஏற்பட்ட பாவங்களை போக்கி கொள்வதாக துலா காவிரி மஹாத்மியத்தில் காவிரியின் பெருமை கூறப்பட்டு உள்ளது.

வசையில்புகழ் வயங்குவெண்மீன் திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற் புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்.

அதாவது வான் பொய்த்தாலும் கூட தான் பொய்க்கமாட்டாளாம். அந்தளவுக்கு வற்றாத அன்னை அவள் என்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். மழை இல்லாவிட்டாலும் காவிரியில் நீர் வரும், வந்து வயலில் பொன் போல் விளைச்சல் கொழிக்குமாம். சூரியன் திசை மாறி சென்றாலும் வானம் மழைத்தரத்

தவறினாலும். காவிரியில் புனல் பாய்ந்து விளைச்சல் வீடு வந்து குவியும் என்கிறது பட்டினப்பாலையில் உள்ள இப்பாடல்.

தேவாரப்பாடல் பெற்ற 274 தலங்களில் 190 தலங்கள் காவிரியின் இரு கரைகளிலும் அமைந்துள்ளன. காவிரி வடகரைத் தலங்கள் 63, தென்கரைத் தலங்கள் 127. அக்காலத்தில் சோழ மன்னர்கள் ஆன்மீகம் வளரவும், மழை வெள்ளக் காலங்களில் மக்கள் தஞ்சமடையவும் பிரம்மாண்டமான கற்கோவில்களை காவிரிக் கரையோரம் அமைத்தனர்.

பன்னிரு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற 108 திவ்ய தேசங்களில் 40, காவிரி பாய்ந்து வளமாக்கும் சோழ வள நாட்டில் அமைந்துள்ளன.

காவிரி ஆறு பல்வேறு ஆறுகளாக பிரிந்து பாய்ந்து வளமாக்குவதால் 'சோழநாடு சோறுடைத்து' என்னும் சிறப்பு பெற்றது.

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு – என்று தமிழகத்தை வளப்படுத்தும் ஆறுகளை பட்டியலிடும் பாரதியார் காவிரியை தலைமையானதாக வைத்துப் பாடுகிறார்.

பொன்படு நெடுவரையில் (குடகு மலை) தோன்றிப் பாய்வதாலும், மண்ணை பொன்னாக்குவதாலும், இயற்கையாகவே நீரில் தங்கத்தாது இருப்பதாலும் பொன்னி என்றும், காவேர அரசனின் மகளும், அகத்தியரின் தர்மபத்தினியான லோபாமுத்ராவே ஆறாக மாறியதால் காவேரி என்றும், விநாயகர் காகமாக வந்து விரித்ததாலும், தான் செல்லுமிடமெல்லாம் சோலைகளை விரித்துச் செல்லுவதாலும் ( கா- காடு, சோலை. பூ+ கா= பூங்கா- பூக்கள் நிறைந்த சோலை) காவிரி என்றும் அழைக்கப்படும் இந்நதி, தற்போதைய கர்நாடக மாநிலத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள குடகு மாவட்டத்தைச் சேர்ந்த தலைக்காவேரி என்ற இடத்தில் 4400 அடி உயரத்தில் தோன்றுகிறது. இதன் நீளம் 8 00 கிமீ. கர்நாடகத்தில் குடகு, ஹாசன், மைசூர், மாண்டியா, பெங்களூர் ரூரல், சாம்ராஜ் நகர் மாவட்டங்கள் வழியாவும் தமிழ்நாட்டில் தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், மயிலாடுதுறை மாவட்டங்கள் வழியாகச் சென்று பூம்புகார் என்னும் இடத்தில் வங்காள விரிகுடாக் கடலில் கலக்கிறது.

இந்நெடும்பயணத்தில் செல்லும் இடமெங்கும் அள்ளித்தரும் காவிரியின் பயணம் , நம் வாழ்வுக்கு எவ்வளவோ மகத்தான செய்திகளைச் சொல்லிச்செல்கிறது. உருவாகும் இடமான குடகில் மிகுந்த கொந்தளிப்புடனும் சீற்றத்துடனும் புறப்படும் காவிரி மலைகளில் பயணித்து, நிலப்பகுதிக்கு வேகமெடுத்து, அணைக்கட்டுகளில் சற்று ஆசுவாசமடைந்து ஓடி, பாசன மாவட்டங்களுக்கு

வரும்போது கனிந்து, தணிந்து பயணத்தில் பக்குவப்பட்ட மனிதரைப் போல மிகுந்த சாதுவாகச் சென்று, கடமை முடிந்தபின் பூம்புகார் அருகே கடலுடன் கலக்கிறது.

கபினி, ஹேமாவதி, ஹாரங்கி, இலட்சுமண தீர்த்தம், ஆர்க்காவதி, சிம்சா, சொர்ணவதி, ஆகியவை கர்நாடகப் பகுதியில் பாயும் துணை ஆறுகள். பவானி, அமராவதி, நொய்யல், திருமணிமுத்தாறு ஆகியன தமிழகப் பகுதியில் பாயும் துணை ஆறுகள் ஆகும். இது வரை காவிரியாற்றின் சிறப்புகளைப் பற்றி பார்த்தோம், வாருங்கள் கொங்கேழ் தலங்களை முதலில் தரிசிப்போம்.

# 4 கரூவூர் ஆநிலை தரிசனம்




அலங்காரவல்லி – சௌந்தரவல்லி உடனுறை ஆநிலையப்பர்

சென்னையில் இருந்து காலை புறப்பட்டு வழியில் உள்ள சில ஆலயங்களை தரிசனம் செய்த பின்னர் அடியோங்கள் கொங்கேழ் தலங்களின் முதல் தலமான கரூரை அடைந்த போது முதல் நாள் அந்தி சாயும் நேரம் ஆகி விட்டது எனவே ஆலயம் திறந்திருந்தது அருமையான தரிசனமும் கிட்டியது. இத்தலம் காவிரியாற்றின் துணை ஆறான அமராவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. எனவே அவ்வாற்றின் சிறப்புகள் என்ன என்று முதலில் காண்போம். அடுத்து கரூர் நகருக்கே சில சிறப்புகள் உள்ளன அவையென்ன என்று பார்த்து விட்டு பின்னர் ஆநிலையப்பரை, பசுவேறும் பரமனை, பிறை சூடியை, பிஞ்ஞகப் பித்தனை தரிசிக்கலாம் அன்பர்களே.

**அமராவதி ஆற்றின் சிறப்புகள்:** அமராவதி ஆறு காவிரியில் சேரும் நீளமான துணை ஆறு ஆகும். தற்போதைய கரூர் மாவட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டம் இரண்டையும் வளப்படுத்துகின்றது. அமராவதி ஆறு. மேற்கு தொடர்ச்சி மலைத்தொடரில் அமைந்துள்ள பழனி மலைத்தொடருக்கும் ஆனைமலை மலைத்தொடருக்கும் இடையில் உள்ள மஞ்சம்பட்டி பள்ளத்தாக்கில் உற்பத்தியாகிறது. இவ்விடம் அடியேனது பிறந்த ஊரான உடுமலைக்கு அருகில் உள்ளது. இதனுடன் பாம்பாறு, சின்னாறு மற்றும் தேவாறு சங்கமமாகிறன. இவ்வாறு அமராவதி அணை மூலம் தடுக்கப்பட்டு அமராவதி நீர்த்தேக்கம் தோன்றுகிறது. அங்கிருந்து வடகிழக்காக செல்லுகையில் கொழுமம் அருகில் குதிரை ஆறு இணைந்த பின் கொமரலிங்கம், தாராபுரம் பகுதி வழியாக பாய்ந்து 282 கி.மீ., தொலைவுக்கு நீண்டு, வழிந்தோடி, கருர் அருகே முக்கூடலில்

காவிரியுடன் கலக்கிறது. அமராவதியின் மற்ற உபநதிகள் சண்முகா நதி, குடகனாறு, உப்பாறு ஆகியவை ஆகும்.
ஒரு காலத்தில் பூவுலகில் மழை பெய்யாது போக சிவபெருமான் உமாதேவியாரிடம் உமது திருவருளை நதி வடிவமாக்கி விடுக என்று அருள, அவ்வாறே மாதேவியாரும் வராக மலையிலிருந்து நதியாக ஒழுகச் செய்தார். அம்பாளின் கருணையால் வந்ததால் அம்பா நதி எனப்பட்டது.
இவ்வாறு சங்க காலத்தில் ஆன்பொருநை என்றழைக்கப்பட்டது. ஆவினங்கள் மேய்ந்து திகழுமாறு பாயும் ஆறு என்ற பொருளில் அமைந்தது ஆன்பொருநை. காமதேனு பூசித்ததால் பொருநை. ஆம்பிரம் என்னும் மாமர நிழலில் வருவதால் ஆம்ரபி எனவும் சூத நதி எனவும் பெயர் வழங்கி வந்துள்ளது. இந்நதியின் இரு கரைகளிலும் எண்ணற்ற கற்றளிகளை சோழ மன்னர்கள் அமைத்துள்ளனர், அவர்களது கலைத்திறமையை பறை சாற்றிய வண்ணம் அத்தலங்கள் இன்றும் உள்ளன.
அன்று பாண்டிய நாடு மற்றும் சேர நாட்டின் எல்லையாகவும் இவ்வாறு திகழ்ந்தது . இன்றும் திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் எல்லையாக விளங்குகிறது. மடத்துக்குளம் ஊரில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் ஒரு பக்கத்தில் பாண்டியர்களின் சின்னமான மீனும் மறுபுறம் சேரர்களின் சின்னமான யானையும் அமைந்துள்ளது.
காரத்தொழுவு என்ற கிராமத்தில், இந்த அமராவதி ஆற்றங்கரையில்தான் அடியேனது குலதெய்வமான அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. ஆண்டு தோறும் மஹாசிவராத்திரி உற்சவத்தின் போது அம்மன் அமராவதி ஆற்றுக்கு எழுந்தருளி தீர்த்தவாரி கண்டருளுவாளர். அடியேனும் இவ்வாற்றின் தீர்த்தத்தை அம்மனின் மஹாபிஷேகத்திற்கு எடுத்து செல்வேன். திருமணம் ஆன நாளிலிருந்து இன்றுவரை இச்சேவை செய்யும் பாக்கியம் அடியேனுக்கு அம்மன் அருளால் கிடைத்துள்ளது. சோழர்கள் காலத்து பல சிவாலயங்கள் அமராவதி ஆற்றங்கரையில் உள்ளன.
ஒவ்வோர் ஆண்டும் தமிழ் மாதமான ஆடி மாதம், 18 ஆம் தேதி அன்று, அமராவதி நதிக் கரையோரம், குடும்பப் பெண்கள், சுமங்கலிப் பெண்கள், புதிதாக திருமணமான பெண்கள், திருமணமாகாத கன்னிப் பெண்கள், தங்கள் குடும்பங்களுடன் சென்று பூசைகள் செய்து, தங்களின் குடும்ப நலனுக்காக அமராவதி நதித் தாயை வணங்குவர். பூசைக்காக, மலர் மாலை, பச்சரிசி, ஊதுபத்தி, சாம்பிராணி, மஞ்சள், குங்குமம், தேங்காய், வெற்றிலை பாக்கு, பழங்கள், வெல்லம், மஞ்சள் கயிறு, கற்பூரம், விபூதி, சந்தனம், நாணயங்கள், நறுமணப் பூக்கள், தேன், பச்சரிசி மாவு, பன்னீர், வாழை இலை போன்றவற்றைக் கொண்டு சென்று, அமராவதி நதித் தாய்க்குப் படைத்து பண்டிகையாகக் கொண்டாடுவது வழக்கம். நதிக்கரையில், சர்க்கரைப் பொங்கல் மற்றும் வெண்பொங்கல் தயார் செய்து படையல் செய்து இறையருள் பெற வேண்டுகின்றனர்.



**கரூர் நகரின் சிறப்பு:** 2000 ஆண்டுகள் பழமைமிக்கது கரூர். காலப்போக்கில் சேர , சோழ, பாண்டிய, கங்க மன்னர்கள், விஜய நகர நாயக்கர்கள், மைசூர் அரசர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது.

கரூர், பண்டைய காலங்களில் மிகவும் முக்கியமான அயல்நாட்டு வணிகத்தலமாக விளங்கியுள்ளது. அகழ்வாராய்ச்சியின் போது ரோமானிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆன்பொருணை என்றழைக்கப்பட்ட அமராவதி நதிக்கரையிலேயே, 'வஞ்சி மாநகர்' அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. மேலும் சேர மன்னன் சேரன்

செங்குட்டுவன், வஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதாக சிலப்பதிகாரம் கூறுகிறது. இவ்வஞ்சி மாநகரே, 'கருவூர்' என்றழைக்கப்பட்டு, 'கரூர்' என தற்காலத்தில் அழைக்கப்படுகிறது. கரு+ஊர் (கருவூர்) என்பது கரூர் என மருவியது.

“மன்னிய அநபாயன் சீர் மரபின் நகராகும் தொல் நெடுங் கருவூர் என்னும் சுடர்மணி வீதி மூதூர்” என்று சேக்கிழார் பெருமான் இந்நகரை புகழ்ந்து பாடியுள்ளார்.

முற்கால சோழர் காலத்தில் கருவூர் சோழர்களின் தலை நகராகவும் இருந்துள்ளது . இங்கு சோழர்கள் கருவூலம் வைத்து செயல்பட்டிருக்கின்றனர். சோழ மன்னர்கள் முடிசூட்டிக்கொள்ளும் ஐந்து நகர்களுள் ஒன்று கரூர். தற்போது ஒரு மாவட்டத்தின் தலைநகராகவும், மாநகராட்சியாகவும் இவ்வூர் விளங்குகிறது. வாருங்கள் இனி ஆநிலையப்பரை தரிசிக்கலாம்.

திருக்கயிலை, மந்திரகிரி, மதுரை, காசி, காஞ்சி, பிரயாகை, நைமிச வனம், சேது, கருவூர் என்னும் ஒன்பது தலங்கள் ஆயிரத்தெட்டு சிவாலயங்களுள் மிக சிறந்தன . மலை, ஆறு, ஆரண்யம், தீர்த்தம், நகரம், ஆலயம் என்னும் ஆறு மங்கலங்கள் நிரம்பப்பெற்ற தலம்.

கருவூர், கற்பபுரி, கோவூர், ஆனூர், பாற்கரபுரம், சண்மங்கல தேத்திரம், ஆதிமாபுரம், கரபுரம், வீரசோழபுரம், வஞ்சுளாரண்யம், வஞ்சிவனம், வஞ்சி, பூவாவஞ்சி, வாடாவஞ்சி, தாயூர், முசுகுந்த நகரம், பிரமபுரம் என்பன இத்தலத்தின் பல திருப்பெயர்களாகும். கரூர் நகரின் மையத்தில் பிரம்மாண்டமான இவ்வாலயம் அமைந்துள்ளது.

கொங்கு நாட்டு ஏழு தலங்களில் முதன்மையானது. 500 முதல் 1000 ஆண்டுகள் பழமையானது கல்யாண பசுபதீசுவரர் ஆலயம். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம், கருவூரார், அருணகிரிநாதர் போன்றோரால் புகழப்பட்டத் தலம். புகழ்ச்சோழ நாயனாரால் கட்டப்பட்டது. ஆலய வளாகத்தில் புகழ்ச்சோழர் அரங்கமும் உள்ளது. புகழ்ச்சோழ நாயனார், எறிபத்தநாயனார், சிவகாமியாண்டார் ஆகிய நாயன்மார்கள் வழிபட்ட திருத்தலம்.

கந்த புராண காலத்து முசுகுந்த சக்ரவர்த்தியால் புனரமைப்பு செய்யப்பட்ட கோவில் என்றொரு நம்பிக்கையும் உள்ளது. இவ்வாலயத்தில் முசுகுந்த சக்கரவர்த்தியின் சிலையை தரிசிக்கலாம். திருக்கயிலை மலையில் ஒரு குரங்காக இருந்து இறைவனையும் இறைவியையும் வில்வ தளங்களால் அர்ச்சனை செய்ததின் பலனாக அதே குரங்கு முகத்துடன் முசுகுந்த சக்கரவர்த்தியாக பூவுலகில் பிறந்தார். வலன் என்ற அசுரனை அழிக்க இந்திரனுக்கு உதவி அதன் பிறகு அவன் பூசித்து வந்த தியாகராஜப் பெருமான் பூவுலகில் திருவாரூருக்கு எழுந்தருள காரணமாக இருந்தவர் இவர். சிவ

பெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றி, கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு அன்னை பார்வதியால் ஒன்றான கந்தன், தேவ சேனாதியாக சென்று மாறுபடு சூரரை வென்ற பின் இந்திரன் தன் மகளான தெய்வானையை கந்தவேளுக்கு திருப்பரங்குன்றத்தில் திருமணம் செய்து கொடுத்தபோது தனது நண்பரான முசுகுந்த சக்கரவர்த்தியை திருமணத்திற்கு அழைக்க இவரும் தன் படைகளுடன் திருப்பரங்குன்றம் சென்று அத்தெய்வத்திருமணத்தை தரிசித்து வந்தார்.

மாசி மாதத்தில் மூன்று நாட்கள் சூரியன் தன் கதிர்களால் தழுவி ஆநிலையப்பரை வழிபடுகின்றான்.

நீதியார் நினைந்தாய நான்மறை
ஓதியாரொடுங் கூடலார் குழைக்
காதினார் கருவூருளானிலை
ஆதியாரடியார் தமன்பரே – என்று அம்மையின் ஞானப்பாலுண்ட ஆளுடையப்பிள்ளை பாடிய இத்தலத்தின்

இறைவன் – கல்யாண பசுபதீஸ்வரர், பசுபதி நாதர், ஆநிலையப்பர்.
இறைவி – அலங்காரவல்லி, சௌந்தர்யவல்லி
தீர்த்தம் - ஆம்பிரவதி (அமராவதி) நதி.
புராணப்பெயர் – கருவூர், ஆநிலை.
தலவிருட்சம் – வஞ்சி
பாடியோர் : திருஞானசம்பந்தர், கருவூரார், அருணகிரிநாதர்.

**தலவரலாறு :** படைப்புத் தொழில் குறித்து பிரம்ம தேவன் அடைந்த கர்வத்தை அடக்குவதற்காக சிவன் நடத்திய திருவிளையாடலால் உண்டான தலம் ஆகும். சிவனை அடைய விருப்பம் கொண்டிருந்த காமதேனுவிடம் நாரதர் சென்று, பூலோகத்தில் உள்ள வஞ்சி வனத்தில் தவம் செய்தால் அதன் எண்ணம் ஈடேறும் என்று கூறுகிறார். அதன்படி வஞ்சி வனமாகிய கரூர் சென்று அங்கு ஒரு புற்றுள் இருந்த இலிங்கத்திற்கு தன் பாலைச் சொரிந்து திருமஞ்சனம் செய்து வழிபட, மகிழ்ச்சி அடைந்த சிவனும் காமதேனுவுக்கு விரும்பியவற்றைப் படைக்கக்கூடிய ஆற்றலை அளிக்கிறார்.

காமதேனுவுக்குக் கிடைத்த படைப்பாற்றலால் அஞ்சிய பிரம்மா, தனது தவறை உணர்ந்து சிவனிடம் போய் தஞ்சம் அடைந்தார். சிவனும் அவரை மன்னித்து படைப்புத் தொழிலை அவருக்கேத் திரும்ப அளித்து காமதேனுவை இந்திரனிடம் அனுப்பி வைத்தார். பிரம்ம தேவர் வழிபட்டு உலகைப் படைக்கும் ஆற்றல் பெற்று கருவை தோற்றுவித்த காரணத்தால் கருவூர் என்பது தற்போது கரூராக மருவியுள்ளது. காமதேனு வழிபட்டதால் இறைவர் பசுபதீஸ்வரர் என்றும் ஆநிலையப்பர் என்றும் அழைக்கப்படுகிறார். காமதேனுவின் குளம்படி பட்ட தழும்பு இறைவனின் திருமேனியில் உள்ளது.

பதியாகிய இறைவன், பசுக்களாகிய நாம் மற்றும் பசுவையை பற்றியுள்ள பாசும் மூன்றும் என்றுமுள்ளது. பசுக்களாகிய நம் அனைவருக்கும் பதியாக சிவபெருமான் விளங்குகின்றார். பதியாகிய பெருமான் அணுக பசுவின் மும்மலங்களாகிய பாசம் விலகும் என்று திருமந்திரத்தில் திருமூலர் இவ்வாறு பாடுகின்றார்.

பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசு பாசம்
பதி அணுகில் பசு பாசம் நில்லாவே.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இரண்டு நாயன்மார்கள் இத்தலத்துடன் தொடர்புடையவர்கள். அவர்கள் புகழ்சோழர் மற்றும் எறிபத்தர் ஆவர்.




இராஜ கோபுரம்

*முதலில் எறிபத்த நாயனார் சரிதத்தைப் பற்றி காணலாம் அன்பர்களே. "இருள்கடு ஒடுங்கும் கண்டத்து இறையவருக்கு உரிமை பூண்டார்க்கு அருள்பெரும் தொண்டு செய்வார் அவர் எறிபத்தர் ஆவார்" என்று சேக்கிழார் பெருமானும்*

*“இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன்”* என்று சுந்தரரும் போற்றிய எறிபத்தர் கருவூரிலுள்ள ஆநிலை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய பெருமானை வழிபட்டுச் சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்து வந்தார். இவர் சிவனடியார்களுக்கு ஓர் இடர் வந்து உற்றவிடத்து உதவும் இயல்பினை உடையவர்; அடியார்களுக்கு இடையூறு வந்த காலத்து அங்கு விரைந்து சென்று அடியார்களுக்குத் தீங்கு புரிந்தோரைப் பரசு என்னும் மழுப்படையால் எறிந்து தண்டிப்பார். அதன் பொருட்டு அவர் கையிலே எப்பொழுதும் மழுப்படை இருக்கும்.

அண்ணலார் ஆனிலைக்கு திண்ணிய அன்பு கூர்ந்த சிவகாமியாண்டார் என்னும் புண்ணிய முனிவர் இறைவனுக்கு பள்ளித்தாமப் பணி செய்து வந்தார். அவர் சிதம்பரத்தில் வியாக்ரபாதர் சூரிய உதயத்திற்கு முன்னர் எவ்வாறு வண்டெச்சில் படுவதற்கு முன்னர் மலர் பறித்தாரோ அது போல சுவாமிக்கு மலர் கைங்கரியம் செய்து வந்தார். அவர் ஒருநாள் வைகறையில் துயிலெழுந்து நீராடித் தூய்மை உடையவராய், வாயைத் துணியாற் கட்டித் திருநந்தவனஞ் சென்றார். அங்கு மலர் கொய்து பூக்கூடையில் நிறைத்து, பூக்கூடையைத் தண்டில் மேல் வைத்து உயரத் தாங்கிக் கொண்டு திருக்கோயிலை நோக்கி விரைந்து வந்தார். அன்று மகாநவமியின் முதல் நாள். அந்நகரில் அரசு வீற்றிருக்கும் புகழ்சோழரது பட்டத்து யானை, ஆற்றில் நீராடி, அலங்கரிக்கப் பெற்று மதச்செருக்குடன் பாகர்க்கு அடங்காது விரைந்து வந்தது. அது சிவகாமியாண்டரைப் பின்தொடர்ந்து ஓடி அவர் தம் கையிலுள்ள பூக்கூடையைப் பறித்துச் சிதறியது. யானை மேல் உள்ள பாகர்கள் யானையை விரைந்து செலுத்திச் சென்றனர். சிவகாமியாண்டவராகிய அடியவர், இறைவர்க்கு சாத்தும் திருப்பள்ளித் தாமத்தைச் சிதறிய யானையின் செயல் கண்டு வெகுண்டு, அதனைத் தண்டு கொண்டு அடிப்பதற்கு விரைந்து ஓடினார். ஆனால் முதுமை காரணமாக இடறி விழுந்து நிலத்தில் கரங்களை மோதி அழுதார்.

அன்றைய தினம் இனி பெருமானுக்கு அலங்காரம் இல்லாமற் போனதே என்று சிவகாமியாண்டர் அழுததை சேக்கிழார் பெருமான் இவ்வாறு பாடுகின்றார்.

களியா னையின்ஈர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
ஆறும் மதியும் அணியுஞ் சடைமேல்
ஏறும் மலரைக் கரிசிந் துவதே
வேறுள் நினைவார் புரம்வெந் தவியச்
சீறுஞ் சிலையாய் சிவதா சிவதா

பொருள்: மதத்தையுடைய யானையினின்றும் உரித்த தோலைப் போர்த்தவரே! சிவதா! எளியவர்களுக்குத் துணைநிற்கும் இறைவனே! சிவதா! அன்பு மீதூர்ந்த மெய்யடியார்களின் உயிர்க் குயிரே! சிவதா! இறைமைக் குணங்களைத் தெளிவார்க்கு அமுதமே! சிவதா! சிவதா!

சடாமுடியில் ஏறும் மலரை யானை சிந்துவதோ எனப் புலம்பினார். ‘சிவதா, சிவதா’ எனும் அடியாரது ஓலத்தைக் கேட்டு விரைந்து அங்கு வந்த எறிபத்தர், யானையின் செய்கை அறிந்து வெகுண்டார். சிவகாமியாண்டாரைக் கண்டு வணங்கி, “உமக்கிந்த நிலைமையைச் செய்த யானை எங்கே போய்விட்டது?” என்று கேட்டார் . சுவாமிக்குச் சார்த்தக் கொண்டு வந்த மலர்களை சிதறி விட்டு, இத்தெருவழியே போகிறதெனக் கூறினார். ‘இந்த யானை பிழைப்பதெப்படி’ என யானையைப் பின்தொடர்ந்து சென்று யானையின் துதிக்கையை மழுவினால் துணித்தார்; அதற்கு முன்னும் இருமருங்கும் சென்ற குத்துக்கோற்காரர் மூவரையும் யானை மேலிருந்த பாகர் இருவரையும் மழுவினால் வெட்டி வீழ்த்தி நின்றார்.

தமது பட்டத்து யானையும், பாகர் ஐவரும் பட்டு வீழ்ந்த செய்தியைக் கேட்ட புகழ் சோழர் வெகுண்டார். ‘இது பகைவர் செயலாகும்’ என எண்ணி, நால்வகைச் சேனைகளுடன் அவ்விடத்தை அடைந்தார்; யானையும், பாகரும் வெட்டப்பட்டிருந்த அவ்விடத்தில் பகைவர் எவரையும் காணாதவராய் இரு கை யானைபோல் தனித்து நிற்கும் எறிபத்தராகிய சிவனடியாரைக் கண்டார். தம் யானையையும் பாகர்களையும் கொன்றவர் அங்கு நிற்கும் அடியவரே என அருகிலுள்ளார்கள் கூறக் கேட்டறிந்த வேந்தர், சிவபெருமானுக்கு அன்பராம் பண்புடைய இச்சிவனடியார் பிழைகண்டாலல்லது இவ்வாறு கொலைத் தண்டம் செய்யமாட்டார். எனவே என்னுடைய யானையும், பாகர்களும் பிழை செய்திருக்க வேண்டும் எனத் தம்முள்ளே எண்ணியவராய், தம்முடன் வந்த சேனைகளைப் பின்னே நிறுத்தி விட்டு, குதிரையினின்று இறங்கி, ‘மலைபோலும் யானையை இவ்வடியார் நெருங்கிய நிலையில், அந்த யானையால் இவர்க்கு எத்தகைய தீங்கும் நேராது விட்ட தவப்பேறுடையேன், அம்பலவாணரடியார் இவ்வளவு வெகுளியை (கோபத்தை) அடைவதற்கு நேர்ந்த குற்றம் யாதோ? என்று அஞ்சி, எறிபத்தரை வணங்கினார். எறிபத்தர், யானையின் சிவபாதகச் செயலையும், பாகர் விலக்காதிருந்ததனையும் எடுத்துரைத்தார். அதனை உணர்ந்த புகழ்ச்சோழர், ‘சிவனடியார்க்குச் செய்த இப்பெருங் குற்றத்திற்கு இத்தண்டனை போதாது; இக்குற்றத்திற்குக் காரணமாகிய என்னையும் கொல்லுதல் வேண்டும்; ஆனால் மங்கலம் பொருந்திய மழுப்படையால் கொல்வது மரபன்று. வாட்படையாகிய இதுவே என்னைக் கொல்லுவதற்கு ஏற்ற கருவியாம் என்று தமது உடைவாளை ஏற்றுக் கொள்ளும்படி எறிபத்தரிடம் நீட்டினார்.




அதுகண்ட எறிபத்தர், 'கெட்டேன், எல்லையற்ற புகழனாராகிய வேந்தர் பெருமான் சிவனடியார்பால் வைத்த அன்பிற்கு அளவில்லாமையை உணர்ந்தேன்' என்று எண்ணி, மன்னர் தந்த வாட்படையை வாங்கமாட்டதவராய்த் தாம் வாங்காது விட்டால் மன்னர் அதனைக் கொண்டு தம்முயிரைத் துறந்துவிடுவார் என்று அஞ்சித் தீங்கு நேராதபடி அதனை வாங்கிக் கொண்டார். உடைவாள் கொடுத்த அரசர், அடியாரை வணங்கி 'இவ்வடியார் வாளினால் என் குற்றத்தைத் தீர்க்கும் பேறு பெற்றேன்' என உவந்து நின்றார்.

அதுகண்ட எறிபத்தர் தமது பட்டத்து யானையும், பாகரும் என் மழுப்படையால் மடிந்தொழியவும், உடைவாளும் தந்து, 'எனது குற்றத்தைப் போக்க என்னைக் கொல்லும், என்று வேண்டும் பேரன்புடைய இவர்க்கு யான் தீங்கு இழைத்தேனே என மனம் வருந்தி, இவ்வாளினால் எனது உயிரை முடிப்பதே இனிச் செய்யத்தக்கது' என்று எண்ணி வாட்படையினை தம் கழுத்திற்பூட்டி அரிதற்கு முற்பட்டார். அந்நிலையில் புகழ்ச்சோழர், 'பெரியோர் செய்கை இருந்தவாறு இது கெட்டேன்' என்று எதிரே விரைந்து சென்று வாளையும் கையையும் பிடித்துக் கொண்டார்.

அப்பொழுது சிவபெருமான் திருவருளால், 'யாவராலும் தொழத்தகும் பேரன்புடையவர்களே! உங்கள் திருத்தொண்டின் பெருமையினை உலகத்தார்க்குப் புலப்படுத்தும் பொருட்டு, இன்று வெகுளி மிக்க யானை பூக்கூடையினை சிதறும்படி, இறைவனருளால் நிகழ்ந்தது" என்று ஓர்

அருள்வாக்கு எழுந்தது. அதனுடனே பாகர்களோடு யானையும் உயிர் பெற்றெழுந்தது. எறிபத்தர் வாட்படையை நெகிழவிட்டுப் புகழ்சோழர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். வேந்தரும் வாட்படையைக் கீழே எறிந்து விட்டு, எறிபத்தர் திருவடிகளைப் போற்றி நிலமிசை வீழ்ந்து இறைஞ்சினார். இருவரும் இறைவன் அருள்மொழியினை வியந்து போற்றினர்.

இறைவர் திருவருளால் சிவகாமியாண்டாரது பூக்கூடையில் முன்புபோல தூய நறுமலர்கள் வந்து நிரம்பின. பாகர்கள் யானை நடத்திக் கொண்டு மன்னரை அணுகினர். எறிபத்தர் புகழ்ச்சோழரை வணங்கி, அடியேன் உளங்களிப்ப இப்பட்டத்து யானை மேல் எழுந்தருளுதல் வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார் . புகழ்ச்சோழர் எறிபத்தரை வணங்கி, யானைமேலமர்ந்து சேனைகள் சூழ அரண்மனையை அடைந்தார்.

சிவகாமியாண்டார் திருப்பூக்கூடையைக் கொண்டு இறைவர்க்குத் திருமாலை தொடுத்தணித்தல் வேண்டித் திருக்கோயிலை அடைந்தார். எறிபத்த நாயனார் இவ்வாறு அடியார்களுக்கு இடர் நேரிடும் போதெல்லாம் முற்பட்டுச் சென்று, தமது அன்பின் மிக்க ஆண்மைத் திறத்தால் இடையூறகற்றித் திருக்கயிலையை அடைந்து சிவகணத்தார்க்கு, தலைவராக அமர்ந்தார்.

மாநவமி திருவிழா என்று திருத்தொண்டர் புராணத்தில் புகழப்படும் பூக்குடலைத் திருவிழா புரட்டாசியில் நவராத்திரி சமயம் இத்தலத்தில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அன்பர்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய ஒன்று.

எறிபத்த நாயனாருக்கும், கருவூருக்கும், ஆம்பிரவதி நதிக்கும், சிவபெருமானுக்கும், விநாயகக்கடவுளுக்கும் சிலேடையாக அமைத்த

ஐம்பொருட் சிலேடை இன்னிசை வெண்பா

பரசு கொளலாற் பவானியிட மார்ந்து
விரவுநலி தீர்த்தலான் மேற்பணி வஞ்சி
யறியத்தம் பத்தத்த னாறுமுனோ னன்ன
வெறிபத்தன் றாள்பணி வோமே.



இராஜகோபுர உட்புற அழகு

இனி புகழ்ச்சோழரின் சரிதத்தைப்பற்றி காணலாம் அன்பர்களே. முரசங் கொள் கடல் தானை மூவேந்தர் தங்களின் முன் பிரசம் கொள் நறுந்தொடையல் புகழ்ச்சோழர் என்று சேக்கிழாரும், "பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்சோழர்க்கு அடியேன்" என்று எம்பிரான் தோழர் திருத்தொண்ட தொகையில் பாடிய புகழ்சோழரின் சரிதத்தைப் பற்றி காணலாம் அன்பர்களே.

எறிபத்த நாயனார் சரிதத்தில் இப்புகழ்ச்சோழர் பற்றி முன்னரே பார்த்தோம். அவர் சோழ நாட்டில் ஆதியில் உறையூரில் அறநெறி தவறாமல் அரசாண்டு வந்தார். வீரத்திலும், பிறருக்கு ஈவதிலும் சிறந்தவராக புகழ்பெற்ற இவர் எம்பெருமானிடத்தும் பக்தியும் அன்பும் பூண்டு தொழுது வந்தார்.

சிவனடியார்களை வணங்கி அவர்களுக்கு சிவத்தொண்டு புரிந்தால் சிவனுக்கே செய்த பெரும் தொண்டு என்பதை உணர்ந்தவர். சிவனடியார்களிடம் அன்பும் பக்தியும் கொண்டிருந்ததோடு சிவாலயங்களுக்கு திருப்பணிகள் செய்வதையும் வழக்கமாக கொண்டிருந்தார். இவருடைய ஆட்சியில் சைவம் தழைத்தோங்கியது. பகைவர்கள் இல்லை என்னும்படி படை பலமும், புஜ கர பராக்கிரமும் கொண்ட சிவ பக்தரான புகழ்ச்சோழர் அரசர் மற்ற அரசர்கள் கப்பம் கட்டுவதற்கு வசதியாக தம்முடைய தலைநகரை மலைநாட்டு பக்கமுள்ள கருவூருக்கு மாற்றி கொண்டார். அங்கு பசுபதீஸ்வரரை இடையறாது வணங்கி வந்தார் அவர். தம் மீது புகழ்சோழர் கொண்ட பக்தியை உலகறியச் செய்ய வேண்டும் என்னும் திருவுளம் கொண்டார் இறைவன். கப்பம் கட்டும் அரசர்கள் குதிரைகள், யானைகள், பொற்குவியல்கள்,

விலை மதிக்கத்தக்க கற்கள் போன்றவற்றைச் செலுத்தி வந்தார்கள். ஒருமுறை அதிகன் என்னும் அரசன் மட்டும் மன்னர்க்கு கப்பம் கட்டாமல் இருந்தான். செய்தி புகழ்ச்சோழர் செவிகளுக்கு எட்டியது.

கப்பம் கட்டாமல் இருக்கும் அதிகனை வென்று வர அமைச்சர்களிடம் ஆணையிட்டார். மன்னனின் கட்டளைக்கிணங்க அமைச்சர்கள் படைகள் சூழ சென்று அதிகனை வென்று அங்கிருந்த பொருள் செல்வங்கள், படைகள் கொண்டு வந்ததோடு போரில் மாண்ட யானை, குதிரை, பெண்கள் தலைகள், வீரர்கள் தலைகளையும் எடுத்து வந்தனர். தமது படையின் வீரம் கண்டு மகிழ்ந்திருந்த மன்னன் ஒரு தலையில் மட்டும் சடைமுடி இருப்பதைப் பார்த்தார்.

அதைக் கண்டதும் புகழ்ச்சோழ நாயனார் உள்ளம் பதைத்தது. கண்களில் நீர் நிறைந்தது. பெரும் பிழை செய்துவிட்டோமே என்று அஞ்சினார். அடியார்களுக்கு தீங்கிழைக்க செய்யும்படி ஆனதே என்று அழுது அரற்றியவர் அமைச்சரிடம் என் ஆட்சியில் சைவ நெறிக்கு பாதுகாப்பில்லாமல் போய்விட்டதே. திருமுடியில் சடைமுடி ஏந்திய அடியாரை நானே கொன்றுவிட காரணமாகி விட்டேனே. எம்பெருமானுக்கு எத்தகைய துன்பத்தைக் கொடுத்துவிட்டேன்.

சைவ நெறியை காப்பாற்ற வேண்டிய நான் அரசனல்லவே. கொடுங்கோலனாக அல்லவா இருந்துவிட்டேன். இனி மக்களைக் காப்பாற்ற எனக்கு எவ்வித தகுதியுமில்லை என்று கூறியவர் தன்னுடைய புதல்வனை அரசுக் கட்டிலில் அமர்த்தினார். பிறகு திருசடை கொண்ட தலையை ஓர் பொற்தட்டில் வைத்து ஐந்தெழுத்து மந்திரத்தை மனதில் தியானித்தவாறே நெருப்புக்குண்டலத்தை வலம் வந்தார் மன்னர். பிறகு பொற்றாமரைக் குளத்தில் இறங்குவது போல் நெருப்புக்குண்டத்தில் இறங்கினார்.

சுற்றியிருந்தவர்கள் மன்னனின் பக்தியைக் கண்டு உருகினார்கள். மன்னர் மன்னராக மட்டுமல்ல மகானாக வாழ்ந்திருக்கிறார் என்றார்கள். புகழ்ச் சோழர் நாயனாரை எம்பெருமான் தம் திருவடி நிழலில் அணைத்துக்கொண்டார். அந்நாள் ஆடி மாத திருக்கார்த்திகை நாளாகும்.



இரண்டாம் இராஜ கோபுரம்

அங்கணார் அடியார் தம்மை செய்தயிவ்வபராதத்திற்கு இங்கு இது தன்னால் போதாது என்னையும் கொல்ல வேண்டும் என்று செங்கையால் உடைவாள் வாங்கிக் கொடுத்த புகழ் சோழர் இத்தலத்தின் தீபஸ்தம்பத்தில் அடியவர் தலையை ஒரு தட்டில் ஏந்தி நெருப்பு குண்டத்தில் இறங்கும் கோலத்தில் சிற்பமாக விளங்குகின்றார்.

இவ்வாலயத்தில் கருவூர் சித்தருக்கு தனி சன்னதி வெளிப்பிரகாரத்தில் அமைந்துள்ளது. இத்தலத்தில் பிறந்ததனால் இவருக்கு இப்பெயர். நவ பாஷாணத்தால் பழனி ஞானதண்டாயுதபாணியின் சிலையை உருவாக்கிய போகரின் சீடர். இராஜராஜ சோழனின் குரு, தஞ்சை பெரிய கோவிலில்

பிரகதீஸ்வரரை பிரதிஷ்டை செய்யும் போது அஷ்டபந்தன மருந்து இறுகாமல் இளகிய போது, போகரின் ஆணைப்படி அங்கு சென்று இலிங்கத்தை நிலை நிறுத்தியவர். ஒரு சமயம் நெல்லையப்பர் சன்னதியில் நின்று `நெல்லையப்பா` என்றழைக்க, அப்பொழுது பெருமான் இவரது பெருமையைப் பலரும் அறியும் பொருட்டு வாளா இருக்க ``இங்குக் கடவுள் இல்லை போலும்`` என்று இவர் சினந்து கூற அவ்வாலயம் பாழாகியது என்றும், பின்னர் அவ்வூர் மக்கள் நெல்லையப்பரை வேண்ட அப்பெருமான் கருவூர்த்தேவரை நெல்லையம்பதிக்கு அழைத்து வந்து காட்சியளிக்க, மீண்டும் அவ்வாலயம் செழித்தது என்றும் கூறுவர். திருவரங்கத்தில் இவர் மூலம் தனது நவரத்தின மாலையை அபரஞ்சி என்ற தாசிக்கு கொடுத்து அதன் முலம் இவர்கள் இருவரின் பெருமையையும் உலகறிய செய்தார் அரங்கர் என்றொரு வரலாறும் உள்ளது. இறுதியில் கருவூரில் ஆநிலையப்பரை வணங்கி வந்த இவரை சில பொறாமைக்காரர்கள், பித்தர், வாம மார்க்கத்தை கடைப்பிடிப்பவர் என்று துன்புறுத்த, ஒரு தைப்பூச நாளில் ஆநிலையப்பரில் கலந்தார்.

கருவூரர் திருமுறை ஆசிரியர்களில் ஒருவர் என்பதால் அவரை இப்பாடல் பாடி துதித்தோம்

திருஞானசம்பந்தர் வாகீசர் சுந்தரர்
திருவாதவூரர் மற்றைத்
திருமாளிகைத்தேவர் சேந்தனார் கருவூரர்
தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞான கண்டராதித்தர் வேணாட்டடிகள்
வாய்ந்த திருவாலியமுதர்
மருவு புருடோத்தமர் சேதிராயர் மூலர்
மன்னுதிரு ஆலவாயார்
ஒரு காரைக்காலம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர்கீரர் கல்லாடனார்
ஒண் கபிலர் பரணர் மெய்யுணர் இளம்பெருமானோடு
ஓங்கும் அதிராஅடிகளார்
திருமேவு பட்டினத்து அடிகளோடு நம்பியாண்டார் நம்பி
சேக்கிழாரும் சிவநெறித்
திருமுறைகள் பன்னிரண்டு அருள் செய்த
தெய்வீகத் தன்மையோரே.

அடூர் க சுப்பிரமணியப்பிள்ளை

கருவூர்த் தேவரின் திருவுருவச்சிலை இக்கோவிலிலும் தஞ்சைப் பெரிய கோவிலிலும் விளங்குகிறது. இவர், கோவில், திருக்களந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோழேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை, திருவிடைமருதூர் என்ற பத்து சிவத்தலங்கட்கு ஒவ்வொரு பதிகங்கள் வீதம் பத்துத் திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் பாடியுள்ளார். திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது. அவரது ஒரு பாடல்

பவளமே மகுடம்! பவளமே திருவாய்!<br>
        பவளமே திருவுடம்பு! அதனில்<br>
தவளமே களபம்! தவளமே புரிநூல்!<br>
        தவளமே மூறுவல் ஆடு அரவம்!<br>
துவளுமே கலையும்! துகிலுமே ஒருபால்!<br>
        துடியிடை இடமருங்கு ஒருத்தி!<br>
அவளுமே ஆகில், அவரிடம் களந்தை<br>
        அணிதிகழ் ஆதித்தேச் சரமே!

பொருள்: ஐயனின் ஜடாமுடி, திருவாய், திருமேனி மூன்றும் பவள நிறம். அவரது திருமேனியில் பூசியுள்ள திருநீறு, முப்புரிநூல், அவரின் ஆபரணம் நாகம் மூன்றும் வெண்மை. இவ்வாறு சிவப்பும் வெளுப்புமாக வலப்பக்கத்தில் இறைவன் மிளிர, இடப்பக்கம் மேகலை, துகில், துவளும் இடையுடன் முக்கண்னி நிற்கின்றாள் இவ்வாறு அன்பர்க்கு அருள அம்மையும் அப்பனும் ஒன்றாக திருக்களந்தை ஆதித்தேச்சரத்தில் அருளுகின்றனர்.

வாருங்கள் இனி பிரம்மாண்டமான இவ்வாலயத்தை சுற்றி வலம் வந்து தரிசிக்கலாம். நெடிதுயர்ந்த 120 அடி உயர ஏழு நிலை கிழக்கு இராஜ கோபுரம் இக்கொரோனா காலத்திலும் தரிசனம் செய்ய வரும் அன்பர்களே வாருங்கள் என்று வரவேற்றது. கோபுரத்தில் அற்புதமான திருவிளையாடல் புராண, தசாவதார சுதை சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. நெடிய மதில் சுவர் ஆலயத்திற்கு அரணாக அமைந்துள்ளது. இராஜகோபுரத்திற்குள் நுழைந்தால் கொங்கு நாட்டிற்கே உரிய கல் விளக்குத் தூண்(தீப ஸ்தம்பம்). எழிலாக உயர்ந்த நான்கு கால் மண்டபத்துடன் அமைந்துள்ளது. தீப ஸ்தம்பத்தின் ஒரு பக்கத்தில் இத்தலத்தின் ஐதீகமான காமதேனு தன் நாவால் இறைவனை பூஜை செய்யும் சிற்பமும், ஒரு பக்கம் புகழ் சோழர் ஒரு தட்டில் இறந்த சிவனடியாரின் தலையை தன் தலை மேல் வைத்தவாறு பூக்குழியில் இறங்கும் சிற்பமும், சுயம்பு சிவலிங்கத்திற்கு பசு பால் சொரியும் சிற்பமும் அலங்கரிக்கின்றன.

சமீபத்தில்தான் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது என்பதால் ஆலயம் முழுவதும் புது வர்ணத்தில் மிளிர்ந்து கொண்டிருந்தது.

இப்பிரகாரத்தின் வட கிழக்கில் புகழ் சோழர் மண்டபம் என்னும் நூற்றுக்கால் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் தூண்களில் எழிலான சிற்பங்களை கண்டு களிக்கலாம். இம்மண்டபத்தின் முகப்பில் உள்ள சுதை சிற்பங்களும் நடன கோலத்தில் ஆடல் வல்லான், நர்த்தன கணபதி, நர்த்தன பால முருகன், நடனமங்கையர் என்று சிறப்பாக அமைந்திருக்கின்றது. எதிரே ஐந்து நிலை இரண்டாவது இராஜகோபுரம். அதற்கு முன்பே ஒரு மண்டபம். இக்கோபுரத்திற்கு வலப்பக்கம் நால்வர் அரங்கம் என்னும் பிரவசன மண்டபம். இம்முதற்பிரகாரத்தில் நந்தவனமும் பராமரிக்கப்படுகிறது. இதன் கன்னி மூலையில் கருவூரரின் சன்னதி அமைந்துள்ளது. கருவூரருக்கு பௌர்ணமி தோறும் மாலை ஹோமத்துடன் சிறப்பு அபிஷேகம் நடைபெறுகின்றது. இப்பிரகாரத்தை வலம் வரும் போது சுவாமி, மற்றும் இரண்டு அம்பாள்களின் விமானங்களை தரிசிக்கலாம்.




இப்பிரகார வலம் முடித்து இரண்டாவது கோபுரம் வழியாக இரண்டாவது பிரகாரத்தில் நுழைந்தவுடன் தூண்களுடன் கூடிய கல்யாண மண்டபம் அம்மண்டபத்தில் பலி பீடம், கொடி மரம், நந்தியெம்பெருமானை தரிசிக்கின்றோம். இம்மண்டபத்தில் எட்டுக்கரங்களுடன் அருள் பாலிக்கும் காலபைரவரையும் தரிசிக்கலாம். இவருக்கு தேய்பிறை அஷ்டமி நாளில் காலையும், மாலையும் சிறப்பு அபிஷேகம் நடைபெறுகின்றது. சூரியனுக்கும், சந்திரனுக்கும் சிறு சன்னதிகளும் உள. மண்டபத்தின் கூரையில் அருமையான ஓவியங்கள். இப்பிரகாரத்தின் தெற்கு சுற்றில் நடராஜர் சன்னதி, அறுபத்து மூவர்கள், இவர்களில் எறிபத்த நாயனாருக்கு தனி சன்னதி உள்ளது. மேற்கில் விநாயகர், கஜலட்சுமி, வன வல்லி, கஜ வல்லி சமேத சுப்பிரமணியர். ஆறு திருமுகங்கள், பன்னிருத் திருக்கரங்களுடன் கிழக்கு நோக்கிய திருமுக

மண்டலத்துடன், மயில் மேல் சாய்ந்து நின்ற கோலத்தில் தேவியருடன் அருள் பாலிக்கின்றார் முருகப்பெருமான். இவரை அருணகிரிநாதர் ஏழு திருப்புகழ் பாடல்களினால் போற்றியுள்ளார் அவற்றுள் ஒருப்பாடல் இதோ

மதியால் வித்தனாகி - மனதாலுத்தமனாகி
பதிவாகிச் சிவஞான - பரயோகத் தருள்வாயே
நிதியே நித்தியமேயென் - நினைவேநற் பொருளாயோய்
கதியே சொற் பரவேளே - கருவூரிற் பெருமாளே.

பொருள்: அழியாத செல்வமே! அழிவில்லாப் பொருளே! எனது உள்ளத்தில் எப்போதும் நிலைத்து இருக்கும் தியானப் பொருளே! சிறந்த பேரின்பப் பொருளானவனே! எனக்குப் புகலிடமே! அனைவராலும் புகழப்பெறும் மேலான செவ்வேளே, கருவூர் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளிய பெருமையில் மிக்கவரே! அறிவு நிலையிலே அடியேன் ஒரு பேரறிவாளனாகத் திகழ்ந்து, மனத்தளவில் நன்னெறியில் ஒழுகி, சிறந்தவனாக விளங்கி, சிவஞானத்தில் எனது சிந்தை பதிந்து இருப்பதாகி, மேலான யோக நிலையிலே அடியேன் மாறாது இருக்க அருள் புரிவாயாக என்று வேண்டுகிறார் அருணகிரிநாதர்.



பசுபதீஸ்வரர்

வடக்கு சுற்றில் பஞ்ச லிங்கங்கள் அமைந்துள்ளன. சுவாமி கோஷ்டத்தில் விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர், பிரம்மா, துர்க்கை அருள் பாலிக்கின்றனர். சுவாமி சன்னதி, மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை

என்று மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. கருவறையில் ஆதியில் புற்றிலிருந்து தோன்றிய சுயம்பு இலிங்க ரூபத்தில், சற்றே வடக்கு பக்கம் சாய்ந்தவாறு, காமதேனுவின் குளம்புத் தழும்புடன் அருள் பாலிக்கிறார் ஆநிலையப்பர். (கருவூரருக்காகச் சுவாமி சாய்ந்து கொடுத்தார் என்பது ஐதீகம்). ஆவுடையார் சதுரமாக உள்ளது.

பங்க யம்மலர்ப் பாதர் பாதியோர்
மங்கை யர்மணி நீல கண்டர்வான்
கங்கை யார்கரு வூரு ளானிலை
அங்கை யாடர வத்தெம் மண்ணலே.

பொருள்: தாமரை போன்ற திருவடியர். தம் திருமேனியின் பாதியாக உமையம்மையைக் கொண்டவர். நீல மணி போன்ற கண்டத்தினர். ஆகாய கங்கையைத் தாங்கியவர். அழகிய கரங்களின் மேல் ஆடும் பாம்பை உடையவர், அவர் கருவூர் ஆனிலையில் விளங்கும் தலைவராவார் என்ற நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரின் பதிகம் பாடி கொரோனாவின் கொடுமையிலிருந்து அனைவரையும் காப்பாற்றி அருள வேண்டினோம்.

இத்தலத்தில் இரு அம்பாள்கள் அருள் பாலிப்பதாலும் சுவாமி நித்ய கல்யாண பசுபதீஸ்வரர் என்பதாலும் இவருக்கு அனு தினமும் திருக்கல்யாணம் நடைபெறுகின்றது. பக்தர்கள் தங்கள் வேண்டுதல்கள் நிறைவேறிய பின்னர் பெருமானுக்கு திருக்கல்யாணம் செய்து தரிசித்து மகிழ்கின்றனர்.

ஐயனை தரிசித்த பின் கல்யாண மண்டபத்தின் வழியாக வடப்பக்கம் உள்ள அம்பாள் சன்னதிகளுக்கு செல்கின்றோம். இரண்டு அம்பாள்கள் அருள் பாலிப்பது இத்தலத்தின் ஒரு தனி சிறப்பு ஆகும். கிரியா சக்தியாகிய அலங்காரவல்லி அம்பாள் கிழக்கு நோக்கியும், இச்சா சக்தியாக சௌந்தரவல்லி எனும் கிருபா நாயகி தெற்கு நோக்கியும் அருள் பாலிக்கின்றனர். அலங்காரவல்லி அம்பாள் ஆதி காலத்தில் இருந்து உள்ள அம்பாள். இவ்வம்மன் சன்னதி சுற்றி வந்து வழிபடுமாறு அமைந்துள்ளது. அம்மனின் பீடம் எழிலாக, இரண்டடுக்கு எட்டுப்பிரிவுடன், சிம்மம் மற்றும் ஸ்ரீசக்கரத்துடன் சிறப்பாக அமைந்துள்ளது. இவர் ஐயனின் அபேத சக்தி.

சௌந்தரவல்லி அம்பாள் சன்னதி பிற்காலத்தில் கட்டியது என்று தெரிகின்றது. இவை இறைவனை வழிபட்ட தாதாமிய சக்தி என்பர் பெரியோர். இரு அம்மன் திருச்சிலைகளும் திருவாசியுடன் அமைந்துள்ளன. அம்பாள் இருவரும் நின்ற கோலத்தில் மேற்திருக்கரங்களில் மலர்களைத்தாங்கியும், கீழ்த் திருக்கரங்கள் அபய, வரத கரங்களாக விளங்க அருட்காட்சி தருகின்றனர். இருவரையும்

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே – என்று போற்றி வணங்கினோம்.

இரண்டாவது அம்பாளான சௌந்தரநாயகி, கரூருக்கு அருகில் உள்ள அப்பிபாளையத்தை சேர்ந்த வடிவுடை என்பவர். சிறு வயதில் இருந்தே சிவபெருமானின் மீது பக்தி கொண்டு இருந்தார். ஆண்டாள் போல மணந்தால் இறைவனையே மணப்பேன் என்று வைராக்கியமாக இருந்தார். பெற்றோர் எவ்வளவோ முயன்றும் இவரது மனதை மாற்ற முடியவில்லை. இவரது பக்திக்கு இரங்கி இறைவன் ஒரு நாள் கிராமம் முழுமையும் பூமாரி பொழிவித்து மறு நாள் தெய்வீக மாலை அளித்து தன்னுடன் சேர்த்துக் கொண்டார். இப்போதும் பங்குனிப் பெருவிழாவின் ஆறாம் திருநாள் சுவாமி இக்கிராமத்திற்கு எழுந்தருளி மறு நாள் சௌந்தரநாயகியுடன் ஆலயத்திற்கு எழுந்தருளுகிறார். அம்மன் இருவரையும் மனதார வணங்கி வெளியே வந்தோம்.

தொண்டர்தம் சிந்தை நீங்கி அந்நிலை அரனார் வாழ்வது ஆனிலை என்னும் கோவில் என்னும் புகழ் பெற்ற இத்தலத்தில் பங்குனி உத்திர திருவிழா. 13நாட்கள் மிக சிறப்பாக நடைபெறுகிறது. இதுதவிர மார்கழி ஆருத்ரா தரிசனம், பூக்குடலை திருவிழா, பிரதோச பூஜை, பவுர்ணமி பூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றது.

"தீண்டரிய வெங்கருவூர் வஞ் வினைதீர்த்தவர் சூழ்ந்த

நங்கருவூர்ச் செய்யுள் நவரசமே"

பொருள்: கருப்பை வாசம் கொடுமையானது. இறைவனின் கருணையால் நமக்கு அத்துன்பம் மறைக்கப்படுகிறது. இவ்வாறு கருப்பையில் மீண்டும் அவதியுறா வண்ணம் புண்ணியம் செய்த பெருந்தகையோர் சூழ்ந்து விளங்கும் இறைவன் கருவூர் ஈசன். அவன் எத்தகையவன்? நவரசங்கள் ததும்பும் பாடல்களுக்கு உரியவன். - என்று வள்ளலார் திருவருட்பாவில் பாடியுள்ள ஆநிலையப்பரை திவ்யமாக சேவித்தபின் அடுத்து கொடுமுடிக்கு விரைந்தோம்.
ஒரு கூடுதல் செய்தி கரூருக்கு அருகில் உள்ள நெரூரில் சதாசிவ பிரமேந்திராள் சமாதித் தலம் உள்ளது. அவை சமாதி அடைந்த இடத்தில் வில்வமரமும், சுயம்பு (தான்தோன்றி) இலிங்கமும் அமைந்திருக்கிறது. இங்கு வேண்டிக் கொள்பவர்களுக்கு அமைதியும், செல்வமும் பரிபூரணமாக கிடைக்கும் என்று நம்பிக்கை உண்டு. இத்தலத்தில் பௌர்ணமி பூசை, ஒவ்வொரு வியாழக்கிழமையும் குரு பூசை, சித்திரை மாத குரு வார பூசை போன்றவைகள்

மிக சிறப்பாக கொண்டாடப்படுகிறது. வாருங்கள் இனி திருவெஞ்சமாக்கூடல் ஆலயத்தை தரிசிக்கலாம்.

# 5 திருவெஞ்சமாக்கூடல் தரிசனம்



பண்ணேர் மொழியம்மை உடனாய கல்யாண விகிர்தேஸ்வரர்

அடியோங்கள் வெஞ்சமாக்கூடல் இந்த யாத்திரையின் போது செல்ல இயலவில்லை, ஆயினும் முழுமைக்காக இத்தலத்தைப் பற்றிய குறிப்புகள் இந்நூலில் இடம் பெறுகின்றது. கரூருக்கு அருகில் இத்தலம் அமைந்துள்ளது என்பதால் அதற்கு அடுத்தபடி இடம் பெறுகிறது. கொங்கேழ் தலங்களில் கிராமத்தில் அமைந்த தலம் என்பதால் சிறிது சிரமப்பட்டுத்தான் செல்ல முடியும். கரூரிலிருந்து பேருந்துகள் உள்ளன. கரூரிலிருந்து தனி வண்டியிலும் செல்லலாம். கரூரிலிருந்து சுமார் 20 கி.மீ தூரத்தில் உள்ளது இத்தலம். இங்கு செல்ல

1) கரூர் - அரவக்குறிச்சி சாலையில் 13 கி.மீ. சென்று, சீத்தப்பட்டி (அ) ஆறுரோடு பிரிவில் இறங்கி 8 கி.மீ.செல்ல வேண்டும்.

2) கரூர் - ஆற்றுமேடு நகரப் பேருந்து வெஞ்சமாங்கூடல் வழியாக செல்கிறது.

3) இதுதவிர, கரூரிலிருந்து திண்டுகல்லுக்குப் செல்லும் இரு பேருந்துகளும் இக்கிராமம் வழியாகச் செல்கின்றன.

ஒரு சமயம் வேடசந்தூர் பக்கத்திலுள்ள குடகனாறு அணைக்கட்டு உடைந்து, குடகனாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் இக்கோவில் முற்றிலும் அடித்துச் செல்லப்பட்டு சேதமடைந்தது. ஆலயத்தின் கருங்கற்கள் 2 கி.மீ. தூரம் அடித்துச்

செல்லப்பட்டன என்பதிலிருந்து வெள்ளப் பெருக்கின் நிலைமையை உணரலாம். ஊரும் முழுவதும் அழிந்தது. இந்நிலை நேர்ந்த பல்லாண்டுகட்குப் பின்பு, 1982ல் ஈரோடு அருள் நெறித் திருக்கூட்டத்தார் இக்கோவில் திருப்பணியைத் தொடங்கி, பெருமுயற்சி செய்து, பல லட்சங்கள் திரட்டி, திருக்கோயிலைப் புதியதாக எடுப்பித்து, 1986ல் மகா கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்துள்ளனர். இப்போது நாம் தரிசிப்பது புதிதாக கட்டப்பட்டக் கோவில். கொங்கேழ் தலங்களில் இத்தலம் எழாவது தலம்.




வெஞ்சமன் என்னும் வேட்டுவ மன்னன் இத்தலத்தை தலைநகராகக் கொண்டு ஆண்டதாலும், அமராவதியின் கிளை நதியான சிற்றாறு, அமராவதியுடன் கூடுமிடத்தில் உள்ளதாலும் (கூடல்) வெஞ்சமாக்கூடல் என்றும் வெஞ்சமாங்கூடலூர் என்றும் பெயர் பெற்றது. கோயிலுக்குப் அருகில் ஓடும் சிற்றாறு, குடகனாறு, குழகனாறு, குடவன் ஆறு எனப்பலவாறு அழைக்கப்படுகிறது. தனது பதிகத்தில் ஆறு பாடல்களில் இவ்வாற்றை எம்பிரான் தோழர் நம்பியாரூரர் பாடியுள்ளார்.

சுந்தரருக்கு சிவபெருமான் பொன் ஈந்த தலங்களுள் இதுவும் ஒன்று. தன் தோழனுக்காக, அவன் பாடல் கேட்பதற்காக அவர் செய்த திருவிளையாடல்

மிகவும் சுவையானது. தலம் தோறும் சென்று இறைவனை பாடிக்கொண்டு வந்த வன்தொண்டர் இத்தலத்தை அடைந்த போது அவர் கையில் பொருள் எதுவும் இருக்கவில்லை, எனவே அவர் பெருமானிடம் பொன் கேட்டார். பெருமான் என் கையில் பொன் ஒன்றும் இல்லை என்றார். சுந்தரர் எப்படியாவது எனக்கு பொன் கொடுங்கள் என்று வேண்ட, தன் பிள்ளைகளாகிய விநாயகர், முருகர் இருவரையும் உமையே ஒரு முதிர்ந்த கிழவியாக வடிவு கொண்டு வீற்றிருக்க, சுந்தரர் பாட்டிற்கு மகிழ்ந்து தன் பிள்ளைகளை அக்கிழவியிடம் ஈடு காட்டிப் பொன் வாங்கிச் சுந்தரருக்கு அளித்தார் என்ற செய்தியைக் கொங்கு மண்டலச்சதகச் செய்யுள் தெரிவிக்கிறது. இச்செய்தி பெரிய புராணத்துள் இல்லை. அச்சதகப் பாடல் வருமாறு-

"கிழவேதி வடிவாகி விருத்தையைக் கிட்டி என்றன்
அழகாகும் மக்கள் அடகு கொண்டு அம்பொன் அருளாதி என்று
எழுகாதலால் தமிழ்பாடிய சுந்தரர்க்கு ஈந்தஒரு
மழுவேந்திய விகிர்தேசுவரன் வாழ் கொங்கு மண்டலமே."

தேவேந்திரன் அகலிகையின் மேல் கொண்ட மோகத்தால், கவுதம முனிவரின் சாபத்தால் மேனி முழுவதும் கண்ணாகப் பெற்றான். அச்சாபம் தீர பல் வேறு ஆலயங்களுக்கு சென்று வழிபட்டு இத்தலத்தில் இறைவனை வணங்கிய போது அவன் சாபம் நீங்கியது என்று தல வரலாறு கூறுகிறது.

பொன் பெற்ற சுந்தரர் பாடிய இத்தலத்தின்

இறைவன் - கல்யாண விகிர்தேஸ்வரர், விகிர்தநாதேஸ்வரர்.
இறைவி - மதுரபாஷிணி, பண்ணேர்மொழியம்மை, விகிர்தநாயகி.
தீர்த்தம் - குடகனாறு.
தல விருட்சம் - வில்வம்.
பாடியவர்கள் - சுந்தரர், அருணகிரிநாதர்.

இராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறது. கோபுரத்திற்கு முன்னர் இருபுறமும் விநாயகர், சுப்பிரமணியர் சன்னதிகள் உள்ளன. கோபுரத்திலிருந்து சுமார் 17 படிகள் கீழிறங்கிச் செல்ல வேண்டும். கீழே வலப்பால் சூரியனும் இடப்பால் சந்திரனும் உளர். சுவாமிக்கு எதிரே கொடிமரம், பலி பீடம், நந்தியெம்பெருமான். வெளிப் பிரகாரத்தில் நடராஜர் சபை, நவகிரகங்கள், பைரவர் சன்னதி, சனீஸ்வரருக்கு தனி சன்னதி உள்ளது.

உட்பிரகாரத்தில் நால்வர், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார், அடுத்து அறுபத்து மூவர்கள், நாயன்மார்களின் மூர்த்தங்களின் கீழ், நாடு, மரபு, காலம், திருநட்சத்திரம் முதலிய விவரங்களும் எழுதப்பட்டுள்ளன. கன்னி மூலையில் சித்தி விநாயகர். தொடர்ந்து பஞ்சலிங்கங்கள் உள்ளன. வள்ளி தெய்வயானை உடனாக ஆறுமுகப் பெருமாள் மயிலின் மீது காலை வைத்தூன்றிய நிலையில் எழிலாக தரிசனம் தருகிறார்.

வண்டுபோற் சாரத் தருள்தேடி
மந்திபோற் காலப் பிணிசாடிச்
செண்டுபோற் பாசத் துடனாடிச்
சிந்தைமாய்த்தேசித் தருள்வாயே
தொண்டராற் காணப் பெறுவோனே
துங்கவேற் காணத் துறைவோனே
மிண்டராற் காணக் கிடையானே
வெஞ்சமாக் கூடற் பெருமாளே.

பொருள்: வண்டு எவ்வாறு மலர்களின் தேனைத் தேடிக் களிக்கிறதோ அவ்வாறு உனது அருளை நான் தேடிக் களிக்குமாறும், குரங்கு எவ்வாறு மரக்கிளைகளைத் தாண்ட வல்லதோ அவ்வாறே நானும் காலனின் பாசக் கயிற்றின் பிணிப்பைத் தாவும் வல்லமை பெறுமாறும், செண்டாயுதத்தை எறிந்தால் எவ்வாறு பகை மாய்க்கப்படுகிறதோ அவ்வாறு நான் பாசங்களுடன் போராடி வெல்லுமாறும், அலைந்து திரியும் என் மனத்தை மாய்த்து சும்மா இருக்கச் செய்து மெய்யறிவைத் தந்தருள்வாயாக. உன் அடியார்களால் காணப்பெறும் தன்மை உடையவனே, தூய்மையான தலமாம் திருவேற்காட்டில் வாழ்பவனே, ஆணவம் மிக்கவர்களால் காணக் கிடைக்காதவனே, திருவெஞ்சமாக்கூடல் என்ற திருத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே என்று அருணகிரியார் இவரைப் போற்றுகின்றார்.

இறைவன் சன்னதி கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மஹா மண்டபம் என்று முப்பிரிவாக அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்தில் சிறிய விநாயகர், நந்தி, கருவறையில் சுந்தரருக்கு பொன்தர வேண்டி தன் பிள்ளைகளை அடகு வைத்த ஐயன் சுயம்பு மூர்த்தியாக அருள் பாலிக்கின்றார். விகிர்தர் என்றால் வேறுபட்டவர் , விசித்திரமானவர் என்ற பொருள்கள் இருந்தாலும் இறைவன் என்பதையே இச்சொல் குறிக்கின்றது. சுவாமி சன்னதி கோஷ்டத்தில் விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மன், துர்க்கை அருள் பாலிக்கின்றனர்.

"பண்ணேர் மொழியாளை ஓர் பங்குடையாய்
படுகாட்டகத் தென்றுமோர் பற்றொழியாய்
தண்ணார் அகிலுந்நல சாமரையும் மலைத்
தெற்று சிற்றாறதன் கீழ் கரைமேல்
மண்ணார் முழவுங் குழலுமியம்ப
மடவார் நடமாடு மணியரங்கில்
விண்ணார் மதிதோய் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே"

பொருள்: பண் போலும் இனிமையான மொழியினையுடைய உமாதேவியை ஒருபாகத்தில் உடையவனே, யாவரும் ஒடுங்குங் காட்டினிடத்தில் உள்ள ஒரு பற்றினை என்றும் நீங்காதவனே, இன்பத்தைத் தரும் அரிய அகிலையும், நல்ல கவரியையும் அலைத்துக்கொண்டு வந்து கரையை மோதுகின்ற சிற்றாற்றின்

கீழ்க்கரைமேல் உள்ள, மண்பொருந்திய மத்தளமும், குழலும் ஒலிக்க, மாதர்கள் நடனம் ஆடுகின்ற அழகிய அரங்கின் மேல், வானத்தில் பொருந்திய சந்திரன் தவழ்கின்ற திருவெஞ்சமாக்கூடலில் எழுந்தருளியிருக்கின்ற வேறுபட்ட இயல்பினையுடையவனே, அடியேனையும் உன் சீரடியாருள் ஒருவனாக வைத்து விரும்பியருள் என்று சுந்தரர் இத்தலத்தின் அம்பாளையும், ஐயனையும் தமது பதிகத்தில் போற்றியுள்ளார். இப்பதிகத்தின் அனைத்து பாடல்களிலும் இறைவனை விகிர்தா என்று போற்றிப் பாடியுள்ளார்.

அம்பாள் சன்னதியும் கிழக்கு நோக்கியுள்ளது. அம்பாள் நான்கு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் அருட்காட்சி அருளுகின்றாள். நாடொறும் தினமும் இரண்டு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. வடமொழியில் மதுரபாஷிணி, விகிர்தநாதேஸ்வரி என்றும் அழைக்கப்ப்படுகின்றாள். அம்பாளையும் சுவாமியையும் தரிசித்து விட்டு செல்லும் போது படியேற வேண்டும் எனவே இவர்களை தரிசித்தால் வாழ்வில் என்றும் ஏற்றம்தான்.

கல்வெட்டில் இறைவன் பெயர் 'வெஞ்சமாக்கூடல் விகிர்தர்' என்றும் இறைவி பெயர் 'பனிமொழியார்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. தங்குமன வஞ்சமாக்கூடல் வரையாதவர் சூழும் வெஞ்ச மாக்கூடல் விரிசுடரே". என்று வள்ளலார் போற்றிய பண்ணேர் மொழியாள் உடனுறை விகிர்தரை மானசீகமாக தரிசித்தோம்.

மாசியில் உற்சவம் நடைபெறுகின்றது. மார்கழி திருவாதிரை, ஐப்பசி அன்னாபிஷேகம், திருக்கார்த்திகை, சிவராத்திரி ஆகிய பண்டிகைகளும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

கரூரில் தரிசனத்தை நிறைவு செய்து கிளம்பும் போதே இரவு மணி ஏழு ஆகிவிட்டது. அடுத்து அடியோங்கள் தரிசிக்க சென்ற தலம் கொடுமுடி. அத்தலம் கரூரிலிருந்து 25 கி. மீ தூரத்தில் அமைந்துள்ளது. கொரோனா காலம் என்பதால் எப்போது ஆலயம் திருக்காப்பிடுவார்கள் என்பது சரியாக தெரியவில்லை. எனவே "பாண்டிக்கொடுமுடி நற்றவா" உன் தரிசனம் கிடைக்கவேண்டும் என்று மனதில் வேண்டிக்கொண்டே கொடுமுடியை அடைந்தோம், ஒரு வாயில் திறந்திருந்தது. நடை இன்னும் அடைக்கவில்லை என்பது புரிந்தது. இறைவனுக்கு நன்றி கூறி நேரடியாக ஆலயத்திற்குள் விரைந்தோம், கொடுமுடியில் தரிசனம் எவ்வாறு இருந்தது என்பதை தெரிந்து கொள்ள தொடர்ந்து வாருங்கள் அன்பர்களே.

# 6 திருப்பாண்டிக்கொடுமுடி தரிசனம்



மூன்று இராஜகோபுரங்கள்

தேவார மூவர்களாலும் பாடப்பட்ட ஒரே கொங்கு நாட்டுத் தலம் என்ற சிறப்பு இத்தலத்திற்கு உண்டு. அவற்றில் சுந்தரரின் பதிகம் 'நமசிவாயப் பதிகம்' ஆகும். திருஞானசம்பந்தர் திருநல்லூர் பெருமணத்தில் சிவபெருமானுடன் ஜோதியில் தன் இல்லாள், அடியார்கள் மற்றும் சுற்றத்தாருடனும் கலக்கும் போது

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்நெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே - என்று தொடங்கி நமச்சிவாய பதிகம் பாடுகிறார்.

திருநாவுக்கரசரோ பல்லவ மன்னன் அவரைக் கல்லுடன் சேர்த்துக் கட்டி கடலினுள் பாய்ச்சிய போது.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே - என்று நமச்சிவாய பதிகம் பாடி கல்லையே புணையாக கொண்டு கரை அடைந்தார்.

சுந்தரரோ பாண்டிக்கொடுமுடி வந்து அங்குள்ள இறைவனைக் கண்டு வணங்கி நமச்சிவாய பதிகம் பாடுகிறார். அப்பதிகத்தில் எம்பிரான் தோழர் ஒவ்வொரு பாடலிலும், "உனை நான் மறக்கினு சொல்லு நா நமச்சிவாயவே " என்று பாடிப்பரவியிருப்பது தனிச்சிறப்பாகும்.
கரூரிலிருந்து 25 கி.மீ தூரத்தில் இத்தலம் உள்ளது. ஈரோட்டில் இருந்து சுமார் 40 கி .மீ தொலைவில் உள்ளது. கொடுமுடி இரயில் நிலையம் திருச்சி – ஈரோடு இருப்பு பாதையில் உள்ளது. கோவில் இரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே உள்ளது.

நெருக்கியம் முடி நின்றிசை வானவர்
இருக்கொடும் பணிந்தேத்த இருந்தவன்
திருக்கொடுமுடி என்றலும் தீவினைக்
கருக்கெடும் இது கைகண்ட யோகமே – என்று திருநாவுக்கரசர் பாடியபடி தேவர்கள் ரிக் வேதம் ஓதி வழிபடும் இறைவன் கோவில் கொண்ட திருக்கொடுமுடி என்று மனத்தால் நினைத்தாலே போதும் நமது பிறவி நோய் நீங்கும், இனி ஒரு அன்னையின் கருவில் வந்து பிறக்க மாட்டோம்.



காவிரி ஆறு

காவிரிக்கரையில் அமைந்த அருமையான தலம், இதுவரை, சுவாமியை தரிசிக்க வந்தது போல வடமேற்காக ஓடி வரும் காவிரி இங்கு சோழ நாட்டை வளப்படுத்த கிழக்கு நோக்கி திரும்புகிறாள். காவிரியாற்றின் மேற்கு கரையில் இத்தலம் அமைந்துள்ளது.

கொடுமுடி என்றால் பெரிய மலைச் சிகரம்! என்று பொருள். இறைவன் மேரு மலைச் சிகரம் என்பது ஐதீகம். ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் நடந்த போட்டியில் ஆதிசேஷன் சுற்றிய மேருவின் ஆயிரம் சிகரங்களுள் ஒன்று, ஐந்து மணிகளாக

உடைபட்டுச் சிதறியது. அவற்றுள் சிவப்புமணி திருவண்ணாமலையாகவும், மரகதம் ஈங்கோய் மலையாகவும், மாணிக்கம் திருவாட்போக்கியாகவும், நீலம் பொதிகையாகவும், வைரம் கொடுமுடியாகவும் ஆயின என்பது தலபுராணம். மற்ற இடங்களின் அவை குன்றாக விழுந்தன, ஆனால் இங்கு விழுந்த வேகத்தில் பாதாளம் வரை சென்று விட்டதால் மேருமலையின் ஒரு கொடுமுடி (சிகரம்) இறைவனாக, சிவலிங்கமாக விளங்குகின்றது. மகுடமே லிங்கமானதால் இறைவர் மகுடேஸ்வரர் என்றழைக்கப்படுகிறார்.

மேருமலையின் ஒரு துண்டு வைரமணியாக இவ்விடத்தில் விழுந்து பெருஞ்சிகரமாகவும், அதுவே மூல லிங்கமாகவும் அமைந்ததால் கொடுமுடி, தென் கைலாயம் என்ற பெயர் பெற்றுள்ளது. பிரம்மன் இத்தலத்ததிற்கு வந்து வழிபட்டதால் பிரம்மபுரி என்றும், திருமால் பூஜித்ததால் அரிகரபுரம் என்றும், கருடன் பூஜித்து தேவலோகம் சென்று அமுதம் கொண்டு வந்ததால் அமுதபுரி என்றும், பரத்துவாசருக்கு நடனக் காட்சி அளித்ததால் பரத்துவாச சேத்திரம் என்றும், கன்மாடன் என்னும் வேதியன் வழிபட்டு வயிற்றிலுள்ள களங்கம் நீங்கப் பெற்றதால் கன்மாடபுரம் என்றும், கறையூர், கறைசை என்றும் இத்தலத்தில் பாண்டிய இளவரசனின் விரல் வளர்ந்து குறை தீர்ந்த தலமாதலின் அங்கவர்த்தனபுரம் என்றாயிற்று. பின்னர் திருப்பணிகளை சிறப்புறச் செவ்வனே செய்த, மலையத்துவச பாண்டியன் பெயரால், திருப்பாண்டிக் கொடுமுடி என்றும் பல்வேறு பெயர்கள் ஏற்பட்டன.

தட்சனுக்கு மகளாக பிறந்ததால் தாட்சாயணி என்ற பெயர் பெற்ற உமையம்மை அப்பெயர் மறைய பர்வதராஜனான இமவானுக்கு மகளாக பிறந்து சிவபெருமானை மணம்புரிய இத்தலத்தில் வந்து தவம் செய்து இறைவனை மணந்து அதி சுந்தர வடிவுடன் விளங்குவதால் அம்பாள் சௌந்தரநாயகி, வடிவுடைநாயகி என்றழைக்கப்படுகிறாள். இவ்வூரில் பாலாம்பிகைக்கு ஒரு தனிக் கோவில் உள்ளது. இறைவனின் திருமணத்தை தரிசிக்க பிரம்மன், திருமால் இருவரும் கொடுமுடி எழுந்தருளினர் என்று தலபுராணம் கூறுகிறது.

அரியும், நான்முகனும் அடி முடி தேடிய போது முடியைக் கண்டதாக பிரம்மன் பொய் கூறினார். அத்தோஷம் தீர வன்னி மரமாக இருந்து இத்தலத்தில் இறைவனை வழிபட்டார் என்பது ஐதீகம்.

அகத்தியர் காவிரியை தன் கமண்டலத்தில் அடைத்துக் கொண்டு இத்தலத்திற்கருகில் வரும் போது விநாயகர் காக வடிவில் வந்து அக்கமண்டலத்தை தட்டி விட்டு அகண்ட காவிரியாக ஓட விட்டார். காவிரியின் கீழ்க்கரையில் உள்ள ஒரு பாறையில் இதற்கான தடயங்கள் உள்ளன என்கின்றனர். காவிரியை இழந்த கோபத்துடன் மகுடேஸ்வரரை தரிசிக்க வரும் போது அவருக்கு தரிசனம் தர விரும்பாமல் பாதாளத்திற்குள் அழுந்த அகத்தியர் தன் கரங்களால் அழுத்திப் பிடித்து நிறுத்தினார். இன்றும் சுவாமியின் திருமேனியில் அகத்தியர் கை விரல்களின் தழும்புகள் உள்ளன என்கின்றனர்.




வன்னி மரம்

இத்தலத்தைப் போலவே எம்பெருமான் கொடுமுடியாக அருள் பாலிக்கும் தலம் இமயமலையில் அமைந்துள்ள ஜோதிர் லிங்கத்தலமான திருக்கேதாரம் ஆகும். அங்கு பீமன் காளையாக வந்த இறைவனின் திமிலைப் பிடித்து நிறுத்த இறைவன் லிங்கமாக கோவில் கொண்டார் என்பது ஐதீகம்.

ஆவணி, பங்குனி மாதங்களில் நான்கு நாட்கள் சூரியனின் கதிர்கள் சுவாமி, அம்மன் திருமேனியில் படுகின்றது இது சூரிய பூசை எனப்படுகிறது. பொதுவாக இறைவன் மேல் மட்டுமே சில தலங்களில் சூரியக்கதிர்கள் விழும், ஆனால் இத்தலத்தில் இறைவி மீதும் அதுவும் வருடத்தில் இரு முறை விழுவது சிறப்பு. இவ்வளவு சிறப்புகள் பெற்ற

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே –

பொருள்: கற்றவர்கள் வணங்கித் துதிக்கின்ற புகழையுடைய கறையூரில் உள்ள, `திருப்பாண்டிக் கொடுமுடி` என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, நல்ல

தவவடிவினனே, எனக்கு வேறு துணையில்லையாகும்படி, உனது திருவடியையே துணையாக மனத்தில் துணியப்பெற்றேன்; அவ்வாறு துணியப்பெற்ற பின்பே, நான் மனிதனாய்ப்பிறந்தவனாயினேன்; அதுவன்றி, இனியொரு பிறப்பிற் சென்று பிறவாத தன்மையும் என்னை வந்து அடையப்பெற்றேன்; இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, `நமச்சிவாய` என்பதனை, இடையறாது நவிலும் என்று எம்பிரான் தோழர் பாடிய இத்தலத்தின்

இறைவர் திருப்பெயர்: கொடுமுடிநாதர், மகுடேஸ்வரர், மலைக்கொழுந்தீசர்.
இறைவியார் திருப்பெயர்: பண்மொழிநாயகி, திரிபுரசுந்தரி, சௌந்தர நாயகி, வடிவுடைநாயகி.
தல மரம்: வன்னி.
தீர்த்தம் : காவிரி, பிரம்மதீர்த்தம், தேவதீர்த்தம், பரத்துவாச தீர்த்தம்.
வழிபட்டோர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேக்கிழார், பரத்வாஜர், அகத்தியர்.
வாருங்கள் இனி இத்தலத்தை வலம் வந்து தரிசிக்கலாம். தெற்காக காவிரி நதி கொடுமுடி சிவஸ்தலத்தில் கிழக்கு நோக்கி திரும்பி ஓடுகிறது.
காவிரி நதியின் மேல்கரையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ள இத்திருத்தலத்தில் , மகுடேஸ்வரர், அம்பாள் வடிவுடைநாயகி, வீரநாராயணப்பெருமாள் ஆகியோருக்கு மூன்று இராஜகோபுரங்கள் உள்ளன. உயரமான மதில் சுவர் கொண்ட கோவில் வளாகத்தில் வடக்கில் மகுடேஸ்வரர், தெற்கில் வடிவுடைநாயகி அம்மன், நடுவில் பள்ளி கொண்ட நிலையில் வீரநாராயணப் பெருமாள் சன்னதி ஆகியவை உள்ளது. தென்மேற்கு மூலையில் ஆஞ்சநேயர், பெருமாள் சன்னதிக்கு தெற்கில் திருமங்கை நாச்சியார் சன்னதியும், அதன் முன்பே வன்னிமரமும், பிரம்மன் சன்னதியும் உள்ளன. சுவாமி, அம்பாள், பெருமாள், பிரம்மன் ஆகிய நால்வரும் கிழக்கு நோக்கி அமைந்திருப்பது ஒரு தனி சிறப்பு.

சுவாமி கோபுரத்தின் உட்பாகத்தில் சூரியன், சந்திரனும் இருபக்கத்திலும் அருளுகின்றனர். முன் மண்டபம் பிரம்மாண்ட தூண்களுடன் உயரமாக அமைந்துள்ளது. கொடிமரம் மற்றும் இடது காலை மடக்கிய நந்தியெம்பெருமானையும் இம்மண்டபத்தில் தரிசிக்கலாம். ஒரு தூணில் மாறுபட்ட வியாக்ரபாத(புலிக்கால்) கணபதி சிற்பத்தைக் காணலாம்.




வியாக்ரபாத கணபதி சிற்பம்

சுவாமி சன்னதிக்கு இடப்புறம் நவக்கிரகங்கள், பைரவர், சனீஸ்வரர் சன்னிதிகள் உள்ளன. சனீஸ்வரர் காகத்தின் மேல் அமர்ந்த கோலத்தில் தரிசனம் தருவது ஒரு சிறப்பு. கோயிலுக்கு நடுவில் மூலவரும், உள்சுற்றுப் பிரகாரத்தில் தெற்கில் நால்வர், அறுபத்து மூவரும், மேற்கில் காவிரி கண்ட விநாயகரும், உமா மகேஸ்வரர், அகத்தீஸ்வரர், கஜலட்சுமி, ஆறுமுகப்பெருமானும், காட்சி தருகின்றனர். அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல் பெற்ற இவர் தேவியர் இருவருடன் ஆறு முகங்களுடனும், பன்னிரு திருக்கரங்களுடன் மயில் மேல் அமர்ந்த கோலத்தில் சுப்பிரமணியரைத் தாங்கும் மயில் வழக்கத்திற்கு மாறாக எதிர்த் திசையைப் பார்த்த வண்ணம் உள்ளது. பெருமானின் பன்னிருகரங்களிலும் ஆயுதங்கள் உள்ளன.

இடர்கள்பட்டலையப் புகுதாதே திருவருட்கருணைப் ப்ரபையாலே
திரமெனக்கதியைப் பெறுவேனோ அரிய யற்கறிதற் கரியானே
அடியவர்க்கெளியற் புதநேயா குருவெனச் சிவனுக் கருள்போதா
கொடிமுடிக் குமரப் பெருமாளே.

பொருள்: நல்வினை, தீவினை இரண்டின் காரணமாக ஏற்படும் பிறவி என்னும் கடலில் மூழ்கி துன்பங்களால் அலைக்கப்பட்டு திரியாமல் **உனது திருவருளாம்**

கருணையென்னும் ஒளியாலே உறுதியான வகையில் அடியேன் நற்கதி பெற மாட்டேனோ? திருமாலும், பிரம்மனும் அறிவதற்கு அரியவனே, உன் அடியவர்க்கு எளிதாகக் கிட்டும் அற்புதமான தோழனே, சிவபெருமானுக்கு குருவாக நின்ற சுவாமிநாதனே, கொடுமுடி தலத்தில் வீற்றிருக்கும் குமரப்பெருமாளே என்று அருணகிரிநாதர் இவரைப் பாடியுள்ளார்.

இங்குள்ள தட்சிணாமூர்த்தியின் கீழ் முயலகன் வடிவமும் சனகாதி நால்வர்களுக்குப் பதிலாக ஒருவருடைய வடிவமுமே உள்ளது. தட்சிணாமூர்த்திக்குச் சடாமுடி உள்ளது. ரிஷபம் உள்ளது. வடக்கில் நடராஜர், நால்வர் சன்னதிகள். நடராஜர், சிவகாமசுந்தரி மிக அழகு. சித்திரை பௌர்ணமியில் பரத்வாஜருக்கு நடனக்காட்சி தந்த குஞ்சிதபாத நடராஜர் முயலகன் இல்லாமல் நின்று சதுர்முகத்தாண்டவ நடனமிடுவதாக அமைந்துள்ள மூர்த்தம்.

வாருங்கள் இனி ஐயனை தரிசிக்கலாம், தரை மட்டத்தில் சிறிய இலிங்கமாக சதுர ஆவுடையாருடன் மகுடேஸ்வரர் அருள் பாலிக்கின்றார். கொடுமுடிநாதர், மலைக்கொழுந்தர், மகுடலிங்கர் எனப் பல பெயர்களில் போற்றப்படுகிறார். சுவாமி மீது அகத்தியரின் கை பட்ட வடு உள்ளது. சுவாமியை

தனைக்கணி மாமலர் கொண்டு தாள் தொழுவாரவர் தங்கள்
வினைப்பகையாயின தீர்க்கும் விண்ணவர் விஞ்சையர் நெஞ்சில்
நினைத்தெழுவார் துயர் தீர்ப்பார் நிரைவளை மங்கை நடுங்கப்
பனைக்கைப் பகட்டுரி போர்த்தார் பாண்டிக்கொடுமுடியாரே.

பொருள்: பாண்டிக்கொடுமுடி இறைவர், தம்மைக் கொன்றை மலர் கொண்டு பூசித்து வணங்குபவர்களின் பகையாய்த் துயர் செய்யும் வினைகளைத் தீர்த்தருளும் மேலானவர். ஞானவடிவினர். நெஞ்சில் நினைத்து வணங்க எழும் அன்பர்களின் துயரங்களைத் தீர்ப்பவர். உமையம்மை அஞ்சப் பனை போன்ற கையை உடைய யானையை உரித்துப் போர்த்தவர் என்று பாலறாவாயரின் பதிகம் பாடி போற்றினோம்.

அம்பாள் சன்னதியும் தூண்களுடன் கூடிய முன் மண்டபத்துடன் அமைந்துள்ளது. திரிபுரசுந்தரி, சவுந்திராம்பிகை, பண்மொழியம்மை என்று போற்றப்படும் வடிவுடைநாயகி அம்பாள், அகத்தியருக்கு மணக்கோலத்தில் காட்சியளித்ததால், மகுடேஸ்வரருக்கு வலதுபுறத்தில் மணக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். அம்பாள் சன்னதி பிராகாரத்தில் வல்லபை கணபதி, சோழீச்சுரர், விஸ்வநாதர்-விசாலாட்சி, சப்தமாதர், சரஸ்வதி சன்னதி உள்ளது. வடக்கில் பள்ளியறை. கருவறையில் அம்பாள் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன், நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடன் அருள் பாலிக்கின்றாள்.

மலையான் தவஞ்செய்து பெற்றமுத் தேஒற்றி வாழ்கனகச்
சிலையான்மணக்க மணக்குந்தெய் வீகத் திருமலரே
அலையான் மலிகடல் பள்ளி கொண்டான் தொழும் ஆரமுதே

வலையான் அருமை மகளே வடிவுடை மாணிக்கமே – என்று அம்பாளை மனதாரத் துதித்தோம்.

சுவாமி, அம்பாள் சன்னதிக்கு இடையில் வீரநாராயணப் பெருமாள் சன்னதி அமைந்துள்ளது. முன் மண்டபம் தூண்களுடன் கூடிய மண்டபம். இம்மண்டபத்தில் கொடிமரம், கருடாழ்வார் சன்னதி அமைந்துள்ளது. கூரையில் இராமாயண காட்சி சிற்பங்கள். பிரகாரத்தில் இருபுறமும் பன்னிரு ஆழ்வார்களும், பரமபதநாதர், உடையவர், வெங்கடாசலபதி, கருடன், நாகர் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். மூலவர் வீரநாராயணப் பெருமாள் தெற்கில் சிரசு, வடக்கில் திருவடி, கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் ஆதிசேஷனில் பள்ளிகொண்ட கோலத்தில் சேவை சாதிக்கின்றார். உபயநாச்சியார் இருவரும் முன்னே அமர்ந்து வணங்கும் கோலத்தில் சேவிக்கலாம். நாபியிலிருந்து பிரம்ம தேவர், தும்புரு, நாரதர், கைகூப்பி வணங்கிய கோலத்தில் திருவடி, ஸ்ரீதேவி, பூதேவி சமேத உற்சவர் ஆகியோரையும் கருவறையில் சேவிக்கலாம்.

பச்சைமா மலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச் சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்
அச் சுவை பெறினும் வேண்டேன் அரங்க மா நகருளானே – என்னும் தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாசுரம் சேவித்தோம்.

சுந்தரபாண்டியன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கல்வெட்டு வீரநாராயணப்பெருமாள் கருவறை சுவற்றில் உள்ளது. தூண்களில் உள்ள சிற்பங்களில் காகமாக வந்த விநாயகர் அகத்தியரின் கமண்டலத்தை தட்டி விடும் சிற்பம், கொடுமுடிநாதரை அகத்தியர் தனது கையால் பிடித்து நிறுத்தும் சிற்பம், ஆகியவற்றைக் காணலாம். பெருமாள் கோவிலுக்கு தெற்கில் திருமங்கை நாச்சியார் தனி சன்னதி அமைந்துள்ளது. வடக்கில் பரமபத வாசல் உள்ளது.

மகுடேஸ்வரர் கோயிலின் தல விருட்சமான வன்னிமரம் கோவில் வளாகத்தில் உள்ளது. 2000 ஆண்டுகள் பழமையான இம்மரத்தின் ஒருபுறக் கிளைகள் முட்களுடனும், மறுபுறம் முட்கள் இல்லாமலும், பூக்கள் பூக்கும் ஆனால் காய் காய்க்காத, தெய்வீகத்தன்மையுடன் திகழ்கிறது. வன்னிமர இலைகளை தீர்த்தத்தில் இட்டால் எவ்வளவு நாள் ஆனாலும் கெடாது என்பதால், காவிரி தீர்த்தக்கலசத்தில் இட்டுச் சென்று பழனியாண்டவர் மற்றும் இதர தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்ய பக்தர்கள் கொண்டு செல்கின்றனர்.

நான்கு திருக்கரங்களுடன் அட்சமாலை, கமண்டலத்துடன் மூன்று முகம் கொண்ட பிரம்மா வன்னிமரத்தடியில் அருள்பாலிக்கிறார். வன்னி மரமே அவரது நான்காவது முகம் என்பது ஐதீகம்.

பிரம்மா வீற்றிருக்கும் வன்னி மரத்தை 12 (கால் மண்டலம்), 24 (அரை மண்டலம்), 48 (ஒரு மண்டலம்), வயதின் எண்ணிக்கை, 108 முறை வலம் வந்து அருள்

பெருகின்றனர். இம்மரத்தினை பிரதட்சணம் செய்வதால், சனி, குரு, ராகு, கேது போன்ற கிரகதோஷங்களில் நிவாரணம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. சனி பகவானுக்கு உரிய மரமாகவும், அவிட்ட நட்சத்திரக்காரர்களின் விருட்சமாகவும் வன்னிமரம் போற்றப்படுகிறது. பஞ்சபாண்டவர்கள் இங்கு வந்திருந்தபோது, தனது ஆயுதங்களை வன்னி மரத்தில் மறைத்து வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது. வன்னிமர அடியில் வீற்றிருக்கும் பிரம்மாவிற்கு ஒவ்வொரு வாரமும் திங்களன்று அபிஷேக ஆராதனை செய்வதற்கும், பிரம்மாவின் முன் அமர்ந்து தியானம் செய்வதற்கும், புனர்ஜென்ம பூஜை வழிபாட்டிற்காகவும் கர்நாடக மாநிலத்திலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவது வழக்கமாக உள்ளது.

ஆலயத்தின் தென் மேற்கு மூலையில் வீர ஆஞ்சநேயர் சன்னதி அமைந்துள்ளது. நின்ற கோலத்தில் வடக்கு நோக்கி ஒரு திருக்கரத்தில் சௌகந்தி மலரை தாங்கி சஞ்சீவி மலையை கொண்டு வர செல்லும் கோலத்தில் சேவை சாதிக்கின்றார் ஆஞ்சநேயர். இவர் கோரைப்பற்கள் மற்றும் வாலில் மணியுடன் அருள் பாலிக்கின்றார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்று சிறப்புகளையுடைய, இத்திருக்கோயிலில் காவிரியுடன் சேர்த்து நான்கு தீர்த்தங்கள் உள்ளன. வன்னிமரத்தின் அருகில் உள்ள தேவ தீர்த்தம், மடப்பள்ளி அருகில் உள்ள பிரம்ம தீர்த்தம், நவக்கிரகம் அருகில் உள்ள பரத்துவாச தீர்த்தம் ஆகியவை கோவில் வளாகத்திலேயே உள்ளன. இவை மூன்றும் கிணறு என்பதால் பக்தர்களின் வசதிக்காக மோட்டர் வைத்து தண்ணீர் ஒரு குழாயின் வழியாக வருமாறு அமைத்துள்ளனர். மூன்று தீர்த்தங்களையும் சிறிது பருகினோம் தலையில் தெளித்துக் கொண்டோம். கோவில் நிர்வாகத்தினரிடமிருந்து இது ஒரு நல்ல ஏற்பாடு. காவிரியில் துலா ஸ்நானம் இத்தலத்தில் செய்வது கங்கா ஸ்நானத்திற்குச் சமம் என்னும் குறிப்பு சேது புராணத்தில் உள்ளது.

பித்ரு தோஷ பரிகாரத்தலமாகவும் இத்தலம் விளங்குகிறது. காவிரி மற்றும் தேவதீர்த்தத்தில் நீராடி மகுடேஸ்வரரையும், பள்ளி கொண்ட பெருமாளையும் வழிபட பித்ரு தோஷம் விலகும். அமாவாசையன்று காவிரிக்கரையில் பலர் பித்ரு காரியம் செய்கின்றனர். இத்தலத்தில் வேப்பமரமும், அரசமரமும் இணைந்துள்ள மரத்தடியில் விநாயகர் வீற்றிருக்கிறார். இவருக்கு காவிரியில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்து வழிபட்டால் திருமண வரமும், குழந்தை வரமும் கிடைக்கும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

ஆதிசேஷனால் உருவான ஆலயம் என்பதால், இங்கு நாகர் வழிபாடு மிகவும் விசேஷம். இவ்வாலயத்தைச் சுற்றிலும் நாகர் சிலைகள் பிரதிஷ்டை செய்வது தற்போதும் நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்தில் இராகு-கேதுவால் பாதிக்கப்பட்டவர்கள் வழிபாடு செய்தால், அத்தோஷங்கள் விரைவில் நீங்கும். மேலும் திருமணத் தடை உள்ளவர்களும் இங்கு வந்து வழிபடுகிறார்கள். குழந்தைப் பேறு கிடைக்கவும் வழிபடுபவர்களின் எண்ணிக்கை ஏராளம். நாக

தோஷம் இருப்பவர்கள், வன்னி மரத்தடியில் கல்லால் செய்யப்பட்ட நாகரை பிரதிஷ்டை செய்கின்றனர்.

கல்வெட்டுகளில் அதிராஜராஜ மண்டலத்து காவிரி நாட்டுக் கறையூர்த் திருப்பாண்டிக் கொடுமுடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டிய, பல்லவ மன்னர்களால் திருப்பணிகள் செய்யப்பட்ட இக்கோயிலில் பிற்காலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களாலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கோயிலுக்குரிய கல்வெட்டுகள் பெருமாள் கோயிலிலும், வெளியிடங்களிலும் , செப்பேட்டிலும் உள்ளன.

காவடி பூஜை: கொங்கு மண்டலத்தில் உள்ள பெரும்பாலான கோவில் திருவிழாக்களின்போது, கொடுமுடி மகுடேஸ்வரர் - வீரநாராயணப் பெருமாளை வழிபட்டு, காவிரித் தீர்த்தம் கொண்டு செல்வது ஐதீகமாக உள்ளது. கோவில் கும்பாபிஷேகத்திற்கு கொடுமுடி தீர்த்தம் கொண்டு செல்வது வழக்கம். தினந்தோறும் பல பக்தர்கள் வன்னி மரத்தின் முன் அமர்ந்து தீர்த்தம் கலசத்தில் முத்திரித்து எடுத்துச் செல்வதைக் காணலாம். எங்கள் குல தெய்வத்தின் மஹா சிவராத்திரி பூசை சமயத்திலும் கொடுமுடி தீர்த்தம் அபிஷேகத்திற்கு வரும்.

பங்குனி மாதத்தில் பழனி முருகனுக்கு காவடி எடுத்துச் செல்லும் லட்சக்கணக்கான பக்தர்களால் கொடுமுடி நிரம்பி வழியும். பங்குனி உத்திரக் காவடி எடுக்கும் பக்தர்கள், காவிரியில் நீராடி, தீர்த்தம் எடுத்துக்கொண்டு கொடுமுடியின் அடையாளமாய் வன்னி இலையை கலசத்தில் வைத்துக்கொண்டு பாதயாத்திரையாய் பழனிக்கு புறப்படுவர். அப்போது தப்பாட்டம், பதலைப்பறை, சிறுபறை, உடுக்கை, பம்பை, உறுமி, பேரிகை, ஊதுகொம்பு, தாரை, திருச்சின்னம் , துத்தாரி என வாத்தியங்களின் முழக்கத்தால் கொடுமுடி நகரம் திருவிழா கோலம் பூண்டு காணப்படும்.

கோவிலுக்கு எதிரில் காவிரிக்கரையில் சக்தி விநாயகர் காட்சியளிக்கிறார். கோவிலின் கிழக்குப் புறம், சிவன், அம்பாள் சன்னதிக்கு இடையில் பிரம்மாண்ட மணி மண்டபமும், மணியும் அமைக்கப்பட்டுள்ளது.

"சிட்டனைச் சிவனைச் செழுஞ்சோதியை
அட்ட மூர்த்தியை ஆலநிழலமர்
பட்டனைத் திருப்பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழநம் வினை நாசமே" -உயர்ந்தவனை, சிவப்பரம்பொருளை,
ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்ஜோதி வடிவானவனை, எட்டு மூர்த்தியை,
கல்லால மரத்தின் கீழ் அமர்ந்த மோன குருவை, திருப்பாண்டிக்கொடுமுடிக்
கூத்தனை தொழுதால் நம் வினை நாசம் என்று அப்பர் பெருமான் பாடியுள்ளார்.
தினமும் நான்கு கால பூசை நடைபெறுகின்றது.

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் பெருவிழா நிகழும். ஆடி மாதத்தில் அம்மனுக்கும், இலக்குமிக்கும் சந்தனக்காப்பு ஆராதனை நிகழும். புரட்டாசி மாதத்தில் வடிவுடை நாயகி அம்மனுக்கும், தாயார் திருமங்கை நாச்சியாருக்கும் நவராத்திரி விழா நடைபெறுகின்றது. கார்த்திகையில் தீபம், கடைசி சோம வாரத்தில் சங்காபிசேகமும் நடைபெறும். தைப்பூச நாளில் தீர்த்த விழா நடைபெறும். மாசி மாதம் மகா சிவராத்திரி நாளில் இரவில் நான்கு காலங்களிலும் அபிசேக ஆராதனைகள் நடைபெறும். சுவாமி புறப்பாட்டின் போது சிவன், பெருமாள் இருவரும் புறப்பாடு கண்டருளுகின்றனர் என்பது இத்தலத்தின் ஒரு சிறப்பு.

பதினோராம் திருமுறையில் இரட்டை மணிமாலையில் இத்தலத்தைப் பற்றிய ஒரு பாட்டு, நல்ல அகத்துறையில் அமைந்திருக்கிறது. ஒரு பெண் கொடுமுடியாரிடம் காதல் கொண்டு வாடுகிறாள். அப்பெண்ணின் தாய் இறைவனிடம் சென்று இப்படி அவள் நாளுக்கு நாள் மெலிந்து வாடி நைய விடலாமா? என்று கேட்கிறாள். இக்கேள்வி கபில தேவ நாயனாரது வாக்கில் பாட்டாக வருகிறது. இதோ இப்பாடல்

நிறம் பிறிதாய், உள் மெலிந்து நெஞ்சு உருகி வாளா
புறம் புறமே நாள் போக்கு வாளோ? – நறுந்தேன்
படுமுடியாய் பாய்நீர் பரந்து ஒழுகு பாண்டிக்
கொடு முடியாய்! என்ற பாடலைப்பாடி கொடுமுடி தரிசனத்தை நிறைவு செய்தோம்
.

இத்தலத்தில் தேவஸ்தானத்தின் தங்கும் விடுதிகள் உள்ளன. ஒரு கொசுறு செய்தி, பல் வேறு பக்திப்பாடல்களைப் பாடிய கே. பி. சுந்தராம்பாள் கொடுமுடியில் பிறந்தவர் என்பதால் கொடுமுடி கோகிலம் என்று அழைக்கப்பட்டார்.

அடியோங்கள் தரிசனத்தை நிறைவு செய்யும் சமயத்தில் ஐயனுக்கு அர்த்தசாம பூசை நடைபெற்று நடை அடைக்க ஆரம்பித்தனர். யாத்திரையின் முதல் நாள் நேர விரயம் இல்லாமல் இவ்வாறு பல தலங்களை தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. பின்னர் அங்கிருந்து திருப்பூருக்கு கிளம்பினோம், செல்லும் வழியில் காங்கேயத்திற்கு அருகில் சிவன்மலை மின் விளக்குகளால் ஒளிர்வதைக் கண்டு மனதால் சிவன்மலை ஆண்டவரை தரிசித்தோம். திருப்பூரில் முன் பதிவு செய்திருந்த விடுதியில் தங்கினோம். யாத்திரையின் முதல் நாள் முதலில் காவிரிக்கரையின் மூன்று தலங்களை தரிசித்தோம், அவற்றில் இரண்டில் மலையயேற்றம் செய்தோம், அடுத்து பெருமாளின் இரண்டு தலங்களை சேவித்தோம், அடுத்து கொங்கேழ் தலங்களில் இரண்டு தலங்களை தரிசித்தோம். திட்டமிட்டபடி வெஞ்சமாக்கூடல், சிவன்மலை ஆகிய இரண்டு தலங்களை தரிசிக்க இயலவில்லை. இனி இரண்டாம் நாளில் எத்தலங்களை தரிசித்தோம் என்று அறிந்து கொள்ள தொடர்ந்து அடியோங்களுடன் பயணியுங்கள் அன்பர்களே.

# 7 திருமுருகன்பூண்டி தரிசனம்



யாத்திரையின் இரண்டாம் நாள் அதிகாலை எழுந்து அனைவரும் தயாராகி முதலில் திருப்பூரிலிருந்து 7 கி. மீ தூரத்தில் அமைந்துள்ள சுந்தரரால் பாடப்பெற்ற திருமுருகன்பூண்டித் தலத்தை தரிசித்தோம். முருகப்பெருமான் சூரபத்மனை சம்ஹாரம் செய்த பிரம்மஹத்தி தோஷம் நீங்க வழிபட்ட இத்தலம் நொய்யலாற்றின் கரையில் அமைந்துள்ளது எனவே நொய்யலாற்றைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு.

நொய்யல் ஆறு தமிழ்நாட்டின், கோவை மாவட்டத்தின், மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் அமைந்த, தென் கயிலாயம் என்றழைக்கப்படும் வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில், சிற்றோடைகள் இணைந்து உருவெடுக்கிறது. சமவெளிக்கு இறங்கும் நொய்யல் ஆறு, கிழக்கு நோக்கி பேரூர், குனியமுத்தூர், வெள்ளலூர், இருகூர், சூலூர், மங்கலம், திருப்பூர், ஒரத்துப்பாளையம் என 180 கி.மீ தூரம் பயணித்து, கரூர் அருகே நொய்யல் கிராமத்தில் காவிரி ஆற்றுடன் கலக்கிறது.

இவ்வாற்றின் சங்ககாலப் பெயர் காஞ்சியாறு என்பதாகும். தமிழகத்தில் கொங்கு மண்டலத்தின் அடையாளமாகவும், அங்கு விவசாயம் வளமாக அமையக் காரணமாகவும் இருந்தது நொய்யல் ஆறு. தொல்லியல் பழமைவாய்ந்த கொடுமணல் இவ்வாற்றின் கரையில்தான் அமைந்துள்ளது. மேலைச் சிதம்பரம் என்றழைக்கப்படும் பேரூர் திருத்தலமும் இவ்வாற்றின் கரையில்தான் அமைந்துள்ளது. பேரூரில் கரைக்கப்படுகின்ற அஸ்தி பின்னர் கல்லாக மாறி

விடுகின்றது என்பது ஐதீகம். எனவே இத்தலத்தில் அஸ்தியை கரைத்து பித்ரு காரியங்கள் செய்ய எண்ணற்ற பக்தர்கள் தினந்தோறும் வருகின்றனர்.
சோழர்கள் நொய்யலில் மேற்கொண்ட நீர் மேலாண்மை தொழில் நுட்பம் அபாரமானது. ஆற்றின் தண்ணீர் சிறிதும் வீணாகாமல் ஆற்றின் இருபக்கமும் 40-க்கும் மேற்பட்ட குளங்களை கட்டினர். ஆனால், நொய்யலின் இன்றைய நிலை மனம் நோக செய்கிறது. தற்போது 19 குளங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. ஆறு இருந்த இடம் தெரியாமல் சிதைக்கப்பட்டு, கோவை மாநகரத்தின் கழிவுகளும், திருப்பூர் சாயப்பட்டறை கழிவுகளும் இவ்வாற்றில் கலந்து அதன் மொத்த நீளமான 180 கி.மீட்டரில் சுமார் 152 கி.மீ சாக்கடையாக ஓடுகிறது. மெள்ள மெள்ள இறந்து வருகிறது நொய்யல்.



விளக்குத் தூண்

திருப்பூர் – கோவை நெடுஞ்சாலைக்கு மிக அருகில் இவ்வாலயம் அமைந்துள்ளது. செல்லும் வழியில் இருபக்கமும் கற்சிற்பகூடங்களைக் கண்டோம். கல்லை கடவுளாக்கும் சிற்ப கலைஞர்கள் 2000க்கு மேற்பட்டோர் இங்கு உள்ளனர். சென்னைக்கு அருகில் உள்ள மஹாபலிபுரத்தை போலவே இங்கும் பல கலைஞர்கள் உள்ளனர். வாருங்கள் இத்தலத்தை இனி தரிசிக்கலாம்.

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவ லாமைசொல்லிக்
கல்லி னாலெறிந் திட்டும் மோதியுங் கூறை கொள்ளுமிடம்
முல்லைத் தாது மணங்க மழ்முரு கன்பூண்டி மாநகர்வாய்
எல்லைக் காப்பதொன் றில்லை யாகில்நீர் எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே.

பொருள்: எம்பெருமானே, முல்லை மலரின் மகரந்தம் நறுமணத்தை வீசுகின்ற இம்முருகன்பூண்டி மாநகர் வருவோரை, வேடுவர்கள், வில்லைக் காட்ட, வெருட்டியும், பொருந்தாத சொற்களைச் சொல்லிக் கல்லால் எறிந்தும், கையால் அறைந்தும் அவர்களது உடைமைகளைப் பறித்துக்கொள்ளும் இடம். இதன் எல்லைக்குக் காவல் ஒன்றும் இல்லாமை நீர் அறிந்ததேயானால், இதன் கண் இங்கு எதன் பொருட்டு இருக்கின்றீர்? என்று வன்தொண்டர் எம்பெருமானை உரிமையுடன் கேட்ட இத்தலத்தின்

இறைவன்: திருமுருகநாதஸ்வாமி, திருமுருகநாதர், முருக நாதேஸ்வரர்
இறைவி: முயங்கு பூண்முலை வல்லியம்மை, ஆலிங்க பூஷண ஸ்தனாம்பிகை, ஆவுடை நாயகி, மங்களாம்பிகை
தீர்த்தம்: சுப்பிரமணிய தீர்த்தம், ஞானதீர்த்தம், பிரம்ம தீர்த்தம்
தல விருட்சம் : வில்வம்
பதிகம் சுந்தரர்

**கோவில் வரலாறு:** ஆதி காலத்தில் இத்தலம் முல்லை வனமாக இருந்துள்ளது. துர்வாசர் கற்பக உலகிலிருந்து மாதவி மரத்தை இங்கு கொண்டு வந்தார் என்பர்; ஆதலால் இதற்கு மாதவி வனம் என்றும் பெயர். அப்போது சுவாமி மங்களாம்பிகை உடனுறை மாதவிவனேஸ்வரர் என வழிபடப்பட்டார்.
தட்சன் நடத்திய முறையற்ற யாகத்தில் கலந்து கொண்ட தேவர்கள் அனைவரும் அதற்காக ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆளும் திறமும், நூற்றெட்டு கோடி ஆண்டு ஆயுளும், சிவனின் சக்தியால் மட்டுமே தனக்கு மரணம் என்று சிவபெருமானிடம் வரம் பெற்ற சூரபத்மனால் மிகவும் துன்பமுற்றனர். முருகப்பெருமான் ஆறுமுகம் கொண்டு அன்னை அளித்த சக்தி வேலால் சூரபத்மனையும் அவனது இளையோர்களையும் சம்ஹாரம் செய்தருளினார். பிரம்மஹத்தி தோஷம் பீடிக்கப்பட்டதால் சித்தம் கலங்கி பித்துப் பிடித்து திரிந்த வெற்றி வடிவேலவர் கயிலையில் சிவபெருமான் அருளியபடி மாதவ வனநாதரை வழிபட்டு தோஷத்தைப் போக்கிகொள்ளும் பொருட்டு இத்தலத்திற்கு வந்து சிவலிங்கத்தை நிறுவி அதற்கு பூஜை செய்தார் பூஜைக்கு வேண்டிய நீருக்கு தன் வேலை ஊன்றி ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி அக்கங்கையால் மங்களாம்பிகை உடனாய மாதவிவனேஸ்வரரை இதனால் அவரது பிரம்மஹத்தி தோஷம் விலகியது. முருகன் வழிபட்டதால் சுவாமி முருகநாதேஸ்வரரென்று அழைக்கப்படலானார், தலமும் திருமுருகன்பூண்டியானது, கந்தமாபுரி என்றும் அழைக்கப்படுகின்றது. அவ்வாறு நீங்கிய பிரம்மஹத்தி, தற்போது கோயிலின் வெளியே வேப்பமரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள வேம்படி முருகன் சன்னதியின் அருகில் உள்ள சதுரக்கல்லாக இருப்பதாகப் புராண வரலாறு கூறுகிறது.
சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 206 வது தேவாரத்தலம் ஆகும். கொங்கேழ் தலங்களில் இரண்டாவது தலம். சுந்தரரின் ஒரு பதிகம் பெற்ற தலம். இதுவரை இத்தலத்திற்கு திருமுருகன்பூண்டி என்னும் பெயர் வரக்காரணமான ஐதீகத்தைப் பற்றி அறிந்து கொண்டோம். வாருங்கள் இனி தன்

தோழன் சுந்தரருடன் எம்பெருமான் இத்தலத்தில் விளையாடிய திருவிளையாடல் என்ன என்று காணலாம்.

பூவுலகில் ஆருரராக பிறந்த எம்பிரான் தோழர் சுந்தரர், திருக்கயிலையில் ஆலால சுந்தரர் என்ற பெயரில் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராக இருந்தவர். ஒரு சமயம் நந்தவனத்தில் மலர் கொய்ய சென்ற போது அவர் அங்கு வந்த உமையம்மையின் சேடியர்களான மலர் கொய்யும் கமலினி, அநிந்திதை என்கிற இரு மதிமுக மங்கையரைக் கண்டு மையலுற்றார். எனவே சிவபெருமான் "மண்ணுலகில் பிறந்து காதலின்பம் கலந்து பின் வருக என்று அருளினார். அதற்கு சுந்தரர் பெருமானே! உலகியலில் அடியேன் மயங்கும் போது தடுத்தாளக் கொள்ள வேண்டும்" என்று வேண்டுகிறார். பெம்மானும் அவ்வண்ணமே அருளினார்.

பூவுலகில் பிறந்த சுந்தரர் மணப்பருவம் எய்தினார். புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் பெண்ணை திருமணம் பேசத் தொடங்குகின்றனர். திருமணத்திற்கு முதல் நாள் காப்பணிதல் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது எம்பெருமான் ஒரு கிழ வேதியர் வடிவில் வந்து ஓலை காட்டி அவரை ஆட்கொண்டார். திருவெண்ணைநல்லூர் தலத்திற்கு அழைத்துச்சென்று பித்தா பிறைசூடி என்று பாட வைத்து அவரை தன் அன்பனாக்கினார். சுந்தரரை தனது தோழனாக ஆரூர் எம்பெருமான் முதலில் பரவை நாச்சியாரை மணக்கச் செய்தார். தன் தோழனுக்காக சிவபெருமான் செய்த அற்புத திருவிளையாடல்கள் பல அவற்றுள் சிலவற்றை இப்பாடல் இயம்புகின்றது.
வெங் கரா வுண்ட பிள்ளையை நல்குமே; வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே:
மங்கை பாகனை தூது நடத்துமே; மருவியாறு வழிவிட்டு நிற்குமே:
செங்கலாவது தங்கமதாக்குமே; திகழும் ஆற்றிட்டு செம்பொன் எடுக்குமே;
துங்க வன் பரி சேரர்க்கு நல்குமே ; துய்ய நாவலூரர்ச் சுந்தரர் பாடலே என்ற பாடல் இவருக்காக எம்பெருமான் செய்த விளையாடல்கள் சிலவற்றை கூறுகிறது. இனி இத்தலத்தில் நடைபெற்ற வேடுபறி திருவிளையாடல் பற்றிக் காணலாம் அன்பர்களே.

திருவஞ்சிக்குளத்தை ஆண்டு வந்த பெருமாக்கோதையார் என்ற சேரமன்னன் தில்லையில் அம்பலக்கூத்தனிடம் சுந்தரரின் பெருமையைப் பற்றிக் கேள்விப்பட்டு திருவாரூர் அடைந்தார். சுந்தரர் அவரை வரவேற்று தோழராக ஏற்றுக்கொண்டார். எனவே அவர் சேரமான் தோழர் என்றழைக்கப்பட்டார். இருவருமாக பிறை சூடும் பெம்மான் எழுந்தருளியுள்ள பல தலங்களுக்கு சென்று பதிகம் பாடி மகிழ்ந்தனர். பின்னர் ஒரு சமயம் சேரமான் பெருமாள் சுந்தரரை சேரநாட்டிற்கு எழுந்தருள பிரார்த்தித்தார் சுந்தரரும் தன் தோழருடன் திருவஞ்சிக்களத்தை அடைந்தார். சேரமான் பெருமாள் சுந்தரரை

அஞ்சைக்களத்தப்பர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு இறைவனை வழிபட்டு பின்னர் அரண்மனையடைந்து சேரமான் பெருமாளின் விருந்தோம்பலை அனுபவித்து சில நாள் தங்கியிருந்தார். அச்சமயம் திருவாரூர்ப்பெருமானின் நினைவு வர, பொன்னு மெய்ப்பொருளுந் தருவானை . . . ஆரூரனை மறக்கலுமாமே - என்று பதிகம்பாடி குறிப்பினாலுணர்த்த, தன் தோழரைப் பிரிய மனமில்லாவிட்டாலும் ஆரூரருக்கு விடை கொடுத்து பெரும் செல்வத்தை பொதி செய்து ஆட்களின் மேல் ஏற்றி அனுப்பினார்.

சுந்தரரும் தம் தோழரை அன்பினால் தழுவி விடைபெற்று சேரநாட்டை விடுத்து கொங்குநாட்டின் திருமுருகன்பூண்டி என்னும் தலத்தைக் கடக்கும் போது சிவபெருமான் தனது பூதகணங்களை வழிப்பறி திருடர்கள் வேடத்தில் அனுப்பி சுந்தரரின் பரிசுப் பொருள்களை கொள்ளையடித்து வரச் செய்தார். கவலை அடைந்த சுந்தரர் திருமுருகன்பூண்டி சென்று இறைவன் மேல் பதிகம் பாடி முறையிட்டார். வழிப்பறித் திருடர்கள் இருக்கும் இவ்வூரில் அப்பயத்திலிருந்து பக்தர்களைக் காப்பாற்றாமல் நீயும் அம்பிகையும் எதற்காக இங்கு இருக்கிறீர்கள் என்று தனது தேவாரப் பதிகத்தின் \ஒவ்வொரு பாடலின் முடிவிலும் "எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே" என்று நிந்திப்பதைப் போல இல்லாமல் அங்கலாய்த்து கொள்கின்ற ரீதியில் பாடியவுடன் சுவாமி அத்தனை பொருள்களையும் பூத கணங்கள் மூலம் சுந்தரரிடம் திரும்ப சேரும்படி செய்தார். பக்தர்களும் பகவானும் விளையாடிக் கொள்வதற்கு ஒரு எல்லையே இல்லை.

சுந்தரனுக்கு வேறு ஒருவர் பொன் அளிப்பது கூடாது, தாமே அதனை அளிக்க வேண்டும் எனச் சிவபெருமான் கருதினான் போலும்! அதற்காகவே அவர் சேரரிடம் இருந்து கொண்டு வந்த பொன்னைப் பறிக்கச் செய்து தானே கொடுக்க இவ்வாறு செய்தானோ? என்பார் சேக்கிழார் பெருமான் இதனை,

திருமுருகன்பூண்டி அயல் செல்கின்ற போழ்தின் கண்
பொருவிடையார் நம்பிக்குத் தாமே பொான் கொடுப்பது அலால்
ஒருவர் கொடுப்ப கொள்ள ஒண்ணாமைக்கு அது வாங்கிப்
பெருக்கு அருளால் தான் கொடுக்கப் பெறுவதற்கோ? அது அறியோம்''

- என்று குறிப்பிட்டுள்ளார்.



வேட்டுவ கோலத்தில் எம்பிரான்
கவலையுடனும் மகிழ்ச்சியாகவும் சுந்தரர்

இக்கோவிலில் உள்ள மண்டபத்தில் வில் கையில் ஏந்தியபடி வேட்டுவன் கோலத்தில் நிற்கும் சிவபெருமான் சிற்பமும், அவருக்கு இருபுறமும் சுந்தரர் கவலையுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கும் இரு சிற்பங்கள் காணப்படுகின்றன. பரிசுப் பொருள்களை பறி கொடுத்த நிலை ஒன்று, பறி கொடுத்த பொருள்களை மீண்டும் பெற்ற நிலை மற்றொன்று ஆக இவ்விரு நிலைகளைக் காட்டும் வகையில் இருப்பதே சுந்தரரின் இரண்டு சிற்பங்கள்.

"இழந்த பொருளை மீண்டும் பெற்றிட, பரிகாரத் தலமாக திருமுருகன்பூண்டி விளங்குகிறது". இத்தலத்து விநாயகர் கூப்பிடு விநாயகர் என்ற பெயரில் இங்கு காட்சி தருகிறார். சுந்தரரின் பரிசுப் பொருள்கள் சிவபெருமானால் வேட ரூபத்தில் அனுப்பட்ட பூத கணங்களாம் கொள்ளையடிக்கப்பட்ட பிறகு, விநாயகர் சுந்தரரைக் கூப்பிட்டு, "இங்கே கோவிலில் இருக்கின்ற என் அப்பா தான் கணங்களை அனுப்பி வழிப்பறி செய்தது. அதிலே கணபதியான எனக்கு பங்கு இல்லை. நீ ஆலயத்திற்கு வந்து அவரைப் பாடு. அவர் அதனால் மனம் குளிர்ந்து தான் பண்ணியதை அப்படியே மாற்றி விடுவார்" என்று தகவல் கொடுத்து உபாயமும் சொல்லிக் கொடுத்தார். சுந்தரரை கூவி கூவி கூப்பிட்ட இப்பிள்ளையார் "கூப்பிடு விநாயகர்" என்ற பெயர் பெற்றார். 'கூப்பிடுவிநாயகர்' அவிநாசிக்குப் போகும் வழியில் 1 கி.மீ தொலைவில் பாறைமேல் உள்ளார்.

நொய்யல் ஆற்றின் வடபகுதியில் அமைந்த மேற்கு நோக்கிய தலம் திருமுருகன் பூண்டி. ஆலயத்திற்கு வெளியே இராஜ கணபதி சன்னதி அமைந்த்ள்ளது, அடியோங்கள் அதி காலையில் சென்றதால் இளங்காலை நேரத்தின் பொன்னிறமாக தரிசனம் அளித்தார் கணபதி அவரை முதலில் வணங்கி பின்னர் திருமுருகன் பூண்டி ஆலயத்தை தரிசிக்க விரைந்தோம்.

இத்தலத்தில் மற்ற கோவில்களைப் போல நுழைவு இராஜகோபுரம் இல்லை. நான்கு புறமும் உயர்ந்த மதில்களை அரணாகக் கொண்டு, சுமார் 1 ஏக்கர் பரப்பரளவில் அமைந்துள்ளது. கோவிலுக்குள் 2 பிரகாரங்கள் உள்ளன. கோவில் பூமி மட்டத்திலிருந்து சற்று கீழே உள்ளது. நுழைவு வாயிலில் உள்ள பதினாறுகால் மண்டபத்தில் விநாயகர் அருள்பாலிக்கின்றார். கோயிலுக்கு வெளியே கொங்கு நாட்டுத் தலங்களுக்கே உரித்தான கருங்கல் தீபஸ்தம்பம் உள்ளது. தூணின் கீழ் பாகத்தில் விநாயகர், கிராதக (வேடர்) வேடத்தில் சிவபெருமான், எம்பெருமானை நோக்கியபடி தாளமிட்டபடி பதிகம் பாடும் சுந்தரர், சுயம்பு லிங்கத்திற்கு பால் சொரியும் கோ மாதா சிற்பங்கள் அலங்கரிக்கின்றன.



கொடி மரத்தில் வேட்டுவர் – சுந்தரர்

தீபஸ்தம்பத்திலிருந்து பார்த்தால் பதினாறு கால் மண்டபத்தின் முகப்பில் இத்தலத்தின் ஐதீகமான ஆறுமுகப்பெருமான் சிவபெருமானை பூஜைக்கும் சுதை சிற்பத்தை கண்ணுறுகின்றோம்.

உட்பிரகாரத்தில் வெள்ளி சபையில் துர்வாசருக்கு பிரம்ம தாண்டவ தரிசனம் அளித்த ஆடல் வல்லான் சிவகாமசுந்தரியுடன் அருள் பாலிக்கின்றார்.

சுவாமி சன்னதிக்கு முன்பாக வடதிசையில் ஆறு முகங்களுடன் காணப்படும் சண்முகர் சன்னதி உள்ளது. இரு தேவியருடன் அருள் பாலிக்கும் முருகருக்கு

முன்பக்கம் 5 முகங்களும், பின்பக்கம் ஒரு முகமும் உடையதாக அமைந்துள்ளது. முருகன் வழிபட்டதற்கு அடையாளமாக முருகன் சன்னிதியின் கருவறையில் மேற்கு நோக்கியவாறு இலிங்கம் உள்ளது. ஆறாவது முகம், பின்னால் அமைந்துள்ளது. அம்முகம், "அதோ முகம்" என அழைக்கப்படுகிறது. இம்முகத்தை நேரடியாக பார்க்கக் கூடாது என்பதால், கண்ணாடியில் மட்டுமே பார்க்க முடியும் வகையில் அமைந்துள்ளது. முன் பக்கம் உள்ள முகங்கள் சிவபெருமானுக்குரிய ஈசானம், தத்புருஷம், அகோரம், சத்யோஜாதம், வாமதேவம் ஆகும். ஆறாவது முகம் அம்பிகைக்குரியது, ஞானியருக்கு மட்டுமே இம்முகம் புலப்படும் என்பது ஐதீகம்.

இந்த அம்பிகைக்குரிய அதோ முகத்தைப் பற்றி கூறும் போது காஞ்சி மஹா சுவாமிகள் இவ்வாறு கூறுகின்றார். ஈச்வரனுக்கு திசைக்கொன்றாக ஒரு முகம், அது போக மேலே பார்க்க ஒன்று அதற்கு ஊர்த்வ முகம் என்று பேர். ஆறாவது முகம் அதோ முகம். மேலே உள்ள ஆகாயம் பரவெளி. பரம் என்றால் உயர்வானது என்று பொருள். ஈசன் இவ்வாறு பர தத்வமாக, பரம தத்வமாக இருப்பதால் அவரை பரமசிவன் என்றழைக்கிறோம். மேல் நோக்கிய முகம் பரமம் என்றால் கீழ் நோக்கிய முகம் அதமமா என்றால் அதுதான் இல்லை. இது அதோ முகமே தவிர அதமமுகமில்லை! அதை பரமத்திற்கும் பரமம், பராத்பரம் என்று கூட சொல்லலாம் . ஏனென்றால் இங்கே கீழே பார்ப்பது என்பது கண் மட்டத்துக்கு கீழே ஹ்ருதயத்துக்குள் பார்த்துக்கொள்வதுதான். ஆகையால் 'அதோ முகம்' என்பதற்கு 'கீழ் முகம்' என்றில்லாமல் 'உள் முகம்' என்று அர்த்தம் பண்ணுவதுதான் சரி. இந்த உள்முகம், ஐயனின் ஐந்து முகங்களோடு சேர்ந்து ஆறுமுகனாக உண்டான ஸுப்ரஹ்மண்ய சுவாமியை வடலூர் இராமலிங்க சுவாமிகள் 'உள்முகத் தெய்வமணி' என்று தம்முடைய ஹ்ருதய அந்தரங்கத்தில் இருக்கிற தெய்வ இரத்தினமாக சொல்லி இருக்கிறார்.

மேலே ஆத்ம ஸ்வரூபமான ப்ரஹ்மஸ்வரூபமானது பரவெளியான அகண்ட ஆகாயமாக இருக்கிறதென்றால், ஹ்ருதயத்திற்குள்ளே அதே ஸத்வஸ்து உள் வெளியான 'தப்ர ஆகாசம்' என்கிற சின்ன ஆகாசமாக சிற்றம்பலமாக இருக்கிறது .

சென்னை கந்தகோட்டத்து முருகன் மேல் அருட்பிரகாச வள்ளலார் பாடிய தெய்வமணி மாலையில் எதிர்மறை இல்லாமல் அனைத்தையும் நேர்மறையாக வேண்டி பாடியுள்ளார். அதில்
ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்

பெருமை பெறும் நினது புகழ் பேச வேண்டும் பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்

மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும் உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின்கருணை நிதி வேண்டும் நோயற்ற வாழ்வு நான்
வாழ வேண்டும்

தருமமிகு சென்னையிற் கந்த கோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்ய மணி உண்முகச் சைவமணி ஷண்முகத் தெய்வ மணியே!
என்ற ஒரு பாடலைப் பாடி முருகனை வழிபட்டோம்.

தமிழகத்தில் தெற்கு நோக்கி முருகப்பெருமான் அருள் பாலிப்பது ஒரு தனிச்சிறப்பு. மேலும், திருச்செந்தூரில், சூரனை வதம் செய்தபின், செந்தில் வேலவன் திருமுருகன்பூண்டிக்கு வந்து விட்டதால், திருச்செந்தூர் கோவில் மூல ஸ்தானத்துக்கான மூலவர், இங்கு அமைந்துள்ளதாகவும் வரலாறு உள்ளது. இங்குள்ள முருகனிடம் வேலும் மயிலும் இல்லை. அவற்றைக் கோயிலுக்கு வெளியே விட்டுவிட்டு வந்து சிவனை முருகன் வழிபட்டதாகத் தொன்நம்பிக்கை உள்ளது. அருணகிரிநாதர் தமது திருப்புகழில் இம்முருகனை இவ்வாறு வேண்டுகின்றார்.
அவசியமுன் வேண்டிப் பலகாலும்
அறிவினுணர்ந்த தாண்டுக் கொருநாளில்
தபசெபமுந் தீண்டிக் கனிவாகிச்
சரணமதும் பூண்டற் கருள்வாயே
சவதமொடுந் தாண்டித் தகரூர்வாய்
சடுசமயங் காண்டற் கரியோனே
சிவகுமரன் பீண்டிற் பெயரோனே
திருமுருகன் பூண்டிப் பெருமாளே

பொருள்: உன்னைப் பணிவது அவசியம் என்று உணர்ந்து பல முறையும் துதித்து, என் அறிவில் உன்னை உணர்ந்து, ஆண்டுக்கு ஒரு நாளாவது தவ நெறியுடனும், செப ஒழுக்கத்துடனும் உள்ளம் கனிந்து உன் திருவடியைத் தரிப்பதற்கு அருள் புரிவாயாக. இதை அடக்குவேன் என்ற உறுதியுடன் ஆட்டின்மீது ஏறி அதைச் செலுத்துபவனே, ஆறு சமயத்தாலும் காணுதற்கு அரியோனே, சிவ குமாரனே, அன்பு கொண்டு நெருங்குபவரை விட்டுப் பிரியாதவனே, திருமுருகன் பூண்டி என்னும் தலத்தில் உறைபவனே, உன் திருவடியைப் பூண்டற்கு அருள் புரிவாயாக. வேறு எந்த திருப்புகழிலும் இல்லாத ஒரு அற்புத வேண்டுகோளை இப்பாடலில் வைக்கிறார் அருணகிரிநாதர். ஆண்டுக்கு ஒரு நாளில் மட்டுமாவது தப ஜபத்தை நான் மனக் கனிவுடன் மேற்கொண்டு உன் திருவடியை மனக்கனிவுடன் போற்ற அருளமாட்டாயா?
சுவாமி சன்னதி முன் மண்டபத்தில் விநாயகர் அருள் பாலிக்கின்றார். கோவிலில் மூலவராக வீற்றிருக்கும், திருமுருகநாதர், சிவலிங்க வடிவில் மேற்கு திசை நோக்கி காட்சியளிக்கிறார். ஆயிரத்தெட்டு கிழக்கு பார்த்த சிவாலயத்தை வணங்கிய பலன், ஒரு மேற்கு பார்த்த சிவாலயத்தை வணங்கினால் கிடைத்து விடும். அது மட்டுமல்ல. ஒரு மேற்கு பார்த்த சிவாலயத்தை வணங்கினால் ஆயிரத்தெட்டு அசுவமேத யாகம் செய்த பலன் உண்டு.

முன் மண்டபத்திற்கு வெளியே நந்தியெம்பெருமான். மண்டபத்தில் கொடிமரம். திருமுருகநாதர் சிவலிங்க ரூபத்தில் தரிசனம் தருகிறார். கருவறையின் பின்புறச்

சுவரில் யானை ஒன்று தும்பிக்கையால் சிவலிங்கத்தைத் தூக்கிப் பிடித்திருப்பதை அழகிய புடைப்புச் சிற்பமாக வடித்துள்ளனர். உட்பிராகாரத்தில் நிருதி விநாயகர், 63 நாயன்மார்கள், சண்முகர், துர்க்கை, பைரவர், சனீஸ்வரர், நவகிரகங்கள் சன்னதிகள் உள்ளன. கருவறையின் மூன்று கோஷ்டங்களிலும் பிரம்மன், அண்ணாமலையார், தட்சிணாமூர்த்தி திருவடிவங்கள் உள்ளன. திருச்சுற்றில் க்ஷேத்திர பாலகராக எட்டு திருக்கரங்களுடன் பைரவர் காட்சி நல்கும் திருக்கோவில் அமைந்துள்ளது. பைரவர் என்ற பதத்திற்கு பீஷணாது – துக்கத்தை அழிப்பவர், ரக்ஷணாது – ஞானம் அளித்து இரட்சிப்பவர், சம்சார பயத்திலிருந்து காப்பாற்றுபவர், வமனாது – மோட்சத்தை அளிப்பவர் என்பது பொருள். எனவே இம்மூன்றையும் வேண்டி பைரவரை வணங்கினோம். மழுவை சுமந்தவாறு அமர்ந்த கோலத்தில் அருளும் சண்டீசரின் சிற்றாலயமும் உள்ளது.

சுவாமி சன்னதியின் பூத வரிசையில் சுந்தரர் வேடுபறி நிகழ்ச்சியும், அவிநாசியில் இறைவனருனால் முதலை உண்ட பாலனை உயிரோடு கொண்டு வரும் காட்சியும் , ஆளுடையப்பிள்ளையார் பல்லக்கில் எழுந்தருளுதலும், அப்பர் பெருமான் சமணத்தை விடுத்து சைவத்திற்கு திரும்பும் காட்சியும், காரைக்காலம்மையார் பேயுறு பெற்று தவழ்ந்து திருக்கயிலாய மலை ஏறும் காட்சியும், திருப்புன்கூரில் நந்தனாருக்காக நந்தி விலகியது ஆகிய வரலாறுகள் அற்புத சிற்பங்களாக அமைந்துள்ளன.

இன்றும், சிவன் திருடி வந்து மறைத்து வைத்த, வேடுவ பறிகுழி கோவிலில் உள்ளது. வீட்டில் பொருட்கள் திருட்டு போனால், செய்வினை, திருமண தடை உள்ளிட்ட எத்தடைகள் வந்தாலும், சுந்தரமூர்த்தி நாயனார், சிவனை பாடிய இப்பத்து பாடல்களையும், பாடி வணங்கினால், பொருட்கள் மீண்டும் கிடைக்கும்.

மூலவர் சன்னதியின் இடதுபுறம் மேற்குப் பார்த்த நிலையில் அம்பாள் முயங்கு பூண்முலை வல்லியம்மையின் சன்னதி அமைந்துள்ளது. இறைவியின் இப்பெயரை சுந்தரர் தனது பதிகத்தின் 5 பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

தயங்கு தோலை உடுத்துச் சங்கர சாம வேதமோதி
மயங்கி ஊரிடு பிச்சை கொண்டுணும் மார்க்க மொன்றறியீர்
முயங்கு பூண்முலை மங்கை யாளொடு முருகன்பூண்டி மாநகர்வாய் இயங்க வும்மிடுக் குடைய ராய்விடில் எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே.

பொருள்: எம்பெருனே, நீர், விளங்குகின்ற தோலை உடுத்து, இன்பத்தைச் செய்கின்ற சாம வேதத்தைப் பாடிக்கொண்டு, அப்பாட்டினால் மயங்கி ஊரில் உள்ளார் இடுகின்ற பிச்சையை ஏற்று உண்பதற்கு வழி ஒன்றும் அறியீரோ? பல இடங்களுக்குச் செல்ல வலிமையும் உடையீரென்றால், தழுவுகின்ற, அணிகளை அணிந்த தனங்களையுடைய தேவியோடும், இம் முருகன்பூண்டி மாநகரிடத்து இங்கு எதன் பொருட்டு இருக்கின்றீர்?



மூலவர் விமானம்

காஞ்சியில் கம்பா நதியில் ஏற்பட்டது போல, சவுந்திரமாநதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, கோவிலை சூழ்ந்து, சுயம்புவாக உருவான லிங்கத்தை அடித்துச் சென்றது. இதைப்பார்த்த, அம்மன், கீழிறங்கி வந்து, சிவனை தனது மார்பில் அணைத்து, வெள்ளத்தில் இருந்து காப்பாற்றினார். இதனால், இங்குள்ள அம்மனுக்கு முயங்கு பூண் முலை வள்ளியம்மை, வட மொழியில் "ஆலிங்க பூஷண ஸ்தனாம்பிகை" என்று பெயர் வந்ததாக வரலாறு உள்ளது. ஆவுடை நாயகி, மங்களாம்பிகை என்றும் அம்பாள் அழைக்கப்படுகிறாள். அம்மன் சன்னதி தனியாக அமைந்துள்ளதோடு, காற்று நுழைய முடியாத அளவுக்கு சன்னதி அமைந்துள்ளது. மேலும், ஸ்ரீசக்கரத்தில் அம்மன், ஆக்ரோஷ கோலத்தில் அருள்பாலித்து வருகிறார். சன்னதிக்குள் நுழைந்தாலே, ஒரு அதிர்வு ஏற்படுகிறது . இதனால், எந்நோய் இருந்தாலும், நீங்கும் என்பது ஐதீகம். மேலும், சுயம்புலிங்கம் , சுப்ரமணியர், நந்தி ஆகியவை வடிவில் சிறியதாகவும், கோவில் பள்ளத்தில் இருந்தாலும், அம்மன் சிலை மட்டும் பெரியதாக உள்ளது. அம்மனுக்கு வாகனமாக நந்தி உள்ளதும் விமானம் ஒரே கலசத்துடன் அமைந்துள்ளதும் ஒரு சிறப்பு. மேலும் பவானீஸ்வரருக்கு தனி சன்னதி அமைந்துள்ளது.




கோவிலுக்கு உள்ளே தெற்கு பிரகாரத்தில் சுப்பிரமணிய தீர்த்தம் உள்ளது, தீர்த்தத்தின் அருகில் சுதையாலான பிரம்மாண்ட நந்தி வடிவம் அமைத்திருக்கின்றனர். அனுமனுக்கு ஒரு சிறு சன்னதியும் உள்ளது.

கோவிலுக்கு வெளியே வலப்புறம் பிரம்ம தீர்த்தமும், இடப்புறம் ஞான தீர்த்தமும் இருக்கிறது. இரு தீர்த்தங்களின் சுற்று சுவர் முழுவதும் நாகர்களை பிரதிஷ்டை செய்துள்ளனர். சித்த பிரமை பிடித்தவர்களை இச்சிவஸ்தலத்திற்கு அழைத்து வந்து தங்கியிருக்கச் செய்து அன்றாடம் மூன்று தீர்த்தங்களிலும் நீராடச் செய்து சுவாமியை ஒரு மண்டலம் வழிபட்டு வர அவர்களுடைய சித்த பிரமை நீங்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.



ஞான தீர்த்தம்

திருவிழா: மாசியில் 13 நாட்கள் பிரதான திருவிழாவாகும். வேடுபறி உற்சவம், தேரோட்டம், தெப்போற்சவம், பிரம்மதாண்டவ காட்சி, மயில் வாகன காட்சி, மஞ்சள் நீராட்டம் என்று சிறப்பாக இத்திருவிழா நடைபெறுகிறது. மேலும் மகாசிவராத்திரி, திருக்கார்த்திகை, ஆருத்ராதரிசனம், அன்னாபிஷேகம், கந்தசஷ்டி, தைப்பூசம், நவராத்திரி, வைகாசி விசாகம் ஆகிய விழாக்களும் கொண்டாடப்படுகின்றன.

திருமுருகநாதசுவாமி ஆலயத்தின் பின்புறம் நொய்யாலாற்றின் மறு கரையில் மாதவனேஸ்வரர் கோவில் என்ற ஒரு கோவிலும் உள்ளது. இவ்வாலயத்தின் முகப்பு மண்டபத்தின் மேற்கூரையில் பெரிய நந்தியெம்பெருமான் சிற்பம் உள்ளது. இக்கோவிலின் வடமேற்கு மூலையில் கேது பகவானுக்கு தனி சன்னதி அமைந்துள்ளது. இத்தலத்தில் கேது பகவான் இறைவனை பூஜித்ததாக இத்தல வரலாறு கூறுகிறது. எனவே இவ்வாலயம் கேது தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓர் அரிய பரிகாரத்தலமாக விளங்குகிறது. அம்பாள் மங்களாம்பிகை, சுவாமி இருவரும் கிழக்கு நோக்கி அருள் பாலிக்கின்றனர். மஹா மண்டபத்தில் பால கணபதி மற்றும் பால முருகர் அருள் பாலிக்கின்றனர். இரு தலங்களையும் தரிசனம் செய்தபின் திருப்புக்கொளியூர் அவிநாசியை தரிசிக்க கிளம்பினோம்.




அவிநாசியப்பர் இராஜகோபுரம்

அடுத்து அடியோங்கள் தரிசித்த தலம் இறைவனருளால் சுந்தரர் முதலையுண்ட மதலையை உயிருடன் வரச்செய்த அற்புதம் நடந்த தலம். தேவாரத்திருத்தலங்களில் 208வது தலம். கொங்கேழ் தலங்களில் முதல் தலம். தேவார காலத்தில் திருப்புக்கொளியூர் என்றும் அறியப்பட்ட தலம். சுந்தரர் ஒரு பதிகம் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் ஆனந்தமாலையில் "அரிய பொருளே அவிநாசியப்பா பாண்டி வெள்ளமே" என்று பாடுகிறார். அப்பரும் திருத்தாண்டகத்தில் 'அவிநாசி கண்டாய்' எனப் பாடுகிறார். திருப்புகழில் அருணகிரிநாதர் இத்தல முருகன் மேல் மூன்று பாடல்கள் பாடியுள்ளார்.

முதலில் இத்தலம் 'திருப்புக்கொளியூர்' என அழைக்கப்பட என்ன காரணம் என்று முதலில் காணலாம் அன்பர்களே. சிவபிரானின் அக்கினி தாண்டவத்தின் வெம்மை தாங்காமல், தேவர்கள் இத்தலத்தில் புகுந்து ஒளிந்து கொண்டதால் அப்பெயர் வந்தது (புக்கு – ஒளி – ஊர்). பின்னர் அவர்களுக்கு அருளவும் செய்த

இடம் இது. பழைய பதியாகிய புக்கொளியூர் நத்தம் தற்போது அழிந்து வெட்ட வெளியாகவுள்ளது. பிற்காலத்தில் தோன்றிய புதிய நகரமே தற்போதுள்ள அவிநாசி.

அவிநாசி என்ற வார்த்தைக்கு ஒரு அற்புதமான பொருள் உண்டு. 'விநாசம்' என்றால் அழியக்கூடியது. 'அவிநாசி' என்றால் அழிவு இல்லாதது என்று பொருள். அழிவு இல்லாத திருக்கோவில் இந்த அவிநாசி. இவ்வாலயம் சுமார் 2000 வருடங்கள் பழமை வாய்ந்தது 'விநாசி' என்றால் பெருங்கேடு என்றும் பொருள். அவிநாசி என்றால் பெருங்கேட்டை நீக்கவல்லது என்று பொருள்படும். எனவே எம்பெருமான் 'பெருங்கேடிலியப்பர்' என்றும் அழைக்கப்படுகிறார். காலப்போக்கில் கோயிலின் பெயரும், ஊரின் பெயரும் அவிநாசி ஆயிற்று. அப்பர் பெருமான் திருத்தாண்டகத்தில்

அணவரியான் கண்டாய் அமலன் கண்டாய்
அவிநாசி கண்டாயண் டத்தான் கண்டாய்
பணமணிமா நாக முடையான் கண்டாய்
பண்டரங்கன் கண்டாய் பகவன் கண்டாய்
மணல்வருநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதவற்கும் நான்முகற்கும் வரதன் கண்டாய்
குணமுடைநல் லடியார்வாழ் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே.

பொருள்: நற்குணமிக்க அடியார்கள் வாழ்கின்ற கொட்டையூரிலுள்ள கோடீச்சரத்துறையும் தலைவனாகிய சிவபெருமான், எட்டுதற்கரியவனாய், குற்றமற்றவனாய், அழிவில்லாதவனாய், மேலுலகத்து உள்ளவனாய், படமுடைய பெரிய நாகத்தை அணிபவனாய், பண்டரங்கக் கூத்தினை ஆடுபவனாய், ஐசுவரியம் முதலிய ஆறு குணங்களை உடையவனாய், மணலை வாரிக் கொண்டுவரும் நீரையுடைய காவிரியின் கரையிலுள்ள வலஞ்சுழியில் வாழ்பவனாய், திருமாலுக்கும் பிரமனுக்கும் அவர்கள் விரும்பிய அதிகாரத்தை வழங்குபவனாய் விளங்குபவன் ஆவான் என்று எக்காலத்திலும் அழிவில்லாதவர் என்ற பொருளில் அவிநாசி கண்டாய் என்று பாடுகிறார்.

அவிநாசி அப்பர் சுயம்பு மூர்த்தி, காசி விஸ்வநாதரது வேரில் கிளைத்த மூர்த்தி என்பார்கள் இதனால் 'காசியில் வாசி அவிநாசி' என்றும், இத்தலத்தையே தென்காசி, வாரணாசி என்றும் கூறுகின்றனர். இங்குள்ள அவிநாசியப்பர், பைரவர், காசி தீர்த்தம் மூன்றும் காசியிலிருந்து கொண்டு வரப்பட்டவை. அமாவாசையன்று இங்குள்ள காசிக்கிணற்றில் நீராடி இறைவனை வழிபடுவது சிறப்பு. அன்றைய தினம் மதியம் இடைவேளையில்லாமல் திறந்தே இருக்கும்

நல்லாற்றங்கரையில் சிவமணம் போல் மணம் வீசும் மாமரத்தின் கீழ் அமர்ந்து ஞானச்செல்வியாகிய உமா தேவியார் சிவபெருமானை ஆயிரம் ஆண்டுகள் பூசித்து வலப்பாகம் பெற்று பெருங்கருணாலயச்செல்வி என்ற திருநாமத்துடன் அருள்பாலிக்கின்றாள். இப்பகுதி மக்கள் அம்பாளை கருணையாத்தாள் என்று உரிமையுடனும், வாஞ்ஞையுடனும் அழைத்து வழிபடுகின்றனர்.



முதலை உண்ட மதலை வரப் பாடிய சுந்தரர்

மைசூர் மகாராஜா வம்சத்தை சேர்ந்தவர்கள் அரச பதவி ஏற்கும் போது, நேராக காசிக்குச் செல்வார்கள். காசியில் இருந்து பூஜை செய்த சிவலிங்கத்தை எடுத்துக்கொண்டு, முதலில் அரண்மனைக்கு செல்ல மாட்டார்கள். அச்சிவலிங்கத்தை அவிநாசியப்பர் திருக்கோவிலில் வைத்து பூஜை செய்த பின்னர் அவர்கள் அரண்மனைக்கு எடுத்துச் செல்வார்கள். திறமையான நிர்வாகத்தை நடத்துவதற்கான அருளை அவிநாசியப்பர் அருளுகின்றார் என்பது அவர்கள் நம்பிக்கை. இவர்கள் வழிபட்ட லிங்கங்களை நவரங்க மண்டபத்தில் தரிசிக்கலாம். வசிஷ்டர் சனி தோஷம் நீங்க வழிபட்ட தலம். பதஞ்சலி சக முனிவர்களுக்கு காசிக்கு நிகரான தலம் என்று காட்ட தனது தண்டத்தை அவிநாசி காசி கிணற்றில் போட்டு காசியில் கங்கையின் அலைகளால் பெற்று காண்பித்த கிணறு உட்பிரகாரத்தில் உள்ள தலம். கேரள நாட்டு அந்தணன் பேய் வடிவம் நீங்கி தேவ வடிவம் பெற்று சிவலோக பேறு பெற்ற தலம். வியாத வேடன் என்னும் திருடன் முக்தி பெற்ற தலம்.

அவிநாசி என்று கேட்க முக்தி என்று போற்றப்படும் இத்தலத்தில் இறையருளால் வண்தொண்டர் செய்த அற்புதத்தை கொங்கு மண்டல சதகப் பாடல் ஒன்று இவ்வாறு போற்றுகிறது:

பூவென்ற சீரடி யாரூர்ப் பரவைதன் போங்கொளும்
பாவென்ற செந்தமிழ்ச் சுந்தரன் பாடிப் படர்குளத்தில்
ஆவென்ற வாயின் முதலைகொள் பிள்ளையை யன்றுகொண்டு
வாவென்றழைத்த அவிநாசி சூழ்கொங்கு மண்டலமே - வாருங்கள் இனி இத்தலத்தில் சுந்தரர் மூலம் ஐயன் நடத்திய அவ்வற்புதத்தைப் பற்றி காணலாம்.

அவிநாசியப்பர் திருக்கோவில் மடுவின் கரையில் சில அந்தண சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதில் ஒரு சிறுவன் அம்மடுவில் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கும் போது அச்சிறுவனின் தாய், தந்தை, நண்பர்களின் கண் முன்னே ஒரு முதலையானது அவனை விழுங்கிவிட்டது. இச்சம்பவம் நடந்து மூன்று ஆண்டுகள் கழிந்தது.

திருமுருகன்பூண்டியில் இறைவன் சுந்தரரின் பொன்னைப் பறிக்க, கோபம் கொண்டு அவர் பதிகம் பாட, பின் பொன்னை பெற்று திருவாரூருக்கு எழுந்தருளி சில காலம் புற்றிடங்கொண்டாரையும், தியாகராஜரையும் தரிசித்து கொண்டிருந்தார். மறுபடியும் சேரமான் பெருமாளுடன் அளவளாவ விருப்பம் கொண்டு திருவஞ்சிக்களம் செல்லும் வழியில் திருப்பொக்கொளியூரை அடைந்தார்.

இறைவனின் பாடல்களை பாடிக்கொண்டு அங்குள்ள அக்ரகாரம் உள்ளே நுழைந்தார். வேத மந்திரங்கள் முழங்க ஒரு வீட்டில் பூணூல் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்கு எதிர் வீட்டிலேயே அழுகைக் குரல் ஒலித்தது. மூன்று வருடங்களுக்கு முன்பு தன் மகனை அம்முதலைக்கு இரையாக கொடுத்த பெற்றோர்களின் அழுகை சத்தம் அது. தன் மகன் உயிரோடு இருந்திருந்தால் தங்கள் வீட்டிலும் பூணூல் சடங்கு நடந்திருக்கும் என்று எண்ணி அழுது கொண்டிருந்தனர். இவர்களின் வேதனையை அறிந்த எம்பிரான் தோழர் சுந்தரர், அங்கிருந்து நேராக மடுவிற்கு சென்று பதிகம் பாடினார் முதல் பாடல் பாடியவுடன் குளத்தில் நீர் நிறைந்தது,
உரைப்பார் உரைப்பவை உள்க வல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்காடு அரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலை புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைத் தரச்சொல்லு காலனையே.

பொருள்: உன்னைப் புகழ்கின்றவர்களது சொல்லை விரும்புபவனே, உன்னை எஞ்ஞான்றும் மறவாது நினைக்க வல்லவரது தலைமேல் இருப்பவனே, அரையின்கண் ஆடுகின்ற பாம்பைக் அணிந்தவனே, எல்லாப் பொருட்கும் முதலும் முடிவுமானவனே, சிறந்த முல்லை நிலத்தையும், சோலைகளையும் உடைய திருப்புக்கொளியூரில் உள்ள, `அவிநாசி` என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, கூற்றுவனையும் முதலையையும், இக்குளக் கரைக்கண் பிள்ளையைக் கொணர்ந்து தருமாறு ஆணையிட்டருள்

என்ற நாலாவது பாடலைப் பாடி இறைவனை வேண்ட அம்முதலை பிள்ளையை கொண்டு வந்து கரையில் உமிழ்ந்து விட்டு சென்றது. பாலகனும் மூன்று வருடங்கள் எவ்வளவு வளர்ந்திருப்பானோ அவ்வாறு வெளியே வந்தான். பின்னர் அவனுடன் ஆலயம் வந்து இறைவன் முன் நிறுத்தி பதிகத்தை பூர்த்தி செய்தார் சுந்தரர். அச்சிறுவனுக்கு உபநயனமும் நடத்தி வைத்தார்.



முதலை வாய் பிள்ளை சிற்பம்

இவ்வாறு பிள்ளையை முதலை வாயிலிருந்து மீட்டுத் தந்தது இத்தலம். எமன் வாயில் சென்றவனை கூட இத்தலம் மீட்டுத்தரும் என்பது இதன் பொருள். நீண்ட ஆயுளை கொடுக்கக் கூடியவர் அவிநாசியப்பர். சிவபெருமானுக்கு 'ஆசுதோஷன்' என்ற பெயரும் உண்டு. ஆசுதோஷன் என்றால் எளிதில் அருள் புரியக் கூடியவன் என்று பொருளாகும். அப்படிப்பட்ட அபார கருணா மூர்த்திதான் அவிநாசியப்பர்.

அவிநாசியப்பர் கோவிலில் இருந்து சுமார் ½ கி.மி. தூரத்தில் தென்மேற்குத் திசையில் தாமரைக் குளம் என்ற ஒரு ஏரி உள்ளது. அக்குளக்கரையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கோவில் உள்ளது. இக்கோவிலின் சிறப்பு இங்குள்ள முதலை வாய்ப்பிள்ளை சிற்பம் ஆகும். முதலை வாயிலிருந்து குழந்தை வெளிவருவது போன்ற சிற்ப அமைப்பு இங்கு உள்ளது. பங்குனி உத்திரத் திருநாளில் அவிநாசியப்பர் இக்குளக்கரைக்கு வருகை தருகிறார். முதலை வாய்ப்பிள்ளையை அழைத்த திருவிளையாடல் வருடந்தோறும் பங்குனி மாதத்தில் உற்சவமாக கொண்டாடப்படுகிறது. இவ்வரலாற்றினை,

நாட்டார் அறிய முன்னாளில் நன்னாள் உலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பில் சிறிய மறைப் புதல்வன் தன்னைப் புக்கொளியூர்
தாட்டாமரையின் மடுவின்கண் தனிமா முதலைவாய் நின்று
மீட்டார் கழல்கள் நினைவாரை மீளா வழியில் மீட்பனவே.

பொருள்: நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நன்கு அறியுமாறு முன்னைய நாளில் சிறந்த ஐம்படைத்தாலியை அணிந்த மார்பையுடைய சிறிய மறையவர் மைந்தனைப் புக்கொளியூரில் தாளோடு கூடிய தாமரைகளையுடைய நீர் நிறைந்த பொய்கையில் பெரிய முதலை வாயினின்றும் நல்ல நாளில் மீட்டவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவடிகளே தம்மை நினைவார்களை

மீளாவழியினின் றும் மீட்பவையாம்! என்று நமிநந்தியடிகள் புராணத்தில் தெய்வச் சேக்கிழார் பெருமான் பாடுகிறார்.

அருணகிரிநாதர் 'ஐங்கரனை' என்று தொடங்கும் திருப்புகழ் பாடலில், "கொங்கில் உயர் பெற்று வளர் தென் கரையில் அப்பர் அருள் கொண்டு உடலுற்ற பொருள் அருள்வாயே!" என்று வேண்டுகிறார் (அப்பர்-இறைவன்). அதாவது 'சிவபெருமானின் அருள் கொண்டு, குழந்தையை முதலையின் வாயினின்றும் மீட்டுத் தந்த ரகசியப் பொருளை, முருகா, எனக்கு நீ அருள வேண்டும்!' என்கிறார்.

அக்காலத்தில் தான் இவ்வதிசயம் நடந்ததென்றில்லை. சில நூறு ஆண்டுகளுக்கு முன் குருநாத பண்டாரம் என்பவர் அவிநாசியில் வாழ்ந்திருக்கிறார். குளத்தில் ஏற்பட்ட உடைப்பை அடைக்க வரவில்லை என்பதற்காக அரசாங்க ஊழியர்கள் அவர் பூசித்த சிவலிங்கத்தை எடுத்துக் குளத்தில் எறிந்திருக்கிறார்கள். குருநாத பண்டாரமோ பூசை செய்யாமல் உணவருந்துவதில்லை. பூசை செய்யவோ இலிங்கம் இல்லை. பட்டினியாய்க் கிடந்திருக்கிறார். வேறு வழியில்லை அவிநாசியப்பருக்கு. பண்டாரத்தின் இலிங்கத்தை ஒரு மீனை விழுங்கச் செய்து அம்மீனை நீந்தி வந்து இலிங்கத்தைக் கரையில் உமிழவும் செய்திருக்கிறார். இதற்குக்கூட ஒரு சிற்ப வடிவம் இத்தலத்தில் உள்ளது. இதுவரை இத்தலத்தின் சிறப்புகள் சிலவற்றைப் பற்றிப் பார்த்தோம் வாருங்கள் இனி இத்தலத்தை தரிசிக்கலாம்.

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவினாசி அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ செய்வ தொன்றும் அறியேனே.

பொருள் : நரியைப் பரியாக்கி உலகம் எல்லாம் பரவச் செய்து, மதுரைப் பகுதி முழுதும் பித்தேற்றிய பெருந்துறைப் பெருமானே! அரும் பொருளே! அவினாசி அப்பனே! பாண்டி நாட்டின் கடலே! தெரிதற்கரிய மேலான ஒளியே! நான் உய்யும் பொருட்டு விடுப்பதாகிய காரியத்தைச் சிறிதும் அறிந்திலேன் என்று மாணிக்கவாசகர் பாடிய அவிநாசி தலத்தின்

இறைவர்: அவிநாசியப்பர், அவிநாசி லிங்கேஸ்வரர், பெருங்கேடிலியப்பர்.
இறைவி : கருணாம்பிகை, பெருங்கருணை நாயகி, கருணையாத்தாள்.
தல மரம் : பாதிரி
தீர்த்தம் ; காசிக்கிணறு, நாக கன்னிகை தீர்த்தம், ஐராவத தீர்த்தம்.
பதிகம் : சுந்தரர்.

ஆலயத்தின் வெளியில் இருந்து பார்த்தால் கம்பீரமான இரட்டைக் கோபுரங்களை அருகருகே தரிசிக்கலாம். ஏழு கலசங்களுடன் கூடிய ஏழுநிலை இராஜகோபுரம் சுவாமி சன்னிதிக்கு எதிரிலும், அதை ஒட்டி தென்புறமாக ஐந்து நிலை இராஜகோபுரம் அம்பாள் சன்னிதிக்கு எதிரிலும் அமைந்திருப்பது

நெடுஞ்சாலையில் பயணிக்கும் போதே கண்கொள்ளாக் காட்சியாக தென்படுகிறது.




சுவாமி இராஜகோபுரத்துக்கு முன்பு உள்ள பெரிய விளக்குத் தூண் சுமார் 70 அடி உயரம் உடையது. ஒரு உயரமான நாலு கால் மண்டத்துடன் அமைந்துள்ளது. தூணின் கீழ்ப்பகுதியில் கிழக்கு நோக்கி விநாயகர், சுவாமியைப் பார்த்தபடி வித்தியாசமான தலைப்பாகையுடன் சுந்தரர், மற்ற இரு பக்கங்களிலும் முதலைவாய்ப் பிள்ளை சிற்பம் உள்ளது. மேலும் ஒரு நந்தி சிலையும் இரு முதலை வாய்ப்பிள்ளை உருவங்களும் உள்ளன. அடுத்து ஏழு நிலை இராஜ கோபுரம் ஒன்பது கலசங்களுடனும், அழகிய சுதை சிற்பங்களுடனும் கம்பீரமாக காட்சி தருகின்றது.

இராஜகோபுரத்திற்கு முன்னர் தவம் செய்த பாதிரி மரத்து அம்மனை வணங்கி ஆலயத்தின் உள்ளே நுழைகின்றோம். அருகே பாதிரி மரம். இம்மரம் பிரமோற்சவத்தின் போது மட்டுமே பூக்கும் தன்மையுடையது. மற்ற காலங்களில் பூக்காது. மரத்தின் இத்தகைய இயல்பானது, இறைவனின் மீது தலவிருட்சம் கொண்டுள்ள பக்தியை காட்டுகிறது என தலபுராணம் கூறுகிறது. ஆதி காலத்தில் மா மரமே தலவிருட்சமாக இருந்துள்ளது. இராஜகோபுரத்தின் கோபுரத்தின் நுழைவாயிலின் இருபுறமும் நர்த்தன கணபதி சிலைகள் அதிஷ்டானத்தில் உள்ளன. சுந்தரரும், மாணிக்கவாசகரும் சுவாமியை தரிசிக்கும் கோலத்தில் எழுந்தருளியுள்ளனர். இக்கோபுரத்தில் நர்த்தன கோலத்தில் தக்ஷிணாமூர்த்தியை தரிசிக்கலாம். இராஜ கோபுரத்தில் செல்வ விநாயகர் தனி

சன்னதியில் அருள் பாலிக்கின்றார். உள்ளே ஆஞ்சநேயர் சன்னதி உள்ளது. அவர் எதிரே ஒரு வானரம் கீழே இறங்குவது போல உள்ள புடைப்பு சிற்பம் அருமை.

அடுத்து கொடிமரமும், பலி பீடமும் உள்ள நவரங்க மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் தூண்களில் 6 அடி உயரத்தில் கலை நுணுக்கம் நிறைந்த வீரபத்திரர், ஊர்த்த தாண்டவர் மற்றும் தில்லை காளியின் சிலைகள் உள்ளன. இம்மண்டபத்தைக் கட்டிய பெரிய காளியப்ப கவுண்டர் மற்றும் அவரது இளவலின் சிலைகளும் உள்ளன. சுவாமி சன்னதியின் முன்புறம் வலப்புறம் முதலை உண்ட பிள்ளையை உயிர்ப்பித்த சுதை சிற்பமும், இடப்புறம் அம்மை சிவபூஜை செய்யும் சுதை சிற்பமும் அருமையாக அமைத்துள்ளனர்.

சுவாமி சன்னிதி கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மஹா மண்டபம் என்று மூன்று பிரிவாக உள்ளது. மஹா மண்டபத்தின் முகப்பில் துவார பாலகர்கள். சுவாமி சன்னதியின் உட்பிரகாரத்தில் முதலில் நந்தி தேவரை தரிசிக்கின்றோம். வடமேற்கு கோஷ்டத்தில் பால தண்டபாணி சன்னதியும் வட கிழக்கு கோஷ்டத்தில் காரைக்கால் அம்மையார் சந்நிதியும் உள்ளன, அடுத்து 63 நாயன்மார்களின் திருமேனிகள், கன்னி மூலையில் கணபதி, அடுத்து பஞ்ச லிங்கங்கள், சப்த கன்னியர், கஜலக்ஷ்மி, வடகிழக்கில் சுப்பிரமணியர் சன்னதி, அடுத்து வியாத வேடன் சன்னதி, திருடனாக இருந்த இவனுக்கும் அவிநாசியப்பர் முக்தி அளித்துள்ளார். அவன் தை பூசத்தன்று அங்க பிரதட்சணம் செய்து கொண்டே முக்தி அடைந்தான்.



அம்பாள் விமானம்

அடுத்து காலபைரவர் சன்னதி. இத்தல பைரவர் "ஆகாச காசிகா புராதிநாத பைரவர்' எனப்படுகிறார். இவர் காசியில் உள்ள பைரவருக்கும் முற்பட்டவர் என தலபுராணம் கூறுகிறது. ஜுவாலா மகுடத்துடன் நான்கு திருக்கரங்களுடன் அருள் பாலிக்கிறார் இவர். காலபைரவருக்கு வடைமாலை சார்த்துதல் சிறப்பு பிரார்த்தனையாகும். எதிரி பயம், வழக்கு விவகாரம் தீர பௌர்ணமி, அமாவாசை, அஷ்டமி தினங்களில் வடை மாலை சார்த்தி வழிபடுகின்றனர் பக்தர்கள். குடும்ப ஒற்றுமை ஏற்பட ஞாயிற்றுக்கிழமை இராகு காலத்தில் தேங்காய், எலுமிச்சை, பூசணிக்காய் ஆகியவற்றில் விளக்கேற்றி, செவ்வரளியால் அர்ச்சனை செய்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். தேய்பிறை அஷ்டமி தினங்களில் இவருக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. கார்த்திகை மாத பைரவாஷ்டமியன்று சிறப்பு ஹோமம், அபிஷேகம் கண்டு புறப்பாடு கண்டருளுகிறார் பைரவர். இவர் சன்னதிக்கு அருகே காசி தீர்த்தம் கிணறு. இவ்வாறு பிரகாரத்தில் சுவாமிக்கு எதிரே தீர்த்தம் அமைந்திருப்பது ஒரு சிறப்பு. இக்கிணற்று நீரை, சுவாமி அபிஷேகத்துக்குப் பயன்படுத்துகிறார்கள். கங்கைக்குச் சமமான புனிதநீர் திருவிழாக் காலங்களில் கலசங்களில் நிரப்பப்பட்டு, பிற ஊர்களுக்கு கொண்டு சென்று வழிபடப்படுகிறது.

சுவாமி கோஷ்டத்தில் தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர், துர்க்கை அருள் பாலிக்கின்றனர். அர்த்தமண்டபத்தில் தக்ஷிணாமூர்த்திக்கு மேலே சிவயோகி என்ற முனிவர் யோகாசனத்தில் உள்ளார். இவர் தென் முகக் கடவுளை வழிபட்டு அளப்பரிய கலைகளைக் கற்று குருவுக்கு மிஞ்சிய சீடனானார் என்பதால் இவர் ஆதி குருவுக்கு மேலே உள்ளார் என்கின்றனர். சண்டிகேஸ்வரர் சன்னதியும் உள்ளது.

அர்த்தமண்டபத்தில் ஸ்ரீவல்லி விநாயகர், சந்திரசேகரர், சொக்கநாதர் உற்சவத்திருமேனிகள் எழுந்தருளியுள்ளனர். சொக்கநாதர் பள்ளியறைக்கு எழுந்தருளுகிறார் அது நித்தியோற்சவம் என்றழைக்கப்படுகின்றது. அடுத்து கருவறையில்

எங்கேனும் போகினும் எம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறை கொண்டு ஆறலைப்பர் இலை
பொங்காடு அரவா புக்கொளியூர் அவிநாசியே
எங்கோனே உனை வேண்டிக் கொள்வேன் பிறவாமையே

பொருள்: ஆடுகின்ற பாம்பை ஆபரணமாக அணிந்தவனே, திருப்புக்கொளியூரில் உள்ள, ` அவிநாசி ` என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள எங்கள் தலைவனே, எம்பெருமானாகிய உன்னை நினைத்தால், கொங்கு நாட்டிலே புகுந்தாலும், மற்றும் எங்கேனும் சென்றாலும், என்னை ஆறலைத்துக் கூறையைப் பறித்துக்கொள்பவர் இலராவர்; ஆகவே , உன்னிடம் நான் பிறவாமை ஒன்றையே வேண்டிக் கொள்வேன் என்று சுந்தரர் பாடிய அவிநாசியப்பரை, வாரணாசி

கொழுந்தை, முதலை வாயுண்ட பாலகனை திருப்பியளித்த வள்ளலை மனதார தரிசிக்கின்றோம்.

ஐந்தலை அரவின் கீழ் சுயம்பு மூர்த்தியாக எழிலாக ஐயன் அருட்காட்சி அருள்கின்றார். பங்குனி மாதம் முதல் வாரத்தில் அதிகாலை சூரிய உதயத்தின் போது, கோயிலில் மூலவர் சிவலிங்கதிருமேனியின் மீது சூரிய ஒளி நேரடியாக விழுகின்றது. இறைவனை பிரம்மா நூறு ஆண்டுகளும், இந்திரனுடைய ஐராவதம் எனும் வெள்ளையானை 12 ஆண்டுகளும், தாடகை மூன்று ஆண்டுகளும், நாகக் கன்னி 21 மாதங்களும் வழிபட்டுள்ளனர். சுவாமியுடன் மனோன்மணி அம்பாளும் உடன் அருளுகின்றார்.

காசியில் போய் வழிபட்டால் என்ன புண்ணியம் கிடைக்குமோ அது அவிநாசி லிங்கேஸ்வரரை வழிபட்டால் கிடைக்கும் என்பது ஐதீகம். பிரமன் பூசித்ததால் பிரமபுரீசுவரர் என்றும் அழைக்கப்படுகிறார். 'அரிய பொருளே அவிநாசியப்பா' என்று மாணிக்கவாசகரும், 'அவிநாசி கண்டாய், அண்டத்தான் கண்டாய்' என்று அப்பர் பெருமானும் இவரை போற்றுகின்றனர். இவரை வழிபட்டால் மீண்டும் பிறவாத்தன்மை கிடைக்கும். அழியாப்புகழ் கிடைக்கும் என்பது தொன் நம்பிக்கை .

சுவாமி சன்னதிக்கு வலப்புறத்தில் கல்யாண மண்டபம், சித்திரைப் பெருவிழாவின் போது ஆறாம் திருநாளன்று சுவாமி அம்பாள் திருக்கல்யாணம் இம்மண்டபத்தில் நடைபெறுகின்றது. இவ்வாலய உற்சவர்கள் இம்மண்டபத்தில் அருளுகின்றனர். சோமாஸ்கந்தர், வேடன் வடிவத்தில் முருகர், குமார சுப்பிரமணியர், வீரபாகுத் தேவர் திருமேனிகள் மிகவும் அருமை. இம்மண்டபத்திற்கு எதிரே சிவசூரியன் சன்னதி. இரு இராஜ கோபுரங்களுக்கு இடையே உள்ள சபா மண்டபத்தில் தல புராணத்தில் உள்ள வரலாறுகள் அழகோவியமாக வரைந்துள்ளனர்.

அடுத்து அடியோங்கள் தரிசித்த சன்னதி அறுகோண அமைப்பிலுள்ள செந்தில்நாதன் சன்னதி ஐயன் மற்றும் அம்மை சன்னதிக்கு இடையில் சோமாஸ்கந்த அமைப்பில் சன்னதிகள் அமைந்துள்ளன. இக்கோவிலில் பாலதண்டாயுதபாணி சன்னதியும், சுப்பிரமணியர் சன்னதியும் உள்ளன. மூலவர் தேவியர்களுடன் அறுமுகவராக மயில் வாகனத்துடன் அருள் பாலிக்கின்றார். உற்சவராக முருகப்பெருமான் ஒரு முகமும், நான்கு திருக்கரங்களும் கொண்டு வள்ளி தெய்வானையுடன் விளங்குகிறார். குமார சுப்பிரமணியர் உற்சவ மூர்த்தமும் இவ்வாலயத்தில் உள்ளது. அருணகிரிநாதர் தனது திருப்புகழில் இவ்வாலய முருகர் மீது மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். அவர் "அவிநாசிப் பெருமாளே", "புக்கொளியூருடையார் புகழ் தம்பிரானே" என்று பலவிடங்களில் பாடியுள்ளார். அவரது ஒரு திருப்புகழ்

*இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்*
*பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே*

*குறமாதைப் புணர்வோனே குஹனே சொற்குமரேசா*
*அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே.*
பொருள்: இனி இறவாமலும், பிறவாமலும் நிலையான மோட்சத்தை அருளும் சற்குருநாதனே. பக்தர்களின் இதய குகையில் வசிப்பவனே, குறமகள் வள்ளியின் மணாளனே, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களை உபதேசிக்கும் அவிநாசிப் பெருமாளே! என்று பாடியுள்ளார் அருணகிரிநாதர்.

அடுத்து அடியோங்கள் கருணையாத்தாளை தரிசித்தோம். அம்பாள் சன்னதியின் முன்புறம் நந்தியும் கொடிமரமும் காட்சி தருகின்றன. அம்மன் சன்னதி முன்மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம், கருவறை எனப் பெரிய அளவில் அமைந்துள்ளது. இங்குள்ள முன்மண்டபத்தில் நாககன்னி சிலை உள்ளது. மகாமண்டப வாயிலின் இருபுறமும் வாயிற்காவல் தேவியர் காட்சி தருகின்றனர். மகா மண்டபத்தில் வடபால் பள்ளியறை உள்ளது. அர்த்தமண்டபத்தில் பிள்ளையார் வீற்றுள்ளார். இறைவியின் கருணை எல்லையற்றது என்பதை விளக்கும் வண்ணம் 'பெருங்கருணையம்மை' என்றும் அருளையே தனக்கு பெயராக கொண்டவளாக 'கருணாம்பிகை' என்றும் அழைக்கப்படுகிறாள். இத்தலத்தில் கொடுமுடி போலவே கல்யாணக் கோலத்தில் அருள் பாலிக்கின்றாள் அம்பாள் பெருங்கருணை நாயகி.



பெருங்கருணை நாயகி உடனாய அவிநாசியப்பர்

நல்லாற்றங்கரையில் தவம் செய்து ஐயனின் வலப்பக்கத்தில் அமர்ந்தாள். தனி இராஜகோபுரம், கொடிமரம் அம்பாளுக்கு இருப்பது சிறப்பு. அம்மனுக்கு வாகனமாக நந்தியெம்பெருமானே அமர்ந்திருக்கிறார். நின்ற கோலத்தில், நான்கு திருக்கரங்களுடனும், கருணையைப் பொழியும் திருவிழிகளுடனும், மந்தகாச புன்னகையுடன் அம்பாள் எழிலாக தரிசனம் அளிக்கின்றாள்.

மேற்கைகளில் தாமரையும் நீலமும் விளங்குகின்றன. கீழ்க்கைகள் அபயவரதமாகத் திகழ்கின்றன. அழகும் அருளும் நிறைந்த சன்னிதியாக இவ்விறைவியின் சன்னிதி பொலிகிறது. கருணைச் செல்வியின் திருமுகத்தில் கருணை பொங்குகிறது. அன்னையின் தோற்றப் பொலிவு நம்மை அங்கேயே கட்டிப்போட்டு விடுகிறது. அருட்கடலாக விளங்கும் அம்மையின் அடித்தாமரைகளை அகங்குளிரப் போற்றி வணங்குகிறோம். கொங்குநாட்டு தலங்களில் உள்ள அம்பாள் திருமூர்த்தங்கள் கல்திருவாசியுடன் அருள் பாலிப்பது போலவே கருணாம்பிகையும் அருள் பாலிக்கின்றாள். சந்தனக் காப்பில் அம்பாளை தரிசிப்பதே ஒரு பரவசம். அம்பாளைப் போற்றி கருணாம்பிகை சதகம் , கருணாம்பிகை பிள்ளைத்தமிழ், கருணாம்பிகை யமக அந்தாதி ஆகிய நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அம்பாளை
(கருணை) ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணைப் பாசாங்குசமும் கரும்புவில்லும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் இல்லையே என்ற அபிராமி அந்தாதிப் பாடல்பாடி அம்பாளை துதித்தோம். அம்பாள் சன்னதியின் பின் சுவரில் தேள் உருவம் உள்ளது. இப்பகுதியில் தேள் கடித்தால், அவர்கள் இங்கு வந்து வலம் வந்தால் விஷம் இறங்கி விடும் என்ற நம்பிக்கை உள்ளது. கனவில் விஷ ஜந்துக்கள் வராது என்பது நம்பிக்கை. விருச்சிக இராசிக்காரர்கள் தரிசிக்க நன்மை.

தோல் சம்பந்தமான பிரச்சனை உள்ளவர்கள் அம்மன் சன்னதியை சுற்றி வலம் வரும்போது சுவற்றில் கை வைத்து பிரார்த்தனை செய்துகொண்டால் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீரும். எல்லாத் தீமைகளும் நீங்கி, நவகிரக தோஷங்களும் நீங்கும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். திருமணத்தடை நீங்கும். பிரிந்த தம்பதியினர் ஒன்று சேருவர். இராகு காலத்தில் கருணாம்பாளுக்கு விளக்கேற்றி வழிபடும் போது நாம் நினைத்த காரியம் கைகூடும்.

அம்பாளை திவ்யமாக தரிசித்த பின் வெளி பிரகார வலத்தை தொடர்ந்தோம். அம்மன் சன்னதி கோஷ்டத்தில் விநாயகர், இச்சாசக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி, துர்க்கை அருள் பாலிக்கின்றனர். சண்டிகேஸ்வரிக்கும் தனி சன்னதி உள்ளது. சண்டிகேசுவரி சன்னதியில் ஒரு தேவகோட்டத்தில் கொற்றவையும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. அம்மன் விமானமும் ஒரு கலசத்துடன் ஈஸ்வரி அம்சமாகவே விளங்குகிறது. அம்மன் விமானத்தில் சிவ-பார்வதி திருக்கல்யாண கோலம், அம்மன் தவம் செய்யும் சுதை சிற்பங்களை தரிசித்தோம்.

கருணாம்பிகை சன்னதியின் பின்புறம் உள்ள விருச்சிகத்தை விருச்சிக ராசிக்காரர்கள் வழிபடுகிறார்கள். தேள்கடி, மற்றும் விஷ பூச்சிகளால் பாதிக்கப்பட்டவர்களும் இச்சன்னதியில் வழிபட்டு பிரசாதம் பெற்றுச் செல்கின்றனர். விருச்சிகத்தை வணங்கும் முன், நுழைவு வாயிலில் குபேர திசையான வடக்கு நோக்கியுள்ள செல்வ கணபதியை வணங்கி விட்டு செல்ல வேண்டும்.

மேற்கு பிரகாரத்தில் இருந்து சுவாமி, அம்பாள் விமானங்களுக்கு இடையே சிறிய முருகர் விமானம் சோமாஸ்கந்தரை நினைவூட்டியது.

வெளிப்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் நடராஜர் சன்னதி அமைந்துள்ளது. இங்குள்ள ஆடல்வல்லான் திருமேனி கொங்குநாட்டுப் பாணியில் விளங்குகிறது. நீள்வட்டமான திருவாசியும் அதன் ஒடுக்கமான அடிப்பகுதியில் இருபுறமும் அழகிய கிளி உருவங்களும் இத்திருவுருவில் அமைந்துள்ளன. திருவாசியில் ஐம்பத்தொரு நெருப்புக் கொழுந்துகள் காட்சி தருகின்றன. இருபத்தெழு சுடர்களே பெரும்பாலான திருமேனிகளில் இருக்கும். இங்கு ஐம்பத்தொரு எழுத்துகளை குறிக்கும் வகையில் இவ்வாறு அமைந்துள்ளது. இருபத்தேழு சுடர்கள் இருந்தால் அவை இருபத்தேழு நட்சத்திரங்களைக் குறிப்பதாகக் கூறுவர். இப்பெருமானது மேற்கரங்கள் இரண்டும் படுக்கை வசமாக விரித்து வைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் உடுக்கையும் தீயும் உள்ளன. வீசிய திருக்கரம் சற்றுப் புதுமையாகக் காட்சி தருகிறது. சடைகள் கீழ்நோக்கித் தொங்குகின்றன. எனவே ஆடல் மிக மெதுவாக நடைபெறுவது விளங்குகிறது. அருகில் சிவகாமியம்மை அருட்காட்சி தருகிறார். மாணிக்கவாசகரும் எழுந்தருளியுள்ளார்.

அடுத்து வசிஷ்டரின் சனி தோஷத்தை போக்கிய சனி பகவானின் தனி சன்னதி. இங்குள்ள சனி பகவான் அனுக்கிரக மூர்த்தியாக நல்ல பலன்கள் தந்து அருளுகிறார். சனிதோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இங்குள்ள சனிபகவானை வழிபாடு செய்தால் தோஷத்தின் பாதிப்பு குறையும் என்பது நம்பிக்கை. அருகில் நவகிரக சன்னதி அமைந்துள்ளது.

இராஜகோபுரத்திற்கு அருகே இருக்கும் தெப்பக்குளம் கயிலை தீர்த்தம் என்றும், சிவ தீர்த்தம் என்றும், நாக கன்னி தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் வாயிலில் பிரம்மாண்ட சுதை நந்தி சிலை அமைத்திருக்கின்றனர்.

இத்தலத்தில் 32 கணபதிகள் அருள்பாலிக்கின்றனர் சிவாலயங்களில் சிவனுக்கு பின்புறம் அருள்பாலிக்கும் விஷ்ணு, இத்தலத்தில் கொடிமரத்தின் அருகில் சிவனை பார்த்தபடி அருளுகிறார். சுவாமி இராஜகோபுரத்தின் தென்திசையில் தெட்சிணாமூர்த்தி நடனமாடும் கோலத்தில் உள்ளார். நர்த்தன கணபதிக்கு முன்னால் மூஞ்சூறு வாகனத்திற்கு பதில் சிம்ம வாகனம் உள்ளது.

தினமும் ஐந்து கால பூஜை நடைபெறுகின்றது. இக்கோவில் தேர் கொங்கு மண்டலத்திலேயே மிகப்பெரியதும், தமிழகத்தின் மூன்றாவது பெரிய திருத்தேராகவும் விளங்கும் பெருமை பெற்றது. சித்திரைப் பெருவிழாவின் ஐந்தாம் திருநாள் அறுபத்து மூவர் திருவிழா பஞ்ச மூர்த்திகளுடன் கருட வாகனத்தில் வரதராஜப் பெருமாளும் எழுந்தருளுகிறார்., ஆறாம் திருநாள் திருக்கல்யாணம், ஏழாம் திருநாள் தேரோட்டம், மற்றும் தெப்போற்சவம், மஹாதரிசனத்துடன் சிறப்பாக நடைபெறுகின்றது. மூன்று நாள் தேரோட்டத்தில் முதல் நாள் பெரிய தேர் காணக்கிடைக்காத பேரழகு அவிநாசி தேரோட்டம். பஞ்ச

மூர்த்திகளுடன் கரி வரதராஜப் பெருமாளும் தேரோட்டம் காண்பது ஒரு சிறப்பு. பிரம்மோற்சவத்தின் போது திருமுருகன் பூண்டியிலிருந்து திருமுருகநாதரும் இங்கு எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். பிரம்மோற்சவத்தின் பூர்வாங்கமாக பெரிய மண் குதிரை எடுப்பும் இத்தலத்திற்கே உரிய ஒரு சிறப்பு.



கயிலை தீர்த்தம்

வைகாசியில் வசந்தோற்சவம், ஆடிப்பூர உற்சவம், அம்மன் தபசு, ஆடி கிருத்திகை சிறப்பு வழிபாடு, ஆவணி மூல பிட்டுத்திருவிழா, புரட்டாசியில் நவராத்திரி, ஐப்பசி அன்னாபிஷேகம், கந்தர் சஷ்டி பெருவிழா, கார்த்திகை தீபப்பெருவிழா, மார்கழியில் திருவெம்பாவை – திருவாதிரைத் திருவிழா, தைப் பூசம், பங்குனியில் முதலை உண்ட பாலகன் விழா என்று வருடம் முழுவதும் கோலாகலம்தான் இத்தலத்தில்.

கல்வெட்டுச் செய்திகள்: இத்திருக்கோயிலில் உள்ள பழைய கல்வெட்டுகளில் இத்தலம் தட்சிண வாரணாசி என்று குறிப்பிடப் பெறுகிறது. இவ்வூரில் கிடைத்த பதினேழாம் நூற்றாண்டுச் சாசனம் ஒன்று. 'பூலோக கயிலாசமான புக்கொளியூராகிய அவிநாசித்தலம்' என்று இத்தலத்தைக் குறிப்பிடுகிறது. சில கல்வெட்டுகளில் இத்தலத்து இறைவன், 'சகதாதிபதி திவ்விய ஸ்ரீகயிலாச நிவாச

பார்வதி பிராணநாத எல்லாத்தேவர் வல்லபன்', 'தட்சிண வாரணாசி அவிநாசி லிங்கன்' என்று நீண்ட அடைமொழியோடு குறிப்பிடப் பெறுகிறார். மிகப் பழைய கல்வெட்டுகளில் இறைவன் பெயர், அவிநாசி ஆளுடைய நாயனார், அவிநாசியாண்டார், அவிநாசி ஆளுடையார் என்றெல்லாம் குறிப்பிடப் பெறுகிறது . இத்தலத்து இறைவியான கருணாம்பிகை அம்பிகையின் பெயர். திருக்காமக்கோட்டத்து நாச்சியார் பெருங்கருணைச் செல்வியார், பெருங்கருணாலயச் செல்வியார், பெருங்கருணை அம்மன் என்றெல்லாம் கல்வெட்டுகளிலும் சாசனத்திலும் குறிப்பிடப் பெறுகிறது. இங்கு தலமரமாக மாமரம் விளங்குகிறது. காஞ்சிபுரத்தில் மாமரத்தின் கீழ் உமையம்மை சிவவழிபாடு புரிந்ததைப் போலவே அவிநாசியிலும் அம்மை மாவடியில் விளங்கிய அவிநாசியப்பரைப் பூசித்தாள் என்று தலபுராணம் கூறும். எனவே அவிநாசியப்பரை ஒரு கல்வெட்டு, காஞ்சி தலத்து இறைவன் பெயரான திருவேகம்பமுடையார்' என்பதோடு இணைத்து 'திருவேகம்பமுடை யாரான மாதேவராண்டார்' என்று போற்றுகிறது.

அருமையாக பெருங்கருணை நாயகி உடனாகிய அவிநாசியப்பரின் தரிசித்த பின் அடுத்து திரிவேணி சங்கமத்தில் அமைந்துள்ள பவானி தலத்தை தரிசிக்கலாம் வாருங்கள் அன்பர்களே.

# 9 *பவானி தரிசனம்*




வடக்கு இராஜகோபுரம்

பவாநீ பவாநீ பவாநீ த்ரிவாரம்
உதாரம் முதா ஸர்வதா யே ஜபந்தி |
நசோகோ நமோஹோ நபாபம் நபீதி:
கதாசித் கதம்சித் குதஸ்சித் ஜனாநாம் ||

பொருள்: எவரொருவர் பவாநீ பவாநீ பவாநீ என்று மூன்று முறை மகிழ்ச்சியுடன் எப்பொழுதும் உரக்க ஜபம் செய்கிறார்களோ, அவரனைவருக்கும் துன்பமும், மோகமும், அச்சமும் எங்கிருந்தும், எவ்வகையிலும், எதன் மூலமும் ஏற்படாது. இச்சுலோகம் ஆதி சங்கரர் இயற்றிய பவானி புஜங்கம் என்ற ஸ்தோத்திரத்தில் உள்ளது. இத்தகைய சிறப்புப்பெற்ற பவானி அன்னையை தரிசிக்க செல்கின்றோம். தலமும் அம்பாளின் பெயரால் பவானி என்றே அழைக்கப்படுகின்றது.

திருநணா என்றும் அழைக்கப்படும் இத்தலம் சேலத்தில் இருந்து 56 கிமீ தொலைவிலும், ஈரோட்டில் இருந்து சுமார் 15 கிமீ தொலைவிலும் உள்ளது. சத்தியமங்கலத்திலிருந்து கிளம்பிய போது பவானி 54 கிமீ தூரம் தானே சிறிது நேரத்தில் சென்று விடலாம் என்று வேகமாகவே பயணம் செய்தோம். நடை அடைப்பதற்கு முன்னர் சென்றாலும் திருக்கோவிலை முழுவதுமாக தரிசிக்க சமயம் கிட்டாது என்பதால் பிறகு சீர் வேகத்தில் பயணம் செய்து காவிரி நதி ஒருபுறமும், பவானி நதி மறுபுறமும் சூழ்ந்திருக்க, எழிலாக தீவு போல காட்சியளிக்கும் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த பவானி வேதநாயகி உடனுறை சங்கமேஸ்வரர் ஆலயத்தை அடைந்த போது நடை சார்த்தியிருந்தனர். எத்தலத்திலும் தீர்த்தத்தில் நீராடவில்லை, இங்கு முக்கூடலில் நீராடட்டும் என்று எம்பெருமான் திருவுள்ளம் என்று எடுத்துக்கொண்டு வடக்கு பக்கம் உள்ள இராஜ கோபுரத்தை முதலில் தரிசனம் செய்தோம். குபேரன் வழிபட்ட தலம் என்பதால் பிரதான இராஜகோபுரம் வடக்கில் அமைந்துள்ளது. இக்கோபுரத்தையொட்டி பரமபதவாசலும் உள்ளது. சைவமும் வைணவமும் இத்தலத்தில் இணைந்துள்ளன என்பதை உணர்த்தும் வகையில் இராஜ கோபுரத்திற்கு முன்னர் இருபுறமும் விநாயகர் மற்றும் அனுமன் திருசன்னதிகள் உள்ளன. ஆற்றின் பக்கம் கிழக்கில் சுவாமி சன்னதிக்கெதிரே ஒரு சிறு இராஜகோபுரமும் உள்ளது. இராஜகோபுரமே இலிங்கம் என்பதால் கோபுரத்தை நோக்கியவாறு சிவனாரை என்றும் சேவிக்கும் நந்தி 'இராஜ நந்தியாக' சிறு சன்னதியில் அருள் பாலிக்கின்றார்.

அவரை தத்புருஷாய வித்மஹே சக்ர துண்டாய தீமஹி |
தந்நோ நந்தி ப்ரசோதயாத் || என்று வணங்கினோம். பின்னர் மதிய உணவை முடித்துக்கொண்டு கூடுதுறைக்கு சென்றோம். ஆலயம் திறக்க சமயம் இருந்ததால் சங்கமத்தில் அனைவரும் நீராடி அருகில் இருந்த சன்னதிகளை தரிசித்தோம்.


வடக்கிலிருந்து பாய்ந்து வரும் காவிரியும், மேற்கிலிருந்து பாயும் பவானியும் மற்றும் அந்தர்வாகினியாக அமுதநதி கூடும் சங்கமத்தில் நீராடி பின்னர் கரையில் அமர்ந்து சங்கமத்தின் அழகை இரசித்தோம். வடநாட்டில் கங்கையும், யமுனையும் அந்தர்வாகினியாக சரஸ்வதியும் சங்கமாகும் அலகாபாத் திரிவேணி சங்கமம் (பிரயாகை) என்றழைக்கப்படுகிறது. எனவே பவானி தக்ஷிண திரிவேணி என்றழைக்கப்படுகின்றது. தக்ஷிண திரிவேணி மட்டுமல்ல, தக்ஷிணப் பிரயாகை என்றும் மூன்று நதிகளும் கூடுவதால் முக்கூடல், கூடுதுறை என்றும், குபேரன் வழிபட்டதால் தட்சிண அளகை, தட்சிண கைலாயம் போன்ற சிறப்புப் பெயர்களும் இத்தலத்திற்கு உள்ளது. வடநாட்டின் திருக்காசியைப் புண்ணியத் தலமாக வழிபடுவதற்கு இணையாகத் தென்நாட்டில் பவானி கூடுதுறையை "இளைய காசி" என்று அழைத்து வழிபடுகிறார்கள். காசியைப் போன்றே இங்கு இறந்தாலும் , மோட்சம் என்றும், இலந்தை மரம் தல விருட்சம் என்பதால் பத்ரி வனம் என்றும், பராசர முனிவரால் வழிபடப்பட்டதால் பராசர தலம் என்றும், குபேரனால் வழிபடப்பட்டதால் குபேரபுரி என்றும் வக்கிராசுரன் இறைவனை வழிபட்டதால்

வக்கிரபுரி என்றும், விஜய அரசரால் வழிபடப்பட்டதால் விசயபுரி என்றும் அழைக்கப்படுகிறது.




வேதகிரி (ஊராட்சிக் கோட்டை மலை), சங்ககிரி, நாககிரி (திருச்செங்கோட்டு மலை), மங்களகிரி (பெருமாள் மலை), பதுமகிரி ஆகிய ஐந்து மலைகளுக்கிடையே "பவானி" திருத்தலம் அமைந்துள்ளதால் "பஞ்சகிரி மத்திய பிரதேசம்" என்றும் அழைக்கப்படுகிறது. ஒரே இராஜகோபுரத்தின் கீழ், சிவன் மற்றும் விஷ்ணு கோவில்கள் அமைந்துள்ளதால் "க்ஷேத்திர சங்கமம்" என்றும், அமிர்தலிங்கேஸ்வரர், சகஸ்வரலிங்கேசுவரர் மற்றும் காயத்ரி லிங்கேசுவரர் என பல்வேறு மூர்த்திகள் ஒருங்கிணைந்து உள்ளதால் "மூர்த்தி சங்கமம்" என்றும் வழங்கப்படுகிறது.

பிறப்பு முதல் இறப்பு வரையான அனைத்து தோஷங்களுக்கும் பரிகாரம் செய்யும் கூடுதுறை. பூமிக்குள் பல சிவலிங்கங்களை கொண்ட அற்புதமான தலம். பித்ருக்களுக்கு செய்யவேண்டிய சிரார்த்தங்களை செய்ய உகந்த தலம். இளைய காசி என்பதால் கூடுதுறையில் அஸ்தியை கரைக்க பலர் இத்தலத்திற்கு வருகின்றனர். பரிகாரம் செய்பவர்களுக்காகவே ஒரு மண்டபம் ஆற்றுக்கும் ஆலயத்திற்கும் இடையில் அமைத்துள்ளனர்.




இவ்வளவு சிறப்புப்பெற்ற இத்தலத்தின் இறைவனை தரிசிக்க அடியோங்கள் சிறிது நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. அப்போது கரையில் இருந்த விநாயகரையும் மற்றும் மூன்று திருச்சன்னதிகளை தரிசித்தோம். நாக தோஷம் உள்ளவர்கள் இவ்விநாயகர் சன்னதியில் கல் நாகர் சிலை பிரதிஷ்டை செய்தால் நாகதோஷம் விலகும் என்பதால் பல நாகர் சிலைகள் இருப்பதைக் கண்டோம். கோயிலுக்கு வெளியில் தெற்கே காவிரிக்கரையில் அமைந்த அச்சன்னதிகள் காயத்ரிலிங்க சன்னதி, சகஸ்ரலிங்க சன்னதி, அமுதலிங்கேசர் சன்னதி ஆகும்.

விஸ்வாமித்திரர் ஸ்தாபித்து காயத்ரி மந்திரம் ஓதி வழிபட்ட இலிங்கம் காயத்ரி லிங்கம் என்றழைக்கப்படுகிறது. இச்சன்னதிக்கு அருகில் காயத்ரி தீர்த்தம் உள்ளது. இராவணன் சகஸ்ரலிங்கத்தை பூஜை செய்துள்ளான் என்பது ஐதீகம். இவருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டால் இராகு – கேது தோஷம் விலகும் என்கின்றனர்.

பராசர முனிவர் சங்கமேஸ்வரரை குறித்து தவம் செய்து கொண்டிருந்த காலத்தில் தேவர்களும் அசுரர்களும் அமுதம் வேண்டி மந்தார மலையை மத்தாகவும், வாசுகி என்ற நாகத்தை கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். முதலில் ஆலாலம் என்ற விஷம் வந்தது அதை சிவபெருமான் அருந்தி தேவர்களையும் அனைத்து ஜீவராசிகளையும் காத்து தியாகராஜர் ஆனார். பின்னர் அமுதம் வந்தது . மஹாவிஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து சாதுர்யமாக அதை தேவர்களுக்கு மட்டும் அளித்தார். பின்னர் அமுத கலசத்தை பராசர முனிவரிடம் அளித்தார், அவரும் அதை இப்பத்ரிவனத்தில் மறைத்து வைத்தார். இதை அறிந்த அசுரர்கள் அமிர்தத்தை கவர்ந்து செல்ல வந்தனர். பாராசரர் வேதநாயகி அம்பாளிடம் வேண்ட அம்மனும் அசுரர்களை அழித்தாள். சிறிது காலம் சென்று அமிர்த கலசம் வைத்திருந்த இடத்தை தோண்டிப்பார்த்த போது அமுதம் காவிரி, பவானி

சங்கமத்தில் சென்று கலந்திருந்தது. அமிர்த கலமும் சிவலிங்கமாக மாறி இருந்தது. எனவே அவ்விலங்கம் அமுத லிங்கம் எம்றழைக்கப்படுகின்றது.




குழந்தையில்லாதவர்கள் இந்த இலிங்கத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு ஆவுடையாரைச் சுற்றி வந்தால் குழந்தை பாக்யம் கிடைக்கும் என்பது பக்தர்களிடையே இருந்து வரும் நம்பிக்கையாகும். ஆலயம் திறப்பதற்காக காத்திருந்த சமயத்தில் இச்சன்னதியின் முன் மண்டபத்தில் அமர்ந்திருந்தோம். இச்சமயத்தில் இத்தலத்தின் மற்ற வரலாறுகளை சிந்திப்போம் பின்னர் ஆலயத்தை தரிசிக்கலாம் அன்பர்களே.

அம்பாள், தலம், நதி ஆகிய மூன்றனுக்கும் பவானி என்று பெயர். அம்பாளின் ஆயிரம் நாமங்களில் ஒன்று இந்நாமம். "பவானி, பாவனா கம்யா, பவாரண்யா

குடாரிகா " என்பது லலிதா சகஸ்ரநாமத்தின் ஒரு ஸ்லோகம். லலிதா சகஸ்ரநாமத்தின் தியான ஸ்லோகத்திலும்

த்யாயேத் பத்மாஸ்தாம் விகஸித வதனாம் பத்ம-பத்ராயதாக்ஷீம்
ஹேமாபாம் பீத வஸ்த்ராம் கரகலித – லஸத்ஹேம பத்மாம் வராங்கீம் |
ஸர்வலங்கார – யுக்தாம் ஸதத – மபயதாம் – பக்த – நம்ராம் பவானீம்
ஸ்ரீவித்யாம் சாந்தமூர்த்தீம் ஸகல ஸுரனுதாம் ஸர்வ சம்பத் – ப்ரதார்த்தீம் ||

பொருள்: தாமரை மலரில் வீற்றிருப்பவளும், மலர்ந்த திருமுகமுடையவளும், தாமரையிதழ் போன்ற நீண்ட திருக்கண்களையுடையவளும், பொன்னொளி பொருந்தியவளும், பொன்னாடையணிந்தவளும், பொற்றாமரையை திருக்கரங்களில் தாங்கியவளும், சிறந்த அங்கங்களையுடையவளும், அனைத்து அலங்காரம் பொருந்தியவளும், அபயமளிப்பவளும், பக்தர்களுக்கு இரங்குபவளும், ஸ்ரீவித்யா ரூபிணியும், சாந்த மூர்த்தியும், தேவர்களால் துதிக்கப்படுபவளும், அனைத்து செல்வங்களையும் வழங்குபவளுமான பவானி தேவியை வணங்க வேண்டும்.

பவன் என்பது சிவபெருமானின் முக்கியமான எட்டு பெயர்களில் ஒன்று, அவரின் பத்னி பவானி. பவ: என்பது சம்சார சாகரம் அதற்குப் பிராணனை கொடுப்பவள். அதாவது இயற்கையின் சக்தி அல்லது படைப்பு ஆற்றலின் ஆதாரம். தனது பக்தர்களுக்கு அருளை வழங்கும் ஒரு அன்னை என்றெல்லாம் பொருள்.

அருணகிரிநாதர் வேல் விருத்தத்தில்

கங்காளீ சாமுண்டி வாராகி யிந்த்ராணி
கௌமாரி கமலாசனக்
கன்னிநா ரணிகுமரி த்ரிபுரைபயி ரவியமலை
கௌரிகா மாக்ஷிசைவ
சிங்காரி யாமளை பவாநி கார்த்திகை கொற்றி ...... என்று அம்பாளைப் பாடியுள்ளார்.

அம்பாளை தாயாராகவும் நம்மை குழந்தையாகவும் வைத்துக்கொண்டு உபாசிக்க ஆரம்பித்தாலும் அவளே காலக்கிரமத்தில் இரண்டும் ஒன்றேதான் என்ற பரமஞானத்தை அருளுகிறாள். இதை ஆதி சங்கரர் தமது சௌந்தர்ய லஹரியில் சிலேடையாக பாடியுள்ளார் என்று காஞ்சி மஹாபெரியவர் கூறியுள்ளார். "பவானி உன்னுடைய அடிமை நான்" என்று பக்தன் துதிக்க ஆரம்பிக்கின்றான். 'பவாநி த்வம்', (த்வம் என்றால் 'உன்') என்று பக்தன் சொல்லுகின்ற போதே, அம்பாள் அவனுக்கு 'பவானித்வம்' என்கின்ற நிலையை அருளுகிறாள். அதாவது நீயும் நானும் ஒன்றே என்ற பரம ஞானத்தை அருளுகின்றாள்.



திரிவேணி சங்கமத்தில்

இனி பவானியாற்றின் சிறப்பைப் பற்றிக் காணலாம். பவானி ஆறு காவிரி ஆற்றின் முக்கிய துணை ஆறுகளில் ஒன்றாகும். இது சங்கநூலில் வானி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்து சேர மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு, அதில் பெருங்குன்றூர்க்கிழார் என்ற புலவர் இளஞ்சேரல் இரும்பொறை எனும் சேர மன்னனைப் பற்றிய பாடலில்,

புனல்பாய் மகளிராட வொழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசத்தோன்றுஞ்
சாந்துவரு வானி நீரினுந்
தீந்தன் சாயலன் மன்றதானே - என அரசனுடைய உடல் வானியாற்று நீரைப் போல் மென்மையும் தூய்மையும் உடையதாக இருந்தது என்று பாடுகிறார்.

பவானி ஆறு தமிழகத்தின் நீலகிரி மலைத்தொடரில் உள்ள குந்தா மலைப்பகுதியில் தென்மேற்கு மூலை முகட்டில் உருவாகிறது. மலை முகட்டிலிருந்து கீழிறங்கத் தொடங்கும் பகுதியில் மேல் பவானி அணை கட்டப்படுள்ளது. அங்கிருந்து தென்மேற்காக கேரள மாநிலத்தின் பாலக்காடு மாவட்டத்திலுள்ள அட்டப்பாடி பள்ளத்தாக்கில் பாய்ந்து அங்குள்ள முக்கலி என்னுமிடத்தில் கிழக்கு நோக்கி திரும்பி பாய்கிறது. கோவை நகருக்கு சுவையான குடிநீரை வழங்கும் சிறுவாணி ஆறு பவானியுடன் இணைந்த பின் மீண்டும் தமிழகத்துக்குள் பவானி நுழைகிறது. பின் குந்தா ஆறு பவானியுடன் இணைகிறது. இதற்கு கீழ் பில்லூர் அணை பவானியில் கட்டப்பட்டுள்ளது. மேட்டுப்பாளையம் அருகே பவானி ஆறு சமவெளியை அடைகிறது. பின் சிறுமுகை வழியாக கொத்தமங்கலம் அருகே கீழ் பவானி அணைக்கட்டு

எனப்படும் பவானி சாகர் அணையை அடைகிறது பவானி சாகர் நீர்த்தேக்கத்தில் மோயார் ஆறானது இணைந்து கொள்கிறது. இந்த அணையினால் ஈரோடு, கரூர் மாவட்டங்கள் வளம் பெறுகின்றன. பின் பவானி ஆறு கோபி செட்டிபாளையம் வழியாக பாய்ந்து பவானி நகரில் காவிரி ஆற்றுடன் கலக்கிறது. காவிரி ஆற்றுடன் கலக்கும் முன் இதிலிருந்து காளிங்கராயன் வாய்க்கால் தொடங்குகிறது.

பவானி நகரம் கைத்தறித் தொழிலுக்குப் பெயர் பெற்றது. பவானி ஜமக்காளங்கள் உலகப் புகழ்பெற்றவை. இனி இத்தலத்தின் மற்ற வரலாறுகளைப் பற்றிக் காணலாம் அன்பர்களே.

பூலோகத்தில் உள்ள புனித தலங்களை தரிசிக்க வந்த குபேரன், இத்தலத்திற்கு வந்தபோது, யோகிகள், ஞானிகள், முனிவர்கள், கந்தர்வர்கள் தவம் செய்வதைக் கண்டார். அத்துடன், மான், புலி, சிங்கம், பசு, யானை, நாகம், எலி என பல்வேறு உயிரினங்களும் ஒன்றாக நீர் அருந்துவதுடன், தவத்தில் ஈடுபட்டு இருந்தவர்களுக்கு தொந்தரவு கொடுக்காமல் இருப்பதைக் கண்டு குபேரன் ஆச்சர்யம் அடைந்தார். அவ்விடத்தில் தெய்வீக சக்தி இருப்பதை உணர்ந்த அவர், இறைவனின் தரிசனம் வேண்டி பவானியில் தவம் மேற்கொண்டார். குபேரனின் தவத்தால் மகிழ்ந்த சிவனும், திருமாலும் காட்சியளித்து அருள்பாலித்தனர். அத்துடன் அங்குள்ள இலந்தை மரத்தின்கீழ் சுயம்பாகத் தோன்றி அருள்புரிந்தார் ஈசன். அப்போது, அளகேசன் என்ற பெயரால் இத்திருத்தலத்தில் வீற்றிருந்து, பக்தர்களுக்கு அருள்பாலிக்க வேண்டுமென குபேரன் வரம் கேட்டுப் பெற்றார். அன்றிலிருந்து இத்தலம், 'தட்சிண அளகை' என்ற பெயர் பெற்றது. சிவனுக்கு இடப்பக்கம் ஆதிகேசவப் பெருமாளாக திருமால் எழுந்தருளினார். எனவே இராஜகோபுரம் வடக்குப் பக்கம் உள்ளது.

இக்கோயிலின் தீர்த்தங்கள் காவிரி, பவானி மற்றும் காவிரியில் அந்தர்வாகினியாக சங்கமிக்கும் அமுதநதி ஆகியன. கோயிலுக்கு வெளியில் காயத்ரி லிங்கக் கோயிலுக்கெதிரில் காயத்ரி தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம் உள்ளன. காயத்ரி தீர்த்தத்தை பக்தர்கள் காயத்திரிமடு என்றழைப்பர். இது தவிர, தேவதீர்த்தம், சக்கர தீர்த்தம், சூரிய தீர்த்தம், உரோமச தீர்த்தம் என்பவைகளும் இக்கோவில் வளாகத்தில் உள்ளன.

புரட்டாசி, தை, ஆடி அமாவாசையிலும், ஆடிப் பதினெட்டிலும், தமிழ் மாதம் பிறப்பு, வருஷப் பிறப்பு பொங்கல் போன்ற புண்ணிய நாட்களிலும், கிரகண நாட்களிலும் பக்தர்கள் ஏராளமாக வந்து காயத்ரி மடுவில் நீராடி இறைவனை வழிபட்டுச் செல்வர்.

"காலில் அரவம் இரு சுடரைப் பற்றும் காலத்திலே

மேலுலகம் பெறுவோர் புனல் மூழ்க விரும்புவது
கோலம் மிகுந்த பவானியும் பொன்னியும் கூடுதுறை
வாலிப காசி நண்ணாவூர் பயில் கொங்கு மண்டலமே" -
என்னும் கொங்கு மண்டலச் சதகப் பாடல் கிரகண காலத்தில் இத்தலத்தில் நீராடும் சிறப்பைப் பற்றி கூறுகிறது. அமாவாசை நாட்களில் கூடுதுறையில் நீராடி விட்டு முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுப்பது வழக்கமாக இருந்து வருகிறது .

தேவாரப்பாடல் பெற்ற 274 திருத்தலங்களில், பவானி 207வது தலம். கொங்கேழ் தலங்களில் இது மூன்றாவது தலம். அம்மையின் ஞானப்பாலுண்ட ஆளுடைப்பிள்ளையார் ஒரு பதிகம் பெற்ற இத்தலம் திருநணா' என்று அவர் பாடியுள்ளார்.

பந்தார் விரன்மடவாள் பாகமா நாகம்பூண் டேறதேறி
அந்தா ரரவணிந்த வம்மா னிடம்போலும் அந்தண் சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் றெளியொளிரத் தேமாங் கனியுதிர்க்குந் திருநணாவே.

பொருள் : பந்தாடும் விரலை உடைய உமையம்மை ஒரு பாகமாக விளங்க, பாம்பை அணிகலனாகப் பூண்டு, எருதேறி, அழகிய மாலையாக அரவத்தைப் பூண்டுள்ள சிவபிரானது இடம், அழகிய குளிர்ந்த மலைச்சாரலின் அருகே மந்திகள் நடனமாடவும் பூம் பொழிலில் வண்டுகள் பாடவும் செந்தேனின் தெளிவில் தோய்ந்த மாங்கனிகள் உதிரும் வளமுடைய திருநணாவாகும் என்று நற்றமிழ் வல்ல க்திருஞானசம்பந்தர் பாடிய இத்தலத்தின்

இறைவன் : சங்கமேஸ்வரர் ( அளகேசன், சங்கமநாதர், மருத்துவலிங்கம், வானிலிங்கேஸ்வரர், வக்கிரேஸ்வரன், நட்டாற்றீஸ்வரன், திருநண்ணாவுடையார்)
இறைவி : வேதநாயகி, பவானி, சங்கமேஸ்வரி, பண்ணார் மொழியம்மை, பந்தார் விரலம்மை, மருத்துவ நாயகி, வக்கிரேஸ்வரி
தல விருட்சம் : இலந்தை
தீர்த்தம் : காவிரி, பவானி, அமிர்தநதி, சூரிய தீர்த்தம், சக்கர தீர்த்தம், தேவ தீர்த்தம், காயத்ரி தீர்த்தம்.
புராண பெயர் : திருநணா, பவானி முக்கூடல்
பாடியவர்: திருஞானசம்பந்தர்.

இங்குள்ள இறைவன் "சங்கமேஸ்வரர், இரு ஆறுகளுக்கு இடையில் கோவில் கொண்டிருப்பதால் "நட்டாற்றீசர்" என்று அழைக்கப்படுகிறார். பெரும்பாலானவர்கள் "சங்கமேஸ்வரர்" என்றே அழைக்கின்றனர். கல்வெட்டுக்களில் "திருநண்ணா உடையார்" என்று காணப்படுகிறது.

“ஞானக்கண்ணகி நண்ணாவில் இருக்கும் சிவக்கொழுந்தை” என பவானி கூடற்புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அம்பாள் வேதநாயகி, வேதவல்லி, பொன்னார் மௌலி என்று அழைக்கப்படுகிறார். “பண்ணார் மொழியம்மையார்” என்று அழகாகக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. நாம் இத்தலத்தின் வரலாறுகளை சிந்தித்து முடிக்கவும் நடை திறக்கவும் சரியாக இருந்தது, வாருங்கள் இனி இவ்வாலயத்தை தரிசிக்கலாம்.

ஆலயத்திற்கு இரு வாயில்கள் உள்ளன. நகர்ப்புறம் இருந்து வருபவர்கள் ஐந்து நிலை இராஜகோபுரம் அமைந்துள்ள வடக்கு வாயில் வழியாக ஆலயத்திற்குள் செல்கின்றனர். ஆற்றிலிருந்து வருபவர்களுக்கு கிழக்குப் பக்கம் மூன்று நிலை இராஜகோபுரத்துடன் கூடிய ஒரு வாயில் உள்ளது. கொரோனா காலம் என்பதால் வடக்கு நோக்கி உள்ள வாசல் வழியாக மட்டுமே அனுமதித்தனர். விநாயகர், முருகர் மற்றும் சிவ பார்வதி திருக்கல்யாண சுதை சிற்பங்கள் இக்கோபுரத்தின் முன் பக்கத்தை அலங்கரிக்கின்றன. எச்செயலையும் செய்வதற்கு முன்னர் விநாயகரையும் நிறைவு செய்கின்ற போது இராமபக்த அனுமனையும் வணங்க வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் வாசலுக்கு இடதுபுறம் விநாயகர் சன்னதியும் வலது புறம் அனுமார் சன்னதியும் வடக்கு நோக்கி அமைந்திருக்கின்றன. பெருமாளின் வைகுண்ட வாசலும் இக்கோபுரத்தில் தனியாக அமைந்துள்ளது. வாயிலுக்கு எதிரே இராஜ நந்தியெம்பெருமான் வீற்றிருக்கும் நந்தி மண்டபம் உள்ளது. நந்தி தெற்கு நோக்கி உள்ளது.

உள்ளே நுழைந்தால் கோபுரத்தின் தெற்கு முகத்தில் நடராஜர் மற்றும் தென்முகக்கடவுள் (தக்ஷிணாமூர்த்தி) பல்வேறு சுதை சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. இக்கோபுரத்தை ஒட்டி உட்புறம் இருபுறமும் விநாயகருக்கும் முத்துக்குமாரசாமிக்கும் தனி திருச்சன்னதிகள் உள்ளன. சங்கம விநாயகர் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இச்சன்னதியின் முன் மண்டபத்தில் புருஷாமிருகம் சிவபெருமானை பூஜிக்கும் சிற்பத்தைக் காணலாம். எதிரே முத்துக்குமாரசுவாமி சன்னதி மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கிழக்கு நோக்கி சுவாமி, அம்பாள், பெருமாள் சன்னதிகள் அமைந்துள்ளன. இரத சப்தமிக்கு மறு நாள் சுவாமி, அம்பாள் மற்றும் முருகர் மூவரையும் சூரியன் தனது கதிர்களினால் வணங்குகிறார்.

சுவாமி, முருகர், அம்பாள், பெருமாள் அனைவரும் ஆற்றை நோக்கியவாறு அருள் பாலிக்கின்றனர் என்பது சிறப்பு. அடுத்து காணப்படுவது ஆதிகேசவப் பெருமாள் சன்னதி, கருவறையில் நின்ற கோலத்தில் உபய நாச்சியார்களுடன் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலத்துடன் சேவை சாதிக்கின்றார். இவருக்கு வலது பக்கம் சௌந்தரவல்லித் தாயார், சந்தான கோபாலகிருஷ்ணன் சன்னதிகளும், இடதுபுறம் வேணுகோபால கிருஷ்ணன் சன்னத தெற்கு நோக்கியிருக்கின்றது. தாயார் சன்னதியின் ஒரு தூணில் கோதண்டராமர் திருவுருவம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. மற்றொரு தூணில் சீதாராமர் அமர்ந்த கோலம். அவர் திருவடிகளின் அருகில் அனுமன் வலது கையில் வீணையும் இடது கையில் தாளக் கட்டைகளுடன் பஜனை செய்யும் காட்சி உள்ளது

. அடுத்து கல்லில் புலிக்காலும் யானை முகமும் படைத்த ஒரு உருவம் கையில் வீணையுடன் காட்சியளிக்கின்றது. ஸ்ரீவேணுகோபாலர் சன்னதிக்குப் பின்புறத்தில் பசுவின் சிற்பம் உள்ளது. இப்பசுவின் முன்பகுதியிலும், பின்பகுதியிலுமாக இரண்டு தலைகள் அமைந்திருக்கின்றன. பெருமாளுக்கும் தாயாருக்கும் நடுவே ஸ்ரீயோக நரசிம்மர் ஸ்ரீலட்சுமியுடன் சாந்த சொரூபமாகக் காட்சி தருகிறார். இவரை வணங்கினால், சகல யோகங்களும் கைகூடும் என்பது ஐதீகம். பெருமாளுக்கு தனி கொடிமரம் மட்டுமல்ல, தனி நான்கு கால் மண்டபத்துடன் கூடிய விளக்கு கம்பமும் உள்ளது. இவ்வாறு இத்தலத்தில் இரண்டு கொடிமரம், விளக்கு தூண் அமைந்துள்ளது சிறப்பு.



அம்பாள் முன் மண்டபத்தின் ஒரு தூண்

பெருமாள் கோயிலுக்குச் சற்று தெற்கே அழகிய வேலைப்பாடுடன் அமைந்த லட்சுமி நரசிம்மர் வீற்றிருக்கும் சன்னதி உள்ளது. அதற்கும் தெற்காக விஸ்வநாதர் விசாலாட்சியின் கிழக்கு பார்த்த தனி சன்னதிகள் அமைந்துள்ளன. மேலும், தெற்காக ஜோதிர்லிங்கம் சன்னதி, இதற்கடுத்து வேதநாயகியம்பிகை சன்னதியும் உள்ளது.

வேதநாயகி அம்பாளை தரிசிப்பதற்கு முன்னர் அவள் வெள்ளையருக்கும் அருளிய கருணைத் திறத்தை முதலில் சிந்திக்கலாம் அன்பர்களே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வில்லியம் காரோ (William Garrow) என்ற கலெக்டர் கோயிலின் வடக்குக் கோபுர வாயிலின் அருகே மாளிகையொன்று கட்டி அதில் வசித்து வந்தார். திடீரென்று ஒரு நாள் அவர் கனவில் சிற்றாடை இடை அணிந்த ஒரு சின்னஞ்சிறு பெண் ஒருத்தி வந்து படுத்திருந்த கலெக்டரை வெளியே செல்லுமாறு சொல்ல, அவரும் அப்படியே செய்தார். அடுத்த நிமிடம் படுக்கை அறைக்கு மேல் இருந்த மேற்கூரை இடிந்து விழுந்துவிட்டது. வேதநாயகியம்மனே தன்னைக் காப்பாற்றியதாக எண்ணி அளவு கடந்த பக்தி கொண்டு அதை வெளிப்படுத்தும் வகையில் பள்ளியறையில் ஒரு தந்தக் கட்டில் செய்து உபயம் செய்தார். அதில் "பவானி கூடல் சங்கமேஸ்வரர் வேதநாயகியம்மனுக்கு வில்லியம் காரோ துரை மகனார் அளித்தது" என்று தமிழிலிலும், "W.Garrow, 1804" என்று ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது. இன்றும் பள்ளி அறையில் இந்நிகழ்வுக்கு சான்றாக இக்கட்டில் உள்ளது. கலெக்டர் வசித்த கட்டிடம் தற்போது பயணிகள் விடுதியாக மாறி அவரை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. இந்து ஆலயங்களில் மற்ற மதத்தவர்களுக்கு அனுமதி இல்லை என்ற காரணத்தினால் கலெக்டர் நாள்தோறும் வேதநாயகி அம்மனை தரிசிப்பதற்காக சன்னதிக்கு நேர் எதிரே மதில் சுவற்றில் மூன்று துவாரங்கள் செய்து அதன் மூலம் அம்பிகையை தினமும் தரிசித்து வந்தார். அம்மூன்று துவாரங்கள் மதில் சுவற்றில் இன்றும் காணப்படுகின்றன.

அம்மனின் சன்னதி ஒரு கலைக்கூடம், மஹா மண்டபத்தில் 12 தூண்கள் மிகவும் வழுவழுப்பாக அமைந்துள்ளது, நுழைவுத் தூண்களில் உள்ள கற்சிற்பங்கள் மிகவும் அருமையாக செதுக்கியுள்ளார் சிற்பி. குதிரை வீரனின் ஒவ்வொரு நுணுக்கமும் அச்சிலைகளில் காணலாம். அம்மன் சன்னதி தூணில் உள்ள அழகிய ஒரு பெண் உருவத்தின் தலையில் தண்ணீரைக் கொட்டினால் அது சிரிப்பது போல் காட்சியளிக்கிறது, எனவே அதை சிரிக்கும் சிலை என்று சொல்கின்றனர். மஹா மண்டபத்தின் கூரையில் அமைந்துள்ள பிரதோஷ நாட்டிய சிற்பத்தொகுதி மிகவும் அருமை. விஷ்ணு மத்தளம் வாசிக்க நந்தியெம்பெருமான் மற்றும் பூத கணங்களும் ஆட, கந்தவர்கள் இசை பாட, அரம்பையர்கள் உடன் ஆட ,

மானாட மழுவாட மதியாட புனலாட மங்கை சிவகாமியாட,
மாலாட நூலாட மறையாட திறையாட மறைதந்த பிரம்மனாட,
கோனாட வானுலகு கூட்டமெல்லாமாட, குஞ்சர முகத்தனாட,
குண்டலமிரண்டாட தண்டைபுலியுடையாட குழந்தை முருகேசனாட,
ஞானசம்பந்தரொடு இந்திராதி பதினெட்டு முனியட்ட பாலகருமாட,
நுரை தும்பை யறுகாட நந்திவாகனமாட நாட்டியப் பெண்களாட,
வினை ஓட உனைப்பாட எனை நாடி யிதுவேளை விருதோடு ஆடிவருவாய்

ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற தில்லைவாழ் நடராசனே. என்ற பாடலில் உள்ளது போல் அனைத்தையும் கல்லில் வடித்துள்ளனர். இம்மண்டபத்தை அற்புதமான தஞ்சாவூர் பாணி ஓவியங்கள் அலங்கரிக்கின்றன.



வேதங்களுக்கெல்லாம் தலைவியாக விளங்குவதாலும், சதுர் வேதங்களும் பூசித்ததாலும் வேதநாயகி என்றழைக்கப்படுகின்ற அம்பாளை தரிசிக்கின்றோம். அருணகிரிநாதர் குறட்டி திருப்புகழில்

நாரணி யறத்தி னாரி ஆறுசம யத்திபூத
நாயக ரிடத்து காமி
நாடக நடத்தி கோல நீலவரு ணத்தி வேத
நாயகி யுமைச்சி நீலி .......... அம்பாளைப் பாடியுள்ளார்.

நான்கு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் எழிலார் புன்னகையுடன் அருள் புரிகின்றாள் பவானி அம்மன். கீழ் திருக்கரங்கள் அபய வரதமாகவும், மேல் திருக்கரங்களில் மலர் ஏந்தியும் அருள் பாலிக்கின்றாள் அன்னை. பண்ணார் மொழியம்மனின் அருள் கனிந்த திருமுகம் பார்க்கப் பரவசமாக உள்ளது. கொங்குநாட்டுத் தலங்கள் அனைத்திலும் அம்பாளுக்கு திருவாசி உள்ளது போல இத்தலத்திலும் உள்ளது. அம்பாளுக்கு உள்ள ஆயிரம் நாமங்களில் ஒன்று "அவ்யாஜ கருணா மூர்த்தி", வ்யாஜம் என்றால் காரணம். எனவே அவ்யாஜம் என்றால் எவ்வித காரணமும் இல்லாமை. இவ்வம்பிகையும் ஒரு காரணமும் இல்லாமல் ஒருவரின் உயிரைக் காப்பாற்றுகின்றாள் என்றால் அவளது கருணையை என்னவென்று சொல்ல. அம்பாளை தரிசிக்கும் உடல் சிலிர்க்கின்றது. அம்பிகையை

சகல செல்வங்களும் தரும் இமயகிரிராஜ
தனயை மாதேவி! நின்னைச்
சத்யமாய் நித்ய முள்ளத்தில் துதிக்கும் உத்
தமருக்கு இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்வி தனதானியம்
அழகு புகழ் பெருமை இளமை
அறிவுசந்தானம் வலிதுணிவு வாழ்நாள் வெற்றி
ஆகு நல்லூழ் நுகர்ச்சி
தொகைதரும் பதினாறு பேறும் தந்தருளி நீ
சுகானந்த வாழ் வளிப்பாய்.
சுகிர்த குணசாலி! பரிபாலி! அனுகூலி! திரி
சூலி! மங்கள விசாலி!
மகவுநான் நீதாய் அளிக்கொணாதோ? மகிமை
வளர்திருக் கடவூரில் (திருநணாவில்) வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமிமகிழ்
வாமி! அபிராமி (பவானி) உமையே!

என்று அனைவருக்கும் அனைத்து செல்வங்களையும் வழங்கி, கொரோனாவிலிருந்து காப்பாற்ற வேண்டிக்கொண்டோம். பின்னர் அம்மன் கருவறையை சுற்றி வந்து பள்ளியறைக்கு வந்து பக்தியுடன் அன்பர் ஒருவர் அளித்த தந்தக் கட்டிலை தரிசித்தோம். . அம்மன் சன்னதியை வெளியே சுற்றி வரும் போது பள்ளியறை அறுகோண வடிவில் அமைந்துள்ளதை கவனித்தோம்.

த்வமர்க: த்வமிந்துஸ் த்வமகபனிஸ்த்வ மாப:
த்வமாகாச பூவாயவஸ்த்வம் மஹத்த்வம் |
த்வதந்யோ ந கஸ்சித் ப்ரபஞ்சோஸ்தி ஸர்வம்
த்வமானந்தஸம் வித்ஸ்வரூபாம் பஜேவுஹம் ||

சூரியன, சந்திரன்ஂ,அகனி எனும் முச்சுடரகவும், ஆகாயம், பூமி, வாயு,, நீர் எனும் பஞ்சபூதங்களாகவும், மஹத்தாகவும்,இப்பிரபஞ்சமாகவும். ஆனந்த ஞானசொரூபமாகவும் திகழும் பவானி அன்னையை தரிசித்த பின்னர் சங்கமரேஸ்வரரை தரிசிக்க சென்றோம்.

ஐயனின் சன்னதி தென் கோடியில் உள்ளது. அவருக்கு முன்னர் கொடி மரமும், நான்கு கால் மண்டபத்துடன் கூடிய விளக்குத்தூணும் அமைந்துள்ளது. ஒரு பிரகாரத்துடன் அமைந்துள்ளது ஐயனின் சன்னதி. மூலவர் சுயம்பு லிங்கம் கிழக்கு நோக்கி அருள் பாலிக்கிறார். அவரை

முத்தேர் நகையா ளிடமாகத் தம்மார்பில் வெண்ணூல்பூண்டு
தொத்தேர் மலர்சடையில் வைத்தா ரிடம்போலுஞ் சோலைசூழ்ந்த
அத்தே னளியுண் களியா லிசைமுரல ஆலத்தும்பி
தெத்தே யெனமுரலக் கேட்டார் வினைகெடுக்குந் திருநணாவே.

பொருள் : முத்துப் போன்ற பற்களை உடைய உமையம்மை ஒருபாகமாக விளங்கத் தம் மார்பில் வெண்ணூல் பூண்டு பூங்கொத்துக்களைச் சடைமிசை சூடியுள்ள சிவபிரானது இடம், சோலைகளில் சூழ்ந்த வண்டுகள் தேனுண்ணும் விருப்பினால் இசைபாடி ஆட, தும்பிகள் `தெத்தே` என்ற ஒலிக்குறிப்போடு முரல விளங்கும் அழகுடையதுமான திருநணா என்னும் பெயர் சொல்லக் கேட்டார் வினைகள் கெடும் என்ற சம்பந்தரின் பாடல் பாடி வணங்கினோம்.

பிரகாரத்தின் தென் கிழக்கு மூலையில் பஞ்ச மூர்த்திகள் மற்றும் அறுபத்து மூவரின் உற்சவ மூர்த்தங்கள் கொலு அமைப்பில் அருமையாக அமைத்துள்ளனர். அடுத்து அறுபத்து மூவரின் மூல மூர்த்தங்கள் வரிசையாக உள்ளன. கோஷ்டத்தில் , கூத்தாடும் கணபதி, தக்ஷிணாமூர்த்தி சிறிய கல்லால மரம் அவருக்கு தலைப்பாகை போல விளங்குகின்றது, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை அருள் பாலிக்கின்றனர். சப்த மாதர்களின் சன்னதி இத்தலத்தின் தொன்மையை நமக்கு உணர்த்துகின்றது.

ஐயனுக்கு பின் புறம் விநாயகர், முருகன் தேவியர் இருவருடன் அருள் பாலிக்கும் சன்னதிகள் மற்றும் பஞ்ச லிங்கங்களின் சன்னதிகள் உள்ளன. வடக்கு பிரகாரத்தில் பைரவர் மற்றும் நவகிரக சன்னதி அமைந்துள்ளன.

அடுத்து வெளிப்பிரகாரம் வலம் வந்தோம் தல விருட்சமான இலந்தை மரம். வேதமே மரவடிவெடுத்து வந்திருப்பதாக மரபு. மரத்தினடியில் பத்ரி விநாயகரும், புராதான குபேர லிங்கமும் அருள் பாலிக்கின்றனர். இம்மரம் இன்றும் கனிகளை கொடுக்கின்றது. இறைவனை வேண்டி இக்கனியை உண்டால் மகப்பேறு கிடைக்கும் என்பதும் நம்பிக்கை.

இதற்கு தெற்கே சனீஸ்வரர் சன்னதி, அடுத்து ஜுரஹரேசர் சன்னதி உள்ளது. மூன்று கால்கள், மூன்று கைகள், மூன்று தலைகளுடன் நடனக் கோலத்தில் காட்சியளிக்கின்றார். இவரை வழிபட்டால் தீராத நோயும் சரியாகும் என்பது ஐதீகம். இவருக்குச் செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில் மிளகு ரசம், அரைக்கீரை, சுண்டல் படைக்கப்படுகின்றன. காய்ச்சல், தோல் வியாதி, மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், ஜுரஹரேஸ்வரர் சன்னதியில் அபிஷேகம் செய்து, மிளகு ரச சாதத்துடன், அரைக்கீரை கூட்டு நைவேத்தியம் செய்தால் உரிய நிவாரணத்தை பெறலாம். வாயு சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு வில்வத்தால் அர்ச்சித்து அதனை உணவில் சேர்த்தால் நலம் பெறுவார் என்ற நம்பிக்கையும் உள்ளது. திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வருகை தந்தபோது அவருடைய அடியார்களை சுரநோய் பீடிக்க, இங்குள்ள ஜ்வரஹரேஸ்வரரை வழிபட்டு அவர்கள் நோய் நீங்கப் பெற்றார்கள் என கூறப்படுகிறது.




அடுத்து தெற்கே கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் ஆறுமுகர் சன்னதியில் முருகன் மயில் மேலும், வள்ளி, தெய்வானை இருபுறம் இருக்கின்றனர். ஐயன் மற்றும் அம்மன் சன்னதிக்கிடையில் சோமாஸ்கந்தாமைப்பில் அமைந்துள்ளது சிறப்பு. இவரை அருணகிரிநாதர் திருப்புகழில் இவ்வாறு பாடியுள்ளார்.

கலைமேவு ஞானப் பிரகாசக் கடலாடி ஆசைக் ...... கடலேறிப்
பலமாய வாதிற் பிறழாதே பதிஞான வாழ்வைத் ...... தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின் மனமேவு வாலக் ...... குமரேசா
சிலைவேட சேவற் கொடியோனே திருவாணி கூடற் ...... பெருமாளே.

பொருள்: சகல கலைகளையும் கற்று ஞான ஒளியாகிய கடலிலே திளைத்துக் குளித்து, மண், பெண், பொன் என்ற மூவாசைகளாம் கடல்களை நீந்திக் கடந்து, மாய சமய வாதங்களில் நான் மாறுபட்டுக் கிடக்காமல், இறைவனைப் பற்றிய சிவ ஞானவாழ்வைத் தந்தருள்வாயாக. வள்ளிமலையிலே வாழ்ந்த, ஆச்சரியத் தோற்றம் கொண்ட, குறப்பெண்ணாம் வள்ளியின் மனத்திலே வீற்றிருக்கும் இளைஞனாம் குமரேசனே, வள்ளிக்காக வில்லைக் கையில் ஏந்திய வேடன் உருவில் வந்தவனே, சேவற் கொடியை திருக்கரத்தில் கொண்டவனே, (திருவாணி

) லக்ஷ்மியும் சரஸ்வதியும் (செல்வமும், கல்வியும்) ஒருங்கே கூடும் கூடற்பதியாகிய பவானியில் வாழும் பெருமாளே.

அடுத்திருப்பது சனீஸ்வரர் சன்னதி. மாந்தி தோஷம், குளிகன் சாந்தி தோஷம் உள்ளவர்கள் மாந்தி கிரகத்தின் ரூபத்தில் தனி சன்னதியில் வீற்றிருக்கும் இச்சனி பகவானை வழிபட்டால் தோஷம் நீங்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது.

மற்ற கோவில்களில் இருப்பது போல் இக்கோயிலில் கல்வெட்டுக்கள் அதிகம் இல்லை. பவானி சங்கமேஸ்வரர் கோயிலைப்பற்றி திருஞானசம்பந்தர் தேவாரத்தில் 11 பாடல்களையும், அருணகிரிநாதர் ஒரு திருப்புகழ் பாடலையும், செட்டிப்பாளையம் வாசுதேவ முதலியார் "பவானி கூடற்புராணம்" எனும் செய்யுள் நூலையும், தமிழாசிரியர் கு. குமாரசாமிப் பிள்ளை "பவானி கூடற்புராண வசனம்" எனும் உரை நடை நூலையும் எழுதியிருக்கின்றனர். முகவூர் கந்தசாமி கவிராயர் "வேதநாயகியம்மன் பிள்ளைத் தமிழ்" என்ற நூலையும், கோவை C.K. நாராயணசாமி முதலியார் "பவானி திருத்தல வரலாறு" என்ற ஆராய்ச்சி நூலையும் எழுதியிருக்கின்றனர்.

**பரிகாரத்தலம் :** பவானி கூடுதுறையில் மூழ்கினால் எக்காலத்திலும் பயன் கிடைக்கும். ஆயினும், ஆடி 18, புரட்டாசி அமாவாசை, தை அமாவாசை தினங்கள் கூடுதல் சிறப்பு. அதேபோல, சிவராத்திரியன்றும் ஏராளமான பக்தர்கள் நீராடுகின்றனர். மறைந்த முன்னோருக்கு அமாவாசை நாட்களில் கூடுதுறையில் தர்ப்பணம் செய்வதற்கும், பிண்டம் கொடுப்பதற்கும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றனர். ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையான அனைத்து தோஷங்களுக்கும் பரிகாரம் செய்ய சிறந்த தலம். எனவே நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் பக்தர்கள், பவானியில் அனைத்து தோஷங்களுக்கும் பரிகாரம் செய்கின்றனர். இறந்தவர்களின் அஸ்தியை இங்கு கரைப்பதும் பெருகி வருகிறது. நீண்ட ஆயுளுக்கும், திருமணத்தடை நீங்கவும், இங்கு வழிபடுகின்றனர். குழந்தை பாக்கியம் வேண்டுவோர், கூடுதுறையில் நீராடி, விநாயகரையும், சங்கமேஸ்வரரையும் வழிபட்டு, இங்குள்ள இலந்தைப் பழங்களை சாப்பிட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது ஐதீகம். அகால மரணம் அடைந்தவர்களுக்கு பவானியில் ' நாராயண பலி' பூஜை செய்யப்படுகிறது. நாகதோஷம் உள்ளவர்கள் கல்லில் செய்த நாகரைக் கொண்டு வந்து, ஆற்றின் கரையில் உள்ள விநாயகர் அருகே பிரதிஷ்டை செய்தால் தோஷம் நீங்கும் என்றும், செவ்வாய் தோஷம் உள்ள ஆண்கள், வாழை மரத்துக்கு தாலி கட்டி , அதை ஆற்றில் விடுவதும், பெண்கள் அரசங்கொத்துக்கு பூஜை செய்து ஆற்றில் விடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

**திருவிழாக்கள்** : இத்தலத்தில் தினமும் ஆறு கால பூசை நடைபெறுகின்றது. மார்கழி, தை மாதங்களில் பவானித் திருமுறைக் கழகத்தினரால் பன்னிரு திருமுறை விழாவும், மார்கழி பஜனையும் நடைபெறுகின்றன. வைகுண்ட ஏகாதசி, சிவராத்திரி, சூரசம்ஹாரம், கார்த்திகை தீபம் போன்ற விழாக்கள்


கொண்டாடப்பட்டாலும், ஆடிப் பதினெட்டுப் பெருக்குத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சித்திரை மாதத்தில் பிரம்மோற்சவம் 13 நாட்கள் தேரோட்டத்துடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்வாலயம் காலை 6 மணி முதல் பகல் 1 வரையிலும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் திறந்திருக்கும். பக்தர்கள் தங்கி தரிசிக்க கோவில் நிர்வாகம் சார்பில் 16 அறைகள் உள்ளன. இவ்வாறு சிறிது நேரம் காத்திருந்தாலும் பவானியில் தரிசனத்தை சிறப்பாக நிறைவு செய்தோம்.

**ஒரு கொசுறு செய்தி :**

ஸ்ரீமஹா பெரியவா காலத்தில் திருமண வயதுடைய பெண் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்தாலும் அல்லது அதிக பெண் குழந்தைகளைப் பெற்றவர்கள் நெற்றியில் கவலை ரேகைகள் படர எதிரில் வந்து நிற்கும்போதும் அவர் குங்குமத்தை பவானி அம்மன் படத்தில் வைத்து கொடுப்பார். அப்படி அவர் திருக்கரங்களால் கொடுக்கப்பட்ட பவானி அம்மன் படம் தான் நீங்கள் காண்பது.

நான்கு, ஐந்து பெண்களைப் பெற்றவர்கள் கூட , பெண்களுக்கு வெகு விரைவில் திருமணங்கள் நடத்தி முடித்து தங்களுடைய பெண்குழந்தைகளுக்கு அந்தப் படத்தை கொடுத்து விட்டுச் சென்றார்கள், அப்பெண்மணிகள் தங்களுடைய பெண் குழந்தைகளுக்கு அப்படத்தைப் பூஜித்து காலாகாலத்தில் திருமணத்தை முடித்து விட்டார்கள் . அவர் திருக்கரங்களால் அளிக்கப்பட்ட பவானி அம்மன் படம் இன்று மூன்று தலைமுறைகளை தாண்டி அருளாட்சி செய்து கொண்டிருக்கிறது.

இன்றைக்கும் சில குடும்பங்களில் கடவுள் நம்பிக்கை, தாய் தந்தையர்கள் காட்டும் வழியில் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொண்ட இந்த பெண்மணிகள் இன்று 60, 70 வருடங்கள் என்று தங்கள் தாம்பத்திய வாழ்க்கையை அமோகமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மூத்த தம்பதிகளின் ஆசிர்வாதமும் , செய்த நற்காரியங்களின் புண்ணிய பலமும் சேரும்போது தாம்பத்தியம் சிறக்கின்றது




ஸ்ரீ மஹா பெரியவாள் அருளிய திருமண வரம் தரும் பவானி அம்மன் படம்.

திருமண வரம் வேண்டும் பெற்றோர்களும் குழந்தைகளும் இந்த படத்தை வைத்து வணங்க திருமண பாக்கியமும் தொடர்ந்து வணங்க மழலை செல்வமும் பின் நல்ல இல்லறமும் அமையும்.

கற்பூர கௌரம் கருணாவதாரம்

சம்சார சாரம் புஜஹேந்திர ஹாரம் |

சதா வசந்தம் ஹ்ருத்யாரவிந்தம்

பவம் பவானி சகிதம் நமாமி ||

பொருள்: கற்பூரம் போன்று வெண்மையானவரும், கருணையே வடிவானவரும், பிரபஞ்சத்தின் சாரமானவரும், நாகங்களின் அரசன் வாசுகியை ஆபரணமாக அணிந்தவரும், சதா சர்வ காலமும் அடியேனது இதயக் கமலத்தில் வாசம் செய்பவரும், பவானி அம்பாளுடன் கூடிய சாம்ப பரமேஸ்வரரை வணங்குகின்றேன் என்ற யஜூர் வேத மங்கல ஸ்தோத்திரம் கூறி பவானி அம்மன் உடனுறை சங்கமேஸ்வரரை வணங்கி விடைபெற்று அம்பாளுடன் சாம்ப பரமேஸ்வரராக ஐயன் அருள் பாலிக்கும் திருச்செங்கோடு தலத்தில் அம்மையப்பரை தரிசிக்கலாம் வாருங்கள் அன்பர்களே.

# 10 திருச்செங்கோடு மாதொருபாகர் தரிசனம்



இக்கொங்கேழ் தலங்களின் யாத்திரையின் மூன்றாம் நாள் அதிகாலை எழுந்து திருச்செங்கோட்டில் மாதொரு பாகரையும், செங்கோட்டு வேலவரையும் தரிசிக்கச் சென்றோம். திருச்செங்கோட்டில் வந்து தங்கியதால் அன்றைய தினம் மதியத்திற்குள் திருச்செங்கோடு, நாமக்கல், தாராமங்கலம், அயோத்தியாபட்டினம் தரிசித்து இரவுக்குள் சென்னை திரும்பவும் முடிந்தது. வாருங்கள் முதலில் திருச்செங்கோட்டை தரிசிக்கலாம் அன்பர்களே.

ஈங்கோய்மலை, மற்றும் கொடுமுடியில் நாம் கண்ட அதே வரலாறுதான் இம்மலை தோன்றியதற்கான வரலாறு ஆகும். தேவர்கள் எல்லாம் இரதமாகவும், பிரம்மன் சாரதியாகவும், மேரு மலை வில்லாகவும், வாசுகி நாணாகவும், மஹா விஷ்ணு அம்பாகவும், அக்னி தேவன் அம்பு முனையாகவும், வாயுவே விசையாகவும், விளங்க, திரிபுர அசுரர்களை அழிக்கப் புறப்பட்டு தன் புன்சிரிப்பால் திரிபுரங்களை அழித்தார். அதற்கு பின் ஒரு சமயம் ஆதிசேஷனுக்கும், வாயுவுக்கும் தங்களில் யார் பெரியவர் என போட்டி வந்தது. ஆதிசேஷன் தனது

ஆயிரம் படங்களால் மேரு மலையை இறுக சுற்றிக்கொண்டார். வாயுபகவான் தன் பலத்தை நிரூபிக்க சகல அண்டங்களும் குலைய, மலைகள் நிலை குலைய, நட்சத்திரங்கள் உதிர, பூமி அதிர சண்டமாருதமாக வீசினான். சகல உயிரினங்களும் படும் துன்பத்தை கண்டு இரக்கம் கொண்ட முனிவர்கள் அனந்தனிடம் வேண்டிக் கொள்ள அவன் ஒரு சிகரத்தை பற்றியிருந்த ஒரு படத்தை சற்றே தளர்த்தினான். எனவே வாயு அச்சிகரத்தை பெயர்த்தெறிந்தான். பறந்த அச்சிகரம் மூன்று துண்டுகளாகி மூன்று இடங்களில் விழுந்தன. அவையாவன தெற்கு சமுத்திரத்தில் விழுந்த துண்டு இலங்கை தீவானது, இரண்டாவது துண்டு திருகோணமலையானது. மூன்றாவது துண்டானது நாவலந்தீவில், தெற்கு திசையில் மூவேந்தர்களில் முதன்மையானவர்களான, சேரர்களின் கொங்கு தேசத்தில் அனந்தனின் ஒரு படத்துடன் செம்மலையாக விழுந்தது. அது திருச்செங்கோடு, நாககிரியாக விளங்குகிறது. இம்மலைக்கு பிரளய காலத்திலும் அழிவில்லை என்று தலபுராணம் கூறுகிறது.

இக்கோவில் ஈரோட்டிலிருந்து 20 கி.மீ. தொலைவிலும், சேலத்திலிருந்து 45 கி.மீ.தொலைவிலும் அமைந்துள்ளது. அருகில் உள்ள தொடர்வண்டி நிலையம் சென்னை – கோயமுத்தூர் இருப்புப் பாதையில் உள்ள சங்ககிரி துர்க்கம் ஆகும்.

மலையின் அடிவாரத்தில் பரிமளவல்லி அம்பாள் (சுகந்த குந்தளாம்பிகை) உடனுறை கயிலாசநாதர் ஆலயம் உள்ளது. இவர் நிலத்தம்பிரான் என்றழைக்கப்படுகின்றார். திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோவில், தேவாரம் பாடல் பெற்ற தலங்களில் 211வது தலம். கொங்கு நாட்டு தலங்களில் நான்காவது சிவத்தலமாகும். திருஞானசம்பந்தர் இரு பதிகங்கள் பாடியுள்ளார். தேவாரப் பதிகங்களில் 'கொடிமாடச் செங்குன்றூர்' என்று பாடப்பெற்ற சிவ தலம், தற்போது 'திருச்செங்கோடு' என்று அழைக்கப்படுகிறது. இறைவனுக்கு அர்த்தநாரீஸ்வரர் என்றும், மலைத்தம்பிரான் என்றும் அம்பாளுக்கு பாகம்பிரியாள் என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. செங்கோட்டு வேலவர் எனப்படும் முருகனுக்கு தனி சன்னிதி அமைந்துள்ளது.




கோடு என்றால் மலை என்றும் மலையுச்சி என்றும் அர்த்தம். செங்கோடு, செங்குன்றம், செம்மலை, தெய்வத்திருமலை என பல பெயர்களுடன் திகழ்கிறது திருச்செங்கோடு. செவ்வண்ணக் கல்லால் அமைந்த செங்கோட்டு மலை என்று அறியலாம்.

சம்பந்தர், கபிலதேவ நாயனார், பட்டினத்துப் பிள்ளையார், சேக்கிழார் ஆகியோர் இத்தலத்தைப் பாடியுள்ளனர். இத்தலம் பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரம், தேவாரம், கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம் முதலியவைகளில் உள்ளன. இத்தலத்திற்கு வீரகவிராஜபண்டிதரால் பாடப்பட்ட தலபுராணம் உள்ளது. இனி இத்தலத்தின் தனி சிறப்புகள் சிலவற்றைப் பற்றிக்காணலாம் அன்பர்களே.

சீர்கெழு செந்திலும், செங்கோடும், வெண்குன்றும் என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் போற்றிய இத்தலம் கொங்கேழ் தலங்களில் மலை மேல் அமைந்த ஒரே சிவத்தலம்.

தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!

என்று மாணிக்கவாசகர் திருக்கோத்தும்பியில் பாடியபடி மாதொருபாகராய் சிவபெருமான் அருள் பாலிக்கும் தலம். மூலவர் அர்த்தநாரீஸ்வரர் வெண்பாஷணத்தால் ஆன சுயம்பு திருமேனி கொண்டு அருள்பாலிக்கிறார். சிவபெருமான் மட்டுமல்ல அவரது அம்சமான முருகரும் செங்கோட்டு வேலவராக அருள் பாலிக்கின்றார். சைவ-வைணவ ஒற்றுமைக்கு இலக்கணமாக

ஆதிகேசவராக பெருமாளும் உடன் அருள் பாலிக்கின்றார். நாக தோஷ பரிகாரத்தலம். சிவபெருமான் மதுரையில் திருவிளையாடல் புரிந்தது போல் முருகப்பெருமான் திருவிளையாடல் புரிந்த தலம். மதுரையில் கல் யானை கரும்பு உண்டது போல இத்தலத்தில் நந்தி கடலை உண்டதாம். ஆளுடையப்பிள்ளையார் பதிகம்பாடி அன்பர்கள் விஷ சுரம் தீர்த்த தலம். எம்பெருமானையே விலக்கிய விறன்மிண்ட நாயனாரின் அவதாரத் தலம்.

அர்த்தநாரீஸ்வரர் என்ற பெயரில், அர்த்தம் என்றால் பாதி என்று பொருள்; நாரி என்றால் பெண் என்று பொருள். சிவன் பாதி, பார்வதி பாதி என்று ஆணுருவம், பெண்ணுருவம் இணைந்து இருப்பதால் அர்த்தநாரி + ஈஸ்வரர் (சிவன்) என்பது அர்த்தநாரீஸ்வரர் என்ற பெயர் கொண்டது.

அர்த்தநாரீஸ்வரர் எனும் பெயர் மட்டுமின்றி வேறு சில பெயர்களும் இருக்கின்றன. 1) உமையொரு பங்கன் 2) மங்கையொரு பாகன் 3) மாதொரு பாகன், என இம்மூன்று பெயர்களாலும் கூட அர்த்தநாரீஸ்வரர் அழைக்கப்படுகிறார்.

சிவனின்றி சக்தியில்லை, சக்தியின்றி சிவனில்லை என்பதை விளக்கும் உருவமாக திகழ்கிறது அர்த்தநாரீஸ்வரர் உருவம். வாழ்வியலில், ஆணின்றி பெண்ணும், பெண்ணின்றி ஆணும் சாத்தியமில்லை என்ற பொருளையும் தருகிறது அர்த்தநாரீஸ்வரர் மூர்த்தம்.

காஞ்சி கைலாசநாதர் கோயிலில் இருக்கும் அர்த்தநாரீஸ்வரர் வடிவமே தென்னிந்தியாவிலேயே காணப்படும் பழைய வடிவங்களில் ஒன்று எனக் கூறப்படுகிறது. இங்கு பார்வதி வீணையுடனும், சிவன் காளையில் ஏறி அமர்ந்திருக்கும் கோலத்தில் காணப்படுகிறார்கள். மாணிக்கவாசகர் அம்மையப்பரை

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி – என்று பாடியுள்ளார்.

காவிரிக்கரையிலுள்ள பெரும்பாலான திருத்தலங்களில் லிங்கோற்பவரைப் போன்று கருவறை பின் சுவற்றிலோ, துர்க்கை போல பக்கச்சுவற்றிலோ மாதொரு பாகரை எழுந்தருளியுள்ளார்.

இத்திருச்செங்கோடு தலத்தில் மூலவராக அமைந்திருக்கிறார் அர்த்தநாரீஸ்வரர். இங்கு உமாதேவியாருக்கு அர்த்தநாரீஸ்வரி, பாகம்பிரியாள் என்ற பெயர்களும் இருக்கின்றன. இங்கு அர்த்தநாரீஸ்வரர் மாதொருபாகன் என்றும் அழைக்கப்படுகிறார்.

அம்மை சிவபெருமானின் திருமேனியில் பாகம் பெற்றதால் பாகாயி என்றனர். இச்சொல்லே மருவி பாவாயி என வழங்குகிறது. இறைவனை குல தெய்வமாக கொண்டவர்கள் தங்கள் ஆண் குழந்தைகளுக்கு அர்த்தநாரீ என்றும் பெண் பிள்ளைகளுக்கு பாவாயி என்றும் பெயரிடும் சம்பிரதாயம் உண்டு.



இனி அர்த்தநாரீஸ்வரராக எம்பெருமான் எழுந்தருளியதற்கான காரணம் என்ன என்று காணலாம். ஒரு சமயம் கயிலை மலை மீது பார்வதி தேவியுடன், சிவபெருமான் அமர்ந்திருந்தார். அப்பொழுது சிவனைக் தரிசிக்க வந்த பிருங்கி முனிவர் வண்டு வடிவம் எடுத்து அம்மையை விலக்கி சிவனை மட்டும் வணங்கி வலம் வந்தார். ஆனால் பார்வதி தேவியை வணங்கவில்லை. அதனால் பார்வதி தேவி கோபமடைந்தார். சினம் கொண்ட பார்வதி தேவி பிருங்கியின் உடலில் உள்ள சதை மற்றும் இரத்தம் நீங்குமாறு சாபமளித்தார். பிருங்கி முனிவர் சதையும் இரத்தமும் நீங்கி எலும்பு தோல் போர்த்திய உடம்பினைப் பெற்றார். சிவன் அவருடைய தளர்வடைந்த நிலையினைக் கண்டு இரக்கமுற்றார். எனவே பிருங்கி முனிவருக்கு மூன்றாவது காலாக ஊன்று கோலினை அளித்தார். ஊன்று கோலினை பெற்ற முனிவர் மகிழ்ச்சி அடைந்து, சிவனின் முன்பாக நடனம் ஆடி பக்தியைச் செலுத்தினார். இதனைக் கண்ட பார்வதி தேவி மனம் வருந்தி சிவனில் பாதி உருவை அடைய வேண்டும் என்று கருதி சிவனை நோக்கி கேதார கௌரி விரதம் என்ற கடுமையான தவத்தினை மேற்கொண்டார். சிவன் மனமகிழ்ந்து தம்முடலில் பாதியினைத் தருவதாக வரமளித்தார். பார்வதி தேவி இடப்பக்கம் பெற்று சிவனுடன் ஒன்றிணைந்து அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி அளித்தார். பிருங்கி முனிவர் இருவரையும் வணங்க வேண்டிய நிலை ஏற்பட்டு வணங்கினார். திருச்செங்கோட்டில் மூலவரின் பாதத்தின் அருகில் மூன்று

கால்களுடன் பிருங்கி முனிவரையும், கேதார கௌரியாகிய உமையம்மை வழிபட்ட மரகத லிங்கத்தையும் தரிசிக்கலாம்.

மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை நான்கு மணிக்கு இம்மரகத லிங்கத்திற்கு அபிஷேகம் நடைபெறுகின்றது. பின்னர் ஏழு மணி வரை பக்தர்கள் தரிசனம் செய்யலாம்.

மதுரையம்பதிக்கு வந்த ஹேமநாதப் புலவரிடம் விறகு விற்கும் எளியோனாக வந்து, ஈசன் வென்றதைப் போலவே, ஈசனின் மகனான செங்கோட்டு வேலவர், திருச்செங்கோடு நகரின் பெருமையை உலகறியச் செய்ய ஆடிய திருவிளையாடல் பற்றி அடுத்து காணலாம். செங்கோட்டு வேலவரின் மீது தணியாத பக்திகொண்டவர் குணசீலர் என்ற பக்தர். ஒருமுறை திருச்செங்கோட்டுக்கு பாண்டிப்புலவரேறு என்ற அறிஞர் ஒருவர் வருகை புரிந்தார். இவரை வாதில் வெல்வது என்பது முடியாத காரியம். கல்வியில் இமயமான இவரை எதிர்த்து, எல்லாப் பகுதி புலவர்களும் தோற்றனர். இந்நிலையில், அவர் திருச்செங்கோட்டுக்கு வருகை தந்தார். அப்போது அவர், தன்னை எதிர்க்க திருச்செங்கோட்டில் யாருமே இல்லை என்ற நிலையில் கோயிலுக்கு வந்தார். அங்கு, குணசீலர் என்ற முருக பக்தரைச் சந்தித்தார். அவர்களுக்குள் எழுந்த வாதம் இறுதியில் சவாலாக முடிந்தது. குணசீலரை நாளை போட்டிக்கு வர அழைப்பு விடுத்தார் பாண்டிப்புலவரேறு. இது என்ன சோதனை என்று குணசீலன் இரவெல்லாம் செங்கோட்டு வேலவரை வேண்டிக் கொண்டிருந்தார்.

மறுநாள் காலை, போட்டிக்காக பாண்டிப்புலவரேறு மலையின்மீது ஏறிக்கொண்டிருக்கும்போது, நாக மலையைப் பார்த்து "இது சர்ப்ப சைலம் என்றால் ஏன் படமெடுத்து ஆடவில்லை என்று பொருள் வரும் படிப் "சமரமுகத் திருச்செங்கோடு சர்ப்பசயிலமெனில் அமரிற்படம் விரித்து ஆடாததென்னே" என்று பாட ஆரம்பித்தார் ஆனால் அப்பாடலை முடிக்க முடியாமல் திணறினார். எத்தனை யோசித்தும் அடுத்த அடி வரவே இல்லை. அங்கு ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் உடனே, "அஃது குமரன் திருமால் முருகன் மயில்வாகனம் கொத்துமென்றே" - என்று பாடி அவரை வியக்க வைத்தான். ஆடு மேய்க்கும் சிறுவனுக்கு இத்தனை அறிவா? என வியந்து, அவனைப் பற்றிக் கேட்க , அவனோ, தான் குணசீலரின் கடைமாணாக்கன் என்று சொன்னான். புத்தி தெளிந்தது பாண்டிப்புலவரேறு என்னும் புலவருக்கு. வந்திருப்பது முருகன் என்றும், அவனது அருளைப்பெற்ற குணசீலரை எதிர்ப்பது ஆபத்து என்று உணர்ந்தார். குணசீலரிடம் மன்னிப்பு கேட்டு, செங்கோட்டு வேலவரை வணங்கி விடைபெற்றார் அப்புலவர். மலை அடிவாரத்தில் அந்நிகழ்ச்சி நடைபெற்றது. இன்றும் வைகாசிப் பெருவிழாவில் இச்சம்பவம் நினைவு கூறப்படுகிறது.

கோவை மாவட்டத்தில் உள்ள காடாம்பாடி என்ற ஊரைச் சேர்ந்தவர் பாததூளி.
இவரது மனைவி சுந்தரியம்மாள். இத்தம்பதியருக்கு மகப்பேறு வாய்க்கவில்லை.
எனவே அவர்கள் திருச்செங்கோடு உமையொருபாகனை வழிபட்டு உமைபாகன்

எனும் மகனைப் பெற்றனர். உமைபாகனுக்கு 5 வயது ஆகியும் பேசாமல் ஊமையாக இருந்தமையால், தேரோட்டத்தில் கலந்து கொண்டு தேர்க்காலில் மகனை உருட்டிவிட்டனர். உமைபாகன் மீது தேர் ஏறிச் சென்றப் பின்பு அவன் பேசத் தொடங்கினான். இவ்வதிசயத்தின் சாட்சியாக அவ்விடத்தில் மடம் நிறுவி தான, தருமம் செய்து வந்துள்ளனர். அவர்களது மரபில் பிறந்தவர்கள் ஒன்றிணைந்து திருச்செங்கோடு மலை மீது மேற்கு இராஜகோபுரம் அமைத்துத் தந்துள்ளனர். இவ்வரலாற்றை ஒரு கல்லில் பொறித்து இராஜகோபுரத்தின் அருகில் பதித்துள்ளனர்.

ஆதிசேஷனின் இரத்தத்தின் காரணமாக மலை சிவந்த நிறமாக இருப்பதால் செங்கோடு என்று பெயர் பெற்றது என்பது ஐதீகம். செங்கோட்டின் பெரிய மலைமுகடு நாகமலை என்றும், சிறிய முகடு நந்திமலை என்றும் அழைக்கப்படுகிறது. மேலமாட வீதியிலிருந்து பார்த்தால் இம்மலை பார்ப்பதற்கு நாகம் போன்றிருப்பதால் நாகாசலம் நாககிரி என்றும் பெயர் பெற்றது. மேலும் நாகாசலம், நாகமலை, நாககிரி, உரககிரி என்றும் அழைக்கின்றனர். இத்தலம் அமைந்துள்ள மலையானது ஒரு புறம் பார்க்கும் பொழுது ஆணாக தோற்றமளிக்கிறது. வேறு இடத்தில் பெண் போல தோற்றம் அளிக்கிறது.

மலையடிவாரத்தில் இருந்து செல்ல, அதாவது நகரின் நடுப்பகுதியில் இருந்து படிக்கட்டுகள் உள்ளன. அதேபோல், ஊருக்குக் கிழக்கே உள்ள சாலையில் இருந்து மலையுச்சிக்கு வாகனங்களில் செல்வதற்குச் சாலை வசதி உண்டு. கோவில் நிர்வாகத்தாரால் மலை மேல் செல்ல கட்டணச் சிற்றுந்து வசதியும் செய்யப்பட்டுள்ளது. மலை மீதிருந்து பார்த்தால் காவிரி ஆறு, ஊர் முழுவதையும் காணலாம்.

"வெந்த வெண்ணீ றணிந்து விரிநூல் திகழ்மார்பினல்ல
பந்தணவும் விரலாள் ஒரு பாகம் அமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பவரே".

பொருள்: விரிக்கப் பெற்ற பூணுநூல் திகழும் திருமார்பினராய், நன்றாக வெந்த திருவெண்ணீற்றை அணிந்து, பந்து பொருந்திய கைவிரல்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, பூங்கொத்துக்கள் நிறைந்த பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய அழகிய தண்ணளியை உடைய சிவபெருமானைத் தொழுவார் துன்பங்கள் நீங்கப் பெறுவர் என்று ஆளுடையப்பிள்ளையார் உமையொரு பாகராக எம்பெருமான் எழுந்தருளியுள்ள அழகைப் பாடிப் பரவிய இத்தலத்தின்

இறைவர்: அர்த்தநாரீஸ்வரர். (முருகன் - செங்கோட்டு வேலவர்). ஆதி கேசவ பெருமாள்.
இறைவியார் திருப்பெயர்: பாகம்பிரியாள்.
தல மரம்: இலுப்பை, வன்னி

தீர்த்தம் : தேவ தீர்த்தம். பிரம தீர்த்தம்
வழிபட்டோர்: சம்பந்தர், கபிலதேவ நாயனார், பட்டினத்துப் பிள்ளையார், சேக்கிழார், கேதார கௌரி.

அடியேனுடன் படித்த இரு நண்பர்களின் பிள்ளைகளின் திருமணம் திருச்செங்கோட்டில் நடைபெற்றதால் இரு முறை வந்த போதும் இத்தலத்தை அங்குலம் அங்குலமாக தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. ஒரு முறை மலையேறும் பாதையில் உள்ள நாகத்தை தரிசிக்க வேண்டி இறங்கி வந்தோம். சிற்பக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இத்தலம். அவற்றை பின்னர் காண்போம். வாருங்கள் இனி மலையேறலாம்.

மலையடிவாரத்தில் தென் பக்கத்தில் கஜமுகப்பிள்ளையாரும், வடபகுதியில் ஆறுமுகர் சன்னதியும் அமைந்துள்ளது. அடிவாரத்திலிருந்து சுமார் 650 அடி உயரத்திலுள்ள இம்மலைக் கோவிலுக்குச் செல்லும் பாதை, 1206 படிகளைக் கொண்டுள்ளது. திருமலையின் படிகளின் வழியாக செல்லும் பக்தர்களின் வசதிக்காகவும் பக்தர்கள் இளைப்பாறவும், வழி முழுவதும் பல மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன அடிவாரத்தை அடுத்து செங்குந்தர் மண்டபம், காளத்தி சுவாமிகள் மண்டபம், திருமுடியார் மண்டபம் கடந்து தைலி மண்டபத்தை அடைகிறோம். இம்மண்டபத்தின் மேற்கு பகுதியில் பிரம்மாண்டமான நந்தியெம்பெருமான் மலையை நோக்கியவாறு அருள் பாலிக்கின்றார். மலையே சிவபெருமான் என்பதால் இவ்வாறு நந்தியெம்பெருமான் எழுந்தருளியுள்ளார்.

பசுவன் கோவில் என்றழைக்கப்படும் இதற்கு பிறகு உள்ள பகுதி நாகமலை என்றழைக்கப்படுகின்றது. செல்லும் போது ஆதிசேஷன் ஐந்து தலைகளையும் விரித்துப் இப்பகுதியின் வலப்பக்கத்தில் நின்ற நிலையில் இலிங்கத் திருமேனியைச் சுமந்துகொண்டிருக்கும் 60 அடி நீளச் சிற்பக் காட்சியைக் கண்டு பிரமித்துப் போய்விடுவோம்!



ஆதி சேஷன்

இந்நாகத்தின் மீது மஞ்சள், குங்குமம் பூசி வழிபடுகின்றனர். நாகதோஷம் உள்ளவர்கள், சிறப்பு வழிபாடு செய்கின்றனர். பலர் பலியிட்டு பொங்கல் வைத்து நாகருக்கு படையலிட்டு வணங்குவதை கண்டோம். வாகன வழியாக செல்பவர்களும் நாகர் பள்ளம் வரை சென்று நாகரை தரிசிக்க முடியும். இடதுபுறமுள்ள நாகம் கால வேறுபாட்டால் இடி, மின்னல் தாக்குதல்களால் வெடிப்புகள் ஏற்பட்டு சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

நாகரை தரிசித்து மேலே உள்ள சில மண்டபங்களை கடந்து சென்றால் அறுபதாம் படி என்னும் 'சத்தியப்படியினை' அடையலாம். இப்படியின் இறுதியில் முருகப்பெருமான் உள்ளார். ஒரே சீராக அறுபது படிகளை உடைய இவ்விடம் சிற்பக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இம்மலையில் உள்ள 1206 படிகளிலேயே இப்படிகள்தான் மிகவும் சிறப்பு வாய்ந்தத படியாகும். அன்றைய காலத்தில் கொடுத்தல் வாங்கல் மற்றும் எண்ணற்ற தீர்க்க முடியாத வழக்குகளில் உண்மை நிலையை அறிய இப்படியினை பயன்படுத்தினார்கள். இப்படியின் மீது நின்று சத்தியம் செய்து கூறும் செய்திகளை சென்னை உச்சநீதிமன்றமே ஒப்புகொண்டதாக கூறுவார்கள்.



அறுபதாம் படிகள்

இதனையடுத்து நாடார் மண்டபம், செட்டிக்கவுண்டர் மண்டபம், தேவரடியார் மண்டபம், இளைப்பாற்றி மண்டபம், கோபுர வாயில் மண்டபம், நிறுத்த (அல்லது) ஆமை மண்டபம், விலாச மண்டபம், குகை மண்டபம், திருமுடியார் மண்டபம், கோடி அர்ச்சனை மண்டபம், சிங்கத்தூண் மண்டபம், அறுபதாம் படி மண்டபம் ஆகியவை மலையேறும் படிகளில் உள்ளன. இடையில் பல சுனைகள் உள்ளன, அடியோங்கள் சென்ற சமயம் பெரும்பான்மையானவை வறண்டு கிடந்தன. படியேற்றம் நிறைவு செய்யும் போது வடக்கு இராஜகோபுரத்தை தரிசிக்கின்றோம்.

இத்தலத்தின் வடக்கு வாசல் இராஜகோபுரம் கிட்டத்தட்ட 85 அடி உயரத்துடன் ஐந்து நிலைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மதில் சுவற்றில் சிவ சிவ என்ற மந்திரம் ஒளிர்கின்றது. மேற்கு, தெற்கு வாயில்களிலும் இராஜகோபுரங்கள் உள்ளன. கிழக்குப்பகுதியில் மலை உள்ளது. படிகளின் வழியே செல்லும்போது பெரிய மலைக்கும் சிறிய மலைக்கும் இடையே அமைந்துள்ள நாகர்பள்ளம் எனும் இடத்தை தரிசிக்கலாம்.

இராஜகோபுரத்தை கடந்து வலம் வந்தால் ஆதிசேஷன் சன்னதி. பிரம்மாண்டமாக ஐந்து தலைகளுடன் எழுந்தருளியுள்ளான் நாகராஜன். மஞ்சள்பொடி தூவி பக்தர்கள் வழிபடுவதால் பொன் வர்ணத்தில் மிளிர்கிறான் சேஷன்.

அடுத்து உமையொருபாகருக்கு இணையாக அருள்பாலிக்கும் செங்கோட்டுவேலவரை முதலில் தரிசனம் செய்கின்றோம். திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வர தலம் ஆன போதிலும், ஒன்று சேர்ந்த அந்த இரண்டு பேரை- அம்பாளையும் ஸ்வாமியையும் மூன்று பேராக ஸோமாஸ்கந்தமாக்கிய ஸுப்ரஹ்மண்யருக்கு அங்கே ரொம்ப விசேஷம். அந்த திருச்செங்கோட்டுக்கு நாகாசலம், நாககிரி என்றும் பெயர் என்று காஞ்சி மஹா பெரியவர் செங்கோட்டு வேலவர் பற்றி கூறியுள்ளார்.

திருக்கயிலையில் ஞானபழம் கிட்டாததால் முருகப்பெருமான் கோபமுற்று கயிலையில் அம்மையப்பனை விட்டு பிரிந்து காடு, மலை, வனம், வனாந்திரங்களை கடந்து திருவாவினன்குடி குன்றின் மேல் நின்றார் (பழனி) அங்கிருந்து கயிலை தன் கண்களுக்கு தெரிந்ததால் அங்கிருந்து புறப்பட்டு கொங்கின் மீதுள்ள நாகாசலம் வந்தடைந்தார். நாகாசலத்திலிருந்து கயிலை தன் கண்களுக்கு தெரியாததால் இவ்விடமே தான் தங்குவதற்கு ஏற்றதென்று எண்ணி திருச்செங்கோட்டில் செங்கோட்டுவேலவராக கோவில் கொண்டார் என திருச்செங்கோடு தல புராணம் குறிப்பிடுகிறது.

முருகர் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அழகான நின்ற திருவுருவம். கிழக்கு நோக்கிய சன்னதி. வலத்திருக்கரத்தில் சக்தி வேலை தலைக்கு மேலே உள்ளவாறு தாங்கி, இடத்திருக்கரம் இடுப்பில் சேவலைத் தாங்கியவாறு எழிலாக நிற்கின்ற நிலையைக் கண்டால் மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம் உருகுவதை உணரலாம். இவரது அழகில் மயங்கிய அருணகிரி நாதர் கந்தரலங்காரத்தில்

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டு தொழ
நலாயிரம் கண் படைத்திலனே இந்த நான்முகனே – என்று பாடியபடி
நிச்சயமாக செங்கோடனின் அழகை அனுபவிக்க 'நாலாயிரம் கண்கள் தேவை' என்பதை உணரலாம்.

மேலும் இரு பாடல்களில்
"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கொரு தாழ்வில்லையே". என்றும்

"தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே

வை வைத்த வேற்படை வானவனே மறவேன் உனையான்
ஐவர்க் (கு) இடம்பெறக் காலிரண்டு ஒட்டி அதிலிரண்டு
கை வைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே" - என்றும் பாடியுள்ளார்.

அவரே கந்தர் அநுபூதியில் பாடிய ஒரே தலம் திருச்செங்கோடு தலம் தான் அப்பாடல்

"கூகா வென என்கிளை கூடியழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே". மேலும் திருப்புகழில்

அன்பாக வந்து என்று துவங்கி "செஞ்சாலி கஞ்சமொன்றாய் வளர்ந்த செங்கோடமர்ந்த பெருமாளே" என்றும், கரையற வுருகுதல் என்று துவங்கி "ஜெகதல மிடிகெட விளைவன வயலணி செங்கோடமர்ந்த பெருமாளே" என்றும், சத்தியை யொக்க இடத்தினில் வைத்த தகப்பனு மெச்சிட தத்துவ தற்பர முற்றுமுணர்த்திய சர்ப்ப கிரிச்சுரர் பெருமாளே.... என்று அர்த்தநாரீஸ்வரரையும் சேர்த்து பாடியுள்ளார். மேலும்

காலனிடத் தணுகாதே - காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான - தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே - மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே - நாககிரிப் பெருமாளே. என்றெல்லாம்
பல்வாறாக போற்றிப் பாடியுள்ளார்.

செங்கோடனின் உற்சவத் திருமேனியை மஹா மண்டபத்தில் தரிசிக்கலாம். கிருத்திகை நாள்களில் தங்கக் கவசம் சார்த்தி, தங்கமயிலேறித் தங்கக்காவடியுடன் புறப்பாடு நடைபெறுகின்றது. சன்னதி முன்பு ஒருபுறம் விநாயகர், மறுபுறம் அருணகிரிநாதர், நக்கீரர் சிலையும் உள்ளது.

தெய்வத் திருமலைச் செங்கோட்டு வேலவன் சன்னதி தரிசனமே தெய்வீகந்தான். எதிரில் உள்ள வேளாளக்கவுண்டர் மண்டபத்தூண் ஒன்றில் வீரபத்திரர் உருவம் தத்ரூபமாக உள்ளது, சிற்பக்கலையழகு வாய்ந்தது. மற்றொன்றில் அர்ச்சுனன் தவக்கோலம், வேடன், குருவிக்காரியின் வடிவங்கள், இரதி, மன்மதன் முதலியன மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளன. இரு தூண்களில் கிராதகராக சிவன் வேட்டுவனாகவும், பார்வதி வேட்டுவச்சியாகவும் காட்சியளிக்கின்றனர்.


செங்கோட்டு வேலவர் முன் மண்டபம்

முருகருக்கு எதிரே அவரது வாகனமான மயில் ஒரு மண்டபத்தில் அற்புதமாக அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் கூரைப் பகுதியில் கல்லினாலான எட்டு கிளிகள் எட்டு திக்கும் தலைகீழாக இருப்பது போன்றும் இதன் நடுவே அமைந்துள்ள கல்லினால் ஆன தேங்காயை சுற்றினால் அது சுற்றும் வகையில் மிகவும் அழகிய கலைநுட்பத்துடனும் மிகுந்த அறிவு திறனுடனும் அமைக்கப்பட்டுள்ளது. கற்சங்கிலிகள், குறவர் நடனம், சிலந்தியை தேள் கவ்வும் காட்சி ஆகிய சிற்ப விநோதங்கள் இம்மண்டபத்தில் அற்புதமாக அமைந்துள்ளன. வேலவனின் இரு துவாரபாலகர்கள் சிலைகளை உற்று நோக்கினால் அதில் உள்ள கற்சிலை மணிகள் கண்கொள்ளா காட்சியாகும். இம்மண்டபத்தின் கலை நுணுக்கத்தை அநுபவிக்கவே ஒரு முழு நாள் வேண்டும். இம்மண்டபம் மற்றுமல்ல இவ்வாலயம் முழுமையுமே ஒரு கலைப்பொக்கிஷம் என்பதில் எவ்வித ஐயமும் தேவையில்லை. ஆகையால் எப்போது சென்றாலும் அவசரமாக செல்லாமல், நிதானமாக தரிசிக்குமாறு செல்லுங்கள்.

செங்கோட்டு வேலவர் சன்னதியில் இருந்து மாதொருபாகரை தூரத்திலிருந்து இலவசமாக தரிசனம் செய்பவர்கள் செல்ல வழி உள்ளது. கட்டணம் செலுத்தி தரிசனம் செய்பவர்கள் சுவாமியின் அருகே சென்று மஹா மண்டபத்தில் நின்று தரிசனம் செய்ய இயலும். கட்டண வழியாக செல்லும் போது அர்த்த நாரீஸ்வரர் சன்னிதிக்குத் தென்புறம் கிழக்கு நோக்கிய நாரிகணபதி சன்னிதியையும், தென்மேற்குப் பகுதியில் வெண்ணிற லிங்கத்துடன் நாகேஸ்வரர் சன்னிதியும், சிறிய அர்த்தநாரீஸ்வரர் உற்சவ திருமேனியையும் தரிசிக்கலாம். கேதராகௌளரி,

மரகதலிங்கத்தைப் பூஜித்து, இறைவனின் பாகத்தை பெற்றதாக வரலாறு சொல்லப்படுகிறது. கேதாரகௌரி உற்சவத் திருமேனி உள்ளது. சிலாரூப தக்ஷிணாமூர்த்தி அழகுடையதாகத் திகழ்கிறது.

மூலவர் அர்த்தநாரீஸ்வரர் சன்னிதி மேற்கு நோக்கியுள்ளது. ஆனால் சன்னிதிக்கு முன் வாசல் சுவாமிக்கு எதிரே இல்லை. மாறாக ஒன்பது துவாரங்கள் கொண்ட கல்லாலான பலகணி உள்ளது. மஹா மண்டபத்தின் தெற்கு வாயில் வழியாகச் சென்றுதான் ஈருருவம் ஓருருவமான பெருமானை நாம் தரிசிக்க முடியும்.

ஓங்கிய மூவிலைநற் சூல மொருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு மதியஞ் சடைக்கணிந்து
கோங்கண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள்தொழுவார் வினையாய பற்றறுமே.

பொருள்: மேம்பட்ட மூவிலை வடிவான நல்ல சூலத்தை ஒரு கையில் ஏந்தியவனாய்த் திருமுடியில் தடுத்த கங்கையோடு, பிறையையும் சடையின் கண் அணிந்து, தேன் பொருந்திய பொழில்கள் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் பொருந்திய தோழனாய் விளங்கும் சிவபெருமானின் திருவடிகளைத் தொழுபவர்களின் வினைகள் வேர்ப்பற்றோடு நீங்கும் என்று அம்மையின் ஞானப்பாலுண்ட பாலறாவாயர் பாடிப் பரவிய அம்மையப்பரை அற்புதமாக தரிசிக்கலாம். இப்பதிகத்தில் பல பாடல்களில் மலையரையன் பொற்பாவை கூறனை வழிபட நம் வினைகள் அனைத்தும் அகலும் என்று ஆளுடைய; பிள்ளையார் அறுதியிடுகிறார்.



வடக்கு கோபுரம் மற்றும் செங்கோட்டு வேலவர் விமானம்

அர்த்தநாரீஸ்வரர், மாதொருபாகர், உமையொருபாகர், ஈருருவமும் ஓருருவமானவர் அர்த்தாம்பிகேசர், அர்த்தசிவாம்பிகை, வவ்விய பாகத்து இறைவர், சிவசக்தி என்றெல்லாம் அழைக்கப்படும் இத்தல மூலவர், சுமார் 6 அடி உயரம் உள்ள உளி படாத சுயம்புத் திருமேனியாக பாதி ஆணாகவும், பாதி பெண்ணாகவும் மேற்கு நோக்கி தரிசனம் அளிக்கிறார். இங்குள்ள அர்த்தநாரீஸ்வரர் மூலவர் திருவுருவம் கற்சிலை அன்று, சித்தர்களால் வெண்பாஷணம் என்று அழைக்கப்படும் மிகுந்த நச்சுத்தன்மை உடைய பல வகை மூலிகைகளால் உருவாக்கப்பட்டது. இந்த பாஷாணமானது வெண்குஷ்டம் போன்ற பல நோய்களை தீர்க்கும் சக்தி உடையது. ஆகவே பெருமானுக்கு செய்யும் அபிஷேக தீர்த்தம் மற்றும் பெருமானின் பாதத்தில் இருந்து வரும் சுனை நீர் தீர்த்தம் ஆகியவைகளை தொடர்ந்து பருகினால் இன்று மருத்துவர்களால் குணமாக்க முடியாத பல நோய்கள் குணமாகின்றன என்று மக்களால் முழுமையாக நம்பப்படுகிறது. மிகப்பழமையான சிலை என்பதால் அபிஷேகம் செய்து திருவருவம் சற்று மாறி காட்சி தருகிறது. தற்சமயம் மதியம் ஒருவேளை மட்டுமே பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறுகிறது. அர்ச்சனையின் போது எங்கும் இல்லாத புதுமையாய் ஒரு நாமம் அம்பிகைக்குரிய பெண்பாலாகவும், அடுத்த நாமம் சிவனுக்குரிய ஆண்பாலாகவும் அமைந்து அர்ச்சிப்பது இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பாகும்.

உளிபடாதது விடங்கம் - அடியில் சதுரபீடம். சுவாமியின் நெற்றில் பள்ளம் - சந்தனத்தை திலகமாக அப்பியுள்ளார்கள். வலது திருக்கரத்தால் தண்டாயுதத்தை தாங்கியவாறு பராபரையின் பாகமாகிய இடது திருக்கரத்தை இடையில் பிடித்திருக்க உடலை சற்று வலதுபுறமாக சாய்த்து மகரகுண்டம் காதில் அசைய முத்துமணி இரத்தினம் இடது காதில் அணி செய்ய தாமரையும் நீலோற்பலமும் ஒரே சமயத்தில் மலர்ந்திருப்பதை போல ஒன்றுக்கொன்று உற்று நோக்கிய கண்களில் இனிய தோக்கும் பூண்டு பச்சைநிற பட்டாடை இடது தொடையையும், புலித்தோலாடை வலது தொடையும், அலங்கரிக்க முப்புரி நூல் ஒரு பக்க மார்பிலும், சுவர்ண சிமிழ் போன்ற நெருங்கிய தனபாரம் மறுபக்கமும், இயமனை உதைத்த நாக வீர வெண்குடையும், அணிந்த திருவடி ஒருபாகமும், அழகிய சிலம்பின் பிரபை விளங்கிய திருவடி ஒரு பாகமும் கொண்டு அம்மையப்பனாய் ஒரே திருமேனியாய் காட்சியளிக்கிறார் அம்மையப்பர். அவரை வணங்கும் போது அபிராமி பட்டரின்

உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில் வந்து
எமையும் தமக்கன்புசெய்யவைத்தார், இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை, ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை,
அமையும், அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே என்ற பாடலைப் பாடி தரிசித்தோம்.

மூலவரின் காலடியில் இருக்கும் தேவதீர்த்தம், எக்காலத்திலும் வற்றாமல் சுரந்து கொண்டே இருக்கும். மூலவரை தரிசிக்க வருபவர்களுக்கு இத்தீர்த்தம் வழங்கப்படுகிறது. வைகாசி விசாகத்தன்று இவருக்கு திருக்கல்யாண வைபவம் நடக்கும். அப்போது அர்த்தநாரீஸ்வரருக்கு அர்ச்சகர்கள் தாலி அணிவிப்பார்கள். அம்பிகை தனியே இல்லாததால் இவ்வாறு செய்கிறார்கள்.

கேதாரகௌரி அம்பாள் வழிபட்ட மரகதலிங்கத்திற்கு தினமும் பால் அபிஷேகம் நடைபெறுகின்றது. இவரை மார்கழி மாதத்தில் காலை 7மணிக்கு முன்னர் மட்டுமே தரிசிக்க முடியும்.

அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் சிவபெருமானின் 25 மூர்த்தங்களுள் ஒன்று, வலது புறம் ஐயனும் வாம பாகம் என்னும் இடப்புறம் அம்மையுமாக எழுந்தருளி அருள் பாலிக்கும் கோலம். மாணிக்க வாசகர் தொன்மைக் கோலம் என்று பாடியதையும் அபிராமி பட்டர் உமையும் உமையொரு பாகரும் ஏக உருவு என்றும், வவ்வியபாகத்து இறைவர் என்றும் திருமூலர் பரஞானம், அபரஞானம் இரண்டையும் வழங்கும் அற்புதக்கூத்து என்றும் போற்றுகின்றனர்.

உமையம்மை வழிபாட்டு நெறியை வலியுறுத்தும் பரமாகமம் என்ற நூலில் உமையம்மையானவள் தான் மட்டும் தனித்து நின்று ஒன்றாய் அருளும்போது மோக்ஷத்தையும் இறைவன் என்ற தன் கணவனாகிற சிவனோடு உடனாய் நின்று அருள்கிற போது உலகியல் சார்ந்த வீடு, மனைவி, மக்கள், செல்வம் போன்ற விருப்பங்களை நிறைவேற்றும் யோகத்தையும், ஆண்பாதி, பெண் பாதியாக ஒரே

வடிவத்தில் இருவேறாக தோன்றுவதால் ஞானத்தையும் அருள்கிறாள் என்று கூறியுள்ளது.

1. உடல் சார்ந்து பசி, தாகம், பிணி, மல, ஜல அவஸ்தைகள் குறைவுபடுதல்,
2. உள்ளம் சார்ந்து காமம், கோபம், பற்று, காதல், ஆணவம், பொறாமை போன்ற தீய குணங்கள் அற்றுப் போதல்.
3. அறிவு சார்ந்து - ஐயம், திரிபு, பொய் இவை அற்றுப் போதல்.
4. ஆன்மா சார்ந்தது - துன்ப இன்பங்கள் அற்றுப் போதல் என்பதாகும்.
5. இவைகளுக்கு மாறாக உடல் எடை குறைதல். எப்பொழுதும் உண்ணாமல் இருக்கும் போதும் சுறுசுறுப்பாக இருத்தல்.
6. உள்ள உணர்வுகளால் பாதிக்கப்படாமல் அமைதியுற்று இருத்தல்.
7. அறிவு முக்காலத்தையும் அறியும் ஆற்றல் பெற்றும், ஆன்மாவானது இறைவனோடு தொடர்பு பெற்றுயிருப்பதே ஞானம்.

இப்பண்புகள் அனைத்தும் ஞானம் என்ற ஒரே சொல்லால் குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய மேலான ஞானத்தை அருள்வதற்காக உமையம்மையை "உமையும் உமையொருபாகரும் ஏக உருவில் வந்து" என்று அபிராமி பட்டர் கூறுகின்றார்.

ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்தில் நிறைவாக அதன் சாரமாக வருகின்ற திருநாமங்களான "ஸ்ரீசிவா சிவசக்த்யைக்ய ரூபிணி ஸ்ரீலலிதாம்பிகா" அர்த்தநாரீஸ்வரரையே குறிக்கின்றது. விளக்கும் ஒளியும், வாக்கும் அர்த்தமும் போல சிவனும் சக்தியும் ஒன்றான உருவமே சர்வ மங்களகரமான ஸ்ரீலலிதாம்பிகை. அகிலம் அனைத்தும் உருவாவதும் பின்னர் அவை அனைத்தும் லயம் ஆவதும் சிவ சக்தியிடம்தான் என்பது தாத்பர்யம்.

ஸ்ரீலலிதா த்ரிசதியில் உள்ள ஒரு நாமம் "ஈச்வரார்த்தாங்க – சரீராயை நம:" அதாவது பரசிவத்தின்பாதி சரீரம் உடையவள்.
ஸ்ரீருத்ரத்தில் "யா தே ருத்ர சிவா தனூ: சிவா விச்வாஹ பேஷஜீ சிவா ருத்ரஸ்ய பேஷஜீ || - ருத்திரனே! எந்த பரதேவதை உன்னுடைய பாதி சரீரமோ அம்மங்கள ஸ்வரூபிணி உலகுக்கெல்லாம் மருந்து போன்றவள், உனக்கும் மருந்தாகியவள் என்று போற்றுகிறது.

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்தன்று சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியாக தரிசனம் தருவதும் சிவ சக்தி ஐக்ய சொரூப அர்த்தநாரீஸ்வரராகத்தான். எனவே அந்தி சாயும் நேரத்தில் அர்த்தநாரீஸ்வரர் ஆனந்தமாக ஆடிக்கொண்டு எழுந்தருளும் போது மலை மேல் தீபம் ஏற்றப்படுகின்றது.



<u>அர்த்தநாரீஸ்வர ஸ்தோத்திரம்</u>

அம்ருதாணர்வ மத்யோத்யத் ஸ்வர்ண த்வீபே மனோரமே ||
கல்பவ்ருக்ஷ வனாந்தஸ்தே நவமாணிக்க மண்டபே ||
நவரத்னமய ஸ்ரீமத்ஸிம்ஹாஸன கதாம்புஜே ||
த்ரிகோணாந்த ஸமாஸீனம் சந்த்ர ஸூர்யாயுத ப்ரபாம் ||
அர்த்தாம்பிகா ஸமாயுக்தம் பரவிபக்தி விபூஷணம் ||
கோடி கந்தர்ப்ப லாவண்யம் ஸதா ஷோடஸ வார்ஷிகம் ||
மந்தஸ்மித முகாம்போஜம் த்ரிநேத்ரம் சந்த்ரசேகரம் ||
திவ்யாம்பர ஸ்ரதாலபம் திவ்யாபரண பூஷிதம் ||
பாண பாத்ரம் ச சின்முத்ராம் த்ரிசூலம் புஸ்தகம் கரை ||
வித்யா ஸம்ஸதி பிப்ராணாம் ஸதாநந்த முகேக்ஷணம் ||
மஹா ஷோடாதி தாஸேஷ தேவதாகண ஸேவிதம் ||
ஏஹம் ஏத்தாம் புஜே த்யாயேத் அர்த்தநாரீஸ்வரம் சிவம் ||
பும்ரூபம் வாஸ்மரேத் தேவி ஸ்த்ரிரூபம்வா விசிந்தயேத் ||
அதவே நிஷ்களம் த்யாயேத் ஸச்சிதானந்த லக்ஷணம் ||

ஸர்வ தேஜோமயம் த்யாயேத் சராசர விக்ரஹம் ||

(இந்த ஸ்லோகத்தின் பொருளையும் சரியாக உச்சரிக்கும் முறையையும் தயவு செய்து அவரவர்கள் குரு முகமாக அறிந்து கொள்ளவும்)

அடியேன் தேவார திருவாசகங்களில் அருளாளர்கள் அம்மையப்பரைப்பற்றி பாடிய பல போற்றிகளைக் கொண்டு ஒரு அர்ச்சனை அமைத்துள்ளேன் அது இப்புத்தகத்தின் நிறைவாக இணைத்துள்ளேன். மேலும் உமையம்மை அனுசரித்து ஐயனின் இடப்பாகம் பெற்ற கேதாரகௌரி விரதத்தைப் பற்றிய கட்டுரையும், விஷ சுரம் நீங்க சம்பந்தர் பாடிய நீலகண்ட திருப்பதிகத்தையும் இணைத்துள்ளேன்.

அர்த்தநாரீஸ்வரர் உற்சவத் திருமேனியை மஹா மண்டபத்தில் தரிசிக்கின்றோம். மிக அற்புதமான பஞ்சலோகத் திருமேனி. ஆண்பக்கத்தில் வலத்திருக்கரத்தில் சாய்வாக தண்டாயுதம், பெண்பக்கத்தில் இடுப்பில் வைத்த திருக்கர அமைப்பு, மார்பில் பெண் பக்கத்தில் கொங்கை, இடையில் வாம பாகம் குறுகியும், திருவடிகளில் ஒன்றில், சிலம்பு மற்றொன்றில் கழல், கண்களில் கூட ஆண், பெண் பாக வேறுபாடு ஒரு மயிரிழையில் அகலமாகவும் குறுகலாகவும் காட்டப்பட்டுள்ளன. வைகாசிப் பெருவிழாவின் போது திருமலையில் இருந்து இறங்கி வந்து பல மண்டகப்படிகள் கண்டருளி தேருக்கு எழுந்தருளுபவர் இவரே.

சீர்பெற்ற செழுஞ் சடையுந் திருக்குழலுஞ் சிவந்த நோக்குங்
கூர்பெற்ற கயல்விழியுங் குழைப்பணியுங் குழைத்தோடுங் குமுதவாயுங்
தார்பெற்ற கதைக்கரமுஞ் சரிக்கரமுந் தடவுரமந் தனப்பொன்மார்பு
பேர்பெற்ற வதட்டுகிறு மிகற்பதமுஞ் சிலம்படியு மிதைபஞ் சேர்ப்பாம்

பொருள்: அழகு தங்கிய குளிர்ந்த சடையும், அழகிய கொண்டையும், சிவந்த நெற்றிக் கண்ணும், கூர்மையான மீன் போன்ற திருவிழியும், நாகக்குண்டல திருச்செவியும், இரத்தின தோடணிந்த திருச்செவியும், ஆம்பல் பூப்போன்ற வாயும் , தண்டாயுதம் பற்றிய திருக்கரமும், வளையணிந்த திருக்கரமும், விசாலமான மார்பும், பொன் மணியாரம் பூண்ட முலை மார்பும், புலித்தோலாடையணிந்த இடையும், சவுந்தரியமான பூந்துகிலணிந்த சிற்றிடையும், வீரக்கழலணிந்த திருவடியும், சிலம்பணிந்த சிற்றடியுமாய் விளங்கும் அர்த்தசிவாம்பிகையை அருமையாக தரிசித்தோம்.

இம்மண்டபத்தில் அம்மை வாமபாகம் பெற்ற வரலாறு, முருகர் இடைச்சிறுவனாக வந்து பாண்டிப்புலவரை வென்ற வரலாறு ஆகியவை அருமையான ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் திருக்கதவத்தில் கட்டை விரல் அளவில் உள்ள சிவலிங்கம் மற்றும் சோமாஸ்கந்த மூர்த்தங்களை தரிசிக்கலாம்.

அர்த்தநாரீஸ்வரரை தரிசனம் செய்து விட்டு வெளியே வந்தவுடன் உள்ளது நிருத்த மண்டபம். இதன் தூண்களில் ஊர்த்துவ தாண்டவர், தில்லைக் காளி, இரதி, மன்மதன், போன்ற சிற்பங்கள் மிகவும் கலை நுணுக்கத்துடன் அமைந்துள்ளன. இம்மண்டபத்தை சபா மண்டபம் என்று கூறுவர். சிலப்பதிகார உரையாசிரியார் அடியாருக்கு நல்லாரை சிறப்பித்த இடம் இவ்விடம் என்று கூறுவர்.

ஆதிசேஷன், மகாவிஷ்ணு ஆகியோர் இங்குள்ள சிவபெருமானை வழிபட்டுள்ளனர். ஆதிகேசவப் பெருமாள் என்ற பெயரில் மகாவிஷ்ணு தனிசன்னதியில் அருள் பாலிக்கிறார். ஆதிகேசவப் பெருமாள் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் நீளாதேவி, பூதேவியுடன் சேவை சாதிக்கின்றார். உற்சவத் திருமேனிகளும் உள்ளன. பெருமாளுக்கு எதிரில் பலிபீடமும் கருடாழ்வாரும் சொல்லின் செல்வனாகிய அனுமனின் திருவுருவமும் உள்ளது.



ஊர்த்துவ தாண்டவர் - தில்லைக்காளி

வைகாசி மாதத்தில் நடைபெறும் விசாக தேர்திருவிழாவின் போது இப்பெருமாளுக்கும் திருவிழா நடைபெறும். அர்த்தநாரீஸ்வரருக்கு கொடியேற்றம் செய்த நான்காம் நாள் பெருமாளுக்கு கொடியேற்றம் நடைபெறும். அதன்பிறகு அர்த்தநாரீஸ்வரர் நகருக்கு எழுந்தருளுவார் அப்போது அவருடன் சேர்ந்து ஆதிகேசவ பெருமானும் நகருக்கு வருவார். பின் ஆதிகேசவபெருமாள் திருக்கல்யாணம் கண்டருளி, திருத்தேரில் எழுந்தருளி நான்கு இரத வீதி வழியாக ஊர்வலம் நடைபெறும். சிவராத்திரியன்று இவருக்கும் நாலு கால பூசை நடைபெறுவது ஒரு தனி சிறப்பு, ஏகாதசியன்று கருட சேவை தந்தருளுகிறார்.

இனி ஆதிகேசவராக இவ்வாலயத்தில் பெருமாள் எழுந்தருளிய வரலாறு. நாராயண மூர்த்தி நரசிம்ம உருவில் அசுரன் இரணியனின் வயிற்றை பிளந்து அதிலிருந்து வழிந்த குருதியை குடித்ததால் ஏற்ப்பட்ட பித்தத்தால் அலைந்து திரிந்தார் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதை கண்ட சிவபெருமான் சரப பட்சியாக உருவெடுத்து நரசிங்கத்தை கொத்தி தூக்கி கொண்டு அண்ட பகுதிக்கு பறந்து சென்று நரசிங்கத்தை குலுக்கினார். அதனால் பெருகிய குருதி வெளியே கொட்டியது. அதன் பின் நரசிங்கம் பெருமாளாக உருமாறியது அதனால் திருமால் தனக்குண்டான பிரம்மஹத்தியை போக்கி கொள்ள கொடிமாடசெங்குன்றூர் வந்து விஷ்ணு தீர்த்தமென்ற ஒரு சுனையை அமைத்து அதில் நீராடி தவம் செய்து ஆதிபரம்பொருளை வணங்கினார். அவ்வாறு தனது பிரம்மஹத்தி நீங்கிய பின் ஏகாந்த இடமாகவும், எழில் மிகுந்த இனிமை தரும் புனித பூமியாகவும் இருந்ததால் இப்பகுதியிலேயே கோவில் கொண்டார் என திருச்செங்கோடு தல புராணம் குறிப்பிடுகிறது.

அர்த்தநாரீஸ்வரர் சன்னதிக்கு எதிரே நாகலிங்கேஸ்வரர் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இச்சன்னதியில் சிவபெருமான் சதாசிவ மூர்த்தமாக இலிங்கவடிவத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். இச்சன்னதியின் முன் மண்டபத்தின் தூண்களில் அமைந்துள்ள குதிரை வீரர்கள் அற்புதமான கலை நுணுக்கம் நிறைந்தவை. இம்மண்டபத்தின் கூரையிலும், கருவறை சுவற்றிலும் அருமையான கற்சிற்பங்களை கண்டு களிக்கலாம்.

திருமணம் செய்து கொண்ட புதுமண தம்பதிகள் முதன் முதலில் மலை மேல் உள்ள அம்மையப்பனை வழிபட்டு அதன் பின்னரே தங்களது இல்வாழ்க்கையை துவங்குவது பாரம்பரியமாக கருதப்படுகிறது. எனவே முகூர்த்த நாளன்று ஏராளமான திருமணங்கள் இக்கோவிலில் நடைபெறுகின்றன. ஒரே நேரத்தில் நாகேஸ்வரர் சன்னதி முன் மண்டபத்திலும், ஆமை மண்டபத்தில் பல திருமணங்களும் நடைபெறுகின்றன. வரிசை முறையில் ஒரு திருமணத்திற்கு பிறகு அடுத்தடுத்து வரிசையாக திருமணங்கள் நடைபெறுகின்றன.

இதைத் தவிர பஞ்சலிங்கம், நடராஜர், அம்மன், பிள்ளையார் சன்னிதிகளும் உள்ளன. தெற்குப் பகுதியில் 63 நாயன்மார்களின் திருவுருவங்களை தரிசிக்கலாம். மலை மீது அமைந்துள்ள இக்கோவில் பண்டைய காலத்தில் நாகவழிபாட்டினையும், வேட்டுவர்கள் தங்களின் குலதெய்வமான பெண் தெய்வத்தை வணங்கிய இடமாகவும் திகழ்ந்துள்ளது.




இவ்வாலயம் தமிழக சிற்பக் கலைத்திறனுக்கு ஒரு சிறந்த உறைவிடமாகும் அர்த்தநாரீஸ்வரர் சன்னிதியின் முன் மண்டபத்தின் வெளிப்புற தூண்களில் வரிசையாக குதிரை அல்லது யாளி மீது உள்ள வீரர்களைத் தாங்கிய சுமார் 30 ஒற்றைக் கற்தூண்கள் சிற்ப வேலைப்பாடுமிக்கவை. இம்மண்டபத்தில் அமைந்துள்ள உள் தூண்களில் பல்வேறு அற்புதமான நுணுக்கமான கலைவேலைப்பாட்டுடன் வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள் நிறைந்திருக்கின்றன. சிவபெருமானின் பல்வேறு வடிவங்களையும், கிருஷ்ண லீலைகளயும் கண்டு களிக்கலாம். சுந்தரர் முதலையுண்ட பிள்ளையை கொணர்ந்த சிற்பமும் அமைந்துள்ளது சிறப்பு. மண்டபத்தின் மேற்கூரையில் ஒரே கல்லினால் செதுக்கப்பட்ட பல வடிவங்களை உடைய கற்சங்கலி மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இம்மண்டபத்தில் பலகணிக்கு எதிரே ஆமை மண்டபம் என்று அழைக்கப்படும் சிறியமண்டபம் ஒன்று உள்ளது. இதன் மேல்பகுதி மரத்தாலானது . வைகாசி விசாக திருவிழாவின் போது இறைவனை இம்மண்டபத்தில் எழுந்தருள செய்து சிறப்பு வழிபாடு நடைபெறும். அப்போது இதன் மேல்பகுதியில் மலர்களை கொட்டி இயந்திரத்தின் மூலம் இயக்கினால் இதில் உள்ள துவாரத்தின் வழியாக ஒவ்வொரு பூவாக இறைவனின் மீது விழும் இந்நிகழ்ச்சியைக்காண கண்கோடி வேண்டும். இத்தலத்தில் முதலாம் இராஜராஜன், சுந்தரபாண்டியத் தேவர், மைசூர் கிருஷ்ணராஜ உடையார் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன.இக்கோவிலின் தல விருட்சம் இலுப்பை மரம். இம்மரம் கோவிலின் வடக்குப் பகுதியில் நடராஜர் சன்னிதிக்கும், சிவலிங்க சன்னிதிக்கும் இடையில் அமைந்துள்ளது.



இறைவன் அர்த்தநாரீஸ்வரரை திருஞானசம்பந்தர் முதலாம் திருமுறையின் 107-வது திருப்பதிகத்திலும், திருநீலகண்ட திருப்பதிகம் எனும் 116-வது திருப்பதிகத்திலும் பாடியுள்ளார். திருப்பைஞ்ஞீலி, திருஈங்கோய்மலை முதலான தலங்களுக்குச் சென்று பதிகங்கள் பாடி வழிபட்ட ஞானசம்பந்தர், வழியெங்கும் பல தலங்களை தரிசித்து வழிபட்டபடியே, திருச்செங்கோட்டுக்கு வந்தார். சிவனாரை தரிசித்து பதிகம் பாடியவர், அடுத்து திருநணா என்கிற பவானிக்குச் சென்றுவிட்டு, மலையின் மீதும் இறைவனின் மீது கொண்ட ஈர்ப்பால், மீண்டும் திருச்ச்செங்கோடு வந்து தங்கினாராம். அத்தனை அழகும் கம்பீரமும் வாய்ந்தது இம்மலை என வர்ணிக்கிறது ஸ்தல புராணம். இங்கு வந்தபோது, அவருடன் வந்த அடியார்களை 'நளிர்சுரம்' பற்றி வருத்த 'அவ்வினைக் கிவ்வினை' என்னும் பதிகம்பாடி, 'தீவினைவந்தெம்மைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்' என ஆணையிட்டு அந்நாடு முழுவதும் பிணிதீர்த்தார் என்பது பெரியபுராண வரலாறு. இன்றைய கொரோனா நுண்கிருமி வாதையிலிருந்து விடுபட இப்பதிகத்தை ஓதினால் அன்பர்கள் நலம் பெறலாம் என்பதால் இந்நூலில் இறுதியில் இடம் பெற்றுள்ளது. அப்பதிகத்தின் முதல் பாடல்

"அவ்வினைக் கிவ்வினையாமென்று சொல்லும்ஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல் போற்றது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்".

இத்தலத்தில் மாதந்தோறும் கீழ்கண்ட திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. சித்திரையில் சித்ரா பௌர்ணமி, வைகாசியில் வைகாசி விசாகப்பெருந்திருவிழா, பத்திரகாளியம்மன் திருவிழா, ஆனியில் நடராஜர்

திருமஞ்சனம், ஆவணியில் விநாயகர் சதுர்த்தி, புரட்டாசி மலைக்கோவில் கௌரி விரதம், நவராத்திரி விரதம், ஐப்பசியில் பெரிய மாரியம்மன் திருவிழா, கார்த்திகையில் திருமலையில் கார்த்திகை தீபம், மார்கழியில் ஆருத்ரா தரிசனம், தையில் திருமலை படி திருவிழா, மாசியில் மாசி மகம், சிவராத்திரி திருவிழா, பங்குனியில் உத்திரவிழா. சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் படிகள் வழியாகவும், மலைப்பாதை வழியாகவும் சென்று அம்மையப்பனை தரிசிக்கின்றனர். பௌர்ணமி, அமாவாசை மற்றும் அவரவர் ஜென்ம தினங்களில் மலையை கிரிவலம் வருகின்றனர்.

மலைக்கோவிலில், பிரதோஷம், அமாவாசை, பவுர்ணமி, சஷ்டி உள்ளிட்ட மாதாந்திர விசேஷ நாட்களிலும், வைகாசி விசாக தேர் திருவிழா, புரட்டாசி மாத கேதார கவுரி விரதம், பார்வதி தேவி மற்றும் பிருங்கி முனிவர் வழிபாடு செய்த மார்கழி மாத மரகதலிங்க வழிபாடு ஆகியவற்றில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். இனி இத்தலத்தின் சிறப்பான விழாக்களைப் பற்றி சுருக்கமாக காணலாம்.

## கேதார கௌரி விரதம்

சிவபெருமான் தன் பாகத்தின் பாதியை அம்மைக்கு வழங்கிய நிகழ்ச்சி இத்தலத்தில் ஆவணி மாதம் வளர்பிறை அஷ்டமியில் தொடங்குகிறது. கேதார கௌரி அம்ம்மனுக்கு சிறப்பு பூசைகள் நடைபெறுகின்றது. புரட்டாசி கிருஷ்ணபட்ச தேய்பிறையில் சதுர்த்தியில் கேதார கௌரி விரத விழாவாக இன்றும் இம்மலையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மஹாலய அமாவாசையன்று அர்த்தநாரீஸ்வரர் பிருங்கியுடன் திருக்காட்சியருளுகின்றார். இவ்விழாவின் போது பெண்கள் தன் கணவரின் நலன் வேண்டி காப்புக் கட்டிக்கொண்டு சக்தியை (பார்வதி தேவியை) குறித்து 21 நாட்கள் விரதமிருப்பர்.

## ஆதிநாகேஸ்வரர் பூஜை

அருள்மிகு நாகேஸ்வரர் வழிபாட்டு குழுவினரால் ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று ராகுகாலம் 4-30 மணிமுதல் 6-00 மணிவரை சுவாமிக்கு சிறப்பு பூஜைகளும், வழிபாடுகளும் மற்றும் விளக்கு பூஜையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நாகாச்சலம் என்று அழைக்கப்படும் இத்திருத்தலத்தில் நடைபெறுகின்ற இப்பூஜையில் கலந்து கொள்ளும், நாகசர்ப்ப தோஷம் மற்றும் பிற தோஷங்கள் உள்ள திருமணமாகாத பெண்கள், ஆண்களுக்கு திருமணம் நல்ல முறையில் அமையும் என்று மக்களால் நம்பப்படுகிறது.

## வைகாசி விசாகப் பெருவிழா

பிரதி வருடம் வைகாசி மாதம் கொண்டாடப்படும் தேர்த்திருவிழாவானது திருச்செங்கோடு மாநாகரம் முழுவதும் 14 நாட்களுக்கு மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்திருவிழாவின் போது இறைவனின் தரிசனத்தை காண ஏழுகரைநாட்டு மக்களும் திருச்செங்கோட்டில் கூடியிருப்பார்கள். பிருங்கி முனிவரின் சாபத்தால் புலி வடிவம் பெற்றிருந்த

சயங்கலம் என்ற நகரை தலைநகரமாக கொண்டு ஆட்சி செய்த பாண்டிய மன்னன் சிங்கவர்மன் தன் சாபவிமோசனத்திற்காக திருச்செங்கோடு வந்து நாகமலையை மூன்று முறை கிரிவலம் வந்து இறைவனை வணங்கி சுய உருவை பெற்றார். அந்நாளில் அப்புலி தங்கிய குகையை மக்கள் அன்று கூட்டுப்புலி குகை என்று கூறினர். இந்நாளில் அவ்விடத்தை கூட்டப்புலி என்றும் கூட்டப்பள்ளி என்றும் மக்கள் கூறுகின்றனர். இதனை போற்றும் வகையிலும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையிலும் மன்னன் தன் நாடு சென்று ஏராளமான செல்வங்களுடன் திருக்கொடி மாடசெங்குன்றூர் வந்து இறைவனுக்கு பல திருப்பணிகளை செய்து பின் சிறப்புமிகு தேர்திருவிழாவினையும் கொண்டாடினார் என்று அறியப்படுகிறது.

இத்திருவிழாவின் முதல் நிகழ்ச்சியாக கொடியேற்றம் நடைபெறும் இத்திருவிழாவின் போது அர்த்தநாரீஸ்வரர், ஆதிகேசவபெருமாள் சுவாமிகள் மலைமேல் இருந்து கீழே நகருக்கு எழுந்தருளுகின்றனர். பின் தேரோட்டம், சுவாமிகள் திருத்தேரில் எழுந்தருள திருக்கொடிமாடசெங்குன்றூரின் நான்குமாட வீதி வழியாக தேர்த் இழுக்கும் விழா மிகச்சிறப்பாக நடைபெறும் இவ்விழாவின் இறுதியில் அதாவது 14-ம் நாள் அதிகாலை இருள்பிரியும் நேரத்தில் தன் பரிவாரங்களுடன் மிகச்சிறப்பான வாண வேடிக்கையுடன் திருமலைக்கு செல்லுவார். இவ்வாறு திருச்செங்கோட்டு மக்களால் வைகாசி விசாகத்திருவிழா ஆண்டுதோறும் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டுவருகிறது. வைகாசி திருவிழாவின் 14 நாட்கள் நிகழ்ச்சிகள்

1 ஆம் நாள் திருவிழா - காலையில் அர்த்தநாரீஸ்வர சுவாமிக்கு கொடியேற்றம் நடைபெறும் அதன் பிறகு மண்டபக்கட்டளைகள் நடைபெறும்

2, 3-ஆம் நாள் திருவிழா - மலைமேல் உள்ள மண்டபத்தில் மும்மூர்த்திகளுக்கும் மண்டபக்கட்டளை நடைபெறும்

4 ஆம் நாள் திருவிழா - காலை ஆதிகேசவ பெருமாளுக்கு கொடியேற்றம் நடைபெறும். பிறகு அன்று இரவு சுவாமிகள் மலைமேலிருந்து புறப்பாடு. மலை அடிவாரம் வந்து வண்ண வாணவேடிக்கையுடன் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் நான்கு வீதிகளின் வழியாக வலம் வரும் இத்திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறுகிறது

5, 6, 7, 8 ஆம் நாள் திருவிழா - இத்திருவிழாவின் போது சுவாமிகளுக்கு திருச்செங்கோட்டை சுற்றி உள்ள ஊர்மக்களின் சார்பாக சிறப்பான பூஜைகள் மற்றும் கட்டளைகள் நடைபெறும்
9 ஆம் நாள் திருவிழா - காலை 9-00 மணிக்கு மேல் அர்த்தநாரீஸ்வரர், விநாயகர், செங்கோட்டு வேலவர் திருத்தேரில் எழுந்தருளல். அன்று விநாயகர், செங்கோட்டு வேலவர் திருத்தேர் வடம்பிடித்தல் நடைபெறும்

10 ஆம் நாள் திருவிழா - ஆதிகேசவ பெருமான் திருத்தேரில் எழுந்தருளல். அர்த்தநாரீஸ்வரர் திருத்தேர் வடம் பிடித்தல்

11 ஆம் நாள் திருவிழா - அர்த்தநாரீஸ்வரர் திருத்தேர் இழுத்தல் மிகச் சிறப்பாக நடைபெறும்

12 ஆம் நாள் திருவிழா - அர்த்தநாரீஸ்வரர் திருத்தேர் நிலைநிறுத்தம் மாலை ஆதிகேசவ பெருமாள் திருத்தேர் இழுத்தல், நிலை சேர்த்தல் மிகச் சிறப்பாக நடைபெறும்.

13 ஆம் நாள் திருவிழா - சுவாமிக்கு மண்டபக்கட்டளையும் திருக்கல்யாணமும் சிறப்பாக நடைபெறும்

14 ஆம் நாள் திருவிழா - திருவிழாவின் இறுதி நாள் நிகழ்ச்சியாக நடைபெறும் திருவிழாவாவின் போது சுவாமிகள் 14-ம் நாள் அதிகாலை இருள்பிரியும் நேரத்தில் தன் பரிவாரங்களுடன் மிகச்சிறப்பான வாண வேடிக்கையுடன் திருமலைக்கு மீண்டும் செல்லுவார்.

-"செம்மையுடன்
அங்குன்றா தோங்கும் அணிகொள் கொடிமாடச
செங்குன்றூர் வாழுஞ் சஞ்சீவியே" – என்று திருஅருட்பாவில் வள்ளலார் பாடிய திருச்செங்கோட்டுத் தலத்தின் தரிசனத்தை திவ்யமாக நிறைவு செய்தோம். கொங்கேழ் தலங்களை தரிசித்த பின் வாருங்கள் இப்பத்தியுலாவில் தரிசனம் செய்த மற்ற தலங்களையும் ஒவ்வொன்றாக தரிசிக்கலாம் அன்பர்களே.

## அம்மையப்பர் போற்றி

### தேவார திருவாசக பதிகங்களில் இருந்து திரட்டப்பட்ட துதிகள்

1) ஓம் அணங்கின் மணவாளா போற்றி
2) ஓம் அம்மையப்பா போற்றி
3) ஓம் அம்மையே அப்பா ஒப்பிலா மணியே போற்றி
4) ஓம் அர்த்தநாரீஸ்வரா போற்றி
5) ஓம் அரியாடிய கண்ணாள் பங்க போற்றி
6) ஓம் அரிதரு கண்ணி யாள் ஒரு பாகா போற்றி
7) ஓம் இமவான் மகட்கு தன்னுடைய கேள்வனே போற்றி
8) ஓம் இளமுலையாள் உமை பாகா போற்றி
9) ஓம் இமயமென்னும் குன்றரைக் கண்ணன் குலமகட் பாவை கூற போற்றி
10) ஓம் இழையாரிடை மடவாள் பங்க போற்றி
11) ஓம் உடையாள் உன் தன் நடுவிருக்க உடையாள் நடுவுள் நீயிருத்தி போற்றி
12) ஓம் உண்ணாமுலை உமையாளுடனாகிய ஒருவன் போற்றி
13) ஓம் உமையாள் கணவா போற்றி

14) ஓம் உமையவள் பங்கா போற்றி
15) ஓம் உமை நங்கையோர் பங்குடையாய் போற்றி
16) ஓம் ஏலம் ஏலும் நற்குழலி பங்கனே போற்றி
17) ஓம் ஏலவார் குழலி நாயகனே போற்றி
18) ஓம் ஏலவார் குழல் உமை நங்கை ஏத்தி வழிபட்ட காலகாலனே போற்றி
19) ஓம் ஒருமைபெண்மையுடையன் போற்றி
20) ஓம் கயல்மாண்ட கண்ணி தன் பங்க போற்றி
21) ஓம் கருந்தடங் கண்ணி பங்க போற்றி
22) ஓம் காவி சேரும் கயல் கண்ணாள் பங்கா போற்றி
23) ஓம் கிளி வந்த மென்மொழியாள் கேழ் கிளரும் பாதியனே போற்றி
24) ஓம் குரவங்கமழ் நறுமென் குழல் உமை பங்க போற்றி
25) ஓம் குரும்பைமுலை மலர்க்குழலி பாக போற்றி
26) ஓம் கொடி ஏர் இடையாள் கூறா எம் கோவே போற்றி
27) ஓம் கொம்பர் ஆர் மருங்குல் மங்கை கூற வெண்ணீற போற்றி
28) ஓம் கொத்தலர் குழலி பாக போற்றி
29) ஓம் கொம்மை வரிமுலை கொம்பு அணியாள் கூற போற்றி
30) ஓம் கோல் வளையாள் பாகா போற்றி
31) ஓம் கோங்கு அலர் சேர் குவி முலையாள் கூற போற்றி
32) ஓம் கோலப் பொங்கு அரா அல்குல் செவ்வாய் வெண்ணகைக் கரியவாள்கண் மங்கையோர் பங்க போற்றி
33) ஓம் கோல் வளையாள் பங்க போற்றி
34) ஓம் சிறு மருங்குல் மை ஆர் தடங்கண் மடந்தை மணவாளா போற்றி
35) ஓம் சுரிகுழல் பணை முலை மடந்தை பாதியே போற்றி
36) ஓம் செப்பு ஆர் முலை பங்கனே போற்றி
36) ஓம் செப்பிள முலை நன் மங்கை யொரு பாக போற்றி
38) ஓம் செந்துவர் வாயுமை பங்க போற்றி
39) ஓம் தளரா முலை முறுவல்லுமை தலைவா போற்றி
40) ஓம் திதலைச்செய் பூண்முலை மங்கை பங்க போற்றி
41) ஓம் துடி கொள் நேர் இடையாள் சுரி குழல் மடந்தை பங்கனே போற்றி
42) ஓம் தவள வெண்ணகை மங்கையொர் பங்கினர் போற்றி
43) ஓம் தேனையார் குழலாளை யொர் பாக போற்றி
44) ஓம் தையல் ஒர் பங்கினர் போற்றி
45) ஓம் தையல் ஒர் பாகம் வாழ் ஜகந்நாதனே போற்றி
46) ஓம் தையல் இடம் கொண்ட பிரான் போற்றி
47) ஓம் தோடுடைய செவியா போற்றி
48) ஓம் மதி நுதல் மங்கை பங்க போற்றி
49) ஓம் மலை மாது ஒரு பாகா போற்றி
50) ஓம் மலையரையன் பொன் பாவை வாள் நுதலாள் பெண் திரு நாயக போற்றி
51) ஓம் மலர்க்கொன்றை மலிந்த வரை மார்பில் பெண்மகிழ்ந்த பிரமாபுரமேவிய பெம்மான் போற்றி
52) ஓம் மலை மகளை ஒரு பாகம் வைத்தானே போற்றி
53) ஓம் மரு ஆர் மலர்க்குழல் மாது பங்க போற்றி

54) ஓம் மட்டுவார் குழல் மங்கையாளை ஓர் பாகம் வைத்த அழகா போற்றி
55) ஓம் மாவடு வகிர் அன்ன  கண்ணி பங்க போற்றி
56) ஓம் மாது இருக்கும் பாதியனே போற்றி
57) ஓம் மாது நல்லாள் உமை மங்கை பங்கன் போற்றி
58) ஓம் மாது ஒரு கூறு உடைய பிரான் தன் கழலே போற்றி
59) ஓம் மாதினுக்கு உடம்பிடம் கொடுத்தானே போற்றி
60) ஓம் மைத்தடங்கண் வெருள்புரி மான் அன்ன நோக்கி தன் பங்க போற்றி
61) ஓம் மையார் ஒண் கண் நல்லாள் உமையாள் வளர் மார்பினனே போற்றி
62) ஓம் பஞ்சேர் மெல்லடி மாமலை மங்கை பங்கா போற்றி
63) ஓம் பஞ்சேர் அடியாள் பங்க போற்றி
64) ஓம் பஞ்சு ஏர் அடியாள் பாகத்து ஒருவா போற்றி
65) ஓம் பஞ்சின் மெல்லடியாள் பங்க போற்றி
66) ஓம் பந்து அணை விரலி(விரலாள்) பங்க போற்றி
67) ஓம் பருவரை மங்கை  தன் பங்க போற்றி
68)  ஓம் பண்டொத் தமொழி யாளை யொர் பாகமாய் கொண்டாய் போற்றி
69) ஓம் பணைமுலைப் பாக போற்றி
70) ஓம் பண் தனை வென்ற இன்சொற் பாவையோர் பங்க போற்றி
71) ஓம் பண்ணின் நேர் மொழியாள் பங்க போற்றி
72) ஓம் பண் ஆர்ந்த மொழி மங்கை பங்க போற்றி
73) ஓம் பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி
74) ஓம் பாடக மெல் அடி ஆர்க்கும் மங்கை பங்க போற்றி
75) ஓம் பாதி மாதொடும் கூடிய பரம்பரனே போற்றி
76) ஓம் பழுது இல் தொல் புகழாள் பங்க போற்றி
77) ஓம் புன வேய் அனவளை தோளி பங்க போற்றி
78) ஓம் பூண் முலையாள் பங்க போற்றி
79) ஓம் பெண் சுமந்த பாகத்தா போற்றி
80) ஓம் பெண் ஆளும் பாகனே போற்றி
81) ஓம் பெண் பால் உகந்த பெரும் பித்தா போற்றி
82) ஓம் பெண்ணை தென் பால் வைத்தாய் போற்றி
83) ஓம் பெண்ணின் நல்லாள் பங்க போற்றி
84) ஓம் பெண்ணோர் பாகா போற்றி
85) ஓம் பெண்ணாகிய பெருமான் போற்றி
86) ஓம் பெந்நாப்பட அரவு ஏர் அல்குல் உமை பாகா போற்றி
87) ஓம் போகமார்த்த பூண் முலையாள் பாகா போற்றி
88) ஓம் போரில் பொலியும் வெள்கண்ணாள் பங்க போற்றி
89)ஓம் மலையுடையாள் ஒரு பாகம் வைத்தாய் போற்றி
90) ஓம் மாதொரு பாகனே போற்றி
91) ஓம் மாது இயலும் பாதியனே போற்றி
92) ஓம் மாது ஆடும் பாகத்தா போற்றி
93) ஓம் மஞ்சாடும் ,மங்கை மணாளா போற்றி
94) ஓம் மான் ஓர் பங்கா போற்றி
95) ஓம் மான் நேர் நோக்கி  உமையாள் பங்க போற்றி

96) ஓம் மான் பழித்து ஆண்ட மெல் நோக்கி மணாளா போற்றீ
97) ஓம் மலையாள் மணவாளா போற்றி
98) ஓம் மை இலங்கு நல்கண்ணி பங்கனே போற்றி
99) ஓம் நங்கடம்பனை பெற்றவள் பங்க போற்றி
100) ஓம் நறவிள நறுமென் கூந்தல் நங்கையோர் பாக போற்றி
101) ஓம் நாரி பாகனே போற்றி
102) ஓம் வடிவுடைவாணெடுங் கண்ணுமை பாக போற்றி
103) ஓம் வரை ஆடு மங்கை தன் பங்க போற்றி
104) ஓம் வளையொலிமுன்கை மடந்தையொர் பாக போற்றி
105) ஓம் வார் உறு பூண் முலையாள் பங்க போற்றி
106) ஓம் வார்கொண்ட வன முலையாள் உமை பங்க போற்றி
107)ஓம் வெண்ணகை கருங்கண் திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற் புயங்க போற்றி
108) ஓம் வேயுறு தோளி பங்க போற்றி

# 11 கடம்பவனேஸ்வரர் தரிசனம்




சென்னையிலிருந்து கொங்குமண்டலம் செல்ல திருச்சி வழியாக செல்ல வேண்டியுள்ளதால் வழியில் உள்ள பாடல் பெற்ற தலங்களான கடம்பந்துறை, திருஈங்கோய்மலை, ஐயர்மலை ஆகிய காவிரிக்கரைத் தலங்களை முதலில் தரிசித்தோம். அதிகாலை சென்னையிலிருந்து புறப்பட்டோம், வழியில் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு முசிறி வழியாக ஈங்கோய்மலை அடிவாரத்தை அடைந்த போது காலை 11 மணி ஆகி விட்டது. முதலில் ஈங்கோய்மலை தரிசனத்தை முடித்து விடலாம் என்றெண்ணி மலை ஏற முடிவு செய்து ஏற ஆரம்பித்த போது அடிவாரத்தில் உள்ள போகர் சன்னதியில் இருந்த அன்பர் கடம்பந்துறை ஆலயம் உச்சிக் கால பூசைக்கு பின்னர் திருக்காப்பிட்டு விடுவர் எனவே முதலில் அங்கு சென்று தரிசனத்தை முடித்து விட்டு வந்து விடுங்கள் என்று அறிவுறுத்தினார். எனவே கீழிறங்கி ஆற்றைக் கடந்து ஊருக்குள் சென்று கடம்பந்துறை சென்று முற்றிலா முலையம்மை உடனாய கடம்பவனேஸ்வரரை, பந்நாகம் பூண்ட கயிலைப்பரமனை, தரிசனம் செய்தோம். வாருங்கள் அவ்வாலய தரிசனம் எவ்வாறு அமைந்தது என்று காணலாம்.

மலைக்கோட்டை மாநகர் திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே 33 கிலோ மீட்டர் தொலைவில் கரூர் நெடுஞ்சாலையில் உள்ள காவிரி பாயும் வளமான நகரம் குளித்தலை. தொடர்வண்டி மூலமாகவும் குளித்தலையை அடையலாம். குளித்தலை இரயில் நிலையம் திருச்சி – ஈரோடு இருப்புப்பாதை மார்க்கத்தில் உள்ளது.

அகண்ட காவிரியாம் பொன்னி நதியின் குளிர்ந்த அலைகள் கரையை மோதி நீர்த்திவலைகளை காற்றில் மிதக்க விட்டு மேலும் குளிர்ச்சியை உண்டாக்குகின்றன. ஆதலால் குளிர்தண்தலை என்றும், குழித்த சோலைகளை உடையதால் குழித்தண்டலை என்றும், கடம்ப மரங்கள் நிறைந்த இடமாக இருந்ததால் கடம்பந்துறை, கடம்பை, கடம்பவனம், கடம்பர் கோவில் என்றும், வடக்கு நோக்கிய சன்னதி கொண்ட தலம் என்பதால் காசிக்கு நிகரான தலம் என்பதால் தட்சிணகாசி என்றும் அழைக்கப்படுகிறது இத்தலம்.

குளித்தலையில் உள்ள கடம்பவன நாதர் (கடம்பவனேஸ்வரர்) ஆலயம் தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் 65-வது திருத்தலம் ஆகும். சோழ நாட்டு காவிரி தென்கரைத் தலங்களில் இரண்டாவது தலம்.

'துறை' என்றால் 'ஆற்றின் கரையோரம் அமைந்த ஊர்' என்று பொருள்படும். எனவே கடம்ப மரங்கள் நிறைந்த காவிரிக்கரை ஊர் என்பதால் 'கடம்பந்துறை' என்றழைக்கப்படுகின்றது. பெயருக்கு ஏற்ப திருக்கோவிலின் வெளிச்சுற்றில் உள்ள நந்தவனம் முழுவதும் கடம்ப மரங்கள் நின்று அசைத்தாடுகின்றன. இத்தல இறைவருக்கு கடம்பமரம் தலவிருட்சமாக விளங்குகின்றது. கந்தபுராணத்தில் இத்தலத்தைப்பற்றிய குறிப்புகள் உள்ளன.

"முற்றிலா முலையாள் இவளாகிலும்
அற்றந்தீர்க்கும் அறிவில ளாகிலும்
கற்றைச் செஞ்சடை யான்கடம்பந் துறைப்
பெற்றம் ஊர்தியென்றால் எங்கள் பேதையே"-
என்பது அப்பர் பெருமானின் தேவாரப் பதிகமாகும். இப்பதிகம் ஐந்தாம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது. இப்பதிகம் இத்தலத்து இறைவியின் திருப்பெயருடன் துவங்குகின்றது என்பது சிறப்பு,

பொருள்: எங்கள் பேதையாகிய இவள் முற்றாத இளமுலை உடையாள் ஆயினும், அற்றந் தீர்க்கும் அறிவில்லாதவள் ஆயினும், கற்றைச் செஞ்சடையானாகிய கடம்பந்துறைப் பெருமான் இவர்ந்து வரும் ஊர்தி இடபம் என்று கூறுகின்றாள். உலாப் போந்த தலைவனைக் கண்டு அவன் மேல் காதல் வயப்பட்ட தலைவி அவரது பண்புகளை கூறும் தலைவியின் நிலையைக் கூறும் செவிலித்தாயின் கூற்றாக அப்பர் பெருமான் இப்பதிகத்தை அமைத்திருக்கின்றார்.

கடம் பந்துறை நண்ண நம்வினை யாயின நாசமே,
காமற் காய்ந்த பிரான்கடம் பந்துறை நாம மேத்தநம் தீவினை நாசமே, கடம் பந்துறை மேலா னாஞ்செய்த வல்வினை வீடுமே -
என்று நம் வினைகளை நாசம் செய்யும் இத்தலத்தை
நினைய வல்லவர் நீள்விசும் பாள்வரே என்று அறுதியிடும் திருநாவுக்கரசர்.

ஆரியந்தமி ழோடிசை யானவன்
கூரியகுணத் தார்குறி நின்றவன்
காரிகையுடை யான்கடம் பந்துறைச்
சீரியல்பத்தர் சென்றடைமின்களே - என்று பக்தர்களுக்கு இப்பதிகத்தில் அறிவுறுத்துகிறார்.

"காவிரிசூழ் கடம்பந்துறை யுறைவார் காப்புக்களே."

"கடைமுடிகானூர் கடம்பந்துறை கயிலாய நாதனையே காணலாமே"

"மயிலாடுதுறை கடம்பந்துறை யாவடுதுறை
மற்றுந்துறையனைத்தும் வணங்குவோமே" – என்ற மற்ற பாடல்கள் திருநாவுக்கரசர் வைப்புத்தலமாக (மற்ற ஆலயத்தின் பதிகத்தில் இவ்வாலயத்தையும் பாடுவது) இத்தலத்தை பாடிய பாடல்கள் ஆகும்.

"பரங்கூ ரெங்கள் பிரானுறையுங் கடம்பந்துறை" –என்ற பாடல் சுந்தரர் வைப்புத் தலமாக பாடிய பாடல் ஆகும் .

கடம்பூர் மேவிய விடங்க போற்றி என்று மாணிக்கவாசகர் போற்றியுள்ளார்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசுவாமி தீக்ஷிதர் "நீலகண்டம் பஜேஹம் சததம்" என்று கேதாரகௌள இராகத்தில் ஒரு வடமொழி கீர்த்தனை கடம்பவனேஸ்வரரை போற்றி பாடியுள்ளார்.

மேலும் காடவர்கோன் ஐயடிகளும் இத்தலத்தை பாடியுள்ளார். "கடம்பர் உலா" என்று இத்தலத்திற்கு ஒரு உலாவும் உள்ளது. இவ்வுலாவில் இத்தலத்தின் பிரம்மோற்சவத்தைப் பற்றிய பாடல்கள் உள்ளன. இவ்வளவு சிறப்புப்பெற்ற தலத்தை வந்தடைந்தோம்.

அகண்டகாவிரித் துறையில் அருகருகே அமைந்துள்ள கடம்பந்துறை, வாட்போக்கி , ஈங்கோய்மலை ஆகிய மூன்று தலங்களும் சோமாஸ்கந்த அம்சமாக அமைந்துள்ளன. இவற்றில் கடம்பந்துறை ஸ்கந்தன் அம்சமாகவும், வாட்போக்கி சிவாம்சமாகவும், ஈங்கோய்மலை சக்தி அம்சமாகவும் திகழ்கின்றன எனவே காலையில் கடம்பரையும், உச்சியில் சொக்கரையும் (இரத்னகிரீச்வரர்), மாலையில் திருஈங்கோய் மரகதாசலேச்வரரையும் ஒரே நாளில் தரிசனம் செய்தால் சிறந்த பலன் கிட்டும் என்று தலபுராணமும்; இவர்களுடன் அர்த்த சாமத்தில் கருப்பத்தூர் சிம்மபுரீச்வரரையும் தரிசனம் செய்தால் அளவற்ற பலன் கிட்டும் என்று காவேரி ரஹஸ்ய புராணமும் கூறுகின்றன.
ஒரே நாளில் தரிசிப்பதற்கு எல்லா நாட்களும் ஏற்றவை எனினும், சிவபெருமானுக்கு உகந்த கார்த்திகைச் சோமவாரம் சிறப்பான நாளாகச் சொல்லப்படுகிறது.

முன் மண்டபத்துள் நுழைந்து வடக்கு நோக்கியுள்ள ஐந்நிலை இராஜகோபுரத்தைத் தரிசித்து விட்டு உள்ளே நுழைந்தால், நந்தி தேவர் அமர்ந்திருக்க கருவறையின் உள் சிறிய சிவலிங்கத் திருமேனியுடன் காட்சி தருகிறார் கடம்பவனநாதர். இவர் வடக்கு திசை நோக்கி வீற்றிருப்பது ஒரு தனி சிறப்பு. தமிழகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான சிவாலயங்களில் சென்னை கோயம்பேடு குறுங்காலீசுவரரும், குளித்தலை கடம்பவனநாதர் இருவர் மட்டுமே வடக்கு நோக்கி அருள்பாலிக்கின்றனர். வடக்குப் பார்த்த லிங்கம் அமைந்துள்ள தலம் முக்தித்தலம் ஆகும்.

இறைவர் கோயில் கடம்பர், ஆதி கடம்பர், இளங்கடம்பர், பெருங்கடம்பர், கடம்பைப்பதியான் என்று பல திருப்பெயர்கள் அழைக்கப்படுகிறார்.



அம்பாள் சன்னதி பின்னெழில்

மூலவருக்குப் பின்புறம் கருவறையில் சப்த கன்னியர்கள் வீற்றிருப்பது எங்குமில்லாதச் சிறப்பாகும். இது பற்றி தல வரலாறு இவ்வாறு சொல்லப்படுகிறது. முன்னொரு காலத்தில் தூம்ரலோசனன் என்ற அசுரன் துர்க்கா தேவியைப் போரிட்டு எதிர்த்தான். அசுரனது கணைகளால் தேவியானவள் சோர்வுற்ற போது சப்த கன்னியர்கள் அசுரனை எதிர்த்து கோபாவேசத்துடன் போரிட்டனர். அவர்களை எதிர்க்க இயலாத அசுரன் புறமுதுகு

காட்டி ஓடி, சூரியனை நோக்கித் தவம் புரியும் காத்யாயன முனிவரது ஆசிரமத்திற்குச் சென்று ஒளிந்திருந்தான். அரக்கனைத் தேடி வந்த சப்த மாதர் அங்குத் தவம் புரியும் முனிவரே அசுரனது மாயை எனக் கருதி, அவரைக் கொன்றனர். அதனால் அவர்களைப் பிரமஹத்தி தோஷம் பற்றியது. அவர்கள் தங்களது தோஷம் நீங்க அருளும்படி அம்பாளை வேண்டினர். அம்பாளின் கூற்றுப்படி இத்தலத்தில் சிவனை வேண்டிக் கொண்டு சாப விமோசனம் பெற சப்தகன்னிகள் இங்கு வந்து தவமிருந்தனர்.

சிவன் அவர்களுக்கு கடம்ப மரத்தில் காட்சி தந்து சாபவிமோசனம் கொடுத்தார். அசுரனை அழித்தால் தங்களுக்கு மீண்டும் தோஷம் ஏற்படும் அன்று கருதிய சப்தகன்னியர், அசுரனை அழித்து தங்களைக் காக்கும்படி இறைவனிடம் முறையிட்டனர். சிவபெருமானும் அசுரனை அழித்தார். இத்தலத்தில் சப்தகன்னியர்களுக்கு இறைவன் பாதுகாப்பாக இருப்பதாக ஐதீகம். எனவே இத்திருக்கோவிலில் துர்க்கை அம்மன் திருமேனி இல்லை. சப்தகன்னியருள் ஒருவரான சாமுண்டியே இத்தலத்தில் துர்க்கையாக இருப்பதாகவும், அவருக்கே இராகுகால பூஜை நடைபெறுவதாகவும் கூறுகின்றனர். இராகுகால வேளையில் சாமுண்டிக்கும், சிவனுக்கும் விசேஷ பூஜைகளும் நடக்கிறது.

கடம்பவன நாதரை சப்தகன்னியர் மட்டுமில்லாது அகத்தியரும், கண்வமுனிவரும் வழிபட்டுள்ளனர். கண்வமுனிவருக்கும் சிவபெருமான் கடம்ப மரத்தில் காட்சி தந்துள்ளார். முருகப்பெருமான் பூஜித்த தலம் என்பதால் ‘கந்தபுரம்’ என்றும், அசுரனிடம் இருந்து திருமால் வேதங்களை மீட்க இத்தல இறைவனை வழிபட்டதால் ‘சதுர்வேதபுரம்’ என்றும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.


முன் மண்டபத்தின் வலப்பக்கத்தில் அகத்திய முனிவரும், கண்வ முனிவரும் கடம்பவன நாதரை வழிபடும் சுதை சிற்பத்தை தரிசிக்கலாம். மறு புறம் அப்பரும் சம்பந்தரும் வழிபடும் சுதை சிற்பத்தை தரிசிக்கலாம்.

முன்னம் ஒரு கற்ப காலத்தில், பிரம்ம தேவனானவர் ஓய்வின்றி சிருஷ்டித் தொழிலைச் செய்து வருதலால் மனம் வருந்தி, சிவபெருமானை வந்தித்துச் சிவானந்தப் பெரு வாழ்வு பெற வேண்டிக் கயிலை மலையை அடைந்து தனது உள்ளக் கருத்தைச் சிவபிரானிடம் விண்ணப்பித்தார். பிரம்மனது தோத்திரத்தால் மகிழ்ந்த இறைவன், பிரம்மனைத் தவம் செய்யுமாறு அருளவே, அதற்கான இடம் கடம்பந்துறை என்றும் திருவாய் மலர்ந்தருளினான்.

திருவருளை எண்ணி மகிழ்ந்த பிரம்மன், பல்வேறு தலங்களை வணங்கிப் பின் கடம்பவனத்தை அடைந்து, காவிரியில் நீராடி, கடம்ப மர நிழலில் பல்லாண்டுகள் தவம் புரிந்தான். அதன் பலனாக, கடம்பவனநாதர் பிரம்மனுக்குக் காட்சி அளித்து, தனது திருக்கரங்களை அவனது முடி மேல் வைத்து, "காவிரியை நோக்கி வட திசை நோக்கி இருக்கும் மகாலிங்கத்தில் நாம் எழுந்தருளி, உமாதேவியுடன் ஐந்தொழில் நடனங்கள் செய்து வருவதால் இங்கு நம்மை வழிபடும் அனைவரும்

தாம் விரும்பிய அனைத்தையும் பெறுவர். அக்கினித் திக்கில் உள்ள தீர்த்தத்தைச் சீர் செய்து, கிழக்கு நோக்கியவாறு ஒரு சன்னதியை உமா தேவிக்கும் அமைத்துச் சித்திரை மாத சித்திரை நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவமும் செய்வித்துப் பின்னர் சாயுச்சிய பதவியை அடைவாயாக" என்று அருளி, அம்மகாலிங்கத்தில் மறைந்தருளினார். அதன்படியே பிரம்மனும் திருவிழா நடத்திப் பின்பு சிவானந்தம் பெற்றான்.

ஒருமுறை அகத்திய முனிவர் இங்குத் தவம் செய்வதைக் கண்ட மற்ற முனிவர்கள் அவரை வணங்கி, "இத்தலத்தைத் தரிசித்துக் கபிலைப் பசுவை தானம் செய்வது சிறப்பு " என்கிறார்களே, அதன் மகிமையைத் தேவரீர் விளக்கி அருளவேண்டும் என்று வேண்ட, அகத்தியரும் கபிலை மான்மியத்தை எடுத்து உரைத்தார். கபிலைப் பசுவானது பருத்த கண்களும் சிவந்த உரோமமும் கொண்டது. அக்னி சம்பந்தப்பட்டது. ஆகவே ஆக்னேயி எனப்பட்டது. அதன் பால், தயிர் போன்றவற்றை உட்கொள்ளலாகாது. ஆனால் பஞ்சகவ்யத்தை உண்டால் அஸ்வமேத யாக பலனைப் பெறலாம். இதனை வலம் வந்தால், பூமி முழுதும் வலம் வந்த பலன் கிடைக்கும். இதன் கொம்புகளைக் கழுவி, தண்ணீரைத் தலையில் தெளித்துக்கொண்டால் இஷ்டசித்திகள் யாவும் பெறலாம். தானங்களில் சிறந்தது கபிலைப் பசுவைத் தானம் செய்வதே ஆகும். இப்பசுவில் பத்து வண்ண வகைகள் உண்டு. அவற்றுள் பொன்னிறம் கொண்டதே உத்தமம் என்பர். இதனைப் புண்ணியத் தலங்களில் தானம் செய்தால் சிவனருளைப் பெறுவார்கள்.




கபிலையின் பெருமையைக்கேட்ட முனிவர்கள் அகத்தியரை வணங்கி, "முனிவர் பெருமானே, இங்கு தேவசர்மர் என்பவர் பல்வேறு பாவங்களால் பீடிக்கப்பட்டுச் செய்வதறியாது உழல்கிறார். அவர் ஒரு கபிலையத் தானம் செய்யச் சித்தமாக உள்ளார். அப்பசுவைப் பெறத் தகுதியானவர் தங்களைத் தவிர வேறு எவருமில்லை. எனவே தாங்கள் மனமிரங்கி அப்பசுவைப் பெற்றுக் கொண்டு தேவசர்மருக்கு அருள வேண்டும்" என்று வேண்டினார்கள். அகத்தியரும்

அவ்வாறு தானம் பெற்றவுடன் தேவசர்மர் தனது பாவம் யாவும் நீங்கப்பெற்று, முனிவர்கள் சூழ, கடம்பவன நாதர் சன்னதியை அடைந்து துதித்தனர். தேவ சர்மரின் பிரார்த்தனைக்கிரங்கிய பெருமான், முனிவர்கள் அனைவருக்கும் தாம் முன்னர் மதுரையில் தடாதகைப் பிராட்டியை மணந்த திருக்கோலத்தைக் காட்டி அருளினார். ஆதலால் இத்தலம் வடமதுரை என்றும் அறியப்படுகிறது. மதுரையைப் போலவே கடம்பவனம் என்பதாலும் வடமதுரை எனலாம்.

முன்னொரு காலத்தில் சோமுகன் என்ற அசுரன் ஒருவன் வேதங்கள் யாவற்றையும் கவர்ந்து கொண்டு பாதாள லோகம் சென்று விட்டான். இதனால் கலக்கமுற்ற விஷ்ணு முதலிய தேவர்கள் கடம்பவனத்தை அடைந்து பெருந்தவம் செய்தனர். அத்தவப்பலனாக விஷ்ணுவானவர் மச்சாவதாரம் எடுத்துப் பாதாளம் சென்று அசுரனை மாய்த்து, வேதங்களை மீண்டும் கொண்டு வந்து கடம்பவனத்தில் ஸ்தாபித்தருளியதால் இத்தலம் வேதபுரி எனப்பட்டது. கடம்பவனநாதருக்குரிய மந்திரத்தைப் புண்ணிய காலங்களில் ஜபித்தால் பெறுதற்கரிய பேறுகள் அனைத்தையும் இம்மையிலும் மறுமையிலும் பெறலாம்.

கயிலை மலையில் சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தபோது அதனை முறையாக உபதேசம் பெற்றுக் கேளாமல் மறைந்திருந்து முருகப்பெருமான் கேட்ட குற்றத்திற்காக ஊமை ஆயினார். பல்வேறு தலங்களிலும் வழிபட்ட முருகக்கடவுள் கடம்பந்துறையை அடைந்து தவம் செய்யவும், குற்றம் நீங்கப்பெற்றதோடு, ஊமைத்தன்மையும் நீங்கப்பெற்றார். குமாரக்கடவுளின் துதிகளால் மகிழ்ந்த சர்வேசுவரனும் உமையன்னையோடு காட்சி அளித்து சுப்பிரமணிய மூர்த்தியைத் தனது மடி மீதிருத்தி ஞானோபதேசம் செய்தருளினார். அதனால் இத்தலம் “ஞானோதயபுரி” எனப்பட்டது. இங்கு எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்த மூர்த்தியைத் தரிசிப்போர் எல்லா நற்பலன்களையும் பெறுவர்.

சித்திரை, வைகாசி மாதங்களில் பௌர்ணமி தினங்களில் இத்தலத்தில் வழிபடுவோர் பெறும் பலன் அளவிடற்கரியது. இங்கு அன்னதானம் செய்தால் பிற தலங்களில் செய்வதைக் காட்டிலும் அதிக பலனைப் பெறலாம்.

கிருத யுகத்தில் பிரம்மன் பூஜித்ததால் சுவாமிக்குப் பிரமேசுவரர் என்ற நாமம் ஏற்பட்டது. திரேதாயுகத்தில் சப்த கன்னிகைகள் பூசித்து நற்கதி பெற்றனர். துவாபரயுகத்தில் அகத்திய முனிவர் வழிபட்டுப் பேறு பெற்றார். கலியுகத்தில் புண்ணிய மூர்த்தியாகிய ஆறுமுகக் கடவுள் பூசித்தார் என்ற மேற்கூறிய வரலாறுகள் தல புராணத்தில் உள்ளது.



## கோவில் அமைப்பு:

வடக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், கோபுரத்திற்கு வெளியே 16 கால் முன் மண்டபமும் சுற்றியும் கடம்ப மரங்களை கொண்டு இவ்வாலயம் எழிலாக விளங்குகிறது. மண்டப முகப்பில் விநாயகர், ரிஷப வாகனத்தில் சுவாமி அம்பாள், முருகர் சுதை சிற்பம், கடம்பனனேஸ்வரர் ஆலயம், குளித்தலை என்ற பெயர்ப் பலகை நம்மை வரவேற்கின்றது. இம்மண்டபத்தின் மேற்கூரையில் மீன் சிற்பங்களை காணலாம். 5 நிலை கோபுர வாயில் வழியே உள்ளே நுழைந்தால் ஒரு நீண்ட மண்டபம் நம்மை வரவேற்கிறது. இம்மண்டபத்தில் கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியவற்றைக் காணலாம். ஆலயத்தில் எப்பக்கம் திரும்பினாலும் சிவ சிவ என்னும் திருமந்திரம்.

வெளிப் பிரகாரத்தின் வடமேற்குப் பகுதியில் இறைவி “முற்றிலா முலையம்மை” சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. வடமொழியில் பாலகுஜாம்பாள். திருவேணி என்ற திருநாமமும் உண்டு. அம்பிகைக்கு இரு மகன்கள் இருந்தாலும், அவர்களை கருவில் சுமந்து இறைவி பெறவில்லை என்பதால், முலைகள் இளமையானது என்று கூறுகின்றனர். அப்பர் இத்தல பதிகத்தின் முதல் வரியிலேயே அம்பாளைப் பாடுகிறார். நின்ற கோலத்தில் மேல் கரங்களில் தாமரை மலர்களைத் தாங்கி, கீழ்க்கரங்கள் அபய வரத கரங்களுடன் அன்னை எழிலாக அருள் பாலிக்கின்றார். அம்பாள் சன்னதிக்கு முன்புறம் "பரமநாதர்' காவல் தெய்வமாக இருக்கிறார். இவர் தனது வலது கையை நெற்றி மேல் வைத்து, மரியாதை செய்தபடி வித்தியாசமான கோலத்தில் இருக்கிறார். இவருக்கு தேன் அபிஷேகம் செய்து, பாசிப்பருப்பு பாயசம் படைத்து வழிபடுகிறார்கள். இவ்வாறு செய்வதால் அவர்கள் குடும்பத்திற்கு சுவாமி பாதுகாப்பாக இருப்பார் என நம்புகிறார்கள். அம்மன்

சன்னதி அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடன் அற்புதமாக விளங்குகின்றது. அம்பாளை

சிற்றிடையும் இருகரமும் சேவடியும் மலர் முகமும்
பற்றிடுவோர் வினையொழிக்கும் பரங்கருணை திருநோக்கும்
உற்றடியார் பணி கடம்ப வனமேவும் ஒரு தேவி
முற்றிலா முலையம்மை முளரீ மலர் அடி போற்றி – என்று போற்றி வணங்கினோம் . அம்பாளுக்கு நவராத்திரி உற்சவம் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

வெளிப்பிரகாரத்தை வலம் வந்து அம்பாளை தொழுதபின் நடு வாயிலைக் கடந்து சென்றால் இறைவன் கருவறையை அடையலாம். இறைவன் கடம்பவன நாதர் இலிங்கத் திருவுரு இவருக்கு சுந்தரேசர், சௌந்தரேசர் என்கிற வேறு பெயர்களும் உண்டு. சுவாமிக்கு பின்புறம் சப்த கன்னியர் உருவச் சிலைகள் இருக்கின்றன.

சுவாமி வடக்கு நோக்கி இருப்பதால் எதிரே தெற்கு நோக்கியபடி ஆடவல்லான் நடராஜர் இருக்கிறார். அவரது காலடியில் முயலகன் இல்லை. பொதுவாக ஒரு ஆலயத்தை பிரகார வலம் வரும் போது, கருவறை கோஷ்டத்தின் பின்புறம் இலிங்கோத்பவரோ, மகாவிஷ்ணுவோ இருப்பார்கள். ஆனால் இங்கே தட்சிணாமூர்த்தி இருக்கிறார் இவரது மண்டபத்தை சிம்மங்கள் தாங்குகின்றன. அவர் எதிரே இலிங்கோத்பவர் காட்சி தருகிறார். திருமாலும், பிரம்மனும் பெருமானை வணங்கிய கோலத்தில் காட்சி தருகின்றனர். வழக்கமாக தெற்கு நோக்கி இருக்கும் சண்டிகேஸ்வரர் மேற்கு முகமாகவும், வடக்கு பார்த்திருக்கும் பிரம்மா கிழக்கு முகமாகவும் இருக்கின்றனர்.

உட்பிராகாரத்தில் கிழக்கு நோக்கியபடி விநாயகர், சுப்பிரமணியர் அருள்பாலிக்கின்றனர், நவக்கிரகங்கள், ஜேஷ்டாதேவி, நால்வர், அறுபத்து மூவருடைய மூல, உற்சவத் திருமேனிகள், விஸ்வநாதர், கஜலட்சுமி ஆகிய சன்னதிகள் இச்சுற்றில் அமைந்துள்ளன. அறுபத்துமூவர் விழா திருமேனிகள் அழகு நிறைந்தவை.

பிரகாரத்தில் உள்ள நவக்கிரக சன்னதியின் மேலே ஆறுமுகங்களுடன் சுப்பிரமணியராக வள்ளி, தெய்வானையுடன் அருள் பாலிக்கின்றார். உற்சவர் ஒரு திருமுகத்துடன் மயில் மீதமர்ந்து காட்சி தருகிறார். செவ்வாய் தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் செவ்வாய்க்கு அதிபதியான முருகனையும், நவக்கிரகத்தில் செவ்வாயையும் வழிபடுகின்றனர். அருகே சனீஸ்வரருக்கு தனிச்சன்னதி உள்ளது .

புணரியும னங்கனம் புஞ்சுரும் புங்கருங்
கயலினொடு கெண்டையுஞ் சண்டனுங் கஞ்சமும்
புதுநிலவ ருந்தியுந் துஞ்சுநஞ் சும்பொருப் பெறிவேலும்
பொருவெனஇ கன்றகன் றங்குமிங் குஞ்சுழன்

றிடைகடைசி வந்துவஞ் சம்பொதிந் திங்கிதம்
புவியிளைஞர் முன்பயின் றம்பொனின் கம்பிதக் குழைமோதிக்
குணலையொடு மிந்த்ரியஞ் சஞ்சலங் கண்டிடும்
படியமர்பு ரிந்தருஞ் சங்கடஞ் சந்ததங்
கொடுமைசெய்து சங்கொடுஞ் சிங்கிதங் குங்கடைக் கணினார்பால்
குலவுபல செந்தனந் தந்துதந் தின்புறுந்
த்ரிவிதகர ணங்களுங் கந்தநின் செம்பதங்
குறுகும்வகை யந்தியுஞ் சந்தியுந் தொந்தமற் றமைவேனோ
துணர்விரிக டம்பமென் தொங்கலும் பம்புறும்
புழுகுமச லம்பசுஞ் சந்தனங் குங்குமந்
தொகுகளப முந்துதைந் தென்றுநன் கொன்றுபத் திருதோளுந்
தொலைவில்சண்மு கங்களுந் தந்த்ரமந் த்ரங்களும்
பழநிமலை யும்பரங் குன்றமுஞ் செந்திலுந்
துதிசெயுமெ யன்பர்தஞ் சிந்தையுஞ் சென்றுசெய்ப் பதிவாழ்வாய்
கணபணபு யங்கமுங் கங்கையுந் திங்களுங்
குரவுமறு குங்குறுந் தும்பையுங் கொன்றையுங்
கமழ்சடில சம்புவுங் கும்பிடும் பண்புடைக் குருநாதா
கனகுடகில் நின்றகுன் றந்தருஞ் சங்கரன்
குறுமுனிக மண்டலங் கொண்டுமுன் கண்டிடுங்
கதிசெய்நதி வந்துறுந் தென்கடம் பந்துறைப் பெருமாளே.

என்று அருணகிரிநாதர் இத்தல முருகனை பாடியுள்ளார்.

பொருள் : (முதல் 9 வரிகள் விலைமாதர் கண்களை வர்ணிக்கின்றன). கடலும், மன்மதனுடைய பாணங்களும், வண்டும், கரிய கயல் மீனும், கெண்டை மீனும், யமனும், தாமரையும், புதிய நிலவை (சந்திரிகையை) உண்ணும் (சகோரப்) பட்சியும், விஷமும், கிரவுஞ்ச மலையைத் தூளாக்கிய (உனது) வேலும் ஒப்பாகும் என்னும்படி, பகை பூண்டதாய், அகன்றதாய், பல திசைகளில் சுழல்வதாய், மத்தியிலும், ஓரத்திலும் சிவந்ததாய், வஞ்சகமான எண்ணத்தை அடக்கியதாய், பூமியில் உள்ள இளைஞர்கள் முன்பு இனிமையை (திறமையுடன்) காட்டி, அழகிய பொன்னால் ஆன, அசைகின்ற குண்டலங்கள் மீது மோதி, ஆரவார நடிப்புடன் (காண்பவரின்) ஐம்பொறிகளும் துன்பம் காணும்படி கலகப் போர் செய்து,கொடிய வேதனை உண்டாகும்படி எப்போதும் கொடுமை செய்யும் கொடி ஏந்தி உள்ளதும், விஷம் தங்குவதுமான கடைக் கண் பார்வை கொண்ட விலைமாதர்களிடத்தில், விளங்கும் பல வகையான செவ்விய பொருள்களை மீண்டும் மீண்டும் கொடுத்து மகிழ்ச்சி அடைகின்ற (மனம், வாக்கு, காயம் என்னும்) மூன்று வகையான கருவிகளும், கந்த வேளே, உனது செம்மை நிறைந்த திருவடியை அணுகுதற்கு, காலையும் மாலையும் உலகத் தொடர்பு நீங்கி ஒருமைப்பட்டு இருக்க மாட்டேனோ?

பூங்கொத்துக்கள் விரிந்த கடப்ப மரத்தின் மலர்களால் ஆகிய மென்மையான மாலையும், நிறைந்துள்ள புனுகும், மலையில் விளையும் பசுமையான சந்தனமும், குங்குமமும், கூட்டப்பட்ட கலவைச் சாந்தும் ஒன்று கூடி நெருங்கிப் பொதிந்துள்ளனவும், எப்போதும் நன்மையே பாலிக்கும் பன்னிரண்டு தோள்களும் , அழிவு இல்லாத உனது ஆறு முகங்களையும், உனது பூஜைக்கு உரிய

நூல்களையும், மந்திரங்களையும், பழனி மலையையும், திருப்பரங்குன்றத்தையும் , திருச்செந்தூரையும் துதி செய்து போற்றுகின்ற மெய் அன்பர்களுடைய மனத்தில் புகுந்தும், வயலூர் என்னும் தலத்தில் வீற்றிருப்பவனே, கூட்டமான படங்களை உடைய பாம்பும், கங்கை நதியும், சந்திரனும், குரா மலரும், அறுகம் புல்லும், சிறிய தும்பையும், கொன்றை மலரும், நறுமணம் கமழும் சடையை உடைய சிவபெருமானும் வணங்கும் பெருமையைக் கொண்டுள்ள குரு நாதனே, சிறப்பு வாய்ந்த குடகில் உள்ள மலையினின்று வரும் காவிரி, சிவபெருமானை வழிபடும் குட்டை வடிவம் கொண்ட அகத்தியர் கொண்டு வந்த கமண்டலத்திலிருந்து முன்பு தோன்றி வெளி வந்த காவிரி நதி வந்து பொருந்தும் தென் கடம்பந்துறையில் வீற்றிருக்கும் பெருமாளே. (இப்பாடலில் குடகு மலையிலிருந்து காவிரி உற்பத்தியாகும் அழகை அருணகிரியார் பாடியுள்ளார்.)



இராஜ கோபுரம்

இக்கோவிலில் இரண்டு சோமஸ்கந்த மூர்த்திகள் மற்றும் இரண்டு நடராஜர் மூர்த்திகள் அருள் பாலிக்கின்றனர். ஒரு நடராஜ மூர்த்தியின் காலடியில் முயலகன் இருக்க மற்றொன்றில் இல்லை. இத்தலத்தின் விநாயகர் அனுக்ஞை விநாயகர். இங்குள்ள விமானம் திரிதளம்.

அழகு திரிகுரம்பை யாங்கது விட் டாவி
ஒழுகும் பொழுதறிய வொண்ணா-கழகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் றென்பாற்
குழித்தண் டலையானைக் கூறு – என்று காடவர்கோன் தமது திருவெண்பாவில் இத்தலத்தை பாடியுள்ளார்.

இத்தலத்தின் தீர்த்தம் அக்னி தீர்த்தம் ஆகும். மாசி மாதத்தில் தேரோட்டத்துடன் 13 நாட்கள் பெருவிழாவும், தைப்பூசத் திருவிழாவும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. வைகாசி விசாகம், கந்த சஷ்டி, பங்குனி உத்திரம் ஆகிய விழாக்களும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. தைப்பூச தீர்த்தக் காட்சிகள் ஓவியங்களாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கோயிலுக்கு எதிரே அகண்ட காவிரி ஓடுகிறது. சப்த கன்னியருக்கு சிவபெருமான், தைப்பூசத்தன்று தரிசனம் அளித்ததாக ஐதீகம். எனவே, அந்நாளில் இவர் காவிரியில், அம்பாளுடன் எழுந்தருளுகிறார். இவருடன் சுற்றுப்பகுதியில் உள்ள 7 சிவன்களும் எழுந்தருளுகின்றனர். அன்று ஒரே நாளில் 8 சிவன்களையும் தரிசிக்கலாம்.

தைபூசத்தன்று மாலை 5.30 மணிக்கு குளித்தலை கடம்பவனேஸ்வரர் கோவில் எல்லை முன்பு மற்ற 7 ஊர் சுவாமிகளை வரவேற்று, பின்னர் காவிரி ஆற்றில் 8 சுவாமிகளும் பக்தர்களுக்கு அருள்பாலித்து எட்டு சுவாமிகளும் காவிரி ஆற்றில் மூழ்கி தீர்த்தவாரி நடைபெறுகின்றது. அதன் பின் பக்தர்களுக்கு அஷ்டமா சித்தி அருளும் பொருட்டு அனைத்து சுவாமிகளும் அங்கு அமைக்கப்பட்டுள்ள மேடையில் விடிய விடிய பக்தர்களுக்கு தரிசனம் அளிக்கிறனர்.



ஆண்டுதோறும் தைப்பூச திருவிழாவில் தைப்பூசத்தன்று இரவு கடம்பந்துறை முற்றிலா முலையம்மை உடனுறை கடம்பவனேச்வரர், இரத்தினகிரி கரும்பார் குழலி உடனுறை இரத்தினகிரீச்வரர், இராஜேந்திரம் தேவநாயகி உடனுறை மத்தியார்ச்சுனேச்வரர், பேட்டைவாய்த்தலை தேவநாயகி உடனுறை மத்தியார்ச்சுனேச்வரர். கருப்பத்தூர் சுகந்தகுந்தளாம்பாள் உடனுறை சிம்மபுரீச்வரர், திருஈங்கோய் மலை மரகதாம்பாள் உடனுறை மரகதாலேசுவரர், முசிறி கற்பூரவல்லி உடனுறை சந்திரமௌலீச்வரர், வெள்ளூர் சிவகாமியம்மை உடனுறை திருக்காமீச்வரர் ஆகிய எட்டு ஊர் இறைவன் இறைவிகள் காவிரிக்கரையில் எழுந்தருளி, தீர்த்தம் அளித்து, அன்று இரவு அவரவர்களுக்கு ஏற்பாடு செய்துள்ள அலங்காரப் பந்தலில் கொலு வீற்று ஆயிரக்கணக்கானவர்களுக்கு காட்சி கொடுத்து மறுநாள் அவரவர்கள் ஆலயம் செல்லும் காட்சி வேறு எங்கும் காணக்கிடைக்காத அரிய காட்சி ஆகும். இரவு முழுவதும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

**கல்வெட்டு கூறும் விவரங்கள்:** பாகையென்பது தொண்டைநாட்டில் திருக்கூவமென்னும் தலத்துக்கு அருகில் உள்ளது பாகசாலை என்னும் ஊர். அவ்வூரின் பெருந்தனவந்தர் சரவண முதலியார் என்பவர் சற்றேறக்குறைய 200 வருடங்களுக்கு முன்பு திரிசிராப்பள்ளி நவாபிடம் மந்திரியாக இருந்தார். அவர் இத்தலத்தில் இருந்த திருவாவடுதுறை ஆதீனத்து மடத்தில் மடாதிபதியாக இருந்தவரிடம் நண்பராக இருந்தார். அவ்விருவரும் சேர்ந்து கடம்பந்துறைக்கோயிலை புதுப்பித்து திருத்தேர், திருவாபரணம் முதலியவை

செய்து வைத்திருக்கின்றார்கள். பல ஜமீன்தார்கள் சரவண முதலியாரின் தெய்வபக்தி முதலியவற்றை உணர்ந்து இவருக்குப்பல கிராமங்களை செப்புச்சாசனம் மூலமாக அளித்திருக்கிறார்கள். சரவண முதலியாரின் உருவம் கடம்பந்துறைக்கோவில் தூணில் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கல்வெட்டு மூலம் தெரியவருகின்றது.

காலைக் கடம்பரை, சூலப்படையானை, மாலும் தெரியா வடிவத்தானை, கொத்த வரும் கொக்கிறகு சூடினானை, பவளச்சடையானை, பால் வெண்ணீற்றானை மதியம் தரிசிக்கும் வாய்ப்பே அவனருளால் வாய்த்தது ஆயினும் யாத்திரை அருமையாக துவங்கிய மகிழ்ச்சியில் அடுத்து அகத்தியர் ஈ வடிவத்தில் வழிபட்ட ஈங்கோய்மலையாரை தரிசிக்க கிளம்பினோம்.

# 12 *ஈங்கோய்மலையார் தரிசனம்*



ஈங்கோய் மலை

வரிசைக்கிரமமாக முதலில் ஐயர்மலையை தரிசித்துவிட்டு அடுத்து ஈங்கோய்மலையை தரிசிக்கலாமா? என்ற எண்ணம் மனதில் தோன்றியது, ஆயினும் ஈங்கோய்மலையில் படிகள் குறைவு என்பதாலும் வெயில் அதிகமாக இருப்பதாலும் முதலில் இங்கு தரிசனத்தை முடித்து விட்டால், முடிந்தவர்கள் மட்டுமே ஆயிரம் படிகள் கொண்ட ஐயர் மலையை ஏறலாம் என்று முடிவு செய்து ஈங்கோய்மலைக்கே திரும்பி சென்றோம்.

புராண மற்றும் சரித்திர சிறப்புகள் பெற்றதும் தென் கயிலாயம் என்று அறியப்படும் இத்தலத்தின்

இறைவர் திருப்பெயர் : மரகதாசலேசுவரர், மரகதாசலர், திரணத்ஜோதீஸ்வரர், ஈங்கோய்நாதர்.

இறைவியார் திருப்பெயர் : மரகதாம்பிகை, லலிதா, மரகதவல்லி.
தல மரம் : புளியமரம்.
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்.
வழிபட்டோர் : அம்பிகை, அகத்தியர் (ஈ வடிவில்), சுந்தரர், பிருகு முனிவர்.
தேவாரப் பாடல்கள் : திருஞானசம்பந்தர், நக்கீரர்.

**<u>இத்தலத்தின் தனி சிறப்புகள் :</u>**

இத்தல இறைவன் மரகதத்தால் ஆன சுயம்பு மூர்த்தியாக அருள் பாலிக்கிறார். இவரை ஈங்கோய்மலையெம் எந்தாய் போற்றி என்று மணிவாசகப் பெருமான் பாடியுள்ளார்.

அம்பாளுக்கு, சிவன் தன் இடப்பாகம் தர உறுதி தந்த மலை.

உமையம்மை, திருமால், பிரம்மன், இந்திரன், இயமன், அகத்தியர், நவசித்தர்கள், சுப்பிரப அரசன் வழிபட்ட தலம்.

அகத்தியர் ஈ உருவத்தில் இங்குள்ள இறைவனை வழிபட்டதால் ஈங்கோய்மலை என்று பெயர் வந்தது.

அம்மனின் 51 சக்தி பீடங்களில் இத்தலம் சாயா சக்தி பீடம் ஆகும்.

ஒவ்வொரு வருடமும், சிவராத்திரி அல்லது அதற்கு முதல் நாளன்று, ஆதவனின் கதிர்கள், இம்மரகத நாதர் மீது படிவது, இத்திருத்தலத்தின் பெரும் சிறப்பு.

மலைமேல் கோவில் 560 படிகள் உள்ளது.

சுந்தரருக்கு சொர்ணபுளியங்காய் ஈந்த தலம்.

திருஞான சம்பந்தர், இத்தலத்தைப் பற்றிப் பாடிய பாடல்கள் பன்னிரு சைவத் திருமுறைகளில் முதலாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

நக்கீரர் இம் மலையின் பெருமையைத் திருஈங்கோய்மலை எழுபது என்னும் ஞானநூலாகப் பாடியுள்ளார். அப்பர் பெருமானும், மாணிக்கவாசகரும், பட்டினத்தாரும் வைப்புத்தலமாக பாடியுள்ளனர்.

**மலைத் தலம் :** சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் காவிரிக்கரையில் அமைந்த தலங்கள் 190. இவற்றுள் காவிரி வடகரைத் தலங்களில் அமைந்துள்ள 63வது தலமாகும் இத்தலம் (நிறைத் தலம்). குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பதற்கிணங்க பெரும்பாலான குன்றுகளில் முருகன் ஆலயம் அமைந்திருப்பதால் கயிலை மலையானாம் சிவபெருமானுக்கு மலை மீது அமைந்த தலங்கள் மிகக்குறைவு. அதில் ஒன்று ஈங்கோய்மலை. எனவே மலைக்கோவில் என்றும் அழைக்கப்படுகின்றது. தொலைவில் இருந்து நோக்கினால் இரட்டை மலை போல தோற்றமளிக்கிறது எனவே சிவசக்தி வடிவம் என்று சொல்லுமாறு இரட்டை மலையாக விளங்குகிறது ஈங்கோய்மலை.

திருச்சி மாவட்டத்தில் மேலும் திரிசிராப்பள்ளி, இரத்தினகிரி (ஐயர்மலை), திருகற்குடி மலை (உய்யக்கொண்டான் மலை), திருஎறும்பியூர் மலை ஆகிய நான்கு மலைக் கோவில்கள் உள்ளன.

தற்போது இத்தலம் திருவீங்கநாத மலை, திருவீங்கிநாத மலை, திருவேங்கிநாத மலை, திருவங்கிநாத மலை என்றும் அழைக்கப்படுகின்றது.

வானத்துயர்தண் மதிதோய்சடைமேன் மத்த மலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவி பாகமாக்
கானத்திரவி லெரிகொண்டாடுங் கடவு ளுலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சாரல் ஈங்கோய் மலையாரே.

பொருள்: வானத்தில் உயர்ந்து விளங்கும் குளிர்ந்த சந்திரன் தோயும் சடைமுடி மேல் ஊமத்தம் மலர்களைச் சூடித் தேன்போன்ற இனிய மொழிகளையும் மான் விழிபோலும் கண்களையுமுடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு சுடுகாட்டில் இரவில் எரியேந்தி ஆடும் இறைவர் உலகமக்கள் உணர்ந்து போற்றுமாறு பன்றிகள் பல கூடி இறங்கி வரும் சாரலையுடைய திருவீங்கோய்மலையில் எழுந்தருளியுள்ளார் என்று திருஞானசம்பந்தர் பாடிய இத்தலத்தின் சில வரலாறுகளைப் பற்றி காணலாம் அன்பர்களே.

சக்திமலை: அம்பாளுக்கு, சிவன் தன் இடப்பாகம் தர உறுதி தந்த மலை என்பதால் இம்மலையை 'சக்திமலை' என்கின்றனர். இதனை உணர்த்தும் விதமாக முன் மண்டபத்திலும், மலையிலும் அர்த்தநாரீஸ்வரர் வடிவங்கள் உள்ளன. பிருகு முனிவர் சிவனை மட்டுமே வணங்கும் வழக்கம் உடையவர். ஆனால், அம்பாளைக் கண்டு கொள்ளவே மாட்டார். பக்தர்களின் வழிபாட்டில் அம்பாளுக்கும் முக்கியத்துவம் வேண்டும் எனக்கருதிய சிவன், அவளைக் கோபப்படும்படி செய்தார். அம்பாள், பூலோகம் வந்து இத்தலத்தில் தவம் செய்தாள். அவளுக்கு காட்சி தந்த சிவன், தன் உடலின் இடப்பாகத்தை தருவதாக இத்தலத்தில் உறுதியளித்தார்.

மரகதாசலம்: தேவர்கள் எல்லாம் இரதமாகவும், பிரம்மன் சாரதியாகவும், மேரு மலை வில்லாகவும், வாசுகி நாணாகவும், மஹா விஷ்ணு அம்பாகவும், அக்னி தேவன் அம்பு முனையாகவும், வாயுவே விசையாகவும், விளங்க, திரிபுர அசுரர்களை அழிக்கப் புறப்பட்டு தன் புன்சிரிப்பால் சிவபெருமான் திரிபுரங்களை அழித்தார். அதற்கு பின் ஒரு சமயம் ஆதிசேஷனுக்கும், வாயுவுக்கும் தங்களில் யார் பெரியவர் என போட்டி வந்தது. ஆதிசேஷன் தனது ஆயிரம் படங்களால் மேரு மலையை இறுக சுற்றிக்கொண்டார். வாயுபகவான் தன் பலத்தை நிரூபிக்க சகல

அண்டங்களும் குலைய, மலைகள் நிலை குலைய, நட்சத்திரங்கள் உதிர, பூமி அதிர சண்டமாருதமாக வீசினான். சகல உயிரினங்களும் படும் துன்பத்தை கண்டு இரக்கம் கொண்ட முனிவர்கள் அனந்தனிடம் வேண்டிக்கொள்ள அவன் ஒரு சிகரத்தை பற்றியிருந்த ஒரு படத்தை சற்றே தளர்த்தினான். எனவே வாயு அச்சிகரத்தை பெயர்த்தெறிந்தான்.

அச்சிகரத்தின் சிறு, சிறு பாகங்கள் பூமியில் தெறித்து விழுந்தன. மேரு மலையிலிருந்து வைரம், சிவப்பு மணி, மரகதம், மாணிக்கம் மற்றும் நீலம் ஆகிய மணிகளும் சிதறி விழுந்தன. அவ்வாறு, மரகதம் (பச்சைக்கல்) வீழ்ந்த இடமே, திருஈங்கோய் மலை என்பர். ஏனைய மணிகள் வீழ்ந்த இடங்களும் சிவத்தலங்களே: வைரம் திருப்பாண்டிக் கொடிமுடியிலும், மாணிக்கம் திருவாட்போக்கியிலும் (இது திருஈங்கோய் மலைக்கு அருகிலேயே உள்ள தலம்), நீலம் பொதிகை மலையிலும், சிவப்புக் கல் திருவண்ணாமலையில் வீழ்ந்தனவாம்.

மரகத அசலத்தில் (மலையில்) எழுந்தருளியவர் என்பதால், "மரகதாசலேஸ்வரர்' என்ற பெயர் பெற்றார். இவருக்கு "திரணத்ஜோதீஸ்வரர்' என்ற பெயரும் உண்டு.

அகத்தியர் ஈயாக வழிபட்டது: முனிவர்களால் வணங்கப்பெறும் அகத்தியர் தன் சிஷ்யர்களாகிய பிற முனிவர்களோடு ஒரு சமயம் தீர்த்த யாத்திரையாக திருக்கேதாரம் முதல் திருராமேசுவரம் வரை சென்று கொண்டிருக்கும்போது வழியில் கடம்பவனத்தை அடைந்து காவிரியிலிருந்து பன்னிரண்டு குடம் நீர் எடுத்து வந்து கடம்பவன நாதருக்கு அபிஷேகம் செய்து, மலர்களால் அர்ச்சனை செய்து வந்தார். பின்னர், அருகிலுள்ள இரத்தினகிரிக்குச் சென்று, சூரிய தீர்த்தத்தில் நீராடிவிட்டு, காவிரியிலிருந்து புனித நீரை மூன்று குடங்களில் முகர்ந்து வந்து சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து, மலர்களால் அலங்காரமும் அர்ச்சனையும் செய்து வேத கீதங்களால் துதித்து, ஆலயத்தை மும்முறை வலம் வந்து, மீண்டும் கடம்பவனத்தை அடைந்தார். மாலைக் காலம் வருவதறிந்த அகத்தியர், காவிரியைக் கடந்து, மரகதாசலத்தை அடைந்தார். அவ்வேளையில், கோவில் அர்ச்சகர்கள் பூஜையை முடித்துக் கொண்டு, ஆலயக் கதவுகளைப் பூட்டிக் கொண்டு, சென்று விட்டனர். இதனை அறிந்த அகத்தியர், இறைவனைத் தரிசிக்க முடியாமல் போனது பற்றி மிக்க வருத்தமடைந்தார். அப்போது ஒரு அசரீரி வாக்கு ஒலித்தது: “மாபாதகங்களையும் தீர்த்து அருள் புரியும் இம்மலையை அடைந்த பிறகும் ஏன் துயரம் அடைகிறாய்? பசுக்கள், பக்ஷிகள், மிருகங்கள் ஆகியவை எக்காலத்தில் இங்கு வந்தாலும் குற்றமில்லை. அவற்றிலும், காற்று, ஈ, பசு, அக்கினி, நெய், நெல், யோகி, அந்தணர் ஆகியோர் எக்காலத்திலும் அசுத்தமாவதில்லை. ஆகவே நீ இப்போது ஈ உருவில் உள்ளே சென்று இறைவனை வழிபடுவாயாக. இறைவனருளால் அவரது திருமேனியில் தங்கிய தக்ஷகன் என்னும் நாகராஜன் இம்மலையின் மேற்புறம் சர்ப்ப நதி வடிவில்

இருக்கிறான். அங்கு ஸ்நானம் செய்பவர்கள் தாம் விரும்பிய வடிவைப் பெறுவார்கள். ஆகவே நீ அத்தீர்த்தத்தை நாடிச் சென்றால் உன் கருத்து நிறைவேறும் " அதைக் கேட்டு, மகிழ்வுற்ற அகத்தியர், இறைவனைத் துதித்தார். பெருமானது கருணையினால், அவரது கண்டத்தில் இருந்த தக்ஷகன், நதி ரூபமாக மாறிக் காவிரியோடு கலந்தது. அச்சங்கமத்தில் ஸ்நானம் செய்து ஈ வடிவம் பெறுமாறு அகத்தியருக்கு அசரீரி வாக்கு அருளியபடியே சர்ப்ப நதியும் காவிரியும் கூடுமிடத்தில் அகத்தியர் நீராடியவுடன் ஈயுருவம் பெற்றார். இவ்வடிவுடன் ஆலயத்தினுள் சென்று, பெருமானைக் கண்ணாரத் தரிசித்தார். மனத்தினால் அனைத்து பூஜைகளையும் செய்தார். பிறகு வெளியில் வந்து சர்ப்ப நதியில் ஸ்நானம் செய்தவுடன் முந்திய முனி வடிவம் பெற்றுத் தனது இருப்பிடம் சென்றடைந்தார். அது முதல் இம்மலை ஈங்கோய் மலை எனப் பெயர் பெற்றது. மாசி மாதப் பௌர்ணமியில் அகத்தியர் சித்திகள் பெற்றதால், அவ்வாறு அந்நாளில் சர்ப்ப நதியில் ஸ்நானம் செய்து இயன்ற அளவு தானங்கள் செய்தால் பாவங்கள் நீங்கப்பெற்று, விரும்பிய சித்திகள் அனைத்தும் கைகூடும்.

சுந்தரர் பொன் பெற்றது: இத்தல விருட்சம் புளிய மரம். ஒரு காலத்தில் இத்தலம் திந்திடி (திந்திரிணி) வனம் என்றழைக்கப்பட்டது. சிவனின் நண்பரான சுந்தரர், தான் விரும்பிய நேரங்களில் சிவனிடம் பொன் கேட்டுப் பெற்றுக் கொள்வார். அவர் இத்தலத்திற்கு வந்து சிவனிடம் பொன் வேண்டும் என கேட்டார். சுந்தரரிடம் விளையாட வேண்டும் என நினைத்த சிவன், இங்கிருந்த ஒரு புளியமரத்திற்குள் ஒளிந்து கொண்டார். அப்புளியமரம் ஆதிசேஷன் அம்சம், சிவ சொரூபம். சுந்தரர், சிவனை எவ்வளவோ அழைத்தும் அவருக்கு காட்சி தரவில்லை. ஒரு தங்க புளியங்காயை மட்டும் அவருக்கு கிடைக்கும்படி செய்தார். சுந்தரர் அதனை எடுத்தபோது, புளியங்காய் மறைந்து விட்டது. தன்னிடம் சிவன் விளையாடுவதை உணர்ந்து கொண்ட சுந்தரர், கோபத்தில் "எனக்கு கிடைக்காத புளி யாருக்கும் கிடைக்காமல் போகட்டும்,' என சொல்லிவிட்டு திரும்பி விட்டார்.

தலவிருட்சம் புளியமரமாக இருந்தாலும், சுந்தரர் புளி யாருக்கும் கிடைக்கக்கூடாது என்று சபித்துவிட்டதால் இங்கு தற்போது புளியமரம் இல்லை. இம்மலைப் பகுதியில் உள்ள புளிய மரங்களில் காய்க்கும் காய்களில் வித்துக்கள் இருப்பதில்லை அவை காய்ந்து தீய்ந்து விடுகின்றன என்கின்றனர்.

தேனாபிஷேக மகிமை: அகத்திய முனிவர் எம்பெருமானை வழிபட்ட போது தேனால் அபிஷேகம் செய்தார் என்பதும் தற்போதும் தேனால் அபிஷேகம் செய்து வருகிறார் என்பதும் ஒரு நம்பிக்கை. வைகாசி, கார்த்திகை மாதங்களில் தேனாபிஷேகம் செய்தால் சிவபெருமான் அருள் கிட்டும். முன்பொரு சமயம் ஒரு குரங்கானது இங்குள்ள புளிய மரத்தின் மீதிருந்த தேன் கூட்டை இழுக்கும் போது,

தேனீக்கள் அக்குரங்கை கொட்டின, எனவே அக்குரங்கு அத்தேன் கூட்டை கை நழுவவிட்டது. அதிலிருந்த தேன் சுவாமிக்கு அபிஷேகம் ஆகியது. அப்புண்ணியத்தால் அக்குரங்கானது மறுபிறப்பில் சுப்பிரபன் என்ற மன்னனாக பிறப்பெடுத்தது. சுப்பிரபன் ஈங்கோய்மலையை அடைந்து தானங்கள் பல செய்து, திருப்பணிகள் செய்து தினமும் தேனால் அபிஷேகம் செய்து வந்தான். ஒரு சமயம் தேன் கிடைக்காமல் போகவே, மனம் நொந்து தன் காதுகளை வாளினால் அறுக்கத் தொடங்கினான். கருணைக் கடவுளான சிவபெருமான் ரிஷப வாகனத்தில் அம்பாளுடன் காட்சி அளித்து அவனை கயிலை மலையில் சிவ கணங்களுக்கு அதிபன் ஆக்கினார். இதுவரை இத்தலத்துடன் தொடர்புடைய சில வரலாறுகளைக் கண்டோம், வாருங்கள் அன்பர்களே மலையேறி மரகதாம்பாள் உடனாய மரகதசலேசுவரரை, வசந்த தியாகரை, தாயிற் சிறந்த தயாபரனை, மாலும் தெரியா வடிவத்தானை தரிசிக்கலாம் வாருங்கள் அன்பர்களே.

மலைக்கு மேலே செல்ல தெற்கு அடிவாரத்திலிருந்து படிகள் உள்ளன. குன்றின் உயரம் சுமார் 900 அடிகள். ஐநூறுக்கு மேற்பட்ட படிகள் உள்ளன. மலை ஏறும் படிகள் ஒரே சீராக இல்லை என்பதாலும், வழியில் இளைப்பாற ஒரே ஒரு மண்டபத்தைத் தவிர வேறு வசதி இல்லாததாலும், நிதானமாகவே மலையேற வேண்டும். மலைக்கோவில் என்பதால் அதிகாலை திறப்பதில்லை, பொதுவாக காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை ஆலயம் திறந்திருக்கும் எனவே முடிந்தால் குருக்கள் உள்ளாரா? என்று விசாரித்துக் கொண்டு மலையேறுவது நல்லது.



கம்பத்தடி கருப்பு

அடிவாரத்தில் மகாசித்தர் போகருக்கு ஒரு சன்னதி உள்ளது. முதலில் அவரை தரிசித்து மலை ஏறுவதற்கு அவரது அனுமதி பெற்றோம். அச்சன்னதியை பராமரிக்கும் அன்பரிடம் போகர் சன்னதி இங்கிருப்பதற்கான காரணம் என்னவென்று வினவினோம். அதற்கு அவர் போகர் இம்மலையில் இருந்து தான் நவபாஷாணத்தால் மூன்று முருகன் சிலையை உருவாக்கினார். அவற்றுள் ஒன்றை பழனியிலும், மற்றொன்றை கொடைக்கானலுக்கு அருகே பூம்பாறை குழந்தை வேலப்பர் ஆலயத்திலும் பிரதிஷ்டை செய்தார். மூன்றாவது சிலை இம்மலையில் உள்ள ஒரு குகையில் உள்ளது, தக்க சமயத்தில் வெளிப்படும் என்றார். (இது அவர் கூறிய செய்தி சரியான தகவல் தானா? என்று தெரியவில்லை.) ஒவ்வொரு மாதமும் பரணி நட்சத்திரத்தன்று போகருக்கும் மலை மேல் உள்ள பாலதண்டாயுதபாணிக்கும் சிறப்பு பூசைகள் நடைபெறுகின்றன. போகர் பிறந்த நட்சத்திரமான வைகாசி பரணியன்றும் சிறப்பு வழிபாடு செய்யப்படுகின்றது.

வாருங்கள் அன்பர்களே படியேறிச்சென்று சோழ வள நாட்டினானை, காவிரி போற்றினானை, மரகதேஸ்வரரை தரிசிக்கலாம். அடிவாரத்தில் உள்ள போகர் சன்னதியை தாண்டியவுடன் கொங்கு நாட்டுத் தலங்களைப் போன்று ஒரு கல் விளக்குத் தூண் உள்ளது. இக்கற்கம்பத்தில் ஒரு கருப்பு தேவதை உள்ளது என்பது இங்குள்ளவர்களின் நம்பிக்கை. இவரை கம்பத்தடி கருப்பு, கம்பத்தடியான் என்று இக்கிராமத்தினர் வழிபடுகின்றனர். எனவே கல் தூணுக்கு அருகில் வேல் கம்புகள் நடப்பட்டுள்ளதை காணலாம். இக்கம்பத்தடியில் பக்தர்கள் தங்கள் வேண்டுதலை செலுத்தி பக்தியுடன் மலையேறுகின்றனர். அடியோங்களும் கருப்பை வணங்கி மலையேறுவதற்கு துணை வர வேண்டி மலையேற்றத்தைத் துவங்கினோம்.

சுமார் பத்துப்படிகள் ஏறிய பின் இடப்பக்கம் ஒரு புது சன்னதி கட்டிக்கொண்டிருந்தார்கள், வெளியே விக்னங்களைக் களையும் விநாயகரின் சிலை இருந்தது, முழு முதல் கடவுளை வணங்கி மலையேற்றத்தை தொடர்ந்தோம் . படிகள் சில இடங்களில் பழுதடைந்திருந்ததால் "ஓம் நமசிவாய" என்னும் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்துக் கொண்டே மெதுவாகவே ஏறினோம். இடையில் உள்ள நாலுகால் மண்டபத்தில் சிறிது நேரம் அமர்ந்து இளைப்பாறி விட்டு ஒரே மூச்சாக உச்சி வரை ஏறினோம். ஏறு வெயில் என்பதால் படிகள் அவ்வளவாக சுடவில்லை. படிகளின் இரு புறமும் தீபம் ஏற்றுவதற்கு ஏதுவாக பிறைக்குழிகள் செதுக்கியுள்ளதையும், படிகளுக்கு வெள்ளை மற்றும் காவி வர்ணம் அடித்துள்ளதையும் கவனித்தோம்.

உச்சியை நெருங்கும் போது ஒரு நுழைவாயிலும் அதன் மேல் விநாயகர், சுவாமி, முருகர் சுதை சிற்பங்களும் மதில் சுவரும் கண்ணில் பட்டது. வாயிலை நெருங்கியவுடன் இடப்பக்கம் அரிகண்டம் செய்யும் ஒரு வீரனின் சிலையைக் கண்டோம். வாயிலில் நுழைந்து உள்ளே சென்றவுடன் மூன்று நிலை இராஜகோபுரத்தை தரிசித்தோம். தெற்கு நோக்கிய இராஜகோபுரம் என்பதால் தென் முகக் கடவுளையும், சிவ பாலர்கள் இருவரையும் இராஜகோபுரத்தில் கண்ணுற்றோம். மேலும் பத்துப்படிகள் ஏறி இராஜ கோபுரத்தின் உள்ளே நுழைந்தால் பிரகாரத்தில் நிற்கின்றோம். எதிரே கோஷ்ட விநாயகரை தரிசிக்கின்றோம். பிரகார வலத்தை தொடர்ந்தால் அடுத்து தக்ஷிணாமூர்த்தி சன்னதி, சிம்மம் தாங்கும் மண்டபத்தில் அருள் பாலிக்கின்றார் சனகாதியருக்கு அன்று மௌனத்தால் ஞானம் அருளிய ஆதி குரு. சுவாமியின் மூன்று நிலை நாகர விமானத்தில் நின்ற கோல வீணா தக்ஷிணாமூர்த்தியையும், பத்மாசன தக்ஷிணாமூர்த்தியையும் ஒரு சேர தரிசிக்கின்றோம்.



சுவாமி விமானம்

பிரகாரத்தின் கன்னி மூலையில் கணபதி சன்னதி அவரை வணங்கி அடுத்து கிழக்கு நோக்கிய தனி சன்னதியில் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியரை வணங்கினோம். கல் திருவாசியுடன் மயில் மேல் அமர்ந்த கோலத்தில் ஆறுமுகராக தேவியருடன் அருள் பாலிக்கின்றார் முருகர்.

சுவாமி கோஷ்டத்தில் தென்புறம் வல்லப கணபதி, தக்ஷிணாமூர்த்தி அருள் பாலிக்கின்றனர் பின்புறம் இலிங்கோத்பவரும், வடக்கு புற கோஷ்டங்களில் பிரம்மாவும், துர்க்கையும் அருள் பாலிக்கின்றனர். சுவாமி சன்னதிக்கு அருகில் தெற்கு நோக்கி சண்டிகேஸ்வரர் சன்னதி.

அம்பாள் விமானம் மூன்று கலசங்களுடன் கோபுர அமைப்பில் உள்ளது. அம்பாள் சன்னதி கோஷ்டத்தில் உமா மஹேஸ்வரி, பார்வதி, மனோன்மணி, விஷ்ணு துர்க்கை அருள் பாலிக்கின்றனர். சுவாமி மற்றும் அம்பாள் சன்னதி இரண்டும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. இடையில் பால தண்டாயுதபாணி சன்னதியுடன் சோமாஸ்கந்த வடிவில் அமைந்துள்ளது ஒரு சிறப்பு. பிருங்கி முனிவர் சிவபெருமானை தனியாக வணங்கியதால், அவ்வாறு ஏற்படாமலிருக்க இரு சன்னதிகளையும் இணைக்கும் வகையில் ஸ்கந்தன் சன்னதி அமைந்துள்ளது. பிரகார வலம் வரும் போது இரு சன்னதிகளையும் சேர்த்தேதான் வலம் வர முடியும் .

மலைக் கோவில் என்பதாலோ என்னவோ பிரகாரம் சுவாமி சன்னதியின் மஹா மண்டபத்தின் ஊடே செல்லும் விதமாக அமைந்துள்ளது. பிரகார வலமாக வரும்போது கோயிலின் விசாலமான பழைமையான திறந்த வெளி அமைப்பைக் காண முடிகிறது. மலை மேலிருந்து காவிரி, சர்ப்ப நதி, இரத்தினகிரி மலை, தலை மலை, கொல்லி மலை, திரிசிர மலை, கடம்பர் கோவில் ஆகியவற்றை தெளிவாகக் காணலாம்.

பிரகார வலம் செய்து அம்பாள் சன்னதியில் பிரவேசித்தோம். அம்மன் சன்னதி கர்ப்பகிரகம் மற்றும் மஹா மண்டபத்துடன் அமைந்துள்ளது. கருவறையில் புன்முறுவலுடன், எழிலாக நின்ற கோலத்தில் மேற்கரங்களில் தாமரை மலர் தாங்கி, கீழ்க்கரங்கள் அஞ்சேல் என்னும் அபய கரமாகவும், வேண்டுவனவற்றை அருளும் வரத கரமாகவும் விளங்க மரகதாம்பாள் அருட்காட்சி நல்குகின்றாள். வடப்பக்கத்தில் மஹா மண்டபத்தில் காசி விஸ்வநாதர், விசாலாட்சி அம்பாளுடன் அருள் பாலிக்கிறார், விநாயகரையும் தரிசிக்கலாம். துவார சக்திகள் காவல் உள்ளனர். அம்மனுக்கு வாகனமாக நந்தியெம்பெருமான் அருள் பாலிப்பது சிறப்பு . அம்பாளுக்கும் சுவாமிக்கும் தனித்தனியே கொடிமரங்கள் உள்ளன.

மணியே(மரகதமே) மணியின் ஒளியே ஒளிரும் அணிபுனைந்த வணியே
அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப் பிணியே
பிணிக்கு மருந்தே அமரர் பெரும் விருந்தே
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்த பின்னே - என்று அபிராமி அந்தாதியின் பாடலைப் பாடி அம்பாளை மனதார வேண்டி வணங்கிவிட்டு ஐயன் சன்னதிக்கு சென்றோம்.

ஐயன் சன்னதி கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம், ஸ்நபன மண்டபம், மஹா மண்டபம் என்று விரிவாக அமைந்துள்ளது. குருக்கள் சுவாமிக்கு அபிஷேகத்திற்கான

ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார் எனவே மஹாமண்டபத்தில் அமர்ந்து சிவத்தியானம் செய்து கொண்டிருந்தோம்.

ஸ்நபன மண்டபத்தின் வடப்புறத்தின் மேல் பகுதியில் நந்தியும் அருகில் அம்பாளுக்கு இறைவன் இடப்பாகம் அளித்த அர்த்தநாரீஸ்வரரும் அருள்பாலிக்கின்றார். நடுப்பகுதியில் திருமுறைக்கோவிலும் தெற்கு நோக்கி அமைந்துள்ளது.

மஹாமண்டபத்தின் இடபக்கத்தில் பால தண்டாயுதபாணி சன்னதி உள்ளது. சிவகுமாரனை

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற்று அலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

பொருள்: பிறவி எனும் அலைகள் வீசும் ஆற்று வெள்ளத்தில் மீண்டும் புகாமல் இருக்க, இயற்கை செலுத்தும் வழியில் சென்று இஷ்டப்படி திரியாமல் இருக்க, உறுதியான குருவின் உபதேச மொழியின் உண்மைப் பொருளைத் தந்து, உனது திருவடிகளின் தரிசனத்தை அருள்வாயாக.
ஆறுசமயங்களின் சாத்திரங்களுடைய சாரமாய் நிற்பவனே,
தம் அறிவால் உன்னை அறிந்தவர்களுக்கு நற்குண சமுத்திரமானவனே,
குறுமுனி அகத்தியர் புகழும் முத்தமிழ் வித்தகனே,
குமரகுருவே,கார்த்திகைப்பெண்கள் வளர்த்த பெருமாளே என்று திருப்புகழ் பாடி வணங்கி சுவாமியை தரிசிக்க சென்றோம்.

சுவாமிக்கு வலப்பக்கம் வல்லப கணபதி, அடுத்து அம்மையின் ஞானப்பாலுண்ட ஆளுடைய பிள்ளையார் அருளிய ஈங்கோய்மலைத்தல பதிக கல்வெட்டு, வடக்கு பக்கம் நால்வர் சன்னதி. கிழக்கு பக்கம் ஈ வடிவில் வந்து ஈசனை தரிசித்த அகத்திய முனிவரை தரிசிக்கின்றோம். அவருக்குப் பின்னே, முத்தமிழ் சங்கத்தின் தலைமைப் புலவர் நக்கீரதேவ நாயனார் அருளிய ஈங்கோய்மலை எழுபது என்னும் சிறு பிரபந்த பாடல்களின் கல்வெட்டு.

இந்நூல் வெண்பாக்களால் ஆன நூல், பதினொன்றாம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது. நக்கீரர், திருஈங்கோய் மலையின் செழிப்பில் மனத்தைப் பறிகொடுத்தார் போலும். அதனால் அம்மலையில் விளையும் பலா, தேன், பழங்கள் அதை வேட்டையாடும் குரங்குகள், மலையில் வசிக்கும் தேனீக்கள், மான்கள், மயில்கள், யானைகள், மலையில் வாழும் வேடர்கள், குறத்திகள் ஆகிய அனைத்தையும் தொடர்புபடுத்தி மிக அற்புதமாக திருஈங்கோய்மலை எழுபது என்ற ஞானநூலை அருளியிருக்கிறார்.

எழுபது பாடல்களின் இறுதியிலும் `மலை' என்றே பொருள் வரும் விதம் ஆனால் வேறு வேறு வார்த்தைகளான மலை, சிலம்பு, வெற்பு, பொருப்பு, குன்று, கடறு, வரை போன்றவற்றை உபயோகப்படுத்தியுள்ளது சிறப்பு. அதிலிருந்து ஒரு பாட்டு

அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும் பாய்ந்தேறி நொடியுங்கால்
இன்ன தென அறியா ஈங்கோயே - ஓங்காரம்
மன்ன தென நின்றான் மலை.

பொருள்: திருமாலும் பிரம்மனும் பரம் பொருளின் அடிமுடியைக் காண வேண்டி பூமியைப் பிளந்து சென்றும் வானத்தை கிழித்துச் சென்றும் தேடியும் காண முடியாது நொடிந்தனர். என்னவென்று அறியாமல் அவர்கள் தவித்த போது, அதுவே ஓங்காரம் என்று உணர்த்தும் முகமாக நின்றிருந்தது இம்மலையே. ஓங்காரத்தின் ரூபமாக இம்மலை விளங்குவதாக பாடுகிறார் நக்கீரர்.

சுவாமிக்கு எதிரே மண்டபத்தின் நடுவில் நந்தி, பலி பீடம், கொடி மரம் அமைந்துள்ளது, கிழக்கு சுவரின் மத்தியில் ஒரு சாளரம், சிவராத்திரி சமயம் மூன்று நாட்கள் இச்சாளரத்தின் வழியாகத்தான் அதிகாலை நேரத்தில் சூரியக்கதிர் இறைவன் மேனியில் விழுகின்றது. அச்சமயம் இலிங்கம் பல வண்ணத்தில் காட்சி அளிப்பதைக் காணலாம். இவ்வொளி சிறப்பை மாணிக்கவாசகரும் "ஈங்கோய் மலைதனில் எழிலது காட்டியும்" என்று பாடினாரோ ?



சூரிய ஒளியில் மிளிரும் பைரவர்

இம்மண்டபத்தின் கிழக்குப்பக்கம் நவக்கிரகங்கள், தெற்கு நோக்கிய காலபைரவர், கங்காளர், பிக்ஷாடணர் மற்றும் சூரியனை தரிசிக்கலாம். அடியோங்கள் அங்கு அமர்ந்து பதிகம் மற்றும் எழுபது படித்துக்கொண்டிருந்த சமயம் ஒரு அற்புதமான தரிசனம் கிட்டியது. பைரவருக்கு மேலே கூரையில் இருந்த ஒரு வட்ட வடிவ துளையின் வழியே சூரிய கதிர் நுழைந்து அவரை பாதத்திலிருந்து தலை வரை வழிபடுவதை தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது.

அடுத்து ஈங்கோய்மலையாருக்கு நடைபெறும் அபிஷேகத்தை தரிசனம் செய்யும் பாக்கியம் கிட்டியது. பால், தயிர், வாசனைப் பொடிகள், தேன், மஞ்சள், சந்தனம், பன்னீர் ஆகிய திரவியங்களால் மரகதசலேஸ்வரருக்கு அற்புதமாக அபிஷேகம் செய்தார் குருக்கள். மூலவர் மரகதாலேஸ்வரர் பெயருக்கு ஏற்றாற் போல மரகதம் போன்று பச்சை நிறத்தில் அமைந்துள்ளார். சிவனுக்கு தீபாராதனை காட்டும்போது லிங்கத்தில் ஜோதி ஜொலிப்பதைக் கண்டோம்.

ஈன்ற குழவிக்கு மந்தி இறுவரை மேல்
நான்ற நறவத்தை தான் நணுகித் – தோன்ற
விரலால் தேன் தோய்த் தூட்டும் ஈங்கோயே நம் மேல்
வரலாம் நோய் தீர்ப்பான் மலை.

பொருள்: பிறந்த குட்டிக்குப் பெண் குரங்கு, பிளவுபட்ட மலை மேல் தொங்குகின்ற தேனடையை நெருங்கி, தன் விரலைக் கொண்டு எடுத்த தேனைத் தோய்த் தூட்டும் ஈங்கோய், நம்மேல் வர இருக்கும் துன்பங்களைத் தீர்ப்பவனது மலையாகும் என்ற நக்கீரர் பாடலிலிருந்து அக்காலத்தில் இம்மலையில் இருந்த புளிய மரங்களில் தேன் கூடுகள் செறிந்திருந்ததும், ஈங்கோய் மலையார் நம் நோய்களை எல்லாம் தீர்க்க வல்லவர் என்பதும் புலனாகிறது.

மரகத லிங்கத் திருமேனியருக்கு தேனால் அபிஷேகம் செய்த தேனை உட்கொண்டால் தீராத நோய்களும் தீரும் என்பதால் ஒரு அன்பரின் வேண்டுதலுக்காக சுவாமிக்கு அபிஷேகம் நடைபெற்றது, அதைக்காணும் பாக்கியம் அடியோங்களுக்கு கிட்டியது. அலங்காரம் முடித்து அருமையாக தீபாரதனையும் செய்து வைத்தார் குருக்கள்.

(செங்கல்பட்டிற்கு அருகில் உள்ளது சம்பந்தப்பெருமனால் பாடப்பெற்ற திருவடிசூலம் என்றழைக்கப்படும் திருஇடைச்சுரம் தலம், அத்தலத்திலும் சிவப்பரம்பொருள் மரகத மேனியர், அப்பெருமானுக்கு அபிஷேகம் செய்த தேனை சுவீகரித்து நோய் தீர்ந்ததை அடியேன் அறிவேன்)

மலையின் உச்சியில் எழுந்தருளியிருப்பதால் சுவாமி மலைக்கொழுந்தீசர் என்றும், திருமால் பூசித்ததால் அச்சுதேசுரர் என்றும், நான்முகன் பூசித்ததால் பிரமேசுரர் என்றும் தேவேந்திரன் பூசித்ததால் இந்திரேசுரர் என்றும் அழைக்கப்படும் மரகதலேஸ்வரரை

வினையாயினதீர்த் தருளேபுரியும் விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேல் மதியஞ்சூடும் நம்பானலமல்கு
தனையார்கமல மலர்மேலுறைவான் தலையோடனலேந்தும்
எனையாளுடையான் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே

பொருள்: உமையம்மையோடு திருவீங்கோய்மலையில் எழுந்தருளிவிளங்கும் இறைவர். வினைகளானவற்றைத் தீர்த்து அருளையே வழங்கும் விகிர்தர். விரிந்து தழைத்த கொன்றை அரும்புகள் சூடிய முடி மீது பிறைமதியையும் சூடும் நம்பர். அழகு நிறைந்ததும் தலைமை உடையதுமான தாமரை மலர்மேல் உறையும் பிரமனின் தலையோட்டுடன் அனலையும் ஏந்தி என்னை அடிமையாகக் கொண்டருளுபவர் என்ற பாலறாவாயரின் பாடல் பாடி வணங்கினோம்.

பின்னர் குருக்கள் அம்பாள் சன்னதிக்கு அழைத்து சென்று அங்கும் தீபாரதனை செய்து வைத்து பிரசாதமும் அளித்தார். முத்தாய்ப்பாக கிளம்பும் சமயம் அடியோங்களில் இருவரை அழைத்து சுவாமியின் நிர்மால்ய மாலை அணிவித்து வாழ்த்தினார். அதை குருக்கள் மூலமாக இறைவன் கொடுத்த ஆசீர்வாதமாகவே எடுத்துக்கொண்டோம். மஹா மண்டபத்தின் மேற்கு நுழைவாயிலில் மேலே கஜலக்ஷ்மியும் இரு பக்கமும் துவாரபாலகர்களும் உள்ளதை கவனித்தோம். தினமும் இருகால பூசை நடைபெறுகின்றது. மலையிலிருந்து இறங்கி வரும் போது அகண்ட காவிரியின் எழிலைக் கண்டு களித்துக்கொண்டே இறங்கியதால் களைப்பை உணரவே இல்லை.




ஆடி பதினெட்டாம் பெருக்கன்றும், தைபூசத்தன்றும் சுவாமி அம்பாளுடன் காவிரிக்கரைக்கு எழுந்தருளி தீர்த்தவாரி கண்டருளுகிறார். கார்த்திகை தீபம், மார்கழி திருவாதிரை, மாசி கிருத்திகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஆடி கிருத்திகை மற்றும் பௌர்ணமி தினங்களில் பக்தர்கள் கிரி வலம் வருகின்றனர்.

மாதப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி, கிரகண காலங்கள், ஆடி பதினெட்டாம் பெருக்கு, கார்த்திகை தீபம், மார்கழித் திருவாதிரை, தை பூசம், மஹா சிவரத்திரி, மாசி மகம் ஆகிய நாட்களில் காவிரியிலோ அல்லது சர்ப்ப நதியிலோ நீராடி, மலையை கிரி வலம் வந்து மலையேறி மரகதவல்லியையும் ஈங்கோய் மலையாரையும் தரிசித்து நெய் விளக்கு ஏற்றி வழிபட இம்மை, மறுமை பலன் கிட்டும்.

மலைக்கு கிழக்கே ஈங்கோய்மலை என்று ஒரு கிராமம் உள்ளது. அவ்வூரின் நடுவில் கருணாகடாட்சி உடனுறை கயிலாயநாதர் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோவில் அடிவாரக் கோவில் என்றழைக்கப்படுகின்றது. மலைக்கோவில் உற்சவர்கள் இங்கு அருள் பாலிக்கின்றனர்.

நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை
நீங்காதென் உள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்துருத்தி நகரும் மேவி
இருப்பவனை இடைமருதோ(டு) ஈங்கோய் நீங்கா
இறையவனை எனை ஆளும் கயிலை என்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே – என்று அப்பர் பெருமான் போற்றிய, அருமையான தரிசனம் அளித்த மரகதாம்பாளையும், ஈங்கோய்மலையாரையும் மற்றொரு முறை தரிசித்து விட்டு மெல்ல மெல்ல கீழிறங்கி வந்து குளித்தலைக்கு திரும்பி வந்து மதிய உணவருந்திவிட்டு ஐயர் மலை தரிசனம் செய்ய புறப்பட்டோம்.

# 13 இரத்தினகிரியார் தரிசனம்



அடுத்து அடியோங்கள் தரிசித்த தலம் "ஆடல் பாடல் வாட்போக்கியை பாடியேத்த நம் வாட்டம் தவிருமே" என்று திருநாவுக்கரசர் பாடிய தலம் ஆகும். சோழநாட்டின் காவிரி கரையில், உள்ள பாடல் பெற்ற தேவாரத் திருத்தலங்களில் 64-வது தலமாகவும், காவிரி தென்கரையின் முதல் தலமாகவும் விளங்கும், குளித்தலை அருகே உள்ள அய்யர்மலை சுரும்பார்குழலி உடனாய இரத்தினகிரீஸ்வரர் திருக்கோவில். அகத்தியர் இறைவனை நண்பகலில் தரிசித்த தலமென்பதால் இவ்விறைவன் மத்தியான சுந்தரர் என்றும் வழங்குகிறார் என்பது தொன்நம்பிக்கை. இத்தலம் குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் வழியில் 8 கி. மீ தூரத்தில் அமைந்துள்ளது.

வாயுவிற்கும், ஆதிசேஷனுக்கும் நடைபெற்ற போட்டியின் போது விழுந்த மாணிக்கமே இம்மலை என்பது ஐதீகம், எனவே இம்மலை இரத்தினகிரி என்றழைக்கப்படுகின்றது.

யாவருக்கும் மேலாகிய தலைவர் (ஐயர்) இங்கு கோவில் கொண்டிருப்பதால் ஐயர்மலை என்ற பெயர் எழுந்தது. பஞ்ச பாண்டவர்கள் வனவாசத்தின்போது இங்கு தங்கி இருந்ததாகவும், அதனால் இம்மலைக்கு 'ஐவர்மலை' என்ற பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது. இதுவே நாளடைவில் 'ஐயர்மலை' என்றானதாக

சொல்கிறார்கள். பாண்டவர்கள் இங்கு தங்கியிருந்ததற்கு சான்றாக, மலையின் நடுப்பகுதியில் உள்ள சிறிய குகையில் 5 படுக்கைகள் உள்ளன. இம்மலையின் பின்பகுதியில் உள்ள மற்றொரு சிறிய குகையில் கற்களால் வெட்டப்பட்ட மூன்று படுக்கைகள் காணப்படுகின்றன. எனவே இங்கு சமணர்கள் வாழ்ந்திருக்கலாம் என்றும் அறியப்படுகிறது.

சுமார் 4 கிலோமீட்டர் சுற்றளவு கொண்டதும், 1,178 அடி உயரமும் கொண்டதுமான மலையின் மீதுள்ள ஆலயத்தில் இரத்தினகிரீஸ்வரர் அருள்பாலிக்கிறார். இவரை வாட்போக்கிநாதர், இராஜலிங்கமூர்த்தி என்ற பெயரிலும் அழைக்கிறார்கள். அதே போல் இவ்வூரும், சிவாயமலை, இரத்தினகிரி, இரத்தினாசலம், மணிகிரி, இரத்தின வெற்பு, சிவதை, மாணிக்க மலை, வாட்போக்கி மலை, பஞ்சாட்சர மலை உள்ளிட்ட பெயர்களில் அறியப்படுகின்றது.

சிறந்த சிவன் கோவில் அமைந்திருக்கும் சிவாயம் என்னும் சிற்றூருக்கருகே இம்மலை இருப்பதால் சிவாயமலை என்றும், மலையேறி செல்லும்படி வழியும், மலை மேற்கோயிலுள்ள பிரகாரங்களும் ஓம் என்ற பிரணவ எழுத்து போலவும் சிவ மகாமந்திரமான ஐந்தெழுத்தின் வடிவமாகவும் அமைந்திருத்தலால் சிவாயமலை என்றும் அழைக்கப்பட்டதாக கூறுவர்.

தேவாரம், தல புராணம், கலம்பகம் இவைகளில் வாட்போக்கி என்றும், திருப்புகழில் சிவதைபுரி, இரத்தினவெற்பு என்றும் இரத்தினகிரி உலாவில் இரத்தினகிரி என்றும், கோயிலில் காணப்பெறும் பழங்கால கல்வெட்டுகளில் திருமாணிக்கமலை, திருவாட்போக்கி என்றும் கூறப்பட்டு வருகிறது. சங்ககாலத்தில் அயிரை மலை என்ற பெயரில் இம்மலை வழங்கியது,

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆல நீழ லமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே – என்று திருநாவுக்கரசர் பாடிய வாட்போக்கி தலத்தின்

மூலவர் : இரத்னகிரீஸ்வரர், வாட்போக்கிநாதர், முடித்தழும்பர்
அம்மன் : சுரும்பார் குழலி, அராள கேசி
தல விருட்சம் : வேம்பு
தீர்த்தம் : காவேரி தீர்த்தம்
வழிபட்டோர் : இந்திரன், சூரியன், சயந்தன், வாயு, ஆதிசேஷன், அகத்தியர், உரோமச முனிவர், சப்த கன்னியர்.
தேவாரப் பாடல்கள்: அப்பர்

பல்வேறு பிறவிகளிலும் புண்ணியம் செய்தோருக்கே இத்தலத்தின் தரிசனம் கிடைக்கும் என்பது உண்மை. முறைப்படி தேவ தீர்த்தமாடி, மலைக் கொழுந்தாய் எழுந்தருளியுள்ள இரத்தினகிரீசுவரரையும் சுரும்பார் குழலி அம்பிகையையும் வணங்கித் தொழுது விட்டு அங்குள்ள வேப்ப மரத்தடியில் பஞ்சக்ஷர ஜபம் செய்தால் எல்லாத் தீங்குகளும் நீங்கும். வறுமை, கொடிய நோய்கள் ஆகியவை நீங்கும். ஞானமும் சித்தியும் கைகூடும்.

இந்திரன் வழிபட்டது: இனி இத்தலத்தின் சில வரலாறுகளைப் பற்றி காணலாமா அன்பர்களே? **முன்னர் ஒரு சமயம்** அகலிகையை விரும்பிய பாவம் தீர, வியாழ பகவானின் அறிவுரைப்படி, இந்திரன் இரத்தினாசலத்தை அடைந்து தேவியின் சன்னதியில் வேப்ப மர பிரதிஷ்டை செய்தான். மலை உச்சியில், தனது வஜ்ஜிராயுதத்தால் ஒரு தீர்த்தமும் உண்டாக்கி தினமும் காலையில் திரியம்பக மந்திரத்தை உச்சரித்து அதில் நீராடி, சுவாமியையும் அம்பிகையையும் தேவலோகத்திலிருந்து கொண்டு வந்த மணம் மிக்க மலர்களால் அர்ச்சித்து வணங்கினான். தான் ஸ்தாபித்த தீர்த்தத்தின் அருகிலுள்ள குகையில் அமர்ந்து பஞ்சாக்ஷர ஜபம் செய்து வந்தான். இதனால் அவனது பாவம் நீங்கிற்று. இந்திரனது பூஜையால் மகிழ்ந்த பரமசிவனும், தேவர்கள் சூழ முடியில் சந்திரனைத் தரித்தவராகவும், வெண்ணீறு அணிந்தவராகவும் அம்பிகையோடு ரிஷப வாகனத்தில் எழுந்தருளி அவனுக்குக் காட்சி அளித்தார். சித்திரை பிரமோற்சவத்தில் ஐந்தாம் நாள் விழாவில் இவ்வரலாறு இடம் பெறுகிறது

வாட்போக்கி நாதர் : ஆரிய நாட்டில் மங்கலமா நகரில் ஆரியராசன் என்பவன் ஆட்சி செய்து வந்தான். ஒரு முறை அரசனின் நவரத்தின கிரீடம் காணாமல் போக்கும்படி செய்தார் இரத்தினகிரீஸ்வரர். இதனால் மனமுடைந்து காணப்பட்ட அரசனின் முன்பாக தோன்றிய வேதியன் ஒருவன், “உன்னுடைய கிரீடம் இரத்தினகிரீஸ்வரர் வசம் உள்ளது” என்று கூறினான். இதையடுத்து மன்னன், இரத்தினகிரீசுவரரிடம் வந்து தமது மணிமுடியை தருமாறு வேண்டினான். அப்போது முதியவர் வடிவில் வந்த இறைவன் “இங்குள்ள கொப்பரையை முழுமையாக காவிரிநீர் கொண்டு நிரப்ப வேண்டும். அப்போதுதான் மணி முடியை உன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இறைவன் கூறியிருக்கிறார்” என்றார்

.

மன்னன் எவ்வளவோ முயன்றும் கொப்பரையை நீர் கொண்டு நிரப்ப முடியவில்லை. ஒரு கட்டத்தில் கோபம் கொண்ட மன்னன், முதியவரை நோக்கி வாளை வீசினான். அப்போது முதியவர் சிவலிங்கத்திற்குள் சென்று மறைய, சிவலிங்கத்தின் மீது வாள் பட்டு, அதில் இருந்து இரத்தம் பீறிட்டு வந்தது. தெய்வ குற்றத்துக்கு ஆளானதை எண்ணி அஞ்சிய மன்னன், தன்னைத் தானே மாய்த்துக் கொள்ள முயன்றான். அப்போது அவனை, இறைவன் தடுத்தாட்கொண்டு,

மணிமுடியையும் வழங்கி அருளினார். இதனால் இறைவன் வாட்போக்கி நாதர் என்னும் திருநாமம் பெற்றார். இத்தலமும் வாட்போக்கி என்றழைக்கப்படுகிறது. இதற்கு சாட்சியாக இப்போதும், சிவலிங்கத்தின் மீது வெட்டு தழும்பு உள்ளதைக் காணலாம்.

இந்நிகழ்வுக்குப் பின்னர் இரத்தினகிரீஸ்வரரை வழிபட்ட ஆரியராசன், தன் குலத்தினர் பரம்பரை பரம்பரையாக தினமும் காவிரியில் இருந்து தண்ணீர் கொண்டுவந்து இத்தல இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் நடைமுறையை கொண்டு வந்தான். தற்போதும் இவ்வாலயத்தில் உள்ள இறைவனுக்கு அபிஷேகம் செய்வதற்காக, சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள காவிரி ஆற்றில் இருந்து நாள்தோறும் குடத்தில் தண்ணீர் எடுத்து வந்து, மலை உச்சியில் உள்ள இறைவனுக்கும் இறைவிக்கும் அபிஷேகம் செய்விக்கப்படுவது தனிச்சிறப்பாகும் . (இன்றும் இப்பொறுப்பை "பன்னிரண்டாம் செட்டியார்" என்னும் மரபினர் ஏற்றுக்கொண்டு, குருக்கள் மூலம் நடத்துவிக்கின்றனர்.)

இதே வரலாற்றை இன்னொரு விதமாகவும் இவ்வாறு கூறுகின்றனர். நெடுங்காலமாக இம்மலையைச் சுற்றி வாழும் சிற்றூர் மக்கள் நிலத்தில் அவ்வப்போது காணப்படும் நவரத்தினங்களையும் கண்டெடுத்து விற்று வாழ்ந்தனர் என்பர். இன்றும் மலையைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் நவரத்தினங்களை நிலத்தைக் கிளறித் தேடிக்கொண்டிருக்கின்றனர். இம்மலையின் அருகே மாணிக்கத்தைப் பெற ஆரிய மன்னன் இறைவனிடம் வந்தான். “மாணிக்கக் கற்களை நீ பெற வேண்டுமென்றால் என் முன்னர் உள்ள பொய்வாசிக் கொப்பரை என்னும் நீர் தொட்டியை காவிரி நீரால் நிரப்ப வேண்டும்” என்று ஒரு தொட்டியை இறைவன், அரசனிடம் காண்பித்தார். அத்தொட்டியில் குடம் குடமாக நீரினை ஊற்றினாலும் நிரம்பவில்லை. இதனால் கோபமடைந்த மன்னன் அவனது வாளை எடுத்து இறைவனிடத்தில் வீசினான். அச்சமயம் இறைவன் மாணிக்கக் கற்களை மன்னனுக்கு தந்து அருள் பாலித்தார். இறைவனை காயப்படுத்தியதில் வருத்தமடைந்த மன்னன், இவ்வாலயத்தில் தங்கி இறைவனுக்கு சேவை செய்து முக்தி பெற்றான் என்கிறது வரலாறு. அம்மன்னனால், இறைவன் வெட்டு பட்டதால், இத்தளத்தில் சிவனுக்கு ‘முடித்தழும்பர்’ எனும் பெயரும் உண்டு. இன்றளவும் சிவலிங்கத்தின் மேல் பகுதியில் இவ்வடு காணப்படுகிறது. சிவலிங்கத்தின் முன்பு உள்ள நிரப்பப்படாத தொட்டி தற்போதும் பொய்வாசிக் கொப்பரை என்னும் நீர் தொட்டியாக இருக்கின்றது.

குலதெய்வம்: குலதெய்வம் தெரியாதவர்கள் இரத்தினகிரீஸ்வரரை குலதெய்வமாக வழிபடலாம். திருமண தடை நீங்க, குழந்தை பாக்கியம் பெற, தொழிலில் முன்னேற்றம் அடைய இக்கோவிலில் வேண்டிக் கொண்டால் நிச்சயம் பலன் உண்டு. மலைமேல் ஏராளமான மூலிகைச் செடிகள் உள்ளன.

இம்மூலிகை காற்றை சுவாசிப்பதால் இது தவிர மூட்டு வலி, இதய நோய், இரத்த அழுத்தம் உள்ளவர்கள் இம்மலையை ஒருமுறை ஏறி வந்தால் மாற்றத்தை உணர முடியும் என்று கூறுகின்றனர்.

காகம் பறவா மலை: குளித்தலையிலிருந்து இடையர் ஒருவர் தினமும் இவ்வாலயம் வந்து இறைவனின் அபிஷேகத்திற்கு ஒரு குடம் பாலை அளித்து வந்தார். ஒரு நாள் அப்பால் குடத்தை ஒரு காகம் கவிழ்த்தது. அவர் மனம் வருந்தி தன் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றார். அப்போது இறைவன் அவர் முன் தோன்றி இம்மலையே சிவ சொரூபம், எனவே சிந்திய பாலே எனக்கு அபிஷேகித்தது போலாகும் என்றார். இனி மேல் இம்மலை மேல் காகம் பறக்காது என்று சாபமும் கொடுத்தார். அன்று முதல், அய்யர்மலைக்கு மேலே காகங்களால் பறக்க முடியாது. அப்படியே பறந்து வர நினைத்தாலும், மின்சாரம் தாக்கியதுபோல் காகங்களுக்கு ஆகிவிடும் என்று கூறுகிறார்கள்.

சுந்தரருக்காக பொன் சொரிந்தது: சமயக்குரவர்கள் நால்வரில் ஒருவரான சுந்தரர் , இம்மலையை இரத்தின மலையாகவும், ஈசனை இலிங்க வடிவமாகவும் கண்டு வழிபட்டதோடு, பொன் வேண்டி பாடியிருக்கிறார். தொடர்ந்து இறைவனின் ஆணைப்படி பூத கணங்கள், ஒரு பாறையின் மேல் பொன்னை சொரிந்ததாகவும், இங்குள்ள ஒன்றுபாதி என்ற இடத்தில் இரத்தினகிரீஸ்வரர், சுந்தரருக்கு ஜோதிர் லிங்கமாகவும் மலை முழுவதும் மாணிக்கமலையாகவும் காட்சி கொடுத்ததாகவும் தல வரலாறு சொல்லப்படுகிறது. சுந்தரருக்கு பொன் அளிக்கப்பட்ட இடம் தற்போது 'பொன்னிடும் பாறை' என்று அழைக்கப்படுகிறது. பொன்னிடும் பாறைக்கு முன்பு அமைந்துள்ள கற்கம்பத்தை சுற்றி நூலால் கட்டி, பில்லி, சூனியம், ஏவல், மற்றும் பல்வேறு தடங்கல் நீங்க பிரார்த்தனை செய்யப்படுகிறது.



பால் தயிராக மாறும் அதிசயம்: இக்கோவிலில் சுவாமிக்கு பால் அபிஷேகம் செய்த பச்சைப்பால் மாலை வரை கெட்டுப்போகாது. அபிஷேகம் செய்த பால் பின்னர் கெட்டியான சுவை மிகுந்த தயிராக மாறிவிடுகிறது. இது இக்கோவிலில் இன்றுவரை நடக்கும் அதிசயமாகும்.

இடி பூசை: பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்திரன் இடி பூசை செய்கின்றான். அப்போது கோவிலுக்கு எச்சேதமும் ஏற்படுவதில்லை என்கின்றனர். (திருக்கழுகுன்றம் மலைக்கோவிலிலும் இது போன்று 12 வருடத்திற்கு ஒரு முறை இடி பூசை நடக்கின்றது என்ற ஐதீகம் உள்ளது)

வைரப்பெருமாள்: இத்தலத்தின் நாட்டார் தெய்வம் ஆவார் இவர். இவரது வரலாறு இவ்வாறு கூறப்படுகிறது, தொண்டை நாட்டில் காஞ்சிபுரம் என்ற சிவப்பதியில் முதலியார் இனத்தில் பிறந்த வைரப்பெருமாள் (வைராக்கிய பெருமாள்) என்ற பெயருடைய சிவனடியார். இவர் தனது தங்கைக்கு பலகாலம் குழந்தைப் பேறு இல்லாத வருத்தத்தில் அய்யர்மலை சென்று இறைவனிடம் குழந்தை வரம் கேட்டு, இதற்கு நேர்த்திக் கடனாக தம் தலையை கொய்து கொள்வதாக வேண்டிக்கொண்டதையும், பழுத்த சிவனடியாராக வாழ்ந்து வந்த அவருடைய வேண்டுதலை சிவபெருமான் நிறைவேற்றி சோதிக்க எண்ணியதையும், இதன் பலனாக அவரின் தங்கை அழகிய குழந்தைக்குத் தாயானதையும் பற்றி கூறுகிறது. வேண்டுதலை முடிக்க எண்ணிய வைரப்பெருமாள் அய்யர்மலை வந்து பதினெட்டாம் படியில் நின்றபடி தம் தலையை தானே வாளால் அறுத்துக் கொண்டு நேர்த்திக் கடனை நிறைவேற்றிய செயல் மக்களிடையே இவரை நாட்டார் தெய்வமாக உயர்த்தி உள்ளது. மலைக்கு கீழே பாதமும், மேலே சிரசும் உள்ளது. தாம் வேண்டிக்கொண்டபடி வாக்கில் பிறளாது சிரசை கொய்து கொண்ட சிவனடியாரின் பக்தியால் உளமகிழ்ந்து தேவர்கள் பூமாரி பொழிந்தனராம். விண்ணில் வேத வாத்தியங்கள் முழங்கினவாம். சிவபெருமான் தம் சிவனடியார் முன் தோன்றி அவருடைய பக்தியினை மெச்சி வரமருள சித்தமானார்.

இறைவனின் சித்தமறிந்த வைராக்கிய பெருமாள் இறைவனிடம் மூன்று வரங்களைக் கேட்டுப் பெற்றார்:

1. இறைவனுக்குச் சூடிய மாலைகள் முதலில் இவருக்கே சூட்டப்பட வேண்டும்.
2. இறைவனுக்கு காட்டிய கற்பூர ஆரத்தி பின் முதல் மரியாதையாக இவருக்குத்தான் காட்டப்பட வேண்டும்.
3. அம்மனுக்கு படைத்த தளிகை இவருக்கே அளிக்கப்பட வேண்டும்.

இறைவனும் இவ்வரங்களை அளித்தார்.

தேனும் தேங்காய்ப்பாலும் மட்டுமே இவருக்கு அபிசேகம். இத்தலத்தில் இவர் மிகவும் விசேஷமானவர்.

இத்தல இறைவனை, நான்முகன், திருமால், இந்திரன், வாயு, ஆதிசேஷன், சூரியன், அக்கினி, துர்க்கை, சப்த கன்னியர்கள், அகத்தியர், ஆரிய மன்னன், வைரப் பெருமாள், சிற்றாயர் போன்றோர் வழிபட்டு பேறு பெற்றுள்ளனர்.

அப்பரின் தேவாரம், அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்ற தலம். மேலும் திருவாட்போக்கி புராணம், வாட்போக்கி கலம்பகம், இரத்தினகிரி உலா ஆகிய நூல்களும் இத்தலத்தின் சிறப்பை இயம்புகின்றன. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசுவாமி தீக்ஷிதர் "பாஹிமாம் ரத்னாசல நாயகா" என்று ஒரு வடமொழி கீர்த்தனை பாடியுள்ளார்.

கார்த்திகை சோமவார விழா, பவுர்ணமி கிரிவலம், பிரதோஷ வழிபாடு, சித்திரைத் தேர் திருவிழா, பங்குனி தெப்போற்சவம் ஆகியவை இக்கோயிலில் நடைபெறும் முக்கிய திருவிழாக்கள். கார்த்திகை 1ம் தேதி மாணிக்கம் பதித்த விலை உயர்ந்த கிரீடம் சூட்டி இறைவன் காட்சி தருவார். மாதப்பிறப்புகள், தமிழ், ஆங்கில வருடப்பிறப்புகள், தீபாவளி, பொங்கல், சனிப்பெயர்ச்சி, பவுர்ணமி போன்ற நாட்களில் இங்கு சிறப்பு வழிபாடுகள் உண்டு. வாருங்கள் இனி மலை ஏறி சுரும்பார் குழலி உடனாய இரத்தினகிரீஸ்வரரை தரிசிக்கலாம்.

காவிரி பெருகி வந்து பொன் கொழிக்கச் செய்யும் பகுதியென்பதால் வாழை, கரும்பு, நெல், கமுகு, புகையிலை, வெற்றிலைப் பயிர்கள் செழிப்பாக வளர்ந்துள்ளன.

இவ்வாறு பச்சை பசேல் என்ற பயிர்களை கண்டு களித்துக்கொண்டே அடியோங்கள் வாட்போக்கியை அடைந்த போது முதலில் கண்ணில் பட்டது அடிவாரத்தில் உள்ள தூண்களுடன் கூடிய ஒரு நீண்ட நூற்றுக்கால் மண்டபம், அதன் மேற்புறத்தில் பல தெய்வ சுதை சிற்பங்கள். அம்மண்டபத்தில் பக்தர்கள் பலர் அமர்ந்திருந்தனர். பின்னர் வெயில் தாழ்ந்த பின் மலையேறலாம் என்று அவர்கள் காத்திருந்தனர் என்று தெரிய வந்தது. ஒரு சிறுமிக்கு மொட்டை அடித்து காது குத்திக் கொண்டிருந்தனர்.

இம்மண்டபத்தின் முகப்பில் முழுமுதற்கடவுள் விநாயகர் அருள்பாலிக்கின்றார். ஐங்கரனை முதலில் வணங்கி விட்டு இம்மண்டபத்தில் உள்ள தண்டபாணி, மற்ற நாட்டார் தெய்வங்களான வைரப்பெருமாள் மற்றும் கோடங்கி நாயக்கர், கருப்பண்ணசாமி ஆகியோரை வணங்கினோம். கருப்பண்ணசாமி சன்னதியில்

பூட்டு பிரார்த்தனைக்காக ஒரு கம்பத்தில் பல பூட்டுகள் பூட்டியிருப்பதைப் பார்த்தோம். வைரபெருமாளின் பாதம் மட்டுமே அடிவாரத்தில் உள்ளது.

திருவிழாக்காலங்களில் பஞ்சமூர்த்திகள் கிரி வலம் வருகின்றனர் என்பதால் வாகன அறை அடிவாரத்தில் உள்ளது. அதிகார நந்தி தேவர் தரிசனம் அளித்துக் கொண்டிருந்தார் அவரிடம் அனுமதி பெற்று மலையேற்றத்தை துவங்கினோம்.

மலையேறும் போது அலுப்பு தெரியாமல் இருக்க சேறை கவிராசப்பிள்ளை இயற்றிய வாட்போக்கி என்னும் இரத்தினகிரி உலாவில் தமிழ் மாதங்களான சித்திரை முதல் பங்குனி வரை பன்னிரண்டு மாதங்களின் பெயருடன் இணைத்து இறைவன் புகழ் பேசும் ஓர் பாடலை இரசித்தபடி மலையேறலாமா அன்பர்களே,

கூத்தன்மா சித்திரையான் கூறினவை காசியான்
ஆத்தன் நமனுக்கே ஆனியான் - ஏத்துசபை

ஆடியான் ஆவணியான் ஆன புரட் (டு) ஆசியான்
மூடிமால் ஐப்பசியான் முத்தமிழ்க்கே - நாடிவருங்

கார்த்திகையான் கொன்றையினுங் காமிக்கும் மார்கழியான்
வார்த்தை மிகுதையான் மாசியான் - மூர்த்திகமாம்

விம்பங் குனியான் விரும்புபல மாதத்தான்
நம்பு வருட நகுமுகத்தான்.

கடல் மட்டத்திலிருந்து 1178 அடிகள் உயரத்தில் உள்ள மலை உச்சிக்கு சென்று சுவாமியை வழிபட 1017 படிகள் அமைக்கப்பட்டுள்ளது. மலையேறும் பாதையில் மொத்தம் 21 மண்டபங்கள் உள்ளன எனவே மெதுவாக அங்கங்கே இளைப்பாறிக் கொண்டே மலை ஏறலாம், மேலிருந்து இயற்கை அழகை இரசிக்கலாம். இம்மலையில் படிகள் சீராக உள்ளன, படிகளில் விளக்கு ஏற்ற ஏதுவாக பிறைகள் அமைத்துள்ளனர்.


மந்தி பல மகிழ்ந்தாடும் வாட்போக்கி என்று அப்பர் பெருமான் பாடியபடி இம்மலையில் நிறைய குரங்குகள் உள்ளன. வழி நெடுகிலும் உயர்ந்த பாறைகள், மூலிகைச் செடிகள், குரங்குக் கூட்டங்கள் என்பவற்றைப் பார்த்துக் கொண்டே மேலே சென்றால் இரத்தினகிரீசுவரரின் ஆலயத்தை எளிதாக அடையலாம்.



அப்பர் பாடிய கின்னரங் கேட்கும் வாட்போக்கியை தரிசிக்க செல்ல இம்மலைப்படிகள் ஆரம்பிக்கும் இடத்தில் ஒரு எட்டு கால் மண்டபம் உள்ளது அதன் முகப்பில் பஞ்ச மூர்த்திகளின் சுதை சிற்பம். பொதுவாக சுவாமியை ரிஷபாரூடராக அமைப்பர், ஆனால் இங்கு இலிங்க ரூபமாக அமைத்துள்ளனர். இம்மண்டபத்தின் மத்தியில் உண்டியல். அடுத்து விளக்கு கல் தூண். இக்கம்பத்தடியில் பில்லி, சூனியம் நீங்க கயிறு கட்டி வழிபடுகிறனர்.

வலப்பக்கத்தில் சகுனக்குன்று என்னும் பாறை, உருண்டையான இப்பாறை எப்போது விழுந்து விடுமோ போல உள்ளது. சகுன குன்றின் கீழ் அமர்ந்து, காரியங்களைத் தொடங்குவதற்கான நற்சகுனம் பார்க்கவும் பிரார்த்தனை செய்கிறார்கள். வறட்சி காலங்களில் சகுனக்குன்று விநாயகருக்கு பூஜை செய்தால் மழை பெய்கிறது என்பது ஐதீகம். இப்பாறைக்கு அருகில் கை, கால் வலி நீங்கிய பின் பக்தர்கள் தாங்கள் குணம் பெற்ற கை அல்லது காலை கல்லின் மீது வைத்து கை, காலின் வடிவத்தைக் குறித்துக்கொண்டு அதன் மீது அடிப்பர்.

அடுத்து பொன்னிடும் பாறை, சுந்தருக்காக இறைவன் பொன் சொரிந்த பாறை. இதன் மேல் எம்பிரான் தோழர் அவிநாசியில் இறையருளால் முதலையுண்ட பாலனை மூன்று வருடங்களுக்குப்பின் உயிருடன் வரவழைத்த வரலாற்றின் சுதை சிற்பம் அமைத்துள்ளனர்.



சகுனக்குன்று

பூம்புகாரை நீங்கிய பதினோரு செட்டிமார்கள் இங்கு வந்து பொன்னிடும் பாறையருகே அமர்ந்து அதனைப் பிரிக்க முற்பட்டபோது அது பன்னிரண்டு பங்காகப் பிரியக் கண்டு அதிசயித்து அப்பன்னிரண்டாவது பங்கை இறைவனுக்கே அளித்தனர். எனவே பன்னிரெண்டாம் செட்டியார் என்றும் இறைவனை வழங்குவர்.

இடப்பக்கத்தில் ஒரு வித்தியாசமான மண்டபம். அதில் மேலே உள்ள இறைவரை நோக்கியவாறு வினை தீர்க்கும் அதிகார நந்திகேஸ்வரர் அருள்பாலிக்கிறார். இம்மண்டபத்தின் சிறப்பு மூன்று தூண்கள்தான் உள்ளன எனவே மூன்று கால்

மண்டபம் என்றும் அழைக்கப்படுகின்றது. நான்காவது கால் என்னாயிற்று என்று யோசிக்கின்றீர்களா? மலையின் ஒரு பாறையையே தூணாக மாற்றி இருக்கின்றார் ஸ்தபதி.



மூன்று கால் மண்டபம்

பொன்னிடும் பாறையில் இருந்து திருப்புகழ் சபை மண்டபம் முதலான மண்டபங்களை கடந்து  103 படிகள் மேல்நோக்கி ஏறினால், பதினெட்டு படிகள் வரும். இப்பதினெட்டு படிகளும் சிறப்பு வாய்ந்தவை. பதினெட்டு படிகளின் நடுவில் ஒரு மலர் செதுக்கப்பட்டுள்ளது. வழக்கு மற்றும் பிரச்சினைகள் ஏற்படும் போது, நியாயம் உள்ளவர்கள் இப்படிகளில் சூடம் ஏற்றி 'நான் குற்றமற்றவன். என் பிரச்சினையை தீர்த்து வை இறைவா' என்று பிரார்த்தித்தால், உடனடியாக தீர்வு கிடைக்குமாம். அதே நேரம் பொய் சத்தியம் செய்தால் அவர்களுக்கு தக்க தண்டனை கிடைக்கும் என்பது கண்கூடாக நடைபெறும் நிகழ்வுகளாம். அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய இப்படிகளை பக்தர்கள் புனிதமானவை என்று போற்றுகின்றனர்.

தொடர்ந்து இலட்சதீப மண்டபம், ஏகாலியர் மண்டபம், காக்கை மண்டபம், திருப்புகழ் மண்டபம், வசந்த மண்டபம் ஆகிய மண்டபங்கள் உள்ளன. இது வரை பாதி தூரம் வந்து விட்டோம்.



சப்த கன்னிகைகள்

இவ்விடம் வலப்பக்கம் துர்க்கைக்கு தோஷம் நீங்கியதால் இரு பாறைப் பிளவுகளும், அருகில் வாள் போன்ற பாறையும், பிராம்மி, மாகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, மாஹேந்திரி, சாமுண்டி ஆகிய சப்த கன்னிகைகளையும், விநாயகரையும் தரிசிக்கலாம். கன்னியர் எழுவர் பலத்த மழைக்கு ஒதுங்க

இடமின்றித் தவித்தபோது இறைவன் இங்கு பாறை இடையே குகை போன்ற அமைப்பை ஏற்படுத்தித் தஞ்சம் அளித்தார் என்றும் கூறுவர்.

சிவ சிவ என்கிலர் தீ வினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே - என்று சிவ சிவ மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மலையேறினோம்.

படியேறி செல்லும் வழியில் சசீராஜன் குன்று என்ற பாறையின் கீழே இரண்டு படிகள் உள்ளன. இன்னொரு சுவாரசியமான பாறையையும் கவனித்தோம். அதில் நாகப்பாம்பிற்கு இறைவன் முக்தி கொடுத்த மலை என்று எழுதியுள்ளது. இவ்வாறு மலையெங்கும் உள்ள பாறைகளுக்கு தனி சிறப்பு உள்ளது.

அதற்கு மேலே உகந்தான்படி விநாயகர் சன்னதி உள்ளது. அவரை வழிபட்டு மேலே சென்றால் முதலில் நாம் காண்பது சோழபுரீசர் சன்னதி அதற்கு பின்னால் அம்பாள் சன்னதி கீழ் தளத்தில் உள்ளது. அம்பாள் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன், நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் அருள் பாலிக்கின்றாள். மேற்திருக்கரங்களில் தாமரை, கீழ்திருக்கரங்கள் அபய வரத ஹஸ்தங்கள். அம்மனின் திருமுகத்தை தரிசித்தவுடன் மலையேறி வந்த களைப்பு காணாமல் போனது. அருகில் தல மரம் வேப்ப மரம் உள்ளது. சன்னதியில் இருந்த குருக்கள் முதலில் சுவாமியை தரிசித்து வந்து விடுங்கள் என்றார், எனவே மேலே சென்றோம்.

அம்மன் சன்னதியை அடுத்து செங்குத்தான 20 படிகளை கடந்தால் ஐயன் சன்னதி வாயிலை அடையலாம். சுவாமி சன்னதி இரண்டு தளமாக ஓம் என்னும் பிரணவ வடிவில் உள்ளது. கீழ் தளத்தில் நந்தியெம்பெருமான், பலி பீடம், கொடி மரம் அமைந்துள்ளது. வட்ட வடிவ சுவற்றில் அறுபத்து மூவர் அருள் பாலிக்கின்றனர். சிவ சிவ என்னும் திருமந்திரத்தை சதா சர்வ காலமும் சிந்தித்துக் கொண்டிருந்த நாயன்மார்களின் திருவாடையில் சிவ சிவ திருநாமம் கண்ட போது உடல் சிலிர்த்தது. எதிரே சுவர் உள்ளது அச்சுவற்றில் ஒன்பது துளைகள் உள்ள சாரளம் உள்ளது.

இரத்தினகிரீஸ்வரர் சுயம்பு மூர்த்தி, மேற்கு நோக்கியவாறு அருள்பாலிக்கின்றார். பிரகாரம் வட்ட வடிவமாக இருப்பதையும், சாளர அமைப்பையும் காணலாம். இங்கு அருள் பாலிக்கும் சிவபெருமான் இரத்தினங்களாக இருப்பதால் இம்மலையைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில் பூமிக்கு அடியில் பச்சை, சிவப்பு போன்ற கற்கள் நிறைய கிடைக்கின்றன. இம்மலையை சுற்றிலும் 8 பாறைகளுக்கு நடுவே இருக்கும் ஒன்பதாவது பாறையில், சிவபெருமான் சுயம்பு மூர்த்தியாக வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். மாசி மாதம் 3, 4, 5 ஆகிய தேதிகளில் சூரிய கதிர்கள், சுவாமி சன்னிதிக்கு எதிரே உள்ள நவ துவாரங்களின் வழியாக

இறைவனின் மீது விழுகிறது. முத்துசுவாமி தீக்ஷிதர் லிங்கம் ஸ்ரீசக்ர வடிவில் அமைந்துள்ளதாக பாடியுள்ளார்.



சுவாமி கோஷ்டத்தில் ஆரியமன்னன் உள்ளது ஒரு தனி சிறப்பு. தக்ஷிணாமூர்த்தி, துர்க்கை, அர்த்தநாரீஸ்வரரும் கோஷ்டங்களில் அருள் பாலிக்கின்றனர். சிவகாமி அம்பாள் உடனுறை நடராஜர், சுப்பிரமணியர், சூரியன், சந்திரன் சன்னதிகள் உள்ளன. இத்தலத்து முருகனை அருணகிரிநாதர் தமது திருப்புகழில் ஒப்பிலா மாமணிக் கிரிவாசா என்றும் நமசிவயனொடு ரத்னகிரி வாழ் முருகனே என்றும் சிறப்பித்துப் பாடியுள்ளார் அதிலிருந்து ஒரு பாடல்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

பொருள்: அன்பினால் உன்னை உறுதியாக பல நாட்களாக விடாது பற்றிக்கொண்டு உயர்ந்த திருப்புகழைப் பாடி ஜீவன் முக்தனாகும் வழியில் என்னை இடையறா இன்ப வாழ்வாம் சிவகதியை சேர்ந்து உய்வதற்கு திருவருள் புரிவாயாக! உத்தம குணங்களைப் பற்றிக்கொண்டுள்ள நல்ல இயல்புள்ளவர்களின் நண்பனே, சமானம் இல்லாத பெருமை பொருந்திய

இரத்தினகிரியில் வாழ்பவனே, பேரறிவாளனே, திருவருள் ஞானத்தைப் பதியச் செய்பவனே வெற்றியைத் தரும் வேலை ஆயுதமாகக் கொண்ட பெருமாளே.



கீழ் தளத்தில் கொடி மரம், நந்தி, அறுபத்து மூவர்

அடியோங்கள் சென்ற சமயம் மேலிருந்த அன்பர்கள் ஓய்வெடுத்து கொண்டிருந்தனர். இப்பிரதேச பக்தர்கள் பொதுவாக வெயில் தாழ்ந்து பிறகு மாலை 3 மணிக்கு மேல்தான் மலை ஏறுவார்களாம். அடியோங்களுக்கு அது தெரியாததால் வெயிலிலேயே மலை ஏறி சென்று விட்டோம். அவர்கள் எங்களை அந்நேரத்தில் பார்த்தவுடன் வெளியூரிலிருந்து வருகின்றீர்களா? என்று கேட்டு, ஆம் சென்னயிலிருந்து வருகிறோம் என்றவுடன் இதைக் கூறினார்கள். ஆயினும் சன்னதியைத் திறந்து அருமையாக தரிசனம் செய்து வைத்தார் குருக்கள். சுவாமிக்கு தீபாரதனை முடிந்தவுடன் அப்படியே மேலே ஆரத்தியை கொண்டு சென்று சுவாமிக்கு முன்னே உள்ள வைரப்பெருமாளுக்கு காண்பித்து விட்டு பின்னரே அடியோங்களுக்கு பிரசாதம் அளித்தனர். வைர பெருமாள் சரிதத்தையும் கூறினார்கள். சுவாமி சன்னதியின் நுழைவாயிலில் வைரபெருமாள் சன்னதி உள்ளது.



ஓம் வடிவத்தில் ஐயன் சன்னதி

ஐயனை அருமையாக தரிசனம் செய்தபின் வாட்போக்கி பதிகத்தை பாராயணம் செய்தோம், அப்பதிகத்தின் நிறைவாக அப்பர் பெருமான் இவ்வாறு கூறுகிறார்

இரக்கம் முன்அறி யாதுஎழு தூதுவர்
பரக்க அழித்தவர் பற்றுதன் முன்னமே
அரக்க னுக்குஅருள் செய்தவாட் போக்கியார்
கரப்ப துங்கரப் பார்அவர் தங்கட்கே.

பொருள்: இரக்கமென்பதை முன்னும் அறியாது எழுந்த எமதூதுவர்கள் பரவி வந்து அழித்துப் பற்றிக் கொள்வதற்கு முன்பே, வாட்போக்கி இறைவரை பற்றுங்கள். இராவணனுக்கு அருள்செய்த அவர் தம்மடியாரை காப்பாற்றுவார். அதாவது வாட்போக்கியாரை சரணமடைந்தவர்களுக்கு எம பயம் தேவையில்லை என்கிறார் அப்பர் பெருமான்.



சும்பார் குழலி உடனுறை இரத்னகிரீஸ்வரர்

சுவாமி சந்நிதியின் மண்டபத்தில் பழங்காலத்துச் செய்யப்பெற்ற உலோகத்தாலான இரண்டு பாவைகள் விளக்கேந்திய வண்ணமாய் நிற்கின்றன. அவைகளில் ஒன்று சகம் 1726ல் (கி.பி 1804) கோயிலுக்குத் தானம் செய்யப்பட்டதாக தெரிகிறது. இப்பாவைகள் அழகிய வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன. அக்காலத்து நாகரிகத்தை அறிவிக்கும்படியான பல அணிகளைக் கொண்டுள்ளன. சடையணிகள், காதணிகள், மூக்கணிகள், கழுத்தணிகள், ஆரங்கள், கை வளையல்கள், காலணிகள் முதலியன முற்காலத்திருந்த பழக்க வழக்கங்களைத் தெரிவிக்கின்றன. ஒரு பாவையின் காதுகளில் ஜிமிக்கி என்னும் காதணிகள், அசைத்தால் அசையும் தன்மையுடையனவாய் அமைந்துள்ளன. பழனியில் உள்ளது இம்மலையிலும் காத்தாடி மரம் உள்ளது.



படிகளில் இறங்கும் போது தலையில் ஒரு குட நீரை சுமந்து மலையேறி வரும் அன்பரைப் பார்த்தோம். குடத்தை கைகளால் பிடிக்காமல்  ஒரு தவம் போல படி ஏறி வந்து கொண்டிருந்தார். சிறு வயதில் பழனி மலை ஏறும் போது செங்குத்தாக ஏறாமல் குறுக்காக ஏறினால் கால் வலியும் இருக்காது களைப்பும் இருக்காது என்று பெற்றோர் சொல்லி கொடுத்திருந்தார்கள். அது போலவே இவர் அபிஷேக தீர்த்தத்தை தலையில் சுமந்து கொண்டு குறுக்காக அநாயாசமாக படி ஏறிக் கொண்டிருந்தார். மேலே இருந்து ஊரின் நடுவே உள்ள குளம் அருமையாக காட்சி அளித்தது.

சுவாமிக்கும் அம்பாளுக்கும் பக்தர்கள் அபிஷேக, ஆராதனைகள் மற்றும் மணி விளக்குகளை பக்தர்கள் காணிக்கையாக செலுத்துகின்றனர். இறைவனுக்கு தூய உலர்ந்த வேட்டி சாத்தி வழிபடலாம். பால், எண்ணெய், இளநீர் ஆகியவற்றால் அபிஷேகம் செய்யலாம். விரதம் இருத்தல், தானதர்மம் செய்தல், வேள்வி புரிதல், தவம் செய்தல், தியானம் செய்தல் போன்றவற்றை இவ்வாலயத்தில் செய்தால் பன்மடங்கு புண்ணியம் கிடைக்கும் என்கிறார்கள்.

திருவண்ணாமலையை போல,  மலையே சிவபெருமான் என்பதால் அய்யர் மலையும் கிரிவலத்திற்கு சிறப்பானதாகும். மாதந்தோறும் பௌர்ணமியன்று பக்தர்கள் மூலிகைகள் நிறைந்த  இக்கிரியை வலம் செய்கின்றனர். அவ்வாறு வலம் வரும்போது காட்டுப் பிள்ளையார் கோயிலருகில் நின்று கொண்டு மாணிக்க மலையனே என்று உரக்க அழைத்தால் எதிரொலி கேட்கிறது. கார்த்திகை தீபத்தன்று கிரிவலப் பாதை முழுவதும் தீபம் ஏற்றுகின்றனர்.



ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் 15 நாட்கள் பெருவிழா. மலைமேலுள்ள உற்சவமூர்த்திகள் கீழே வந்து வாகனங்களில் காட்சி தந்து கடைசி நாளில் தேரோட்டம் நிகழும். சங்கிலி கொண்டு தேர் இழுக்கப்படுகிறது. பன்னிரண்டார் சமூகம் அளித்த தேரில் இரத்தினகிரீசர் பவனி வருகிறார். மூன்று நாட்களுக்கு நடைபெறும் தேரோட்டத்தின்போது பக்தர்கள் தேரோடும் வீதியிலும், மலை படிகளிலும், தமது வயல்களில் விளைந்த தானியங்களை தூவி வழிபட்டு செல்வர் . இதனால் விளைச்சல் பெருகும் என்பது நம்பிக்கை. தேரோட்டத்திற்கு முதல் நாள் இரவு நடைபெறும் குதிரை தேர் புகழ்பெற்றதாகும். இவ்விழாவின்போது தங்கக்குதிரை வாகனத்தில் சுவாமி புறப்பாடாகி தேரில் எழுந்தருள்வார். தைப்பூச நாளில் இறைவன் கடம்பர்கோயில் துறைக்குச் சென்று கடம்பர்கோயில், ராஜேந்திரம், வெட்டு வாய்த்துறை, கருப்பத்தூர், திருஈங்கோய் மலை, முசிறி, வெள்ளூர் முதலிய தலங்களிலிருந்து வந்துள்ள மூர்த்திகளுடன் தங்கியிருந்து மறுநாள் புறப்பட்டு ஊர் வந்து சேர்வார். பங்குனி உத்திர நாளில் குளித்தலையில் உள்ள தெப்பக்குளத்தில் தெப்பவிழா நடைபெறும். அன்றைய தினம் காலையில் சுவாமி புறப்பட்டுச்சென்று இரவில் தெப்பத்தில் காட்சி கொடுத்து மறுநாள் திரும்புகிறார். இவற்றைத் தவிர மாதாந்திர விழாக்களும் அவ்வப்போது நடை பெறுவதுண்டு.

ஐயர்மலைக்குத் தெற்கில் சுமார் 15 கி.மீ தூரத்தில் உள்ள சிவாயம் என்னும் ஊரில் ஒரு பெரிய சிவன் கோயில் உள்ளது. நான்கு பக்கங்களிலும் பெரிய மதில்களையும், கீழ்ப்புரம் ராஜகோபுரத்தையும் கொண்டு இது விளங்குகின்றது. ஐயர்மலையில் இருந்தபடியே இக்கோயிலைத் தரிசிக்கலாம். இதுவே பழமையான கோயில் என்று சொல்லப்படுகிறது. முற்காலத்தில்

சிவபாதசேகரபுரம் என்னும் பெயரால் இவ்வூர் வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது. கோயிலுக்குள்ளே இரண்டு பிரகாரங்கள் உள்ளன. சுவாமி அம்மன் சந்நிதிகள் கிழக்கு நோக்கி உள்ளன. சுவாமிக்குச் சிவபுரீஸ்வரர் என்றும், அம்மனுக்குப் பெரியநாயகி என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. கோயில் சுவர்களில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. சிவாயம் கோயிலில் மார்கழி மாதத்தில் திருவாதிரை நாளைக் குறித்துப் பத்து நாட்கள் வரை விழா நடை பெறும்.

மெல்ல மெல்ல மலை இறங்கி வந்து கொண்டிருக்கும் நேரத்தில் வாட்போக்கி கலம்பகத்தில் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய ஒரு பாடலைப் பார்ப்போம். இப்பாடலில் இத்தலத்தின் ஐதீகங்களையெல்லாம் அவர் எவ்வாறு இகழ்வது போல் புகழ்ந்துள்ளார் என்று பார்ப்போம்.

1.அடித்தழும்பு புறத்திருக்க வாரியர்கோ மகன்கொடுத்த
முடித்தழும்புங் கொண்டனைவெம் முலைத்தழும்பிற் சீரியதோ!
மாணிக்கவாசகருக்காக வைகையில் வெள்ளம் பெருக வைத்து, அவ்வெள்ளம் கரையை உடைக்க, அதை அடைக்க வந்தியின் கூலி ஆளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்து ஒரு பித்தனைப் போல அரிமர்த்தன பாண்டிய மன்னன் முதுகில் பிரம்பால் அடித்த தழும்பையும், கம்பா ஆற்றதனில் மணல் குவித்து அரிய பூசை செய்த அன்னை ஏகம்பரியை மணம் புரிய வேண்டி கம்பையாற்றில் வெள்ளம் பெருக்கி சிவலிங்கத்தை கரைக்க பாய்ந்த போது வஞ்சி உமையம்மை அஞ்சித் தழுவிய போது பெற்ற முலைத்தழும்பும், வளைத்தழும்பையும் விட பெரியதோ ஆரிய மன்னன் வீசிய வாளால் ஏற்பட்ட முடித்தழும்பு?

2. அருகாக முப்புவன மடங்கவெரித் தருளுநினக்
கொருகாக மெரித்தனையென் றுரைப்பதுமோர் புகழாமோ!
அன்று தேவர்களின் கர்வத்தை அடக்க தன் புன்சிரிப்பினால் முப்புரங்களையும் எரித்த உன்னை ஒரு காகத்தை எரித்தனை என்று புகழ்வது ஒரு புகழா ?

3. சீரியர்கைப் புனல்கொல்லோ திருந்துமைகைப் புனன்முடிமே
லாரியர்கைப் புனல்கொள்வா யடங்கநனைத் திடுங்கொல்லோ!
உமையம்மையின் திருகரங்களிலிருந்து உருவான கங்கை நதியின் கர்வத்தை அடக்க அவளை சடாமுடியில் ஆபரணமாக அணிந்து கொண்டவரை ஆரிய மன்னன் காவிரியில் இருந்து கொணர்ந்த ஒரு குடம் நனைக்குமா?

4. தருநிதிக்கோ விருக்கவொரு சார்வணிக ரொடுகலந்தாய்
பெருநிதிக்கோ வெனிற்பெருமான் பேராசை பெரிதன்றே!

செல்வத்திற்கதிபதி தங்கள் சகா குபேரனுக்கே அச்செல்வம் அனைத்தையும் நல்கிய குபேரரீஸ்வரர் தாங்கள். நீங்கள் போய் பூம்புகார் வணிகர்களின் பொன்னில் ஒரு பங்கு பெற்றீர் உமக்கு என்ன பேராசையா?

5. தொடிமுழங்க மணியொலித்துத் துணைவிபுரி பூசைகோலோ
விடிமுழங்கப் புரிபூசை யெஞ்ஞான்று மினிதுவப்பாய்!
வளையணிந்த உமையம்மை மணியொளித்து செய்யும் பூசனையை ஏற்கும் தாங்கள் இந்திரன் மின்னல் இடி ஒலித்து செய்யும் பூசனையையும் எக்காலத்திலும் இனிதே ஏற்று மகிழ்கின்றாயே, அஃது எதற்காக?

6. உனையடைந்தார் பயமகன்றின் புறுவரெனற் கணியுரகங்
கனையடைந்த விடிநோக்கி களித்துறைதல் கரியன்றே!
உன்னைச் சரணடைந்தவர்கள், அச்சம் அகன்று இன்புறுவர் என்பதற்குக் கனைத்து அதட்டுவது போல் இடிகள் முழங்கிப் பூசை செய்வதை தங்களின் அணிகலன்களான நாகங்கள் அஞ்சாமல் கண்டு (இடியோசை கேட்டால் நாகங்கள் நடுங்கும் என்பது நம்பிக்கை) , மகிழ்ந்து உடனுறைவதே சாட்சியுரைக்கின்றனவே?

இப்படியாக இத்தலவரலாற்களை சிந்தித்துக்கொண்டே அடிவாரம் வந்து சேர்ந்தோம். மலையிறங்கிய பின் ஒரு தடவை வைரபெருமாளை தரிசனம் செய்தோம். அடியோங்கள் சென்ற சமயம் மலையேற முடியாதவர்களுக்காக டோலி வசதி இருந்தது.
காவிரிக்கரையின் மூன்று தலங்களின் தரிசனத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் மலையேற முடியாதவர்கள், வயோதிகர்கள் ஆகியோருக்கான ஒரு இனிய செய்தி. இம்மலையில் நடந்து வந்த இழுவை வண்டி (Rope Car) பணிகள் முடிந்து சோதனை ஓட்டமும் நிறைவு பெற்றன. இனி வரும் காலத்தில் இதன் மூலமாக முடியாதவர்கள் நேராக சென்று இரத்தினகிரீஸ்வரரை தரிக்க முடியும்.
இனி ஒரு கொசுறு செய்தி: சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் ஒரு சிவலிங்கம் கண்டெடுக்கப் பெற்றது. காஞ்சி மகாபெரியவர் திருவருளாணையால் அவ்விலங்கத்தை பிரதிஷ்டை செய்து ஒரு அற்புத ஆலயம் உருவானது, அவ்வாலயம் " அருள்மிகு அராளகேசி உடனுறை இரத்தின கிரீஸ்வரர்" என்ற இத்தல இறைவன் இறைவியின் திருப்பெயர் கொண்டு அமைந்துள்ளது.

இவ்விதம் அருமையாக கடம்பர், மரகதர், சுந்தரர், தரிசனத்திற்கு பிறகு கொங்கேழ் தலங்களில் ஒரு தலமான கரூருக்கு கிளம்பினோம் வழியில் இரண்டு தலங்களை தரிசித்தோம் அவையென்ன என்று தெரிந்து கொள்ள தொடர்ந்து வாருங்கள் அன்பர்களே.

# 14 *சிந்தலவாடி நரசிம்மர் தரிசனம்*

‘



நாராயணா என்னும் நாமம் நிலை நாட்டிட எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரம். எங்கிருக்கிறான் உன் நாராயணன்? என்ற இரண்யகசிபுவின் கேள்விக்கு தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்ற பிரகலாதனின் வார்த்தையை மெய்ப்பிக்க உடனே எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரம். இவ்வாறு நரசிம்மராக தானே வந்து பெருமாள் அமர்ந்த சிந்தலவாடித் தலத்தை அடுத்து அடியோங்கள் சேவித்தோம்.

நரசிம்ம அவதாரம் பற்றி சில வரிகள்.

அதர்மம் எப்போதெல்லாம் தலை தூக்குகிறதோ, அப்போதெல்லாம் அவதாரம் எடுக்கிறேன் இது கிருஷ்ணபகவான் மஹாபாரத யுத்தத்தின்போது அர்ஜுனனுக்கு கீதையின் மூலம் கூறிய அருள் வாக்கு.

மிகக் கோபமுடையவராகவும், வீரமுடையவராகவும், எங்கும் நீக்கமற நிறைந்தவராகவும், எல்லாப் பக்கங்களிலும் ஒளி வீசுபவராகவும், எமனுக்கே எமனாக நிற்பவராகவும், நரனும் சிங்கமுகமும் கலந்த உருவம் கொண்டவராகவும் விளங்குபவர் ஸ்ரீ நரசிம்மப்பெருமான்.

உலகையும் உயிர்களையும் படைத்தவன் திருமால்" என்றான் பிரஹலாதன்.

"யார் அந்தத் திருமால்?" என்று கேட்டான் ஹிரண்யன்.

அதற்கு பிரஹலாதன் "அவன்தான் உலகையும், உயிர்களையும் படைத்தும், காத்தும், அழித்தும் முத்தொழிலைச் செய்பவன் .

உலகுக்கு உயிர்களையும், மலருக்கு மணத்தையும், எள்ளில் எண்ணெயையும் கொடுத்தவன்" என்று தொடர்ந்தான் பிரஹலாதன்.
பிரஹலாதா ! நாராயணன் நாராயணன் என்று சொல்கிறாயே! நீ சொல்லும் அந்த திருமால் நாராயணன் எங்கே இருக்கிறான்? உன்னை இப்போதே கொன்று விடுவேன்! .சொல்! என்று பிரஹலாதனை ஓங்கிய குரலில் அதட்டினான் ஹிரண்யன்.

அதற்கு பிரஹலாதன் "என் உயிர் என் தந்தை ஸ்ரீமன் நாராயணன் கொடுத்தது. அதைப் போக்கும் உரிமை உனக்கு இல்லை" என்றான் சாந்தமாக.

"பிரஹலாதா! மழுப்பாதே! யார் அந்த நாராயணன் என்றான்" ஹிரண்யன் விடாமல்.

தந்தையே அந்நாராயணன் தூணிலும் உள்ளான். துரும்பிலும் உள்ளான், எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள் அவன்" என்று பயப்படாமல் பதில் கூறினான் பிரஹலாதன்.

சாணிலும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச் சத கூறு இட்ட
கோணினும் உளன்; மா மேருக் குன்றினும் உளன்; இந் நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்; இத் தன்மை
காணுதி விரைவின்" என்றான்; "நன்று" எனக் கனகன் நக்கான்.

பிரஹலாதா! அவன் எல்லா இடங்களிலும் இருக்கிறான் என்றால், இதோ! இந்தத் தூணிடத்தே அவனைக் காட்டவேண்டும் நீ! .

இந்தத் தூணில் உன் ஸ்ரீஹரி தோன்றவில்லையெனில், சிங்கம் யானையைக் கொல்வது போல்,நான் உன்னை இப்போதே கொல்வேன் ” என்று அதட்டினான் ஹிரண்யன்.

நாராயணன் எங்கே இருக்கிறான் என்று கேட்ட பொழுது, பிரஹலாதன் காட்டிய தூணை எட்டி உதைத்தான் ஹிரண்யன்.

ஆக இப்படியாக தானே பகவான் சிங்க முகத்துடன்,தனது பக்தன் பிரஹலாதனுக்காக ஒரே நொடியில் தூணைப் பிளந்துகொண்டு அவதரித்தார்.

பிளந்தது தூணும்; ஆங்கே பிறந்தது, சீயம்; பின்னை
வளர்ந்தது, திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல மற்றும்
அளந்தது; அப் புறத்துச் செய்கை யார் அறிந்து அறையகிற்பார்?
கிளர்ந்தது; ககன முட்டை கிழிந்தது, கீழும் மேலும்

இப்படி திருமாலின் அவதாரங்களில் மிகவும் போற்றப்படுகிற அவதாரம் நரசிம்ம அவதாரம் பெருமாளின் காக்கும் குணம் உடனே வெளிப்பட்ட அவதாரம்.

இரண்யனுக்கு அஞ்சி வேறு பகுதிகளில் ஒளிந்து வாழ்ந்த முனிவர்கள், இரண்ய வதத்திற்குப்பின் பகவானிடம் நரசிம்மத் திருக்கோலத்தைத் தங்களுக்குக் காட்டியருள வேண்டும் என்று வேண்டினர். அதற்கிசைந்த பெருமாள் அவ்வண்ணமே முனிவர்களுக்கு பல தலங்களில் சேவை சாதித்தார். அவ்வாறு காட்சி தந்த தலங்கள் தமிழகத்தில் எட்டு இடங்களில் உள்ளன. இவை அஷ்ட நரசிம்மத்தலங்கள் என்று சிறப்பாக அழைக்கப்படுகின்றன.

இவற்றில் பூவரசன் குப்பம் நடுவில் இருக்க, இதைச் சுற்றி சோளிங்கர் நரசிம்மர், நாமக்கல் நரசிம்மர், அந்திலி நரசிம்மர், சிங்கப் பெருமாள் கோவில் (தென் அகோபிலம்), பரிக்கல் நரசிம்மர், சிங்கிரி கோவில் அமைந்துள்ளன. இவற்றுள் பூவரசன்குப்பம், பரிக்கல், சிங்கிரி கோவில் ஆகிய மூன்று தலங்களும் ஒரே நேர்க்கோட்டில் அமைந்துள்ளன. இம்மூன்று தலங்களையும் ஒரே நாளில் வழிபட்டால் நல்லது என்பார்கள்.

முதலில் அடியோங்கள் தரிசித்த சிந்தலவாடி தலத்தில் தானாக நரசிம்மர் எழுந்தருளிய வரலாற்றைக் காண்போம் பின்னர் மற்ற நரசிம்மர் ஆலயங்களின் சிறப்பைப் பற்றி சுருக்கமாக பார்த்துவிட்டு நிறைவாக அடியோங்களுக்கு கிடைத்த தரிசனத்தைப் பற்றிக் காணலாம் அன்பர்களே.

சிந்தலவாடித்தலம் திருச்சி - குளித்தலை சாலையில் குளித்தலையில் இருந்து 12 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. திருச்சி-கரூர் நெடுஞ்சாலையில் காட்டுப்புத்தூர் அருகில் காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

இங்கு மிகப் பின்னாளில்தான் நரசிம்மர் எழுந்தருளினார் என்பது சுவாரஸ்யமான சரிதம். அதற்கு முன்னால், காளிங்க நர்த்தன கிருஷ்ணர் மற்றும் அனுமன் ஆகியோர் இங்கு எழுந்தருளியிருந்தனர். இவர்களைப் பிரதிஷ்டை செய்தவர் ஸ்ரீவியாசராஜர்.

ஸ்ரீ வியாசராஜர் பிரதிஷ்டை செய்த விக்கிரகங்களின் பெருமை திசையெங்கும் பரவ, பலரும் இங்கு வந்து தங்கி, இறைவழிபாடு நடத்தினர். அப்படி வந்த பக்தர்களில் ஒருவர் ஹரியாச்சார், அவர் கரூர் மாவட்டம் திருக்காம்புலியூரில் வசித்துவந்தார். ஒருநாள் அவர் கனவில் நரசிம்மர் தோன்றி, தான் கருப்பத்தூர் காவிரிக்கரையில் ஒரு கல்லாக கவிழ்ந்து கிடப்பதாகவும், தன் மீது ஒரு சலவையாளர் அனுதினமும் துணி துவைத்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

மறுநாள், ஆர்யாச்சார் திருக்காம்புலியூரிலிருந்து கருப்பத்தூருக்குச் சென்றார். கனவில் தெரிந்த வழிகளில் பயணம் தொடர, சலவைத் தொழிலாளர்கள் பணி செய்யும் இடம் வந்தது. குறிப்பிட்ட சலவைத் தொழிலாளியும் ஆர்யாச்சாரை அழைத்துச் சென்று அக்கல்லைக் காண்பித்தார். கல்லைத் திருப்பிப் பார்த்தபோது யோக நரசிம்மர் காட்சியளித்தார். ஸ்ரீ ஆர்யாச்சார் பக்தியாக, அவ்விக்கிரகத்தோடு மேற்கு நோக்கி நடந்தார். சிந்தலவாடி அருகே வந்தபோது,

நடை நடுங்கியது; கல் பாரமாகத் தெரிய ஆரம்பித்தது. ஸ்ரீ நரசிம்மரின் எண்ணம் பக்தருக்குப் புரிந்தது. அங்கேயே ஸ்ரீ யோக நரசிம்மரை இறக்கி, காவிரிக்கரையில் அக்கிராமத்தில் முன்பே இருந்த ஸ்ரீ காளிங்க நர்த்தனர் கோயிலில் நரசிம்ம ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்தார். அப்போது ஸ்ரீரங்கத்தில் இருந்த ஸ்ரீவியாசராஜர் சிந்தாலவாடி வந்து ஸ்ரீயோக நரசிம்மரை பூஜித்தார். யோக நரசிம்மருக்கு இடப்புறத்தில் ஒரு சிறு சன்னதியில் அனுமனை (பிராண தேவரு) பிரதிஷ்டை செய்து வணங்கினார்.



நரசிம்மர் விமானம்

ஏறத்தாழ 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவில் கரூர், குளித்தலை, திருச்சி , முசிறி பகுதிகளில் வாழும் மத்வ சம்பிரதாயக் குடும்பங்களின் குலதெய்வ ஆலயமாக விளங்குகிறது. தங்கள் குழந்தைகளுக்கு முடி இறக்குதல், காது குத்துதல் போன்ற சுப நிகழ்ச்சிகளை இக்கோயிலில் நடத்துகிறார்கள். மத்வ சம்பிரதாயப் படி தினசரி பூஜைகளும் உற்சவங்களும் இங்கு நடத்தப்படுகின்றன. இனி மற்ற அஷ்ட நரசிம்மர் தலங்களைப் பற்றி சுருக்கமாக காண்போம்.

பூவரசங்குப்பம்: இரண்யகசிபுவை வதம் செய்த பிறகும், கோபம் தணியாத நரசிம்மர், காடுகளிலும், மலைகளிலும் சுற்றித் திரிந்தார். அப்போது இரண்யகசிபுக்கு பயந்து காடுகளில் ஒளிந்தபடி தன்னை வழிபட்ட முனிவர்களுக்கு அவர் காட்சியளித்தார். அத்தலமே இதுவாகும். தட்சிண அகோபிலம் என்ற புராணப்பெயரைக் கொண்டது.

தூணிலிருந்து நரசிம்மர் வெளிப்பட்ட வரலாற்றின் அடிப்படையில், ஒரு தூணையே நரசிம்மராகக் கருதி இங்கு வழிபாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன்பின்னர் பல்லவ மன்னர்கள் காலத்தில் ஆலயம் எழுப்பி, சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மூலவர் லட்சுமிநரசிம்மர், உற்சவர் பிரகலாதவரதன், தாயார் அமிர்தவல்லி.

பொதுவாக நரசிம்மருக்கான ஆலயங்களில் அவர் உருவம் பெரியதாகவும், தாயாரின் உருவம் சிறியதாகவும் அமைந்திருக்கும். ஆனால் இவ்வாலயத்தில், ஆணுக்குப் பெண் சரிசமம் என்பதை உணர்த்தும் விதமாக பெருமாளின் உருவத்திற்கு தகுந்தாற்போல, தாயாரின் திருஉருவமும் அமைக்கப்பட்டிருக்கிறது .

பண்ருட்டியிலிருந்து விழுப்புரம் செல்லும் சாலையில் சின்னக்கள்ளிப்பட்டு என்ற ஊரிலிருந்து 3 கிலோமீட்டர் தூரத்திலும், புதுச்சேரியில் இருந்து விழுப்புரம் செல்லும் சாலையில் சிறுவந்தாடு என்ற ஊரிலிருந்து 2 கிலோமீட்டர் தொலைவிலும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

சிங்கிரிக்குடி: பிரகலாதன் வேண்டுகோளுக்கிணங்கி, 16 கரங்களுடன் உக்கிரமூர்த்தியாக காட்சியளித்த தலம் இது. இராஜராஜ சோழன் மற்றும் விஜயநகர மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட இவ்வாலயம், 5 நிலை இராஜ கோபுரத்துடன் மேற்கு நோக்கி உள்ளது.

இரண்யகசிபுவை நரசிம்மர் மேற்கு நோக்கி நின்று வதம் செய்ததால், இக்கோவிலும் மேற்கு நோக்கிய நிலையில் உள்ளது. நரசிம்மரின் இடதுபுறம் இரண்ய கசிபுவின் மனைவி நீலாவதி, வலதுபுறம் தரிசனம் வேண்டி 3 அசுரர்கள், பிரகலாதன், சுக்ரன், வசிஷ்டர் ஆகியோர் உள்ளனர். கருவறையின் உள்ளே வடக்கு நோக்கிய நிலையில் சிறுவடிவில் யோகநரசிம்மர், பால நரசிம்மர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். ஒரு கருவறையில் மூன்று நரசிம்மர்கள் அருள்பாலிப்பது அரிதான காட்சியாகும். [கடலூர்-புதுச்சேரி சாலையில் தவளகுப்பத்தில் இருந்து அபிஷேகபாக்கம் செல்லும் சாலையில் 2 கிலோமீட்டர் தொலைவில் இக்கோவில் உள்ளது

பரிக்கல்: இதுவும் பிரகலாதனுக்காக நரசிம்மர் காட்சி கொடுத்த தலம். நரசிம்மர் மீது மாறாத பக்திக்கொண்ட விஜயராஜன் என்னும் மன்னன் இங்கு ஆலயம் எழுப்பியுள்ளான். மேலும் ஆலயத்தில் தன் குரு வாமதேவ மகரிஷி உதவியுடன் மூன்று நாட்கள் தொடர் வேள்வி நடத்த ஏற்பாடு செய்தான்.

யாகத்தில் கலந்து கொள்ளுமாறு பல்வேறு தேச அரசர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தான். அந்நேரத்தில் பரிக்காலாசுரன் என்னும் அசுரன், வேள்வியை தடுத்து நிறுத்த அங்கு வந்தான். அசுரன் வருவதை அறிந்த குலகுரு, மன்னனை அருகிலுள்ள புதரில் ஒளிந்துக் கொள்ளுமாறு கூறினார். இருப்பினும் அசுரன் கோடரியால் மன்னனின் தலையை தாக்கினான். இதையடுத்து நரசிம்மர், ‘உக்கிர நரசிம்மராக’ தோன்றி, பரிக்காலாசுரனை அழித்து மன்னனுக்கு காட்சியளித்தார். சென்னை--திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உளுந்தூர்பேட்டைக்கு வடக்கில் இருந்து இவ்வாலயத்தை அடையலாம்.



சோளிங்கர்: சப்த ரிஷிகளின் வேண்டுகோளின்படி, நரசிம்மர், யோக நிலையில் காட்சியளித்த தலம் இது. மூலவர் யோக நரசிம்மர், உற்சவர் பக்தோசிதன், தாயார் அமிர்தவல்லி.

விசுவாமித்திரர் இங்குள்ள நரசிம்மரை வழிபட்டு பிரம்ம ரிஷி பட்டம் பெற்றார். கடிகாசலம் எனப்படும், 500 அடி உயரமும், 1305 படிக்கட்டுகளும் கொண்ட பெரிய மலையில் மூலவர் அருள்பாலிக்கிறார். உற்சவருக்கு மலையிலிருந்து நான்கு கிலோமீட்டர் தள்ளி ஊருக்குள் தனிக்கோவில் உள்ளது. தமிழ்நாட்டிலேயே மூலவருக்கு தனியாக மலை மேலும், உற்சவருக்கு தனியாகவும் கோவில் இருப்பது இங்கு மட்டுமே. பெரிய மலைக்கு அருகில் 406 படிக்கற்களைக் கொண்ட சிறிய மலையில் யோக ஆஞ்சநேயர் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். வேலூர் மாவட்டம் அரக்கோணம்-சோளிங்கர் சாலையில் இம்மலைக்கோவில் உள்ளது.

சிங்கப்பெருமாள் கோவில்: ஜாபாலி என்னும் மகரிஷி, நரசிம்மரை வேண்டி தவம் செய்து, அவரது தரிசனம் பெற்ற தலம் இது. இவர் ‘

ஆலயங்களில், அவர் இடதுகாலை மடித்து வைத்தும், வலதுகாலை தொங்கவிட்ட நிலையிலும் காட்சி தருவார். ஆனால் இவ்வாலயத்தில் வலதுகாலை மடித்து வைத்தும், இடதுகாலை தொங்கவிட்ட நிலையில் மிகப்பெரிய மூர்த்தியாக நெற்றிக் கண்ணுடன் காட்சியளிக்கிறார். காஞ்சீபுரம் மாவட்ட எல்லைக்குள், தாம்பரம்- பாடலாத்ரி நரசிம்மர்’ என்று அழைக்கப்படுகிறார். (பாடலம் என்றால் சிவப்பு, அத்ரி என்றால் மலை) என்று பொருள். சிவந்த கண்களுடன் மலைமீது அமர்ந்திருப்பதால், இப்பெயர் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

பொதுவாக நரசிம்மருக்கான செங்கல்பட்டு இடையில் சிங்கப்பெருமாள் கோவில் அமைந்துள்ளது.

நாமக்கல்: திருமகள், தன் கணவரான மகாவிஷ்ணு எடுத்த நரசிம்மர் அவதாரத்தை காண வேண்டி, தவம் செய்து தரிசனம் பெற்ற தலம் இது. நரசிம்மரை காண வேண்டி இத்தலத்தில் திருமகள் தவம் செய்து கொண்டிருந்தார் . அப்போது ஆஞ்சநேயர், கண்டகி நதியில் இருந்து சாளக்கிராம கல்லை எடுத்துக்கொண்டு வான்வழியே பறந்து சென்றார். இத்தலத்தின் அருகே வந்தபோது, இங்குள்ள தீர்த்தத்தில் நீராட விரும்பினார் அனுமன்.

கையிலிருந்த சாளக்கிராமத்தைக் கீழே வைக்கமுடியாத நிலையில், என்ன செய்வதென யோசித்தவருக்கு தீர்த்தக் கரையில் தவம் செய்த திருமகள் தெரிந்தார். மகிழ்ச்சியுடன் அவரிடம் அச்சாளக்கிராமத்தைத் தந்து விட்டு நீராடச் சென்றார். அதை கையில் வாங்கிய திருமகள் குறித்த நேரத்திற்குள் வராவிட்டால் கீழே வைத்துவிடுவேன் என்று கூறினார்.

அதுபோலவே அனுமன் வராதிருக்க திருமகள் அக்கல்லை கீழே வைத்தார். அது பெரியதாக விசுவரூபம் பெற்று பெருமலையானது. அதிலிருந்து நரசிம்மர் தோன்றி திருமகளுக்கும் ஆஞ்சநேயருக்கும் காட்சியளித்தார். சாளக்கிராமத்தைக் கொண்டுவந்த ஆஞ்சநேயர் 18 அடி உயரத்தில், கூப்பிய திருக்கரங்களில் ஜெபமாலை, இடுப்பில் கத்தியுடன் நரசிம்மர் ஆலயத்துக்கு எதிரில் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். இந்த யாத்திரையில் நாமக்கல் நரசிம்மரையும் சேவிக்கும் பாக்கியம் அடியோங்களுக்கு கிட்டியது.

அந்திலி: நரசிம்மர், தன் வாகனமான கருடனுக்கு காட்சி தந்த திருத்தலம் இது. பிரகலாதனை காப்பாற்ற வேண்டிய அவசரத்தில் தன்னிடம் சொல்லாமல் பகவான் புறப்பட்டுச் சென்றதை அறிந்த கருடன், மிகுந்த வேதனை அடைந்தார். பகவானைத் தேடி பூலோகம் வந்து நிம்மதியின்றி தவித்தார்.

எங்குச் சென்றாலும் தன்மீது ஏறிச்செல்லும் பகவான், தன்னை மறந்துவிட்டுப் போனதை எண்ணி வருந்தியவர் இத்தலம் இருக்கும் இடத்திற்கு வந்து தவம்

இருந்தார். இதனால் அவர் உடல் இளைத்தது. அவரது உடலிலிருந்து வெளிப்பட்ட வெப்பம், கயிலாயம் வரை சென்று தாக்கியது. இதையடுத்து தேவர்கள், நாராயணரிடம் சென்று கருடனை காக்க வேண்டி பிரார்த்தித்தனர். கருடனிடம் முன்பாக சென்றார் நாராயணர். அப்போது தனக்கும் நரசிம்மராக காட்சியளிக்க வேண்டும் என்று கருடன் வேண்ட, அவ்வாறே காட்சியளித்தார். திருக்கோவிலூரில் இருந்து முகையூர் வழியாக விழுப்புரம் செல்லும் சாலையில் அரகண்ட நல்லூரை அடுத்திருக்கிறது அந்திலி திருத்தலம். இனி சிந்தலவாடியில் தரிசனம் எவ்வாறு கிட்டியது என்று காணலாமா அன்பர்களே.

மாலை 4 மணிக்கு அய்யர் மலை அடிவாரத்திலிருந்து கிளம்பினோம். 4:30 மணி அளவில் சிந்தலவாடி வந்தடைந்தோம். முக்கிய சாலைக்கு மிக அருகிலேயே கோவில் அமைந்துள்ளது. ஆலய முகப்பில் இரு புறமும் அனுமன் வணங்கும் யோக நரசிம்மர், இராம கிருஷ்ணர்கள், மத்வரும், வியாசராஜரும் வணங்கும் காளிய நர்த்தனர் ஆகிய சுதை சிற்பங்கள் நம்மை வரவேற்கின்றன. மூலவர் விமானம் புதுப் பொலிவுடன் திராவிட அமைப்பில் அமைந்துள்ளது.

ஆலயம் திறந்திருக்குமா? இல்லையா? என்று யோசித்துக் கொண்டே வந்தோம். நல்ல வேளையாக கோவில் வெளிக்கதவு திறந்தே இருந்தது ஆனால் உள் கதவு சார்த்தியிருந்தது. உள்ளே செல்லலாமா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டு தயக்கத்துடன் நின்றிருந்த போது ஒரு அன்பர் உள்ளிருந்து வந்து சன்னதி திறந்திருக்கின்றது செல்லுங்கள் என்றார். உள்ளே நுழைந்தவுடன் ஒரு நீண்ட மண்டபம். அதன் கூரையில் அற்புதமான ஓவியங்கள். அதன் நடுநாயமாக மத்வ சம்பிரதாயத்தை துவக்கிய ஹரிவாயு குருவின் அவதாரங்களான அனுமன், பீமன் மற்றும் மத்வரும் ஒன்றாக இருக்கும் ஓவியம், மற்றும் தசாவதாரங்கள் மற்றும் கிருஷ்ண லீலை ஓவியங்கள், சமீபத்தில்தான் சம்ப்ரோக்ஷணம் ஆகி இருக்கின்றது. விமானம், முன் முகப்பு வளைவு ஓவியங்கள் எல்லாம் புது வர்ணத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

அம்மண்டபத்திலிருந்து பிரகாரத்தை சுற்றிக் கொண்டு யோக நரசிம்மர் சன்னதியை அடைந்தோம். கருவறையில் யோக நரசிம்மரும், காளிங்க கிருஷ்ணரும் (கோபால கிருஷ்ண தேவரு) அருகருகாக சேவை சாதிக்கின்றனர். உற்சவ மூர்த்தியையும், சாளக்கிராமங்களையும் கருவறையில் சேவிக்கலாம். ஆச்சார்யார் எங்களுக்காக காத்துக்கொண்டிருந்தார். ஆரத்தி காண்பித்து பிரசாதமும் அளித்தார்.



ஆடி ஆடி அகம் கரைந்து இசை
பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி எங்கும்
நாடி நாடி நரசிங்கா - என்று போற்றி வணங்கினோம்.

நரசிம்மர் சன்னதிக்கு இடப்புறத்தில் வியாசராஜர் பிரதிஷ்டை செய்த அனுமன் சன்னதி. பக்த ஆஞ்சநேயர், வீர ஆஞ்சநேயர் என்னும் இரு கோலத்தில் அருள் பாலிக்கும் பிராண தேவரையும் வணங்கினோம். கர்ப்பகுடியின் முகப்பில் அருமையான யோக நரசிம்மர் சுதை சிற்பம் அலங்கரிக்கின்றது. ஆச்சார்யர் ஒரு அன்பர் கல்யாண பத்திரிக்கை பெருமாளுக்கு சமர்பிக்க வந்ததால் சன்னதி திறந்திருக்கின்றது என்று கூறிய போதுதான் நாளை என்பது நரசிம்மரிடத்தில் இல்லை என்பது புரிந்தது. அடியோங்களுக்காக எம்பெருமான் காத்திருந்த கருணையை உணர்ந்தோம். இத்தலம் ஒரு சிறந்த பிரார்த்தனை தலம் தங்கள் கோரிக்கைகளை நரசிம்மரிடம் வையுங்கள் அவர் நிச்சயம் நிறைவேற்றி வைப்பார்.



வாயு தேவரு – அனுமன், பீமன், மத்வர்

காக்க வைக்காமல் தரிசனம் அளித்த நரசிம்மரை
மாதா ந்ருஸிம்ஹ: பிதா ந்ருஸிம்ஹ:
ப்ராதா ந்ருஸிம்ஹ: சகா ந்ருஸிம்ஹ:
வித்யா ந்ருஸிம்ஹ: த்ரவிணம் ந்ருஸிம்ஹ:
ஸ்வாமி ந்ருஸிம்ஹ: ஸகலம் ந்ருஸிம்ஹ:
இதோ ந்ருஸிம்ஹ: பரதோ ந்ருஸிம்ஹ:
யதோ யதோ வாபி ததோ ந்ருஸிம்ஹ:
ந்ருஸிம்ஹ: தேவாத் அபரம் ந கிஞ்சித்
தஸ்மாத் ந்ருஸிம்ஹ: சரணம் ப்ரபத்யே என்று சரணாகதி அடைந்தோம்.

பஞ்சாம்ருத அபிஷேகம் மற்றும் தீர்த்த பிரசாதம் ஆகிய சேவைகள் அன்பர்கள் உபயமாக இவ்வாலயத்தில் செய்யப்படுகின்றது. முன் பதிவு செய்து கொண்டு வர வேண்டும். வெளியூரிலிருந்து வருபவர்கள் தங்கிக்கொள்ள ஏதுவாக அருகில் ஒரு சிறு மண்டபம் உள்ளது, ஆலயத்திலும் இரண்டு அறைகள் உள்ளன. அருகில் ஸ்ரீராகவேந்திரரின் மிருத்திக பிருந்தாவனம் உள்ளது. அருமையான நரசிம்மரின் தரிசனத்திற்குப்பின் அடுத்த தலத்திற்கு புறப்பட்டு சென்றோம் அது என்ன தலம் என்பதை இதோ சென்று சேர்ந்து விடுவோம் உடன் வாருங்கள் அன்பர்களே.

# 15 தான்தோன்றிமலை கல்யாண வெங்கடரமணர் தரிசனம்



அடுத்து அடியோங்கள் தரிசித்த தலம் தான்தோன்றிமலை ஆகும். கரூரிலிருந்து திண்டுக்கல் செல்லும் பாதையில் 4 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் தான்தோன்றிமலையில் அருள்பாலித்து வருகிறார் அருள்மிகு கல்யாண வெங்கடரமண பெருமாள். சுயம்பு என்ற வடமொழி பதத்தின் தமிழ் சொல்லே தான்தோன்றி. திருப்பதிக்கு சென்று தரிசிக்க முடியாதவர்களும், வயதானவர்களும் இம்மலையில் உள்ள பெருமாளை தரிசனம் செய்யலாம் என்பது இக்கோயிலின் தனிச் சிறப்பு எனவே இத்தலம் தென்திருப்பதி என்றும் அழைக்கப்படுகின்றது. பெருமாள் ஒரு பாலகனுக்காக தானாக தோன்றி தலையை சாய்த்த கோலத்தில் சேவை சாதிக்கின்றார். பலருக்கு இவர் குலதெய்வமாக அருள் பாலிக்கிறார்.

தினமும் நான்கு கால பூஜைகள் நடைபெறும் இத்திருக்கோவில் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது, இது ஒரு குடைவரைக் கோவில் ஆகும். இக்குடைவரைக் கோவில் கிழக்கிலிருந்து மேற்காக அரை பர்லாங் தூரம் பரவியுள்ள ஒரு குன்றின் மேற்புறம் அமைந்துள்ளது. இக்குன்று மேல் புறம் உயர்ந்தும், கீழ்ப்புறம் தாழ்ந்தும் அமைந்துள்ளது. கருவறையின் குகைக்கு மேலே மலை மீது கட்டப்பட்ட விமானம் கம்பீரமாய் பிரகாசிக்கிறது. கருவறையின் நடுவில் உயர்ந்த மேடை உள்ளது. மேடையின் கீழ்ப்புறம் கல்யாண வெங்கடரமண சுவாமி பாறையிலேயே புடைப்புச் சிற்பமாக மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் அருள் பாலிக்கிறார். குடைவரையின் முன்பாக காணப்படும் மகாமண்டபம் மற்றும் பிற சன்னதிகள் பிற்காலத்தில் கட்டப்பட்டவையாகும். கோயிலின் எதிரில் நீராழி மண்டபத்துடன் கூடிய ஒரு திருக்குளம் உள்ளது. அடியோங்கள் தரிசித்த சமயம் தாமரைக் கொடிகளுடன் நீர் நிரம்பி எழிலாக இருந்தது.

வாயு தேவனுக்கும் ஆதி சேஷனுக்கும் நடந்த போட்டியின் உடைந்து விழுந்த திருவேங்கடமலையின் ஒரு துண்டு இக்குன்று என்றொரு ஐதீகம் உள்ளது. அதற்கான கதை இதோ, ஒரு சமயம் திருப்பாற்கடலில் திருமால், லட்சுமி தேவியுடன் மகிழ்ச்சியாக பேசிக்கொண்டிருந்தார். வாசலின் வெளியே ஆதிசேஷன் காவல் இருந்தார். அப்போது வாயுபகவான் இறைவனை சேவிக்க உள்ளே நுழைய முயன்றார். ஆதிசேஷனோ, வாயுபகவானை தடுத்து நிறுத்தினார். அதனால் இருவருக்குமிடையே யார் பெரியவர் என்ற மோதல் ஏற்பட்டது. வெளியே வந்த பகவான், இருவரிடையே சமசரம் செய்து இருவருக்கும் ஒரு போட்டியையும் வைத்தார்.




ஆதிசேஷன் திருவேங்கடமலையை தனது உடலால் அழுத்தி பிடித்து கொள்ள வேண்டும். வாயுதேவன் அதை தனது பலத்தால் அசைத்து பிடுங்க வேண்டும். இதுதான் போட்டி. ஆதிசேஷன், மலையை தனது உடலால் சுற்றி இறுக அழுத்தி கொண்டார். வாயு பகவான் அதனை பெயர்த்தெடுக்க முயன்றார். ஆனால் வெற்றி கிட்டவில்லை. கோபம் கொண்ட வாயு பகவான், தனது முழு பலத்தையும் கொண்டு பெரும் புயலாக வீசியபோது மலை சிதறுண்டு நாலா பக்கமும் விழுந்தன. அவ்வாறு சிதறி விழுந்த குன்றுகளில் ஒன்றுதான் இத்தான்தோன்றிமலை என்று கூறப்படுகிறது.

தலவரலாறு: ஒரு காலத்தில் சோமசர்மா எனும் பக்தர் ஒருவர் தனது மனைவியோடு இல்லறம் எனும் நல்லறத்தை நடத்தி வந்தார். அவர்களுக்கு மகப்பேறு இல்லாதது பெருங்குறையாக இருந்தது. அவர்கள் நியமத்துடன் பல விரதங்களை மேற்கொண்டனர். ஒரு நாள் நள்ளிரவில் அவர் தியானம் செய்து கொண்டு இருந்த போது, நாரதர் அவர் முன் தோன்றி, முற்பிறவிப் பாவம் தீர, திருப்பதி யாத்திரையை நீ மேற்கொள்வாயாக என ஆணையிட்டு மறைந்தார். சோமசர்மாவும் அவரது மனைவியும் அதன்படி திருப்பதிக்கு நடந்தே யாத்திரை செய்தனர். காவிரி உற்பத்தியாகும் மலைப்பிரதேசத்தை அடைந்து புனித காவிரியில் நீராடி பூஜைகள் செய்து, தியானத்தில் ஆழ்ந்திருந்தனர். அப்பொழுது நாரதர் அவ்விருவர் முன்பு மீண்டும் தோன்றி காவேரிக்கரையின் மீதே நடந்து அமராவதி ஆறு காவிரியுடன் கலக்குமிடம் செல்லுங்கள். அங்கே சிலர் உங்களை வரவேற்று அவர்களது இருப்பிடம் அழைத்துச் செல்வர். அங்கே பகவான் பேரருள் பெற்று உங்களது வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்று கூறினார்.

தம்பதியினர் நடந்தே அமராவதி கூடுதுறை வந்து சேர்ந்தனர். அங்கு சில கல்தச்சர்கள் அவ்விருவரையும் அன்புடன் வரவேற்றனர். அவர்கள் சோமசர்மாவைக் குருவாக ஏற்றுத் தமது இருப்பிடத்திற்குத் சகல மரியாதைகளுடன் அழைத்துச் சென்று தங்க வைத்தனர்.

மறு நாள் அனுஷ்டானம் முடித்து சோமசர்மா கல் தச்சர்களை அழைத்துக் கொண்டு மலைக்குச் சென்று, கல் வேலையின் நுட்பங்களை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்.பாறை ஒன்றைப் பிளந்த போது அசரீரி ஒன்று சோமசர்மாவை பார்த்து உனது மனைவியையும் அழைத்து கொண்டு நாளை இம்மலைக்கு வா என்ற ஆணையிட்டது (அவ்வாறு பிளந்த பாறை இன்றும் பெருமாள் சன்னதிக்கு வடபக்கத்தில் காணத்தக்கதாக உள்ளது.) மறு நாள் சோமசர்மா தனது மனைவியையும் கல்தச்சர்களையும் அழைத்துக் கொண்டு மலையை வலம் வந்தார். மூன்றாவது சுற்று வரும்போது மலையின் மேற்புறத்தில் நட்சத்திரத்தைப் போன்று ஒளி ஒன்று தென்பட்டது. இதனை கண்டு அவர்கள் பெரும் வியப்படைந்தனர். பின்னர் அவர்கள் ஒளி வந்த திசையிலேயே சென்று கொண்டிருந்த போது மலையில் பிளவு ஏற்பட்டு, அதிலிருந்து அருள்மிகு திருப்பதி வெங்கடேசப் பெருமாள் தோன்றி அத்தம்பதியர்க்கு காட்சி கொடுத்தார். மேலும், நான் இம்மலையில் நித்யவாசம் புரிவேன் என்னை நாடி வரும் பக்தர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி அவர்களுக்கு அருள் புரிவேன் என்று திருவாய் மலர்ந்தருளினார். இவ்வரலாறு சன்னதிக்கு அருகே உள்ள திருக்கல்யாணமண்டபத்தின் சுவரில் ஓவியமாக வரையப்பட்டுள்ளது.




இவ்வாலயத்தை தரிசனம் செய்த பின்னர் ஒரு நாள் பொதிகை தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது தான்தோன்றி மலை மகிமை என்றொரு இசை

நாடக நிகழ்ச்சியை ஒளிபரப்பினர்கள், அக்கதை கோவிலில் எழுதியிருந்த கதையை விட வேறாக இருந்தது அக்கதை இதோ.

கரூரை தலைநகராக கொண்டு மூன்றாம் குலோத்துங்கச் சோழன் ஆட்சி செய்து வந்தான். அவனது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் டங்கணாச்சாரி என்பவர் வசித்து வந்தார். அவர் அரசவையின் சிறந்த சிற்பியாகவும், வீரசைவராகவும் திகழ்ந்தார். அவரது மனைவி சுந்தராம்பிகை. இத்தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் இல்லாதது ஒரு பெரிய குறையாக இருந்தது.

ஒரு நாள் டங்கணாச்சாரி, அரசவைக்கு சென்றிருந்தார். சுந்தராம்பிகை தனது வீட்டில் தனியாக இருந்தாள். அப்போது தெருவில் ‘கோவிந்தா… கோவிந்தா…’ எனும் சப்தம் கேட்டது. அவள் ஓடோடி வந்து தெருவை பார்த்தாள். அப்போது ஒரு கூட்டம் கோவிந்தா… கோவிந்தா… என்று உரக்க கத்திக்கொண்டே சென்றது. அக்கூட்டத்தின் நடுவில் மஞ்சள் ஆடை அணிந்து மார்பில் துளசி மாலையுடன் நெற்றியில் திருநாமத்துடன் ஐந்து வயது சிறுவன் ஒருவன் தென்பட்டான்.

கூட்டத்தில் இருந்த ஒரு பெண்மணியிடம் இது குறித்து சுந்தராம்பிகை விசாரித்தாள். அதற்கு அப்பெண்மணி, ‘அச்சிறுவன் எனது மகன்தான். எனக்கு புத்திர பாக்கியம் இல்லாமல் இருந்தது. திருப்பதி வேங்கடேசனை நினைத்து பிரார்த்தனை செய்து கொண்டோம். குழந்தை பிறந்தது. ஐந்தாவது வயதில் குழந்தையையும் அழைத்துக்கொண்டு பெருமாளின் சன்னிதியில் வந்து காணிக்கை செலுத்துவதாக வேண்டியிருந்தோம். அதை நிறைவேற்றவே இப்போது திருப்பதி செல்கிறோம்’ என்றாள்.



ஆலய முகப்பு

இதனை கேட்ட சுந்தராம்பிகை, தானும் திருப்பதி வேங்கடவனை வேண்டி அதே பிரார்த்தனையை செய்து கொண்டாள். பெருமாளும் அவளுக்கு அருள் புரிந்தார். சுந்தராம்பிகைக்கு ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு குண்டலாச்சாரி என்று பெயரிட்டாள். குழந்தைக்கு ஐந்து வயதானது. பிரார்த்தனையை நிறைவேற்ற வேண்டிய காலம். இதுவரை கணவரிடம் பிரார்த்தனை பற்றி கூறவில்லை. தற்போது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கூறினாள் சுந்தராம்பிகை.

கோபத்தில் கொந்தளித்தார் டங்கணாச்சாரி. 'சிவபெருமானை தவிர உலகில் வேறு தெய்வம் இல்லை. நான் திருப்பதிக்கு போக மாட்டேன். உன்னையும் போக விட மாட்டேன்' என்று எச்சரித்துவிட்டு வெளியில் சென்றுவிட்டார். சுந்தராம்பிகையோ மனம் வருந்தி கண்ணீர் வடித்தாள். குண்டலாச்சாரி தனது தாய் அழுவதை கண்டு, 'ஏனம்மா அழுகிறாய்?' என்று கேட்டான். தனது இக்கட்டான நிலையை தனது மகனிடம் சுந்தராம்பிகை கூறினாள். அதைக் கேட்ட குண்டலாச்சாரி, 'அம்மா நீ அழாதே! திருப்பதி சீனிவாச பெருமாளை, நமது ஊரிலுள்ள மலைக்குன்றுக்கு வரவழைக்கிறேன். நாம் பிரார்த்தனையை இங்கேயே நிறைவேற்றலாம்' என்றான்.

மகனின் விளையாட்டுப் பேச்சைக் கேட்ட தாய்க்கு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. அன்று இரவு எல்லோரும் தூங்கியவுடன் குண்டலாச்சாரி, தனது தந்தை வைத்திருந்த, சிற்பம் செதுக்குவதற்கான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு மலைக்குச் சென்றான். மலையின் மீது ஆலயம் எழுப்ப அடி அளந்து கொண்டு இருந்தான். அப்போது சந்நியாசி ஒருவர், அவன் முன் தோன்றி,

‘குழந்தாய்! இங்கு வந்து என்ன செய்கிறாய்?’ என்று கேட்டார். குண்டலாச்சாரி, ‘நான் இங்கே கோவில் அமைத்து, திருப்பதி சீனிவாச பெருமாளை அழைக்க போகிறேன்’ என்று கூறினான்.



பெருமாள் விமானம

இதனை கேட்ட சந்நியாசி, ‘உன்னால் இக்காரியம் முடியக்கூடியதல்ல. என்னிடம் ஆட்கள் அதிகம் இருக்கின்றனர். அவர்களை வைத்து கோவில் அமைத்து விடலாம் . நீ நாளைக்கு இங்கே வா!’ என்று கூறினார். குண்டலாச்சாரி வீட்டிற்கு திரும்பி உறங்கினான். எப்போதும் போல் டங்கணாச்சாரி அதிகாலையில் எழுந்து மலைப்பக்கம் சென்றார்.

அங்கு ஒரு கோவில் இருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தார். ‘ஒரே இரவில் கோவில் அமைப்பது என்பது மன்னனை தவிர வேறு யாராலும் முடியாதே! மன்னன் என்னிடம் சொல்லாமல் இக்கோவிலை கட்டி விட்டாரே’ என்று வருந்தினார். காலை விடிந்ததும் அரசவைக்கு சென்று கோவில் அமைக்கப்பட்டிருப்பது பற்றி கேட்டார். மன்னனும் வியப்பில் ஆழ்ந்தான். மலைக்குச் சென்று பார்த்தான். தனக்கே தெரியாமல் விஷ்ணு ஆலயம் கட்டியவனை கண்டுபிடித்து தண்டிப்பதாக கூறிவிட்டு சென்றான். டங்கணாச்சாரி, கடும் கோபத்தில் இருந்தார். அன்று இரவு மலைக்குச் சென்றார்.



திருக்குளம்

கோவில் கட்டியவர்கள் எப்படியும் வருவார்கள் என்பதால் அங்கு பதுங்கி இருந்தார் . அப்போது குண்டலாச்சாரி ஆயுதங்களை எடுத்துக்கொண்டு கோவில் வாசலில் நுழைந்தான். இருட்டில் யார் என்று அறியாமல் டங்கணாச்சாரி, தனது மகன் குண்டலாச்சாரியை வாளால் வெட்டி வீழ்த்தினார். அதன் பிறகு யாரும் வராததால் வீட்டிற்கு வந்து உறங்கினார்.

மறுநாள் காலையில் தன் மகனை காணாது சுந்தராம்பிகை துடித்தாள். இதற்கிடையில் மலையின் மீது தலை துண்டித்து கிடந்த குண்டலாச்சாரியை, அப்பகுதி மக்கள் பார்த்து தூக்கி வந்தனர். பெற்றோர் கதறி அழுதனர். அப்போது அங்கு ஒரு சந்நியாசி தோன்றினார்.

அவர் டங்கணாச்சாரியைப் பார்த்து, ‘கொஞ்சம் துளசி இலையைப் பறித்துக் கொண்டு வா! உன் மகனை பிழைக்க வைக்கிறேன்’ என்று கூறினார். அதைக்கேட்டதும் டங்கணாச்சாரி, தனது இரு காதுகளையும் பொத்திக்கொண்டு ‘நான் துளசியை கையால் தொடமாட்டேன்’ என்றார். இதனை கேட்ட மக்கள் கோபம் அடைந்து ‘இந்த இக்கட்டான நேரத்திலும் நீர் வைராக்கியம் பேசுவது சரியல்ல’ என்று சொல்லவும், அரை மனதுடன் துளசியை பறித்துக்கொண்டு வந்து கொடுத்தார் டங்கணாச்சாரி. அதை வாங்கிய சந்நியாசி, குண்டலாச்சாரியின் தலையையும் உடலையும் சேர்த்து வைத்து கழுத்து பகுதியில் துளசி சாற்றை பிழிந்து ஊற்றினார். உடனே குண்டலாச்சாரி உயிர் பெற்று எழுந்தான். அதனை கண்டோர் அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.



சுந்தராம்பிகை அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தனது மகனுக்கு உயிர் கொடுத்த சந்நியாசியின் பாதங்களில் விழுந்து வணங்கினாள். கோவில் கட்டப்பட்ட நிகழ்ச்சியையும், தான் வெட்டப்பட்ட நிகழ்ச்சியையும் குண்டலாச்சாரி தனது பெற்றோர் முன்னிலையில் எடுத்துக்கூறினான்.

அதனை கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர். சிறுவன், அவனது பெற்றோர், மன்னன் உள்பட பலரும் சந்நியாசியுடன் மலையேறிச் சென்றனர். ஆனால் மலை மீது சென்றவுடன் சந்நியாசி மறைந்து விட்டார்.

குகையின் நடுவே பகவான் திருப்பதி வெங்கடேச பெருமாள் காட்சியளிப்பதை கண்டு அனைவரும் வணங்கினர். அப்போது அசரீரி ஒலித்தது. ‘குண்டலாச்சாரி என் மீது கொண்டிருந்த அளவற்ற நம்பிக்கையைக் கண்டு மகிழ்ந்து, நான் இங்கே பிரசன்னமாகி இருக்கிறேன். இனி நீங்கள் திருப்பதி வர தேவையில்லை உங்களது பிரார்த்தனைகளை இங்கேயே செலுத்துங்கள். நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன்’ என்று கூறினார்.

இதுவரை இத்தலத்தின் வரலாறுகளைப்பற்றிப் பார்த்தோம் வாருங்கள் மலையேறி சென்று தானே தோன்றிய பெருமாளை சேவிக்கலாம். சாலைக்கு அருகிலேயே அலங்கார வளைவு நம்மை வரவேற்கின்றது. மலை அடிவாரம் வரை கூரை வேய்ந்துள்ளனர். மலை அடிவாரத்தில் அனுமன் சன்னதி. அதிகமான படிகள் இல்லை. சன்னதியை அடைந்தவுடன் அதிசயிக்கும் வகையில் மேற்கு நோக்கி அருளும் சுயம்பு பெருமாளை சேவிக்கின்றோம். திருப்பதியைப் போல இங்கும் அகலகில்லேன் இறையும் என்று பெருமாளின் திருமார்பில் அலர்மேல் மங்கை தாயார் வீற்றிருக்கிறார். எனவே தாயாருக்கு தனி சன்னதி இல்லை. மேலும் அதே கருவறையில் உற்சவமூர்த்தி ஸ்ரீநிவாசர் ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் காட்சித்தருகிறார். பிரகாரத்தில் பெருமாளுக்கு எதிரே உபய தெய்வமாக ஆஞ்சநேயர், கருடாழ்வார், பகவத்ராமானுஜர் மற்றும் ஆழ்வார்களின் தரிசனத்தைப் பெறலாம்.



மாசி மக கருட சேவை

அருகில் திருக்கல்யாண மண்டபம் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு வந்து திருமண வரம் வேண்டியவர்கள் பிரார்த்தனை நிறைவேறியதும் ஸ்வாமிக்குத் திருக்கல்யாண உற்சவத்தை நடத்தி வைக்கின்றனர். இக்கல்யாண உற்சவம் ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் இம்மண்டபத்தில் நடைபெறுகிறது. சுமார் ஆயிரம் பக்தர்கள் அமர்ந்து சேவிக்கும் விதமாக விலாசமாக இம்மண்டபம் அமைந்துள்ளது. இன்னொரு வழியாக இறங்கினால் அனுமன் சன்னதி ஒன்று உள்ளது அருகில் ஒரு வில்வ மரமும் உள்ளது. அனுமன் சன்னதியிலிருந்து சுவாமி விமானத்தை நன்றாக தரிசிக்கலாம். திருக்கல்யாண நேர்த்திக்கடனைத் தவிர இத்தலத்திற்குரிய சிறப்பு நேர்த்திக்கடன்கள் உள்ளன அவை என்னவென்று அடுத்துக் காணலாம்.

**கால் பாதம் அடித்தல்:** கை, கால் பிரச்னைகள் தீர வேண்டி இக்கோயிலுக்கு வந்து வழிபடும் பக்தர்கள் தங்களின் பிரச்னை தீர்ந்தவுடன், ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்துவிட்டு, பிறகு ஒரு கல்லில் தாங்கள் குணம் பெற்ற கை அல்லது காலை அக்கல்லின் மீது வைத்து கை, காலின் வடிவத்தைக் குறித்துக்கொண்டு அதன் மீது அடிப்பர். இவ்வழக்கம் நெடுங்காலமாக இக்கோயிலில் பின்பற்றப்படுகிறது.



**செம்மாலி சமர்ப்பணம் :** செருப்பு தைப்பவர் இனத்தில் உள்ளோர் கனவில் பெருமாள் தோன்றி இக்கால் பாதுகை, இந்த அளவு செய்து சமர்பிக்கவும் என்று கூறுகிறார். ஒரு சிலருக்கு இரண்டு கால் பாதுகைகளையும் சமர்ப்பிக்க சொல்வதுண்டு. அடியோங்கள் அது போல சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரு செருப்புகளை தரிசித்தோம். ஒரு பாதுகை சுமார் மூன்றடி நீளத்தில் வாரின் மேல் கருடனுடன் அழகாக இருந்தது. இனி இத்தலத்தில் நடைபெறும் திருவிழாக்களைப் பற்றி காணலாம்.

புரட்டாசி திருவோணத்தை ஒட்டி 22 நாட்கள் பெருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. அனு தினமும் காலையில் பல்லக்கிலும், மாலை பல் வேறு வாகனங்களிலும் சேவை சாதிக்கின்றார் ஸ்ரீநிவாசப்பெருமாள். ஒன்பதாம் திருநாளன்று தேரோட்டம் நடைபெறுகின்றது. அன்றைய தினம் இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். புரட்டாசி சனிக்கிழமைகளும் சிறப்பு நாட்கள் தான் இத்தலத்தில். மாசி மகத் தேர் திருவிழா 17 நாட்கள் கொண்டாடப்படுகிறது. வைகுண்ட ஏகாதசி மற்றும் கிருஷ்ண ஜெயந்தியும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

உடலில் மரு இருப்பவர்கள் உப்பு, மிளகு, வெல்லம் போட்டு பிரார்த்தனை செய்து கொள்கின்றனர். உப்பு சம்பந்தமான எவ்வியாதி ஏற்பட்டாலும் இவரை வணங்க குணம் அடைகிறது.
பெருமாள் கோவில் பிரசாதம் எப்போதும் மிகவும் சுவையாக இருக்குமல்லவா? இத்தலத்தில் அடியோங்களுக்கு உளுந்து வடை பிரசாதம் கிடைத்தது மிகவும் சுவையாக இருந்தது. இவ்வாறு கரூர் செல்லும் வழியில் இருந்த இரு தலங்களை தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. இனி கருவூர் ஆநிலை என்றழைக்கப்பட்ட கரூரில் ஆநிலையப்பர் மற்றும் கொடுமுடி மகுடேஸ்வரரை தரிசித்த பின்னர் இரவு திருப்பூரில் தங்கினோம். இரண்டாம் நாள் காலை முருகநாதரையும் அவிநாசியப்பரையும் தரிசித்து பண்ணாரியம்மனை தரிசிக்க சென்றோம் உடன் வாருங்கள் அன்பர்களே.

# 16 *பண்ணாரியம்மன் தரிசனம்*



சுயம்பு அம்மன்

ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ளது பண்ணாரி மாரியம்மன் கோவில். சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் செல்லும் சாலையில் 12 கி.மீ. தொலைவில் தேசிய நெடுஞ்சாலை 209ல் அமைந்துள்ளது. பண்ணாரி அம்மன் கோவிலிலிருந்து திம்பம் மலைப்பாதை ஆரம்பம். இக்கோவிலின் தெற்கே சுமார் 6 மைல் தொலைவில் பவானி ஆறு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடுகிறது. இவ்வாற்றின் குறுக்கே பவானிசாகர் அணை கட்டப்பட்டுள்ளது.

இத்தலத்தின் சிறப்புகள் சுயம்புவாக தோன்றிய அம்மன். அடர்ந்த காட்டுப்பகுதியில் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் குண்டம் திருவிழா என்னும் தீமிதி திருவிழா மிகவும் புகழ் பெற்றது. சுமார் இரண்டு லட்சம் பக்தர்கள் அதிகாலையில் இருந்து மறுநாள் மாலை வரை குண்டம் இறங்குகின்றனர். கால் நடைகள் கூட குண்டம் இறங்குகின்றன என்பது சிறப்பு. இத்தலத்திற்கு தங்கத்தேர் உள்ளது.

அவிநாசியிலிருந்து கிளம்பி இப்பகுதியில் கோபி என்றழைக்கப்படும் கோபிசெட்டி பாளையம், சத்தி எனப்படும் சத்தியமங்கலம் வழியாக பண்ணாரிக்கு பயணம் செய்தோம், பாதையில் அதிக போக்குவரத்து இருக்கவில்லை. பண்ணாரியை நெருங்க நெருங்க பாதை சுருங்கிக் கொண்டே வந்தது. பவானி ஆறு பாயும் பகுதி என்பதால் பச்சை பசேல் என்று மிகவும் செழிப்பாக இருந்தது. தென்னை, கமுகு, வாழை, கரும்பு, புகையிலை தோட்டங்கள் சாலையின் இரு மருங்கும் கண்டோம். கிராமங்களுக்கிடையான தூரமும் அதிகமாகிக்கொண்டே சென்றது. அடியோங்கள் பயணம் செய்து கொண்டிருக்கும் போது அம்மன்

சுயம்புவாக தோன்றிய வரலாற்றைக் கூறுகிறேன் கேட்டுக்கொண்டே பயணியுங்கள் அன்பர்களே.

பண்ணாரி மாரியம்மன் வரலாறு: சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு தற்போது திருக்கோவில் உள்ள இடம் அடர்ந்த வனப்பகுதியாக இருந்தது. இவ்விடத்தில் வற்றாத காட்டாறு ஓடிக் கொண்டே இருக்கும். காட்டாற்றின் பெயரோ தோரணப்பள்ளம் என்பதாகும். இக்காட்டாறு இத்தலத்தின் மேற்குப்புறத்தில் உள்ளது. திம்பம்மலையின் அடிவாரத்தில் தென்மாரி தெய்வத்தின் அவதாரம் நிகழப்போகிறது என்பதை உலகினுக்கு அறிவிக்கவோ என்னவோ இக்காட்டாற்றின் துறையில் பசுவும், புலியும் ஒரே இடத்தில் நீர் குடிக்கும் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.



அக்காலத்தில் சத்தியமங்கலம் சுற்று வட்டார கிராம மக்கள் தங்கள் ஆடு மாடுகளை மேய்ப்பதற்கு வனப்பகுதிகளுக்குச் செல்வது வழக்கம். அங்கு இம்மக்கள் மாடுகளுக்குப் பட்டிகள் அமைத்து வனப்பகுதிலேயே தங்கிக் கொள்வார்கள். தினசரி காலையில் மாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் செல்வார்கள். பின்னர் மாலையில் ஓட்டி வந்து பட்டியில் அடைப்பார்கள். காலையிலும், மாலையிலும் பாலைக் கறந்து மாட்டின் உரிமையாளருக்கு கொடுப்பார்கள்.

இவ்வாறு சென்று கொண்டிருந்த போது ஒரு சமயம் பட்டியிலிருந்த காராம் பசு ஒன்று பால் கறக்கச் சென்றால் கறப்பதற்கு நில்லாமல் தன் கன்றுக்கும் கொடுக்காமல் இருப்பதை மாடுகளை மேய்ப்பவன் அறிந்தான். மறுநாள் மாட்டினைப் பின் தொடர்ந்து சென்று கவனித்தான். அப்பசு தன் பாலை தினந்தோறும் ஒரு வேங்கை மரத்தின் அடியில் கணாங்குப்புற்கள் சூழ்ந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன்னிச்சையாகப் பொழிவதை மறைவிலிருந்து பார்த்தான். இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அவன் மறுநாள் சுற்று வட்டார கிராமமக்கள் ஊர் பெரியோர்களிடம் விபரத்தை சொல்லி அனைவரையும் அழைத்துக் கொண்டு

மாட்டினைப் பின் தொடர்ந்து சென்று ஓரு குறிப்பிட்ட இடத்தில் காராம் பசு பால் சொரிவதைக் காண்பித்தார். அனைவரும் இவ்வரிய நிகழ்ச்சியினை கண்ணுற்று மெய்சிலிர்ந்து நின்றார்கள். இதுதெய்வத்தின் திருவிளையாடல் என்றெண்ணிக் கைகூப்பித் தொழுதார்கள். மக்கள் அனைவரும் அவ்விடத்தைச் சுத்தம் செய்யுங்கால் கணங்குப் புற்கள் சூழ்ந்த புற்றும் அதனருகில் சுயம்பு லிங்கத் திருவுருவம் வேங்கை மரத்தின் அடியில் இருப்பதைக் கண்டார்கள்.

அப்போது அக்கூட்டத்தில் இருந்த ஒருவருக்கு அருள் உண்டாகி தான் கேரளா மாநிலம் வண்ணார்க்காடு (மண்ணார்க்காடு) என்ற ஊரிலிருந்து பொதி மாடுகளை ஓட்டிக் கொண்டு மைசூர் செல்லும் மக்களுக்கு வழித்துணையாக வந்தேன் என்றும் எழில் மிகுந்த இவ்வியற்கைச் சூழலில் தான் தங்கிவிட்டதாகவும் , தன்னை இனிமேல் பண்ணாரி எனப் போற்றி வழிபட்டு வாருங்கள் எனவும் அருள்வாக்கில் கூறினார். அன்னையின் அருள்வாக்கின்படி அவ்விடத்தில் கணாங்குப் புற்கள் கொண்டு ஒரு குடில் அமைத்து கிராமிய முறைப்படி நாள்தோறும் பண்ணாரி அம்மனை வழிபட்டு வந்தனர். பின்பு ஊர் மக்களும், பெரியதனக்காரர்களும் அன்னையின் சிறப்புக்கருதி அன்னைக்கு விமானத்துடன் கூடிய சிறு கோவில் அமைத்து பத்மபீடத்துடன் திருவுருவம் அமைத்து வழிபட்டு வருகின்றனர். இதுவே அம்மன் தானாக வந்து இத்தலத்தில் அமர்ந்த ஒரு கதை.



“பண் – அரே” என்றால் பாறைகள் நிறைந்த பகுதி என்று பொருள். இதுவே மருவி பண்ணாரி என்றானது. இனி அடுத்த ஒரு ஐதீகத்தைப் பற்றி காணலாம். அக்காலத்தில் சலவைத் தொழிலாளர் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு தம்பதியர் துணி துவைப்பதற்காக ஒரு பெரிய மலை கீழ் அமைந்து இருந்த ஆற்றில் துணி சலவை செய்ய எடுத்து சென்றனர். அப்போது அப்பெண் நிறைமாத கர்ப்பிணியாக இருந்துள்ளார். பின் சலவை துணி துவைக்கும் வேளையில் கடுமையான மழை பெய்து கொண்டு இருந்தது. அச்சமயத்தில் அப்பெண்ணுக்கு

பிரசவ வலி ஏற்பட்டு உள்ளது. கணவனே சலவைக்கு கொண்டு வந்த சேலைகளை கொண்டு நால்புறமும் கட்டி தன் மனைவிக்கு தானே பிரசவம் பார்த்துள்ளார். இரு பெண் குழந்தைகள் பிறந்ததாக புராண வரலாறும் செவி வழி வரலாறுமாக உள்ளது. பின் ஒரு குழந்தையை அவர் தூக்கியதாகவும் மற்றொரு குழந்தையை இருவராலும் தூக்க முடியவில்லை. பின் அவர்கள் அக்குழந்தையை அருகில் இருந்த தாழியில் வைத்துவிட்டு மூவரும் சென்று நடந்ததை ஊர் கவுண்டரிடம் முறையிட்டுள்ளனர். பின் அவர்களுடன் அக்குழந்தை இருக்குமிடம் சென்று தூக்க முயன்றனர் ஆனால் அப்போதும் தூக்க முடியவில்லை. பின் இரும்பு கடப்பாரை கொண்டு அத்தாழியை தூக்க முற்பட்டனர் . அப்போது குழந்தையின் வலது மார்பில் கடப்பாரை பட்டு இரத்தம் கசிந்துள்ளது. அத்தாழியின் உள்ளே இருந்த குழந்தை காலையில் சென்று பார்க்கும் பொழுது பெண் குழந்தை வடிவாகவே அம்மனாக எழுந்தருளி இருந்தாள். அம்மனே கனவில் வந்து தனக்கு திருவிழா நடத்த வேண்டும் என்றும் கூறியதாக வரலாறு கூறுகிறது. பின் ஊர் திருவிழா அன்று அனைவரும் அவர்கள் வழக்கப்படி பச்சை மாவு எடுத்து வடக்கு திசையில் சென்றனர். அப்போது அந்த சலவைத் தொழிலாளி பெண் தனது குடும்ப வறுமை காரணமாக பச்சைமாவுக்கு பதில் புளியங்கொட்டையைக் கொண்டு இடித்து அதில் மாவு செய்து தெற்கு நோக்கி கொண்டு சென்றிருந்தாள். அந்த புளிமாவுக்காக அம்மனே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி திரும்பி காட்சியளித்தாள். அது இன்றளவும் அம்மனின் அமைப்பு அப்படியே உள்ளது என்கின்றனர்.



மூன்றாவது ஐதீகம் மலையாள மாந்த்ரீகன் ஒருவன் மைசூர் சாமுண்டீஸ்வரி அம்மன் மேல் மந்திர உச்சாடனம் செய்து, அம்பாளை தன் நாட்டிற்கு எழுந்தருளுமாறு வேண்டினான். அம்மனும் சம்மதித்து ஒரு நிபந்தனை விதித்தாள் . நான் என் சக்தி பரிவாரங்களுடன் உன்னை பின் தொடர்ந்து வருவேன் என் சதங்கை ஒலி கேட்டுக் கொண்டிருக்கும். ஆனால் நீ திரும்பி பார்க்கக் கூடாது, அவ்வாறு பார்த்தால் நான் அங்கேயே தங்கி விடுவேன் என்றாள். அவனும்

சம்மதித்து இருவரும் கிளம்பினர். தோரண பள்ளம் என்ற இடத்தை அடைந்த போது அங்கே ஒடிய சிற்றோடையில் அம்மன் காலை வைக்க சலங்கையொலி கேட்காததால் மாந்த்ரீகன் சட்டென்று திரும்பி பார்க்க அம்மன் நிபந்தனைப்படி அங்கேயே தங்கி விட்டாள். இவை அம்மன் பண்ணாரியில் கோவில் கொண்டதற்கான வரலாறுகள். சுமார் இரண்டு மணி நேரத்தில் பண்ணாரியை அடைந்தோம். வாருங்கள் இனி பண்ணாரி அம்மனை தரிசிக்கலாம்.

அடர்ந்த காட்டுப் பகுதியில் யானைகளும், காட்டுப்பன்றிகளும், மான்களும், நரிகளும், வண்ண மயில்களும், குரங்குகளும், முயல்களும், கரடிகளும் மற்றும் மிகக் கொடிய விஷ ஜந்துகளும் சர்வ சாதாரணமாக உலாவும் இத்தலத்தில் பண்ணாரி காட்டில் 'மாரியம்மன்' என்ற பெயருடன், பராசக்தியானவள் சக்தி வாய்ந்த தெய்வமாக வீற்றிருந்து அருளுகின்றாள். தாமரை பீடத்தில் அமர்ந்த கோலத்தில் அம்மன் ஜுவாலா மகுடத்துடன் திருக்கரங்களில் கத்தி, கபாலம், டமருகம், அமிர்த கலசம் ஏந்தி சாந்த ஸ்வருபிணியாக அருள் பாலிக்கின்றாள்.

வனத்திடையே அர்த்த, மகா, சோபன மண்டபம் மற்றும் தங்கத்தேர் வலம் வர சுற்றுப்பிரகார மண்டபங்களுடன் அமைந்த நீண்ட கோபுரத்தோடு விளங்கும் இக்கோவில் அமைந்துள்ளது. சோபன மண்டபத்தில் அம்மனின் வரலாறு, சித்திரங்களாக மிளிர்கின்றன. தற்போது குண்டப்பகுதி வரை இருபக்கமும் பக்தர்கள் அமர்ந்து தரிசிக்க ஏதுவாக நீண்ட மண்டபம் அமைத்துள்ளனர். அம்மண்டபங்களின் மேல் பகுதியில் அம்மனின் பல் வேறு கோலங்களை எழிலாக சுதை சிற்பங்களாக அமைத்துள்ளனர். மற்ற ஆலயங்கள் போல கடைகள் அதிகமாக இல்லை, சாந்தமான சூழ்நிலை நிலவுகின்றது. அமர்ந்து அருமையாக தியானம் செய்ய ஏற்ற ஆலயம்.

இத்திருக்கோவில் தினமும் விடியற் காலை 5.00 மணிக்கு நடை திறக்கப்பட்டு தொடர்ந்து மதிய உணவு இடைவேளையின்றி பிற்பகலில் நடை சாத்தப்படாமல் நான்கு காலங்கள் பூஜை நடைபெற்று இரவு 9.00 மணிக்கு திருக்காப்பிடப்படுகிறது.

குண்டம் அமைக்கும் பகுதியில் பக்தர்கள் வேண்டுதலுக்காக சமர்பித்த உப்பும் குங்குமமும் மலை போல குவித்து வைத்திருந்தனர். கூட்டம் அதிகமாக இருக்கவில்லை அரைமணி நேரத்தில் வெள்ளி கவசத்தில் அருமையாக அம்மனை தரிசித்தோம். உற்சவர் அம்மனும், சருகு மாரியம்மனும் தனி சன்னதியில் அருள் பாலிக்கின்றனர். பின்னர் பிரகார வலம் வந்து சித்திரங்களாக வரையப்பட்டுள்ள அம்மனின் சரித்திரத்தை படித்தோம். இனி இத்தலத்தின் சிறப்பான குண்டம் திருவிழாவைப் பற்றி காணலாம்.

பூச்சாற்று : ஆண்டுதோறும் 20 நாட்கள் குண்டம் திருவிழா இத்தலத்தில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பங்குனி மாதத்தில் அமாவாசைக்கு அடுத்த திங்கட்கிழமையில் உத்திரம் நட்சத்திரத்தில் இரவு சிக்கரசம்பாளையம், வெள்ளியம்பாளையம், புதுார், தாண்டாம்பாளையம், ஆகிய ஊரைச் சார்ந்த

பெரியதனக்கார்களும், தர்மகர்த்தாக்களும், ஆலய அதிகாரிகளும் வந்திருந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்கின்றனர். **அம்மன் சிவன் கோவில**், தெப்பகுளம் பகுதியில் இருக்கும் சருகுமாரியம்மன் ஆகிய கோவில்களுக்கு சென்று அங்கிருந்து செவ்வாய்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு ஆலயம் திரும்பி வந்த பின், வைரக்கல் அலங்காரம் செய்வித்து பூவரம் கேட்கின்றனர், அம்மன் வரம் கொடுத்த பின்னர் பூச்சாற்று நடத்திடுவர். இப்பகுதியில் அதை நோம்பு சாட்டுதல் என்கின்றனர். பூச்சாற்றிலிருந்து மூலவர் அம்பிகைக்கு தினசரி அபிஷேக ஆராதனை நடைபெறுகின்றது.

அம்பிகை புறப்பாடு: பூச்சாற்று நிகழ்ந்தபின் மறுநாள் உற்சவர் அம்மனைச் சப்பரத்தில் எழுந்தருளச் செய்வர். இச்சப்பரம் **சிக்கரசம்பாளையத்தில் தொடங்கி சத்தியமங்கலம், தொட்டம்பாளையம் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட** கிராமங்களின் வழியே சருகு மாரியம்மனுடன் உலா வரும் போது பக்தர்கள் பூசைகள் செய்தும், காணிக்கை செலுத்தியும் தம் வேண்டுதல்களை நிறைவேற்றுவர். அம்மனின் புறப்பாடு நிகழும் வேளையில் சோளகர் எனப்படும் மலைவாசிகளும், அருந்ததி இனத்தாரும் வாத்தியங்களை முழக்குவர். பூச்சாற்றிலிருந்து எட்டாம்நாள் திங்கட்கிழமை அம்மன் கோவில் திரும்பி வந்து சேர்கின்றாள்.

அக்னி கம்பம் நடுவிழா: அம்மன் கோவில் வந்து சேர்ந்த பிறகு அதாவது பூச்சாற்றிலிருந்து ஒன்பதாம் நாள் செவ்வாய்கிழமை இரவு அம்பிகைக்கு சிறப்பு ஆராதனை நடைபெற்று அன்றிரவு அக்கினிக்கம்பம் நடுவார்கள். அன்று முதல் அக்கம் பக்கத்தருகே இரவு காலங்களில் சோளர்களும், அருந்ததியினத்தாரும் தங்கள் வாத்தியங்களை முழக்கி, ஆடல், பாடல்கள் செய்கிறார்கள்.

குண்டம் திருவிழா: திங்கட்கிழமை பகற்பொழுதில் மெரவணை எனப்படும் திருவீதி உலா நிகழ்கின்றது. பக்தர்கள் காட்டிற்கு சென்று குண்டத்திற்காக வேப்ப, ஊஞ்சல் மரங்களை வெட்டி வருகின்றனர். இது கரும்பு வெட்டுதல் என்றழைக்கப்படுகிறது. அன்று இரவு ஓர் அக்கினிக் குண்டம் ஏற்படுத்தப்படும் அழல் வழிபாடாகிய இத்திருவிழாவைக் காண பக்தர்கள் பெருந்திரளாக வந்து கூடியிருப்பர். அம்மனுக்கு தங்க கவசம் சார்த்தி வீணை அலங்காரத்துடன் சிறப்பு பூசைகள் நடைபெறுகின்றது. திங்கள் இரவு இரண்டு மணி அளவில் அம்மனை அழைக்கப்புறப்படுவர். படைக்கலக்களுடன் தெப்பக் கிணற்றருகே சென்று அங்குள்ள சருகு மாரியம்மனை வழிபட்டு தாரை தப்பட்டைகள் முழங்க, மேள தாளத்துடன் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் உற்சவர் அம்மனைக் குண்டத்தருகில் அழைத்து வருவர். அனைவரும் குண்டத்தருகில் வந்து அம்மனை வணங்கிப் பணிந்து நிற்பர். பூசாரி அம்மனுக்கு பூசை செய்து, பூ தூவி முதலில் குண்டத்தில் இறங்குவர். அவரைத் தொடர்ந்து ஆண்களும் பெண்களும் அம்மனைத் தொழுது குண்டத்தில் வரிசையாக இறங்குவர்கள். இந்நிகழ்ச்சி அடுத்த நாளாகிய செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி வரை நடைபெறும். அதன் பிறகு கால்நடைகளும் இறங்குகின்றன. நடுப்பகலில் பொங்கல் மாவிளக்கு எடுப்பர். புதன் இரவு மின்விளக்குகளில் அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் அம்மனை

எழுந்தளுளச் செய்து நாதசுரக் கச்சேரியுடன் புறப்பாடு நடைபெறும். மகாமுனி வருகையும் நடைபெறும். இரவில் அக்னிக் கம்பத்தை கங்கையில் சேர்ப்பர்.



வியாழனன்று மஞ்சள்நீர் உற்சவமும், திருக்கோயிலாரால் அன்னதானமும் நடைபெறும். அன்றும் அம்மனுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றது. வெள்ளிக்கிழமையன்று மாலை அம்மன் தங்கத் தேரில் மெரவணை வந்து அருளுகின்றாள். அம்மனுக்கு திருவிளக்குப் பூசை நடைபெறுகின்றது. இப்பூசையில் ஏராளமான பெண்கள் கலந்து கொள்கின்றனர்.

மறுபூசை: குண்டம் திருவிழா நடந்த எட்டாம் நாள் திங்கட்கிழமையன்று மறுபூசைத் திருவிழா நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை இரவிலேயே ஏராளமான பக்தர்கள் வந்து கூடி விடுவர். அம்பிகைக்கு சிறப்பு அலங்காரம் அதாவது திருவிழாவன்று அலங்கரித்தது போலத் தங்கக்கவசம், வைரக்கல் அமைந்த விலையுயர்ந்த ஆபரணங்கள் அணிவித்து மலர் மாலைகளால் அலங்காரம் செய்யப்படுகிறது. சிறப்பு அபிஷேகம் நடைபெறும். இவ்வாறு குண்டம் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. இனி இத்தலத்தில் எழுந்தருளியுள்ள பரிவார தேவதைகள் யார் என்று காணலாம்.

உட்கோவில்கள்: அம்மன் திருச்சன்னதிக்கு அடுத்த அர்த்த மண்டபத்தில் கோவில் கட்டிடத்தை ஒட்டிய வகையில் மேற்குப் பார்த்த வண்ணமாக பொம்மையராயசுவாமியும், முன் மண்டபத்தில் கிழக்குப் பார்த்த வண்ணமாக விநாயகரும் இடம் பெற்றிருக்கின்றனர். அம்பிகையின் திருக்கோயிலுக்குத் தெற்குப் பக்கத்தில் மேடை மீது மாதேசுவரர் அருள் பாலிக்கின்றார்.

சருகு மாரியம்மன் : பண்ணாரி அம்மன் தெப்பக்கிணற்றுக்கு அருகில் மேற்குப் பார்த்த சிறு கோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் சருகு மகமாரி அருள் பாலிக்கின்றாள்.

வண்டி முனியப்பன் : தெப்பக்கிணற்றுக்கு மேற்கில் பள்ளம் ஒன்று தென்வடலாகப் போகிறது. இதில் மழைக் காலத்தில் மட்டும் தண்ணீர் இருக்கும். மற்ற காலங்களில் இருக்காது. தெப்பக் கிணற்றுக்குச் செல்லும் வழிக்கு வடபுறமாக ஒரு மேடை மீது வண்டி முனியப்பசுவாமி அமர்ந்திருக்கிறார். அம்பிகையின் திருவிழா அன்று அவருக்கு சோளகர் சிறப்பாகப் பூசை செய்கின்றனர்.

ஞாயிறு, செவ்வாய் மற்றும் அம்மனுக்கு உகந்த வெள்ளிக்கிழமை தினங்களிலும், அமாவாசை நாள்களிலும் தமிழகம் மட்டுமல்லாது அண்டை மாநிலங்களான கேரளம் மற்றும் கர்நாடகத்திலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து பண்ணாரி அம்மனை வழிபடுகின்றனர். அம்மனும் அவர்களது நோயைப் போக்கி, துன்பத்தைப் போக்கி அருளுகிறாள் பக்தர்களும் நேர்த்திக்கடன் செலுத்தி தங்கள் நன்றியை அம்மனுக்கு தெரிவிக்கின்றனர். கண் கண்ட தெய்வமாக விளங்கும் பண்ணாரி மாரியை தரிசித்த பின் சத்தியமங்கலத்திற்கு கிளம்பினோம்.

# 17 உடுமலைப்பேட்டை மாரியம்மன் தேர்த் திருவிழா



உடுமலை மாரியம்மன் உற்சவர்

இந்த கொங்குதேச பாடல் பெற்ற தலங்கள் பத்தியுலாவின் இடையே பண்ணாரியம்மனின் குண்டம் திருவிழாவை எழுதும் போது சிறு வயதில் எங்கள் ஊர் உடுமலைப்பேட்டையில் அடியேன் கண்டு களித்த மாரியம்மன் தேர்த்திருவிழா நிகழ்வுகளை அன்பர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றியது.

ஏனென்றால் கொங்கு மண்டலத்தில் மாரியம்மன் ஆலயங்களில் கோடைக்காலத்தில் சிறப்பாக திருவிழா கொண்டாடப்படுகிறது. கம்பம் போடுதல் இம்மண்டலத்திற்கே உரிய சிறப்பு. அடியேன் அறிந்த வரையில் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இவ்வாறு கொண்டாடுவதில்லை. எனவே அதை அன்பர்களுடன் பகிர்ந்து கொள்ளவே இப்பகுதி. அடியேன் இரசித்த திருவிழாவை தாங்களும் தரிசிக்க வாருங்கள் அன்பர்களே

தை மாதம் அறுவடைக்கு பிறகு கிராம மக்கள் ஓய்வாக இருப்பர், கோடைக்காலம் துவங்கிவிட்டதால் அம்மை போன்ற நோய்கள் வர வாய்ப்பு இருந்ததால், வேப்பிலை, மஞ்சள் பயன்படுத்தும் விதமாக இவ்விழாக்கள் கொண்டாடப்பட்டன. ஊர் கூடித்தான் தேர் இழுக்க வேண்டுமென்றபடி கிராமத்தார் அனைவரும்

ஒன்றாக சேர்ந்து விழாவைக் கொண்டாடினர். பொதுவாக விழாவின் முக்கிய நிகழ்ச்சிகள் இயற்கை ஒளியுள்ள பௌர்ணமி காலத்தில் வருமாறு பார்த்துக்கொண்டனர். இவ்வாறு கொண்டாடுவதால் மழை பொழியும் என்ற நம்பிக்கையும் இருந்தது. இதனால் கோடை காலத்தில் அதாவது மாசி மாதம் துவங்கி சித்திரை வரை மாரியம்மன் திருவிழாக்கள் பொதுவாகக் கொண்டாடப்பட்டன. மாரியம்மனின் திருவிழாவை தரிசிப்பதற்கு முன்னர் எமது ஊரின் சிறப்பு என்ன என்று காணலாம் அன்பர்களே.

மூன்று பக்கமும் அர்த்த சந்திர வடிவில் மலைகளால் சூழப்பட்டதால், கடந்த காலங்களில் சக்கரகிரி என்று அழைக்கப்பட்ட உடுமலைப்பேட்டையானது இராண்டாயிரம் ஆண்டு கால வரலாற்றைக் கொண்டு விளங்குகிறது. பாலக்காட்டு கணவாய் வழியே வரும் இதமான காற்றும் மேற்குமலைச்சாரலில் தொடங்கும் மழையும் உடுமலையை எப்போதும் ஒரே மாதிரியான சீதோஷண நிலையை உணர வைக்கிறது. ஈரக்காற்று எப்போதும் உடுமலை பகுதி மக்களின் மனதை வருடிக்கொண்டே இருக்கும் ஆகவே உடுமலை "ஏழைகளின் ஊட்டி" என்ற சிறப்பை பெற்றுள்ளது! எனவே ஆதி காலத்தில் இருந்தே பல பஞ்சாலைகள் இவ்வூரில் அமைந்துள்ளன. காற்று வருடம் முழுவதும் வீசுவதால் தற்போது காற்றாலைகள் அமைந்துள்ளன.

மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாகி அதுவும் திருமூர்த்தியாக அருள் பாலிக்கும் மண். திருமூர்த்தி மலை அருகில் உள்ளதால் திருமூர்த்தி மண் என்றும் அறிப்படும் இந்நகரத்திற்கு திருமூர்த்தி அணையிலிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது. சிறுவாணிக்கு அடுத்து சுவையானது திருமூர்த்தி தண்ணீர். இம்மலையில் முன்னர் உடும்புகள் அதிகம் இருந்ததால் உடும்பு மலைப்பேட்டை என்பதே உடுமலைப்பேட்டை ஆகியது என்பர் ஒரு சாரார். ஈழத்திலிருந்து மேற்கு கடற்கரைக்கு செல்லும் பாதையில் மலைபடும் பொருட்களை விற்கும் சந்தையாக விளங்கியதால் பேட்டை என்று அழைக்கப்பட்டது என்பது ஒரு கருத்து. அதற்கு சான்றாக ரோமானிய நாணயங்கள் இப்பகுதியில் கிடைத்துள்ளன.

கிழக்கே பழனி மலையையும், மேற்கே ஆனைமலையையும், வடக்கே செஞ்சேரி மலையையும், தெற்கே திருமூர்த்தி மலையையும் கொண்டு இவற்றிக்கு ஊடே இருப்பதால் உடுமலை என்று பெயர் பெற்றது என்பது ஒரு சாரார் கருத்து.

இவ்வளவு சிறப்புப்பெற்ற ஊரின் மையத்தில் அமைந்துள்ள 500 வருடங்களுக்கு மேற்பட்ட புராதான ஆலயமே மாரியம்மன் ஆலயம். இந்த அம்மனும் சுயம்புவாக தோன்றியவள்தான், பசு மாடு பால் சொரிந்து காண்பித்துத்தர வந்து கோவில் கொண்ட அம்மன். ஊர்க்கவுண்டர் பின்னர் அம்மனுக்கு கோவில் கட்டினார், தர்மகர்த்தாவாக அவர் சந்ததியினர் இன்றும் ஆலயத்தை நிர்வகிக்கின்றனர்.

மாரி என்றால் மழை என்று பொருள். சகல உயிர்களும் வாழ தேவையான நீரை வழங்குகின்ற மழையின் பெயரைக் கொண்டு அருள்பாலிக்கின்றாள் மாரியம்மன். அம்மனுக்கான முதல் புராணக்கதை. ஜமதக்னி முனிவர் – ரேணுகா

தேவி தம்பதியர் பரசுராமரின் பெற்றோர். இரைவத மஹாராஜாவின் மகளான ரேணுகாதேவி ஜமதக்னி முனிவரை மணந்தார். பதிவிரதையானதால் கமண்டல ஆற்றுக்கு சென்று ஈர மணலால் குடம் செய்து அதில் தண்ணீர் கொண்டு வருவது வழக்கம். இவ்வாறு ஒரு நாள் ஆற்றில் தண்ணீர் முகர்ந்து கொண்டிருந்த போது ஒரு கந்தவர்வன் மேலே பறந்து சென்றான், அவனது பிம்பம் தண்ணீரில் பிரதிபலித்தது. எவ்வளவு அழகாக இருக்கிறான் என்று மனதில் ரேணுகா தேவி நினைத்தவுடன், அம்மண் குடம் உடைந்தது. தண்ணீர் இல்லாது ஆசிரமம் வந்த ரேணுகா தேவியைப் பார்த்து நடந்ததை தனது ஞான திருஷ்டியினால் அறிந்து கொண்டார். கோபத்தில் தனது மகன்களை அழைத்து தங்கள் தாயை கொல்ல உத்தரவிட்டார். பரசுராமரின் ஆறு அண்ணன்மார்களும் மறுத்துவிட்டனர். ஆனால் பரசுராமர் தன் தந்தையின் வார்த்தைக்கு மதிப்பளித்து பரசுவினால் தன் தாயின் தலையை கொய்தார். பின் தந்தையிடம் ஒரு வரம் கேட்டார், தன் தாயை உயிர்ப்பித்து தருமாறு வேண்டினார். தாயின் தலையையும் உடலையும் சேர்த்து வைத்து தந்தை தந்த தீர்த்தத்தை தெளித்து உயிர் பெறச் செய்யும் அவசரத்தில் அருகில் கிடந்த வேறு ஒரு பெண்ணின் தலையை வைத்து உயிர்பித்து விட்டார். இவ்வாறு தலை மாறியதால் அம்மன் மாரியம்மன் என்று பெயர் பெற்றாள் என்பது ஒரு ஐதீகம். தமிழகத்தின் வட மாவட்டங்களில் ரேணுகா தேவியாக அம்மனின் சிரசை வழிபடும் வழக்கம் உள்ளது.

கிருஷ்ணனருடன் பிறந்த மகாமாயையே, மகமாயி என்பது இன்னொரு ஐதீகம். வடமதுரையில் தேவகிக்கும் வசுதேவனுக்கும் திருமணம். வசுதேவன் தன் மனைவி தேவகியை அழைத்துச் செல்லும் தேரை தேவகியின் அண்ணன் கம்சன் ஓட்டிச்சென்றான். தேவகியின் எட்டாவது பிள்ளையால் கம்சனுக்கு மரணம் என்று அசரீரி சொல்லியது. தேவகியைக் கொல்ல முயன்ற கம்சனைத் தடுத்த வசுதேவன், பிள்ளைகள் பிறந்தவுடன் கம்சனிடம் தருவதற்கு ஒப்புக்கொண்டார். அப்படியே ஏழு குழந்தைகளையும் கம்சன் கொன்றான். ஆயர்பாடியில் நந்தகோபனும் யசோதையும் குழந்தை வேண்டி கடவுளிடம் வந்தனர். மகாமாயையை அழைத்த கடவுள் யசோதையின் கர்ப்பத்திற்குள் போகச் சொன்னார். யசோதைக்குப் பிறக்கும் பெண் குழந்தையை தேவகியிடமும் தேவகியின் ஆண் குழந்தையை யசோதையிடமும் மாற்றி விடும்படி நந்தகோபனுக்குக் கட்டளையிட்டார். அப்படியே நடந்தது. கம்சன் இதுதான் தேவகியின் எட்டாவது குழந்தை என எண்ணி, கொல்வதற்காகத் தூக்கும்போது நழுவிய பெண் குழந்தை வில், அம்பு, வாள் ஏந்திய மகாமாயையாக மாறினாள். அம்மாயாதேவியே மாரியம்மனாகத் தோன்றி அரக்கர்களையும், தீவினைகளையும், நோய்களையும் போக்கி கண்கண்ட தெய்வமாக விளங்குகிறாள்.

அடியேனின் இல்லத்தில் இருந்து ஐந்து நிமிட நடை தூரத்தில்தான் கோவில் இருந்தது என்பதால் நோன்பு சாட்டுகின்ற தினத்தில் இருந்து திருவிழா முடியும் வரை தூங்கும் நேரம் தவிர மற்ற நேரம் கோவிலே கதி என்று இருந்தேன். நடக்கின்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் அருகிருந்து கவனித்துள்ளேன், முக்கிய நிகழ்வுகளை சுருக்கமாக பகிர்ந்து கொள்கிறேன்.

பங்குனி மாதம் அமாவாசைக்கு அடுத்த செவ்வாய்க்கிழமையன்று நோன்பு சாட்டுதல் நடைபெறும், சிறப்பு அபிஷேகம் செய்து அம்மனிடம் உத்தரவு வாங்கிய பின் அனைவருக்கும் திருவிழா நடப்பதை அறிவித்தலே நோன்பு சாட்டுதல் நிகழ்ச்சியாகும். ஒருவர் சிறு பறையுடன் வீதி வீதியாக சென்று மாரியம்மன் நோன்பு சாட்டியுள்ளது, கம்பம் என்றைக்கு தேரோட்டம் என்றைக்கு என்று அறிவித்து வருவார். பொதுவாக நோன்பு சாட்டிய பின் திருவிழா முடியும் வரை யாரும் ஊரை விட்டு வெளியூருக்கு செல்ல மாட்டார்கள்.



கம்பம்

நோன்பு சாட்டிய செவ்வாய்க்கு அடுத்த செவ்வாய் கம்பம் போடுதல், வெள்ளிக்கிழமையன்று கொடியேற்றம், தேர் அலங்காரத்திற்காக தேரில் ஆரக்கால் ஸ்தாபிதம் செய்யப்படுகிறது. பூவோடு எடுத்தல் ஆரம்பம். அன்றிரவிலிருந்து அம்மன் வாகன புறப்பாடு. கலை நிகழ்ச்சிகள் ஆரம்பம். அடுத்த புதன்கிழமை காலையிலிருந்து மாவிளக்கு, நள்ளிரவில் திருக்கல்யாணம். வியாழன் அதிகாலை அம்மன் தேரில் எழுந்தருளுதல், அன்று மாலை தேரோட்டம், தேர் நிலைக்கு வந்த பின் இரவு கம்பம் கங்கை சேர்தல். வெள்ளிக்கிழமை இரவு நையாண்டி மேளம், கரகாட்டத்துடன் குதிரை வாகனத்தில் உச்சி மாகாளியுடன் அம்பாள் புறப்பாடு. சிறப்பு வாண வேடிக்கை. மறுநாள் சனிக்கிழமை காலை கொடி இறக்கம், மஹா அபிஷேகம், மஞ்சள் நீராட்டத்துடன் திருவிழா நிறைவு.

நோன்பு சாட்டிய நாள், பழனியிலிருந்து தேர் அலங்காரம் செய்பவர்கள் வந்து தங்கள் வேலையை ஆரம்பிப்பார்கள். அக்காலத்தில் முதலில் கம்ப மண்டபம் அலங்காரம் ஆரம்பமாகும். வண்ண வண்ண காகிதங்களால் விதானம் தூண்களுடன் அமைப்பர், இரு பக்கங்களிலும் சிறு சிறு சுவாமிப்படங்கள் அழகுக்கு அழகு சேர்க்கும். கம்பத்திற்கு நேர் மேலே மாலை தாங்கிய அழகிய

தேவதையை தொங்க விட்டிருப்பார்கள். அருமையாக அலங்காரம் செய்வார்கள். கோவிலை அறநிலையத்துறை எடுத்துக் கொண்டபின் முதலில் இந்த அலங்காரத்தை நிறுத்திவிட்டனர்.
அடியேன் பள்ளி படிப்பை முடித்த பின்னர் படிப்பிற்காக சென்னை வந்து, படிப்பை முடித்த பிறகு வேலை நிமித்தமாக இந்தியா முழுவதும் சுற்றிய காலத்தில் பழைய ஆலயம் மாறி புது ஆலயமாக மாறி விட்டது, தரை மட்டத்தில் இருந்த அம்மனும் உயரமாக சென்று விட்டாள். இவ்வருடம் (2022) நடந்த கும்பாபிஷேகத்தின் போது கம்ப மண்டபம் முன்பு அலங்காரம் செய்வது போல பல்வேறு ஆலய அம்மன் திருஉருவங்கள் சுதை சிற்பங்களாக மிளிர அருமையாக அமைத்துள்ளதைப் பார்த்து மகிழ்ச்சியாக இருந்தது.

அப்போது தேர் அலங்காரம் முழுவதும் வண்ண காகிதங்களைக் கொண்டு செய்யப்பட்டது. அலங்கார பொம்மைகள் எல்லாம் மூங்கிலால் செய்யப்பட்டிருக்கும், அதில் முதலில் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் ஆகிய வண்ண காகிதங்களை ஒட்டுவார்கள், மஞ்சள் ஜிகினா காகிதம் கொண்டு மேலும் கீழும் அலங்கரிப்பார்கள், அதன் மேல் அலங்காரமாக வெள்ளை கோலங்களை ஒட்டுவார்கள். தேரோடும் சமயத்தில் பறக்கும் விதமாக அடிபாகத்தில் விசிறி காகிதம் ஒட்டி அலங்காரத்தை நிறைவு செய்வார்கள். கலசத்துடன் சேர்ந்து மொத்தம் ஐந்து நிலைகள் ஒவ்வொரு நிலையாக அலங்காரம் செய்து பாதுகாப்பாக எடுத்து வைப்பார்கள். அடியேன் அரசமரத்தடி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் அமர்ந்து அவர்கள் செய்வதையெல்லாம் உன்னிப்பாக கவனிப்பேன். அவர்களுக்கு சிறு சிறு உதவியும் செய்துள்ளதால் அப்படியே சொல்ல முடிகிறது. தற்போது துணியால் தேரை அலங்கரிக்கப்பதால் புதிதாக இருக்கும் போது பளிச்சென்று இருக்கும், வருடம் செல்ல செல்ல வர்ணம் மங்குகின்றது. ஆனால் அப்போது ஒவ்வொரு வருடமும் அலங்காரம் செய்ததால் எப்போதும் தேர் மின்னிக் கொண்டிருந்தது.

சிறுவர்களுக்கு பிடித்த ரங்கரட்டினம், குடை ராட்டினம், மற்றும் சோப்பு, சீப்பு, கண்ணாடிக் கடைகள் குட்டையை சுற்றி வந்து விடும். அடம் பிடித்து அங்கு சென்று அதில் விளையாடி மகிழ்வோம். சுற்றி வந்து வேடிக்கை பார்ப்போம்.

கம்பம் போடுவதற்கு இரண்டு நாள் முன்னர் கோவிலுக்கு வெள்ளையடிப்பார்கள், விமானத்திற்கும் சுண்ணாம்புதான் அடிப்பார்கள். தேரோட்டம் உள்ளது என்பதால் எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாமலிருக்க, கிராம சாந்தி, வாஸ்து சாந்தி பூஜை நடைபெறும். கம்பம் செவ்வாய்க்கிழமை இரவில் போடுவார்கள். அதற்காக பகலில் பால் வடியும் மரத்தில் (வேம்பு, அரச மரம் போன்றவை) மூன்று கவட்டைகள் உள்ள கிளையாக பார்த்து வெட்டிக்கொண்டு போய் கம்பம் கொண்டு வரும் கங்கையில் (கவுண்டர் தோட்டத்து கிணறு) வைத்து விட்டு வருவார்கள். இரவு அம்மனுக்கு பூசை செய்து, மேள தாளத்துடன் கங்கைக்கு சென்று, கம்பத்தை எடுத்து முதலில் மஞ்சள் துணி சுற்றுவார்கள். பிறகு முல்லைச் சரம், செவ்வரளிப்பூ கொண்டு கம்பம் முழுவதையும் அலங்கரிப்பார்கள். அங்கிருந்து கோவிலுக்கு கொண்டு வருவார்கள். ஆலயம் முழுவதும் பக்தர்களால்

நிறைந்திருக்கும். கோவிலை சுற்றி வந்து கம்பம் போடுவார்கள். கம்பம் அம்மனின் கணவன் என்பது ஐதீகம்.

பொய் சொல்லி தன்னை மணந்து கொண்டதால் கணவன் மீது அன்னை அடுப்பில் இருந்த தணலை எடுத்து வீசியதை நினைவு கூறும் வகையில் இன்றும் கம்பத்தின் மீது பூவோடு வைக்கப்படுகின்றது.



ரிஷப வாகனத்தில் அம்பாள்

இவ்வாலயத்தில் நடைபெறும் பெரும்பாலான நிகழ்ச்சிகள் சமூக உபய அடிப்படையில் நடைபெறுகிறது. அவ்விதம் கம்பம் போட்ட மறுநாள் புதன்கிழமை முதல் கரகம் செலுத்துபவர்கள் எமது சமூகத்தினர். நேரு வீதி காமாட்சியம்மன் ஆலயத்திலிருந்து வேப்பிலையால் அலங்கரிக்கப்பட்ட குடங்களில் மஞ்சள் நீர் கொணர்ந்து அம்மன் முன்னர் வைத்து பூசை செய்தபின் கம்பத்திற்கு அபிஷேகம் செய்து விட்டு செல்வோம். பல பெண்கள் அவரவர்கள் வீட்டிலிருந்து தங்களுக்கு முடிந்த சமயத்தில் கரகம் கொணர்ந்து செலுத்தி விட்டு செல்வர்.

கரகம் செலுத்துபவர்களில் தேவாங்கர்களின் (சேடவார் என்றும் அழைப்பார்கள்) கரகம் செலுத்தும் முறையைப் பற்றி சொல்ல வேண்டும். அவர்களின் சக்தி கரகம் வாழைப்பழத்தில் தொங்கிக்கொண்டு வரும். காவடி போல இருவர் சக்தி கரகம் ஏந்தி வருவர். கரகம் நகராமல் நிற்கும் போது அவர்கள் சமூகத்தினரின் வீர குமார இளைஞர்கள் அலகு போடுவார்கள். மணிகள் பூணப்பட்ட புனித வாளால் ("கத்தி")

"தீசுக்கோ தாயே", "தெகதுக்கோ தாயே"," தோ பாரக், தளி பராக் "என கூறிக்கொண்டே தங்களை காயப்படுத்திக் கொள்வார்கள். இரத்தம் மார்பில் துளிர்க்கும், விபூதி பூசிக் கொள்ளுவர். அதை பார்க்கும் போதே மெய் சிலிர்க்கும். ச ிறுவர்களான நாங்கள் வியப்புடன் இதைப் பார்த்துக் கொண்டே உடன் செல்வோம். இவ்வாறு கம்பம் கங்கை சேரும் வரை எந்நேரமும் மஞ்சள் நீரால் கம்ப மண்டபம் எப்போதும் ஈரமாகவே இருக்கும்.



தேரோட்டம்

இத்திருவிழாவின் அடுத்த முக்கிய நிகழ்வு வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றம். வைதீக முறைப்படி கொடியேற்றம் நடைபெறுகிறது. அக்னி ஜுவாலா மகுடத்துடன் திரிசூலத்துடன் சிம்மவாகினியாக அம்மனின் படம் வரையப்பட்ட கொடி ஏற்றப்படுகிறது. அடுத்து தேர் அலங்காரத்திற்காக ஆரக்கால் பூசை செய்யப்பட்டு தேரில் நாட்டப்படுகிறது.

பக்தர்கள் பூவோடு எடுப்பதும் இதற்கப்புறம் துவங்குகிறது. பூவோடு எடுப்பது மாரியம்மனுக்குரிய ஒரு முக்கிய நேர்த்திக்கடன். இப்பகுதியில் அக்னியை, பூ என்று அழைப்பார்கள் எனவே பூவோடு என்பதை மற்ற இடங்களில் அக்னி சட்டி என்றும் அக்னி கரகம் என்று அழைப்பார்கள். அதற்கான சட்டியில் பூ வளர்த்து மூன்று முறை கோவிலை வலம் வருவார்கள். அவரவர் கோவிலிருந்து மொத்தமாக கொண்டு வந்து செலுத்துபவர்களும் உண்டு. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கானவர்கள் பூவோடு எடுப்பார்கள். திருவிழா காலங்களில் மட்டுமே பூவோடு எடுக்க அனுமதி, அம்மனின் திருக்கல்யாணத்திற்கு முன்னர் வரை மட்டுமே பூவோடு எடுக்க அனுமதி உண்டு.

அடுத்து அம்மன் புறப்பாடு வெள்ளி இரவிலிருந்து தொடங்குகிறது. ஒவ்வொரு நாள் புறப்பாட்டிற்கான உபயத்தை ஒவ்வொரு சமூகத்தினர் செய்கின்றனர். காமதேனு, யானை, ரிஷபம், அன்னம், சிம்மம், மயில் வாகனங்களில் சிறப்பு மலர் மற்றும் மின் விளக்கு அலங்காரத்துடன் அம்மன் எழுந்தருளி இப்பகுதியில் மெரவணை எனப்படும் ஊர்வலம் வந்து அருள் பாலிக்கின்றாள். உண்மையிலேயே இது ஊர்வலம்தான், ஆதிகாலத்தில் ஊர் எல்லையாக இருந்த வீதிகளில் அம்மன் இன்றும் வலம் வருகின்றாள்.

வெள்ளி இரவிலிருந்து கலை நிகழ்ச்சிகளும் துவங்குகிறது. பாட்டுக்கச்சேரிகள், சொற்பொழிவுகள், பட்டிமன்றம், நாடகங்கள், மெல்லிசை என்று அனைத்து விதமான நிகழ்ச்சிகளும் இரவில் நடைபெறும். மறக்க முடியாதது கிருபானந்த வாரியார் அவர்களின் சொற்பொழிவுகள். நடுநடுவே கேள்விகள் கேட்பார், சரியாக பதில் சொல்பவர்களுக்கு புத்தகங்கள் பரிசாக அளிப்பார். அடுக்கு மொழியில் பேசுவார்

வருவதும் போவதும் இரண்டு இன்பம் துன்பம்
வந்தால் போகாதது இரண்டு புகழ் பழி
போனால் வராதது இரண்டு மானம் உயிர்
தானாக வருவது இரண்டு இளமை மூப்பு
நம்முடன் வருவது இரண்டு பாவம் புண்ணியம்
அடக்க முடியாதது இரண்டு ஆசை துக்கம்.
தவிர்க்க முடியாதது இரண்டு பசி தாகம்
நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு பந்தம் பாசம்.
அழிவைத் தருவது இரண்டு பொறாமை கோபம்.
எல்லோருக்கும் சமமானது இரண்டு பிறப்பு இறப்பு.

முதலில் கலைநிகழ்ச்சிகள் பிரசண்ட விநாயகர் கோவிலுக்கு அருகில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவர் அக்கோவிலுக்கு இராஜகோபுரம் இல்லை என்பதை அறிந்து தன் முயற்சியால் பணம் வசூலித்து இராஜகோபுரம் அமைத்துக் கொடுத்தார். சீர்காழி கோவிந்தராஜன் கச்சேரியும் மறக்க முடியாத ஒன்று.

முதலில் ஊரின் நடுவில் ஒரு குட்டை இருந்தது, சிறு வயதில் அதில் இறங்கி நண்டு பிடித்து விளையாடி இருக்கிறோம், தட்டையான கற்களை எடுத்து வீசி அலை அலையாக செல்வதைப் பார்த்து இரசித்திருக்கிறோம். மழைக்காலம் வந்த பின் தவளைக் குஞ்சுகள் அப்பகுதி முழுவதும் மொய்ப்பதை பார்த்து வியந்திருக்கிறோம். அதன் கரையில் இருந்த பூவரச மரங்களில் மார்கழி மாதத்தில் வீட்டிற்கு முன் போடப்படும் பிரம்மாண்ட கோலங்களை அலங்கரிக்க வைக்கப்படும் புள்ளார்களில் வைக்க மலர் பறித்துச் சென்றிருக்கிறோம். புளிய மரங்களில் ஏறி விளையாடி புளியம்பழத்தின் அனைத்து நிலைகளையும் சுவைத்து மகிழ்ந்திருக்கிறோம். குட்டையின் ஒரு கரையில் இருந்த மாட்டு வண்டிகளும், குதிரை வண்டிகளும் இன்னொரு மறக்க முடியாத அம்சம். ஆட்டோக்கள் வருவதற்கு முந்திய காலம் அது. யாருக்காவது ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டும் என்றால் இவ்வண்டிகளில்தான் அழைத்துச் செல்வோம்.

பலரின் பிரசவத்திற்கு தர்மாஸ்பத்திரி செல்லவும் இவ்வண்டிகள் பயன்படுத்தப்பட்டன. இதன் கரையில் அப்போதைய பொது நூலகம் அமைந்திருந்தது. அடியேன் இப்பொது நூலகத்தின் உறுப்பினராக சிறு வயதிலேயே சேர காரணமாக இருந்தவர் அடியேனுடைய தந்தையார்.

தமிழகத்தின் தலையெழுத்தே நீர்நிலைகளை அழிப்பதுதானே, எங்கள் குட்டைக்கும் இந்நிலை ஏற்பட்டது. மண்ணைக் கொட்டி நிரப்பி, கரையில் இருந்த மரங்களையெல்லாம் வெட்டிவிட்டனர். ஒரு திடலாக மாற்றி விட்டனர். உடுமலை நாராயண கவி அவர்களுக்கு ஒரு மணி மண்டபம் தற்போது ஒரு பக்கத்தில் அமைத்துள்ளனர். ஒரே ஒரு ஆறுதல் அதிக கட்டிடங்கள் இது வரை வரவில்லை திடலாக பராமரிக்கின்றனர். தற்போது கலை நிகழ்ச்சிகள் இக்குட்டை திடலில் நடைபெறுகின்றன.

தினமும் இரவு பூசாரி பூவோடு எடுத்துக்கொண்டு வந்து கோவிலை வலம் வந்து மூன்று முறை கம்பத்தின் மேல் வைத்து செல்கின்றார். எதற்காக இப்படி செய்கின்றீர்கள் என்று கேட்ட போது, அம்மன் தன் கணவன் மேல் தணலை வாரி இறைத்தால் எனவே இவ்வாறு செய்கிறோம் என்றார்.

மாரியம்மன் திருவிழாவில் மூன்று கிளையோடு கூடிய கம்பத்தை ஆரம்ப நாளில் கோயிலின் முன் கொண்டுவந்து நடுவார்கள். கம்பம் மாரியம்மனின் கணவன் என்று அர்த்தம். விழா முடியும் மட்டும் மாரியம்மனை சுமங்கலியாக அலங்காரம் செய்வார்கள். அக்கினிச் சட்டியை ஏந்தி வருபவர்கள் அதை அந்த முக்கிளைக் கம்பத்தில் வைப்பார்கள். கம்பம் கங்கை சேருகின்ற அன்று மாரியம்மனுக்கு வெள்ளைச் சேலையும் விபூதியும்தான்.

இவ்வாறு கரகம், பூவோடு, இரவு மெரவணை (புறப்பாடு) என்று கோலாலமாக ஒரு வாரம் செல்கின்றது. ஒருபுறம் தேரில் அலங்காரத்திற்கான உட்கூடு கட்டி முடிக்கப்பட்டு தயாராகிறது. பச்சை மூங்கில்களை உள்ளே கொடுத்து கட்டி பலம் சேர்க்கின்றனர். தேருக்கு எண்ணெய் பூசி பளபளக்க செய்கின்றனர். கழற்றி வைக்கப்பட்டிருந்த வெளி சக்கரங்கள் நான்கினையும் பழுதுபார்த்து தேரோட்டத்திற்காக மாட்டுகின்றனர்.

தேரோட்டத்திற்கு முதல் நாளான புதன்கிழமை பல சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றது. அதிகாலை தேரின் கலசம் முதலில் பூசிக்கப்பட்டு ஸ்தாபிதம் செய்யப்படுகின்றது. அன்று மாலைக்குள் முழு அலங்காரமும் முடிக்க வேண்டும் என்பதால் வேலை வேக வேகமாக நடைபெறுகின்றது. ஒவ்வொரு நிலையாக முடித்துக்கொண்டு கீழ் நிலைக்கு வருகின்றனர், அம்பாள் ஊஞ்சலில்தான் எழுந்தருளுவாள் என்பதால் ஊஞ்சலை பொருத்துகின்றனர். இந்நிலையில் வாழை மரம், பாக்கு மரம், கரும்பு, செவ்விளனி தென்னங்குலை, பனங்குலை, ஈச்சங்கொத்து, மாவிலை கொண்டு அலங்கிரிக்கின்றனர். நான்கு துவாரங்களிலும் துவார பாலகர்கள், நான்கு மூலைகளில் யாழி கொண்டு அலங்காரம் செய்தபின், தேரோட்டியாக பிரம்மனும் பாயும் இரண்டு குதிரை

பொம்மைகளும் பொருத்தப்படுகின்றது. அம்மன் எழுந்தருளும் ஊஞ்சல் மற்றும் அக்கூடு சந்தனம் மற்றும் வாசனை திரவியங்களைக் கொண்டு நறுமணமாக்கப்படுகின்றது. ஊஞ்சலின் மேற்புறம் எழிலான மேல் விதானம் பொருத்துகின்றனர். தேர் அலங்காரம் இரவு வரை நடைபெறுகின்றது.

ஆலயத்தில் மா விளக்கு பூசை என்பதால் அதிகாலை நான்கு மணியிலிருந்தே பெண்கள் மாவிளக்கு தட்டுடன் கோவிலுக்கு படை எடுக்கின்றனர். பெண்கள் கூட்டமாக மாவிளக்கிற்கு மேலே அலங்காரமாக வண்ணகாகித சக்கரம் செருகி ஒன்றாக மாவிளக்கு தட்டை ஏந்தி வருவதே ஒரு தனி அழகு. இனி மாவிளக்கு எப்படி செய்தோம் என்று காணலாம் பச்சரிசியை நன்றாக களைந்து கல், உமி நீக்கி இரண்டு மணி நேரம் ஊற வைப்போம். பின்னர் தண்ணீரை சுத்தமாக வடித்து விட்டு, ஒரு வெள்ளைத்துணியில் அரைமணி நேரம் ஆற வைப்போம். அப்போது மிக்சி கிடையாது என்பதால் உரலில்தான் மாவு இடிப்போம். சிறுவர்களாகிய நாங்கள் உலக்கை கொண்டு மாவு இடிப்பதில் அம்மாவிற்கு உதவி செய்வோம். இடித்த மாவை நைசான மாவிற்கான சல்லடை கொண்டு சலித்து எடுத்து வைத்துக் கொள்வோம். அடுத்து வெல்லத்தை பொடி செய்து கம்பிப் பதம் வரும் வரை காய்ச்சி வெல்லப்பாகு தயார் செய்வோம், பாகில் வாசனைக்காக ஏலக்காய் பொடி சேர்ப்பதும் உண்டு. பாகு சூடாக இருக்கும் போதே அதை மாவில் ஊற்றி பிசைந்து பதத்தில் உருண்டைகளாகவோ அல்லது செவ்வக வடிவிலோ செய்து அதில் விளக்கு திரி போடுவதற்காக குழி செய்து வைப்போம். மா விளக்கின் மேல் பகுதியில் குங்கும பொட்டு வைத்து நெய் ஊற்றி பஞ்சு திரி போட்டு விளக்கேற்றி அம்மனுக்கு படைப்போம். ஒரு சிலர் சர்க்கரையிலும் செய்வர், சுவைக்காக பொட்டுக்கடலை மாவு சிறிது சேர்ப்பவர்களும் உண்டு.

அம்பாளுக்கு மாவிளக்கு ஏற்றுவதைப் பற்றி காஞ்சி மஹாப் பெரியவர் இவ்வாறு கூறுகிறார். சின்னஞ்சிறிய நாம் அரிசி மாவில் வெல்லம் கலந்து நிவேதனம் செய்தால் நமக்கு மன மலர்ச்சி தருவார். தூய பசு மேய்ந்த தாவர லோகம் முழுவதற்கும் சாரமாக திரண்டு வந்த பசு நெய்யை மாவில் வார்த்து ஜோதி விளக்கேற்றினால் நம் மனத்தில் அம்பாள் ஞானச்சுடரை ஏற்றி வைப்பார்! மாவிளக்கு என்று நாம் அம்பாளுக்கு அர்ப்பணம் செய்தால், மா விளக்கான-அதாவது மகா தீபமான அவள் நமக்கு ஞான ஜோதியைத் தருவாள்.

அன்றைய தினம் கோவில் நிறைந்து கூட்டம் கோவிலுக்கு வெளியிலும் நீண்டிருக்கும். அர்த்தமண்டபத்தில் ஒரு சமயத்தில் ஐம்பது பேர் மட்டுமே நிற்க முடியும் என்பதாலும், அனைவரின் மாவிளக்கையும் அம்மன் முன் வைத்து தேங்காய் உடைத்து பூசை செய்து தர வேண்டும் என்பதால் அம்மன் தரிசனத்திற்கு இரண்டு மூன்று மணி நேரம் கூட அக்காலத்திலேயே ஆகும். நள்ளிரவு பன்னிரண்டு மணி வரைக்கும் மாவிளக்கு பூசை தொடரும். பள்ளியில் சாரணர் இயக்கத்தில் இருந்ததினால் கூட்டத்தை முறைப்படுத்தும் சேவையும் செய்துள்ளேன்.

கோவிலின் உள்ளேயே திருக்கல்யாண மேடை அமைத்து மலர்களால் அலங்கரித்து தயாராக இருக்கும். திருக்கல்யாணம் செய்வதற்கு முன் பூவோடு எடுப்பது நிறைவடைய வேண்டும் என்பதால் நாலா பக்கமும் ஆட்கள் சென்று யாரும் பூவோடு செலுத்த வரவில்லை என்பதை உறுதி செய்த பின் திருக்கல்யாணம் ஆரம்பமாகும். சுவாமி திரிசூல ரூபத்தில் அருள் பாலிப்பார். வைதீக முறைப்படி திருக்கல்யாணம் சுமார் இரண்டு மணி நேரம் நடைபெறும். திருக்கல்யாணம் முடிந்த கையோடு அதிகாலை அம்மன் தேரில் எழுந்தருளி விடுவாள். காலையில் சூரியன் உதிக்கும் போது அன்று சூரியன் அம்பாளை பூசிப்பான். தேரோட்டம் மாலை மூன்று மணிக்குத்தான் நடைபெறும் என்பதால் பக்தர்கள் தேரில் உள்ள அம்மனை கீழே நின்று தரிசித்து விட்டுச்செல்வர். தற்போது திருக்கல்யாணம் பகலிலேயே நடைபெறுகின்றது.

அப்போது இருந்த தற்போது நிறுத்தப்பட்ட ஒரு நேர்த்திக்கடன் வேஷம் போடுவது. அம்மனுக்கு வேண்டிக் கொண்டவர்கள், அம்மன், சிவன், முருகர், கிருஷ்ணர், அனுமன் என்று வேஷம் போட்டது பின்னர் எம்.ஜீ.ஆர், சிவாஜி, மகாத்மா காந்தி என்று மாறியது. புருஷன் பொண்டாட்டி, குறவன் குறத்தி வேஷம் போடுபவர்களும் உண்டு. இவர்களை சுற்றி கூட்டம் கூடுவதாலும், இவர்களில் சிலர் தவறாக நடந்து கொண்டதாலும் காவல்துறையினரின் கட்டுப்பாட்டினால் இந்நேர்த்திக்கடன் செலுத்துவது தற்போது நின்று விட்டது.

இத்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வியாழனன்று மாலை மூன்று மணிக்கு துவங்கும். காலையிலிருந்தே சுற்று வட்டார கிராம மக்கள் உடுமலையில் குவிய துவங்குகின்றனர். சுமார் லட்சம் பக்தர்கள் அன்று தேரோட்டத்தை கண்டு களிப்பர். தேரோட்டத்திற்கு முன்பாக திருவிழாவிற்கு தங்கள் சிறப்பான பங்களிப்பை அளித்தவர்களுக்கு பரிவட்ட மரியாதை செய்யப்படுகிறது. நினைவு தெரிந்த நாளில் இருந்தே தேரோட்டத்திற்காக யானை பயன்படுத்தப்படுவதால் சுமார் மூன்று மணி நேரத்தில் தேர் நிலையை அடைந்து விடும்.



தேரில் உள்ள மணிகள் ஒலிக்க, மேலே கட்டியுள்ள கொடிகள் காற்றில் அசைந்தாட , பிரமிட் வடிவில் அலங்கரிக்கபட்ட வண்ண வண்ண காகிதங்கள் மிளிர, ஒரு யானை வருவது போல அசைந்தாடி வருவதை தரிசிப்பதே ஒரு பரவசம். அதில் அம்மன் ஊஞ்சலில் ஆடி வருவது அதி பரவசம். யானை பயன்படுத்துவதால் தேரின் பின்னால் இருக்கும் உலுக்கு மரம் என்னும் சன்னையை வடம் பிடித்து இழுக்கும் போது பயன் படுத்திவிட்டு கழற்றி விடுகின்றனர்.

தேருக்கு அலங்காரம் செய்பவர்கள்தான் தேரை முறையாக ஓட செய்கின்றனர். நாம் முட்டுக்கட்டை என்றால் தடங்கல் என்று நினைக்கிறோம், ஆனால் தேரை ஒழுங்காக செலுத்த முட்டுக்கட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன. சக்கரங்களின் கீழே சரியாக இம்முட்டுக்கட்டைகளை கொடுத்து சரியாக திருப்பவும், நிறுத்தவும் செய்கின்றனர். யானை அநாயசமாக தேரை தள்ளுவதையும், சக்கரங்களில் முட்டி தேரை திருப்புவதையும் பார்த்துக்கொண்டே தேர் நிலையை வந்து அடையும் வரை உடன் வருவோம்.

தேர் நிலையை வந்து அடைந்தவுடன் அம்மன் தேரிலிருந்து இறங்கி தேர்கால் பார்க்க பல்லக்கில் செல்லுவார். அம்மன் ஆலயம் திரும்பியவுடன் கோவில் அடைக்கப்படுகின்றது. கணவன் இறந்துவிட்டதால் அம்மனுக்கு வெள்ளை சேலை அலங்காரம் செய்வதால் யாரும் தரிசனம் செய்யக்கூடாது என்று அவ்வாறு செய்கின்றனர். அன்றிரவு கம்பம் கங்கை சேர்கின்றது. அதையும் யாரும் பார்ப்பதில்லை.

தேரோட்டத்தின் மறுநாள் திருவிழாவின் நிறைநாள் இரவு நையாண்டி மேளம், கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டத்துடன் மாரியம்மன் குதிரை வாகனத்தில் புறப்பாடு, இன்றைய தினம் உச்சி மாகாளியம்மனும் உடன் புறப்பாடு கண்டருளுகிறார். (உஜ்ஜயினி மாகாளி), மாரியம்மனின் தமக்கை என்பது

தொன்நம்பிக்கை. நள்ளிரவில் குட்டைத்திடலில் சிறப்பு வாணவேடிக்கை இதற்காகவே காத்திருப்போம். மறுநாள் காலை கொடியிறக்கம், பின் மஹாபிஷேகம் முடித்து மஞ்சள் நீராட்டத்துடன் திருவிழா நிறைவு பெறுகிறது. சிறிது விலகி சென்று விட்டோம் வாருங்கள் இனி அடியோங்கள் இந்த யாத்திரையின் போது தரிசித்த அடுத்த ஆலயமான சத்தியமங்கலம் வேணுகோபால சுவாமி ஆலய தரிசனத்துடன் நமது பத்தியுலாவை தொடரலாம்.

# 18 சத்தியமங்கலம் வேணுகோபால சுவாமி தரிசனம்




பண்ணாரி அம்மனை திவ்யமாக தரிசித்த பின் அங்கிருந்து சுமார் 11:30 மணிக்கு புறப்பட்டோம் சத்தியமங்கலம் வந்து சேர்ந்தபோது 12:00 மணி ஆகிவிட்டது. அவ்வூரில் உள்ள வேணுகோபால பெருமாள் ஆலயத்தை சேவிக்க இவ்வாலயம் சென்றோம். சுமார் 800 ஆண்டுகளுக்கும் முந்தைய ஆலயம் வாணி என்று புகழ் பெற்ற பவானி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. பெருமாள் இவ்வாலயத்தில் மூன்று நிலைகளில் சேவை சாதிக்கின்றார். வேணுகோபால சுவாமியாக நின்ற நிலையிலும், லக்ஷ்மி நாராயணாராக அமர்ந்த நிலையிலும், அரங்கநாதராக கிடந்த நிலையிலும் அருள் பாலிக்கின்றார்.

இராமானுஜர் சோழநாட்டிலிருந்து மேலகோட்டை சென்ற போது இவ்வாலயத்தில் தங்கியிருந்தார் என்று கேள்விப்பட்டிருந்தோம், ஆனால் ஆலயத்தில் விசாரித்த போது அப்படியொன்றும் இல்லை என்றார்கள். ஆனால் மாலிக்காபூர் படையெடுப்பின் போது ஸ்ரீரங்கம் உற்சவரும் நகைகளும் மதுரை, கன்னியாகுமரி , கேரளா, மைசூர் வழியாக வந்து இக்கோவிலின் சுரங்க பாதை / பாதாள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்ததாகக் கூறினார்கள். மேலும் திப்பு சுல்தானின் வரி வசூல் அதிகாரியான ரங்கய்யா என்ற அன்பர் தான் வசூலித்த வரியை செலுத்தாமல் இக்கோவிலின் 108 கால் மண்டபத்தை கட்டினார், இதனால் அவர் சிலை ஒரு தூணில் உள்ளது என்றார்கள்.

கொங்கு நாட்டுக்கே உரிய விளக்குத்தூண் இங்கு பிரம்மாண்டமாக 80 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இத்தூண் ஒரே கல்லால் ஆனது என்பது இதன்

சிறப்பு. ஐந்து யானைகள் உதவியுடன் 40 அடி ஆழத்தில் இத்தூணை ஸ்தாபித்தார்கள் என்று கூறுகின்றனர். விளக்குத்தூணின் கீழ் சதுரப்பகுதியில் பெருமாளை நோக்கியவாறு கருடாழ்வார் வெளியே பார்த்தவாறு ஆறு அடி உயரத்தில் கம்பீரமாக நின்ற கோல அனுமன் மற்றும் சங்கு சக்கரங்கள் நான்கு திசைகளில் அருள் பாலிக்கின்றனர் என்பதால் அதை தற்போது அனுமன் திருச்சன்னதியாக மாற்றி உள்ளனர். இச்சன்னதியின் முகப்பில் பட்டாபிஷேக இராமர், நம்மாழ்வார், ரகோத்வஜ தீர்த்தர் சுதை சிற்பங்களை புது பஞ்ச வர்ணத்தில் கண்டு களித்தோம். இரு பக்கமும் நம்மாழ்வார் மற்றும் ஸ்ரீரகோத்வஜ தீர்த்தர் திருச்சன்னதியும் அமைந்துள்ளன. இம்மத்வ யதியின் பிருந்தாவனம் இவ்வாலயத்திற்கு அருகில் அமைந்துள்ளது. நாம் துவஜஸ்தம்பத்தை வலம் வந்து வணங்க முடியும்.




இம்மண்டபத்தை அடுத்து செப்பு கவசம் பூண்ட கொடி மரம் மற்றும் பலிபீடமும் உள்ளது. அடுத்து கிழக்கு பார்த்த மூன்று நிலை இராச கோபுரம் அதில் சதுர் புஜராக சங்கு சக்கரங்களுடனும், ருக்மணி சத்யமாமா சகிதராக கருவறையில் சேவை சாதிப்பது போல வேணு கோபாலர் சுதை சிற்பம் அலங்கரிக்கின்றது.



விளக்குத்தூண் மண்டபம்

இத்தலத்தில் ருக்மணி சத்யபாமா சமேதராக வேணு கோபால சுவாமி நின்ற கோலத்திலும், லக்ஷ்மிநாராயணராக அமர்ந்த கோலத்திலும், கஸ்தூரி ரங்கநாதராக கிடந்த கோலத்திலும் சேவை சாதித்து அருளுகின்றார். தாயார் சகல மங்களங்களையும் அருளும் கல்யாண மஹாலக்ஷ்மியாக அருள் பாலிக்கின்றாள். மேலும் சுதர்சன நரசிம்மர், ஆண்டாள், ஹயக்ரீவர், தன்வந்திரி பகவான், கல்யாண விநாயகர், ஐயப்பனும் இத்தலத்தில் அருளுகின்றனர். வேணு கோபாலர் விமானத்தில் எழிலாக தசவதார கோலங்களை தரிசிக்கலாம்.

வெளிப்பிரகாரத்தில் வாமனரின் சிற்பம் சூரிய சந்திரர்களுடன் உள்ளது. காஞ்சிபுரம் போல இவ்வாலயத்திலும் மோட்ச பல்லி சிற்பம் உள்ளது. விஷ ஜந்துக்களால் பாதிக்கப்பட்டோர் இப்பல்லியை வந்து தொட்டு வணங்கி விட்டு செல்கின்றனர். பல மீன் சிற்பங்கள் காணக்கிடைக்கின்றன எனவே பாண்டியர்கள் திருப்பணி செய்திருக்கலாம். சூரிய சந்திர கிரகண புடைப்பு சிற்பங்களையும் காணலாம்.

மண்டபத்தில் ஒரு சுரங்கப்பாதை உள்ளது. மாலிக்காபூர் படையெடுப்பின் போது ஸ்ரீரங்கம் உற்சவரும் நகைகளும் மதுரை, கன்னியாகுமரி, கேரளா, மைசூர் வழியாக வந்து இக்கோவிலின் சுரங்க பாதை / பாதாள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்ததாகவும், (எனவே அரங்கநாதர் திருசன்னதி இத்தலத்தில் உள்ளது) திப்பு சுல்தான் போர் காலங்களில் இச்சுரங்க வழியை உபயோகப்படுத்தியதாவும் இரு செய்திகள் இச்சுரங்கப்பாதையைப் பற்றி கூறுகின்றனர்.




இராஜ கோபுரம்

இவ்வாலயத்தில் அதிகநேரம் இருக்கவில்லை, அடுத்து பவானியை தரிசிக்க வேண்டும் என்பதால் மதியம் நடை சார்த்துவதற்கு முன் முடிந்தால் சென்று விடலாம் என்று அவசர அவசரமாக புறப்பட்டோம். சமயத்தில் சென்று சேர்ந்தோமா ? என்று அறிந்து கொள்ள தொடர்ந்து வாருங்கள் அன்பர்களே.

# 19 சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி தரிசனம்



"குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்" என்பது பழமொழி, எனவே குன்றுகள் நிறைந்த கொங்கு மண்டலத்தில் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனின் எண்ணற்ற ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றான சென்னிமலையை தரிசிக்கும் பாக்கியம் இந்த யாத்திரையின் போது கிட்டியது.

கந்தர் சஷ்டி கவசத்தில் 'சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக" என்று வரும் அந்த சிரகிரியில் தரிசனம் எவ்வாறு இருந்தது என்று அறிந்து கொள்ள வாருங்கள் அன்பர்களே. அன்று 24 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்த கொங்குமண்டலத்தின் ஒரு பகுதி இப்பூந்துறை நாடு. அன்றைய பூந்துறையே இன்றைய பெருந்துறை. இப்பெருந்துறை வட்டத்தில், நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது சென்னிமலை சுப்பிரமணியர் ஆலயம். இக்கோவிலுக்கு முன்பு சிரகிரி என பெயராம். சிரம் என்றால் தலை, சிறப்பு, உச்சி, மேன்மை. சென்னி' என்ற சொல்லுக்கும் அதே பொருள். அதனால் பின்னாளில் சென்னிமலை என மாறி விட்டது என்கிறார்கள். மலைகளில் தலைமையானது என்றும் பொருள் கொள்ளலாம். அருணகிரி நாதரும் தம் திருப்புகழில் சிரகிரி என்றே பாடியுள்ளார்.

ஈரோட்டில் இருந்து தாராபுரம் செல்லும் வழியில் சுமார் 28 கி.மீ தொலைவிலும் பெருந்துறையிலிருந்து 13 கி.மீ தொலைவிலும், ஈரோடுக்கு அப்பால் உள்ள ஈங்கூர் தொடருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது சென்னிமலை. ஈரோட்டிலிருந்து பேருந்து வசதி உண்டு.

இவ்வாலயம் சுமார் 3,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த மலைக் கோயிலாகும். கந்தர் சஷ்டிக் கவசம் அரங்கேற்றம் செய்யப்பட்ட தலம். அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப் பெற்ற தலம், 18 சித்தர்களுள் ஒருவரான புன்நாக்கு சித்தர் வாழ்ந்து முக்தியடைந்த திருத்தலம் இது. அருணகிரிநாதருக்கு படிக்காசு வழங்கிய தலம். முருகன் தன்னைத்தானே பூஜித்த தலம். இடும்பனுக்கு பொதிகை மலை செல்ல வழி காட்டிய தலம் எனவே ஆதி பழனி என்றும் அழைக்கப்படும் தலம். இந்திரன் முருகரை வழிபட்ட தலம். அக்னி ஜாத மூர்த்தி (இரண்டு தலைகள் உள்ள முருகன்) என்ற சுப்ரமணியரை இத்தலத்தில் தரிசிக்கலாம். வள்ளி-தெய்வானை தேவியர் இருவரும், ஒரே கல்லில் பிரபையுடன் வீற்றிருக்கும் தனிச் சன்னிதி வேறு எங்கும் காண முடியாத அரியதாகும்.

உலகம் முழுவதும் முருக பக்தர்களால் அனுதினமும் பக்திப் பூர்வமாகப் பாராயணம் செய்யும் கந்தசஷ்டி கவசத்தை இயற்றிய ஸ்ரீபாலன் தேவராயசுவாமிகள் இத்திருக்கோயிலுக்கு அருகில் உள்ள மடவளாகம் என்னும் பழைமையான ஊரைச் சேர்ந்தவர் என்றும், கந்தசஷ்டி கவசத்தை அரங்கேற்றம் செய்ய சென்னிமலை திருக்கோவில் உகந்த இடமென்று முருகப் பெருமானின் அருளாணையால் உணர்ந்து, இத்திருக்கோவிலில்தான் கந்தசஷ்டி கவசத்தை அரங்கேற்றம் செய்ததாகவும் ஒரு செவிவழிச் செய்தி நிலவுகிறது.

சென்னிமலைக்கு அருணகிரியார் வாழ்வில் ஒரு சிறப்புண்டு. சம்பந்தருக்கும் அப்பருக்கும் சிவபெருமான் திருவீழிமிழலையில் படிக்காசு அளித்தார். ஐந்து திருப்புகழால் போற்றிப் பாடிய அருணகிரிநாதருக்கு சென்னிமலையில், முருகன் படிக்காசு அளித்தார்.

நாட்டில் அருணகிரி நாதன் சொல் திருப்புகழ்
பாட்டில் மகிழ்ந்து படிக்காசளித்த பிரான்
தாலமிகுஞ் சென்னிமலை தன்னில் வளர் கல்யாண
வாலசுப்ப ராயனென்று வாணர்புகழ் வாசலினான் - என்ற பாடல் சென்னிமலை ஆண்டவன் காதல் என்ற நூலில் வருகிறது.

சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன், சிறந்த முருக பக்தரான சிவாலயச் சோழன் என்ற மன்னருக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்குவதற்காக, முருகப்பெருமானே நேரில் வந்திருந்து, தன்னைத்தானே பூஜித்து, மன்னனின் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கியதாக ஒரு நம்பிக்கை காலம் காலமாகப் பக்தர்களிடையே நிலவுகிறது.

தினமும் சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்காகவும், நைவேத்தியம் தயாரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் தீர்த்தம் மலையடிவாரத்தில் இருந்துதான் கொண்டு வர வேண்டும். இதற்காகவே இரண்டு காளைகள் பராமரிக்கப்படுகின்றன. தினமும் இக்காளைகள் மூலம்தான் தீர்த்தம் மேலே கொண்டு வரப்படுகிறது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வறட்சியான கோடை காலத்தில் சிறிதும் மழையில்லாத சமயத்தில் மலைக் கோயிலுக்கு தென்புறம் அமைந்துள்ள தீர்த்த விநாயகர் முன்பு திடீரென பொங்கி வழிந்தோடும் மாமாங்கத் தீர்த்தம் உள்ள தலம் . இவையெல்லாம் இத்தலத்தின் சிறப்புகள். வாருங்கள் இனி இத்தலத்தை பற்றிய இன்னும் சில வரலாறுகளைப்பற்றி காணலாம்.

புராணக் காலத்தில் ஆதிசேஷனுக்கும் வாயு தேவனுக்கும் இடையில் ஒரு பலப்பரீட்சை நடந்தது. அனந்தன் மகாமேரு பர்வதத்தை உறுதியாகச் சுற்றிப் பிடித்துக்கொண்டான். அனந்தனின் பிடியிலிருந்து மேருமலையை விடுவிக்க வேண்டி, வாயுதேவன் எதிர்த்துத் தாக்கினார். அவ்வளவில் மேருமலையின் சிகரப் பகுதி முறிந்து, பறந்து சென்று பூந்துறை நாட்டில் விழுந்தது. அச்சிகரப் பகுதி சிகரகிரி, புஷ்பகிரி, மகுடகிரி என்றெல்லாம் அழைக்கப்பட்டு, தற்போது சென்னிமலை என்றழைக்கப்படுகிறது.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன், பத்து வயது சிறுவன் ஒருவன், அவன் பிறந்த ஊர் காரணமாக செங்கத்துறையான் என்று அழைக்கப்பட்டான். பஞ்சம் பிழைக்க சென்னிமலைக்கு வந்து, ஒரு பண்ணையாரிடம் வேலைக்கு சேர்ந்தான். தன்னுடைய 25வது வயதிலும் அப்பாவியாக இருந்த அவன் மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது, கையில் வேலுடன் சென்னியாண்டவர் காட்சி தந்தார். கூடவே அவனை, "நிலத்தம்பிரானே!" என்று அழைக்கவும் செய்த அவர், 'இந்த சிரகிரி மலைமேலே எனக்கு நீ ஒரு கோவில் கட்டு!' என்றருளி மறைந்தார்.

சென்னிமலை முருகனுக்கு மலைமேல் மண்டபம் கட்ட தீர்மானித்தார் நிலத்தம்பிரான். கட்டும் போதே மலையடிவாரத்தில் உள்ள கயிலாசநாதர் கோயிலுக்கு மதில் எழுப்பும் பணியையும் மேற்கொள்ள விரும்பினார். அப்போது கோவையும், மலபாரும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. கதவுக்கு மரம் தேடி பொள்ளாச்சி நகருக்குச் சென்றார் தம்பிரான். ஆனைமலையில் ஒரு பெரிய மரத்தைப் பார்த்த அவரும், அவருடைய சீடர்களும் அம்மரத்தை வெட்ட ஆரம்பித்தனர்.



மூலவர் விமானம்

அப்போது அங்கே வந்த ஆங்கிலேய அதிகாரி, அவர்களைத் தடுத்தார். "யாரைக் கேட்டு மரத்தை வெட்டுகிறீர்கள்?" என்று ஆங்கிலத்தில் அதட்டினார். அவரிடம், 'சென்னியாண்டவன் வெட்டச் சொன்னார்; வெட்டுகிறேன்!' என்று பதில் சொல்லி, அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தார் நிலத்தம்பிரான். காரணம், அவருடைய பதில் ஆங்கிலத்திலேயே இருந்ததுதான். அதைக்கேட்டு திடுக்கிட்ட அதிகாரியால், தனக்குச் சமமாக அவர் ஆங்கிலம் பேசுவதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே தன் கோபத்தைக் காட்டினார். "மரத்தை வெட்டுவதுமட்டுமில்லாமல், திமிராக பேசுகிற இவனை மரத்திலே கட்டி வைங்கடா ?' என்று உத்தரவிட்டார். ஆனால் உடன் இருந்தவர்கள் தயங்கினார்கள். "ஐயா,

இவர் பெரிய மகான். இவரை தண்டிக்கறது நமக்குதான் அழிவு'' என்றார்கள். அவர்கள் பயப்படுவதற்குக் காரணங்கள் இருந்தன.


ஒரு நாள், பண்ணையில் வேலை செய்யும் ஒருவனை நான்கு பேர் தூக்கிக் கொண்டு வந்தனர். “இவனை நாகப்பாம்பு கடிச்சுட்டுது. வைத்தியர் வீட்டுக்குப் போக வண்டி கேட்க வந்தோமுங்க!' என்றனர். அப்போது பக்கத்தில் இருந்த செங்கத்துறையான், பாம்புக் கடிபட்டவனை நெருங்கினான். பச்சிலையைக் கசக்கி அவன் மூக்கருகில் சிறிது நேரம் வைத்திருந்து, வேறு சில தழைகளைக் கசக்கி, அவன் வாயில் சாறை விட்டான். பின்பு வேப்பிலையால் அவன் உடல் முழுவதையும் நீவி விட்டான். சற்று நேரத்தில் பாம்பு கடிபட்டவன் எழுந்து உட்கார்ந்தான். இக்காட்சியை அனைவரும் ஆச்சரியமாகப் பார்த்தனர். இவ்வித்தையை எங்கே கற்றான் அவன்? ஆனால், செங்கத்துறையானோ, ‘எல்லாம் சென்னியாண்டவன் செயல்' என்று மட்டுமே சொன்னான்.

கோவில் திருப்பணிகள் நடந்தபோது தம்பிரான் ஊர் ஊராகச் சென்று, மக்களது குறைகளைத் தன் ஆன்மிக சக்தியால் தீர்த்து வைப்பார். அதன்மூலம் கிடைத்த தொகையுடன் கட்டிடப் பணியாட்களுக்குக் கூலி கொடுக்கக் குறிப்பிட்ட நாளன்று சென்னிமலைக்கு வந்து விடுவார். அவர் கூலி கொடுக்கும் முறை வித்தியாசமானது. பொரி மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டி, கடலலையை கலக்குவது போல, பணத்தை பொரியுடன் கலக்கி, தன் இரு கைகளால் அள்ளிப் போடுவார். அப்பணத்தை எண்ணிப் பார்த்தால் அவரவர் செய்த வேலைக்கான கூலி துல்லியமாக இருக்கும்! இதுபோனற பல அற்புதங்களைச் செய்த தம்பிரானையா மரத்தோடு கட்டிப் போடுவது?

அப்போது தம்பிரான், “ஐயா, என்னைக் கட்டிப் போடுவது இருக்கட்டும். உங்கள் மனைவிக்கு சித்தம் கலங்கி, கொள்ளிக் கட்டையை எடுத்துக்கொண்டு, ‘ஊரைக் கொளுத்தப் போகிறேன்' என்று வருகிறார்கள். முதலில் அவரைக் கட்டுப்படுத்துங்கள்,'' என்று சாதாரணமாகச் சொன்னார். அதே நேரம் அதிகாரியின் வேலையாள் வேகமாக ஓடிவந்து, நிலத்தம்பிரான் சொன்ன தகவலை உறுதி செய்தார். பதட்டத்துடன் வீட்டுக்குத் திரும்பிய அதிகாரி, வேலைக்காரப் பெண்கள் தன் மனைவியை அமுக்கிப் பிடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அப்போது அவள்முன் வந்து நின்ற தம்பிரான், தன்னிடமிருந்த விபூதியை எடுத்து அவள் தலையில் மூன்று முறை போட்டுவிட்டு, “ சென்னியாண்டவா, இக்குழந்தையைக் காப்பாற்று!” என்று வேண்டிக் கொண்டார். அடுத்த கணமே அவள் பழைய நிலைக்கு வந்தாள். இதைக் கண்டு வியந்த அதிகாரியும் அவர் மனைவியும், தம்பிரான் காலில் விழுந்து வணங்கினர்.

அதோடு, அதிகாரியே தன் ஆட்களைக் கொண்டு, அம்மரத்தை வெட்டி சென்னிமலைக்கு அனுப்பி, தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். சென்னிமலை அடிவாரத்தில் கயிலாச நாதர் ஆலயத்தில் இப்போதும் இருக்கும் அம்முன்கதவுதான் அது. ஒரே மரத்தால் செய்யப்பட்டது. கோவில் வேலைகளை முடித்த தம்பிரான் கும்பாபிஷேகத்துக்கு நாள் குறித்தபோது, சென்னியாண்டவன்

தன்னை அழைப்பதை உணர்ந்தார். சென்னிமலை அடிவாரத்தில் தனக்காக தானே ஏற்கெனவே அமைத்திருந்த சமாதியில் போய் அமர்ந்தார். அந்நிலையிலேயே 15ம் நாள் சமாதியானார்.



தேவியர் சன்னதிக்கு செல்லும் படிகள்

மலைப்படி அருகே செங்கத்துறை பூசாரியார் மடம் ஒன்று இருக்கிறது. அங்கு அவர் சமாதிக்கு மேலே முருக விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து, சிறு கோவில் கட்டியிருக்கிறார்கள். மகா மண்டபத் தூணில் நிலத்தம்பிரானது சிலை உள்ளது. அருகில் உள்ள ஊரிலிருந்து சிவாச்சாரியார் ஒருவர் வந்து பூஜை செய்து, வில்வ மரப்பாலால் ஆண்டவன் நெற்றியில் பொட்டு வைப்பார். ஒருநாள் சிவாச்சாரியார் வராததால் நிலத்தம்பிரானே பூஜை செய்தார். அப்போது உயரம் குறைந்த தம்பிரானுக்காக ஆண்டவர் தலையைக் கொஞ்சம் தாழ்த்தி பொட்டை தன் நெற்றியில் ஏற்றுக் கொண்டாராம். அதனால் இப்போதும் அச்சிலை தலை

தாழ்த்தியபடியே இருக்கிறதாம்!

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழ மன்னர்களால் கட்டப்பட்ட சென்னிமலை ஆலயம் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 1,749 அடி உயரத்தில் பசுமை மிக்க மரங்களாலும், மூலிகை குணம் கொண்ட செடிகளாலும் சூழப்பட்ட குரங்குகள் மற்றும் மயில்கள் நிறைந்த அழகிய வனப்பகுதியில் உள்ளது.

ஆகமவிதிப்டியும், சாஸ்திர விதிப்படியும், திருக்கோவிலுக்கு ஈசான்ய திக்கில் திருக்குளம் அமைவது சிறப்பு. இத்தலத்தில் மாமாங்க தீர்த்தம்
முதலான 24 தீர்த்தங்கள் உள்ளதாக தல வரலாற்றில் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. இவற்றுள் மார்க்கண்டேய தீர்த்தம் ஈசான திக்கில் அமையப்பெற்று ஆண்டு தோறும் சென்னிமலை ஆண்டவர் தெப்போற்சவம் கண்டருளுகிறார். இத்தலத்தின் தல விருட்சம் திந்துருணி எனப்படும் புளிய மரம் ஆகும்.



அடிவாரத்தில் ஒரு விளக்குத்தூண் உள்ளது. அடிவாரத்தில் இருந்து செங்குத்தாக இல்லாமல், பக்தர்கள் எளிதில் ஏறிச் செல்ல வசதியாக 1,320 படிக்கட்டுகள் அமையப் பெற்றிருக்கின்றன. அடிவாரத்தில் இருந்து சில படிகள் ஏறிய பின் கடம்பவனேஸ்வரர், இடும்பன், ஆகியோரின் சன்னதிகளை ஒரே வரிசையில் தரிசிக்கலாம். பின்னர் தொடர்ந்து வள்ளியம்மன் பாதம் என்ற மண்டபத்தைக் கடந்து மேலே சென்றால், `முத்துக்குமார சாவான்' என்னும் மலைக் காவலர் சன்னதி அமைந்திருக்கிறது. அதற்கடுத்ததாக வரும் ஆற்றுமலை விநாயகர் சன்னதியையும் தரிசித்துவிட்டு, மேலே சென்றால், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி எழுந்தருளியுள்ள திருக்கோயிலை அடையலாம். மலையேறும் போது இளைப்பாற ஏதுவாக மண்டபங்கள் உள்ளன. குடிநீர் வசதியும்

, இரவுநேரங்களில் ஏறுவதற்கு ஏதுவாக மின் விளக்குகளும் அமைத்துள்ளனர்வழியில் நீண்ட இலைகளுடன் கூடிய துரட்டி மரம் என்ற மிகப் பழைய மரம் ஒன்று இங்கு மலைப்படி வழியில் உள்ளது. வாகனம் மூலமாகவும் மேலே செல்ல இயலும். அடிவாரத்திலிருந்து தேவஸ்தான பேருந்து வசதியும் உள்ளது. மேலேறியவுடன் ஐந்து நிலை இராஜகோபுரமும், நான்கு கால் மண்டபத்துடன் கூடிய விளக்க்கு தூணையும் காணலாம். இராஜகோபுரத்தின் விதானத்தில் ஒரே கல்லினால் ஆன சங்கிலி வளையம் அமைத்துள்ளது ஒரு தனி சிறப்பாகும். மேலும் பரத நாட்டியத்தின் 108 கரணங்களையும் கல்லில் எழிலாக வடித்துள்ளனர்.

இராஜகோபுரம், பலிபீடம், கொடிமர பீடம், சோபன மண்டபம் அந்தராள மண்டபம், மற்றும் கருவறை அனைத்தும் கருங்கல்லால் எழிலாக அமைந்துள்ளது. சோபன மண்டபத்தின் கோஷ்டத்தில் நவகிரகங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அந்தராள மண்டபத்தின் கோஷ்டத்தில் புராணங்களில் கூறப்பட்டுள்ள முருகப்பெருமானின் பல் வேறு வடிவங்களை நாம் தரிசிக்கலாம்.

அடியோங்கள் வண்டி மூலம் மேலே சென்றோம். செல்லும் வழியில் மரங்களில் பல மயில்களைக் கண்டோம். மலை பச்சை பசேலென்று இருந்தது. அந்தி சாயும் நேரத்தில் சென்றதால் இரம்மியமான சூழல் நிலவியது. வண்டி நிறுத்தத்தில் வண்டியை நிறுத்தினோம். முதலில் இராஜகோபுரமும் அதன் அருகில் உள்ள கார்த்திகை மண்டபமும். கண்ணில் பட்டது. அற்புத கற்சிற்பங்கள் நிறைந்த ஐந்து நிலை இராஜகோபுரம் வழியாக ஆலயத்திற்குள் நுழைந்தோம். சுவாமி சன்னதி உயரமாக அமைந்துள்ளது. கொடிமரம் தங்ககவசம் பூண்டிருந்தது.


திருக்கோயிலின் தெற்கு பிராகாரத்தில் மார்க்கண்டேஸ்வரர், இமயவள்ளி சன்னதியும், தென்மேற்கு மூலையில் விநாயகர் சன்னதியும், வடக்கில் காசி விசுவநாதர், விசாலாட்சி சன்னதியும் அமைந்திருக்க, இவர்களுக்கு நடுவில் நாயகனாய் அருட்காட்சி தருகிறார் முருகப்பெருமான்.



தன்னை தரிசிக்கும் பக்தர்களுக்கு, பொருள் செல்வத்தோடு ஞானச் செல்வத்தையும் அருளும் வகையில், ஞான தண்டாயுதத்தை தன் வலத் திருக்கையில் ஏந்தி, இடத் திருக்கரத்தை இடையில் பொருத்தி, பேரொளியும், பெருங் கருணையுமாக அழகு தரிசனம் தருகிறார் முருகப்பெருமான். இவரை

பகலிறவினில் தடுமாறா பதிகுருவெனத் தெளிபோத
ரகசியமுறைத் தநுபூதி ரத நிலைதனைத் தருவாயே
இகபரமதற் கிறையோனே இயலிசையின் முத்தமிழோனே
சகசிரகிரிப் பதிவேளே சரவணபவப் பெருமாளே.

பொருள்: நினைவு, மறப்பு என்ற நிலைகளிலே தடுமாறாது, முருகனே குருநாதன் என்று தெளிகின்ற ஞானத்தின் பரம ரகசியத்தை அடியேனுக்கு உபதேசித்து, ஒன்றுபடும் ரசமான பேரின்ப நிலையினைத் தந்தருள்வாயாக. இம்மைக்கும் மறுமைக்கும் தலைவனாக விளங்குபவனே, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் உரியவனே, இவ்வுலகில் மேலான திருச்சிராமலையின் செவ்வேளே, சரவணபவப் பரம்பொருளே என்ற அருணகிரி நாதரின் இத்தலத்திற்குரிய ஐந்து பாடல்களில் ஒன்றைப்பாடி வழிபட்டோம். (இங்கே "பகலிரவு" என்பது நினைவும் மறப்பும் என்பதைக் குறிக்கும். இவ்விரண்டும் அற்ற நிலையே யோக அநுபூதி நிலை).



தேவியர் விமானம்

சென்னிமலையில் வீற்றிருக்கும் தண்டபாணி மூர்த்தியின் திருமுகம், பூரணப்பொலிவுடனும், இடுப்புக்கு கீழ் திருப்பாதம் வரை வேலைப்பாடற்றும் காணப்படுகிறது. இம்மலையின் ஒரு பகுதியில் காராம்பசு தினமும் பால் சொரிய

விட்டதைக் கண்ட பண்ணையார், அவ்விடத்தைத் தோண்டிப் பார்த்துள்ளார். அபோது பூர்ண முகப்பொலிவுடன் ஒரு கற்சிலை கிடைத்தது. அவ்விக்ரஹத்தின் இடுப்புவரை நல்ல வேலைப்பாடுடனும், முகம் அற்புத பொலிவுடனும் இருந்தது. ஆனால், இடுப்புக்கு கீழ், பாதம் வரை சரியான வேலைப்பாடு இல்லாமல் கரடு முரடாக இருந்தது. அதை ஒரு குறையாக எண்ணி, அப்பாகத்தையும் சிறந்த சிற்பியைக் கொண்டு உளியால் சரி செய்த போது, சிலையிலிருந்து இரத்தம் கொட்டியதாகவும், இதனால் அதே நிலையில் சென்னிமலையில் அச்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. முருகனுக்கு அபிஷேகம் செய்த தயிர் புளிப்பதில்லை என்ற அதிசயமும் நிகழ்கிறது. சென்னிமலையில் மூலவருக்கு ஆறு கால பூஜை வேளையில் மட்டும் அபிஷேகமும், இதர நேரங்களில் உற்சவருக்கு அபிஷேகமும் நடைபெறுகிறது. மூலவரின் அருகில் ஆண்டி கோலத்தில் ஒரு உற்சவர் எழுந்தருளி அருள் பாளிக்கின்றார். இவ்வாலயம் பகலில் சார்த்தப்படுவதில்லை. மின் எழுத்துக்களில் இத்தலத்தின் சிறப்புகளை கூறும் விதமாக விளம்பரப்பலகை அமைத்திருக்கிறார்கள்.

மூலவர் சென்னிமலை ஆண்டவர் நடுநாயக மூர்த்தியாக, செவ்வாய் அம்சமாக அமைந்தும், மூலவரைச் சுற்றி நவக்கிரகங்களில் எட்டு கிரகங்களும் அழகிய தேவ கோஷ்டங்களில் பாங்குடன் அமைந்தும் அருள்பாலிக்கிறார்கள். இங்கு மூலவரை வலம் வந்து வணங்கினாலே நவகிரகங்களையும் வழிபட்ட பலன் உண்டு. இத்தலம் செவ்வாய் பரிகாரச் சிறப்பு பெற்ற ஸ்தலமாகும். மூலவர் ஞான தண்டாயுதபாணி கோலத்தில் அருள்பாலிக்கிறார். சென்னிமலையண்டவர் அந்தராள மண்டபத்தின் கோஷ்டங்களில் புராணங்களில் கூறப்பட்டுள்ள பலவிதமான சரஜன்மர், சௌபேயர், அக்னிஜாத மூர்த்தி ஆகிய அற்புத கோலங்களை தரிசிக்கலாம் என்பது சிறப்பு.

இத்தலத்தில் ஞானதண்டாயுதபாணியாக முருகப் பெருமான் திருக்காட்சி தந்தாலும், இரண்டு தேவியரும் தனிச்சன்னதியில் அருள்கிறார்கள். மூலவர் ஞான தண்டாயுதபாணி சன்னதிக்குப் பின்புறம் இருக்கும் படிக்கட்டுகளின் வழியாக மேலே சென்றால், வள்ளி, தெய்வானை ஆகியோரின் சன்னதியை தரிசிக்கலாம். இருவரும் அமிர்தவல்லி, சுந்தரவல்லி என்ற பெயர்களுடன் சென்னிமலையில் தவம் இருந்து முருகப் பெருமானை மணந்து கொண்டதாக ஐதீகம். இருவரின் திருமேனிகளும் ஒரே பிரபையுடன் ஒரே கல்லில் வடிக்கப்பட்டிருப்பது சிற்பக்கலையின் தனிச்சிறப்பு.

சென்னிமலை முருகப்பெருமானைத் தொடர்ந்து வழிபட்டு வரும் பக்தர்கள், தங்களின் குடும்பத்தில் நடைபெறும் எந்த ஒரு சுப நிகழ்ச்சியாக இருந்தாலும், கோயிலுக்கு வந்து மூலவருக்கு அர்ச்சனை செய்து, முருகப் பெருமானின் சிரசுப்பூ உத்தரவு கிடைத்த பிறகே முடிவு செய்கிறார்கள். திருமணமான தம்பதியர் சந்தான பாக்கியம் வேண்டி, மாவிளக்கு தீபம் ஏற்றி வழிபடுவதும், தீர்க்கசுமங்கலியாக இருப்பதற்குச் சன்னதியின் முன்பு நின்று மாங்கல்யச் சரடு கட்டிக்கொள்வதும் வழக்கமாக இருக்கிறது. அதேபோல் இக்கோவிலில் அமைந்திருக்கும் தலமரமான புளியமரத்தில் `சந்தானகரணி’ என்னும் சித்திப்பொருள்

இருப்பதாகவும், அம்மரத்தினடியில் மாவிளக்கு தீபம் ஏற்றி வழிபட்டால், விரைவில் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்கிறார்கள். ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் இருப்பவர்கள், இக்கோவிலுக்கு வந்து முருகப்பெருமானுக்கு நெய் தீபம் ஏற்றி வழிபட்டு வந்தால், செவ்வாய் தோஷம் நீங்கிவிடும் என்பதும் பக்தர்களது நம்பிக்கை.

மூலவர் சன்னதிக்குப் பின்னால், சிறிது தூரம் நடந்து சென்றால் சுந்தரவல்லி, அமிர்தவல்லி சன்னதியும், ஸ்ரீபிண்ணாக்குச் சித்தர் குகை அமைந்துள்ளது. இறைவன் கிருபையும், அருளையும் மறுத்துரைப்பவர்கள், பொய் சொல்பவர்கள் நாவானது 'புண் பொருந்திய நாக்கு' எனக்கூறியவர் தன்னாச்சி அப்பன் சித்தர். 18 சித்தர்களில் ஒருவரான இவரை முனிவர் என்றும், புண் நாக்கு சித்தர் என்றும் அழைத்தனர். பிற்காலத்தில் 'புண்ணாக்குச் சித்தர்' என்று பெயர் மருவியது. இவர் , தனது நாக்கை பின்புறமாக மடித்து, அருள்வாக்கு சொல்லி வந்ததாலும், இவர் பின்நாக்கு சித்தர் என அழைக்கப்பட்டார் என்றும் கூறுகின்றனர். சித்தராக வானவீதி வழியாக பறந்து வந்த இவர், நிலையாக இவ்வாலயத்தில் இருந்து, சென்னிமலை சுப்பிரமணியரை நினைத்து, யோக நிலையில் தவம் புரிந்தார். பின்னர் சென்னிமலையிலேயே, புண்ணாக்குச் சித்தர் சிவசமாதி அடைந்தார். அவர் சமாதி அடைந்த பின், அவருடைய சிலையை, தற்போதைய இடத்தில் நிறுவி , பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர். ஆண்டி வடிவில் அமைந்து அருள்பாலிக்கும் முருகனிடம், தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் புண்ணாக்குச் சித்தர். 1,740 அடி உயரத்தில் குகை வடிவில் அமைந்துள்ள கோவிலில், இவர் அருள்பாலிக்கிறார். வள்ளி, தெய்வானை சன்னதிக்கு மேல், 800 அடி நீளப்பாதையில் கிழக்கு முகமாக இக்குகை உள்ளது. மக்கள் குறையைப் போக்கும் ஆலயமாக விளங்குகிறது. இக்குகை, பழனி வரை செல்வதாக நம்பப்படுகிறது. நவகிரகங்களில் சுக்கிரனைப் பிரதிபலிக்கும் இவரை, வெள்ளிக் கிழமைகளில் தொடர்ந்து வழிபட்டால், சுக்கிர தோஷம் விலகும் என்கிறார்கள் பக்தர்கள். புண்ணாக்கு சித்தர் கோவில் வேல்கள் நிறைந்து வேல்கோட்டமாக அமைந்துள்ளது.

சிவமறையோர் குலத்தில் பிறந்து, சத்திய ஞானியை குருவாகக் கொண்ட சரவணமுனிவர், சிரகிரி வரலாற்றை எழுதியபோது, முருக்கடவுள் காட்சியருளினார். அவரது சமாதிக் கோயிலும் அருகே உள்ளது.

இத்தலத்தில் வேங்கை மரத்தால் செய்யப்பட்ட மரத்தேர் உலா மற்றொரு சிறப்பம்சம்.

இக்கோயிலில் வளர்பிறை சஷ்டித் திருநாளிலும், கார்த்திகையன்றும், ஐப்பசி மாத கந்தர் சஷ்டி திருவிழா நாட்களிலும், பக்தர்கள் சந்தான பாக்கியம் வேண்டி விரதமிருக்கின்றனர். அதேபோல, ஜனன ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் உடையவர்கள், இங்கு நெய் தீபமேற்றி வழிபாடு செய்தால், தோஷம் நீங்கி அருள் பெறுவதாக பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.



தன்னாசியப்பர் சன்னதி

மலைப்படியில் மாட்டு வண்டி ஏறிய அதிசயம்

சென்னிமலையில் உள்ள 1320 திருப்படிகளையும் இரட்டை மாட்டு வண்டி ஏறிய அதிசயம் 1984 பிப்ரவரி 12-ல் நடந்தேறியது. லட்சக்கணக்கான மக்கள் கண்டு களிக்க, இரட்டை மாடுகள் பூட்டப்பட்ட வண்டி சென்னிமலையின் 1320 படிக்கட்டுக்கள் வழியாக மலை, உச்சியை அடைந்த அதிசயம்!

12.2.84 கிழக்கே வெளுத்தது. தமிழகத்தின் பல ஊர்களில் இருந்தும் மக்கள் மலை அடிவாரத்தில் அடிவாரத்தில் இருந்து மலை உச்சி வரையில் படிக்கட்டுக்களின் இரு பக்கங்களில், அதிகாலையிலிருந்தே நின்றும், அமர்ந்தும், மரக்கிளைகளில் தொங்கிக் கொண்டும் தங்களுக்கான இடத்தைத் தக்க வைத்துக்கொள்ள ஆயத்தமாயினர்.

அன்று காலை சரியாக 7:30 மணி. அலங்காரம் செய்யப்பட்ட இரட்டை மாட்டு வண்டியில் பூட்டப்பட்ட இரண்டு காளை மாடுகளும் கம்பீரமாக தயாராக இருக்க, அப்பொழுதுதான் வண்டியை யார் ஓட்டுவார் என்று அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டபடி பச்சை வேட்டி மஞ்சள் துண்டு அணிந்து, வண்டியை ஓட்ட, வண்டியில் அமர்ந்தவர் 60 வயதான பெருந்துறை சிவன்மலைக் கவுண்டர். சிவன்மலைக் கவுண்டர் வண்டியில் ஏறி உட்கார்ந்ததும், காளைமாடுகள் இரண்டும் கம்பீரமாகப் படிக்கட்டுக்களில் ஏற ஆரம்பித்து விட்டன.

காளை மாடுகள் ஒவ்வொரு படியை மிதித்து மேலேறும் போது மலையே “அரோகரா” என்று முழக்கமிட்டதைப் போல, அடிவாரம் முதல் மலை உச்சி வரை இருந்த பக்தர்களின் அரகர முழக்கங்கள் அதிர்ந்து எதிரொலித்தன.
லட்சக் கணக்கான மக்கள் சுற்றிலும் இருந்து அரோகரா முழக்கங்களை எழுப்பியபோதும் வண்டியில் பூட்டப்பட்ட மாடுகள் இரண்டும் மக்கள் கூட்டத்தைக் கண்டும், கோஷங்களைக் கேட்டும் சிறிதும் மிரளவில்லை. இராணுவ வீரர்களைப் போல் ஒருவிதமான மிடுக்கோடு மலைப்படிகளில் ஏறின! சரியாக நாற்பத்தாறு நிமிடங்களில் ஆயிரத்து முன்னூற்று இருபது படிகளையும் கடந்து, மலையுச்சியிலுள்ள முருகன் சந்நிதியில் போய் நின்றன.

மலையுச்சியை வண்டி மாடுகள் அடைந்ததும் லட்சக்கணக்கான மக்களின் அரகரா முழக்கமும் உச்சத்தைத்தொட, வண்டி மாடுகளுடன் சிவன்மலைக் கவுண்டருக்கும் வண்டி மாடுகளுக்கும் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரகார வழிபாட்டுக்குபின் சிவன்மலைக்கவுண்டர் வண்டியின் மீது ஏறி நின்று, நிகழ்வுக்கு வண்டி, மாடுகள், சாட்டை மற்றும் உபகருவிகளை வழங்கிய அனைவருக்கும் ஏனையோருக்கும் நன்றி தெரிவித்தார்.

முன்னதாக சில வாரங்களுக்கு முன்னரே, சென்னிமலை வேலவரே கனவில் வந்து ஆணையிட்டதாகக் கூறி, வண்டி, காளை மாடுகள், சாட்டை மற்றும் வண்டி ஓட்டத் தேவையான உபகரணங்களை பல்வேறு ஊர்களைச் சேர்ந்த குறிப்பிட்ட பக்தர்கள் வேட்டுவபாளையம் வேளாளத்தம்பிரான் மடத்தைச் சேர்ந்த சின்னப் பூசாரியார் பொன்னுச்சாமி வசம் காணிக்கையாக அளித்தனர்.

இரண்டு காளை மாடுகளை இந்நிகழ்வுக்குக் காணிக்கையாக கொடுத்தவர் சென்னிமலையை அடுத்த முத்தூரைச் சேர்ந்த துரைசாமிக் கவுண்டர். காளை மாடுகளைப் பூட்டிச் செல்லும் இரட்டை மாட்டு வண்டியை காணிக்கையாகக் கொடுத்தவர் அந்தியூர் அருகே விராலிக்காட்டூர் கோபால் கவுண்டர்.

கனவில் தோன்றிய இறை ஆணையைக் குறிப்பிட்டு, 12.2.84 அன்று காலை சென்னிமலை முருகன் கோவில் படிக்கட்டுக்களில் இரட்டைமாட்டு வண்டி செல்ல வேண்டும் என்பதற்காக, முன்னதாகவே பெரியார் மாவட்ட அன்றைய ஆட்சித்தலைவர் ராஜாராம் அவர்களிடம் அனுமதி கேட்கப்பட்டது. இம்மாதிரி மாதிரியான நிகழ்வுக்கு, முன் மாதிரி நிகழ்வுகள் நடைபெற்றிராத சூழ்நிலையில், பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் வண்டியை இழுத்துக் கொண்டு மாடுகள் மலைப் படிக்கட்டுக்களில் ஏறிச்செல்லும்போது, கூட்டத்தைக் கண்டு, காளை மாடுகள் மிரண்டு போய், தாறுமாறாக ஓட ஆரம்பித்து விட்டால், அசம்பாவித நிகழ்வுகள் நடக்கக்கூடாது, மற்றும் மக்களின் பாதுகாப்புக் காரணங்களுக்காக முதலில் அவர் அனுமதி மறுத்திருக்கிறார். “முருகன் அருளால் எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காது” என்று பலரும் எடுத்துக்கூறிய போதும் கலெக்டர் அவர்கள் சென்னிமலைக்கு நேரில் வந்து, மலை உச்சிவரை படிக்கட்டுக்களில் ஏறிச் சென்று பார்வையிட்டிருக்கிறார். பிறகு அரைமனதோடுதான் நிகழ்ச்சிக்கு அனுமதியளித்திருக்கிறார்.

முந்தைய நாளான 11.2.1984 அன்று பிற்பகல் சின்ன வேட்டுவபாளையத்திலிருந்து சென்னிமலைக்கு புறப்பட்ட வண்டிக்கு வழி நெடுக வரவேற்பு அளிக்கப்பட்டது. இரவு சென்னிமலை அருள்மிகு கைலாசநாதர் கோவிலிலும் 12.2.84 அதிகாலை மலை அடிவாரத்திலும் சிறப்புப் பூசைகள் நடைபெற்றன.

1320 படிகளிலும் கம்பீரமாக ஏறிச் சென்ற காளை மாடுகள் பூட்டிய வண்டியைப் பின்தொடர்ந்து சென்ற அதிமுக்கியப்பிரமுகர்கள் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ராஜாராமன், துணை ஆட்சியர் சந்திரபிரகாஷ், காவல்துறை கண்காணிப்பாளார் திரு அப்பாத்துரை ஆகியோர்.

12.2.84 அன்று காலையிலேயே இரட்டை மாடுகள் பூட்டப்பட்ட வண்டி மலையேறப் போகிறது என்பதால் 11.2.84 அன்று இரவிலிருந்தே பல ஊர்களில் இருந்து மக்கள் கூட்டம் சென்னிமலையை நோக்கி பயணித்தது. ஈரோடு காங்கயம் பெருந்துறையில் இருந்து சிறப்புப் பேருந்துகள் இயங்கின. மக்களை சென்னிமலைக்கு கொண்டுவந்து சேர்த்தன !

சென்னிமலைக்கு வரும் எல்லா வழித்தடங்களிலும் பேருந்துகள் வாகனங்கள் சென்னிமலைக்குச் சில கிலோ மீட்டர் தூரத்திலேயே நிறுத்தப்பட்டன. மக்கள் பாதசாரியாக எல்லாத் திசைகளில் இருந்தும் மலை அடிவாரத்துக்கும் மலைக்கும் குவிந்தனர். பல லட்சம் பேர் கலந்து கொண்ட அந்த நிகழ்சசிக்கு ஈரோடு மாவட்டம் காவல்துறை மற்றும் சென்னிமலை காவல்துறை அதிகாரிகளும் காவலர்களும் மிகச் சிறப்பான, பாராட்டுக்குரிய ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

பரப்பளவில் சிற்றூராக உள்ள நம் சென்னிமலையில், “மலையா -மக்கள் தலையா” என்று அதிசயக்கும் வண்ணம் ஒரே சமயத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து பல லட்சம் மக்கள் திரளாகக் கலந்து கொண்டபோதும், எவ்வித அசம்பாவித நிகழ்வுகளும் இல்லாமல், 1320 மலைப் படிக்கட்டுக்கள் இரட்டை மாட்டு வண்டி ஏறிச் சென்ற அதி அற்புத - அதிசய நிகழ்ச்சி சென்னிமலை ஆண்டவர் அருளால் சிறப்பாக நடந்தது.

இவ்வூருக்கு மற்றுமொரு வரலாற்றுப் பெருமையும் இருக்கிறது. அது தமிழ்நாட்டின் மிக முக்கிய சுதந்திரப் போராட்டத் தியாகியான “கொடி காத்த குமரன்” என்று சிறப்பாக அழைக்கப்படும் திருப்பூர் குமரன் பிறந்த ஊர். அவரது சிலை அடிவாரத்திற்கு அருகில் அமைந்துள்ளது. சென்னிமலை கைநெசவுத் தொழில் இங்கு ஒரு முதன்மையான தொழிலாகும். சென்னிமலையில், கிட்டத்தட்ட 35 நெசவாளர்கள் சங்கங்கள் இருக்கின்றன. இச்சங்கங்களின் மூலமாகத் போர்வைகள், துண்டுகள், மெத்தை விரிப்புகள், தலையணை உறை ஆகியவை நெய்யப்படுகின்றன. அடியோங்கள் செல்ல முடியவில்லை என்றாலும் முக்கியத்துவம் கருதி அடுத்து சிவன்மலை ஆண்டவரை தரிசிக்கலாம் அன்பர்களே.

# 20 சிவன்மலை ஆண்டவர் தரிசனம்



அடியோங்கள் இந்த யாத்திரையின் போது சிவன்மலை செல்ல வாய்ப்பு அமையவில்லை என்றாலும், சென்னிமலை, சிவன்மலை என்று இப்பகுதியில் இரண்டு முருகன் ஆலயங்களையும் சேர்த்தே சொல்லுவர் என்பதால் சிவன்மலை ஆண்டவரையும் தரிசிக்கலாம் அன்பர்களே. இத்தலத்தின் தனி சிறப்பு, "உத்தரவுப் பெட்டியாகும்".

சிவன் மலை என்பதாலும் ஆண்டவர் என்று அழைப்பதாலும் இம்மலையில் இருப்பது சிவன் கோவில் அல்ல மாறாக இங்கு முருகன் கோவில் இருப்பது சிறப்பு . திருப்பூர் மாவட்டம், காங்கேயத்துக்கு அருகிலுள்ளது சிவன்மலை. கங்கையால் தாங்கப்பட்டதால் முருகருக்கு காங்கேயன் என்ற திருநாமமும் உண்டு அப்பெயரே ஊருக்கு ஏற்பட்டு இன்று காங்கேயம் என்று அழைக்கப்படுகின்றது. கங்கை குல வேளிருக்கு உரியது, கங்கர்கள் ஆண்டது என்பதால் இப்பெயர் பெற்றது என்பர். காங்கேய நாடு கோவில்கள் நிறைந்த நாடு; இன்றும் பல ஆயிரம் ஆண்டு பழைமையான கோவில்கள் காங்கேயம் பகுதிகளில் காணப்படுகின்றன.

சிவன் மலை குன்றாகவும், வனமாகவும் இருந்துள்ளது. பட்டாலியே குடியிருப்பாக இருந்துள்ளது. சிவமலை முருகனை பட்டாலியூரன், பட்டாலி பால் வெண்ணீஸ்வரர் பாலன் என அழைக்கின்றனர். அடிவாரத்திலுள்ள பட்டாலி வெண்ணீஸ்வரர் கோவில், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதாகவும், ஏழு ஸ்வரங்கள் இசைக்கும் தூண், அற்புதமான சிற்பங்கள் கொண்டது.

அருணகிரிநாதரால் திருப்புகழில் பாடப்பெற்ற பெருமை கொண்டது இத்தலம். மூன்று பாடல்களில் இத்தலத்தை பாடியுள்ளார் அருணகிரிநாதர். மூலவராக, சுப்ரமணியர், வள்ளியுடன் ஒரே கருவறையில் திருமண கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

சிவபெருமானின் அஷ்டவீர செயல்களுள் ஒன்றான திரிபுர சம்ஹாரத்தின் சமயம் மேரு மலையை வில்லாகப் பயன்படுத்திய போது அதிலிருந்து சிதறிய ஒரு சிறுபகுதியே சிவன்மலை எனப்படுகிறது. இவ்வரலாறு 'சிவமலைக் குறவஞ்சிப் பாடலில்' குறிப்பிடப்படுகின்றது.
அந்த மேரை ஈசன் திரிபுர சம்ஹாரம்
செய்ய வளைக்குங் காலை
முந்து கொடுமுடியுள் ஒன்று சிந்தி இங்கு
வந்த சிவமலை இம்மலையே! - புராணங்கள், கல்வெட்டுகள் போன்றவற்றிலும் சிவ மலை என்றே உள்ளது.

18 சித்தர்களின் சிறப்பு பெற்றவரும், சிவ வாக்கியம் என்ற நூலை இயற்றிய சிவஞானியும், சித்தருமாகிய சிவவாக்கியர் அமைத்த கோவில் ஆகும். சிவவாக்கியர், முருகனின் உபதேசத்தால், இக்கோயிலை அமைத்ததால், சிவமலை என பெயர் பெற்று, நாளடைவில், சிவன் மலை என பெயர் மருவியுள்ளது. பழனியாண்டவரை எவ்வாறு போகர் என்னும் வடிவமைத்தாரோ அது போல சிவவாக்கியர் சிவன்மலை ஆண்டவரை வடிவமைத்தார் என்றொரு நம்பிக்கையும் உள்ளது.

வெகு காலத்திற்கு முன்னர் இந்த சிவன்மலை அடிவாரத்தில் சில சித்தர்கள் தங்கி இருந்தார்கள் அப்படி தங்கி இருந்தவர்களில் சிவவாக்கிய சித்தர் என்ற ஒருவரும் இருந்தார். இவர் அதிகாலை சூரியன் உதிக்கும் முன்பே ஆசிரமத்தில் இருந்து வெளியே சென்றுவிடுவார். சூரியன் மறைந்த பின்பே ஆசிரமத்திற்கு திரும்புவாராம். உடன் இருக்கும் சித்தர்கள் உட்பட யாரிடமும் பேசாமல் மௌனவிரதம் இருந்து வந்தாராம். எங்கே செல்கிறீர்?! என்ன செய்கிறீர்கள்?! சாப்பிட்டீர்களா என யார் என்ன கேட்டாலும் அமைதியாவே இருப்பாராம். இப்படியே ஆறுமாத காலம் கழிந்தது. ஆறு மாதத்திற்கு பிறகு, மௌனம் கலைத்து , எல்லோரையும் அழைத்துக்கொண்டு சிவன்மலையின் உச்சிக்கு சென்றாராம் . அங்கு, கள்ளி மரத்தடியில், தான் வடிவமைத்திருந்த சிவன்மலை ஆண்டவர் சிலையை அனைவருக்கும் சிவவாக்கிய சித்தர் காட்டினாராம். ஆண்டவரின் சிலையின் தெய்வாம்சம் அனைவரையும் கவர்ந்தது. பின்னர் நல்லதொரு நாளில் சிவன்மலை ஆண்டவர் சிலையை அவரே பிரதிஷ்டையும் செய்து வைத்தாராம். அதனால் சித்தரின் பேரினால் சிவமலை என அழைக்கப்பட்டு இப்போது சிவன்மலை ஆகிவிட்டது.

சிவாசலம், சிவராத்திரி, சிவமாமலை. சிவசைலம், சிவநாகம், சிவகிரி எனவும், புலவர்கள் தெளி தமிழ்தேர் சிவமலை, செல்வ சிவமலை, கல்யாண சிவமலை, மகிமை சேர் சிவமலை, தவசு புரி சிவமலை என புகழ்ந்து பாடியுள்ளனர்.



சிவன் மலை

பார்வதி மற்றும் அகத்தியர் சிவனை நோக்கித் தவம் செய்த இத்தலத்திற்கு, வள்ளி மலைச்சாரலில் தினைப்புனம் காத்துக் கொண்டிருந்த வள்ளியம்மையை, காதல் மணம் புரிந்து திருத்தணியில் கோவில் கொண்ட பிறகு முருகன் இங்கு முதன் முதலாக வந்து சில காலம் தங்கியிருந்தார் என்று தல வரலாறு கூறுகிறது. எனவே இத்தலத்தில் முருகன், சுப்பிரமணியராக வள்ளியுடன் கல்யாண கோலத்தில் காட்சி தருகிறார்.

வள்ளியை முருகன் கவர்ந்து வந்தபோது, வேடுவர்களுடன் ஏற்பட்ட போரில் இறந்த வேடர்கள், முருகன்- வள்ளி திருமணத்திற்கு பிறகு உயிர் பெற்று எழுந்து, மகிழ்ச்சி கூத்தாடி, பேரொலி எழுப்பியதால் பட்டாலி என பெயர் பெற்றது.

இம்மலையை சுற்றிலும், அஷ்ட துர்க்கைகள் காவல் காப்பதாக கூறப்படுகிறது. ஆலாம்பாடி வனசாட்சி (காட்டம்மை), பாப்பினி அங்காள பரமேஸ்வரி, காங்கயம் ஆயி அம்மன், வலுப்பூரம்மன், தங்கம்மன், அந்தனூரம்மன், கரியகாளியம்மன், செல்வநாயகி அம்மன் என எட்டு அம்மன்கள் இம்மலையை சூழ்ந்துள்ளதாக, சிவமலை குறவஞ்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அருணகிரிநாதர் ஒரு திருப்புகழில் “பயிரவி யருள்பட் டாலி யூர்வரு பெருமாளே” என்று பாடியுள்ளார்.
முசுகுந்தன் என்ற அரசன் தீராத நோயால் அவதிப்பட்டார். இதற்கு பல மருந்துகள் உட்கொண்டும் பலன் கிடைக்கவில்லை. அதனால் கௌதமகரிஷி முனிவரிடம் சென்ற முசுகுந்தன், தன் உடல் உபாதையை தீர்க்கும்படி வேண்டினார். சிவன்மலை முருகனை வணங்கினால் உன் வியாதி நீங்கும் என்றார்

கௌதமகரிஷி. முனிவர் கூறியது போல் முசுகுந்தன் சிவன்மலை முருகனை தரிசித்த பின் அவரை வதைத்த நோய் விலகியதாக தல புராணம் தெரிவிக்கிறது.

உமையம்மனின் திருப்பாதங்களில் உள்ள அணிகலன்களிலிருந்து தெறிந்து விழுந்த நவரத்தினங்கள் நவகன்னியராகி, அவர்கள் வயிற்றிலிருந்து முருகனின் போர்ப்படை தளபதிகளாக திகழ்ந்த நவ வீரர்கள் தோன்றியதால் வீரமாபுரம் என பெயர் பெற்றதாகவும் நம்பிக்கை உள்ளது.

இத்தல முருகரின் பக்தையான ஒரு பெண் காசி சென்று நீராட விரும்பியும் காசி செல்ல வசதியில்லாததால் மனம் வருந்த, தம் பக்தைக்காக முருகப்பெருமான் காசித் தீர்த்தத்தை இத்தலத்திற்கே வரவழைத்தார்.

மற்ற திருத்தலங்கள் போலன்றி இங்கு முதல் வழிபாடு முருகப்பெருமானுக்கே. மற்ற திருத்தலங்களில் முதல் வழிபாடு பிள்ளையாருக்கே. நவக்கிரகங்கள் அனைத்தும் சூரியபகவானைப் பார்த்து நிற்கின்றன. சனி பகவான் தனி சன்னதியிலும் எழுந்தருளியுள்ளார். அணையாத தீபம் எரிந்து கொண்டுள்ளது சிறப்பாகும். நவக்கிரக சன்னதியை, ஒன்பது முறை சுற்றி, வழிபட்டு வந்தால் எத்தனை பிரச்சனைகள் இருந்தாலும், அதிலிருந்து விடுபடலாம். திருநள்ளாறு சென்று சனீஸ்வரனை தரிசிப்பதும், சூரிய நாராயணர் கோவில் சென்று சூரியனை வழிபடுவதால் ஏற்படும் சிறப்பும் இங்கு கிடைக்கும்.

சிவன்மலை முருகனைச் சுப்பிரமணியர், சிவசுப்பிரமணியர், கல்யாண சிவசுப்பிரமணியர், காங்கயன், கந்தசுவாமி, வேலன், வேலுசாமி, முத்தய்யன், முருகையன், சிவாசலபதி, குகன், சிவாசலவேந்தன், சிவாத்திரிநாதன், வள்ளிமணாளன், கந்தவேள், குமரன், துரைசாமி, மரகதமயூரன் என்று பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். இப்பெயர்களில் எப்பெயரிட்டு அழைத்தாலும் சுப்பிரமணியர் அதனை மிக உவப்பாக ஏற்றுக்கொள்கிறார். மலையை வணங்கினாலே சிவன்மலையாண்டவரை வணங்கிய பேறு பெறலாம் என்பது ஐதீகம்.

10-13ம் நூற்றாண்டில் இப்பகுதி மிகப்பெரிய வணிக நகரமாக இருந்ததை கோவில் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.! கொங்கு நாட்டின் 24 நாடுகளின் தலைமையானதாக காங்கேய நாடும், அதன் தலைநகராக பட்டாலியூர் சிவன்மலை இருந்ததாம். வீதிகள் தோறும் தேர்கள், அன்னதானத்தில் சிறந்த நாடு; கலை வளரும் நாடு; சிவன் மலையில் சீருடன் தேரோட்டும் நாடு, செல்வம் சிறக்கும் நாடு முத்துரத்தினம் விளையவுள்ள நாடு என பழங்கால பாடல்களில் சிவன்மலையைப்பற்றி குறிப்பு உள்ளது. அதற்கு தகுந்தமாதிரி இப்பகுதியில், அரிய வகை கற்கள், நவரத்தின கற்கள் எடுக்கப்பட்டு, பட்டை தீட்டப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பழங்காலத்தில், இங்கிருந்து நவமணிகள் பெரு வழியில் சென்று, கப்பல்கள் மூலம் ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்தது, நொய்யல் ஆற்றின் கரையில் உள்ள கொடுமணல் ஆய்வு மூலம் தெரிந்துள்ளது.

கடல் மட்டத்திலிருந்து 400 அடி உயரத்தில் மலை அமைந்துள்ளது. 496 படிகள் உள்ளன. அடிவாரத்தில் பாலவிநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. பதினெட்டாம் படியைச் சத்தியப்படி என அழைப்பார். அங்கு வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. இப்பதினெட்டாம்படி புராணப்படி என்றும் அழைக்கப்பெறும்.

இங்குதான் சடைச்சியம்மன் வழிபட்டதும், குடியிருப்பதுமாகும் என்று குறவஞ்சியில் கூறப்படுகிறது. இங்கு அர்த்தமேரு அமைக்கப்பட்டுள்ளது அதன்மேல் திருவடிகள் உள்ளன. சென்னி மலையைப்போலவே சிவன் மலைக்கும் ஆலயத்திற்கு வண்டியில் செல்ல முடியும், தேவஸ்தான பேருந்தும் உள்ளது. அதிகாலை 5:30 மணி முதல் இரவு 8:00 மணி வரை ஆலயம் திறந்திருக்கும்.

இக்கோயிலின் தலவிருட்சமாக தொரட்டி மரம் உள்ளது. சிவன்மலையில் இன்றும் ஏராளம் சித்தர்கள் தவம் செய்து கொண்டிருக்கின்றனர். புண்ணியம் செய்தோர் கண்களில் அவ்வப்போது சில சித்தர்கள் புலப்படுவதுண்டு.

தல இறைவன் : சுப்பிரமணிய சுவாமி.

தல இறைவி: வள்ளி, தெய்வானை.

தல விருட்சம் : தொரட்டி மரம்.

தல தீர்த்தம் : காசி தீர்த்தம்.

இராஜகோபுரம், தீபஸ்தம்பம், கொடிமரம், முன் மண்டபம், சுற்று பிரகாரம், மூலவர் என ஆகமவிதிப்படி கட்டப்பட்ட இக்கோவில் முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டது. சிவன்மலை கோயிலுக்கு வெளியே தீபத்தூண் உள்ளது. அத் தூணின் அடிப்புறத்தில், விநாயகர் சூலம், மயில் மற்றும் தண்டபாணி வடிக்கப்பட்டுள்ளது. கோயிலின் உள்ளே தெற்குப் பிரகாரத்தில், கைலாசநாதர், ஞானாம்பிகை சன்னிதிகள் கிழக்கு முகமாக உள்ளன.

நவகன்னியருக்கும், நவவீரர்களுக்கும், இங்கு தவமிருந்த உமாதேவியாருக்கும் கைலாசத்திலிருந்து எழுந்தருளி அருள் கொடுத்தவர் கைலாசநாதர். முன் மண்டபத்தின் இரு புறமும் நவ கன்னியரையும், நவ வீரர்களையும் தரிசிக்கலாம். மேற்குப் பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் கன்னி மூலை விநாயகரும், வடமேற்கில் தண்டபாணியும், கருவறையின் வெளிச்சுவற்றில் தட்சிணாமூர்த்தி, துர்க்கை, துர்க்கைக்கு எதிரில் சண்டிகேஸ்வரர் அருள் பாலிக்கின்றனர்.

சனிபகவானுக்குத் தனி சன்னிதியும் அது தவிர நவக்கிரக சன்னிதியும் அடுத்து பைரவர் சன்னிதியும் அமைந்துள்ளன. சூரியனை நோக்கியவாறு மற்ற கிரகங்கள் எழுந்தருள்வது ஒரு தனி சிறப்பு. பிரகாரம் சுற்றிவந்து, கொடிமரம், மயில்வாகனக் குறடு, பலிபீடம் கடந்தால், சுமுகர், சதேகர் துவாரபாலகர்கள். அடுத்து உள்ளே கருவறையில் சுப்பிரமணிய சுவாமி வள்ளி சமேதராக அருட்காட்சி தருகின்றார். அணையா விளக்கு உள்ளது. சுவாமிக்கு வலப்பக்கத்தில் அம்பாள் கல்யாண கோலத்தில் அருளுகின்றனர். உட்பிரகாரத்தில் சிவவாக்கியர் குகை. சைதன்ய ரூபத்தில் இன்றும் சிவவாக்கிய சித்தர் அமர்ந்த நிலையில் வள்ளியோடு சுப்ரமணியர் அருளும் காட்சி உள்ளது.

அணையாத தீபம் எரிந்து கொண்டுள்ளது சிறப்பாகும். அருகில் நடராஜர் சபை, சிவகாமசுந்தரியுடன் அருள் பாலிக்கின்றார் ஆடல் வல்லான்.

சிவன்மலை ஆண்டவரை அருணகிரி நாதர் இவ்வாறு பாடியுள்ளார்.

இருகுழை யிடறிக் காது மோதுவ
பரிமள நளினத் தோடு சீறுவ
இணையறு வினையைத் தாவி மீளுவ ...... வதிசூர
எமபடர் படைகெட் டோட நாடுவ
அமுதுடன் விடமொத் தாளை யீருவ
ரதிபதி கலைதப் பாது சூழுவ ...... முநிவோரும்
உருகிட விரகிற் பார்வை மேவுவ
பொருளது திருடற் காசை கூறுவ
யுகமுடி விதெனப் பூச லாடுவ ...... வடிவேல்போல்
உயிர்வதை நயனக் காதல் மாதர்கள்
மயல்தரு கமரிற் போய்வி ழாவகை
உனதடி நிழலிற் சேர வாழ்வது ...... மொருநாளே
முருகவிழ் தொடையைச் சூடி நாடிய
மரகத கிரணப் பீலி மாமயில்
முதுரவி கிரணச் சோதி போல்வய ...... லியில்வாழ்வே
முரண்முடி யிரணச் சூலி மாலினி
சரணெனு மவர்பற் றான சாதகி
முடுகிய கடினத் தாளி வாகினி ...... மதுபானம்
பருகினர் பரமப் போக மோகினி
அரகர வெனும்வித் தாரி யாமளி
பரிபுர சரணக் காளி கூளிகள் ...... நடமாடும்
பறையறை சுடலைக் கோவில் நாயகி
இறையொடு மிடமிட் டாடு காரணி
பயிரவி யருள்பட் டாலி யூர்வரு ...... பெருமாளே.

பொருள்: காதிலுள்ள இரண்டு குண்டலங்களையும் மீறி காதுகளை மோதுவன. மணம் மிகுந்த தாமரை மலர்களை சீறிக் கோபிப்பன. நிகர் இல்லாத முந்தை வினைகளையும் தாவி மீள்வன. மிக்க சூரத்தனம் உடைய யமனுடைய தூதர்களாகிய சேனை அஞ்சிப் பின்னடைந்து ஓடும்படி வழி தேடுவன. அமுதமும் விஷமும் கலந்தன போன்று ஆளையே அறுத்துத் தள்ளுவன. இரதியின் கணவனான மன்மதனுடைய காம சாஸ்திர நூலிலிருந்து சிறிதும் பிறழாத வண்ணம் எவரையும் சூழ்வன. முனிவர்களும் காமத்தால் உருகும்படியாக, தந்திரத்துடன் கூடிய பார்வையை உடையன. பொருளைக் கவரும் பொருட்டு ஆசை மொழிகளைப் பேசுவன. யுக முடிவு தானோ என்று சொல்லும்படி சில சமயம் போர் விளைவிப்பன. வேலாயுதத்தைப் போல உயிரை வதைக்கும் இத்தகைய கண்களை உடைய ஆசை மாதர்களின் காம மயக்கம் தருகின்ற பெரும் பள்ளத்தில் போய் விழாமல் இருக்கும் பொருட்டு, உனது திருவடியின் நிழலில் பொருந்தி வாழும் வாழ்க்கை என்றொரு நாளாவது கிடைக்குமோ?

நறு மணம் வீசும் மாலையை அணிந்து, உனக்கு வாகனம் ஆகும்படி விரும்பின பச்சை ஒளி வீசும் தோகையைக் கொண்ட சிறந்த மயிலின் மேல், முற்றின ஒளி கொண்ட சூரியனுடைய ஒளியைப் போல் விளங்கி வயலூரில் வாழும் செல்வமே.

வலிமை வாய்ந்த முடியை உடைய, போர்க்கு ஏற்ற சூலாயுதத்தை ஏந்தியவள், மாலையை அணிந்தவள், உனக்கு அடைக்கலம் என்று நிற்கும் அடியார்களுக்கு பற்றாக இருக்கும் குணத்தினள், வேகமாகச் செல்லும் கடினமான பெண்சிங்க வாகனம் உடையவள், கள்ளுணவை உண்பவர்களுக்கு மேலான போகத்தை அளிக்கும் அழகி, அரகர என்று நிரம்ப ஒலி செய்பவள், சியாமளப் பச்சை நிறத்தை உடையவள், சிலம்பு அணிந்த கால்களை உடைய காளி, பேய்கள் நடனமாடும், பறைகள் ஒலிப்பதுமான, சுடு காட்டுக் கோயிலின் தலைவி, சிவ பெருமானோடு, அவரது இடப்பாகத்தில் இருந்துகொண்டே, காரணமாக நடனம் செய்பவள், அத்தகைய பைரவியாம் பார்வதி தேவி பெற்றருளியவனும், பட்டாலியூரில் (சிவன்மலையில்) வீற்றிருப்பவனுமான, பெருமாளே.

திருமணத் தடை, குழந்தை பாக்கியம், தொழில் மேன்மை, நோய் பாதிப்பு என அத்தனை பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கும் அற்புதமலையாக விளங்குகிறது . மலை மேல், சுரலோக நாயகி சமேத ஜூரஹரேசுவரர் எழுந்தருளியுள்ளார். காய்ச்சல் வந்தவர்கள் மிளகு ரசம் வைத்து, இங்கு வந்து பூஜை செய்து உண்டால், காய்ச்சல் நீங்கும் என்ற ஐதீகம் உள்ளது.
வேறெந்த முருகன் கோவில்களிலும் இல்லாத வகையில் பக்தர்கள் பிரார்த்தனை மேற்கொண்டு இங்கு வேட்டு வைத்து வழிபடுகின்றனர். இதற்கு 'பொட்லி' என்று பெயர். இதற்கான இடம் மலை மீது உள்ளது.

உத்தரவுப் பெட்டி : சிவன்மலை கோவில் சிறப்புகளில், பிரசித்தி பெற்றது ஆண்டவன் உத்தரவு பெட்டியாகும். மனிதர்களுக்கு ஏற்படும் இன்னல்கள், மகிழ்ச்சிகளை முன்னதாகவே உணர்த்துவதால், மூலவருக்கு "காரண மூர்த்தி" என்ற பெயர் உள்ளது. சிவன்மலை கந்தன் பாதம் கனவிலும் காக்கும் என்று வழிபடுகின்றனர் பக்தர்கள். சிவன்மலை ஆண்டவர் பக்தர்களின் கனவில் வந்து, தனக்கு இன்ன பொருளை வைத்து பூஜை செய்யுமாறு கூறுவார். அதன்படி, சுவாமியின் பாதத்தில் மலர் வைத்து உத்தரவு கேட்கப்பட்டு, வெள்ளைப்பூ வந்து உத்தரவானதும் குறிப்பிட்ட பொருள் ஆண்டவர் உத்தரவுப் பெட்டியில் வைக்கப்படும். இன்னொரு பக்தரின் கனவில் வந்து அடுத்த பொருளை சுட்டிக்காட்டும் வரை, பழைய பொருளே கண்ணாடிப் பெட்டிக்குள் பக்தர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.




சிவன்மலை ஆண்டவன் உத்தரவுப் பெட்டியில் பக்தர்களின் கனவில் வந்ததாக கூறி ஏர் கலப்பை, தங்கம், ரூபாய் நோட்டு, துப்பாக்கி, மண், ஆற்று மணல், தண்ணீர், உப்பு, பூமாலை, துளசி உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட பொருட்கள் வைத்து பூஜை செய்யப்பட்டுள்ளது. ஆண்டவர் உத்தரவு உடன் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்படும் பொருள் சமுதாயத்தில் முக்கியத்துவம் பெறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. தண்ணீர் வைத்து பூஜை செய்யப்பட்ட காலத்தில் சுனாமி வந்து பாதிப்பு ஏற்பட்டது. ஈரோடில் மஞ்சள் விலை ஏறியபோது மஞ்சளும், வைத்து பூஜை செய்யப்பட்டது. இந்தியா, சீனா யுத்தம் வந்தபோது துப்பாக்கி வைத்து பூஜை செய்தது குறிப்பிடத்தக்கது. பாலை வைத்து பூஜை நடந்த போது பால் தட்டுப்பாடு ஏற்பட்டது.

திருமணத் தடை, குழந்தை பாக்கியம், தொழில் மேன்மை, நோய் பாதிப்பு என அத்தனை பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கும் அற்புதமலையாக விளங்குகிறது சிவன்மலை.

சித்ரா பவுர்ணமி, வைகாசி விசாகம், கந்தர் சஷ்டி, தை பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம் ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. தைப்பூச பெருந்திருவிழா 16 நாட்கள் தேரோட்டத்துடன் சிறப்பாக நடைபெறுகின்றது.

சிவமலை என்று சொன்னால் என்னென்ன நடக்கும் என்று ஒரு பாடல்.

சிவமலை என்றிடத் சிதையுந்தீவினை
சிவமலை என்றிடத் திருவந்தெய்திடும்
சிவமலை என்றிடத் சேரும் புண்ணியம்
சிவமலை என்றிடத் சித்தியாகுமால்.

பின்னொரு சமயம் சிவன் மலை சென்று சுப்பிரமணியரை தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. அப்போது அனைவருக்கும் சுத்தகரிக்கப் பட்ட தண்ணீர் இலவசமாக

வழங்கும் நிலையம் கிராமத்தின் மையத்தில் அமைக்கப்பட்டிருப்பதை பார்த்து பெருமை பட்டேன் இக்காலத்திலும் அனைவருக்கும் நன்மை செய்பவர்கள் உள்ளனர்.

சென்னிமலை தரிசனத்திற்குப் பின் ஈரோடு சென்று அங்கு இரவு தங்க திட்டமிட்டிருந்தோம், விடுதி முன் பதிவு செய்திருக்கவில்லை என்பதால் அதை மாற்றி நேராக திருச்செங்கோடு சென்று அங்கு தங்கினோம். மறு நாள் மாதொரு பாகரின் தரிசனம் முடித்து அடுத்து தரிசித்த தலம், ஆஞ்சநேயரால் கொண்டு வரப்பட்ட சாளக்கிராமம் ஊரின் நடுவில் ஒரு மலையாக திகழ அதன் கிழக்குப் பக்கம் அரங்கநாயகி உடனுறை , கார்கோடகன் மேல் பள்ளி கொண்ட கோலத்தில் அரங்கநாதரும் மேற்கு பக்கம் நாமகிரித்தாயார் உடனுறை நரசிம்மரும், மலையையும் நரசிம்மரையும் நோக்கியவாறு 18 அடி உயர ஆஞ்சநேயர் மேற்கு பக்கமும் அருள் பாலிக்கும் நாமக்கல் சென்று நரசிம்மரையும் , அரங்கநாதரையும், ஆஞ்சனேயரையும் திவ்யமாக சேவித்தோம். வாருங்கள் அன்பர்களே.

# 21 நாமக்கல் நரசிம்மர் தரிசனம்



தங்க கவசத்தில் நாமக்கல் ஆஞ்சனேயர்

கொங்கேழ் தலங்களில் ஆறில் தரிசனம் நிறைவு செய்து சென்னை திரும்பும் வழியில் புகழ் பெற்ற சில தலங்களை தரிசித்தோம். அவற்றுள் முதலாவது நாமக்கல். நாமகிரி என்பதே தமிழில் நாமக்கல் எனப்படுகிறது. சேலத்திலிருந்து 57 கிலோ மீட்டர் தூரத்திலும், கரூரில் இருந்து 43 கிலோ மீட்டர் தூரத்திலும், ஈரோட்டில் இருந்து 50 கிலோ மீட்டர் தூரத்திலும், கோவையில் இருந்து 120 கிலோ மீட்டர் தூரத்திலும், திருச்சியில் இருந்து 85 கிலோ மீட்டர் தூரத்திலும் இத்தலம் அமைந்துள்ளது. தமிழகம் மட்டுமல்லாமல் ஆந்திரம், கர்நாடகாவை சேர்ந்த பக்தர்களும் திரளாக வழிபாடுகளில் பங்கேற்று நாமக்கல் ஆஞ்சநேயர் அருள் பெற்றுச் செல்கின்றனர்.

உலக புகழ்மிக்க நாமக்கல் ஆஞ்சநேயர் ஆலயம்  நகரின் மையத்தில் அமைந்த மலைக்கோட்டைக்கு மேற்கே நரசிம்மர், நாமகிரி தாயார் கோயிலுக்கு நேர் எதிரே உள்ளது. இக்கோவில் திராவிடக் கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்டதாகும். நாமக்கல் ஆஞ்சநேயர் எதிரிலுள்ள நரசிம்மரை திறந்த விழிகளுடன் கைகூப்பி வணங்கிய நிலையில் காட்சி தருகிறார். ஆஞ்சநேயர் சிலை மிகவும் பிரம்மாண்டமானது. பீடத்திலிருந்து 22 அடியும், பாதத்திலிருந்து 18 அடியும் உயரம் கொண்டது. இங்குள்ள ஆஞ்சநேயர் முகம் மிகவும் அழகாக தேஜஸ் உள்ளதாக இருப்பதும் வாலில் மணி இருப்பதும் ஒரு சிறப்பு அம்சம்.

தமிழகம் முழுவதும் இருந்து தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து வணங்கிச் செல்லும் புகழ் பெற்ற கோவில். எதிரே உள்ள லட்சுமி நரசிம்மர் ஆலயத்தின் உப கோவில் இந்த ஆஞ்சநேயர் சன்னதி என்றாலும் இச்சன்னதியில்தான் பக்தர்கள் கூட்டம் அலை மோதுகிறது. இச்சா சக்தி (நாமகிரி அம்மன்), கிரியாசக்தி (நரசிம்மர் ), ஞானசக்தி(ஆஞ்சநேயர்) ஆகிய மூன்று சக்திகளும் ஒருங்கே அமையப்பெற்ற கோவில் இது.




கண்டேன் கற்பினுக்கணியை என்று மொழிந்த சொல்லின் செல்வரை தரிசிப்பதற்கு முன்னர் அவரது பெருமைகள் சிலவற்றைப் பற்றி காண்போம் அன்பர்களே.

இராம கைங்கரியத்திற்காக ருத்ர அம்சமாக அவதரித்தவர் என்பதனால் வைணவ மற்றும் சைவ ஆலயங்களில் எழுந்தருளுபவர்.

வைணவ சம்பிரதாயத்தில் இவரை திருவடி என்று போற்றுகின்றனர்.

தாயாரையும் பெருமாளையும் ஒன்று சேர்த்து வைத்த சுந்தரன்.

விபீஷணின் பிரம்மாஸ்திரத்தினால் மயக்கமடைந்த இலட்சுமணனை காக்க துரோணகிரியிலிருந்து சஞ்சீவி மலையைக் கொணர்ந்து காத்த சஞ்சீவிராயர்.

சூரியனிடம் பாடம் கற்ற நவ வியாக்ரண பண்டிதர்.

இராவணனிடம் நான் இராமதூதன் என்று பெருமையுடன் கூறி, இலங்கைக்கு தீயிட்ட தீரர்.

அலைகடலை அநாயாசமாக கடந்த அசகாய சூரன்.

பஞ்ச பூதங்களும் அனுமனில் எப்படி சம்பந்தம் பெற்றுள்ளன என்பதை கம்பர் இவ்வாறு பாடுகின்றார்.
அஞ்சிலே ஒன்று பெற்றான்; அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்; அவன் எம்மை அளித்துக் காப்பான்

இப்பாடலில் இடம்பெறும் ``அஞ்சிலே" எனும் சொல் ஒரே மாதிரியாக, ஒரே உச்சரிப்பை கொடுத்த போதிலும், ஒவ்வொரு அடியிலும் அவை உணர்த்தும் பொருள் வெவ்வேறானவை. முதல் வரியில் இடம் பெற்றுள்ள அஞ்சிலே என்னும் சொல் பஞ்ச பூதங்களில் ஒன்றான வாயுவின் புத்ரன் அனுமன் என்பதனைக் குறிக்கும். அஞ்சிலே ஒன்றைத் தாவி என்பது, பஞ்ச பூதங்களில் ஒன்றான தண்ணீரைத் (கடல்) தாண்டி அனுமன் இலங்கை சென்றான் என்று பொருள்படும். அஞ்சிலே ஒன்று ஆக ஆரியர்க்காக ஏகி என்பது பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாய மார்க்கத்தில் இலங்கைக்குப் பறந்ததை குறிக்க்கின்றது. அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு -ஐந்தில் ஒன்றான பூமி தேவியின் மகளான சீதையை இலங்கையில் கண்டு என பொருள்படுகிறது. நிறை வரியில் வரும் அஞ்சிலே ஒன்றை வைத்தான் - இலங்கைக்கு ஐந்து பூதங்களில் ஒன்றான நெருப்பை வைத்து எரித்தான் எனப்படுகிறது. அவன் எம்மை அளித்துக் காப்பான் இத்தகைய இராமபக்தனான அனுமன் நமக்கு வேண்டியன எல்லாம் தந்து - அளித்து காப்பான் என்பதே இப்பாடலின் பொருள். எனவே தான் ஆஞ்சநேயராகிய அனுமனை வழிபட்டால் பஞ்சபூதங்களையும் வழிபட்டதற்கு சமம் என்கிறார்கள்.

வாருங்கள் இனி இத்தலத்தில் அனுமன் திருக்கோவில் கொள்ள காரணம் என்னவென்று காணலாம். இராமாயண காலத்தில், சஞ்சீவி மூலிகையைப்

பெறுவதற்காக, இமயத்தில் இருந்து சஞ்சீவி மலையைப் பெயர்த்து எடுத்துவந்தார் ஆஞ்சநேயர். பணி முடிந்ததும் மலையை அதே இடத்திலேயே வைத்துவிட்டு திரும்பினார். அப்படித் திரும்பும் வழியில் இமயமலையில் கண்டகி நதியில் ஒரு பெரிய சாளக்கிராமக் கல்லைப் பார்த்தார். சாளக்கிராமக் கல், பகவான் விஷ்ணுவின் வடிவம் என்பர். அப்படி ஒரு கல்லில் ஸ்ரீநரசிம்மர் எழுந்தருளியிருப்பதைக் கண்ட அனுமன், அப்பெருங்கல்லை வழிபாட்டுக்காகப் பெயர்த்தெடுத்து வான் வழியே பறந்து வந்தார். அந்நேரத்தில் சூரியன் உதயமான படியால், வான்வழியாக வந்து கொண்டிருந்த இங்கு கமல தீர்த்தத்தின் கரையில் நரசிம்ம்மரை தரிசிக்க தவம் செய்து கொண்டிருந்த மஹாலக்ஷ்மி(நாமகிரி) தாயாரின் கையில் ஸ்ரீநரசிம்மர் ஆவிர்பவித்திருந்த அச்சாளக்கிராமத்தைக் கொடுத்தார். தான் நீராடிவிட்டு, திரும்ப வந்து வாங்கிக் கொள்வதாகக் கூறிச் சென்றார். குறித்த சமயத்தில் வந்து விட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சாளக்கிராமத்தை பெற்றுக்கொண்ட தாயார் குறித்த நேரத்தில் அனுமன் திரும்பி வராததால் அச்சாளகிராமத்தை தரையில் வைத்து விட்டார். சந்தியாவந்தனம் முடித்து திரும்பி வந்த ஆஞ்சநேயர் சாளக்கிராமத்தைத் தூக்க முயற்சித்தார். ஆனால் அதைத் தூக்க அவரால் முடியவில்லை. அது பெரிய மலையாக வளர்ந்தது . அம்மலையில் நரசிம்மர் தோன்றினார். தன்னை நோக்கி தவமியற்றிய தாயாருக்கு தரிசனமும் அளித்து அருள் புரிந்தார். இதன் பின்னர், அவர் அருள் பெற்ற அனுமனும் இங்கேயே தங்க நமக்கெல்லாம் அருள் பாலிக்கிறார். அனுமன் ஆலய சுவற்றில் இவ்வரலாறு வண்ண ஓவியமாக வரையப்பட்டுள்ளது. மேலும் உக்ர நரசிம்மர் மற்றும் கார்கோடகனில் பள்ளி கொண்ட அரங்கநாதர் மூலவர் இருவரது ஒவியங்களையும் நாம் தரிசிக்கலாம்.

இக்கோவிலில் தட்டையான நுழைவாயில் கோபுரம் உள்ளது. இங்குள்ள ஆஞ்சநேயரின் சிலை 5ம் நூற்றாண்டில் இருந்து இருப்பதாக நம்பப்படுகிறது. கருவறைக்கு மேலே விமானம் கிடையாது. வெட்ட வெளியில் மழை, வெயில் பட அமைந்துள்ளது. இங்குள்ள ஆஞ்சநேயர் கூப்பிய கரங்களில் ஜப மாலையுடனும், இடுப்பில் வாளுடனும், சாளகிராமத்தால் ஆன மாலையும் அணிந்து பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார். எதனுள்ளும் கட்டுப்படாதவர் அனுமன் என்பதை உணர்த்துவதாய் இத்திருக்கோவிலில் அனுமன் மேலே உயர்ந்து, விமானத்துள் கட்டுப்படாது நின்று அருளுகிறார்.

லோகநாயகனான ஸ்ரீ நரசிம்மரே (எதிரில் உள்ள ஆலயம்) கிரி உருவில் மேல் விதானம் இல்லாமல் இருப்பதால் தாசனான எனக்கும் விதானம் தேவையில்லை என்று ஸ்ரீஆஞ்சநேயர் திறந்த வெளியில் விமானம் இல்லாமல் வெயிலிலும், மழையிலும், காற்றிலும் பொலிவு மாறாமல் சேவை சாதிக்கின்றார். ஒரு பெரிய தூண்களுடன் கூடிய முன் மண்டபம், பகரர்கள் மண்டபத்தில் எங்கு நின்றாலும் அனுமனை தரிசிக்க கூடிய வகையில் அமைந்துள்ளது. கூட்டம் அதிகமில்லை நிம்மதியாக, அருமையாக மாருதியை தரிசித்தோம் .

புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம் அரோகதா |
அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹநுமாத் ஸ்மரணா பவேத் ||

விளக்கம்: புத்தி, பலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், ஆரோக்கியம், விழிப்பு வாக்கு வன்மை இவையனைத்தையும் ஆஞ்சேநேயர் தன்னை வழிபடுபவர்களுக்கு அருள்கின்றார் என்று போற்றப்படும் சொல்லின் செல்வனை திவ்யமாக தரிசித்தோம்.

இராம நாமம் சொல்லி அனுமனை வழிபட சனி பகவானால் ஏற்படும் துன்பம் குறையும்.

அனுமனுக்கு வடைமாலை அணிவித்து தானம் செய்தால் இராகு தோஷம் நீங்கி செல்வ பாக்கியம் பெறலாம்.

அனுமனுக்கு துளசி மாலை சார்த்துவதால் ஸ்ரீராமன் கடாட்சம் பெற்று நற்கல்வி, செல்வம் பெறலாம்.

அனுமனுக்கு வெற்றிலை மாலை சார்த்துவதால் அனைத்து செயல்களிலும் வெற்றி பெறலாம்.

அனுமனுக்கு எலுமிச்சை மாலை சார்த்த வாழ்வில் எதிரிகளின் தொல்லை நீங்கப் பெறலாம்.

அனுமனுக்கு வெண்ணை காப்பு சார்த்துவதால் அவ்வெண்ணை உருகுவதற்கு முன்னர் நாம் நினைத்த காரியம் நடந்துவிடும் என்பதெல்லாம் பக்தர்களின் நம்பிக்கை.

எனவே நாமக்கல் ஆஞ்சநேயர் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், துளசி மாலை சார்த்துதல், தங்க கவசம் சார்த்துதல், தங்கத்தேர் இழுத்தல், வடைமாலை சார்த்துதல், முத்தங்கி சார்த்துதல் வெள்ளிக் கவசம் சார்த்துதல், சந்தனக்காப்பு, 108 தங்க மலர் அர்ச்சனை ஆகிய பல நேர்த்திக் கடன்களை செலுத்துகின்றனர் பக்தர்கள்.

ஆண்டுதோறும் கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மாதங்களில், வெண்ணைய்க் காப்பு அலங்காரம் செய்யப்படுகின்றது. புதிதாக வாகனங்கள் வாங்கும் போதும், மக்கள் வெளி ஊர்களுக்குப் பயணம் மேற்கொள்ளும் போதும் வாகனங்களுடன் வந்து ஆஞ்சநேயரை வழிபட்டு புறப்படுவது வழக்கம்.

நாமக்கல் ஆஞ்சநேயர் தங்க கவச அலங்காரத்தில் பிரம்மாண்டமாக பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறார். பக்தர்கள் தாங்கள் விரும்பும் நாளில் உரிய கட்டணம் செலுத்தி தங்க முலாம் கவசத்தை சாத்துவதால் லட்சுமியின் அருள் கிடைக்கும். வீட்டில் செல்வ வளம் பெருகுவதாக பக்தர்கள் நம்புகிறார்கள். இதன்மூலம் வீட்டில் தங்கம், வைரம், வைடூரியம் பெருகுவதாக பக்தர்களின் நம்பிக்கை. வாழ்க்கையில் பொருளாதார மேம்பாடு அடையும்.

மார்கழி மாதம் அமாவாசையன்று, அனுமத் ஜெயந்தி திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அன்று மட்டும் லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கோயிலில் கூடுகின்றனர். அன்று சுவாமிக்கு ஒரு லட்சத்து எட்டு வடை மாலை அலங்காரம் செய்கின்றனர். ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் கோயிலில் கூட்டம் அலைமோதும். தீபாவளி, பொங்கல், கிருஷ்ண ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, தமிழ், ஆங்கில வருடப் பிறப்பு தினங்கள் என்று வருடத்தின் விசேஷ நாட்கள் அனைத்திலும் கோவில் வளாகத்தில் திரளும் கூட்டத்திற்கு அளவேயில்லை.



மாணவ, மாணவிகள் படிப்பு நன்றாக வரவும், அதிக மதிப்பெண் எடுக்கவும் ஸ்ரீராமஜெயம் மற்றும் “ஸ்ரீஆஞ்சநேயா போற்றி” என்று 108 முறை எழுதி நூலில் கட்டி சன்னதியின் பின்புறம் உள்ள ஜன்னலில் கட்டித் தொங்கவிடுகிறார்கள். அதேபோல தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பலரும் தங்கள் பிரார்த்தனையை ஆஞ்சநேயர் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கூறி பிரார்த்தனை சீட்டு எழுதி தொங்கவிடுகிறார்கள். இப்படி பிரார்த்தனை சீட்டு

எழுதினால் தங்கள் கோரிக்கையை ஆஞ்சநேயர் நிறைவேற்றுவதாக பக்தர்கள் நம்பிக்கையுடன் கூறுகின்றனர்.

வடைமாலை நேர்த்திக் கடன் : முன்பு ஒருசமயம் நவக்கிரகங்களில் அதிக குரூரமான இராகுவும், சனியும் ஸ்ரீ ஆஞ்சநேயரிடம் தோல்வியுற்றதனால் ஆஞ்ச நேயருக்கு கீழ்ப்படிந்தார்கள். பூவுலகில் மாந்தர்களுக்கு சனியாலும், இராகுவாலும் ஏதேனும் இடையூறு ஏற்படின் அவர்களை திருப்திபடுத்துவதின் பொருட்டு இராகுவுக்கு பிடித்த உளுந்தும், சனிக்கு பிடித்த எள் எண்ணெயாலும் செய்த வடைமாலையை ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு சாத்தி வழிபட்டால் சனி, இராகு இவர்களுடைய இடையூறுகளில் இருந்து விடுபடுகிறார்கள் என்பதற்காக ஸ்ரீ,ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்துகிறார்கள் பக்தர்கள். அனுமனை தரிசித்தபின் வாருங்கள் உன்னதமான உக்கிர நரசிம்மரை சேவிக்கலாம்.



புராணங்களில் நாமகிரி என்று குறிப்பிடப்படும் புண்ணிய நகரம், நாமக்கல். இந்நகரின் மத்தியில் ஒரே கல்லால் ஆன குன்று நடுநாயகமாக இருக்கிறது. நகரத்தை பேட்டை, கோட்டை என்று இரு பிரிவுகளாக பிரிக்கிறது. நாமக்கல்லை

திருமாலின் கோட்டை என்று பக்தர்கள் அழைக்கின்றனர். மலையின் கிழக்குப்புறம் அரங்கநாதராகவும், மலைக்கோட்டையின் உள்ளே வரதராஜராகவும், மலையின் மேற்கு பகுதியில் நரசிம்மராகவும் திருமால் அருள்பாலிப்பது வேறு எங்கும் இல்லாத தனி சிறப்பு. இவ்வாறு மூன்று அவதாரங்களில் திருமால் இத்தலத்தில் எழுந்தருளியிருந்தாலும், நரசிம்மரே இங்கு பிரதானம். பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட குடைவரைக் கோவில். அதியேந்திர விஷ்ணுக்ரகம் என்று கல்வெட்டுகளின் மூலம் தெரிய வருகின்றது. இராமசந்திர நாயக்கரால் கட்டப்பட்ட திப்பு சுல்தான் பயன்படுத்திய மலைக்கோட்டை தற்போது தொல்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

வாருங்கள் இனி நரசிம்மரை சேவிக்கலாம்.

நரசிம்மர் ஆலயத்திற்கு வெளியே வியாசராஜ ஆஞ்சநேயர் சன்னதியும் அதை அடுத்து தீபஸ்தம்பமும் அமைந்துள்ளது. எதிரே ஆலயத்தின் முகப்பில் லட்சுமி நரசிம்மரின் சுதை சிற்பம் நம்மை வரவேற்றது, மலையின் மேலே கோட்டை சுவரையும் காணலாம். நுழைவாயிலை கடந்து உள்ளே சென்றால் எதிரே கொடிமர மண்டபம், கருடகம்பமும் பலி பீடமும் தரிசிக்கலாம்.

இடப்புறத்தில் கிழக்கு நோக்கிய நாமகிரித் தாயார் சன்னதி. நரசிம்மரின் சிலை மலையைக் குடைந்து வடிக்கப்பட்டு உள்ளது. நாமகிரி தாயாரின் கோவில் மலையைக் குடைந்து செய்யப்படாமல் தனியாக உள்ளது. நாமகிரி அம்மனின் பெருமை அளவிட முடியாதது. காரணம், இந்த அன்னை கமலாலய புஷ்கரணியில் அமர்ந்து நரசிம்மரை நினைத்து கடும் தவம் செய்து, பல சக்திகளைப் பெற்றதாக வரலாறு சொல்கிறது. எனவே முறைப்படி அவளைப் பணிந்து வணங்கும் பக்தர்களுக்கு, அனைத்து செல்வங்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. நாமகிரி தாயாரின் கருணைக் கண்கள் கவலைகளைப் போக்கும் பேரழகு வாய்ந்தவை. நாமகிரி தாயார், தாமரக் கண்கள் கொண்டவள் தாமரை முகத்தாள், தாமரைக் கரத்தாள். அவள் பாதங்களும் பத்மம். அவள் பிறந்ததும் தாமரையிலே, அமர்ந்திருப்பதும் தாமரையிலே, கைகளில் கொண்டிருப்பதும் தாமரையையே!

உலகம் போற்றும் கணிதமேதை இராமானுஜரின் கனவில் தோன்றி கணக்குகளுக்கு விடை தந்தருளிய தெய்வமாக நாமகிரித் தாயாரை போற்றுகின்றனர். இராமானுஜர் இங்கு வந்து நாமகிரித்தாயாரை வணங்கி அருள் பெற்றதாகவும் கூறப்படுகிறது. எனவே நாமகிரித் தாயாரை வணங்குவதால் கலை, கல்வி, ஞானம், செல்வங்கள் கிடைக்கும் என்பது ஐதீகம்.

கருவறை, அர்த்தமண்டபம் என்று உயரமாக அமைந்துள்ளது தாயார் சன்னதி. மஹா மண்டபமும் உள்ளது. கோட்டை நாமகிரித் தாயாருக்கும் பேட்டை அரங்கநாயகி தாயாருக்கும் நவராத்திரி உற்சவம் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பங்குனி உத்திரத்திற்கு முதல் நாள் நரசிம்மர், ஸ்ரீதேவி, பூதேவி, அரங்கநாதர், அரங்கநாயகித் தாயாருக்கு குளக்கரை மண்டபத்தில் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது. அப்போது தம் திருமண வேண்டுதல் நிறைவேற நினைக்கும் பக்தர்கள் மொய்ப்பணம் வைக்கின்றனர். தாயாரை முதலில் தரிசித்து விட்டு பின்னர் பெருமாளை தரிசிக்கின்றனர் பக்தர்கள்.



நாமகிரித் தாயார் உற்சவர்

சுவாமி சன்னதிக்கு செல்லும் வழியில் கிருஷ்ணர், இராமர், இராமானுஜர், வேதாந்த தேசிகர் சன்னதிகள் அமைந்துள்ளன. படிகளில் ஏறி அழகிய கற்சிற்பங்களைக் கொண்ட தூண்களுடன் கூடிய வாத்திய மண்டபத்தை அடைகின்றோம். இம்மண்டபத்தின் மேற்குப்பகுதியில் பெருமாளை வணங்கிய கோலத்தில் கருடபகவானை சேவிக்கலாம். மஹா மண்டபத்திற்கு அருகே விஷ்வக்ஷேனருக்கு தனி சன்னதி உள்ளது. மஹா மண்டபத்தை அடுத்து மலையுடன் கூடிய கருவறையுடன் சேர்ந்து அர்த்தமண்டபம் அமைந்துள்ளது. அர்த்தமண்டபத்திலிருந்து பெருமாளை தரிசிக்க குழுவாக அனுமதிக்கின்றனர்.

கருவறை ஒரு குடைவரைக் கோவில் ஆகும். மலையே உடலாக பெருமாள் உள்ளார். புராணங்களின் கூற்றுப்படி, இத்திருக்கோவில் தேவசிற்பி விஸ்வகர்மாவால் வடிவமைக்கப்பட்டது என்பது ஐதீகம்.



விஷ்வக்சேனர்

அளந்திட்ட தூணை அவன் தட்ட ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய்
உளந்தொட்டு இரணியன் ஒண் மார்வகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி
பேய்முலை உண்டானே! சப்பாணி.

பொருள்: தானே அளந்து கட்டிய தூணை இரணியன் தட்ட, அவன் தட்டிய இடத்திலேயே வளர்ந்து தோன்றி, ஒளி பொருந்திய நகங்களை உடைய சிங்க உருவாய், இரணியன் மார்பைத் தொட்டு, மார்பு முழுவதும் பிளந்த கைகளால், கை கொட்டிச் சிரி! பேய் முலை உண்டவனே! கை கொட்டிச் சிரி!' என்று பெரியாழ்வார் பாடியபடி எங்கும் உளன் கண்ணன் என்று சிறு குழந்தையான பிரகலாதன் சொன்ன வார்த்தையை நிரூபிக்க அதே நொடியில் தோன்றிய அவதாரம் நரசிம்ம அவதாரம்.

நரசிம்ம சுவாமி மேற்கு நோக்கி வீராசனத்தில் வலது திருவடி ஊன்றி இடது காலை மடித்த கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இரணியனை வதைத்த கரங்களோடு நரசிம்மர் வீற்றிருப்பதால் நரசிம்ம மூர்த்தியின் வலது திருக்கர விரல் நுனிகள் சற்றே சிவந்தாற்போல் காணப்படுகிறது. முன் இடது கை தொடை மீது படர்ந்துள்ளது. பின்னிரு கரங்களில் சங்கு சக்கரம் தாங்கியுள்ளார். மார்பில் மஹாலக்ஷ்மித்தாயார் அகலகில்லேன் இறையும் என்று உறைகின்றாள்.

நாமகிரித் தாயாரின் தவத்தில் மகிழ்ந்து இங்கு கோவில் கொண்டதால் லக்ஷ்மி நரசிம்மர் என்றழைக்கப்படுகிறார். நரசிம்ம மூர்த்தியுடன் பின்னர் பிரம்மாவின் மானச புத்திரர்களான சனகர், சனத்குமாரர், சதானந்தர் மற்றும் சனாதனர் ஆகியோர் சுவாமிக்கு கவரி வீசுகின்றனர். மற்றும் சிவபெருமான், பிரம்மா இரு பக்கமும் நின்று சுவாமியின் உக்கிரத்தை குறைத்துக் கொள்ள வேண்டுகின்றனர் . அதனால் நாமக்கல் திருமூர்த்தி ஸ்தலங்களில் ஒன்று என்றுப் போற்றப்படுகிறது . சூரிய பகவான், சந்திர பகவான் இருவரையும் தரிசிக்கலாம். பெருமாளின் வலப்புறம் தூணைப் பிளந்து வெளியே வந்து இரணியனை அவரது மடியில் கிடத்தி அவன் மார்பை பிளக்கும் உக்ர நரசிம்மரை சேவிக்கலாம். குடவரை என்பதால் அர்த்த மண்டப சுவர் முழுதும் வைகுண்டநாதர், ஓங்கி உலகளந்த உத்தமரான திரிவிக்கிரமர், பூமியை இடந்தெடுக்கும் வராகர், வாமனர், த்ரிவிக்ரமர் நமுசியை விண்ணில் சுழற்றிய புடைப்பு சிற்பங்கள் நரசிம்மரின் இரு பக்கங்களில் இடம் பெற்றுள்ளது. உற்சவர் உபய நாச்சியார்களுடன் எழுந்தருளியுள்ளார்.

எந்தை தந்தை தந்தை தந்தை தம்மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழி வழி ஆட்செய்கின்றோம் திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரி உருவாகி அரியை அழித்தவனை
பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று பாடுதுமே – என்ற பெரியாழ்வாரின் பாசுரம் பாடி லக்ஷ்மி நரசிம்மரை திவ்யமாக சேவித்தோம்.

அனுமனின் தோள் மீதமர்ந்து போருக்குச் செல்லும் இராமபிரானை 'நாமக்குன்ற மீதமர்ந்த நரசிங்கமே' என்று அனுமனை நாமக்கல் மலையாகவும், இராமனை நரசிம்மராகவும் உருவகப் படுத்தி கவிச்சக்ரவர்த்தி கம்பர் பாடியுள்ளார்.

சுவாமியை சேவித்துவிட்டு வெளியே வந்தால் வாத்திய மண்டபத்திலிருந்து கருடன் சன்னதியின் சுவரிலும் அதை அடுத்து உள்ள பலி பீட மண்டபத்தின் விமானத்தில் நடுவே உள்ள ஒரு சாளரத்தின் வழியே ஆஞ்சநேயரை நாம் சேவிக்க முடியும். அனுமனின் திருக்கண்கள் நரசிம்மரின் திருப்பாதங்களை பார்த்தபடி இருப்பது சிற்பக்கலையின் சிகரத்தைத் தொடுகிறது.

அகழ்வாராய்ச்சியின்படி, பல்லவர் காலத்தில் இக்கோவில் கட்டப்பட்டது. இடப்புறம் லக்ஷ்மிநாராயணர் சன்னதி அமைந்துள்ளது. மூலவரின் விமானத்தையும் சேவிக்கலாம்.

இத்தலத்தில் நரசிம்ம ஜெயந்தி உற்சவம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அன்று காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை மூலவர் தரிசனம் கிடையாது. உற்சவ மூர்த்திக்கு அர்ச்சனை, அபிஷேகங்கள். நடைபெறுகின்றது. மூலஸ்தான நரசிம்மமூர்த்திக்கு சுமார் 9மணி அளவில் ஆரம்பித்து மாலை 5.30 மணி வரை நடக்கும் தைலகாப்பு நிகழ்ச்சியில் நல்லெண்ணையால் சுத்தம் செய்து, வேறு புதிய வஸ்திரங்கள் சாத்துப்படி செய்து எம்பெருமானிடத்தில் நித்யபடி உள்ள கவசங்களை தேவஸ்தான பொற்கொல்லர்

மூலம் சுத்தம் செய்து, அதை மறுபடியும் சார்த்துகின்றனர். தூணிலிருந்து நரசிம்மர் தோன்றிய பிரதோஷ நேரமான மாலை 6 மணி அளவில் பெருமாளுக்கு விஷேசமான தீபாராதனை நடைபெறுகின்றது.


கருடன் - சுதர்சனர்

ஜெயந்தி தினத்தில் மாலை 6 மணிக்கு பிறகு பெருமாளை தரிசிப்பவர்களுக்கு பொருளாதாரத்தினுடைய வளர்ச்சி, தோஷங்கள் நிவர்த்தியாகும். உத்யோகம், வாழ்வியலில் நம்முடைய நேர்மையான கோரிக்கைகளை பெருமாள் அனுகிரகம் செய்து கொடுப்பார். சனி, இராகு, கேது, செவ்வாய் போன்ற கிரக உபாதைகள் குறையும். லட்சுமி கடாட்சம் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை .

நரசிம்மருக்கு ஜெயந்தியன்று தைலக்காப்பு, மற்ற மூலவர்களுக்கு வைகுண்ட ஏகாதசியன்று தைலக்காப்பு நடைபெறுகின்றது.

அடியோங்கள் இந்த யாத்திரையில் நரசிம்மரை தரிசிக்க சென்ற போது அவரின் பங்குனிப் பெருவிழாவிற்கான கொடியேற்றம் நடந்து கொண்டிருந்தது. விஸ்வக்ஷேனர், கருடன், சுதர்சனாழ்வார் மற்றும் உற்சவர் பெருமாளை சிறப்பு அலங்காரத்தில் சேவிக்கும் பாக்கியம் கிட்டியது. கொடியேற்றம் நிறைவு பெற்ற பின் அரங்கநாதரை சேவிக்க சென்றோம்.

மலையின் கிழக்கு புறம் அரங்கநாதர் ஆலயம் உள்ளது. இதுவும் ஒரு குடைவரைக் கோவில்தான். அனைத்து தலங்களிலும் ஆதிசேஷனில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாள் இங்கு ஐந்து தலையுடைய பாம்பரசன் கார்கோடகன் மீது படுத்தவாறு பக்தர்களுக்கு சேவை சாதிக்கின்றார் என்பது ஒரு சிறப்பு. அரங்கநாதர் கார்கோடகன் மேல் தெற்கே தலையும் வடக்கே காலும் நீட்டிச் சயனித்திருக்கிறார். கார்கோடகன் முகம் சிம்மம் போல உள்ளது. மூன்று வாசல் வழியாக பெருமாளை தரிசிக்கின்றோம். காலடியில் சங்கரநாராயணர். வலதிருக்கரத்தில் மான், இட திருக்கரத்தில் சக்கரம். திருமங்கையாழ்வார், நாபியில் பிரம்மா. வாமனர், மஹாபலி, த்ரிவிக்ரமர், சீதா இராமர் ஓடத்தில் பயணித்தல், ஜாம்பவான் தமுக்கு அடித்தல் போன்ற அரிய புடைப்பு சிற்பங்களை தரிசிக்கலாம்.




அரங்கநாயகித் தாயார் சன்னதி

இக்கோவிலை மகேந்திர பல்லவன் அமைத்தான். பள்ளி கொண்ட பெருமாள் உருவம் அற்புதமாக வடிக்கப்பட்டுள்ளது. முன் மண்டபத்துக்கு வெளியிடம் மூங்கிலால் செய்த தாழ்வாரத்தைப் போல மலையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. இதன் அழகையும் வேலைத்திறத்தையும் நேரில் காண்பவரே உணர முடியும், வார்த்தைகளில் வர்ணிப்பது கடினம். கோவில் சுவர்களில் திருமால் அவதாரக் கதைகள் அழகொழுகும் சிலைகளாக வடிக்கப்பட்டுள்ளன.

தந்தை காச்யப முனிவரிடம் குறும்பு செய்த கார்கோடகனை, காட்டுத்தீயில் சிக்கி அவதிப்படுமாறு சபித்தார் முனிவர். அவ்வாறு ஒரு சமயம் கார்கோடகன் காட்டுத் தீயில் சிக்க, நள சக்கரவர்த்தி அவனை அதிலிருந்து காப்பாற்றினார். தீயில் இருந்து காப்பாற்றப்பட்ட கார்கோடகன், ஸ்ரீமந்நாராயணனை நோக்கி தவமிருந்தான். நாராயணரும் அவன் முன் தோன்றி, விருப்பம் யாதெனக் கேட்டார் . ஆதிசேஷன் மீது பகவான் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பது போல், அடியேன் மீதும் பள்ளிகொண்டு அருள்பாலிக்க வேண்டும் என வேண்டினான் கார்கோடகன். அவன் விருப்பத்தின்படி, ஸ்ரீரங்கநாதனாக, மலையின் பின்புறம் கார்கோடகசாயியாக காட்சியளிக்கிறார் பகவான் என தல புராணம் கூறுகிறது.

மேலும் கார்கோடகன் தினமும் கமலாலய குளத்திலிருந்து நீர் எடுத்து வந்து நித்ய ஆராதனம் செய்கிறானாம். இதற்கு சான்றாக மலைப் பாறையில் குளத்தில் இருந்து கோவில் வரை பாம்பு ஊர்ந்து சென்ற தடங்கள் காணப்படுகின்றன. மேலும் சங்கரநாராயணரையும் இங்கே தரிசிக்கலாம். அரங்கநாயகித் தாயாருக்கும் தனி சன்னதி உள்ளது. கீழே இறங்கி வந்தால் கமலாலயம். அது அனுமனுக்குத் தாகம் தீர்த்த தீர்த்தக்குளமாகக் கருதப்படுகிறது.

நரசிம்மருக்கும், அரங்கநாதருக்கும், அனுமனுக்கும் ஒரே சமயத்தில் உற்சவம் நடக்கின்றது என்பதால் இங்கு உற்சவருக்கு அலங்காரம் நடந்து கொண்டிருந்ததால் மூலவரை தரிசிக்க இயலவில்லை தனி சன்னதியில் அருள் பாலிக்கும் அரங்கநாயகி தாயாரை மட்டும் இந்த யாத்திரையின் போது தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது.



அரங்கநாதர் சன்னதி

இராமச்சந்திர நாயக்கரால் கட்டப்பட்ட திப்புசுல்தான் பயன் படுத்திய நாமக்கல் மலைக்கோட்டை தற்போது தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதன்மீது ஏறுவதற்கு மலையின் தென்மேற்கு பகுதியில் சிறிய படிக்கட்டு உள்ளது. பாறையை செதுக்கி இப்படிகள் உருவாக்கப்பட்டு உள்ளது.

நாமக்கல் நரசிம்ம சுவாமி மற்றும் ஆஞ்சநேயர் ஆலயங்களின் முக்கிய திருவிழாக்கள் வருமாறு, சித்திரையில் தமிழ் வருடப் பிறப்பு, தெலுங்கு வருடப் பிறப்பு. வைகாசி விசாகம், ஸ்ரீநரசிம்மர் ஜெயந்தி, ஆடி பதினெட்டாம் பெருக்கு, ஆடி பூரத்தன்று ஸ்ரீநாமகிரி தாயர் ஊஞ்சல் சேவை, ஆவணியில் பவித்ரோற்சவம் , ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசியின் அனைத்து சனிக்கிழமைகள், நவராத்திரி உற்சவம், விஜயதசமி, திருகார்த்திகை தீபம் ,மார்கழி மாதம் மூல நட்சத்திரம் அமாவாசை அனுமன் ஜெயந்தி, மார்கழி மாதம் முழுவதும் சிறப்பு வழிபாடுகள்,

வைகுண்ட ஏகாதசி ஸ்ரீஅரங்கநாதருக்கு சிறப்பு வழிபாடுகள், தை அறுவடைத் திருநாள் வருட உற்சவம். பெருவிழா பங்குனி மாதத்தில் தேரோட்டத்துடன் 15 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. நரசிம்மர், அரங்கநாதர், அனுமன் என்று மூன்று சுவாமிகளும் தேரோட்டம் கண்டருளுகின்றனர். நாமக்கல்லில் தரிசனத்தை நிறைவு செய்தபின் சேலம் அருகே உள்ள சிற்பங்களுக்கு புகழ் பெற்ற கைலாசநாதர் ஆலயத்தை தரிசிக்க சென்றோம்.

# 22 தாரமங்கலம் கைலாசநாதர் தரிசனம்



அழகிய கற்சிற்பங்களுக்கு புகழ் பெற்ற இவ்வாலயம் சேலம் மேட்டூர் சாலையில் அமைந்துள்ளது. தமிழகத்தின் அனைத்து பெரிய ஊர்களிலிருந்தும், சேலத்துக்கு பேருந்துகள் மற்றும் இரயில் போக்குவரத்து வசதி உள்ளது. சேலம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்தும், இரயில் நிலையத்திலிருந்தும், பத்து நிமிடங்களுக்கு ஒரு நகரப் பேருந்து வீதம் தாரமங்கலத்துக்கு இயக்கப்படுகிறது.

இவ்வாலயம் ஒரே சமயத்தில் கட்டப்பட்டது அல்ல. 10 ஆம் நூற்றாண்டில் இதன் சில பகுதிகள் இருந்தன. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கெட்டி முதலி அரச பரம்பரையினர் இக்கோவிலை பின்னர் விரிவு படுத்திக் கட்டியுள்ளனர். பிற்காலத்தில் மும்முடிச் சோழனும், சீயாழி மன்னனும் இக்கோயிலைப் புதுப்பித்து திருவிழாக்களைக் கொண்டாடி வந்துள்ளனர். வணங்காமுடி மன்னர் காலத்தில் இக்கோவில் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கோவிலைச் சுற்றி

மிகப்பெரிய கற்மதிற்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இது 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

ஆலயத்தின் முன்கோபுரம் 90 அடி உயரத்தில் ஐந்து அடுக்குகளைக் கொண்டது. ஒரு பெரிய தேரைக் குதிரைகளும் யானைகளும் மூலவரை நோக்கி இழுத்துச் செல்வதைப் போன்ற தோற்றத்தில் இக்கோபுரம் அமைந்துள்ளது. கோவில் என்பது இறைவனின் இருப்பிடம் என்பதை தாண்டி மக்களின் பாதுகாப்பு அரண் என்னும் கொள்கையில் இக்கோவில் அமைந்துள்ளது. எதிரி நாட்டு படை தாக்க வரும் போது பொன் பொருள் மக்களை பாதுகாக்கும் வீதம் இக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. இராஜகோபுரம் 90அடி உயரம் கொண்டது வாசல் 20 அடி கொண்ட வேங்கை மரத்தினால் ஆன கதவுகள் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோபுர வாசல் கதவிலும் 60 கூர்மையான உலோக குமிழ்கள் வீதம் மொத்தம் 120 கூரிய உலோக குமிழ்கள் அமைக்கப்பட்டுள்ளது. யானை வைத்து கதவுகளை உடைக்கும் அக்காலத்தில் யானை முட்டி மோதி உடைக்கும் போது அதன் மத்தகத்தை குத்தி கிழித்துவிடும்படி நுணுக்கமாக அமைக்கப்பட்டுள்ளது சிறப்பு. கோபுரத்தை அடுத்துள்ள சிவப்பு பவளக்கல் படிகளில் 5 நிமிடம் அமர்ந்தாலே போதும் நம் உடலில் உள்ள வெப்பம் தணிந்து விடும்.



இத்தலத்திற்கு தாரமங்கலம் என்ற பெயர் ஏற்பட்டதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. சிவபெருமானுக்கும், பார்வதிக்கும் இங்கு திருமணம் நடந்தது என்றும், திருமால் தாரை வார்த்துக் கொடுத்து மணவிழாவினை நடத்தியதால் ‘தாரமங்கலம்’ என்ற பெயர் வந்ததென்றும் கூறுவர்.

இக்கோவிலிலுள்ள இறைவனை சந்திரனும், சூரியனும் வந்து தொழுது செல்வதாகக் கூறப்படுகிறது. மேற்கு பார்த்த இச்சிவன் கோயிலில், உள்ள இன்னொரு சிறப்பு, மாசி மாதம்-9,10,11 ஆகிய மூன்று தேதிகளில் சூரியக்கதிர் மூலவர் இலிங்கத்தின் மீது நேரடியாகப்படும் வகையில் ஆலயம் அமைந்துள்ளது.

இம்மூன்று நாட்களிலும், மாலை ஆறரை மணிக்கு, கிழக்கு நோக்கி வரும் சூரியக்கதிர் இராஜகோபுரத்தின் வழியாக வந்து கொடி மரத்தைத் தாண்டி பிறகு நந்தியின் கொம்பு வழியே கிழக்கு நோக்கி சென்று சிவலிங்கத்தின் மீது மூன்றாம் பிறை வடிவில் விழுகிறது. அதாவது, சூரிய ஒளி மூலஸ்தான சிவலிங்க மூர்த்தி மேல் விழுவதை சூரிய பூஜை என்று கூறுவர். இதை காண்பதற்கு ஏராளமான பக்தர்கள் இவ்வாலயத்தில் கூடுவார்கள். சந்திரனுக்கும், சூரியனுக்கும் தாரகாபதி, தாரகன் என்ற பெயர்கள் இருப்பதால் தாரமங்கலம் என்ற பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவார்கள்.

கிபி 12 ஆம் நூற்றாண்டில் கெட்டி முதலியார் இப்பகுதியை அரசாண்டு வந்தார், அப்போது பசுக்கள் தினந்தோறும் மேய்ச்சலுக்கு செல்லும் போது ஒரு பசு மட்டும் குறிப்பிட்ட புற்றினில் தினமும் பால் சுரக்கிறது என்று தகவல் வந்தவுடன் அவர் அப்புற்றை தோண்டி பார்த்தபோது சிவலிங்கம் காணப்பட்டது, பிறகு அவர் அங்கே வழிபாடு செய்ததாகவும், பிறகு வந்த மன்னர்கள் கோவில் எழுப்பியதாகவும் வரலாறு கூறப்படுகிறது.

இக்கோவிலை, முதலில் கட்டத் துவங்கியவர் மும்முடி கட்டிமுதலி என்பவராவார், அவருக்கு பிறகு, சீயாளமுதலி அவருக்கு பிறகு வணங்காமுடி கட்டிமுதலி என்பவர் கட்டி முடித்தார் என்று கூறப்படுகிறது. அதற்கு அடையாளமாக மைய மண்டபத்தின் முன்பாக மூன்று பிள்ளயார் சிலைகள் வைத்து வழிபடப்படுகிறது, இம்மூன்று சிலைகளும் மூன்று தலைமுறைகளை குறிக்கிறது.



முற்றிலும் கல்லாலான விநாயகர் சன்னதி

கோவில் வளாகத்தில் சித்தி விநாயகர் சன்னதி இருக்கிறது. இது ஒன்பதே கருங்கற்களால் அமைக்கப்பெற்றது. கல்மேடை அமைக்கப்பட்டு, அதன்மீது

விநாயகர் சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. விமானம் வரை முழுதும் கற்களால் ஆனது. கோவிலின் வேலைகள் நடந்து கொண்டிருக்கும் போது சிற்பியின் மகனான சிறுவன் இந்த ஒன்பது கல் கோவிலைக் கட்டியதாக ஒரு வரலாறு கூறப்படுகிறது.

இக்கோவிலுக்கு கிழக்கே அதாவது பேருந்துநிலையம் அருகில் ஒரு தெப்பக்குளம் இருக்கிறது. இக்குளத்தில் சிவந்த கற்களால் கட்டப்பெற்ற கைப்பிடிச் சுவர்கள் சுற்றிலும் இருக்கின்றன. குளத்தின் நடுவில் நீராழி மண்டபம் உள்ளது. இக்குளத்து தண்ணீரை ‘கங்கை தீர்த்தம்’ என்கிறார்கள். ஏனென்றால், மூலவர் கைலாசநாதருக்கு அபிஷேகம் செய்யும் பால், இளநீர், திரவியங்கள் நேரடியாக அங்கிருந்து குழாய் மூலம் இக்குளத்திற்கு வந்து சேரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே இதனை கங்கை தீர்த்தம் என்கிறார்கள். இரண்டாவது கோவில் தெப்பகுளம் எண்கோண வடிவில் அமைந்துள்ளது. இதன் சிறப்பு என்னவென்றால் ஒரு மூளையில் நாம் கல் எறிந்தால் அதன் எட்டு பக்கமும் மோதி மீண்டும் பழைய இடத்தை வந்தடையும்.

கடந்த ஐநூறு ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழகத்தில் புதிதாக கோவில் கட்டுவதற்காவோ அல்லது சிற்பங்கள் செய்வதற்காகவோ கோவில் நிர்வாகிகளிடம், சிலை வடிக்கும் சிற்பிகள் ஒப்பந்தம் செய்து தாம்பூலம் வாங்கும் போது, தாரமங்கலம், தாடிக்கொம்பு, பேரூர், பெரியபாளையம் கோயிலில் உள்ள சிற்பங்கள் நீங்கலாக மற்ற கோவில்களில் உள்ளதை போன்ற சிற்பங்களை நாங்கள் செய்து கொடுக்கிறோம் என்று என்று சொல்லித்தான் இன்றளவும் ஒப்புதல் கொடுக்கிறார்கள் என்பதிலிருந்து இக்கோவிலில் உள்ள சிற்பங்களின் சிறப்பை நாம் உணரலாம். கல்லில் கலை வண்ணம் மட்டுமல்ல கதையும் சொல்லியிருக்கிறார்கள் அக்கால சிற்பிகள். வாருங்கள் அச்சிலைகளின் நுணுக்கத்தை இரசிக்கலாம்.

ஆலயத்தின் உட்பிரகார தூண்கள் எல்லாவற்றிலும் அற்புதமான சிற்ப வேலைப்பாடு அமைந்த திருவுருவங்கள் காணப்படுகின்றன. உலகத்திலேயே மிகச்சிறிய உயிரினமான எறும்புகள் நுழைவதற்காக துளைகளை விட்டு செதுக்கிய சிலை இக்கோவிலில் உள்ளது. எறும்புகள் நுழைந்து வரும் அளவுக்கு மட்டுமே துவாரம் உள்ள ஒரு மனிதனின் முகம் அமைக்கப்பட்டுள்ளது. ஊர்ந்து கொண்டிருக்கும் எறும்புகள் அச்சிற்பத்தின் காது வழியாக உள்ளே சென்று பின்னர் மூக்கு வழியாக வெளியே வரலாம். பிறகு தாடியில் உள்ள துவாரங்கள் வழியே உள்ளே நுழைந்து மறுபக்கம் சென்று மற்றொரு காது வழியாக வெளியே செல்லும் வகையில் நுண்ணியதான துவாரங்களைக் கொண்டதாகக் கல்லில் சிலை செதுக்கியுள்ளனர்.

வளைந்த வாளுடனும், நீண்ட தாடி, தலைப்பாகையுடனும் படை எடுத்து வரும் மாலிக்கபூரின் வீரர்கள், அதை எதிர்த்து குறுவாள், கேடயத்துடன் எதிர்கொள்ளும் தமிழக மன்னர்களின் போர்க் காட்சிகள் பல செதுக்கப்பட்டுள்ளது. சோழ, பாண்டிய நாடுகளில் இருந்த செல்வங்களை எல்லாம் கொள்ளையிட்ட பின்னர்

அவற்றைத் தன்னுடன் வந்திருந்த யானை மற்றும் ஒட்டகங்களின் மீது பொதி மூட்டையாய் ஏற்றிக் கொண்டு திரும்பிச் செல்லும் காட்சியும் சித்திரங்களாக உள்ளது. தன்னுடைய தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் மாலிக்கபூரை இப்பகுதியில் வழிமறித்துத் தாக்குதல் நடத்த கெட்டி முதலியின் வீரர்கள் போர் வியூகம் அமைத்துள்ள காட்சியும், பின்னர், மதுரையில் கொள்ளையடித்த செல்வங்களை எல்லாம் யானை மற்றும் ஒட்டகங்களின் மீது ஏற்றிக் கொண்டு வந்த மாலிக்கபூரின் வீரர்கள் மீது தாக்குல் நடத்தி, அவர்கள் கொண்டு வந்த செல்வங்களை எல்லாம் கெட்டி முதலியின் வீரர்கள் பறித்துக் கொண்ட பிறகு, முதுகில் சுமையில்லாமல் யானை ஒன்று மாலிக்கபூரோடு செல்வது போன்ற ஒரு காட்சியும் ஆலயத்தின் கற்சுவரில் செதுக்கப்பட்டுள்ளது.



பெண்ணிற்கு பெரியது மானமா.... தானமா... என்பதை விளக்கும் வகையில் இங்கு உள்ள சிற்பம் ஒன்றை அமைத்துள்ளனர். சிவபெருமான் வயோதிகராக வந்து ஒரு குடியானவப் பெண்ணிடம் “பிச்சை” கேட்கிறார். அப்போது அப்பெண், அன்னத்தை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வெளியே வரும்போது, காற்று வேகமாக வீசியதால் அப்பெண்ணின் மார்புச் சேலை விலகி விடுகிறது. தானத்தை விட “மானமே” பெரிதெனக் கருதிய அவள்;, தன்னுடைய இடக்கையால் மார்புச் சேலையை இழுத்து மூடுகிறார், அப்போது பறந்து வந்த ஒரு கிளி, பெண்ணின் வலது கையிலிருக்கும் அகப்பை சாதத்தை எச்சம் செய்து விடுகிறது. இறைவனுக்கு உணவு எடுத்துக் கொண்டு செல்லும் காட்சி மிகுந்த முக மலர்ச்சியோடும், கிளி சாப்பிட்டு எச்சமாகி விட்டதால், கோபத்தில் முகம் வாடியுள்ள காட்சியும் இரண்டு சிலைகளில் மிக அழகாக வடித்துள்ளனர்.

இம்மண்டபத்தில் இருக்கும் ஒவ்வொரு தூணும், ஒரே கல்லில். செய்யப்பட்டது. முன்னால் இரண்டு சிறிய தூண்களும், பின்னால், ஒரு பெரிய தூணும் இருக்கும் வகையில் அடிக்கப்பட்ட இருபத்தி மூன்று தூண்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில், கணக்கிடமுடியாத சிற்ப வேலைப்பாடுகளை காணமுடிகிறது. சிவனின் பல தோற்றங்களும், பிரம்மாவின் அவதாரங்களும் கல்லில் அற்புதமான சிலைகளாக வடிக்கப்பட்டுள்ளன. இரதி, மன்மதன் சிலையும், இராமர் அம்பு விடும் காட்சியும் மிகவும் நுணுக்கமாக அமைத்துள்ளனர். அதாவது, இராமன் கணையுடன் பதுங்கியிருக்கும் இடத்திலிருந்து பார்த்தால், வாலியும், சுக்ரீவனும் இருப்பது

தெளிவாகத் தெரியும், ஆனால், வாலி இருக்குமிடத்திலிருந்து பார்த்தால், இராமர் பதுங்கியிருப்பது தெரியாது.

அதுபோலவே, இரதியை, மன்மதன் மறைந்திருந்து பார்க்கும் காட்சியும் அமைந்துள்ளது, அன்னப்பறவையின் மீது அமர்ந்திருக்கும் இரதி இருக்குமிடத்திலிருந்து மன்மதனை காணமுடியாது, ஆனால், கிளியின் மீது அமர்ந்திருக்கும் மன்மதன் பார்த்தால், இரதியை தெளிவாக காணமுடியும் வகையில் இச்சிற்பங்களை அமைத்துள்ளார்கள். இரதியின் கூந்தல் ஐந்திழை பின்னலாகவும் அதில் தாழம்பு சூடியிருப்பதும் அப்படியே தத்ரூபம்.

மற்றொரு குறிப்பிடத்தக்க சிற்பம் 18 திருக்கரங்களுடன் நடனமாடும் ஊர்த்துவத்தாண்டவர் சிற்பம். காளியுடன் போட்டியில் ஆடும் போது விழுந்த தனது காதணியை தரையில் இருந்து காலால் எடுத்து மீண்டும் காதுகளுக்கு வைக்கும் காட்சி அழகாக செதுக்கப்பட்டுள்ளது. எதிரே நடனமாடும் காளியும் அற்புதம்.

கம்பா ஆற்றிலிருக்கும் மணலை சிவலிங்கமாக பிடித்து வைத்து பார்வதி பூஜை செய்து கொண்டிருக்கும் காட்சி, ஆதி காலத்தில் ஐந்து தலையுடன் இருக்கும் ஆணவம் கொண்ட பிரம்மாவின் தலைகளில் ஒன்றை சிவபெருமான் கொய்த பிறகு நான்கு முகங்களுடன் இருக்கும் காட்சியும் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. முதலில் ஐந்து தலையுடன் இருக்கும் பிரம்மா அடுத்த சிற்பத்தில் நான்முகனாக காட்சி அளிக்கிறார்.
பார்வதி, பிக்ஷாடணர், மோகினி அவதாரத்தில் மகாவிஷ்ணு, பதஞ்சலி, வியக்ரபாதர் , ஜைமினி முனிவர், ஹயக்ரீவர், அகோர வீரபத்திரர், அக்னி வீரபத்திரர், பிரதோஷ நாயகர், தட்சிணாமூர்த்தி, துவாரபாலகர்கள், மாணிக்கவாசகர். காலபைரவர், ஜுரஹரேஸ்வரர், சிவசூரியன், திருக்கரத்தில் கங்கையுடன் சிவபெருமான் புருஷாமிருகம், அய்யனார், காஞ்சி காமாட்சி ஆகிய எழிலான கலை நுணுக்கம் நிறைந்த பல சிற்பங்களை கண்டு களிக்கலாம்.

சுவாமி கைலாசநாதராக எழுந்தருளியிருப்பதால் மகா மண்டபத்தில் மூலவரின் சன்னதிக்கு முன்புறம் சிவனுக்கும், பார்வதிக்கும் திருக்கயிலையில் நடக்கும் திருமணக்காட்சி அற்புதமாக செதுக்கப்பட்டுள்ளது, மஹாவிஷ்ணு பார்வதியை சிவனுக்கு கரம் பிடித்து கொடுக்கும் காட்சி மூலவர் சன்னதியின் மேலே சிறப்பாக செதுக்கப்பட்டுள்ளது. அம்பாள் சிவகாமியாக அருள் பாலிக்கின்றாள். அம்பாள், கன்னி விநாயகர், பால சுப்பிரமணியர், நடராஜர், சகஸ்ர லிங்கம், நவக்கிரக சன்னிதிகள் உள்ளன. கோஷ்டங்களில் நடன கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை அருள் பாலிக்கின்றனர். சப்த கன்னியரும், சித்தர்களும் தனி கோஷ்டத்தில் எழுந்தருளியுள்ளனர்.

மூலவருக்கு முன்புறம் உள்ள மண்டப மேற்கூரையில், ஏழு அடி நீளமும் அகலமும் கொண்ட ஒரே கல்லில், விரிந்த எட்டு தாமரை இதழ்கள் காணப்படுகிறது, ஒவ்வொரு தாமரை இதழின் மீதும் தன் வாலால் ஒட்டிப் பிடித்தபடி ஒரு கிளிகள்

தொங்கிக்கொண்டு தாமரை பூவின் நடு தண்டின் மீது போட்டிருக்கும் ஒரு கல் வளையத்தை தன் அலகால் பிடித்துக்கொண்டிருக்கும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளது. அக்கல் வளையத்துக்கு கீழே இன்னொரு கல் வளையம் போட்டுள்ளனர், அந்த இரண்டாவது கல் வளையத்தை நீளமான கம்பு இருந்தால் நாம் சுற்றிவிட்டுப்பார்க்க முடியும். இத்தாமரை இதழை சுற்றிலும் அஷ்டதிக்பாலகர்கள் தங்களின் வாகனங்கள் மீது அமர்ந்திருக்கும் சிற்பமும், அவர்களுக்கு அருகில் பணிப்பெண்கள் நிற்கும் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளது. இவற்றின் நடுவே எட்டு கற்சங்கிலிகள் தொங்கவிடப்பட்டுள்ளது. கற்பனைக்கும் எட்டாத இக்காட்சியை பார்த்து பிரமிக்காதவர்கள் யாரும் இருக்கமுடியாது.

மண்டபத்தின் முன்பக்கம் உள்ள தூண்களில் “யாழி” மற்றும் “குதிரை”களில் பயணம் செய்யும் வீரர்களின் காட்சிகள் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. இவற்றில், முதல் “யாழி”யின் வாயில் உள்ளே இருக்கும் கல் செதுக்கி வெளியே எடுக்கப்பட்டு வெற்றிடமாக உள்ளது. இரண்டாவது “யாழி”யின் வாயில் கல் பந்து போலவே உருட்டப்பட்டு, உள்ளே ஒட்டிக்கொண்டிருக்கும்படி அமைத்துள்ளனர். மூன்றாவது “யாழி”யின் வாயில் உள்ளே இருக்கும் கல்லை ஒரு பந்து போன்ற வடிவில் செதுக்கி யாழியின் பற்களுக்கிடையில் வாயிற்குள்ளேயே உருண்டோடும் படி செய்துள்ளார்கள், நான்காவது குதிரையின் வாயில் இருந்த கற்களை இரண்டு பந்துகளாகவும், ஐந்தாவது குதிரையின் வாயிற்குள் மூன்று கற்பந்துகள் இருக்கும் வண்ணம் நேர்த்தியாக சிறப்பாக செதுக்கியுள்ளனர்.

மூலவர் கைலாசநாதர் சுயம்பு லிங்கமாக அருள்பாலிக்கின்றார். அவருக்கு எதிரில் , வலப்பக்கம் சிவகாமி அம்மையாரும், இடப்பக்கம் சுப்பிரமணியரும் தரிசனம் தருகின்றனர். இம்மூவரையும் ஒரே இடத்திலிருந்து தரிசிக்கும் வகையில், முன்பக்கம் ஒரு இடத்தில் குறியிட்டு காட்டப்பட்டுள்ளது.

கோயிலின் உட்பிரகாரத்தில், தெற்கு பார்த்த நிலையில் ஜுரகரேஸ்வரர் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கிறார். இவர் 3 தலை, 3 கால்களோடு இருப்பது சிறப்பு. இவருக்கு ஞாயிற்று கிழமைகளில் விபூதி கொண்டு அர்ச்சனை செய்து அதை தினமும் நெற்றியில் இட்டு வந்தால் தீராத ஜுரமும் தீர்ந்துவிடும் என்கிறார்கள். தவிர மிளகு ரசம் வைத்து சாதம் படைத்து வடைமாலை சார்த்தி அபிஷேகம் செய்தால் காய்ச்சல் மற்றும் தீராத வியாதிகள் குணமடைகின்றன என்கிறார்கள்.



சிம்மத்தின் வாயில் உருண்டைக்கல்

இத்தலத்திலேயே வெகு சிறப்பான சன்னதி பாதாளலிங்கம் சன்னதியாகும், மகாமண்டபத்தின் வடமேற்கு மூலையில், தலத்தின் கீழ்பகுதியில் ஒரு காற்று புக முடியாத அறைக்குள் இருக்கும் இப்பாதாள லிங்கத்திற்கு பச்சை கற்பூரம் வைத்து செவ்வாய் கிழமை தோறும் அபிஷேகம் செய்தால் கல்யாண பாக்கியம், புத்திர பாக்கியம் மற்றும் தொழில் விருத்தி ஆகியவை கை கூடுகின்றன என்கிறார்கள்.
மேலும் இராஜகோபுரத்திற்கு அருகில் அவிநாசி லிங்கேஸ்வரர் சன்னதி அமைந்துள்ளது. அற்புதமான கற்சிற்பங்கள் நிறைந்த ஆலயத்தை தரிசித்த பின் அடுத்து அயோத்தியாபட்டிணத்தை நடையடைப்பதற்கு முன்னர் தரிசிக்க வேண்டும் என்பதால் கிளம்பினோம். தரிசனம் கிடைத்ததா? என்று தெரிந்து கொள்ள தொடர்ந்து வாருங்கள் அன்பர்களே.

# 23 அயோத்தியாபட்டிணம் தரிசனம்



இந்த யாத்திரையின் நிறைவாக அடியோங்கள் தரிசித்த தலம் சேலத்திற்கு அருகில் அமைந்துள்ள அயோத்தி ஆகும். சேலத்தில் இருந்து சுமார் 15 கி.மீ தொலைவில் அமைந்திருக்கிறது, அயோத்தியாபட்டிணம் கோதாண்டராம சுவாமி திருக்கோவில். சேலம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து ஆத்தூர் அல்லது அரூர் செல்லும் பேருந்தில் சென்று, அயோத்தியாபட்டிணம் பேருந்து நிறுத்தத்தில் இறங்கிக் கொள்ள வேண்டும். அங்கிருந்து அரூர் சாலையில், நடந்து செல்லும் தொலைவிலேயே கோவில் அமைந்துள்ளது. சேலம் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து கோம்பூர் செல்லும் நகரப் பேருந்தில் சென்றால், கோவில் முன்பாகவே இறங்கிக்கொள்ளலாம்.

இத்தலம் வடஅயோத்தியின் மகிமைக்கு சற்றும் குறைவில்லாதது என்றே சொல்லலாம். ஆம்! அயோத்தியாவாசிகள் தரிசிப்பதற்கு முன்னதாகவே,

இராமபிரான் தமது பட்டாபிஷேகக் கோலத்தைக் காட்டியருளிய திருத்தலம் இது. இங்குள்ள அருள்மிகு கோதண்டராமர் ஆலயத்திற்கு சென்றால், பட்டாபிஷேக கோலத்தில் நாம் அவரை தரிசிக்கலாம். ஆதிகாலத்தில் இப்பகுதியில் பரத்வாஜ முனிவரின் ஆசிரமம் அமைந்திருந்தது. இலங்கையில் இராவண வதம் முடிந்து திரும்பிய இராமபிரான், இவ்வழியே வரும்போது, முனிவரைச் சந்தித்தார். பரத்வாஜ முனிவரின் வேண்டுகோளின்படியும், விபீஷ்ணனின் பிரார்த்தனையை ஏற்றும் இத்தலத்தில், சீதாபிராட்டியுடன் சேர்ந்து பட்டாபிஷேகக் கோலத்தை காட்டியருளினாராம் இராமபிரான். ஆக, அயோத்தியில் பட்டாபிஷேக கோலத்தில் காட்சி தருவதற்கு முன்பாகவே, இங்கு முதன் முதலாக பட்டாபிஷேகக் கோலத்தில் காட்சி தந்ததால்தான் இவ்வூர் அயோத்தியா பட்டணம் என்று அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர். இங்கு, இராமர் மூன்று நாட்கள் தங்கி இருந்ததாராம். இராமரின் பாதத்தடங்கள் இங்குள்ளதால் இக்கோயிலுக்கு இப்பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது.

வெளியே இராஜகோபுரத்திற்கு எதிரே கொங்கு மண்டலத்திற்கே உரிய விளக்குத்தூண். நெடிதுயர்ந்த ஐந்து நிலை இராஜகோபுரம் நம்மை வரவேற்கின்றது. இராஜகோபுரத்தின் வழியே உள்ளே நுழைந்தவுடன் இராமர் பாதத்தை தரிசிக்கின்றோம். பரத்வாஜ முனிவர் வழிபட்ட இராமர் பாதம் என்கின்றனர். அடுத்து எகாதசி பீடத்தின் மேல் பலி பீடம் மற்றும் உயர்ந்த கவசம் பூண்ட கொடி மரம், கருடாழ்வார் சன்னதி, மற்றும் குதிரை வீரர்களைக் கொண்ட தூண்களைக் கொண்ட மஹா மண்டபத்தை தரிசிக்கிறோம். மண்டபத்தின் மேல் தசவதார சுதை சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. உயர்ந்த மதிலுடன் கூடிய ஒரு விலாசமான பிரகாரத்துடன் ஆலயம் அமைந்துள்ளது. பிரகாரத்தில் நந்தவனம் அமைந்துள்ளது.



## அற்புத சிற்பங்களுடன் முன் மண்டபம்

இவ்வாலயம் மிகச் சிறந்த சிற்பக் கலைக்காக போற்றப்படுகிறது, ஒவ்வொரு கல்லும் ஒரு கவி பாடுகின்றது. இங்குள்ள தூண்கள், தட்டினால் இசை எழுப்பக்கூடிய தனித்தன்மை வாய்ந்தவைகளாகும். திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட இம்மண்டபம், இராமரின் கதையை எடுத்துக்கூறும் வகையில் அமைக்கப்பெற்ற மிகப்பெரும் சிலைகள் பல உள்ளன. கோவில் மகா மண்டபத்தில் மொத்தம் 28 தூண்கள் அழகு செய்கின்றன. இத்தூண்களில் அனைத்தும் மிகுந்த கலைநயத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இராமரின் பெருமைகளைப் பறைசாற்றும் விதத்தில் தத்ரூபமாகச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இராமர், சீதை, இலட்சுமணம், பரதன் சிலைகலையும் தரிசிக்கலாம். அவை ஒவ்வொன்றும் இராமாயண காலத்துக்கே நம்மை அழைத்துச் செல்கின்றன. .



குதிரை வீரத் தூண்

மேலும் கஜேந்திர மோட்சம், கிருஷ்ணன் லீலைகள், தசாவதாரக் காட்சி, ஆகியவற்றை சித்தரிக்கும் சிற்ப வேலைப்பாடுகள் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் உட்புறம் உள்ள 4 தூண்கள் அதிசயத்தக்க

வேலைப்பாடு கொண்டவையாகும். இத்தூண்களை தட்டினால் ஏழு சுரங்களும் இசை ஒலிகளாய் வெளிப்படுவது வியப்பிற்குரிய ஒன்றாகும். இம்மண்டபத்தைக் கட்டிய சிற்பியும், நாக்கு அறுபட்ட நிலையில் தூண் சிற்பமாகத் திகழ்கிறார்! இக்கோவில் பற்றிய இரகசியங்கள் வெளியே தெரியாமல் இருக்க வேண்டியே சிற்பியின் நாக்கு துண்டிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர்

புஷ்பக விமானத்தில் இராமபிரான் வந்து இறங்கியதால் இம்மண்டபமானது தேர் போன்று வடிவமைக்கப்பட்டிருக்கிறது. வடக்கு வாசல், தெற்கு வாசல் என இரண்டு வாயில்கள் இம்மண்டபத்தில் இருக்கின்றன. இதன் மேற் கூரையில் திகழும் இராமாவதார மகிமைகளை உணர்த்தும் ஓவியங்கள், மிக அற்புதம்! இயற்கை மூலிகை வண்ணப்பூச்சுகளைக் கொண்டு வரையப்பட்ட இவ்வோவியங்கள் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. பல வருடங்களை கடந்தும் அவை இன்றும் புதிது போல உள்ளது. மண்டபத்தின் கூரையின் மையத்தில் அஷ்டதிக் பாலகர்கள் மற்றும் கவிழ்ந்த தாமரை அதைக் கொத்தும் கிளிகளுடன் கூடிய சிற்பம் மிக அருமையாக அமைந்துள்ளது. இம்மண்டபத்தை திருமலை நாயக்கர் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. இதை மெய்ப்பிகும் வகையில், மண்டபத்தில் உள்ள கல்தூண்களில் திருமலை நாயக்கர், அவரது மனைவி மற்றும் அவர்களுடைய பிள்ளைகளின் சிற்பங்களைக் காணலாம். நாயக்கர் காலத்து வண்ண மூலிகை ஓவியங்கள் மற்றும் புலிச் சின்னங்கள் கோவில் மண்டப விதானத்தில் வரையப்பட்டு இருப்பதால் நாயக்கர் ஆட்சி காலத்தில் தான் இக்கோவில் கட்டப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகிறது.



அழகிய ஓவியங்கள்

வாருங்கள் இனி மூலவர் பட்டாபிஷேக இராமரை சேவிக்கலாம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் இராமரும் சீதையும் கால் மேல் கால் போட்டு

அமர்ந்திருக்கின்றனர். கருவறையில் இராமபிரான் இடது காலை, வலது காலின் மேல் வைத்து சுகாசனத்தில் கம்பீரமாக அமர்ந்து இருக்கிறார். இடப்பாகத்தில் சீதாதேவி பத்மாசன கோலத்தில் இடது காலை, வலது காலின்மேல் வைத்து, தனது வலது திருக்கரத்தில் தாமரை மலரையும், இடது திருக்கரம் கீழ்நோக்கிய படியும் எழிலாக அமர்ந்து இருக்கிறார். சீதாதேவியின் இடது புறத்தில் இலட்சுமணன் உடைவாள் ஏந்திய நிலையிலும், இராமரின் வலது புறத்தில் பரதன் வெண்கொற்றக் குடையை ஏந்தி நிற்கவும், சத்ருக்னன் வடக்கு பார்த்த நிலையில் வெண்சாமரம் வீசுவது போலவும், அனுமன் இரு கை கூப்பி வணங்கிய நிலையிலும், மேற்கே சுக்ரீவன் வணங்கிய நிலையிலும், அங்கதன் நின்ற கோலத்திலும் காட்சி தருகின்றார். எதிரே விபீடணன் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். சென்னையிலிருந்து இக்கொரோனா காலத்திலும் ஆர்வமாக வந்திருக்கிறீர்களே என்று அனைவரையும் பொறுமையாக சேவை செய்து வைத்தார் பட்டர். இராமரின் மகிமைகளை உணர்ந்த கடையெழு வள்ளல்களில் ஒருவரான- தகடூர் என்ற தருமபுரியை ஆண்ட அதியமான் இத்திருத்தலத்தின் மூலஸ்தானத்தைக் கட்டியதாகச் சொல்கிறார்கள்.

கோயிலின் வடக்கு வாசலுக்கு எதிராக ஆழ்வார்கள் சன்னதியையும், தெற்கு வாசலுக்கு எதிராக சக்கரத்தாழ்வார் சன்னதியையும் தரிசிக்கலாம். ஆஞ்சநேயருக்கும் தனி சன்னதி உள்ளது. சித்ரா பௌர்ணமியன்று இவர் மீது சூரிய ஒளி விழுந்து கொண்டிருந்ததாம் தற்போது கட்டிடங்கள் உயர்ந்து விட்டதால் சூரிய ஒளி மறைக்கப்பட்டு விட்டதாம். இத்திருத்தலத்தில், வடதிசையில் தனியாக சிறு சன்னதியில் உள்ள ஆண்டாளுக்குப் பூரம் நட்சத்திரத்தன்று மாலை 4 மணி முதல் 6 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகிறது. அப்போது ‘திருப்பாவை’ சேவிக்கப்படுகிறது. திருமணத் தடை உள்ளவர்கள், புத்திர பாக்கியம் இல்லாதவர்கள், இக்கூட்டு வழிபாட்டில் கலந்து கொண்டு சூடிக் கொடுத்த சுடர்க் கொடியை தரிசித்தால், தங்களுடைய குறைகள் நிவர்த்தி ஆகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

இத்தலத்தின் தல விருட்சம் - வன்னி மரம். புரட்டாசி மாதத்தின் ஐந்து சனிக்கிழமைகளிலும் சிறப்பு வழிபாடு நடைபெறுகின்றது. மூன்றாவது சனிக்கிழமை இராமர்-சீதை திருக்கல்யாண உற்சவம் நடைபெறும். சித்திரை மாதத்தில் வரும் இராம நவமி அன்று இத்திருத்தலத்தில் மிகப்பெரிய அளவில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அன்று வழங்கப்படும் நீர்மோர் தானம் புகழ்பெற்றது.

’இவ்வாறாக தரிசிக்க நினைத்த இரண்டு தலங்களை தவிர்த்து அனைத்து தலங்களையும் அருமையாக அவனருளால் தரிசித்தோம். பின்னர் அங்கிருந்து கிளம்பி இரவு சென்னை சுகமாக வந்து சேர்ந்தோம். எவ்வாலயத்திலும் கூட்டம் இருக்கவில்லை, யாத்திரைக்குப் பின்னும் யாருக்கும் எவ்வித சுகவீனமும் ஏற்படவில்லை. நேரமின்மையின் காரணமாகவே இரு தலங்களை தரிசிக்க இயலாமல் போனது. இவ்வாறு அவனருளால் இந்த யாத்திரை மிகவும் அருமையாக அமைந்தது. இது வரை தொடர்ந்து வந்த அனைவருக்கும் நன்றி.

சமயம் கிடைத்தால் தாங்களும் சென்று இத்தலங்களை தரிசித்து விட்டு வாருங்கள்.

இப்பகுதிக்கு யாத்திரை செல்லும் அன்பர்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய இரு மிக சிறப்பு வாய்ந்த தலங்கள் கோவைக்கு அருகில் அமைந்துள்ளன இப்பகுதியில் யாத்திரை செய்யும் அன்பர்களுக்கு உதவும் வண்ணம் அத்தலங்களைப் பற்றியும் காணலாம் அன்பர்களே. நாம் தரிசிக்கின்ற முதல் தலம் மேலைச்சிதம்பரம் என்றழைக்கப்படும் தேவார வைப்புப் பாடல் தலமான பேரூர். இப்புத்தகத்தின் நிறைவாக நாம் தரிசிக்கப்போகின்ற தலம் முருகனின் ஏழாம் படைவீடு என்று புகழ் பெற்ற மருதமலை ஆகும். வாருங்கள் முதலில் சுந்தரருக்காக எம்பெருமானும் எம்பிராட்டியும் உழவனும் உழத்தியுமாக நாற்று நட்ட தலமான பேரூரை தரிசிப்போம் அன்பர்களே.

# 24 பேரூர் பட்டீஸ்வரர் தரிசனம்




அழகிய கலை நுட்பங்கள் நிறைந்த அற்புத சிற்பங்கள் கொண்ட காலத்தால் அழியாத கனக சபையில் ஆனந்த தாண்டவ நடராசர் சிவகாமியம்மையுடன் தாண்டவம் முடியும் கோலத்தில் அருள் பாலிக்கும் மேலைச் சிதம்பரத் தலம். காஞ்சி மா நதி என்னும் நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்த தேவார வைப்புத்தலம். சுந்தரர், அப்பர், அருணகிரிநாதர் பாடிய தலம். கச்சியப்ப சிவாச்சாரியார் தலபுராணம் பாடிய தலம். பிறவாப்புளி, இறவாப்பனை, எலும்பை கல்லாக்கும் ஆறு, புழுக்காத சாணம் முதலியன விளங்கும் முக்தி தலம். வாகனமான நாய் இல்லாமல் பைரவர் ஞான பைரவராக அருள் பாலிக்கும் தலம். காமதேனு வழிபட்ட தலம், அதன் கன்று பட்டியின் குழம்புத் தழும்புடன் தேவ தேவன் மஹா தேவன் இன்றும் திருக்காட்சி தரும் தலம். விஷ்ணுவாகிய பட்டிமுனியும், பிரம்மாவாகிய கோமுனியும் வழிபட்ட தலம். இறைவனும் இறைவியும் சேற்றில் இற~ க்லி நாற்று நட்டு உழவின் பெருமையை உணர்த்திய தலம். இவ்வளவு பெருமைகளும் கொண்ட தலத்தை தரிசிக்கலாமா அன்பர்களே?

பாலக்காட்டு கணவாய் வழியாக மலய மாருதம் தவழ்ந்து குளிர்வித்துக் கொண்டிருக்கும் கொங்கு மண்டலத்தின் தலை நகரான கோவை மாநகரின் அருகில் அமைந்த தலம். கோவை மாநகரிலிருந்து சுமார் 10 கி,மீ தூரத்தில் சிறுவாணி செல்லும் வழியில் அமைந்துள்ளது இவ்வளவு சிறப்புகள் பெற்ற இத்தலம்.





இத்திருக்கோயிலின் புராதனப் பெயர் பிப்பலாரண்யம் (பிப்பலம் - அரச மரம்; ஆரண்யம் - காடு). மேலும், காமதேனுபுரி, பட்டிபுரி, ஆதிபுரி, தட்சிண கயிலாயம், தவசித்திபுரம், ஞானபுரம், சுகலமாபுரம், கல்யாணபுரம், பிறவா நெறித்தலம், பசுபதிபுரம், மேலை சிதம்பரம் போன்ற மற்ற பெயர்களும் வழங்கப்படுகின்றன.

சுந்தரர் இரண்டு பாடல்களாலும், அப்பர் பெருமான் மூன்று பாடல்களிலும் இத்தலத்தை பாடியுள்ளனர், அதில் அப்பரின் ஒரு பாடல்

அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார்
   ஆரூரார் பேரூரார் அழுந்தூ ருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்க ளூரார்
   சாந்தை அயவந்தி தங்கி னார்தாம்
நஞ்சைத் தமக்கமுதா வுண்ட நம்பர்
   நாகேச் சரத்துள்ளார் நாரை யூரார்
வெஞ்சொற் சமண்சிறையி லென்னை மீட்டார்
   வீழி மிழலையே மேவி னாரே.

வெள்ளியங்கிரி என்று அழைக்கப்படும் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஐந்து மலைகள் அரணாக சூழ இயற்கை சூழலில் எழிலாக அமைந்துள்ளது பேரூர் பட்டீஸ்வரர் ஆலயம். ஆதி காலத்தில் நாரதர் தக்ஷிண கைலாயமான இத்தலத்தில் உமா மஹேஸ்வரரை வெள்ளியங்கிரியில் வழிபட்டு இங்கு சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்து வழிபட்டார். ஒரு சமயம் பிரம்ம தேவர் படைப்புத்தொழில் செய்யும் போது சோர்வுற்று கண்ணயர்ந்து விட்டாராம். இதை அறிந்த மஹா

விஷ்ணு காமதேனுவை அழைத்து " நீ சிவபெருமானை நோக்கி தவமிருந்து அவருடைய அருள் பெற்று பிரம்மாவினுடைய படைப்புத் தொழிலை மேற்கொள்வாயாக" என்று கட்டளையிட, காமதேனுவும் இமயமலையில் அருந்தவம் இருந்தும் சிவன் அருள் சித்திக்காததால் நாரதர் ஆலோசனைப்படி தக்ஷிண கைலாயமான பேரூரில் வந்து தவம் செய்து வரும் போது ஒரு நாள் அதன் கன்றான பட்டியின் கால் குளம்பு பெருமானின் மேனியில் சிக்கிக் கொள்ள அதை தன் கொம்பினால் விடுவித்தது, இறைவன் தோன்றி இருவருக்கும் அருளினான். பட்டி வழிபட்டதால் தான் பட்டீஸ்வரர் என்று அழைக்கப்படுவேன் என்று வரம் அருளினார். மேலும் முக்தி தலம் என்பதால் இங்கு உனக்கு சிருஷ்டி இரகசியத்தை அருள முடியாது நீ திருக்கருவூர் சென்று தவம் செய் என்று அருளினார். காமதேனு மட்டும் அல்ல, வியாசர், விஸ்வாமித்திரர், யமன் ஆகியோர்கள் இப்பெருமானை வழிபட்டுள்ளார். நான்கு யுகங்களிலும் வெவ்வேறு பெயர்களில் இத்தலம் விளங்கியுள்ளது.



இன்றும் ஐயனின் திருமேனியில் பட்டியின் குளம்பு காய தழும்பையும், காமதேனுவின் கொம்பின் நுனித்தழும்பையும் தரிசிக்கலாம். சிவபெருமான் பட்டீசர், பட்டி நாதர், கோட்டீசர் என்று அழைக்கப்படுகின்றார். இன்றும் கருவறையில் இலிங்கமூர்த்திக்கு பின்புறம் காமதேனுவை தரிசிக்கலாம் . எனவே இத்தலம் காமதேனுபுரம் என்றும் பட்டீஸ்வரம் என்றும் தேனுபுரம் என்றும் அழைக்கப்படுகின்றது. "தழும்புடைய நம்பனை நாத்தழும்பேற ஓம்பினால் ஓடுமே நம் வினை." என்றபடி இத்தலத்தில் ஐயனை தரிசிக்க இனி பிறவி என்பது கிடையாது.

மரகதாம்பாள் என்னும் பச்சை நாயகி உடனுறை பட்டீஸ்வர சுவாமி அருள்பாலிக்கும் இத்தலம் ஒரு முக்தித் தலம் ஆகும். அதற்கு ஐந்து சான்றுகள்

உள்ளன. அவையாவன முதலாவது பிறவாப்புளி, இது பூப்பூக்கும் காய் காய்க்கும் பழம் பழுக்கும் ஆனால் விதை மட்டும் முளைக்காது. இராஜ கோபுரத்தின் எதிரில் உள்ளது இப்பிறவாப்புளி. இரண்டாவது இறவாப்பனை, பெரிய கோவிலின் வடக்கே உள்ள காஞ்சிமா (நொய்யல்) ஆற்றின் தென் கரையிலுள்ள பிரம்மன் பூஜித்த வடகயிலாயம் என்னும் சிறு கோவிலின் வெளி முகப்பில் உள்ளது இந்த இறவாப்பனை, எத்தனை யுகங்களாகவோ இம்மரம் அங்கேயே உள்ளது. பேரூரில் ஆன்மாக்களுக்கு அழியாத நிலையான வாழ்வைத் தந்தருளுபவர் இறைவன். அழியாத்தன்மைக்கு சான்றாக இவ்விறவாப்பனை உள்ளது.

அறவாணர்கள் போற்றிடும் பேரூர் அழியாமெகக்கோர் இடமாகி உறவாம்
அதனால் எமைப்போல உலவாததனுக்கு ஒரு சான்றாங்கு இறவாப்பனை
ஒன்றுள்ளது.

இப்பனை மரத்தின் மேல் பட்டையை கஷாயம் வைத்துக் குடித்தால் தசை சம்பந்தமான நோய்கள் விலகும். மூன்றாவது இத்தலத்தின் சாணத்தில் புழுக்கள் உற்பத்தி ஆவதில்லை. நான்காவது நொய்யல் ஆற்றில் கரைக்கப்பட்ட எலும்புகள் வெண் கற்களாக மாறுகின்றன. எனவே இப்பகுதி மக்கள் தங்கள் இறந்த உறவினர்களின் அஸ்தியை இக்காஞ்சிமா நதியில் கொண்டு வந்து கரைக்கின்றனர். ஐந்தாவது, சிவபெருமான் ஓம் என்னும் ஐந்தெழுத்தை ஓதி தன்னடியில் சேர்த்துக் கொள்வார் என்பதால் இத்தலத்தில் இறப்பவர்கள் வலது காது எப்போதும் மேலே இருக்கும்படி வைப்பர். எனவே இத்தலத்தில் பட்டீஸ்வரரை தரிசிப்பவர்களுக்கு மறு பிறவியில்லை. ஆதி சங்கரர் தன் தாய் முக்தி அடைய இத்தலத்தில் பிரார்த்தனை செய்துள்ளார்.

ஆரூர் அத்தா ஐயாற் றமுதே
அளப்பூர் அம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற்
கருகா வூரானே
பேரூர் உறைவாய்பட்டிப் பெருமான்
பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப் படுவாய்
பாசூர் அம்மானே – என்று இத்தலத்தைப் பாடிய சுந்தரருக்காக ஐயன் ஒரு திருவிளையாடலை நடத்தினார் அது என்ன தெரியுமா? ஐயனும் அம்மையும் சேற்றில் இறங்கி நாற்று நட்ட லீலைதான் அது. ஒரு சமயம் சுந்தரர் பரவையாருடன் ஐயனை தரிசித்து பொருள் பெற பேரூர் வந்தார். எம்பிரான் தோழர் அல்லவா சுந்தரர், பெருமான் அவருடன் சிறிது விளையாட விழைந்தார். சர்வமும் தானே என்று சுந்தரருக்கு உணர்த்த தான் விவசாயியாக பள்ளனாகவும், அம்மை பச்சை நாயகி பள்ளியாகவும், மற்ற சிவகணங்கள் உழவர்களாகவும் நாற்று நட சென்றனர். அப்போது ஐயன் நந்தியிடம் நானும் அம்மையும் வயல் வெளிக்கு செல்கின்றோம், சுந்தரன் வந்தால் எனக்கு தெரியாது என்று சொல்லி விடு என்று சொல்லிவிட்டு சென்றார். திருக்கோவிலுக்கு வந்த சுந்தரர் ஐயனைக் காணாது திகைத்து நந்தியிடம் வினவ, நந்தியும் ஐயனின் ஆணையை

மீறமுடியால் தெரியாது என்று கூறியது ஆனால் சுந்தரர் வண்தொண்டர் அல்லவா எனவே குறிப்பால் வயலைச் சுட்டியதை கிரகித்துக் கொண்டார்.



கூரையில் அற்புத ஓவியங்கள்

வயல் பக்கம் சென்ற சுந்தரர் அங்கு ஈசனும், அம்பாளும் விவசாயி கோலத்தில் சேற்றில் தங்கள் திருப்பாதம் பதித்து நாற்று நட்டுக் கொண்டிருப்பதையும், கூடவே இந்திரன், பிரம்மன், விஷ்ணுவும் வயலில் நீர் பாய்ச்சி, வரப்புகளை சீர்செய்வதையும் கண்டார். அப்போது பார்வதி தேவி பச்சை ஆடை உடுத்தி இந்திராணி, சரஸ்வதி, இலட்சுமியுடன் சேர்ந்து கும்மியடித்து நாற்று நடவுப் பாடல்கள் பாடி நாற்று நட்டுக்கொண்டிருப்பதையும் கண்டு துதித்து நின்றார். விநாயகரும், முருகரும் விவசாயக் குழந்தைகளாய் வந்து அங்கே வயலில் உள்ள ஆமைகளையும், மீன்களையும் எடுத்தெடுத்து வயற்புறத்தில் வீசி குறும்பாக விளையாடிக் கொண்டிருப்பதையும் கண்டார். வயலில் சாதாரண மக்கள் போல சேற்றில் இறங்கி நெல் நாற்று நட்டுக்கொண்டிருந்த ஐயனையும் அம்மையும் வீழ்ந்து வணங்கி, "ஐயனே எமக்காக தாங்கள் இவ்வாறு துன்பப்படவேண்டுமா? என்று அழ, கருணாமூர்த்தியான எம்பெருமானும் சுந்தரனே யாம் உம்முடன் விளையாடவே இவ்வாறு செய்தோம் என்று கோவிலுக்கு சுந்தரருடன் திருக்கோவிலுக்கு திரும்பி வந்து அவருக்கு ஆனந்த தாண்டவக் காட்சியும் தந்தருளினார். பின்னர் சேரமான் பெருமாளிடம் சென்று பொருள் பெறவும் அருள் புரிந்தார். இந்த நாற்று நடவு விழா ஆனி மாதம் இத்தலத்தில்

கொண்டாடப்படுகின்றது. ஆனி மாதத்தில் கிருத்திகை தொடங்கி பூராட நட்சரத்தில் நாற்று நடவும், உத்திரத்தில் நடராசருக்கு திருமஞ்சனமும் கோலாகலமாய் நடைபெறுகின்றது. இனி இவ்வளவு சிறப்புகள் கொண்ட இத்தலத்தை வலம் வரலாமா அன்பர்களே?

இத்தலமே ஒரு கலைப் பொக்கிஷம், கலை நுணுக்கம் நிறைந்த கற்சிற்பங்கள், வர்ண ஓவியங்கள் நிறைந்து காட்சியளிக்கின்றது ஆலயம். கிழக்கு ஐந்து நிலை இராஜகோபுரம் நம்மை வரவேற்கின்றது, கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று இறைவனின் ஸ்தூல ரூபமாக விளங்கும் கோபுரத்தை வணங்கி உள்ளே சென்றால் தூண்கள் நிறைந்த மண்டபம், இம்மண்டபத்தின் கூரையில் பேரூர் புராணத்தின் கதைகளையும், அறுபத்து நாயன்மார்களின் கதைகளையும் விளக்கும் அருமையான ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் இறுதியில் கொடிகம்பம் மற்றும் நந்தியம்பெருமான்.

முதலில் கரிகால் சோழன் கருவறையை கட்டியுள்ளான், பின் 9ம் நூற்றாண்டில் சுந்தரர் இத்தலத்தைப் பாடியுள்ளார். 11-13ம் நூற்றாண்டுகளில் கொங்கு சோழர்கள் அர்த்த மண்டபம் மற்றும் மஹா மண்டத்தை கட்டியுள்ளனர். பின்னர் 14-17 நூற்றாண்டுகளில் ஹொய்சால, விஜயநகர மன்னர்கள் திருப்பணிகள் செய்துள்ளனர் "ஆரூரார் பேரூரார்" என்றும் "பேரூர் பிரம்மபுரம் பேராவூர்" என்றும் அப்பர் பெருமான் தமது ஷேத்திரக்கோவையில் இரண்டு இடங்களில் பாடிப்பரவிய இத்தலத்தில் அவர்களின் பல்வேறு கல்வெட்டுகள் நிறைந்துள்ளன.

மஹா மண்டபத்தில் நுழைந்தால் சிருங்க தீர்த்தத்தை காணலாம். ஐயனின் அபிஷேகத்திற்காக காமதேனு தன் கொம்பினால் (சிருங்கம்-கொம்பு) உருவாக்கிய இத்தீர்த்த நீரே பயன்படுத்தப் படுகின்றது. கருவறையில் காமதேனுக்கும் பட்டிக்கும் அருளிய பரமன் இலிங்க ரூபத்தில் கிழக்கு திருமுக மண்டலத்துடன் அருட்காட்சி தருகின்றார். ஒரு கன்றுக்கும் அருளிய ஐயனின் எளிமையை என்னவென்று சொல்லுவது. அவரை ஐந்தெழுத்து நாமத்தால் மனதார வணங்கி முதல் பிரகாரம் வலம் வந்தால் 63 நாயன்மார்களை தரிசனம் செய்கின்றோம், சக்தியின்றி சிவமில்லை என்பதன் அடிப்படையில், சிவன்கோயில்களில் மூலஸ்தானத்திற்குள்ளேயே ஒரு அம்பிகை இருப்பாள். இவளை வெளியிலிருந்து தரிசிக்க முடியாது. 'சிவனின் மனதிற்குள் இருப்பவள்' என்ற பொருளில் இவளை "மனோன்மணி" என்று அழைப்பர். இந்தக் கோயிலை பொறுத்தவரை இவளை நம்மால் தரிசிக்க முடியும். பிரகாரத்தில் மனோன்மணி அம்மைக்கு ஒரு சன்னதி இருக்கிறது. மேலும் சூரிய சந்திரர், சகஸ்ரலிங்கம், நாய் வாகனம் இல்லாத ஞான பைரவர் ஆகியோரை தரிசிக்கலாம். கோஷ்டத்தில் துர்க்கை, தக்ஷிணாமூர்த்தி அருள் பாலிக்கின்றனர். விஜய தசமியன்று தக்ஷிணாமூர்த்தி சன்னதியில் குழந்தைகளுக்கு நாக்கில் எழுத்தாணியால் எழுதி அக்ஷராப்பியாசம் செய்வது மிகவும் சிறப்பானதாக கருதப்படுகின்றது.

இரண்டாம் பிரகாரமாம் வெளிப்பிரகாரத்தில் இருந்து ஐயனின் விமானத்தை அற்புதமாக தரிசனம் செய்யலாம். அஷ்டதிக்கு பாலகர்கள் சுதை வடிவத்தில் எட்டு

திசைகளிலும் அருள் பாலிக்கின்றனர். வெளிப்பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் நிருதி விநாயகர், மேற்குப் பகுதியில் சொர்க்க வாசல் மேற்கு நோக்கிய வாயிலைக் கொண்ட மண்டபத்துடன் விளங்குகின்றது. இச்சுற்றில் ஐயன் சன்னதிக்கு பின்புறம் சோமாஸ்கந்த ரூபத்தில் காசி விஸ்வநாதர், வள்ளி தெய்வாணை சமேத முருகர், விசாலாட்சி சன்னதிகள். மேற்கு முகமாக (பழனி முருகன் போல) அருள் பாலிக்கின்றனர் முருகர். அருணகிரி நாதர் இவரை

தீராப் பிணிதீர சீவாத் துமஞான
ஊராட் சியதான ஒர்வாக் கருள்வாயே
பாரொர்க் கிறைசேயே பாலாக் கிரிராசே
பேராற் பெரியோனே பேருர்ப் பெருமாளே - என்று பாடியுள்ளார்.

பொருள்: ஒரு ஜீவாத்மாவிற்கு இருக்கும் பெரிய தீராத நோயான பிறவி நோய் தீர , ஜீவனாகிய ஆத்மவைப் பற்றிய இந்தச் சிற்றுயிர் ஞான நிலை பெற உலகெல்லாம் ஆட்சி செய்யக் கூடிய ஒப்பற்ற உபதேச மொழியொன்றை நீ எனக்கு ஓதி அருள்வாயாக. பெரிய உலகத்தின் இறைவன் சிவனின் புதல்வன் முருகனே, என்றும் இளையவனே, குன்று தோறாடும் குமரனே, முருகன் எனும் பெரும் பெயர் பெற்றவனே பேருரில் வாழ்பவனே.

பெரிய உலகத்தின் இறைவனின் மிகப்பெரிய பெயருடைய முருகன் பெரிய நோயான பிறவி நோயை பெரிய ஊரான பேரூரில் தீர்ப்பார் என்பதுதான் இத்திருப்புகழ் பாடலின் அதி உன்னத செய்தியாகும்.

தங்கள் உறவினர்கள் யாரேனும் அகால மரணமடைந்து ஆன்மா சாந்தியில்லாமல் அலைந்து வந்தாலும், ஜாதகத்தில் எத்தகைய பித்ரு சாபங்கள் இருந்தாலும் பேரூர் சென்று இத்திருப்புகழைப் பாடி ஒரு மோட்ச தீபத்தை ஏற்றினால் நிச்சயம் அச்சாபங்கள் நீங்கும். முருகர் சன்னதிக்கு அருகில் உள்ள வில்வ மரத்தடியில் கோரக்க சித்தர் அருவ வடிவில் உள்ளார். வடகிழக்கு மூலையில் யாகசாலை அமைந்துள்ளது.

இச்சுற்றில்தான் அம்பாள் மரகதவல்லி என்னும் பச்சைநாயகி தனிக்கோவிலில் அருட்காட்சி தருகின்றாள். அம்மையும் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் எழிலாக அபய வரத ஹஸ்தங்களுடனும் அங்குசம், பாசம் ஏந்தி அருள் பாலிக்கின்றாள். விவசாயியாகச் சென்ற சிவனுடன் வயலில் வேலை செய்ததால், இத்தல அம்பிகைக்கு பச்சைநாயகி என்று பெயர் என்பார்கள். நல்ல மகசூல் பெறவும், பயிர்கள் குறையின்றி செழிப்பாக வளரவும் இங்கு விதை நெல், தானியத்துடன் பூஜிக்கிறார்கள். அம்மன் விமானம் ஒரு கலசத்துடனும், நந்தி வாகனத்துடனும் உக்ரமில்லாத வடிவாக ஈஸ்வரி ரூபமாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது ஒரு தனி சிறப்பு. அம்மனின் கருவறையின் முன்மண்டபத்தில் வலப்புறம் துர்க்கை சன்னதியும். இடப்புறம் ஸ்ரீதேவி, பூதேவி சமேத வரதராஜப்

பெருமாளும் அருள் பாலிக்கின்றனர். அம்மனின் தூண்கள் நிறைந்த இம்மஹாமண்டபத்தில் அஷ்டலக்ஷ்மி மற்றும் தசாவதார ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இப்பிரகாரத்தில் ஈட்டி மரத்தாலான ஆஞ்சனேயர் சன்னதியும் உள்ளது. இவளின் ஆலயத்தின் முன்பு சிங்கமொன்று சிலை வடிவில் காட்சித் தருகின்றது. அதன் வாயினுள் உருண்டைக் கல்லொன்று உருளுகின்றது. கல்வெளியில் வராதவாறு சிங்கத்தின் பற்கள் நிற்கின்றன. அற்புதமாக கலை நுட்பத்துடன் காண்போர் வியக்கும் வண்ணம் சிங்கத்தின் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரே கல்லில் செதுக்கப்பட்ட சுழல் தாமரை, நான்குபுறமும் தொங்கும் கல்லால் ஆன சங்கிலிகள். இதுபோன்ற ஏராளமான சிற்பங்கள் ஆலயத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இனி இத்தலத்தின் சிறப்புமிக்க கனக சபையை தரிசிக்க செல்வோமா? சுந்தரர் சிதம்பரத்தில் நடராஜப்பெருமானை தரிசனம் செய்யும் போது

பாரூரும் அரவல்குல் உமை நங்கை அவள் பங்கன் பைங்கண் ஏற்றன் ஊரூரன் தருமனார் தமர் செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான் ஆரூரன் தம்பிரான் ஆருரன் மீகொங்கில் அணிகாஞ் சிவாய்ப் பேரூரர் பெருமானைப் புலியூர்சிற் றம்பலத்தே பெற்றா மன்றே.

என்று பேரூர் பெருமானை நினைத்துப் பாட அங்குள்ளவர்கள் பேரூர் அவ்வளவு சிறப்பானதா? என்று வினவ சுந்தரரும் ஆம் சென்று பாருங்கள் என்று கூற அவர்களும் வந்து ஆடல் வல்லானை கனக சபையில் தரிசனம் செய்து பின் சிதம்பரத்தில் உள்ளது சிற்றம்பலம் இங்குள்ளது அழகிய சிற்றம்பலம் என்று கூறிய பெருமையுள்ளது.

இக்கனகசபை. 17ம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கருடைய சகோதரர் அழகாத்திரி நாயக்கன் நடராஜப்பெருமானின் காலத்தால் அழியாத கனக சபையைக் கட்டினான். வெளியே இருந்து பார்க்கும் போது இச்சபை ஒரு கலச விமானத்துடன் எழிலாக விளங்குவதை காணலாம். மொத்தம் 36 தத்துவங்களை குறிக்கும் வகையில் 36 தூண்களுடன் எழிலாக விளங்குகின்றது கனகசபை. ஒவ்வொரு தூணின் மேல் முகத்தில் ஒரு முக சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. தூணின் மேல் உள்ள சிங்கத்தின் கம்பீரமும் அருமை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக பாவத்தை காட்டுகின்றது. கண், பல், வாய், நெற்றியில் உள்ள குறி, வடிவம் எதுவுமே ஒன்று போல இல்லை, இது சிற்பியின் கை வண்ணத்திற்கு ஒரு எடுத்துக் காட்டு. கனக சபையின் ஒவ்வொரு ஜன்னலிலும் ஒவ்வொரு ஜாலி வேலைப்பாடு நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றது.

கனக சபையில் மூன்று பஞ்சாட்சரப் படிகள் உள்ளன, மஹா மண்டபத்தில் இருந்து கனக சபைக்கு செல்ல உதவும் முதல் பஞ்சாட்சரப் படிகளை தாண்டினால் கூரையில் கல் சங்கிலி, சுழல் தாமரை போன்ற அற்புதங்கள், இருபக்க தூண்களிலும் அற்புதமான சிற்பங்கள்.



அவைகளாவன நிருத்த கணபதி, மூஞ்சூறு வாகனத்தில் நடனமாடிய நிலையில் முதல்வன் கணேசன் தாண்டவ கோலத்தில் அருட்காட்சி தருகின்றார், மூஞ்சூறுவின் காதின் மேல் வலக்கால், மூஞ்சூறு வாகனத்தின் நகங்கள் அப்படியே தத்ரூபம். அடுத்து வீறு மயில் வாகனத்தில் ஆறுமுகன் இளையவன் ஸ்கந்தன். மயிலின் ஒய்யாரமும், மார்புப் பதக்கமும் அருமை.

கனல் உமிழும் கண்களுடன் அக்னி வீரபத்திரர். தக்ஷன் செய்த முறையற்ற யாகத்தை அழிக்க 16 வீரபத்திரர்கள் தோன்றினர். அவர்களுள் இவர் ஒருவர், கண்களும், மீசையும் ஜடாமுடியில் சிலந்தியின் அழகையும் என்னவென்று சொல்ல வார்த்தைகள் தான் இல்லை. தட்சன் யாகம் அழித்த அகோர வீரபத்திரரும் உள்ளார் அவர் கையில் உள்ள வாள், வீசும் வேல் அப்படியே அற்புதம்.

யானையை விரித்து போர்த்துக் கொண்ட கிருத்திவாஸன், யானையின் கால்கள், ஐயனின் திருவடியில் உள்ள யானையின் தலை, ஐயனின் கைகளில் உள்ள ஆயுதங்கள் அனைத்தும் அப்படியோர் அற்புதம். தாருகாவனத்து முனி பத்தினிகளின் கற்பு நிலையை சோதிக்க திகம்பரராய், பிக்ஷாடண கோலம் தாங்கிய பிஞ்ஞகன், குண்டோதரனுடன், நகு வெண்டலை மானுக்கு புல்லுறுத்தும்

அற்புதம், அதை வாங்க இரண்டு கால்களுடன் அது தாவி வரும் பாங்கு, முனி மகளிர் நிறையழிந்த நிலைமையும் அற்புதம்.



நடனத்தில் தனக்கு நிகர் எவருமில்லை என்ற அகந்தையுடன் ஆடல் புரிந்த ஆலங்காட்டிக் காளிக்கு எதிரே அவள் கர்வம் அடங்க தாளொன்றால் பாதாளம் நீள் வலது காலால் தலைக்கு மேல் உள்ள பூவை எடுக்கும் பதினாறு கர ஊர்த்துவ தாண்டவர் வடிவழகை எப்படி வர்ணனை செய்ய, 108 நடனக்கோலங்களுள் இதுவும் ஒன்று. ஐந்து தலை பிரம்மனும், உடுக்கை கொட்டியபபடி விஷ்ணுவும், காரைக்காலம்மையார் அடிக்கீழும், குழந்தையாக முயலகனும் அருமையோ அருமை.

ஊர்த்துவதாண்டவருக்கு எதிரே உள்ள ஆலங்காட்டு காளியை பக்கவாட்டில் இருந்து பார்த்தால் கோபம் தெரியும் அதே ஊர்த்தவதாண்டவரிடமிருந்து பார்த்தால் கண்களில் தோற்று விட்டோமே என்ற நாணம் தெரியும் இவ்வாறு செதுக்கிய சிற்பியின் திறமையை வியக்காமல் இருக்க முடியாது. அம்மையின் ஜ்வாலா மகுடம், கால்களின் கோலம், ஆபரணங்கள், ஆடை அற்புதம் அற்புதம். ஒவ்வொரு சிற்பமும் 6 அடி உயரம், 3 அடி அகலம், ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அருமையான சிற்பங்களை செதுக்கியவர் செம்மனாச்சாரி என்ற சிற்பி, அவர் மறைந்து விட்டார் ஆனால் அவரின் உயிரோவிய சிற்பங்கள் அப்படியே உள்ளன. கம்பி வலையிட்டு பாதுகாத்து வைத்துள்ளனர் இவ்வற்புத சிற்பங்களை.

சிற்பங்களை அடுத்து இரண்டாவது பஞ்சாட்சரப்படி இதன் அருகே யாளியின் வாயும், யானையின் தும்பிக்கையும் இணைவது போன்ற சிலை. அதைத் தாண்டினால் குதிரை வீரன் சிலை ஒரு பக்கத்தில் முழுதாகவும் ஒரு பக்கம்

உடைந்தும் காணப்படுகின்றது. மூன்றாவது பஞ்சாட்சரப்படியில் பட்டி முனி, கோ முனி அம்மையப்பரை சேவிக்கும் நிலையில். பிரம்மனும் விஷ்ணுவுமான இவர்களுக்கு இத்தலத்தில் நடராஜப் பெருமான் ஆனந்த தாண்டவக் கோலக் காட்சி தந்து அருள் பாலித்திருக்கின்றார். மூன்றாவது பஞ்சாட்சரப்படியை தாண்டினால் ஆனந்தத் தாண்டவ நடராஜரையும், அம்மை சிவானந்த வல்லியையும் தரிசனம் செய்யலாம்.



சபையில் ஆனந்த கூத்தர் ஆனந்த தாண்டவம் ஆடி, ஆட்டத்தை நிறுத்தும் கோலத்தில் சிவகாமியம்மையுடன் ஆனந்த தரிசனம் தருகின்றார். ஐயனின் முகத்தில் உள்ள குறும் சிரிப்பு, கதுப்பு கன்னங்கள், சடை பின்புறம் தாழ்சடையாக (சிதம்பரம் போலவே) மொத்தம் பதினாறு சடைகளுள் பதினைந்து கீழ் நோக்கி தொங்குகின்றன, ஒன்று கட்டப்பட்டுள்ளது, குஞ்சித பாதமும் நிலத்தை நோக்கி தாழ்ந்துள்ளது, இடக்கரத்தில் ஊழித்தீ, வீசுகரம், வலக்கரத்தில் உடுக்கை, அபய கரம், முயலகன் மேல் ஊன்றிய பாதத்தில் வார்க்கப்பட்ட நிலையில் சலங்கை உள்ளது. தோளில் துண்டும், இடையில் புலியதளாடையும் அணிந்துள்ளார். ஐயனின் வீசும் கரத்தின்( நீட்டிய) நீர் குஞ்சித பாதத்தின் மேல் (தூக்கிய) பாதத்தின் மேல் விழும் விழும்படியான அற்புதமான அமைப்பில் அருள் பாலிக்கின்றார் கூத்த பிரான். பிரம்மா, விஷ்ணு, அதி உக்ர காளி சுந்தரர் நந்தி ஆகியோருக்கு ஆனந்த கூத்தர் இத்தலத்தில் ஆனந்த தாண்டவத்தை காட்டி அருளியுள்ளார். பர சமய இருள் அழிய ஞான சம்பந்த பெருமானுக்கு தன் முலைப்பால் சுரந்தளித்த மாப்பெரும் கருணை கொண்ட சிவகாமியம்மை வலக்கரத்தில் நீலோற்பவ மலர் ஏந்தி, இடக்கரம் டோலஹஸ்தமாக அருள் பாலிக்கின்றாள்.

இத்தலத்தில் கூத்தப்பிரானை சுற்றி வந்து வழிபட முடியும், அடியேன் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஐயனின் தாழ் சடையை தரிசனம் செய்திருக்கிறேன் நேரிலும் தரிசிக்கலாம் என்று நினைத்து வலம் வந்தேன், ஆனால் தரிசனம் கிட்டவில்லை, அபிடேக காலங்களில் மட்டும்தான் தரிசிக்க முடியும் என்று எண்ணுகிறேன். அம்பலவாணரை வலம் வரும் போது ஜன்னல்

வழியாக துர்க்கையம்மனை நேராக தரிசனம் செய்ய முடிகின்றது. நடராஜரின் மண்டபத்தின் நான்கு தூண்களும் நான்கு வேதங்கள் என்பது ஐதீகம். அவை சிறிது வளைந்து ஐயனை பணியும் நிலையில் உள்ளன.

பொதுவாக நடராஜத் தலங்களில் வருடத்திற்கு ஆறு அபிஷேகங்கள் நடைபெறும், இத்தலத்தில் மொத்தம் பத்து தடவை நடைபெறுகின்றது. தீபாவளி, ஆருத்ரா தரிசனத்திற்கு அடுத்த நான்காம் நாள், பங்குனி உத்திரம் அதை அடுத்த இரண்டாம் நாள் ஆகிய நாட்களே அந்த அதிகப்படியான நாட்கள், பங்குனி உத்திரத்தன்று நடன சேவை தந்தருளுகின்றார் மேலைச் சிதம்பரமாம் பேரூரில் ஆருத்ரா தரிசனமும் மிக சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

காப்புக் கட்டுதலுடன் ஆருத்ரா தரிசன விழா தொடங்குகின்றது. அடுத்த ஒன்பது நாட்கள் காலையும் மாலையும் திருவெம்பாவை விழா நடைபெறுகின்றது. மாணிக்க வாசகர் திருவீதி உலா வருகின்றார். ஒன்பதாம் நாள் இரவு பச்சை நாயகி அம்மன் கிளி வாகனத்தில் எழுந்தருளி திருவீதிவுலா வந்து அருள் பாலிக்கின்றார். அம்மனுக்கு நொய்யலாற்றங்கரையில் நிறை நாழி பூஜை நடைபெற்று பெண்மணிகளுக்கு மங்கல நாண் கயிறு வழங்கப்படுகிறது. இரவு அம்மனும் ஐயனும் அன்னூசல் ஆடி அருளி மாணிக்கவாசகருக்கு அனுக்ரகம் செய்து கயிலாயப் பதவி வழங்கும் விழா நடைபெறுகின்றது. ஆருத்ரா தரிசனத்தன்று காலை 4.00 மணியளவில் ஆனந்த தாண்டவருக்கும் சிவானந்த வல்லிக்கும் அற்புத மஹாபிஷேகம் நடைபெறுகின்றது. பஞ்ச கவ்யம், சந்தனம், மாவுப்பொடி, திருமஞ்சனப்பொடி, பஞ்சாமிர்தம், பால், தயிர், இளநீர், கருப்பஞ்சாறு, பழச்சாறுகள், தேன், பன்னீர் என பல்வேறு திரவியங்கள் நதியாக அபிஷேகமாகின்றது அம்மையப்பருக்கு. தொடர்ந்து விலை உயர்ந்த நகைகள் மலர்களால் அலங்காரம் நடந்து வேத கோஷம், தேவார திருவாசகம் முழங்க மஹா தீபாராதனை நடைபெறுகின்றது. பின்னர் ஐயன் வெள்ளி சப்பரத்திலும், அம்மை தங்க சப்பரத்திலும் வெளிப்பிரகாரமும், பட்டி சுற்றும் மேடையை மூன்று முறையும், இரத வீதி வலம் வந்து அருள் பாலிக்கின்றனர். சொர்க்க வாசல் பூஜை, இராஜ கோபுர வாசல் பூஜை கண்டருளி, கனக சபையின் முன் மண்டபத்தில் ஆருத்ரா தரிசனம் தந்தருளுகின்றனர்.

கிராமங்களில் விழா கொண்டாடும்போது மக்கள் ஒருவருக்கொருவர் மஞ்சள் நீர் தெளித்து மகிழ்வர். இதைப்போலவே இக்கோயிலில் மார்கழி திருவாதிரை விழாவின்போது சுவாமி மீது மஞ்சள் நீர் தெளித்து, பின் அதையே பக்தர்கள் மீது தெளிக்கின்றனர். இந்த மஞ்சள்நீருக்கு, "திருப்பொற்சுண்ணம்' என்று பெயர். இதற்காக பிரத்யேகமாக உள்ள உரலில்மஞ்சளை பொடியாக்குகின்றனர்

இனி இத்தலத்தின் சிறப்பு நாட்களை காண்போமா? தினமும் ஐந்து காலப் பூஜை நடைபெறுகின்றது. ஆனியில் நாற்று நடவு உற்சவம், கார்த்திகை சோமவாரங்களில் காலை சங்காபிஷேகம், மாலை அன்னாபிஷேகம், பங்குனியில் பத்து நாள் பெருவிழா, ஏழாம் நாள் திருத்தேரோட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. பங்குனி உத்திரத்தன்று நடராஜர் உற்சவம்.

திருக்கோவிலுக்கு வெளியே கொங்கு மண்டலத்திற்கே உரித்தான தீப ஸ்தம்பம். இறந்தோர் எலும்பை வெண் கல்லாக மாற்றும் காஞ்சிமா நதி என்னும் நொய்யல் நதியில் அமைந்துள்ள சோழன் படித்துறை அங்கு செல்லும் வழியில் உள்ள அருள்மிகு பட்டி விநாயகர் திருக்கோயில், பட்டி விநாயகரை வழிபட்டால் நினைத்த காரியம் நிறைவேறும். அரசம்பலவாணர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு பட்டீசவரர் கோயிலுக்கு அதன் இருமருங்கும் அமைந்துள்ள வடகயிலாயம், தென் கயிலாயம், திருக்கோயில் ஆகியவை எழிலுடன் அமைந்துள்ளன.

அருகே பித்ருகளுக்கான தர்ப்பணம், அஸ்தி கரைத்தல்  முதலியன செய்யும் மண்டபம் நொய்யலாற்றங்கரையில் அமைந்துள்ளது. காக்கைக்கு சாதம் வைக்கும் போது சிறிது காராபூந்தி தூவி வைக்கின்றனர், அதற்காகவே காகங்கள் வந்து அந்த சாதத்தை உண்கின்றன, பக்தர்களும் தங்கள் முன்னோர்கள் தங்கள் முன்னோர்கள் தங்கள் பிண்டத்தை ஏற்றுக்கொண்டனர்   என்ற மனதிருப்தியுடன் இல்லம் திரும்புகின்றனர்.

இத்தலத்தின். தலபுராணம், பேரூர் புராணம் கச்சியப்ப சிவாச்சாரியர் இயற்றியுள்ளார். மேலும் ஏயர்க்கோன் கலிக்காமர் சரிதத்தில் பெரிய புராணத்திலும், மும்மணிக் கோவையிலும் இத்தலத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இது வரை ஆன்பட்டி பேரூரை தரிசித்தோம் வாருங்கள் இனி மருதமலையை தரிசிக்கலாம்.

# 25 மருதமலை ஆண்டவர் தரிசனம்



கொங்கு மண்டலத்தில் கந்தன் கருணை புரியும் திருத்தலங்களில் சிறப்பு வாய்ந்தது மருதமலை முருகன் கோவில். "குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்" என்பதற்கேற்ப இம்மண்டலத்தில் எண்ணற்ற மலை மேல் அமைந்த குமரன் தலங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று, ஏழாம் படை வீடு என்று போற்றப்படும் அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்ற மருதமலை. இத்தலத்தில் முருகர் பழனி முருகரைப் போல தண்டாயுதபாணியாக அருள் பாலிக்கிறார். இத்தலத்தில் சிவ புதல்வர்களான விநாயகரும், முருகரும் சுயம்பு என்பது சிறப்பு. பதினெட்டு சித்தர்களுள் ஒருவரான பாம்பாட்டி சித்தர் வடித்த முருகர் மூலவராக அருள் பாலிக்கின்றார்.

இம்மலை மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியைச் சேர்ந்தது. கோயம்புத்தூர் பேருந்து நிலையத்திலிருந்தும், தொடருந்து நிலையத்திலிருந்தும் இங்கு செல்வதற்கு நிறைய பேருந்துகள் உள்ளன. மலை அடிவாரம் வரை பேருந்துகள் செல்கின்றன. மலையின் மீது படியேறி கோவிலுக்கு நடந்து செல்லலாம்; அல்லது கோயில் நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கட்டணச் சிற்றுந்துகளில் மலைப்பாதையில் செல்லலாம். தனியார் இரு சக்கர வாகனங்களும்

மகிழுந்துகளும் கட்டணம் செலுத்தி மலைப்பாதை மூலம் மேலே கோயிலுக்குச் செல்ல இயலும்.

முற்காலத்தில் இத்தலம் கொங்கு வேட்டுவ மன்னர்களால் பராமரிக்கப்பட்டு வந்தது. தேவாரப் பாடல் பெற்ற தலமான *திருமுருகன்பூண்டி* கோயில் கல்வெட்டுகளில், மருதமலை கோயில் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தகவல்கள் உள்ளன. அக்கல்வெட்டில் முருகப் பெருமானை, மருதமலை நாயகன், குலோத்துங்க சோழன், மருதமலையனான குலோத்துங்க சோழ விக்ரமாதித்திய தேவன் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மருத மரங்கள் அதிகமாக காணப்படுவதால் இந்த மலை மருதமலை என வழங்கப்படுகிறது. மேலும் மருதமால்வரை, மருதவரை, மருதவெற்பு, மருதக்குன்று, மருதலோங்கல், கமற்பிறங்கு, மருதாச்சலம் வேள்வரை என்றெல்லாம் பேரூர் புராணத்தில் கூறப்படுகிறது. எனவே மருதமரங்கள் அடர்ந்த மலை என்ற பொருளில் மருதாச்சலம் என்ற பெயர் ஏற்பட்டது.

மருத மரங்கள் நிறைந்ததும், நோய் நீக்கும் மருந்து குணங்களை உள்ளடக்கிய மூலிகைகளைக் கொண்டதுமான மலையில் அருள்பவர் என்பதால், இவருக்கு 'மருதாச்சலமூர்த்தி' என்ற பெயரும், 'மருதமலையான்' என்ற திருநாமமும் உண்டு. மருத மரமே இத்தலத்தின் விருட்சம். மருதம் என்றால் கம்பீரம் என்று பொருள். மருத மரம் வடமொழியில் அர்ஜுனம் என்று அழைக்கப்படுகிறது. மருத மரத்தைத் தல மரமாகக் (ஸ்தல விருட்சம்) கொண்டு சிறப்புற விளங்குகின்ற சிவன் கோயில்கள் இந்தியாவில் மூன்று. முதலாவது ஆந்திர மாநிலம் கர்னூல் அருகே உள்ள மல்லிகார்ஜுனம் எனும் திருக்கோயில். இரண்டாவது மத்தியார்ஜுனம் எனப்படுகின்ற தமிழ்நாடு தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகேயுள்ள திருவிடைமருதூர். மூன்றாவது புடார்சுனம் எனப்படுகின்ற தமிழ்நாடு திருநெல்வேலிக்கு அருகே அம்பாசமுத்திரம் அருகில் உள்ள திருப்புடைமருதூர். இவை முறையே மல்லிகார்ஜுனம், மத்தியார்ஜுனம், புடார்சுனம் (தலைமருது, இடைமருது, கடைமருது) எனப் புகழப்பெறுகின்றன.

இத்தலத்தின் தீர்த்தத்தின் பெயர் 'மருது சுனை'. இத்தீர்த்தம் பிரசித்தி பெற்றது. கோயிலுக்கு தென்மேற்கே மலையின் கீழாக சற்று தூரம் சென்றால் இத்தீர்த்தம் உள்ளது. மலையில் உள்ள ஒரு மருத மரத்தின் அடியில் இருந்து உற்பத்தியாகி வருவதாக சொல்கிறார்கள். இந்த தீர்த்தமே சுவாமியின் அபிஷேகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. காமதேனு இம்மலையில் பசி நீங்க மேய்ந்து மருத மரத்தின் கீழ் இருந்த நன்னீரை பருகியதாக பேரூர் புராணம் பகர்கின்றது.

ஆலயம் தரை மட்டத்திலிருந்து சுமார் 500 அடி உயரத்தில் ஆலயம் அமைந்துள்ளது . சுமார் 837 படிகள் ஏற வேண்டும். மலையின் அடிவாரத்திலிருந்து நடைப்பயணமாகப் படிகளில் ஏறிச் செல்லும் போது, பாதையின் தொடக்கத்தில் தான்தோன்றி விநாயகர் சன்னிதி அமைந்துள்ளது. இவரை முதலில் வணங்கி பின்னரே முருகரை வணங்க வேண்டும் என்பது மரபு. இவர் சுயம்புவாக

தோன்றியவர். எனவே யானைத் தலை மட்டுமே உள்ளது. இவரது தும்பிக்கை மூலவரை நோக்கியவாறு உள்ளது சிறப்பு. அருகில் மற்றொரு விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சுயம்பு விநாயகருக்கு பூஜை செய்த பின்பே, பிரதான விநாயகருக்கு பூஜை நடக்கிறது. முருகனுக்கு உகந்த நாட்களான கிருத்திகை, சஷ்டி, விசாகம் மற்றும் அமாவாசை நாட்களில் இவருக்கும் விசேஷ பூஜை நடக்கிறது. எனவே இவரை, 'தம்பிக்கு உகந்த விநாயகர்' என்றும் அழைக்கிறார்கள்.



சூரவாகனத்தில் மருதாசலமூர்த்தி

இவரை வணங்கி சற்று மேலே படி ஏறி சென்றால் 'பதினெட்டாம் படிகள்'. மலை ஏறும்போது மலைப்பாதையின் நடுநடுவே சிறுசிறு மண்டபங்கள் காணப்படுகின்றன. இன்னும் சிறிது உயரம் ஏறினால் இடும்பன் சன்னிதியை தரிசிக்கலாம். இடும்பன் காவடி தூக்கியபடி சின்னஞ்சிறு பாலகனாக காட்சி

தருகிறார். பிள்ளை வரம் வேண்டுவோர் இங்கு தொட்டில் கட்டி வழிபடுகிறார்கள். இவருக்கு எதிரே புலி வாகனம்.

அடுத்து வருவது 'குதிரைக்குளம்பு கல்', இதற்கான வரலாறு, முற்காலத்தில் இக்கோவிலில் திருடர்கள் கொள்ளையடித்து விட்டு தப்பினர். அப்போது, முருகன் குதிரை மீதேறிச் சென்று அவர்களை மறித்து, பொருட்களை மீண்டும் கோவிலில் சேர்க்கச் செய்தார். அதோடு திருடர்களை பாறையாகவும் மாற்றி விட்டார். முருகன் குதிரையில் வேகமாகச் சென்றபோது, குதிரை மிதித்த இடத்தில் பள்ளம் உண்டானது. மலைப்பாதையில் உள்ள ஒரு பாறையில் இந்த தடம் இருக்கிறது. இம்மண்டபத்தில் முருகன், குதிரை மீது வந்த சிற்பம் உள்ளது.



மலையின் மீது சென்றதும் அங்கிருந்து கோயிலுக்குச் செல்லும் இறுதிப் படிக்கட்டுகள் ஆதிமூலஸ்தானத்திற்கு நேரெதிராக உள்ளன. இப்பாதை வழியே செல்பவர்கள் ஆதி மூலஸ்தானத்தில் சுயம்புவாக உள்ள சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானையையும் அதற்கடுத்து, பஞ்சமுக விநாயகரையும் வழிபட்டபின் தண்டாயுதபாணி சன்னிதிக்குச் செல்லலாம்.

புதியதாக அமைக்கப்பட்ட பாதை இராஜகோபுரத்தின் ஊடே செல்லும் வழி நேராக தண்டாயுதபாணி சன்னிதிக்குச் செல்கிறது. இராஜகோபுர நுழைவாயிலைத் தாண்டினால் கல்லாலான கொடிமரத்துக்கு முன் வலம்புரி விநாயகர், அவர்முன் வைக்கப்பட்டுள்ள பெரிய மயில்முக குத்துவிளக்கு, அடுத்து உலோகக் கொடிமரம், மயில்வாகனம், முன்மண்டபத்தில் வரதராஜப்பெருமாள் சன்னிதி, அர்த்தமண்டபத்தில் கருவறையின் நுழைவாயிலின் இருபுறத்திலும் விநாயகரும் (இடப்புறம்) வீரபத்திரரும் (வலப்புறம்), கருவறையில் ஞானதண்டத்துடன் காட்சிதரும் தண்டாயுதபாணி என இக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கொடிமர மண்டபத்தில் வலம்புரி விநாயகர், அவருக்கு முன்னுள்ள மயில்முக விளக்கின் அடிப்புற ஆமைவடிவமும் அதனைத் தொடர்ந்த மேற்தண்டிலுள்ள பாம்பு உருவங்களும் கேரள பாணியில் எழிலாக அமைந்துள்ளது.

மருதமலையில் முருகனின் அருள்பெற்ற பாம்பாட்டிச் சித்தர், முருகனுக்கு புதிய சிலை வடித்தார். இச்சிலையே கருவறையில் உள்ளது. இரண்டு திருக்கரங்களுடன் உள்ள இந்த முருகப்பெருமான், பழநி முருகனைப் போலவே, வலது திருக்கரத்தில் ஞானதண்டத்துடன், இடது திருக்கரத்தை இடுப்பில் வைத்தபடி, ஞானதண்டாயுதபாணியாக தரிசனம் அளிக்கிறார். சிரசில் கண்டிகையும் தலைக்கு பின்புறம் குடுமியும் உள்ளது. காலில் தண்டை அணிந்திருக்கிறார். வினைகளை வேரறுத்து, எமபயம் தீர்த்து, உண்மை அறிவை உணரச்செய்யும் வெற்றி வடிவேலுடன் கந்தனை தரிசிப்பதே ஒரு பரவசம். தினமும் இராஜ அலங்காரம், விபூதிக்காப்பு, சந்தனக்காப்பு என மூன்று வித அலங்காரங்களுடன் தரிசனம் தந்தருளுகிறார். விசேஷ நாட்களில் வெள்ளிக்காப்பும், கிருத்திகை மற்றும் தைப்பூசம் நாட்களில் தங்க கவசமும் அணிவிக்கப்படுகிறது. அர்த்தஜாம பூஜையில் மட்டுமே இவரை தண்டாயுதபாணியாக சுய ரூபத்தில் தரிசிக்க முடியும். அப்போது இறைவனுக்கு ஆபரணம், கிரீடம் என எதுவும் இல்லாமல், வேட்டி மட்டும் அணிவிக்கின்றனர். கோஷ்டத்தில் சிஹி வாகனர் (மயில் வாகனர்) மற்றும் சேனானி (தேவ சேனாதிபதி) வடிவத்தில் முருகரை தரிசிக்கலாம்.

திரிபுரம் அதனை ஒரு நொடியதனில்
எரிசெய் தருளிய சிவன் வாழ்வே!
சினமுடைஅசுரர் மனமது வெருவ
மயிலது முடுகி விடுவோனே!
பருவரை யதனை உருவிட எறியும்
அறுமுகமுடைய வடிவேலா!
பசலையொ டணையும் இளமுலை மகளை

மதன்விடு பகழி தொடலாமோ!
கரிதிரு முகமும் இடமுடை வயிறும்
உடையவர் பிறகு வருவானே!
கனதனமுடைய குறவர்தம் மகளை
கருணையொ டணையும் மணிமார்பா!
அரவணை துயிலும் அரிதிரு மருக
அணிசெயு மருத மலையோனே!
அடியவர்வினையும் அமரர்கள்
துயரும் அற அருள் உதவு பெருமாளே!

பொருள்: முப்புரத்தை ஒரு நொடியில் எரித்து அருளிய சிவனின் குமாரனே, கோபமுடைய அசுர்ர்கள் மனம் வெருவ மயிலை வேகமாக செலுத்துபவனே, பெரிய மலைகளை ஊடுருவக்கூடிய வேலை செலுத்தும் ஆறு முகம் உடைய வடிவேலனே, காமன் விடும் பாணத்தால், இளமையான தனங்களை உடையவர்கள் மீது நான் காம வயப்படலாமோ, யானை முகமும் பெரிய வயிரும் உடைய கணபதிக்கு இளையவனே, பருத்த தனங்களை உடைய குறமகளாகிய வள்ளியை கருணையோடு அணைக்கும் மணிகள் அணிந்த மார்பை உடையவனே, பாம்பணையில் அரி துயில் கொள்ளும் ஹரியின் திரு மருகனே, மருதமலைக்கு அணியாக இருப்பவனே, அடியவர்கள் வினையும், அமரர்கள் துயரும் நீங்கும்படியாக அருளி உதவும் பெருமாளே. அடியவர்களின் வினையையும் தேவர்களின் தீர்க்கும் பெருமாளே.

மருதமலைத்தலமே சோமாஸ்கந்த மூர்த்தமாக அமைந்து தனிச்சிறப்பிடம் பெறுகிறது. வெள்ளியங்கிரி மலை சிவன் வடிவமாகவும், நீலிமலை உமாமகேஸ்வரி வடிவமாகவும், மருதமலை முருகன் வடிவமாகவும், இம்மூன்று மலையும் சேர்ந்து சோமாஸ்கந்த மூர்த்தமாகவும் அமைந்து காணப்படுவதாக பேரூர்ப் புராணம் கூறுகின்றது.

மருதமலையிலும் சன்னதிகளும் சோமாஸ்கந்த அமைப்பில் உள்ளது. பிரதான மூர்த்தி முருகன் சன்னதி நடுவிலும் வலப்புறம் பட்டீசுவரர், இடப்புறம் மரகதாம்பிகை சன்னிதிகளுடன் அமைந்துள்ளது. மரகதாம்பிகை சன்னிதிக்கு எதிராக வெளி மண்டபத்தில் நவகிரகங்கள் சன்னிதி அமைந்துள்ளது. மற்றும் தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், துர்க்கை, சண்டிகேசுவரர் ஆகியோருக்கும் வெளிமண்டபச் சுவற்றில் தனித்தனி சன்னிதிகள் உள்ளன. மலைக்கோயிலுக்கு பின்புறம் சரவணப் பொய்கை காணப்படுகிறது. மலைக்கோயிலைச் சுற்றி மடங்கள் காணப்படுகின்றன. இம்மலையில் தேவர்கள் தவம் செய்து முருகனை வழிபட்டதாகக் கூறப்படுகிறது. இத்திருக்கோயில் ஒரே பிரகாரத்தில் அமைந்திருக்கிறது. பிரகாரத்தில் சுற்றுச் சுவர்கள் இல்லாமல் திறந்த வெளியாயிருந்தாலும் மலையின் இயற்கையான அமைப்பு சுவர்போல் நிற்கிறது. உள்ளது. ஆலயத்திற்கு பின்புறம் பச்சை பசேலென அடர்ந்த காடுகள் கொண்ட மலையுடன் காணும் போது மயில் தோகையை விரித்து ஆடுவது போல உள்ளது.



ஆதிமூலஸ்தானத்திற்கும் முன்மண்டபத்திற்கும் தண்டாயுதபாணி சன்னிதி மண்டபத்திற்கும் இடையே பஞ்ச விருட்ச விநாயகர் சன்னிதி உள்ளது. பொதுவாக அரச மரத்தின் அடியில் தான் விநாயகப்பெருமான் வீற்றிருப்பார். ஆனால் இவ்வாலயத்தில் அரசு, அத்தி, வேம்பு, வன்னி, கொரக்கட்டை என ஐந்து மரங்கள் இணைந்து வளர்ந்திருக்கும் மரத்தின் அடியில் விநாயகப் பெருமான் இருந்து அருள் பாலிக்கிறார். ஐந்து மரங்கள் இணைந்த ஒரே மரத்தின் அடியில் இருப்பதால் இவரை, 'பஞ்ச விருட்ச விநாயகர்' என்று அழைக்கிறார்கள். இவருக்கு அருகில் முருகப்பெருமான் மயில் மீது அமர்ந்தபடி, கையில் வேலுடன் காட்சி தருகிறார். நடைப்பயணமாக மலையேறி வருவோர் இந்த விநாயகரைத் தாண்டிதான் தண்டாயுதபாணி சன்னிதிக்குச் செல்ல வேண்டும்.

மூலவர் சன்னதிக்கு வலப்புறம் உள்ள ஆதி மூலஸ்தானத்தில் சுப்பிரமணியர் வள்ளி, தெய்வயானை மூவரும் சுயம்பு ரூபத்தில் அருள் பாலிக்கின்றனர். முருகனுக்கு பின்புறத்தில் ஒரு பிளவு இருக்கிறது. இங்கு வள்ளியின் சுயம்பு உருவம், தெய்வயானையை விட சற்று உயரமாகக் காணப்படுகிறது. இவருக்கு

முதல் பூஜை செய்யப்பட்ட பின்பே, மூலவர் முருகனுக்கு பூஜை நடக்கிறது. கிருத்திகையன்று பக்தர்கள் இவருக்கு அதிகளவில் பாலாபிஷேகம் செய்து வழிபடுகிறார்கள். ஆதிமூலஸ்தான கருவறை விமானமும், முன்புறம் தைப்பூசக் கல்யாண உற்சவ மண்டபமும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

முருகன் கோவிலின் தெற்கு மூலையில் பாம்பாட்டி சித்தர் குகைக்கோயிலுக்குச் செல்லும் படிக்கட்டுகள் கீழிறங்குகின்றன. வரலாற்று சிறப்புமிக்க பதினெட்டு சித்தர்களுள் ஒருவரான பாம்பாட்டி சித்தர், இக்குகையில் சில காலம் வசித்து வந்தார். பல மூலிகைகளின் பயன்கள் மற்றும் மருத்துவ குணங்களைப் பற்றிய அவரது குறிப்புகள் மிகவும் சிறப்பானவையாகக் கருதப்படுகிறது.



பாம்பாட்டிச் சித்தர் என்னும் சித்தர் இளவயதிலேயே பாம்புகளை பிடித்து விஷம் முறிப்பது, பாம்புக்கடிக்கு மருந்து தயாரிப்பது போன்ற வேலைகளில் ஈடுபட்டு வந்தார். மக்கள் இவரை பாம்பு வைத்தியர் என்றே அழைத்தனர். ஒருசமயம் இவர் நாகரத்தின பாம்பு ஒன்றைத்தேடி மருதமலைக்கு வந்தார். அப்போது சட்டை முனிவர் அவருக்கு காட்சி தந்து உடலுக்குள் இருக்கும் பாம்பை (குண்டலினி சக்தி ) கண்டறிவதுதான் பிறப்பின் பயனாகும். அதைவிடுத்து காட்டில் திரியும் பாம்புகளை தேடி அலைவது வீண் வேலையே என்றார். அவரது சொல் கேட்ட பாம்பாட்டிச் சித்தர் ஞானம் பெற்றார். உயிர்களைத் துன்புறுத்துவதில்லை என்ற முடிவுக்கு வந்தார். முருகனை வணங்கி தியானத்தில் ஈடுபட்டார். முருகன் அவருக்கு வள்ளி, தெய்வானையுடன் காட்சி தந்து ஞான உபதேசம் செய்தார். பின்னர் முருகன் இங்கேயே கோயில் கொண்டு பக்தர்களுக்கு அருள்புரிகிறார்.




மலைப்பாறைகளுக்கு மத்தியில் உள்ள இக்குகைக்கோயில் சிறு குடைவரை அமைப்பில் உள்ளது. உட்புறத்தில் ஒரு பாறை பாம்பு வடிவில் உள்ளது. பாம்பாட்டி சித்தருக்கு முருகன் பாம்பு வடிவில் காட்சியளித்ததார் என்பது மரபு வரலாறு. இந்த நாகத்தை முருகப்பெருமானாகவே பாவித்து பக்தர்கள் அனைவரும் வழிபாடு செய்கிறார்கள். பாம்பாட்டி சித்தர் வலது கரத்தில் மகுடி, இடது கரத்தில் தடியும் கொண்டு அருள்ம்பாலிக்கிறார். இவருக்கு அருகில் சிவலிங்கம், நாகர் திருமேனிகள் உள்ளன. இதன் பின்புறம் பீடம் போன்ற அமைப்பில் மூன்று வடிவங்கள் உள்ளன. இவற்றை சிவன், கணபதி, அம்பிகையாக கருதி பூஜை செய்கிறார்கள். அனைத்து தலங்களிலும் சிவ பெருமானை சோமாஸ்கந்தராக முருகர், சிவன், அம்பாளுக்கு இருவருக்கும் இடையில் இருக்கும் கோலத்தில் வழிபடுவர். ஆனால் இங்கு விநாயகர், சிவசக்திக்கிடையில் காட்சியளிப்பது

சிறப்புக்குரியதாகும். முருகப்பெருமானுக்கு பூஜை முடிந்ததும், பாம்பாட்டி சித்தருக்கும் பூஜை செய்யப்படுகிறது.

பாம்பாட்டி சித்தர் சன்னிதி முன்புறமுள்ள தியான மண்டபத்தில் இங்கு வருகை தருவோர் அமர்ந்து அமைதியாக தியானம் செய்து வழிபடுகின்றனர். பாம்பாட்டி சித்தர் தற்போதும் இங்கு முருகனுக்கு பூஜை செய்வதாக ஐதீகம். தினமும் இவரது சன்னிதியில் ஒரு பாத்திரத்தில் பாலை ஊற்றி வைத்து விடுகிறார்கள். மறுநாள் இந்த பால் குறைந்திருக்குமாம். சித்தர், இந்த பாலை முருகனுக்கு அபிஷேகம் செய்து பூஜை செய்வதாக நம்பப்படுகிறது. இவரது சன்னதியில் வழங்கப்படும் விபூதி விஷக்கடிக்கு மருந்து என்பது பக்தர்களின் நம்பிக்கை. தண்டாயுதபாணி கோயில் தலவிருட்சம் மருதமரம் இச்சன்னதிக்கு முன்னால் உள்ளது. இக்கோயிலுக்கு இறங்கி வரும் பாதையில் சப்த கன்னியருக்கு ஒரு சிறு சன்னிதி அமைந்துள்ளது. ஆடிப்பெருக்கன்று சிறப்பு வழிபாடு நடைபெறுகின்றது.

தண்டாயுதபாணி சன்னிதிக்கு நேராக புதியதாக ஏழுநிலை இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இராஜகோபுர கல்ஹாரம், ஏழுநிலை கோபுரம், தங்கமுலாம் பூசிய ஏழு கலசங்கள், மேல்மண்டபம், இராஜகோபுரத்திற்குச் செல்லும் படிக்கட்டுகள் மற்றும் இராஜ கோபுரத்திலிருந்து மேல் மண்டபத்திற்குச் செல்லும் படிக்கட்டுகள் புதியதாய் நிர்மாணிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு இக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது. இக்காலத்திலும் சாண்டோ சின்னப்பா தேவர், பித்துக்குளி முருகதாஸ் போன்றவர்களுக்கு முருகப்பெருமான் அனுக்கிரகம் புரிந்த தலம் இந்த மருதமலை.

வைகாசி விசாகத்தன்று 108 பால் குட அபிஷேகம் நடைபெறுகின்றது. தைப்பூசத்தை ஒட்டி 10 நாள் பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. தைபூசத்தன்று காலை திருக்கல்யாணம், மாலை தேரோட்டம், சுவாமி யானை வாகனத்தில் தரிசனம் தருகின்றார். சஷ்டி, மற்றும் கார்த்திகை தினங்களும் சிறப்பு. இத்தலத்தில் தங்கத்தேர் உள்ளது. தினமும் தங்கத்தேர் புறப்பாடு நடைபெறுகிறது.

கொங்கு மண்டலத்தின் பல சிறப்புப் பெற்ற தலங்களை இது வரை தரிசனம் செய்தோம். சமயம் கிடைத்தால் தாங்களும் சென்று தரிசித்துவிட்டு வாருங்கள். செல்வதற்கு முன்னர் இப்புத்தகத்தில் உள்ள தகவல்களை ஒரு முறை படித்து விட்டு செல்லுங்கள். இந்நூல் தங்களுக்கு பிடித்திருந்தால் மற்றவர்களுக்கும் பரிந்துரை செய்யுங்கள் அவர்களுக்கும் உபயோகமாக இருக்கக்கூடும்.

சுபம்

**தொலை நோக்கு** – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

**பணி இலக்கு** – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

**எமது பணிகள்**

•கணியம் மின்னிதழ் - kaniyam.com

•கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.

•கட்டற்ற தமிழ் நூல்கள் - FreeTamilEbooks.com

•இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

•தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்

•தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்

•விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்

•OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வெளிப்படைத்தன்மை**

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

**நன்கொடை**

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation
Account Number : 606 1010 100 502 79
Union Bank Of India
West Tambaram, Chennai
IFSC – UBIN0560618
Account Type : Current Account